பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

فتح الرحمن في فقه النعمان

பத்ஹுர் றஹ்மான் பில் பிக்ஹின் னுஃமான்.

இது

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
அவர்களால் எழுதப்பட்டு

தஞ்சை

ஹாஜா ஹமீதியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1946

(Copy-right Reserved.)
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இதன் விலை] [ரூ 2-[illegible]

Q7:332
N49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 OCT 1949
MADRAS

முகவுரை.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ஸெய்யிதிஞ முஹம்மதின் வஆலிஹிவ ஸஹ்பிஹி அஜ்மயீன்.

சகோதரர்களே! "பிரயோஜன மற்ற கல்வியை விட்டு உன்னிடம் நான் காவல் தேடுகிறேன்" என்று நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள் கூறினர்கள். அப்பொழுது ஸஹாபிகள் "பிரயோஜன மற்ற கல்வி" என்பதுயாது? எனவினவினர். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "இப்பிரபஞ்சமாயையைத் துறப்பதை அறிவிக்காத கல்வி" என்பதாக பதிலளித்தார்கள்." என்பதாக ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஹதீதுக்கு ஏற்ப கல்விகளில் பிரயோஜனமுள்ள கல்வி என்றும் பிரயோஜனமில்லாத கல்வி என்றும் கல்வி இரண்டு வகைப்பட்டிருக்கின்றன என்பது தெளிவு. அதிலும், மனிதனின் மறு உலக வாழ்வுதான் நிரந்தரமானது. நிரந்தரமான வாழ்வை அளிக்கக்கூடிய கல்விகள்தான் மிகப்பிரயோஜனகரமானவை. இக்கல்விகளுக்கு வைதீகக் கல்வி என்றும், மத கல்வியென்றும் பல பெயர்கள் சொல்லப்படுகின்றன. இவைகளைத் தவிரவுள்ள கல்விகள் அத்தனையும் பிரயோஜன மற்ற கல்விகளென்று கூற முடியாது. அவைகளில் பிரயோஜன முள்ளதும் பிரயோஜன மற்றதுமான கல்விகள் இருக்கின்றன. இவைகள் எவை? என்பதையும், எக்தவிதத்தில் இவைகள் பிரயோஜன மற்றவை என்பதையும் விரிவாகத் தெரிந்துகொள்ள விரும்புபவர் இமாம் கஸ்ஸாலீ (றஹ்) அவர்களால் எழுதப்பட்ட "இஹ்யாவுலூமித்தீன்" என்ற பிரசித்தி பெற்ற கிரந்தத்தைப் படிப்பார்களாக. இவ் விவாதம் நமது நோக்கமல்லவாதலால் இம்மட்டுடன் நிறுத்தினம்.

இக்கல்விகள் பலதரப்பட்டவைகள் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு கல்வியும் மற்றைய கல்விகளைப் பார்க்கினும் சிறந்தவை. பிக்ஹு என்னும் கல்வி, மனிதன் செய்கிற கிரியைகள் எத்தன்மை வாய்ந்தவை? அவைகளை எவ்வாறு நிறைவேற்றவேண்டும்? செய்யத்தகுந்த கிரியையாவை? செய்யத்தகாதவையாவை?

TAMIL NADU ARCHIVES LIBRARY
1/0/90

என்பன போன்ற விபரங்களை விபரிக்கிறது. ஆகையால், மத பக்தியுள்ள ஒவ்வொரு ஆண், பெண்ணுக்கும் இது இன்றியமை யாதது. இக்கல்வி இஸ்லாம் மத ஆரம்பத்திலிருந்தே முஸ்லிம் களிடம் இருந்து வந்த தாயினும், இதில் அதிகம் ஈடுபட்டு, யாவரும் சுலபமாகக் கற்றுக்கொள்ளத் தக்கவாறு பிரித்து தனிப் பெரும் கல்வியாக யாவரிடத்திலும் பரவ நமக்குச் சமர்ப்பித்த வர்கள் இமாம் அஃளம் அபூ ஹனீபத்தன் னுஃமான் (றஹ்), இமாம் மாலிக் (றஹ்), இமாம் இத்ரீ ஸிஷ்ஷாபிஈ (றஹ்), இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் (றஹ்) ஆகியவர்களும் அவர்களது சிஷ்யர் களுமாவார்கள். இதனால், இவர்களுக்கு இக்கல்வியில் தனிப் பெரும் சிறப்புகளும் கீர்த்தியும் தோன்றி, இவர்களது கருத்து கள் மக்களுக்கு தெளிவாகத் தெரிவதற்காக இவர்களது பெயர் களால், ஹனபி, மாலிக்கி, ஷாபிஈ, ஹன்பலி என நான்கு மதுஹபுகளும் ஏற்பட்டன.

இக்கிரந்தம் ஹனபி மதுஹபைச் சேர்ந்த பிக்ஹூமஸ்சலாக் கள் எழுதப்பட்டது. இம் மஸ்அலாக்களும் லக்ஷக்கணக்கில் இருக்கின்றன. ஆயினும், சாமான்யமாக மனிதனுக்குத் தெரிந்து கொள்ள மிக அவசியமாகவுள்ள மஸ்அலாக்களை மட்டிலும் சுருக்க மாக இதில் சிலது திரட்டப்பட்டிருக்கிறது. தனக்குத் தேவை யான அளவு கற்றுக்கொள்வது ஒவ்வொருவருக்கும் கடமையாக இருப்பதால், இக்கிரந்தம் அக்கடமையை மட்டிலும் ஓரளவு நிறை வேற்றுவதால் இது யாவரிடமும் பரவவேண்டிய முக்கிய கிரந்தமாகும். இக்காலத்தில் சுத்த தமிழுக்கு அதிக பிரியம் இருப்பதால் காலதேச நிலையை உத்தேசித்து அறபித் தமிழில் இயற்றப்பட்ட இக்கிரந்தத்தை வாசக நடையில் சொற்ப மாறுத லுடன் சுத்தத் தமிழில் அச்சிட்டுள்ளோம். இனி அடுத்த பதிப்பில் இதில் இன்னும் அதிக மஸ்அலாக்களைச் சேர்த்து விரிவு படுத்துவதும் இதன் வாசகங்களையும் மற்றவைகளையும் சீர் திருத்தி யாவருக்கும் விரும்பத்தக்க முறையில் அமைப்பதும் பொது ஜனங்கள் நம்முடைய இம்முயற்சியை ஆதரித்து உற் சாக மூட்டுவதைப் பொறுத்திருக்கிறது. ஆகையால, இதிலுள்ள குற்றங் குறைகளை நமக்கு அறிவிக்கும் நன்பர்களது ஆலோசனை களை நன்றியுடன் ஏற்றுக்கொண்டு, அடுத்த பதிப்பில் அவை களைக் கவனித்துத் திருத்திக் கொள்ளுவோம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

பத்ஹுர் றஹ்மான்

பில்பிக்ஹின் னுஃமான்.

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1	அல்லாவின் துதி	... 1
	பாபுன் பீ பயானித்தீனி வல்இஸ்லாம்.	
2	இஸ்லாம் மார்க்கத்தை பற்றிய பாடம்	... 2
3	தீனின் வருசைகளின் பாடம்	... 4
	கலிமாக்களின் பாடம்.	
4	அவ்வல் கலிமா தையிபு	... 9
5	இரண்டாம் கலிமா ஷஹாதத்து	... 13
6	(கலிமா ஷஹாதத்தின் வருஷை)	... ”
7	மூன்றும் கலிமா தம்ஜீது	... 14
8	நாலாம் கலிமா தவ்ஹீது	... 15
9	ஐந்தாம் கலிமா றத்துல் குப்று	... ”
10	(சையிதுல் இஸ்திக்பார்)	... 16
	பாபுன் பீ பயானிஸ் ஸலவாத்.	
11	ஸலவாத்துடைய பாடம்	... 17
	பாபுன் பீ பயானில் ஈமான்.	
12	ஈமானுடைய பாடம்	... 19
13	முஜ்மலாகிய ஈமானுகிறது	... ”
14	முபஸ்ஸலாகிய ஈமானுகிறது	... 20
	பாபுன் பீ பயானில் இஸ்லாம்.	
15	இஸ்லாமுடைய பாடம்	... 26
	கிதாபுத் தஹாறுத்.	
16	துப்புறவுகளைப் பேசும் பாடம்	... 31
	பஸ்லுன் பில் இஸ்திஞ்ஜாஇ.	
17	மலபாதை ஜலபாதை சுத்திசெய்வதின் விபரம்	... 32
	பாபுல் உலூஇ.	
18	உலூவின் வரிசைகள்	... 34

நே.	பொருளடக்கம்.		பக்கம்.
	உலூவின் ஹூக்முகள்.		
19	உலூவின் பர்லுகள்	...	37
20	உலூவின் சுன்னத்துகள்	...	38
21	உலூவின் முஸ்தஹப்பு	...	39
22	ஒலுவின் மக்றூஹ்கள்	...	42
23	ஒலுவின் முறித்தல்	...	,,
	பாபுல் குஸ்லு.		
24	குஸ்லுடைய பாடம்	...	43
25	பறஃ ஹைலு நிபாஸின் பயான்	...	44
	பாபுல் மியாஹ்.		
26	தண்ணீரைப்பற்றிய பாடம்	...	46
27	ஹவ்லின் ஹூக்முகள்	...	47
	பாபுத் தயம்மமு.		
28	தயம்முமில் பேசுகிற பாடம்	...	49
	கிதாபுஸ்ஸலாத்.		
29	தொழுகையுடைய வருசையை பேசும் பாடம்	...	51
30	தொழுகையை விடுகிறவர்களுக் குண்டாகும் வேதனையின் விவரம்	...	59
31	தொழுகையின் ஹூக்முகள்	...	62
	பாபுல் அவ்காத்.		
32	தொழுகையின் வக்துகளைப் பேசும் பாடம்	...	63
	பஸ்லு பில்அதானி வல்இகாமதி.		
33	பாங்கு இகாமத்தில் பேசுகிற பாடம்	...	66
	பஸ்லுன் பீ பயானின் நிய்யத்தி.		
34	பஜ்ருடைய சுன்னத்து தொழுகை நிய்யத்து	...	70
35	பஜ்ருடைய பர்லு தொழுகை நிய்யத்து	...	,,
36	லுஹ்றுடைய முந்தின சுன்னத்து தொழுகை நிய்யத்து.		,,
37	லுஹ்றுடைய பர்லு தொழுகை நிய்யத்து	...	71
38	லுஹ்றுடைய பிந்தின சுன்னத்து தொழுகை நிய்யத்து.		,,
39	அஸ்றுடைய பர்லு தொழுகை நிய்யத்து	...	,,
40	மக்ரிபுடைய பர்லு தொழுகை நிய்யத்து	...	72
41	மக்ரிபுடைய சுன்னத்து தொழுகை நிய்யத்து	...	,,
42	இஷாவுடைய பர்லு தொழுகை நிய்யத்து	...	,,
43	இஷாவுடைய சுன்னத்துத் தொழுகை நிய்யத்து	...	73
44	லுஹறுடைய கஸ்றுத் தொழுகை நிய்யத்து	...	,,

நெ.	பொருளடக்கம்.		பக்கம்.
45	வித்ரு வாஜிபு தொழுகை நிய்யத்து	...	73
46	ஜும்ஆத் தொழுகை நிய்யத்து	...	74
47	நோன்புப் பெருநாள் தொழுகை நிய்யத்து	...	,,
48	ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நிய்யத்து	...	,,
49	தருவீஹ் தொழுகை நிய்யத்து	...	75
50	மஸ்ஜிதுடைய காணிக்கை தொழுகை நிய்யத்து	...	,,
51	உளுவுடைய தொழுகை நிய்யத்து	...	,,
52	ளுஹா தொழுகை நிய்யத்து	...	,,
53	தஹஜ்ஜுது தொழுகை நிய்யத்து	...	76
54	ஸபருத் தொழுகை நிய்யத்து	...	,,
55	குதூம் தொழுகை நிய்யத்து	...	,,
56	தாய் தகப்பன் தொழுகை நிய்யத்து	...	,,
57	இஸ்த்தகாரு தொழுகை நிய்யத்து	...	,,
58	தஸ்பீஹ் தொழுகை நிய்யத்து	...	77
59	இராணத் தொழுகை நிய்யத்து	...	,,
60	நபில் தொழுகை நிய்யத்து	...	,,
	பஸ்லுன் பீ பயானி ஸலாத்தில் முஸாபிர்.		
61	முஸாபரின் தொழுகையின் பாடம்	...	78
	பாபுன் பீ புரூலிஸ்ஸலாத்.		
62	தொழுகையில் பர்ளுகளைப் பேசும் பாடம்	...	79
	பஸ்லுன் பீ வாஜிபாதிஸ்ஸலாத்.		
63	தொழுகையின் வாஜிபுகளை விபரிப்பதின் பாடம்	...	86
	பஸ்லுன் பீ ஸுனனிஸ்ஸலாத்.		
64	தொழுகையின் ஸுன்னத்தில் பேசும் பாடம்	...	88
	பஸ்லுன் பீ முஸ்தஹப்பாதிஸ்ஸலாத்.		
65	தொழுகையின் முஸ்தஹப்புகளின் பாடம்	...	90
	பஸ்லுன் பீ முப்ஸிதாதிஸ்ஸலாத்.		
66	தொழுகையை முறிக்கும் கருமங்களின் பாடம்	...	91
	பஸ்லுன் பீ மக்றூஹாதிஸ்ஸலாத்.		
67	தொழுகையின் மக்றூஹுகளைப் பேசும் பாடம்	...	93
	பாபு ஸுஜூதிஸ்ஸஹ்வி.		
68	ஸஜதா ஸஹ்வை பேசும் பாடம்	...	95

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
	பஸ்லுன் பீ கைபியத்திஸ்ஸலாத்.	
69	தொழுகிற ஒழுங்கில் பேசுகிற பாடம்	... 96
70	பாஇதா துஆவின் அதபுகள்	... 101
71	ஐந்து வக்து தொழுகைக்கும் வழமையாய் ஓதும் துஆ	... 104
72	வழமையாக ஸுப்ஹுக்கு ஓதுகிற துஆ	... ,,
73	ளுஹருடைய துஆ	... 105
74	அஸ்றுடைய துஆ	... ,,
75	மக்ரிபுடைய துஆ	... ,,
76	இஷாவுடைய துஆ	... 106
	பாப் பீ பலாயிலுல் ஜமாஅத்.	
77	இமாம் ஜமாஅத்தின் வரிசைகளின் பாடம்	... ,,
	பாபுல் ஜமாஅத்.	
78	ஜமாஅத்துடைய பாடம்	... 108
79	ஸப்பு நிற்கிறதின் விபரம்	... 111
80	முந்தின ஸப்பின் வரிசை	... ,,
	பஸ்லுன் பீ பயானில் முக்ததீ.	
81	முக்ததியைப்பற்றிப் பேசும் பாடம்	... 113
	பாபுல் வித்ரி வன்ன வாபில்.	
82	வித்ரையும் நப்லையும் பேசும் பாடம்	... 114
83	தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகை	... 115
84	ளுஹாவின் தொழுகை	... 116
85	ளுஹாத் தொழுகை	... ,,
86	ஸபர் குதூமுடைய தொழுகை	... 117
87	தாய் தகப்பனின் தொழுகை	... ,,
88	தஹஜ்ஜத்துடைய தொழுகையின் விபரம்	... ,,
89	தஹஜ்ஜுது தொழுதபின் ஓதுகிற துஆ	... 118
90	தஸ்பீஹு தொழுகையின் விபரம்	... ,,
91	தறாவீஹு தொழுகையின் விபரம்	... 119
	பாபு களாஇல் பவாயித்.	
92	தப்பிவிட்ட தொழுகையை நிறைவேற்றும் பாடம்	... 123
	பாபுல் பீ பளாயிலுல் ஜும்ஆ.	
93	ஜும்ஆவுடைய வரிசைகளைப் பேசும் பாடம்	... 126
94	ஜும்ஆ நாளின் அதபுகள்	... 129
	பாபுன் பீ அஹ்காமில் ஜும்ஆ.	
95	ஜும்ஆவுடைய ஹுக்முகளில் பேசும் பாடம்	... 130

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
	பாபு ஸலாத்துல் ஈதைன்.	
96	இரண்டு பெருநாள் தொழுகையின் பாடம்	... 133
97	பித்ருவின் விபரம்	... 136
98	உள்ஹிய்யாவின் விபரங்கள்	... ,,
99	அகீகாவின் பயான்	... 139
100	ஜனஸா தொழுகையின் பாடம்	... 140
101	ஜனஸா தொழுகையின் விபரம்	... 142
102	கப்றுடைய பயான்	... 145
	பஸ்லுன் பீ ஜியாரத்துல் குபூர்.	
103	கப்ரை ஜியார்த்து செய்கிறதின் விபரம்	... 147
104	துஆ	... 148
105	ஜனஸா தொழுகையின் வரிசை	... 149
106	ஒப்பாரி சொல்லி அழுகிறதின் பயான்	... ,,
107	ஸபூர் செய்கிறதின் பயான்	... ,,
	பாபுஸ் ஸகாத்.	
108	ஸகாத்துடைய பாடம்	... 150
109	ஸகாத்துடைய ஹுக்முகள்	... ,,
110	ஸகாத்து பர்லாகிறதின் ஷர்த்துகள்	... ,,
111	ஸகாத்து பூர்த்தியாகிறதின் ஷர்த்துகள்	... 151
112	நிஸாப் என்னும் ஸகாத்து கொடுக்க வேண்டிய விகித கணக்கு விபரம்	... ,,
113	ஸகாத்து வாங்க பாத்திரமானவர்கள்	... 152
114	ஸகாத்து கொடுக்கவேண்டிய ஒழுங்கு	... 153
115	பித்ராவுடைய ஸகாத்து பர்லாவதின் விதிகள்	... ,,
116	ஸுன்னத்தான ஸதகாவின் விபரம்	... 154
117	ஸதகா கொடுப்பதின் தவாபென்னும் நன்மைகள்	... ,,
118	ஹறாமான சொத்தை ஸக்காத் கொடுப்பது தகாது	... 156
119	கையேந்தி கேட்கிறதின் விபரம்	... ,,
120	விருந்தாளிக்கு உபசரிப்பது	... 157
121	ஸுவால் செய்பவர்களெனும் பிறரிடம் ஸகாத் கேட்பவர்களின் விபரம்	... 158
122	உபகாரம் செய்வதின் விபரம்	... ,,
123	நிஸாபுடையவன் வாஜிபான ஸதகாக்களை வாங்குவது ஹறாம்	... 159
	கிதாபுஸ் ஸவ்ம்.	
124	நோன்புடைய பாடம்	... ,,
125	நோன்புடைய மகிமைகள்	... ,,

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.

பஸ்லுான் பீ அஹ்காமுஸ் ஸவ்ம்.

126 நோன்புடைய கட்டளைகள் ... 160
127 நோன்பின் வகைகளின் விபரம் ... 161
128 நோன்பு மக்றூஹான தினங்கள் ... „
129 நோன்புடைய நிய்யத்தின் விபரம் ... 162
130 நோன்புடைய முஸ்தஹப்புகளின் விபரம் ... 164
131 நோன்பு திறக்கிறதின் விபரம் ... „
132 நோன்பாளிக்கு உணவு கொடுக்கிறதின் நன்மைகள் ... 165
133 நோன்புடைய பதவிகளின் விபரம் ... „
134 நோன்பை முறிக்கும் செயல்கள் ... 166
135 நோன்பை முறிக்காத செய்கைகளின் விபரம் ... „
136 தெண்டமில்லாமல் நோன்பை முறிப்பதின் விபரம் ... 167
137 கப்பாறு என்னும் தெண்ட குற்றம் விதியாகுவதின் விபரம் ... 168
138 கப்பாரத் என்னும் தெண்ட குற்றம் நிறைவேற்று வதின் விபரம் ... „
139 நோன்பில்லா திருந்தவர்கள் தின்னுமலிருப்பதின் விபரம் ... 169
140 சிறுபிள்ளைகள் நோன்புபிடிப்பதின் விபரம் ... „
141 நோன்புடைய மக்ருஹ்களின் விபரம் ... „
142 தங்கடத்தால் நோன்பை விடுகிற விபரம் ... 170
143 பிறையின் விபரம் ... 171
144 ரமலான் நோன்புடைய வரிசையின் விபரம் ... 172
145 லைலத்துல் கத்திரவின் வரிசை ... 174
146 இஃதிகாபின் விபரம் ... 175
147 இஃதிகாபின் வகைகள் ... 176
148 இஃதிகாபிருப்பதற்கு ஆகுமானதும், ஆகாத காரியங்களின் விபரம் ... „

கித்தாபுல் ஹஜ்.

149 ஹஜ்ஜுடைய விபரம் ... 178
150 ஹஜ்ஜுடைய ஹுக்மு ... 179
151 ஹஜ்ஜு பர்லாகுவதற் கேற்பட்டுள்ள ஷர்த்துகள் ... 180
152 ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றுவது கடமையாக ஏற்படுவதற்குள்ள ஷர்த்துகள் ... 181
153 ஹஜ்ஜின் வாஜிபுகள் ... „
154 இஹ்ராம் கட்டியவர் செய்யக்கூடாத விலக்கலான காரியங்கள் ... 183
155 ஹஜ்ஜுடைய ஸுன்னத்துகள் ... „

நே.	பொருளடக்கம்.	பக்கம்.
156	ஹஜ்ஜுடைய மாதங்கள்	... 186
157	உம்றாவின் விபரம்	... ”
158	மீக்காத்துகள்	... 187
159	ஹறம்ஹில்லு	... 188
160	ஹஜ்ஜுல் அக்பர்	... ”
	பஸ்லான் பீ பயானி தர்த்தீபில் ஹஜ்,	
161	ஹஜ்ஜை நிறைவேற்றும் முறை	... ”
162	இஹ்றாம் கட்டுதல்	... 190
163	தல்பியா ஓதும் விதம்	... ”
164	நிய்யத்து	... 191
165	இஹ்றாம் கட்டியவர் தவிர்த்துக்கொள்ள வேண்டிய காரியங்கள்	... 192
166	தவாபு செய்யும் முறை	... 194
167	மினாசெல்லல்	... 197
168	அறபாவில் தங்குதல்	... ”
169	முஸ்தலிபா செல்லல்	... 198
170	மினாதிரும்பல்	... ”
171	தவாபு ஜியாரா	... ”
172	தவாபுல் விதாஉ	... 199
173	ஸ்திரீகள்	... 200
	பாபுல் ஜினாயாத்.	
174	பரிகார முறைகளைப்பற்றிய விபரம்	... ”
	பஸ்லுன் பில்ஹத்யூன்.	
175	பலிப்பிராணிகள்	... 204
176	ஷாபியீ மத்ஹப்	... ”
177	அர்க்கானுல் ஹஜ்	... 205
178	வாஜிபுகள்	... ”
	பஸ்லுன் பீ ஜியாரத்தில் ரௌலத்திஷ் ஷரீபா	
179	நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ரௌலா ஷரீபைத் தரிசித்தல்	... ”
180	ஜியாரத்தின் அதபுகள்	... 207
181	இஸ்லாம் மதத்தின் வாஜிபான காரியங்கள்	... 218
182	பெற்றோர்களுக்கு ஊழியம் செய்தல்	... 219
183	குருவுக்குச் செய்யவேண்டிய கடமை	... 221
184	மனைவியின் கடமை	... 222
185	நற்குணவதியான மனைவி	... 223

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
186	கணவன் கடமை	... 223
187	பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள்	... 225
	பஸ்லுன் பீ பயானி ஹுகூக்கில் இஸ்லாம்.	
188	முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ள வேண்டிய கடமைகளைப்பற்றிய விபரம்	... 226
189	ஸலாம் சொல்லல்	... ,,
190	தும்மலும் கொட்டாவியும்	... 228
191	தான் விரும்புவதையே பிறருக்கும் விரும்பவேண்டும்	... ,,
192	பிறருக்குத் தொந்தரை செய்யலாகாது	... ,,
193	தற்பெருமைகூடாது	... 229
194	கோட் சொல்லலாகாது	... ,,
195	முஸ்லிம்களைப் பகைக்கலாகாது	... ,,
196	உபகாரம் செய்யல்	... ,,
197	பிறர்பகை வகல்	... ,,
198	கலந்துறவாடல்	... 230
199	பெரியோருக்கு மரியாதை	... ,,
200	சடுகடுத்து பேசலாகாது	... ,,
201	வாக்குறுதி செய்யல்	... ,,
202	நீதி பேசல்	... ,,
203	கண்ணியவானைக் கனப்படுத்தல்	... ,,
204	இணக்கஞ் செயல்	... 231
205	குறை மறைத்தல்	... ,,
206	சந்தேகத்திற்கிடங் கொடுக்கலாகாது	... ,,
207	ஜனாஸாவிற்கு ஆயத்தஞ் செய்யல்	... ,,
208	தேவையுள்ளோர்	... ,,
209	பணக்காரர், ஏழைகள், அனாதைகள்	... ,,
210	பிறருக்கு நற்புத்திகூறல்	... 232
211	அநியாயம் செய்வதை அகற்றவேண்டும்	... ,,
212	பஸ்லுன் பீ ஸுனனில் இஸ்லாம்	... ,,
213	தன்னைக் கண்டு கொள்ளவந்தவர்களை உபசரித்தல்	... 233
214	விருந்தோம்பல்	... 234
215	விருந்தினர்	... 235
216	உணவருந்தும் முறை	... 236
	பஸ்லுன் பீ பயானி ஸுனனில் ஹுதா வ ஸுனனிஸ் ஸவாயிதி	
217	இருவகை ஸுன்னத்துகளையும் பற்றிய விபரம்	... 238
218	மஸ்ஜிதினுட் பிரவேசித்தல்	... 240

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 OCT 1949
MADRAS

நே. பொருளடக்கம். பக்கம்.

219 உடை ... 241
220 வெளியிற் செல்லல், பாதரக்ஷையணிதல் ... 242
221 பேச்சு ... 243
222 நித்திரை செய்யல் ... ,,
223 சொற்பனம் ... 244
224 ஸலாத்துல் அப்ஹறீ ... 246
225 சுர்மா இடல் ... 247
226 மணம்பூசல், மருதோன்றிபோடல் ... ,,
227 தலை தாடி முதலிய ரோமங்கள் ... 248

பஸ்லுன் பீ ஆதாபிஸ்ஸபர்.

228 பிரயாணஞ் செல்லல் ... 249
229 கலந்துறவாடல் ... 252
230 சமாதானம் செய்வித்தல் ... 255
231 சிறந்த குணம் ... ,,
232 பொறுமை ... ,,
233 சபை ஒழுங்கு ... ,,
234 கோபம் ... 256
235 தகுதிக்குத் தக்கவாறு நடத்தல் ... ,,
236 வாக்குறுதியை நிறைவேற்றல் ... ,,
237 அடக்கம் ... 257
238 பிறர் மனை ஏகல் ... 258
239 சகோதரத்துவ மேற்படல் ... ,,
240 சபையில் அமரும் ஒழுங்கு ... 259
241 அல்லாஹ்விற்காக அன்பு கொள்ளல் ... 260
242 சிருஷ்டிகளை விட்டுத் தனித்தல் ... 261
243 நோயாளிகளை விசாரித்தல் ... ,,
244 மரிப்பவர்கள் ... 262
245 நோக்குதல் ... ,,
246 பந்துக்கள் ... 265
247 அயலகத்தார் ... ,,
248 கலந்தாலோசனை செய்யல் ... 266
249 பால்பார்த்தல் ... 267
250 ஜீவ ஹிம்சை ... ,,
251 ஆடு மாடுகளை வைத்துக்கொள்ளல் ... 269
252 வியாபாரம் ... ,,
253 வீடு கட்டல் ... 272
254 நாய் முதலியவைகளை வளர்த்தல் ... 273
255 பாக்கத்தை யுண்டுபண்ணுங் காரியங்கள் ... ,,

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
256	தரித்திரத்தை யுண்டாக்குங் காரியங்கள்	... 273
257	வீட்டில் பிரவேசித்தல்	... 275
258	சிரிப்பு	... ,,
259	காய் கனிகள்	... ,,
260	நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிரியமானவைகள்	... 279
261	பிரார்த்தனைகள்	... 280
262	பிறை கண்டவுடன் ஓதவேண்டிய ஸூறத்துகள்	... 281
	பாபுஸ்ஸைதி வத்-தபாயிஹி.	
263	அறுத்தல் வேட்டையாடல் ஆகியவைகளைப் பற்றிய விபரம்	... 282
264	அறுப்பின் ஸுன்னத்துகள்	... 285
265	அறுப்பின் முஸ்தஹப்புகள்	... 286
266	அறுவையின் மக்றூஹுகள்	... ,,
267	வேட்டை மிருகங்கள்	... 287
268	வேட்டையாட ஷர்த்து	... 288
269	புசிக்க ஹறுமான பிராணிகள்	... 289
	பஸ்லுன் பிஜ்தினுபி கலாமில் பவாஹிஷி வல்லஅனி வ கைரிஹிமா.	
270	கெட்ட பேச்சுக்கள் சபித்தல் முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வதைப்பற்றிய விபரம்	... 291
	பஸ்லுன் பீ பயானில் மஆஸீ.	
271	பாவங்களைப்பற்றி விபரிக்கும் பாடம்	... 295
272	பெரும் பாவங்கள்	... 296
273	சிறு பாவங்கள்	... 299
274	பொய்யுரைத்தல்	... ,,
275	புறங்கூறல்	... 300
276	கோள் சொல்லல்	... 301
	பஸ்லுன் பீ பயானில் அம்றி பில் மஅறூபி வன்னஹ்யி அனில் முன்கரி.	
277	நன்மையை ஏவித்தீயதை விலக்கும் விபரங்களைப் பற்றிய பாடம்	... 302
278	ஏவல் விலக்கல் செய்வூதன் மர்த்தபாக்கள்	... 304
	பஸ்லுன் பீ பயானித் தௌபத்தி.	
279	தௌபாவைப்பற்றிய விபரம்	... 305
280	தௌபாவின் ருக்னுகள்	... 306
281	தௌபாச்செய்வதாலேற்படும் பிரயோஜனங்கள்	... 308

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
282	உண்மையாய் தௌபாச் செய்தவர்களின் அடையாளங்கள்	... 310
283	தௌபாச் செய்யும்படி தூண்டும் காரியங்கள்	... 311
284	தௌபாச் செய்பவர்களில் சிறந்தவர்கள்	... ”
	பஸ்லுன் பீ பயானில் இபாதாத்தி.	
285	வணக்கங்களைப்பற்றிய விபரம்	... 313
286	தொழுகை	... ”
287	திரு குர்ஆன்	... ”
288	குர்ஆன் ஓதும் முறை	... 314
289	ஸலவாத்து	... 318
290	திக்று அவ்றுதுகள்	... 319
291	தினசரி ஓதும் விர்து	... 320
292	கற்றோரும் மற்றோரும்	... 322
293	துஆக் கேட்குதல்	... 323
294	சிந்தை	... 324
	காத்திமா பீ பயானில் முஹப்பத்.	
295	முடிவுரை:—அல்லாஹுத் தஆலாவை நேசிப்பதைப் பற்றிய விபரம்	... ”
	கித்தாபுல் ஔராதி வல் பவாயிதி.	
296	விர்துகள் இதர பிரயோஜனங்களை விபரிக்கும் கிரந்தம்.	326
297	வருஷத்தின் கடைசி நாளில் ஓதவேண்டிய துஆ	... 334
298	முஹர்ரம் மாதம் முதலாவது தினத்தில் ஓதும் துஆ	... 335
299	ஆஷூரா நாளில் ஓதும் துஆ	... 336
300	பராஅத் இரவு துஆ	... 340
301	விவாகம் செய்தல்	... 341

பொருளடக்கம் முற்றிற்று.

بسم الله الرحمن الرحيم.

பிஸ்மில்லா ஹிர் றஹ்மா நிர் றஹீம்.

فتح الرحمن في الفقه النعمان.

பத்ஹுர் றஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்.

அல்லாவின் துதி.

بسم الله الرحمن الرحيم.

الحمد لله رب العالمين. والصلوة والسلام على سيد المرسلين.
محمد واله وصحبه اجمعين.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா செய்யிதில் முற்ஸலீன். முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

புகழனைத்தும் ஆலத்தார்களை படைத்தாளுகிற அல்லாஹுத்தஆலாவுக்கே உரியன. ஸலாத்தென்னும் சருணையும் ஸலாமென்னும் ஈடேற்றமும் நமக்கெல்லாம் நாயகமாகிய செய்யிதுல் முற்ஸலீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்கள் கிளைஞர்கள் தோழன்மார்கள் மீதும் நிலைக்க,

—o—

باب فى بيان الدين و الاسلام

பாபுன் பீ பயானித்தீனி வல்இஸ்லாம்

இஸ்லாம் மார்க்கத்தை பற்றிய பாடம்

அல்லாஹு சுபுஹானஹு வத்தஆலா நம்மள் நாயகம் முஹம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதிறக்கப்பட்ட புருகானுல் மஜீது வகுர்ஆனுல் ஹமீதென்னும் சங்கையாகிய வேதத்தில் திருவுளம்பற்றியிருக்கிறுன். அதாவது:—

ان الدين عند الله الاسلام

இன்னத் தீன இந்தல்லாஹில் இஸ்லாம்

அல்லாஹுத் தஆலா இடத்தில் அங்கீகரிக்கப்பெற்ற மார்க்கமாகிறது மெய்யாக இஸ்லாமார்க்கமாயிருக்கும். (எஃனீ) அல்லாஹுத் தஆலாவுக்கு பொருத்தமாக்கப்பட்ட மார்க்கமாவது, தவ்ஹீதையும் சிறப்பமாகிய ஷறஅயும் பொதிந்த இஸ்லாமெனும் மார்க்கத்தைத் தவிர வேறொன்றுமில்லை. தீனென்னும் சொல்லுக்குப் பொருள் மூன்றுண்டும். 1-வது வழிப்படுதல், 2-வது வழக்கம் 3-வது கூலி ஆக இந்த முப்பொருளையும் பொதிந்ததுதான். தீனெனும் மார்க்கம். ஆனபோதே அல்லாவுக்கு வழிப்படுதல் வழக்கமாயிருந்தால் ஆகிறத்தில் கூலி தருவானென்றறியப்படுகிறது.

அது வழக்க மென்று சொன்னதற்கு அத்தாக்ஷி அல்லாஹுத் தஆலா தனது திருகுருஆனில் சொல்லுகிறுன் لكم دينكم ولي دين லகும் தீனுகும் வலிய தீன் என்று காபிற்களை எதிர்ப்பாக்கி உங்களுக்கு வழக்கமான தீனை உங்களுக்கு தீனென்றும் எனக்கு வழக்கமான ஓர்மை எனக்கு தீனென்றும் சொல்லுமென நபியுல்லாவை

ஏவியதுபோல். இன்னும், مالک يوم الدين மாலிகி யவ்மித்தீன் கூலிகொடுக்கும் நாளெனும் ஆகிரத்தில் இராஜாவான நாயன் என்று தன்னைத் துதித்தான். ஆக இம்மூன்று பொருளுக்கும் அத்தாக்ஷி குருஆன் ஷரீபில் வந்திருக்கிறது.

இன்னும் அல்லாஹுத் தஆலா குருஆன் ஷரீபில் திருவுளமா யிருக்கிறுன்.

ووصى بها ابراهيم بنيه ويعقوب يا بني ان الله
اصطفي لكم الدين فلا تموتن الا و انتم مسلمون ٠

வவஸ்ஸா பிஹா இப்றுஹீமு பனீஹி வயஃகூபு யாபனிய்ய இன்னல்லா ஹஸ்தபா லகுமுத்தீன பலா தமுதுன்ன இல்லா வஅந் தும் முஸ்லிமூன்.

(எஃனீ) அல்லாஹுத் தஆலா திருவுளம் பற்றியதாவது:— எஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மிஸ்றுப் பட்டணத்தில் இருக்கும் சமயம் ஜனங்கள் புத்துகான் என்னும் விக்கிரகங்களை வணங்குகிறதை கண்டு ஸக்றுத்தின்போது மக்களை நோக்கி, ஆய்! மக்களே! அல்லாஹுத் தஆலா தெளிவாகிய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை யுங்களுக்கு தந்தான். நீங்கள் அந்த மார்கத்துக்கு தலைச்சாய்க்காமலும், தவ்ஹீதை கலப்பறுதலாக்காமலும் மவ்த்தாக வேண்டாமென்று வஸிய்யத்துச் செய்தார்கள்.

இன்னும் தீனென்னும் எடுப்புக்கு நாலு ருக்னென்னும் தூண்களுண்டு. 1-வது ஈமானென்னும் உண்மை கொள்ளுதல், 2-வது வழிப்பாடெனும் இஸ்லாம், 3-வது ஒர்மை படுதலென்னும் தவ்ஹீது. 4-வது அல்லாவை அறியுதலெனும் மஃரிபத்து. இந்த நாலு காரியத்திலொன்று பேதகமானுலும் தீன் பேதகமாகிவிடும், (அஆதனல்லாஹு மின்ஹ.)

فضائل الدين

தீனின் வருசைகளின் பாடம்.

அல்லாஹுத் தஆலா குருஆன் ஷரீபில் திருவுளமாயிருக்கிறன்.

اليوم اكملت لكم دينكم واتممت عليكم نعمتى ورضيت لكم الاسلام دينا

அல்யவ்ம அக்மல்து லகும் தீனகும் வஅத்மம்து அலைக்கும் நிஃமதீ வறலீத்து லகுமுல் இஸ்லாம தீனு.

(எஃனீ) இஸ்லா மெனும் மார்க்கத்தை உங்களுக்கு மார்க்கமாக பொருந்தி உங்கள்மீதில் என்னுடைய நிஃமத்தைப் பூர்த்தியாக்கி உங்கள் தீனை இன்று நிறப்பமாக்கினேனென்று திருவுளம் பற்றினன்.

சர்வரே ஆலம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தீனை பிரசங்கம் செய்யும்படி அல்லாஹுத் தஆலா கட்டளையிட்டபோது நாயகமவர்கள் தங்கள் பந்து ஜனங்களை அழைத்து ஆய் என் பந்து ஜனங்களாகிய முர்றத்தின் கூட்டங்களே! பனீ ஹாஷிம்களே! பனீ முத்தலிபுகளே! எனது அருமைப் புதல்வியாகிய பாத்திமாவே! நீங்கள் யாவரும் தீனுல் இஸ்லாமை தழுவிக்கொள்ளுங்கள், அப்படிக்காகாவிட்டால் உங்களுக்கு வந்துநேரிடும் கஷ்ட முதலான அதாபுகளைத் தட்டி விலக்க என்னல் முடியாது. ஆகையால் நீங்கள் யாவர்களும் தீனுல் இஸ்லாமைத் தழுவி அதில் சேர்ந்து உங்கள் ஜடலங்களை நரகத்தை விட்டும் காப்பாற்றிக் கொள்ளுங்களென்று திருவுளம் பற்றினர்கள்.

இன்னும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம் பற்றினர்கள், எந்த ஒருவன் குறைஷி வம்மிஷமாயிருந்தாலும், தீனுல் இஸ்லாமில் சேரவேண்டும். சேராவிட்டால் நரகமடைவான், ஹபஷி புளுக்கையாயிருந்தாலும், தீனுல் இஸ்லாமென்னும் சங்கையான மார்க்கத்தில் சேர்வதுகொண்டு சுவர்க்க மடைவான் என்று. இமாம்களில் ஒருவர் சொல்லுகிருர்கள்,

لعمرک ما الانسان الا ابن دینه. فلا تترک التقوی اتکالا علی النسب
لقد رفع الاسلام سلمان فارسي. وقدوضع الشرک الحسیب ابالهب

வஅம்றுக மல்இன்ஸானு இல்லப்னு தீனிஹி-பலாதத்றுகித்தக்வத் திகாலன் அலன்னஸப். லகத் றபஅல் இஸ்லாமு ஸல்மான பாரிஸீ-வகத் வலஅஷ்ஷிற்குல் ஹஸீப அபாலஹப்.

உன் பேரில் ஆணைப்படி மார்க்கத்துடைய மகனே அல்லாது மற்றவன் மனிதனில்லை. ஆகையால் வம்ஷத்தை நம்பி தக்வாவை விட்டிடாதே. நீ ஸல்மான் பாரிஸீ அவர்கள் அஜமியாயிருந்தும் அவர்களை இஸ்லாம் உயர்த்தி விட்டது. அபூலஹபு குறைஷியாயிருந்தும் ஷிற்கு அவனைத் தாள்திவிட்டது. அவனுடைய ஹக்கில் ஆண்டவன் தப்பத்யதா வென்னும் சூறவில் சொல்லுகிறுன். அபூலஹபுடைய இரண்டு கையும் மண்ணுகக்கடவது. அவனும் நாசமாகக்கடவது. அவனுடைய பணக்காசும், அவனுடைய சம்பாத்தியமும்; அவனைத் தொட்டும் ஒரு வஸ்துவையும் தேவையறுக்காது. அவனும் அவனுடைய பெண்ஜாதி ஹம்மாலத்தல் ஹத்தபும் அவளுடைய கழுத்தில் எழுபது முழங்கொண்ட இரும்புச்சங்கிலி போடப்பட்டவளாக கொளுந்திட்டு கதிர் வீசும் நரகம் புகுவார்கள் என்று சொல்லுகிறுன்.

(ஹிக்காயத்து) இற்ஷாதுல் இபாத் என்னும் கிரந்தத்தில் இமாம் முஹம்மதிப்னு இதிரீஸஷ்ஷாபியீ றஹ்மத்துல்லாஹி அலைஹி பேசி வருகிறுர்கள். நான் மக்கா ஷரீபில் இருக்கும்போது ஒருநாள் நசாறுக்களில் அஷ்பக் எனும் ஒரு மனிதனை கஃபாவில் தவாபு செய்யக்கண்டு உம்முடைய பிதாக்களின் மார்க்கத்தை விட்டு நீங்கி எங்கள் மார்க்கத்திலாக வேண்டிய காரணமென்ன வென்று கேட்டதற்கு என் பிதாக்களின் மார்க்கத்தைக்காண இம்மார்க்கத்தை மேன்மையாகக்கண்டேன். அதெப்படி என்றுல் நானும் இன்னும் சிலருமாகக் கப்பலில் சபர்போகிற காலத்தில் கப்பல் உடைந்துவிட்டது. அதில் நின்றும் எனக்கொரு பலகைக்கிடைத்தது அதிலேறிக்கொண்டேன். அப்பலகையை அலைகள் கடலின் தீவுகளில் நின்று ஒரு தீவிற்ச்சேர்த்துவிட்டது. அப்போது அப்பலகையை விட்டுக் கீளிறங்கி அத்தீவினுள் புகுந்து சுற்றிப்பார்க்கும்போது தேனைவிட மதுரமாக

வும் வெண்ணெயைவிட பெருதுவாகமுள்ள கனிகளையுடைய அனேக மரங்களையும் இளநீரினும் தெளிவாகிய தண்ணீரையுடைய ஆறுகளிலும், சனைகளையும் பார்த்துவிட்டு ஆண்டவனைப் புகழ்ந்து அக்கனிகளைப் புசித்து அந்நீரையும் பருகி நமது ஊருக்கு பிரயாணப்படுகிற ஏதகரம் வருகிற மட்டிலும் இங்கிருந்துதான் காலங்கழிக்கவேண்டுமென்றெண்ணி அங்கு தரித்திருந்தேன். அப்படியிருக்கச் சூரியன் அஸ்தமித்து இரவு வந்த உடன் காட்டின் ஐவா மிருகங்களின் தீங்கைப் பயந்து ஓர் மரத்தின் மீதேறி கொஞ்சம் சயனித்தேன். நடு இரவானபோது ஒரு மிருகத்தைத் தண்ணீரில்,

لا الہ الا اللہ الغفار محمد رسول اللہ النبی المختار

லாஇலாஹ இல்லல்லாஹுல் கப்பார். முஹம்மதுர் றசூலுல்லாஹின் நபிய்யுல் முக்தார்.

(இதன் பொருள்) பிழை பொறுக்கும்படியான அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறே நாயனில்லை. முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத் தஆலாவின் தெரிவுதலாக்கப்பட்ட நபியாகிய திருத்தூதரா யிருக்குமென்ற இக்கலிமாவை நாகரீகமான அறபிப் பாஷையால் சொல்லி தஸ்பீஹ் செய்துக்கொண்டு வரப்பார்த்தேன். அம்மிருகம் கரை வந்து சேர்ந்தபோது அதன் தலைத்தீமுளுங்கி பக்ஷியின் தலைபோலவும், அதன் முகம் மனிதனின் முகத்தைப்போலவும், அதன் கால்கள் ஒட்டகத்தின் கால்களைப் போலவும், அதன் வால் மீனின் வாலைப்போலவும் இருக்கக்கண்டேன். அந்த உடனே நம்மை இம்மிருகம் ஏதாவது தீங்கு செய்யுமென்று பயந்து மரத்தை விட்டு கீழே குதித்து விரண்டோடினேன். அப்போது அம்மிருகம் என்னை நோக்கி ஓ! மனிதனே! قف والا هلكت கிப் வஇல்லா ஹலக்த்த நில்லும் நில்லாவிட்டால் ஹலாக்காவாய் என்றது. அப்போது நின்றேன். உடனே அது உன் மார்க்கம் என்னவென்று கேட்டது. நான் என் மார்க்கம் நஸ்ரூவின் மார்க்க மென்று சொன்னேன். அப்போதது ஓ நஷ்டவாளனே! உனக்கென்ன கேடு இங்ஙனமிருக்கிறாய், ஹக்கைச்சேர்ந்த இஸ்லாம் மார்க்கத்தளவில் சேர்ந்துக்கொள், வனென்றால் நீ மூஃமினாகிய ஜின்கள் குடியிருக்கும் ஸ்தானத்தில் வந்திறங்கி இருக்கிறாய் என்றது.

அப்போது அந்த இஸ்லாம் மார்க்கம் எப்படி என்று கேட்ட போது அம்மிருகமானது என்னை நோக்கி அல்லாஹு சுபுஹானஹு வத் தஆலா ஒரே நாயன், மெய்யானவன், இன்னவிதமானவனென்று மட்டு திட்ட மில்லாதவன், அவனுக்குச் சரியானவன் ஒருவனுமில்லை, முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் சிருஷ்ட்டிகளில் மிக்க மேன்மையும் சிறப்பும் பெற்ற திருத்தூதா யிருக்குமென்றும், அவர்கள் கொண்டுவந்த மார்க்கம் மெய்யென்றும் நிண்ணயம் கொண்டு

اشهد ان لا اله الا الله واشهد ان محمدا رسول الله

அஷ்ஹது அல் லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றசூலுல்லாஹி என்னும் திருக்கலிமாவை ஓதுமென்று சொன்னது. நான் உடனே அக்கலிமாவை ஓதி இஸ்லா மார்க்கத்தைத் தழுவி இஸ்லாத்திலானேன். அப்போதது நீர் இத்தலத்திலிருக்கப் பிரியமாயிருக்கிறதா அல்லது உம்முடைய ஊருக்குப்போக பிரியமாயிருக்கிறதாவென்று வினவியது. அப்போது நான் என் ஊருக்குப்போகப் பிரியப்படுகிறேன் எனப்பகர்ந்தேன். அதற்கு அம்மிருகம் ஒரு கப்பல் வருமளவும் இங்கு தரித்திரும் என்று சொல்லி விட்டு கடலில் இறங்கி கொஞ்ச தூரத்திற்கப்பால் போய் என் பார்வைக்குப் புலப்படும்படி கடலில் நின்றது. அதன்பின் ஒரு கப்பல் வரக்கண்டு நானொரு மேடை மீதேறி நின்றுக்கொண்டு வெள்ளை வீசினேன்: அதை கப்பல் அதிகாரி அறிந்து என் சமீபமாய் கப்பலைக் கொண்டு வந்து நிறுத்தி என்னையும் அக்கப்பலில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். என்னிடம் நான் இந்த பலையில் வந்துச் சேர்ந்ததற்குக் காரணம் என்னவென்று வினவினார்கள்: நான் என்னில் நிகழ்ந்த வரலார் யாவற்றையும் ஆதியோடந்தமாய் சொல்லி முடித்தேன். அதைக்கேட்ட அக்கப்பலில் இருந்த நஸாறாக்கள் யாவர்களும் உடனே திருக்கலிமாவை ஓதி இஸ்லாத்தை தழுவினார்கள். இவ்வித காரணத்தால் தீனுல் இஸ்லாம் மார்க்கம் நல்லதென்று அம்மார்க்கத்திலானேன் என்று சொன்னார்.

(நஸீஹத்து) எனது அருமை நேயர்களாகிய மூமின் முஸ்லிம்களே! அல்லாஹு சுபுஹானஹு வத்த ஆலா முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தில் நம்மை ஆக்கி வைத்ததற்காக அவனை எப்போதும் நமது ஆயுள் வரை ஒரு வினடியும் பிடை விடாமல் ஷுக்று செய்ய வேண்டியது நம்மடங்கள் பேரிலும் கடமையாயிருக்கிறது, ஏனென்

ருல் நமக்கெல்லாம் சர்தாராகிய நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹதீது ஷரீபில் திருவுளம் பற்றியிருக்கிறார்கள். ஒருமனிதனுக்கு அல்லாஹுத் தஆலா ஒரு நிஃமத்தை கட்டளை செய்திருந்தால் அந்த நிஃமத்துக்கு அவன் ஷுக்று செய்ய வேண்டியது கடனாகி விட்டது. ஆனால் நமக்கு இந்த தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை அல்லாஹுத் தஆலா தந்திருக்கிறதோ எல்லா நிஃமத்தினும் மகா வலுப்பமான இன்றியமை யாத நிஃமத்தாகும். அதற்கு தகுமான ஷுக்றாக ஷுக்று செய்து நிறைவேற்ற நாம் தகுதி பெறவில்லை என்று.

இன்னும் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ றஹி மதுல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லுகிறார்கள். ஒரு மனிதனை துன்யாவின் துவக்கத்தில் படைக்கப்பட்டு கியாமனாள் வரை ஆயுளும் கொடுக்கப்பட்டிருந்து அவனை தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத் திலாக்கியதற்காக அவன் வயதெல்லாம் இரவும் பகலுமாக அல்லா ஹுத் தஆலாவை ஷுக்று செய்தாலும் அல்லாஹுத் தஆலா கொடுத்த நிஃமத்துக்கு போதுமாகாது. அவன் கொடுத்த நிஃமத்து களின் ஹக்குகளில் சிலதையாகிலும் நிறைவேற்றினவனாக யிருக்க மாட்டான். ஆனதால் நாம் அதற்கு தகுந்தபடி ஷுக்று செய்ய வலாதவனாக இருந்த போதிலும் நமக்கு கொடுத்திருக்கிற ஆயுள் களில் கொஞ்சமும் வீண்காலம் போக்காமல் எப்போதும் அவனை நினைத்து ஷுக்று செய்துக்கொண்டிருக்கிறது நம்மனைவர்கள் பேரி லும் கடமையாயிருக்கின்றது.

ஹஸரத் மவுலானா றூமீ ஜலாலுத்தீன் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். உனக்கு அல்லாஹுத்தஆலா தந்திருக்கிற நிஃமத் துக்கு ஷுக்று செய்வதை அதிகப்படுத்தினால் அந்த நிஃமத்தை உனக்கு அதிகப்படுத்துவான். அந்த நிஃமத்துக்கு ஷுக்று செய்யா மல் மாறுசெய்தாலதை அல்லாஹுத் தஆலா உன்னை விட்டும் பிரித் துக் கொள்வான் என்று.

ஆகையால், நம்மனைவர்களையும் ஆண்டவனுடைய நிஃமத்து களுக்கு ஷுக்று செய்யாமல் கெட்டுப்போன தோஷிகளின் கூட்டத் தில் சேர்க்காமல் அவனுடைய நிஃமத்துகளுக்கு அதிக ஷுக்று செய்து சாலிஹான சிநேகிதனம் பெற்ற நல்லோர்களின் கூட்டத்தில் சேர்த்து தீனுல் இஸ்லா மென்னும் மேன்மையும் சிறப்பும்பெற்ற மார்க்கத்தில் தரிப்படுத்தி நல்லருள் புரிவானாக.

باب الكلمه

கலிமாக்களின் பாடம்.

அவ்வல் கலிமா தையிபு

لا اله الا الله محمد رسول الله

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி.

(இதன் பொருள்) லாஇலாஹ இல்லல்லாஹு வணக்கத்திற்கு தகுமாகிய நாயன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர யாருமில்லை. முஹம்மதுர் றசூலுல்லாஹி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூதரா யிருக்கும்.

இதன் விவரமாவது:—அல்லாஹுத் தஆலாவைத் தவிர உள்ள, ஆலமென்னும் நம்மள் முதல் மற்றும் சகல வஸ்துவும் ஜீவாசிகளும் இல்லாமலிருந்து உண்டாக்கியிருக்கின்றான். அப்படி இல்லாமையிலிருந்து அதை உண்டாக்கி வெளிப்படுத்திய நாயன் அல்லாஹுத் தஆலா உண்டென்று யாதொரு சந்தேகமன்றியே துலாம்பறமாய் சாட்ச்சி சொல்வது கொண்டு வணக்கத்துக்கு அவனே பாத்திபமானவனென்றும் நிண்ணயங்கொண்டு விண்ணப்பஞ் செய்கிறேன். இன்னும் அவனையே வணங்குவேன், அவனைக்கொண்டே உதவி தேடுவேன், அவன் ஒருவன், ஹயாத்து, அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை திருவசனமுள்ளவன், அவன் சகலத்தையும் உண்டாக்கிறவன், அவன் தன்னைக்கொண்டு நிலைபாடானவன், ஆலம் அவனைக் கொண்டு நிலைபாடாயிருக்கிறது. ஆலத்தில் எந்த வஸ்துவும் அவன் அறிவு, நாட்டம், தத்துவம் கொண்டே அல்லாது புறப்படாது. ஆதலால் தேட்டமும், நாட்டமும் அவனேயாகும்.

இன்னும் நம்மள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் மற்றும் நபிமார்கள் அலைஹி முஸ்ஸலாம் அவர்களும், ஈமான், இஸ்லாம், வணக்கம், நற்குணம், ஏவல், விலக்கல் இன்னின்னவென்று அறிவித்து நம்மை ரக்ஷிக்கிறதற்காக அனுப்பட்ட மானிடர்கள், அவர்களோ விசுவாசமுள்ளவர்கள், சாத்விகமானவர்கள், அவர்களில் முந்தினவர்கள் ஹஸரத் பாவா ஆதம் அலை

ஹிஸ்ஸலாம். பிந்தினவர்கள் நம்மள் நாயகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள். அவர்கள்தான் எல்லா நபிமார்களிலும் மிகவும் மேருமையானவர்கள். அவர்கள் நுபுவ்வத்து தீர்க்கத் தெரிசனம் எங்கும் அடைய வளைந்த தாகும். அவர்களின் சொல், செயல், ஏகல், விலக்கல், விசகளம் அறிவித்தல் யாவற்றிலும் அவர்களை உண்மையாக்கி வைத்து அவர்களைப் பின்பற்றினேனென்று அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் உண்மை கொள்கிறதும், அவர்களை உவக்குகிறதும், அவர்களின் திரு நாமத்தை சங்கையோடு வித்று செய்கிறதும் பற்லாகும். உங்களில் எவனும் அல்லாவையும், அவனுடைய றசூலையும், தன்னைக்காணவும், தன் பிள்ளைக்குட்டிகளைக் காணவும், தன் தாப் தகப்பர்களைக்காணவும் அதிகமாய் உவக்குறவரையில் ஈமான் கொண்டவனுகானென்று ஹதீதில் வந்திருக்கிறது. ஆனதால் அல்லாவும், அல்லாவுடைய றசூலும் எல்லாவஸ்த்துகளைக்காணவும் உவப்பாக்கிவைப்பதுதான் நிறப்பமான ஈமானுகும்.

அறிந்துக்கோள்:— ஈமானுடைய அகீதாக்கள் அடங்கலும் லாஇலாஹ இல்லல்லாஹ் வென்னும் சிறப்பாகிய கலிமாவின் தாளாலே புகுந்திருக்கிறது. ஆனதால் யாதொரு அக்லுள்ளவன் வயது வந்து பாலிகான உடன் முந்தி லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்னும் திரு கலிமாவைப் படித்து ஓதி அதன் பொருளை விளங்கி உண்மைகொள்வது பற்லாகும்.

ஹதீது:—நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மஜ்லிஸில் அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் இன்னும் சில அஸ்ஹாபிகளும் இருக்கும்போது அஸ்ஹாபிகளை நோக்கி, நீங்கள் உங்களுடைய ஈமானை புதுப்பித்துக்கொள்ளுங்களென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள். அப்போது அஸ்ஹாபிகள் நாங்கள் ஈமானை எப்படி புதுப்பித்துக் கொள்கிறதென்று கேட்கவும் லாஇலாஹ இல்லல்லாஹ் வெனும் கலிமாவை மிகுதமாக்கி கொள்ளுங்களென்று திருவுளமானார்கள். இன்னும் கலிமாவை மிகுதமாக ஓதுவது ஈமானையும் கல்பையும் பிலப்படுத்தும்.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளம் பற்றியதாக ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களுக்கு அறிவித்தார்கள். அதாவது லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமா என் கோட்டையாயிருக்கும். அக்கலிமாவைச் சொன்னவன் அக்கோட்டையினுள் புகுந்தான். என் கோட்டையில் புகுந்தவன் என் அதாபை விட்டும் அச்சம் தீர்ந்தான் என்று.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளமானான்:— فاعلم انه لا اله الا الله பஃலம் அன்னஹு லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதே! அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு நாயன் இல்லை என்று அறிந்துக் கொள்ளும். இன்னும் அறிந்துக் கொள்ளும் லாஇலாஹ இல்லல்லாஹ் வென்னும் கலிமாவாகிறது, அல்லாஹுத் தஆலாவை வணங்கும் ஆபிதீன்களுடைய நேமமான வணக்கமாகும். அல்லாஹுத் தஆலாபால் நடக்கும் ஸாலிஹீன்களுக்கு வேண்டுமான கருமமாகும். அல்லாஹுத் தஆலா பால் செல்லும் ஸாயிரீன்களுடைய பொக்கிஷமாகும். அல்லாஹுத் தஆலா அளவில் முந்தும் ஸாபிகீன்களுக்கு காணிக்கையாகும். இன்னும் அக்கலிமா இல்முக்கும், மஃரிபாவுக்கும், சொற்கத்துக் திறவுகோலாகும். காபிற் அதைச் சொன்னால் அது அவனின் குபிருடைய இருளை நீக்கி தௌஹீதுடைய ஒளியை அவனுடைய கல்பில் பிரகாசிக்கச் செய்யும். இன்னும் அதாகிறது திக்ருகளுக்கெல்லாம் மிகவும் வருசையான திக்ருகவுமாகும்.

இன்னும் ஸஹ்லு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். லாஇலாஹ இல்லல்லாஹ் வென்னும் திருக்கலிமாவுக்கு கூலியாகிறது, அல்லாஹுத் தஆலாவின் திருமுகத்தின் தெரிசனமேயாகும், சொர்க்கமாகிறது மற்றுமுள்ள அமல்களுக்கு கூலியாகும்.

பாஇதா:—லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்றது 24-ஹர்புகளாகும். இரவும் பகலும் 24-சாஅத்துகளாகும். இதில் ஒவ்வொரு ஹர்படங்கலும், ஒவ்வொரு சாஅத்துடையபாவத்துக்கு ஈடாகும். இன்னும் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்றது 7-கலிமாவாகும். அடியானுக்கு 7-உறுப்பு, நரகத்துக்கும் 7-வாசல், ஒவ்வொரு உறுப்புகளையும் நரகத்தில் செல்லவிடாமல் நரகத்து 7-வாசல்களையும் அடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹதீது:—இன்னும் அபூ ஹுறைறு (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஒருமனிதன் ஸக்ருத்துடைய ஹாலிலிருக்கும்போது மலகல் மவுத்து அலைஹிஸ்ஸலாம் அவனிடத்தில் வந்து, அவன் நன்மையான அமல் செய்திருக்கிறுனென்று அவனுடைய உறுப்புகளைப் பரிசோதிப்பார்கள், ஒரு உறுப்பிலும் நன்மையான அமலை காணமற்போனல், பின்பு அவனுடைய நாவைப்பார்ப்பார்கள். அப்போது அன்னவு முரசு என்னும் மேல் அன்னவில் லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவைகொண்டு சேர்ந்ததாக இருக்கிரதைக்கண்டு அல்லாஹுத் தஆலாவிடம் அறிவிப்பார்கள். உடனே அல்லாஹுத் தஆலா அம்மனிதன் இந்த இக்லாசுடைய கலீமாவை சொல்லிக் கொண்டிருந்த பறக்கத்தால் அவனுடைய பாவங்களை பொறுத்து நற்பதவியில் சேர்த்து விடுவான். என்று.

ஹிக்காயத்து:—அபீயஸீதுல் குற்துபீ என்னும் இமாமை தொட்டும் ரவுலுற் றயாஹீன் என்னும் கிரந்தத்தில் பேசிவரப்பட்டிருகிறது:—யாராகிலுமொருவன் லாஇலாஹ இல்லல்லாஹ் வென்னும் திருக்கலிமாவை 70,000 எழுபதாயிரம் விடுத்தம் தன் ஆயுளில் ஓதிவிடுவானுகில் நரகத்தை விட்டும் உரிமை பெற்றுவிடுவானென்று வந்திருக்கிரதை ஆதரவு வைத்து தங்களுக்காக 70,000 விடுத்தமும், தங்கள் பந்துகளுக்காக 70,000 விடுத்தமும் ஓதிவைத்திருந்தார்கள். அப்பால் அவர்களும் ஒரு காரணத்துடைய வாலிபரும் சேர்ந்திருக்கும்போது, ஒரு மனிதன் எல்லோரையும் விருந்துக்கு அழைத்து தன் வீட்டுக்கு கூப்பிட்டுகொண்டு போய் எல்லோரும் பசியாரிக்கொண்டிருக்கும்போது அவ்வாலிபராகிய கருமத்தையுடையவர் கைபான சங்கதிகளை அறிவிக்கும்படியானவருய் இருப்பதால், ஒரு கோரமான சத்தமிட்டு, ஓய் உமர் என்கிற மனிதனே! இதோ என்னுடைய தாய் நரகத்திலிருக்கிருளென்று கூக்குறலிட்டு அழுதார். அப்பால் அபீயஸீதுல் குற்துபீ என்னும் இமாம் இவருடைய ஹாலை பார்த்து, இன்றையில் மேல்கண்ட ஹதீதுடைய உண்மையை பரிசோதனை செய்துவிடலா மென்றெண்ணி, ஆண்டவனே! அந்த ஹதீது மெய்யாயிருக்கும். அதை பேசிவந்தவர்களும் மெய்சொல்கிறவர்களாயிருக்கும். நான் அதிகமாய் ஓதிவைத்திருக்கிற 70,000 விர்தையும் இந்த வாலிபரின் தாயாராகிய நரகத்

திலிருக்கிற பெண்பிள்ளைச்கு யான் பிதியாக் கொடுத்தேன் யென்று கல்பில் நாடினார்கள். அப்போதே அவ்வாலிபர் ஓய்! உமர் என்கிற மனிதனே! எல்லாப்புகழும் புகழ்ச்சியும் அல்லாஹுத்தாக யிருக்கும். என்னுடைய தாயை இப்போதே நரகத்தைவிட்டும் உரிமையாக்கி விட்டானென்று சந்தோஷ மடைந்தார்.

இரண்டாம் கலிமா ஷஹாதத்து.

اشهد ان لا اله الا الله وحده لا شريك له واشهد ان محمدا عبده ورسوله

அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ றசூலுஹு.

(இதன் பொருள்) அஷ்ஹது நான் பிஷகற அறிந்து விண்ணப்பஞ்செய்து சாக்ஷி சொல்கிறேன். அன்லாஇலாஹ இல்லல்லாஹு மெய்யாக வணக்கத்திற்கு தகுதியாகிய நாயன் அல்லாஹுத் தஆலா ஒருவனைந் தவிற வேறில்லை. வஹ்தஹு அவன் தனித்தவன். லாஷரீகலஹு அவனுக்கு யாதொரு இணையுமில்லை, வஅஷ்ஹது இன்னும் பிஷகற அறிந்து சாக்ஷி சொல்கிறேன். அன்ன முஹம்மதன் மெய்யாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துஹு அல்லாஹு தஆலாவின் பிரிய அடியாருமாய் வறசூலுஹு இன்னும் அவனுடைய திருத்தூதருமா யிருக்கும்.

(கலிமா ஷஹாதத்தின் வருஷை.)

ஹிக்காயத்து:-இப்னுஹீமுல் வாஸீத்தீ என்னும் பெரியார் ஹஜ்ஜுடைய நாளில் ஏழு கல்லெடுத்து ஓ! கற்களே! நீங்கள் எனக்கு ஷாஹிதா யிருங்களென்று சொல்லி அஷ்ஹது கலிமாவை ஏழு விடுத்தம் ஓதி அக்கற்களை ஹஜ்ஜுடைய ஜம்றத்துகளென்னும் எல்கைகளில் எறிந்துவிட்டு அன்றிரவு நித்திரைசெய்தார்கள். அன்று கனவில் கியாம நாளானது போலும், அதில் அவர்களை கேள்விகணக்கு கேட்கப்பட்டு நரகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், நரகத்தின் எழு வாசலிலும் ஏழுகல்லுகள்போய் அடைத்துக் கொண்டதாகவும், மலக்குகள் அதைத் தள்ளித் தள்ளிப் பார்த்ததில் கல்லு விலகாததால் அவரை அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் கொண்டு போய் நிறுத்தினார்கள். அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா இவரை நோக்கி நீர் கற்

களைச் சாக்ஷி வைத்தது பழுதாகவில்லை என்று சொல்லி அவரை சொர்க்கத்துக்கு கொண்டுபோங்களென உத்திரவு செய்ய அந்தபடிக்கு கொண்டு போய் என்னை சொர்க்கத்தில் புகுதும்படி செய்ததாகக் கண்டதாய்ச் சொன்னூர்கள்.

மூன்ரும் கலிமா தம்ஜீது

سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر ولا حول ولا قوة الا بالله العلي العظيم.

சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல் லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.

(இதன் பொருள்) சுப்ஹானல்லாஹி அல்லாஹுத் தஆலாவை துப்த்ராக்குகிறேன். அவன் துப்தானவன் வல்ஹம்து லில்லாஹி புகழனைத்தும் அல்லாவுக்காயிருக்கும் வலாஇலாஹ இல்லல்லாஹு வணக்கத்திற்குத் தகுமானவன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறே யாருமில்லை. வல்லாஹு அக்பர் அல்லாஹுத் தஆலா மிகவும் பெரியவன். வலாஹவ்ல பாவத்தை விட்டும் திரும்புத லும் இல்லை. வலாகுவ்வத நன்மைசெய்ய பிலனுமில்லை. இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம் மேலாகிய வலுப்பமாகிய அல்லா ஹுத் தஆலாவின் உதவிகொண்டொழிய.

(ஹிக்காயத்து) சுலைமான் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களு டைய சிம்மாசனத்தை ஆகாசமாய் காற்றெடுத்துக் கொண்டு போகி றதை ஒரு மலையின் மீதிருந்து அல்லாஹுத் தஆலாவை வணங்கிக் கொண்டிருந்த ஒரு ஆபிதானவர் அண்ணாந்து பார்த்துப் புதுமை யாகி சுப்ஹானல்லாஹ் இதென்ன புதுமைதான் என்று ஆச்சரிய மடைந்தார்கள். அதை நபியவர்கள் தெரிந்து உடனே சிம்மாசனத் தைக்கீளிறக்கி அந்த ஆபிதினிடமாக வந்து ஓ ஆபிதே! நீர் புதுமை யடைய வேண்டாம் என்னுடைய இத்தவ்லத்தெல்லாம் நீர் சொன்ன சுப்ஹானல்லாஹியென்ற தஸ்பீஹுக்கீடாகாது. என்னுடைய இந்த தவுலத்து அளிந்து போய்விடும். நீர் சொன்ன தஸ்பீஹுக்கு கூலி சொர்க்கத்தில் மகா இன்பமுடைய கனியின் மரத்தை நட்டப்பட்டு அதன் பலாபலன் ஒருநாளும் அளியாது என்று சொல்லி விட்டு பிறயாணமாகி விட்டார்கள்.

நாலாம் கலிமா தவ்ஹீது.

لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيي ويميت
بيده الخير وهو على كل شيئ قدير ·

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலாஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது பியதிஹில் கைரு வஹுவ அலா குல்லி ஷய்யின் கதீர்.

(இதன் பொருள்) லாயிலாஹ இல்லல்லாஹு வணக்கத்திற்குத்தகுமான நாயன் அல்லாஹுத் தஆலாவைத்தவிர யாருமில்லை. வஹ்தஹு அவன் தனித்தவன் லாஷரீகலஹு அவனுக்கு யாதொரு இணையுமில்லை. லஹுல்முல்கு இராஜங்க மெல்லாம் அவனுக்கே உரியது வலஹுல்ஹம்து எல்லாப்புகளும் புகழ்ச்சியும் அவனுக்கே உரியனவாகும் யுஹ்யீ மவுத்தானவர்களை ஹயாத்தாக்குவான் வயுமீத்து ஹயாத்தானவர்களை மவுத்தாச்குவான். பியதிஹில் கைறு நலவடங்கலும் அவன்வசமே யிருக்கின்றன. வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர். அவன் எல்லா வஸ்துகளின் பேரிலும் மிகவும் தத்துவம் பெற்றவன்.

ஹதீது:—யாராகிலுமொருவன் இந்த கலீமாவை தினம் பத்து விடுத்தம் ஓதுவானாகில் நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிள்ளைகளில் நின்றும் நாலு பேரை உரிமைவிட்டவனைப்போலாயிருக்குமென்றும், நூறு விடுத்தம் ஓதினால் பத்து அடிமையை உரிமைவிட்டதற்கு சமானமாகிறதும், தவிற அவனுக்கு நூறு நன்மையும் எழுதப்பட்டு அவனுடைய நூறு தீமையும் அளிக்கப்படும். இன்னும் அவனுக்கு அது ஷைத்தானை விட்டும் காரணமாகயிருக்கு மென்றும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்வர்கள் திருவுளம்பற்றினார்கள்.

ஐந்தாம் கலிமா றத்துல் குப்று.

اللهم اني اعوذ بك من ان اشرك بك شيئا وانا اعلم به واستغفرك لما لا
اعلم به انك انت علام الغيوب تبت عنه وتبرأت عن كل دين سوي
دين الاسلام واسلمت واقول لا اله الا الله محمد رسول الله

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அன் உஷ்ரிக பிக ஷைஅன் வஅனு அஃலமு பிஹி வஅஸ்தக்பிறுக லிமாலா

அஃலமு பிஹி இன்னக அந்த அல்லாமுல் குயூப். துப்த்து அன்ஹு வதபற்ரஃது அன்குல்லி தீனின் ஸிவா தீனில் இஸ்லாம் வஅஸ் லம்து வஅகூலு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹி.

(இதன் பொருள்) அல்லாஹும்ம ஆண்டவனே! இன்னீ அஊது பிக மின் அன் உஷ்ரிக பிக ஷைஅன் வஅனு அஃலமு பிஹி நான் அறிந்தவனாக உனக்கு ஒரு வஸ்துவையும் இணை வைப்பதை விட்டு உண்மையாக உன்னைக் கொண்டு காரமானம் தேடுகிறேன். வஅஸ்தக்பிறுக லிமாலா அஃலமு பிஹி நான் அறியாமல் செய்த தற்கு உன்னிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகிறேன். இன்னக அந்த அல்லாமுல் குயூப். நீ மெய்யாக இரகஷியமனைத்தையும் மிக வும் அறிந்தவனாய் இருக்கிறாய். துப்து அன்ஹு இவைகளைவிட்டும் தௌபா செய்து மீண்டேன் வதபர் றஃது அன்குல்லி தீனில் ஸிவா தீனில் இஸ்லாம் இஸ்லாமெனும் மார்க்கத்தைத் தவிர மற்றமார்க்கங் கள் யாவைவிட்டும் நீங்கினேன். வஅஸ்லம்து வஅகூலு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி நான் லாஇலாஹ இல் லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்றுசொல்லி இஸ்லா மாகி விட்டேன்.

(பாயிதா) இக் கலிமா குப்றையும், ஷிற்கையும் நீக்கும்படியா கிய கலிமாவாகும். இதை நித்திரை செய்யும்போதும் காலையிலும் மாலையிலும் ஓதிவருகிறது எல்லோர்களுக்கும் அவசியமானதாகும். அதேனெனில் றத்துல் முக்தாறெனும் கிதாபில் இந்த ஸமானிலுள்ள முஸ்லிமாகிய ஜனங்களுக்கு எந்தவிதத்தால் குப்று வந்து சம்பவிக் குமென்கிற விபரம் நன்றாகத் தெரியாதிருப்பதாலும், சில நேரங்க ளில் அசதி மறதியாக குப்றாகிய நடத்தைகள் வந்து நேரிட்டு விடுவ தாலும் இந்த றத்துல் குப்றெனும் கலிமாவைப் பேணுதலாக ஓதி வருகிறது முஸ்தஹப்பா இருக்கும் என்று வந்திருக்கிறது.

(சையிதுல் இஸ்திக்பார்.)

اللهم انت ربي لا اله الا انت خلقتني وانا عبدک وانا على عهدک
ووعدک ما استطعت اعوذ بک من شر ما صنعت ابوء لک بنعمتک
علي وابوء بذنبي فاغفرلي فانه لا يغفر الذنوب الا انت

அல்லாஹும்ம அந்த றப்பீ லாஇலாஹ இல்லா அந்த கலக் தனீ வஅனு அப்துக வஅனு அலாஅஹ்திக வவக்திக மஸ்ததக்து

அஊதுபிக மின்ஷற்றி மாசனஃது அபூஉலக பிநிஃமதிக அலெய்ய வஅபூஉ பிதம்பி பக்பிர்லீ பஇன்னஹூ லாயேக்பிருஸ்ஸுனூப இல்லா அந்த.

(இதன் பொருள்) அல்லாஹும்ம நாயனே அந்த றப்பீ நீயா கிறவன் என்னைப் படைத்து வளர்க்கிற நாயன். லாஇலாஹ இல்லா அந்த வணக்கத்திற்குத் தகுமானவன் நீயே கலக்தனி நீ என்னைப் படைத்தாய் வஅன அப்துக நான் உன்னுடைய அடிமை வஅன அலா அஹ்திக வவக்திக மஸ்ததக்து நான் தருணிபெற்றமட்டும் நான் உன்னுடைய வார்த்தைப் பாட்டின் பேரிலாயிருக்கும் அஊதுபிக மின்ஷற்றி மாசனஃது நான்செய்த அமலின் தீங்கைவிட்டும் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். அபூஉலக பிநிஃமதிக அலெய்ய பணி விடைக்கு நேர்வழி கட்டளை இடுதலில் நீ என் பேரில் செய்த நிஃமத்தைக் கொண்டு உனக்கு விண்ணப்பம் செய்கிறேன். வஅபூஉ பிதம்பி இன்னும் என் பாவத்தைக் கொண்டு விண்ணப்பம் செய்கிறேன். பக்பிர்லீ ஆனதால் நீ எனக்கு பிழை பொருத்தருள் பஇன்னஹூ லாயேக்பிருத் துனூப இல்லா அந்த ஏனெனில் திட்டமாக உன்னைத் தவிர யாரும் பாவங்களைப் பொருக்கமாட்டார்கள்.

இந்த இஸ்திஃபாரின் பொருளையறிந்து ஏகீன்கொண்டவனாக பகலில் அதைச் சொல்லி மவுத்தானால் அவன் சொர்க்கவாதியா இருக்கும். இதுபோல் இரவில் சொல்லி மவுத்தானாலும் சொர்க்கவாதியா இருக்கும்.

باب في بيان الصلوة

பாபுன் பீ பயானிஸ் ஸலவாத்.

ஸலவாத்துடைய பாடம்.

اللهم صل وسلم على محمد واله وصحبه عدد ما في علم الله صلاة دائمة بدوام ملك الله

அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் அலா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அதத மாபீ இல்மில்லாஹ் ஸலாத்தன் தாயிமத்தன் பிதவாமி முல்கில்லாஹ்.

اللهم صل على سيدنا محمد وعلى ال سيدنا محمد وبارك وسلم

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலி ஸையிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம்.

اللهم صل على محمدن النبى الامى وازواجه
امهات المؤمنين وذريته واهل بيته كما صليت على ابراهيم
وعلى ال ابراهيم انك حميد مجيد

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதினின் நபிய்யில் உம்மிய்யி வஅஸ்வாஜிஹி உம்மஹாத்தில் முஃமினீன் வஸுர்ரியத்திஹி வஅஹ்லி பைத்திஹி கமா ஸல்லேத்த அலா இப்றுஹீம வஅலா ஆலி இப்றுஹீம இன்னக ஹமீதுன் மஜீத்.

இந்த ஸலவாத்துகளும் இன்னும் இதுபோல் மிகுத ஸலவாத்துகளு முண்டு.

இனி, சிறப்பாகிய கலிமா ஷஹாதத்தைப்போல் வயதில் ஒரு விடுத்தம் ஸலவாத்து சொல்வது பற்று. இடம்பாடான நேரங்களிலெல்லாம் ஸலவாத்தை ஓதுவது முஸ்த்தஹப்பு. இன்னும் ஸலவாத்தை மிகுதமாய் ஓதுவது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய ஷபாஅத்தையும் சொர்க்கத்தில் அவர்களுக்கு தோளமையாயிருப்பதையும் உண்டாக்கும். இன்னும் வெள்ளிக்கிழமை இரவிலும் பகலிலும் ஸலவாத்தை அதிகமாய் ஓதுகிறது மிகவும் வருசையாகும்.

இன்னும் அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தை சொல்லப்படும் நேரெல்லாம் ஸுப்ஹானல்லாஹி என்று அல்லது ஜல்ல ஜலாலுஹூ என்று அல்லது த்தபாரகல்லாஹு வதஆலா என்று அல்லது அஸ்ஸ வஜல்ல என்று புகள்கிறது வாஜிபு. இதுபோல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய திருநாமத்தை கேட்கும் நேரெல்லாம் அவர்கள்பேரில் ஸலவாத்துச் சொல்கிறது வாஜிபு.

இனி, இஸ்லாம் அறிந்துக்கொள். பிள்ளைகள் புலூகுக்கு முன்னாலே தாய் தகப்பனைத் தொடர்ந்து இஸ்லாமாயிருந்தபோதிலும் பாலிகான உடன் துவக்கமாக விவரிக்கப்படாத முஜ்மலைக் கொண்டு ஈமான் கொள்வது வாஜிபு. (கலிமா ஷஹாதத்து ஈமான் முஜ்மலில் உள்ளதாகும்.) பின்பு முபஸ்ஸலைக் கொண்டு ஈமான் கொள்வதும், ஷரீஅத்திலுள்ள ஹுக்முகளை ஒப்புக்கொள்வதும் வாஜிபு.

باب في بيان الايمان

பாபுன் பீ பயானில் ஈமான்.

ஈமானுடைய பாடம்.

ஈமானுகிறது:

تصديق بالقلب واقرار باللسان يعني

தஸ்தீகுன் பில்கல்பி வஇக்றுருன் பில்லிசானி எஃனீ

(இதன் பொருள்) அல்லாஹுத் தஆலாவையும் அவனுடைய றசூலையும் இருதயத்தால்உண்மைக்கொள்கிறதும், அப்பிறகாரம் நாவால் விண்ணப்பம் செய்கிறதுமா யிருக்கும். ஆனபோதே நம்மிடத்தில் ஈமானுடைய பர்லு இவ்விரண்டுமாயிருக்கும். شافعية ஷாபி இய்யாக்களிடத்தில் ஈமானுடைய பர்லு இருதயத்தால் உண்மை கொள்கிறதும், நாவினால் விண்ணப்பம் செய்கிறதும், பர்லுகளைக் கொண்டு அமல் செய்கிறதும் ஆக இம் மூன்றுமாயிருக்கும். இதர்க்காகத்தான் ஈமான் கூடவும் குறையவும் செய்யுமென்று சொல் வார்கள். நம்மிடத்தில் கூடவும் மாட்டாது குறையவுமாட்டாது. என் றாலும் அமல்களின் காரணத்தால் பலமானதாகவும், பல ஈனமான தாகவும் ஆகும். அதினுடைய சிபாத்தாகிறது, முஜ்மலெனும் விப ரிக்கப் படாத ஈமானென்றும் முபஸ்ஸலெனும் விபரிக்கப்பட்ட ஈமா னென்றும் இரண்டு வகைப்படும்.

முஜ்மலாகிய ஈமானுகிறது.

امنت بالله كما هو باسمائه وصفاته

ஆமந்து பில்லாஹி கமாஹுவ பிஅஸ்மாஇஹி வஸிபாதிஹி

எஃனீ. (இதன் பொருள்) அல்லாஹுத் தஆலா தன்னுடைய திருநாமங்களைக் கொண்டும் அவன் தன் ஸிபாத்தாகிய வன்னிப்புக ளைக் கொண்டு மாயிருப்பதுபோல் அவனைக்கொண்டு ஈமான் கொண் டேன். وقبلت جميع احكامه واحكام رسوله வகபில்து ஜமீஅ அஹ்

காமிஹி வஅஹ்காம றசூலிஹி அவனுடையகட்டளை களனைத்தையும் அவனுடைய றசூலின் கட்டளைகளனைத்தையும் ஒப்புக்கொண்டேன்.

இனி முபவ்வலாகிய ஈமானுகிறது.

امنت بالله وملائكته وكتبه ورسله واليوم الاخر
والقدر خيره وشره من الله تعالے

ஆமந்து பில்லாஹி வமலாயிகத்திஹி வகுத்துபிஹி வறுஸுலிஹி வல் யவ்மில் ஆகிறி வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹித் தஆலா.

ஆமந்து பில்லாஹி அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு ஈமான் கொண்டேன் வமலாயிகதிஹி அவனுடைய மலக்குகளைக் கொண்டு ஈமான் கொண்டேன் வகுத்துபிஹி அவனுடைய வேதங்களைக் கொண்டு ஈமான் கொண்டேன். வறுஸுலிஹி அவனுடை நபிமார்கள் றசூல்மார்கள் அனைவர்களைக் கொண்டு ஈமான் கொண்டேன். வல் யவ்மில் ஆகிறி ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான் கொண்டேன். வல்கத்ரி கைரிஹி வஷற்றிஹி மினல்லாஹி தஆலா அல்லாஹுத் தஆலாவில் நின்றுமுள்ள நலவாகிய கட்டளைகள் தீங்காகிய கட்டளைகள் அடங்கலைக் கொண்டும் ஈமான் கொண்டேன் என்பதாம்.

இக்கலிமாவில் சொல்லப்பட்டிருக்கிற ஆறு காரியங்களும் ஈமானுடைய ஷற்த்துகளாகும். அவைகளின் விபரம்:—

ஒன்றாவது:— அல்லாஹுத் தஆலாவைக்கொண்டு ஈமான்கொள்கிறது. அதாவது ஆலம்களையெல்லாம் படைத்தாளும் படியாகிய ஆண்டவன் ஒருவன் அவனுக்கு துவக்கமும், முடிவுமில்லை; பூர்விகமானவன். அவனுக்கு ஒப்பாக அவன் படைப்பில் யாதொரு வஸ்துவுமில்லை. அவன் ஒரு வஸ்தளவிலும் ஹாஜத்தில்லாதவன். அவன் உண்டென்கிறதின் பேரில் ஒவ்வொரு வஸ்தடங்கலும் அறிவிக்கின்றன. அது எதுபோலெனில், கட்டிடம் அதை கட்டினவன் ஒருவன் இருக்கிறன் என்றறிவிப்பது போலும், எழுதினவன் ஒருவன் இருக்கிறன் என்று எழுத்து அறிவிப்பது போலுமாகும். இன்னும் அவனைத் தவிர உள்ள வஸ்தடங்கலும் அழிந்து போகும். அதற்கு துவக்கமும் முடிவுமுண்டு. இன்னும் அல்லாஹுத் தஆலா ஆதாரமான அணுவெனும் ஜவ்ஹருமில்லை, பல அணுக்கள் கூடிய

ஜிஸ்மெனும் சடலமுமில்லை. நிறங்கள், குணங்கள், சுவைகள், வாசங்கள் இவைபோலொத்த தன்னைக்கொண்டு நிலைப்படாமல் வேறொன்றில் நிலைப்பட்ட ஆதாரமில்லாத அற்றுமில்லை. அவன் ஒரு வஸ்துவை பிறவுமில்லை. அவன் இன்னுமொரு வஸ்துவால் பிறந்தவனுமில்லை, மட்டுதிட்ட மாக்கப்பட்டவனுமில்லை. ஒரு திசையில் அடங்கியவனுமில்லை. அவனை இன்னவிதத்தில் அடங்கினவந்தான் என்று வற்ணிக்கமுடியாது. அவனை கியாமத்து நாளில் மூமினுகிய அடியார்கள் ஒரு ஒப்பு உவமையில்லாமல் காண்பார்கள். அவனுடைய பூர்வீகமாகிய ஸிபாத்தென்னும் வர்ணிப்புகள் அவன் ஸாத்தென்னும் உள்ளமையை கொண்டே நிலைத்தது. அந்த ஸிபாத்துகளாவது ஸாத்திய்யா வென்றும் அப்ஆலிய்யா வென்றும் இருவகைப்படும். ஸிபாத்து ஸாத்திய்யாவரூகிறது, ஹயாத்தென்னும் உயிர், குதுரத்தென்னும் தத்துவம், இல்மெனும், அறிவு, இராதத்தெனும் நாட்டம், பஸரெனும் பார்வை, ஸம்உவெனும் கேழ்வி, கலாமென்னும் பேச்சு, ஆக இவை எழுமாகும். அப்ஆலிய்யாவென்னும் ஸிபாத்காவது தக்வீனுகவிருக்கும், அதாவது லோகங்களையும் அவைகளிலிருக்கிற வஸ்துகளனைத்தையும் படைக்கிறதும், அளிக்கிறதும், றிஸ்கு கொடுக்கிறதும், சீமானுக்குகிறதும், எழையாக்கிறதும், இவைபோலொற்ற செயல்களாகும். அவன் யாதொரு காரியத்தையும் அடிமைகளுக்கு செய்யவேண்டிய கடமையில்லை. எங்கினும் அவன் அப்படி செய்வது அவனுடைய இஹ்ஸானுகும் என்று ஈமான்கொண்டேன்.

ஹதீது:—என்னுடைய உம்மத்துகள் மேலைக்கு 73 கூட்டமாக பிரிவார்கள். அதிலொரு கூட்டம் நான் நடந்தவழியும் என்னுடைய தோழன்மார்கள் நடந்த வழியும் நடப்பார்கள், அவர்கள் சொற்கம் புகுதுவார்கள். மற்ற 72 கூட்டமும் அவர்கள் மனம் போனபோக்கில் மாறுக நடப்பார்கள் அவர்கள் நரகவாதியாக யிருப்பார்களென்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானூர்கள்.

இரண்டாவது:— மலக்குகளைக்கொண்டு ஈமான்கொள்கிறது. அதாவது:—மலக்குகள் யாவரும் அல்லாஹுத் தஆலாவின் சங்கை பெற்ற அடிமைகள் அவர்கள் நாறு ஆனுஸிரென்னும் பூதத்தின் ஆதாரம் சேராமல் ரூஹானிய்யாகிய நூருனியெனும் ஒளிவால் படைக்கப்பட்டவர்கள். அவர்கள் நாடின ரூபத்தின்பேரில் த்ருனி

பெற்றவர்கள், பாவங்களை விட்டும் காக்கப்பட்டவர்கள் அவர்கள் ஆணுமில்லை பெண்ணுமில்லை. அவர்களில் மிகவும் மேன்மை பெற்றவர்கள் ஜிப்ரீல், மீக்காயீல், இஸ்றாபீல், இஸ்றாயீல், அலைஹி முஸ்ஸலாம் ஆக இந்நாங்கு மலக்குகளாகும். இவர்களில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் வஹீயைகொண்டும், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் தண்ணீர் றிஸ்கைகொண்டும், இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் றூஹுகளை கைபற்றுகிறது கொண்டும், இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் காற்றைக் கொண்டும் சாட்டப்பட்டவர்கள்.

மற்ற மலக்குகள் எவ்வளவென்கிறதை அல்லாஹுத் தஆலாவைத் தவிர எவரும் அறியமாட்டார்கள், இவர்கள் பல பல வணக்கமும், பல பல கோலமும் உள்ளவர்கள். அவர்களில் சிலர் வானுலகரென்றும், சிலர் பூலோகரென்றும் சொல்லப்படும். இவ்விருவகை மலக்குகளுக்கு கண்டிப்பில்லாத ஒளியின் நட்பமான ஸ்தூலமுண்டு. அவர்களில் சிலர் முற்ஸலான் நபிமார்களளவில் தூது வருவார்கள். சிலர் றஹ்மத்து, ஜனனம், மரணம், இன்பம், உதவி, ஹலாக்கு இவைகளைக்கொண்டுவருவார்கள். சிலர் பைத்துல் மஃமூர், வானம், பூமி, கடல், மலை, முதலான ஸ்தலங்களில் அல்லாஹுத் தஆலாவை இபாதத்து செய்துக்கொண்டிருப்பார்கள். இன்னும் சில மலக்குகள் மனிதர்களை காக்கிறதர்காக சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

ஹதீது:—ஒவ்வொரு மூமினை மனிதனுடனே ஐந்து பேணி காக்கிற மலக்குகள் உண்டாயிருக்கிறார்கள். ஒருவர் வலது புறமிருந்து நன்மைகளை எழுதுவார். ஒருவர் இடது புறமிருந்து தீமைகளை எழுதுவார். ஒருவர் அவனுக்கு முன்பாக இருந்து நலவான சாரியங்களை கற்பிப்பார். ஒருவர் அவனுக்கு பின்னாலே இருந்து தீங்குகளை தட்டுவார். ஒருவர் அவனுடைய முன்னெற்றி றோமத்தினிடமாக இருந்து அவன் என்பேரில் ஓதுகிற ஸலவாத்தை எழுதுகிறவராயும் அதை எனக்கு எத்தி வைக்கிறவராயும் இருப்பாரென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினார்கள்.

ரிவாயத்து:—இப்னு ஆதில் என்கிறவர்கள் மஜாலிஸுஸ்ஸனிய்யாவென்னும் கிதாபில் பேசிவருகிறார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பால் 20 விடுத்தமும், நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பால் 4 விடுத்தமும், நபி நூஹ

அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பால் 50 விடுத்தமும், நபி இப்றுஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பால் 40 விடுத்தமும், நபிமூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பால் 400 விடுத்தமும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பால் 10 விடுத்தமும் நம்மள் நாயகம் முஹம்மது ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் 24,000 விடுத்தமும் இறங்கினுர்கள். அவர்கள் ஒரு கண் நிமை மூடி முளிக்கு முன் பூமியி லிருந்து வானத்துக்கு போய்விடுவார்கள். அவர்களுக்கு அல்லா ஹுத் தஆலா அளவற்ற தத்துவத்தைக் கொடுத்திருந்தான் என்று ஈமான் கொண்டேன்.

மூன்ருவது:—வேதங்களைக்கொண்டு ஈமான் கொள்கிறது. அவை எப்படியெனில், வேதங்களும் சுஹ்புகளும் அல்லாஹுத் தஆலா வின் திருவசனமாயிருக்கும். அது தன்னில் சத்தங்கள் முந்துதல், பிந்துதல் அவைகளைவிட்டும் தூய்தாக்கப்பட்டது. அவன் இறக்கி வைக்கப்பட்டது. படையுனப்படாத்தது. அவைகளடங்கலும் கதீ மானதும், தாத்தைக்கொண்டு நிலை நிற்கிறதுமான ஒரே கலாமாகும். அவைகளிலெல்லாம் மிகவும் வருசையானது குர்ஆனு இருக்கும். குர்ஆனைக்கொண்டு மற்ற வேதங்களும் சுஹ்புகளும் மாற்றப்பட்ட தாயிருக்கும். கியாமநாள்வரையும் குர்ஆனை மாற்றப்படாது. அது வரையிலும் குர்ஆனைக் கொண்டே அதின்படியே அமல் செய்யப் படும் என்றும்.

இனி வேதங்கள்:—நபிமூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தௌறுத்து வேதம் அப்றுனி பாஷையாலும், நபிதாவூது அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு ஸபூர் வேதம் யூனுனி பாஷையாலும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இஞ்ஜீல் வேதம் ஸுர்யானி பாஷையாலும், நம்மள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு புருகான் வேதம் அறபு பாஷையாலும் அல்லாஹு சுபுஹானஹு வத்தஆலா இறக்கிவைத்தான். ஆக இந்நாங்கு வேத மாயிருக்கும்.

இனி சுஹ்புகள்:-ஒருசொற்படி 100, ஒருசொற்படி 110, அவை கள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 10, நபி ஷீது அலை ஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 50, நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர் களுக்கு 30-நபி இப்றுஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 10, இனி

சுஹ்பு 110 என்ற சொற்படி நபி முஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தௌறுத்து வேதம் இறங்குவதற்கு முன் 10 சுஹ்பு இறங்கினதாக யிருக்கும். என்று ஈமான் கொண்டேன்.

நான்காவது:—நபிமார்கள் றசூல்மார்கள் அடங்கலைக்கொண்டு ஈமான்கொள்கிறது. அதாவது நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் நபி நாயகம் ஹஸ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வரையுமுள்ள நபிமார்களும் றசூல்மார்களும் மெய்யான மார்க்க முள்ள வர்களாயிருக்கும். அவர்களடங்கலும் மனுப்பிரவிவிஸ்வாச முடையவர்கள். பொய் சொல்ல மாட்டார்கள். ஆண்டவன் அறிவிக்கும்படி கட்டளை யிட்டனுப்பியதை ஜனங்களுக்கு அறிவிப்பார்கள். மறதியைக்கொண்டாவது ஒன்றையும் மறைக்க மாட்டார்கள். இன்னும் அவர்களடங்கலும் நுபுவ்வத்துக்கு முன்னையும், பின்னையும், றகசியத்திலும், பறுசியத்திலும் உண்டாகும். பெரும்பாவம் சேவலமான சிறு பாவங்களடங்கலை விட்டும் பரிசுத்தமானவர்கள். அவர்கள் அடங்கலும் ஹக்கான மார்க்கம் கொண்டு அனுப்பப்பட்ட மானிடர்கள். அவர்களில் முந்தினவர்கள் நம்மள் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம், அவர்களில் பிந்தினவர்கள் நம்முடைய நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள். அவர்களுக்குப் பின் நபிமார்கள் பிறக்கமாட்டார்கள். அவர்கள்தான் நபிமார்களுக்கெல்லாம் முத்திருங்க மானவர்களும் மிகவும் சங்கையும் மேன்மையும் பெற்றவர்களாக யிருக்கும், அவர்களுடைய நுபுவ்வத்து எங்கும் அடைய வளைந்த தாயிருக்கும் என்று ஈமான்கொண்டேன்.

ஐந்தாவது.—ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான் கொள்கிறது. அஃதாவது ஒவ்வொரு மனிதர்களும் மவுத்தானதின்பின் கப்ரிலெழுப்பி கேள்வி கணக்கு முன்கர் நகீர் என்ற இரண்டு மலக்குகள் கேள்கிறது நல்லோர்களுக்கு கப்ருடைய சுகமும், பாவிகளுக்கு வேதனையும் உண்மையானதாயிருக்கும். இன்னும் இஸ்றுபீல் என்ற மலக்கு சூறெனும் குளலில் ஊதினஉடன் எல்லா கல்குகளும் அழிந்துபோகும். அப்பால், நார்ப்பது வருடம் சென்று இரண்டாவது. சூருது வார்கள் அப்பொழுது பனுவான பிருணிகளடங்கலும் எழுந்து மஹ்ஷற் வெளியில் நிறுத்தப்பட்டு கியாம நாளில் கேள்வி கணக்கு கேட்கிறதும், அமல்களை மீசானென்னும் திராஸில் நிறுக்கிறதும், நல்லோர்க

ளுக்கு பட்டோலை வலது கையிலும், கெட்டோர்களுக்கு பட்டோலை இடது கையிலும் முதுகு புறத்திலுமாக கொடுக்கப்படுகிறதும் உறுதியாயிருக்கும். இன்னும் முஃமினான ஜனங்களை அல்லாஹுத்தஆலா தன் வருசையைக்கொண்டு சொர்க்க லோகத்திற்க்கும் காபிர்களை தன் நீதங்கொண்டு நரகலோகத்திற்கு ஊழிகாலம் இருக்கும்படி தீர்ப்புச் செய்கிறதும், இன்னும் முஃமினான பெரும்பாவி தவ்பா இல்லாமல் மவுத்தானவர்களை அவர்கள் செய்த பாவத்திற்குத் தகுந்த கூலி நரகத்திர் கொடுத்து பிறகு சொர்க்கத்திற்கனுப்புகிறதும், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மஹ்ஷர் வெளியில் மன்றாடுகிறதும், அவர்களும் மற்ற ஸாலிஹானவர்களும் மற்ற இடங்களில் மன்றாடுகிறதும், அல்லாஹுத் தஆலா அவன் நாடினபேர்களை அதாபில்லாமல் பிழைபொறுத்து சொர்க்கத்திற்க் கனுப்புகிறதும் உண்மையாயிருக்கும் என்று ஈமான் கொண்டேன்.

ஆறுவது:—அல்லாஹுத் தஆலா உடைய கட்டளையின்பேரில் ஈமான் கொள்கிறது, அதாவது அடியார்களின் செயல்களாகிய நன்மை, தீமை, லாப, நஷ்டம், உசும்புதல், ஒடுங்குதல் அடங்கலையும் அல்லாஹுத் தஆலா படைத்தான். அடிமைகளதை தொழில் பாடு செய்கிறார்கள். அதுகள் அவனுடைய கற்பனை கொண்டும் நாட்டம் கொண்டுமாயிருக்கும். அந்தச் செயல்களிலே அடியாருக்குத் தெரிவுதலையும், தத்துவத்தையும் படைத்திருக்கிறான். ஆதலால் நலவு செய்தால் தவாபும், தீங்கு செய்தால் அதாபும் கொடுக்கப்படும். அல்லாஹுத் தஆலா உடைய பொருத்தமும், முஹப்பத்தும், எவலும் நன்மைகளைக் கொண்டாயிருக்கும், தீமைகளைக்கொண்டல்ல என்று ஈமான் கொண்டேன்.

இதன்படி அல்லாஹுத் தஆலாவின் கலா, கத்றைக்கொண்டு உறுதிகொள்ளவேண்டியது கடமையே தவிர அதில் பேச்சை தன் புத்திப்படிக்கு அதிகப்படுத்துவது கூடாது. ஏனென்றால் அல்லாஹுத் தஆலாவின் கலா கத்ரென்னும் கற்பனையுடைய காரியமாகிறது அவனுடைய ஸிர்றாயிருக்கும். அதை நீங்கள் அதை கிண்ட வேண்டாமென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமாயிருக்க, அதை உணராமல் தங்கள் புத்திப்படிக்கு கத்ரிய்யாக்கள் எல்லா தத்துவமும், குத்றத்தும், கல்துகளுக்கு இருக்கிறதென்

றும், ஜப்ரிய்யாக்கள் கல்குகளுக்கு யாதொரு செயலும் இல்லை கற் கறடைபோலா யிருக்குமென்று சொல்லி அகீதா பிசகி போனூர்கள். சுன்னத்து ஜமாஅத்துகளுக்கு ஜப்று மில்லே, கத்று மில்லை, இரண்டுக் கும் மத்திபமாகும்.

باب في بيان الاسلام

பாபுன் பீ பயானில் இஸ்லாம்

இஸ்லாமுடைய பாடம்

இஸ்லாமாகிறது:

الانقياد لاوامر الله تعالے والاجتناب عن نواهيه

அல்இன்கியாது லிஅவாமிரில்லாஹி தஆலா வல்இஜ்திஞபு அன்னவாஹீஹி.

அல்லாஹுத் தஆலாவின் ஏவலை எடுத்து விலகலைத் தவிழ்கிற தாயிருக்கும். அதின் ஷர்த்தாவது ஐந்தாயிருக்கும். அஃதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினூர்கள்.

بني الاسلام على خمس شهادة ان لا اله الا الله وان محمدا
رسول الله واقام الصلوة وايتاء الزكوة وصوم رمضان
وحج البيت من استطاع اليه سبيلا

புனிய்யல் இஸ்லாமு அலா கம்ஸின் ஷஹாதத்து அன்லா இலாஹ இல்லல்லாஹு, வஅன்ன முஹம்மதர் றசூலுல்லாஹி, வஇகா முஸ்ஸலாத்தி, வஈதா உஸ்ஸகாத்தி, வஸவ்மு றமலான, வ ஹஜ்ஜுல் பைத்தி, மனிஸ்த் ததாஅ இலைஹி ஸபீலா.

(இதன் பொருள்) புனிய்யல் இஸ்லாமு அலாகம்ஸின், இஸ் லாம் மார்க்கத்தை ஐந்து காரியத்தின் பேரில் எடுக்கப்பட்டது.

அதில்முந்தினது, ஷஹாதத்து அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதர் றசூலுல்லாஹி வணக்கத்திற்கு பாத்திரவான்

யாருமில்லை அல்லாஹுத் தஆலாவைத் தவிர முஹம்மது நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹுத் தஆலாவின் திருத்தூதரு யிருக்குமென்று பிஷகற அறிந்து விண்ணப்பம் செய்கிறது. இனி இஸ்லாமுடைய ஷர்த்துகளில் முந்தின கலிமா ஷஹாதத்தாகிறது ஈமானுமிருக்கும், மற்ற நாலு ஷர்த்தும் அமலாயிருக்கும். அக்கலி மாவுக்கு நாலு பர்ளுமுண்டும்.

كلمة ون فرض ஒன்றாவது:— اثبات ذات الله இத்பாத்து தாதில்லாஹி. يعني எஃனி:—அல்லாஹுத் தஆலாவின் உள்ள மையை தரிபடுத்துகிறது.

இரண்டாவது:- اثبات صفات الله இத்பாத்து ஸிபாதில்லாஹி. يعني எஃனி:— அல்லாஹுத் தஆலாவுடைய ஸிபாத்துகளெனும் வன்னிப்புகளை தறிப்படுத்துகிறது.

மூன்றாவது:- اثبات افعال الله இத்பாத்து அப் ஆலில்லாஹி. يعني எஃனி:—அல்லாஹுத் தஆலாவுடைய செயல்களை தரிபடுத்து கிறது.

நாலாவது:— اثبات صدق رسول الله இத்பாத்து சித்கி றசூலில் லாஹி. يعني எஃனி:—அல்லாஹ்வுடைய றசூல் அறிவித்ததுகளை மெய்யென்று தறிபடுத்துகிறது. இரண்டாவது ஷர்த்து, வஇகா முஸ் ஸலாதி தொழுகையை நிலைபாடாக்கித் தொழுது வருகிறது. மூன்றா வது, வஈதா உஸ்ஸகாதி ஸகாத்து கொடுக்கிறது. நாலாவது, வஸவ் மு றமலான றமலான்மாத மடங்கலிலும் நோன்பு பிடிப்பது, ஐந்தா வது, வஹஜ்ஜுல் பய்தி மனிஸ் ததாஅ இலைஹி ஸபீலா மக்கத்திற் குப் போய்வறத் தறுணிபெற்றவன் கஃபதுல்லாவில் போய் ஹஜ்ஜு செய்கிறது. இனி ஈமானகிறது, உள்ரங்கமாகிய வழிப்பாடாகவும்; இஸ்லாமாகிறது, எவனுக்கு உள்ரங்கத்திலும், வெளிரங்கத்திலும் ஒப்புக்கொண்டு வழிப்படுகிறதாகவும் இருப்பதால் ஈமானும் இஸ்லா மும் முதுகும் வயிரும் போல் ஒன்றாயிருக்கும். அஷ்அரிய்யாக்களி டத்தில் ஈமானகிறது அந்தரங்க வழிப்பாடாகவும், இஸ்லாமாகிறது பைரங்கமான வளிப்பாடாகவு மிருப்பதால் ஈமானும் இஸ்லாமும் வெவ்வேறாக யிருக்கும்.

حديث ஹதீது:— المسلم من سلم المسلمون من لسانه ويده
அல் முஸ்லிமு மன்ஸலிமல் முஸ்லிமூன மின் லிஸானிஹி வயதிஹி يعني எஃனீ:—முஸ்லிம் யாரென்ருல் மற்ற முஸ்லிமான ஜனங்கள் அவன் கையை விட்டும், நாவைவிட்டும் ஸலாமத்து பெற்ருர்களே அந்த மனிதனுயிருக்கு மென்று நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினுர்கள்.

ஹதீது:—ஈமானுகிறது எழுபதேசில்வானம் கொப்புகளாயிருக்கும், அதில் உயர்ந்த கொப்பாகிறது, லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்னும் கலிமா, அதில் தாழ்ந்த கொப்பாகிறது பாதைகளில் கிடக்கின்ற முள்முறடு, கல்கறடு, மண்ணுங்கட்டி முதலிய மனிதர்களுக்கு நோவினை செய்கிற வஸ்துகளை வழியை விட்டும் அப்புறப்படுத்துகிறதாயிருக்கும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினுர்கள்.

ஹிகாயத்து:—அறபி ருஜ்ஜியத்திலே தகிய்யத்தில் கல்பி யென்ெருரு இராஜனிருந்தார், அவருடைய கையின் கீழாக அவர் பந்துகளில் எழுநூறு ஜனங்கள் யிருந்தார்கள், அவர் இஸ்லாமானுல் இந்த எழுநூறு பெயரும் இஸ்லாமாவார்களென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆதறவுவைத்து ஆண்டவனே தகிய்யத்துல் கல்பி யென்கிற இராஜனைத் தீனில் இஸ்லாமில் சேர்த்து வைத்தருளென்று துஆக் கேட்டார்கள், அந்தத் துஆ கபூலாகி விட்டது. அப்பாலொரு நாள் பஜ்ருக்குப் பின் ஹஸ்றத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வசல்ல மவர்களும், அநேக அஸ்ஹாபுகளு மிருக்கும்படியான நேரத்தில், ஜிப்ரியீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வந்து அல்லாஉடைய றசூலே, அல்லாஹுத் தஆலா தகிய்யத்துல் கல்பி என்கிற மனிதனுடைய கல்பில் ஈமானின் ஒளியை அழகாக்கி வைத்தான், அவரிப்போது தங்களிடம் வருவாரென்று சொன்னுர்கள், கொஞ்ச நேரத்திற்குள் அம்மனிதன் பள்ளி வாயலுக்கு வந்த உடனே இவர் முன் அஸ்ஹாபுகளுக்குச் செய்த கெட்டூறத்தால் ஒருவரும் சங்கை செய்யாதிருக்கும் நேரத்தில் அவர் தீனில் வருகிற மகிழ்ச்சியின் பேரில் நபி நாயகமவர்கள் தங்கள் பரிவட்டத்தைப் பூமியின் மீது விரித்து இதன் பேரிலிரு மென்று சைக்கினை செய்தார்கள், நபி நாயகமவர்களிவ்விதம் அவருக்குச் சங்கை செய்வதைப் பார்த்து அவ்வர

சர் அழுது கொண்டு அப்பரி வட்டத்தை ஆவி எடுத்து முத்த மிட்டுக் கண்ணில் வைத்து நாயகமே, இஸ்லாத்தின் ஷர்த்தென்ன எனக்கு அறிவியுங்கள் என்று சொல்ல லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்னுஞ் சிறப்பாகிய கலிமாவைச் சொல்லிக் கொடுத்து ஈமானிஸ்லாத்தின் விபரத்தையு மறிவித்தார்கள். அவர்கள் கலிமாச் சொல்லி இஸ்லாமாகியும் அழுது கொண்டிருப்பதைப் பார்த்து நீரிஸ்லாத்தில் வந்ததைப் பற்றி அழுகிறீரோ அல்லது வேறே கருமத்திற்காக அழுகிறீரோ வென்று நபி நாயகமவர்கள் கேட்க, நாயகமே நான் செய்த பெரும் பாவத்தை அல்லாஹுத் தஆலா எப்படிப் பொறுப்பானென் றெண்ணி யழுகிறேன், அதற்குத் தெண்ட குற்றமாக வென்னைத் தன்னைத்தான் வெட்டும்படி சொல்வீர்களானாலும் என் முதலடங்கலையும் ஸதகாக் கொடுக்கும்படி யேவுவீர்களானாலுஞ் செய்யக்காத் திருக்கிறேனென்று சொல்ல, நீர் அப்படியென்ன குற்றஞ் செய்தீரென்று நபி நாயகமவர்கள் கேட்டார்கள், அவ்வரசன் நபி நாயகமவர்களைநோக்கி, அல்லாவுடைய றசூலே எனக்கு (70) பெண் மக்களிருந்தார்கள், நாம் அரபி ராஜனுயிருக்க, அந்த பெண் மக்களைக் கலியாணஞ் செய்து கொடுத்து அவர்களுக்கு நாம் தாழ்மையாக நடப்பது கேவலமென்றெண்ணி, என் கையால் அப்பெண் மக்கள் எழுபது பெயரையுங் கொன்று போட்டேனென்று சொல்ல நபி நாயகமவர்கள் கொஞ்சநேரஞ் சும்மாயிருந்தார்கள், உடனே ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்களிறங்கி அல்லாஹுத் தஆலா தன் வனுப்பத்தின் பேரிலும், சிறப்பின் பேரிலும் சத்தியஞ் செய்து (தஹிய்யதுல் கல்பி) அறுபது வருடஞ் செய்த குபிர் நடத்தைகளை அவர் (லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸுலுல்லாஹி) என்னுங் கலிமாவைச் சொல்லி இஸ்லாமானவுடனே நான் பொறுத்து விட்டேன், அப்படியிருக்க அவர்செய்த எழுபது கொலையுடைய பாதகங்களை யெப்படிப் பொறுக்காமலிருப்பேனென்று தஹிய்யத்தில் கல்பி யென்பவருக்குச் சொல்லும்படி சொல்லி யென்னை யனுப்பினனென்று ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்ல உடனே நபிநாயகமவர்களும், அஸ்ஹாபுமார்களும் அழுதுகொண்டு ஆண்டவனே! தஹிய்யதில் கல்பி யென்பவரொரு விடுத்தம் கலிமாச்சொல்லி ஈமான்கொண்டு இஸ்லாமானவுடன் அவர் செய்த பாவங்களடங்கலையும் பொறுத்துவிட்

டாயே, மற்றமூமினன மனிதர்களுடைய பாவங்களை அவர்களோதி வருகிற சங்கையாகிய கலிமாவின் பொருட்டால் நீ பொறுக்க வல்லமையுடையவனு யிருக்குமென்று, அல்லாஹுத் தஆலாவை மிகவும் புகழ்ந்தார்கள், இச்செய்தி அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும், துர்ரத்தென்றுங் கிதாபில் வருகிறது. (ஆதலால்) எனதன்புற்ற முஸ்லிமாகிய உடப்பிறப்புகளே? மாயவஞ்சகனன இப்லீசுடைய வலைக்குள் சிக்கிக் கொள்ளாமலுங்களுடைய தெளிவாகிய அறிவென்றுங் கண்களால் ஈமானுடைய மகிமையும், அதினுடைய தர்ஜானவயும், கோட்ட மிட்டந்த ஈமானுடைய விபரங்களை நன்றாயறிந்து நல்ல அமல்களைச்செய்து வருவீர்களாகவும். நம்மள் யாவருக்கும் அல்லாஹுத் தஆலா பிழைபொறுத்து சீதேவித்தனம்பெற்ற மூமீன்களுடைய கூட்டத்திலாக்கி சுவர்க்கஞ்சேர்த்து வைப்பானுகவும். ஆமீன்.

பின்னர் لا اله الا الله லாஇலாஹ இல்லல்லாஹு என்னுங் கலிமா, பன்னிரண்டு எழுத்து, ஒவ்வொரு எழுத்துக்கு ஒரு பர்ளாக பன்னிரண்டு பர்ளுண்டுமென்று ஷாஃபுலீமான் முதலாகிய சில கிதாபிகளில் வருகின்றன. ஆனுலவைகள் கலிமாச் சொன்னவர்கள் பேரில் பர்லென்று விளங்கவேண்டுமே தவிற, கலிமா தன்னிலுள்ள பறுலென்று விளங்கப்படாது. அதில் வெளிரங்கமான பறுளு (6) உள்ரங்கமான பறுளு (6) ஆக பறுளு (12) என்றதற்கு விபரமாவது: (1) வது (தவக்கல்) எஃனீ எல்லாக் காரியங்களையும் அல்லாஹுத் தஆலா பேரில் பொறுப்புச்சாட்டுவது (2) வது (கினுஅத்து) எஃனீ அதிக அவள்க்கையில்லாமல் அல்லாஹுத் தஆலா தந்ததைக்கொண்டு போதுமாக்குவது (3) வது (ஸபுறு) எஃனீ பலாய் முஸீபத்துக்கு ஸபுறுச் செய்வது, (4) வது (றளாபில்லாஹி) எஃனீ அல்லஹுத் தஆலாவின் கட்டளையைப் பொருந்துவது (5) வது (ஷுக்குருன்னிஃமதி) எஃனீ, அல்லாதந்த நிஃமத்துக்கு ஷுக்குருசெய்வது, (6) வது, (தஸ்லீமு) எஃனீ, அல்லாஹுத் தஆலாவின் ஏவலுக்கு வளிப்படுவது, இவ்வாறுப் உள்பறுளு, (இன்னும்) (1) சரீரம் சுத்தமாயிருப்பது, (2) உடுமானம் துப்புறவாயிருப்பது, (3) தொழுகை, (4) ஸக்காத்து, (5) நோம்பு, (6) ஹஜ்ஜு, இவ்வாறு வெளிப்பறுளு, ஆதலால், அல்லாஹுத் தஆலா நம்மனைவரையும் இஸ்லாமார்க்கத்தில் தரிபடுத்தி சுவர்க்கஞ் சேர்ப்பானுகவும். ஆமீன். யாஅர்ஹமற்றுஹிமீன். வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

كتاب الطهارات

கிதாபுத் தஹாறத்

துப்புறவுகளைப் பேசும் பாடம்.

காலன் நபிய்யு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் الطهور شطر الايمان அத்துஹூரு ஷத்ருல் ஈமானி. எஃனீ:—துப்புறவாகிறது ஈமானில் பாதியாயிருக்கு மென்றும். இன்னும், مفتاح الجنة الصلاة ومفتاح الصلاة الطهور يعني மிப்தாஹுல் ஜன்ன திஸ்ஸலாது வமிப்தாஹு ஸலாத் துத்துஹூரு. எஃனீ:— சொர்க்கத்துத் திறவுகோல் தொழுகையாயிருக்கும் தொழுகைக்குத் திறவுகோல் துப்புறவாகயிருக்குமென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினார்கள்.

இன்னும் இப்னு அப்பாஸ் றளியல்லாஹு அன்ஹுமா واذا ابتلى ابراهيم ربه بكلمات வ இதிப்தலா இப்றூஹீம றப்புஹு பீ கலிமாதின் என்ற ஆயத்தினுடைய தப்சீரில் சொல்கிறதாவது:— இப்றூஹீம் அலைஹிஸ்ஸலாமை அல்லாஹுத் தஆலா அவர்களின் தலையிலே ஐந்து துப்பறவைக்கொண்டு சோதித்தான். அஃதாவது, மேல் மீசையைத் தறிக்கிறது, வாய்கொப்பளிக்கிறது, பல் தீட்டுகிறது, நாசிக்குத் தண்ணீர் செலுத்துகிறது, தலைமுடி பிருக்கிறது இவைகளாம். சரீரத்தில் ஐந்துவிதமான துப்பறவைக்கொண்டு சோதித்தான். அஃதாவது: நகம் எடுக்கிறது, கத்னச்செய்கிறது, கழுக்கட்டு ரோமம் பிடுங்குகிறது, கீள்ரோமம் எடுக்குகிறது, தண்ணீரைக் கொண்டு இஸ்திஞ்சாவெனும் துப்பறவு செய்கிறது ஆகிய இவைகளாம், ஆக இந்த பத்து காரியமும் நம்மள் மார்க்கத்திலும் சுன்னத்தாக்கப்பட்டிருக்கின்றது.

فصل في الاستنجاء

பஸ்லுன் பில் இஸ்திஞ்ஜாஇ

மலபாதை ஜலபாதை சுத்திசெய்வதின் விபரம்.

حديث ஹதீது:—மேனியையும் புடவைகளையும் சுத்தி செய்யாமலிருப்பது கொண்டு கப்ருடைய அதாபு அதிகமாகயிருக்குமென்று நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றியிருக்கிறார்கள். ஆகையால் துப்பறவு செய்வதில் சற்றும் சோம்புதல் செய்யாமலிருப்பது மனிதர்களின் பேரில் கடமையாயிருக்கிறது. ஆகையால் சிறு நீர்ச்செய்யப்போகுமுன் நீரை உலர்த்தும்படியாகிய துப்புறவான மண் கட்டி போல் கொத்ததில் பிறருடைய சொத்தில்லாத்ததை பூமியில் மூன்று தரம் தட்டி எடுத்துக்கொண்டு போய் பூமி உறைந்திருந்தால் மெதுவாக்கி அல்லது மேட்டிலிருந்து சிறு நீர்ச்செய்தபின் தகரை அடியிலிருந்து கத்னுவறை மட்டிலும் மெதுவாய்ப் பிடித்து விட்டு நீர்வடிந்தபின் எழும்பி இஸ்திப்றாச் செய்யவும். அஃதாவது கட்டிபிடித்து உலாத்தி அல்லது கனைத்து அல்லது இடதுகாலை வலதுகாலின் மேல் சேர்த்து நீர்க்கசிவு நின்றதாக கல்புக்கு சுமாறுனபின் தண்ணீர் விட்டு இடது கையால் கழுகவும். நீர்க்கசிவு நின்றுவிட்டதென்பது கல்புக்கு திட்டமாகும்வரையில் இஸ்திப்றாச்செய்வது பறுலானதால் திட்டமாகாமல் உழுவில் தொடங்குகிறது துரிஸ்தாகாது. தண்ணீர் விட்டுக் கழுகியபின் اللهم حصن فرجي و يسر امري அல்லாஹும்ம ஹஸ்ஸின் பர்ஜீ வயஸ்ஸிர்அம்ரீ என்று துஆச்செய்யவும். இனி மலபாதை ஜலபாதை செய்ய உட்காரும்போது அபத்தைக்கொண்டு கிப்லா திசைக்கு முன்னுக்குகிறதும், பிற்காட்டுகிறதும், கட்டிடத்திற்குள்ளிருந்தாலும் சரி மக்ரூஹு தஹ்ரீமாயிருக்கும்பொழுது நிலவுக்கு முன்னுக்குகிறதும் சுத்தி செய்யும்போது அபத்தை கிப்லாவுக்கு நேருக்குகிறதும் பிர்காட்டுகிறதும் மக்ரூஹு தன்சீஹாயிருக்கும். என்கிலும் சிறு நீர்ச் சுத்தி செய்வதற்கு உடுத்தாடையை முளங்காலைவிட்டும் பின் துவாரத்தை விட்டும் நீக்காமல் கிப்லாவை பின்பார்க்கயிருந்து சுத்திசெய்

வது மக்ரூஹல்ல. ஜனங்களிருக்கும்போது உடுத்தாடையை முளங்காலை விட்டு நீக்குகிறது ஹறாமாகும். சிட்டயான சுடு செங்கல் கரி சுண்ணாம்பு இவைபோலொத்த எரிந்த வஸ்துவை கொண்டும், றொட்டி முதலான தின்பண்ட வஸ்துகளைக் கொண்டும், எலும்பு, உலர்ந்தவிட்டை, பொடிக்கல், பளிங்கி இவைபோலொத்த வஸ்துகளைக்கொண்டும் துப்புறவு செய்வதும் வலதுகை கொண்டு துப்புறவு செய்வதும் மக்ரூஹு தஹ்ரீம். எந்த நேரமானாலும் கிப்லாவை நோக்கி துப்புகிறதும், வலதுபுறம் துப்புகிறதும் மக்ரூஹு.

பின்னர் மலம் ஜலத்துக்கு கலாவில் போகும்போது முன் சொன்ன பிரகாரம் துப்புறவாக்கும் படியான கற்கள் பிறத்தியானுடைய சொத்தல்லாத துப்புறவான கற்களை எடுத்துக் கொண்டுபோய் வாசலுக்கு முடுகும்போது,

بسم الله اللهم اني اعوذ بك من الخبث والخبائث

பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம இன்னி அவூதுபிக மினல் குப்தி வல்கபாஇதி என்று சொல்லி இடதுகாலை உள்ளே வைத்து புகுதுவாய். பேசாமல், சளிசிந்தாமல், அதிகம் திரும்பி பார்க்காமல், கனைக்காமல், வெட்கதலத்தையும் நஜீசையும் பாராமல், எச்சி துப்பாமல், அதிகநேரமிருக்காமல் தலைகவிழ்ந்தவனாகயிருந்து மலம் ஜலத்தை நீங்கிய உடனே ஆண்குறியை அடியிலிருந்து மெதுவாய்ப் பிடித்து விட்டு மூன்று கற்கொண்டு அது போதாவிட்டால் அதிக கற்களைக் கொண்டு நஜீசைத் துடைக்கவும். கோடைகாலத்தில் பீசம் தொங்குவதானால் முதலாவதும், மூன்றாவதும் முன்பக்கமிருந்து பின்பக்கம் கற்களைக்கொண்டு ஒட்டித் துடைக்கவும். இரண்டாவது கல்லை பின் பக்கமிருந்து முன்பக்கம் கொண்டு போகவும்.

இனி குளிர்காலத்தில் பீசம் சுருங்குவதால் முதலாவதையும் மூன்றாவதையும் பின்பக்கமிருந்து முன்பக்கமும், இரண்டாவதை முன்பக்கமிருந்து பின்பக்கமும் கொண்டு போகவும். பெண்பிள்ளைகள் எக்காலமும் கோடைகாலத்தில் ஆண்பிள்ளைகள் செய்யும் முறைபோல் செய்யவும். இனி ஆண்பிள்ளைகள் கட்டிப்பிடித்து வெட்கத் தலத்தை மறைத்துக்கொண்டு எழுந்து வலதுகாலை வெளியில் வைத்து வந்து

غفرانك الحمد لله الذي ذهب عني ما يوذيني وامسك علي ما ينفعني

குப்றனக அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்ஹப அன்னி மாயூதீனி

வஅம்சக அலையய மாயன்ப்தனி என்று சொல்லியபின் மறைவான தலத்தில் உலாத்தி நின்று முன்சொன்னதுபோல் இஸ்திப்ருச் செய்து நீர்க்கசிவு சரியாக வத்கருதலான பின் வேறொரு தலத்தி லிருந்து முதலாவது இரண்டுகையையும் கழுகிபின் இடதுகையால் முன்துவாரத்தைக் கழுகியபின் பின்துவாரத்தை நாற்றம் போய் விட்டதென்பது நிச்சயப்படும் வரையில் நடுவிரல்கொண்டும் அதை யடுத்த மோதிரவிரல் சின்னிவிரல் கொண்டும் துப்பறவு செய்யவும். விரல்களின் நுனி அல்லது நகக்கண் பின் துவாரத்தில் படாமல் பேணிக்கொள்ளவும் ஏனென்றால் அதினால் மூலவியாதியை வருத்து மென்று வருகிறது. அப்பால் பூமியில் அல்லது சுவரில் கையைத் தேய்த்துக்கழுகவும். இது அடங்கலிலும் ஆண் பெண் அடங்கலும் சரி யே. ஆனால், அவர்களுக்கு இஸ்திப்ருச் செய்வது இல்லை. என்கிலும் அவர்கள் மலம் ஜலத்திர்க்கிருந்த விடத்தை விட்டும் எழும்பாமல் நகண்டு கொஞ்ச நேரமிருந்து கல்லால் துடைத்துவிட்டு தண்ணீரைக் கொண்டு துப்பறவு செய்வார்கள். துப்பறவு செய்தானபின் முன் சொன்னதுபோல் اللهم حصن فرجى ويسر امري அல்லாஹும்ம ஹஸ்ஸின் பர்ஜீ வயஸ்ஸிர் அம்ரீ என்னும் துஆவை ஓதவும்.

باب الوضوء

பாபுல் உலூஇ.

உலூவின் வரிசைகள்.

ஹதீது:—ஒரு மனிதன் உலூச் செய்ய நாடி முகத்தைக் கழுகி னால் பார்வையால் செய்த பாவமடங்கலும், இரண்டு கையையுங் கழு கினால் கையால் தொட்டபாவமடங்கலும், இரண்டுகாலையும் கழுகினால் காலால் நடந்த பாவமடங்கலும், உலூச் செய்த உறுப்புகளிலிருந்து விழுகிற தண்ணீர் துளிகளுடனே நீங்கி போய்விடு மென்று நமதுநாயகம் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம் பற்றினதாக (முஸ்லிம்) என்கிற கிதாபில் வருகின்றது.

இன்னும் ஒரு மனிதன் மவுத்தாகிக் கபுரிலடக்கப்பட்டதின் பின்னர், உன்னை நூறடி அடிக்கும்படி அல்லாஹுத் தஆலா எனக்கு உத்தரவு செய்து அனுப்பினனென்று ஒருமலக்கு வந்து சொன்னார்கள். உடனே இவன் பதறி ஆண்டவனே நான் இன்ன இன்ன நல்ல; அமல்கள் செய்தேனென்று முறையிட்ட பின், ஒரு அடி அடிக்கும்படி அல்லாஹுத் தஆலா உத்தரவு செய்தான். அம்மலக்கு அவனை ஒரு அடி அடித்தவுடனே கபுரு நெருப்பாக நிறைந்து விட்டது. என்னை ஏன் இவ்விதம் அடிக்கப்பட்டதென்று கேட்டார்? ஒரு நாள் உலுவில்லாமல் நீர் தொழுதீர், இன்னும் ஒரு ஏழையை ஒரு மனிதன் அடிக்கக்கண்டு தட்டி விலக்காமற் போய்விட்டீர். இந்த இரண்டு குற்றத்திற்காக உம்மை நூறடி அடிக்கிறதற்கு நான் வந்தேன் உம்முடைய நல்ல அமலினல் ஓர் அடி அடித்தேனென்று அம்மலக்கு சொன்னார், என்கிறதாக நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள்.

இன்னும் (அபூதாவூது) என்கிற கிதாபில் வந்திருக்கிறதாவது, ஒருமனிதன் உலுச்செய்து அவ்வுலுவைக்கொண்டு ஒரு அமலை நிறைவேற்றி அவ்வுலுவிருக்க மறு உலுச் செய்தால் அவனுக்கு பத்து நன்மை எழுதப்படுமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம்பற்றினர்கள்.

ஹிகாயத்து:—(ரவுலுர்ரயாஹீன்) என்கிற கிதாபில் வருகிறதாவது, ஜுனைதுல் பஃதாதீ ரஹிமஹுல்லா அவர்களுக்கு ஒரு நேரம் கண்வலியுண்டாயிருந்தது. அப்போது ஒரு நஸ்ரானி வைத்தியனிடத்தில் இவ்வியாதிக்கு என்ன மருந்து செய்யவேண்டுமென்று கேட்க, தண்ணீரை முகத்தில் தடவாமலிரும் கண் வியாதி தீர்ந்து போகுமென்று அவன் சொன்னன். அப்பால், வைத்தியன்போய் தொழுகை நேரம் வந்தவுடனே வைத்தியன் சொல்லை கவனியாமல் உலுச்செய்து அல்லாஹுத் தஆலாவின் கட்டளையாகிய தொழுகையை நிறைவேற்றிவிட்டுக் கொஞ்சம் நித்திரை செய்து விழித்துப் பார்க்க கண்ணுடைய வியாதி தீர்ந்து சுஹுத்துப்பெற்றார்கள். உடனே உருத்தோற்றமன்றியே ஜுனைதென்பவர் தமது இருகண்ணையும் நம்முடைய பொருத்தத்திற்காக விட்டுவிட்டு உலுவைச் செவ்வையாய் செய்ததால் அவருடைய கண்வியாதியைத் தீர்த்தோம், நரகவாதிகளா

கிய ஜனங்களிப்போர்க்கொத்த செய்கையைச் செய்து என்னிடம் இதுபோல் முடுகுதல் பெறவேணு மென்றெண்ணினால், அவர் களுக்கு நான்ஜவாபு சொல்வேனென்று ஒரு சத்தங்கேட்டது.

பின்னர் வைத்தியன்வந்து இவர்கள் கண் இராஹத்தாகி இருக் கிறதைப்பார்த்து, என்ன செய்தீரென்றுகேட்க, உலுச்செய்து என் னுடைய நாயனைத் தொழுதேனென்று சொன்னார்கள். இதைக்கேட்ட வுடன் புதுமைப்பட்டு வைத்தியன் சொன்னதாவது, இது படைத்த வனுடைய மருந்தேயல்லாது மனிதருடைய மருந்தல்ல. ஆகை யால் இதையாலோசிக்குமளவில் நான்தான் வியாதிக்காரனாக இருக் கிறேன். நீங்கள் வைத்தியராக இருக்கிறீர்கள். உங்களுடைய மார்க்கத்தை எனக்குப் படித்துத்தாருங்களென்று கேட்டுப்படித்து ஈமான் கொண்டிஸ்லாமார்க்கத்திற் சேர்ந்தார்.

ஹிக்காயத்து:—புலைலுப்னு இயாலு (றஹி) அவர்கள் ஒரு போதில் ஒரு சுன்னத்தை விட்டு விட்டு ஒலூச்செய்துத் தொழுது விட்டு நித்திரை செய்தார்கள். உடனே நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவில் வந்து ஒ புலைலே! இதென்ன புதுமை! உலுவில் என்னுடைய சுன்னத்தை விட்டு விட்டீரே என்று சொன்ன உடன் பதறி முளித் தெழுந்து மறுபடியும் ஒலுச் செய்து அதற்கு தெண்டமாக தினம் ஐநூறு றகஅத்து விகிதம் ஒரு வருடம் வரை தொழுதுவந்தார்கள். ஆகையால் ஒலூ தொழுகை முதலியவை களில் புறலைக்கொண்டு வருகிறதும், தவிர சுன்னத்தை பேணுதலாக கொண்டுவரவேண்டியது முஸ்லிமாகிய அனைவர்கள் மீதும் அவசிய மாகும்.

ஹிக்காயத்து:—ஹஸ்ரத் உமரிப்னில் கத்தாப் (றலி) யின் தூது ஷர்முக்கு போகும்போது அன்னகரின் பக்கமாக ஒரு ருபிபு இருந் தார். அந்த தூதன் ஷாம் தேசம் போய்ச் சேர்ந்து ருபிபு வீட்டுக்கு போக கதவு திறக்கவில்லை. அந்த ருபிபு யாரென்றால் எஹூதி களுடைய ஆலிமும் ஆபிதுமாயிருந்தான். அவன் இரண்டரை நாழி கைக்கு பிறகு வந்து கதவைத் திறந்தான். அப்போது இந்த தூதன் ஏன் உன்னுடைய வீட்டின் கதவுதிறக்க இன்னேரம் சென்ற தென்று வினவினார். அதற்கு அந்த ருபிபு சொன்னான், மூஸா அலைஹிஸ்ஸலாமின் பேரில் வஹி இறக்கப்பட்டது. அதாவது, ஒ

மூஸாவே! உனக்கு எந்த வேளையிலாவது ஒரு பாதுஷாவின் பேரில் பயமுண்டானால் உடனே அவ்வேளையில் நீ உலூ செய், இன்னும் உன்னுடைய வீட்டில் உள்ளவர்களும் உலூ செய்யும்படி உத்திரவு செய் என்று அல்லாஹுத் தஆலா திருவுளமானான். ஆகச்சே யாருகிலுமொருவன் எந்த காரியங்களின் பயத்திற்காக உலூ செய்கிறானோ அதை விட்டும் அல்லாஹுத் தஆலா அந்த உலூவின் பரக்கத்தால் கார்மானம் பெற்று அவன் அமானத்தில் இருப்பான். உம்மில் நின்றும் தான் நான் பயந்து இப்போது என்னுடைய வீட்டிலுள்ளவர்களும் நானும் உலூ செய்தோம். இதற்காக தான் கதவை திறக்க நேரமாயிற்று என்று சொன்னான்.

ஹதீது:-யாருகிலுமொருவன் தன்னுடைய விரிப்பில் உலூஉடையவனாக இராதரித்து நித்திரை செய்வானாகில் அவனுடன் ஒரு மலக்கு இராதரித்திருந்து அவன் முளிக்குந்தோறெல்லாம் ஆண்டவனே இந்த அடியான் துப்பரவாய் ராதரித்திருக்கிறபடியால் அவனுடைய பாவத்தை மன்னிக்கருளென்று துஆ செய்வார். இன்னும் யாருகிலுமொருவன் ஈமானுடன் 5-நேரத்தின் தொழுகையையும், அதனுடைய ஒலுவையும், அதன் ருகூஉ சுஜூதுகளையும் பேணுதலாக கொண்டு வந்து, தன் ஸகாத்தையும், நிறைவேற்றி றமலான் நோன்பும் பிடித்து, ஹஜ்ஜும் செய்வானாகில் சுவர்க்கப் பதவி அடைவானென நம்மள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினார்கள்.

وضون حكمكض

உலூவின் ஹுக்முகள்.

உலூவின் பற்லுகள்.

உலூவில் பற்லு நாலாயிருக்கும்:—ஒன்றாவது, முகத்தைக்கழுவுகிறது. இரண்டாவது, இருமுளங்கை மொளிவுள்பட இருகையையும் கழுவுகிறது. மூன்றாவது, தலையில் நாலிலொரு பங்கு காதின் எல்கைக்குமேல் மஸ்ஹு செய்கிறது. நாலாவது, இரண்டு காலையும் பரண்டை உள்பட கழுவுகிறது.

உலூவின் சுன்னத்துகள்.

உலூவின் சுன்னத்துகள் பதிமூன்று:-ஒன்ருவது, அல்லாஹுத் தஆலாவின் யேவலுக்குத் தலை சாய்ந்து துடக்கை நீக்குவதர்க்காக உழூச் செய்கிறேன் என்று நிய்யத்துச் செய்கிறது. இரண்டாவது,

اعوذ بالله من الشيطان الرجيم • بسم الله الرحمن الرحيم
بسم الله العظيم والحمد لله علي دين الاسلام

அவூது பில்லாஹி மினஷ்ஷைதா னிற்றஜீம். பிஸ்மில்லா ஹிற் றஹ்மா னிற்றஹீம் பிஸ்மில்லாஹில் அலீம் வல்ஹம்து லில்லாஹி அலாதீனில் இஸ்லாம் என்று சொல்கிறது. மூன்ருவது, இரண்டு கையையும் மணிகட்டு வறையில் கழுவுகிறது. நாலாவது, மூங்கில் போலொத்ததைத் தவிரமற்ற நாருள்ள மாத்தில் நின்று முள்ள சுற சுறப் பான குச்சிகொண்டு மிஸ்வாக்குச் செய்கிறது. அதில் ஏக்கமானது உகா. பின்பு சைத்தூன் அதுகொண்டு பற்களுடைய வெளி யிலும், உள்ளிலும், அருகுகளிலும், முறஷிலும் தேய்ப்பதாயிருக்கும். குச்சி கிடையாதவர்களும், பல்லில்லாதவர்களும் சுற சுறப்பான துணி யைக்கொண்டு அல்லது விரலைக்கொண்டு மிஸ்வாக்குச் செய்யவும். மிஸ்வாக்குச் செய்வதின் பாயிதா மிகுத முண்டும். அதிலொன்ரு கிறது, மிஸ்வாக்குச் செய்த காரணத்தால் தொழுகையை ஸவா பால் எழுபது பங்கு அதிகமாகக்கப்படும். மிஸ்வாக்குச் செய் கிற விபரமாவது குச்சியைக் கைப்பிலெடுத்து சின்னிவிரலின்மேல் குச்சியும், அடுத்த மூன்று விரலைக் குச்சிக்கு மேலும், பெரு விரலைக் குச்சியின் உள்ளும் இருக்கும்படி பிடித்து அகலத்தாலும், நீளத்தாலும், பல்லுகளின் வெளியிலும், உள்ளிலும், அருகிலும் முறஷிலும், தேய்ப் பதாயிருக்கும். குச்சியை வாயை விட்டு வெளியிலெடுக்காமல் தேய்க்க வேண்டும், வெளியிலெடுத்து விட்டால் மறுபடி குச்சியைத் தண்ணீரில் நனைத்துத் தேய்க்கவேண்டும். தேய்த்து முடிந்த உடன் குச்சியைச் கழுகி ஓரிடத்தில் பதமாய் நட்டிவைக்கவேண்டும் குச்சி யைக் கழுகாவிட்டால், அதைக்கொண்டு ஷைத்தான் மிஸ்வாக்குச் செய்வானென்றும், அது ஒரு ஜாணுக்கு அதிகமாயிருந்தாலும் அதில் ஷைத்தான் இருக்கும் தலமாகிவிடும் என்றும் வந்திருக்கிறது. ஆரம் பத்திலே அது ஒரு ஜாணுக்கு அதிக மிருப்பதாகாது. இவ்விதமாக

அதபுடனே தேய்த்து வந்தால் மவுத்தைத் தவிர மற்ற வியாதிகளுக் கெல்லாம்மருந்தாயிருக்கும். ஐந்தாவது, மூன்றுவிடுத்தம் வாய்க்கொப் பளிக்கிறது. ஆறுவது, இரு நாசியிலும் மூன்று விடுத்தம் தண்ணீர் செலுத்துகிறது. ஏழாவது, அடர்ந்த தாடியைக் கோதுகிறது. எட் டாவது, கழுகப்பட்டதை மூன்று விடுத்தம் செவ்வையாய்க் கழுவு கிறது, ஆனல் முந்தின தடவையில் உருப்பில் குறை விருந்தால் கல்பு தரிபடுகிறதற்காக மூன்றைவிட அதிகமாக்குகிறது குற்றமில்லை. ஒன்பதாவது, கைவிரல்களைக் கோதுகிறது. பத்தாவது, தலையடங் கலும் ஒரு விடுத்தம் மஸ்ஹு செய்கிறது. பதினொன்ருவது, தலைக் கெடுத்த தண்ணீருல் இரு காதடங்கலையும் மஸ்ஹு செய்கிறது. பனிரண்டாவது பர்லான உருப்புகளை முன் சொன்ன படிக்கு ஒழுங்காகக் கொண்டு வருகிறது. பதிமூன்ருவது, தொடர்ச்சியாகச் செய்கிறது.

وضوں مستحب

உலூவின் முஸ்தஹப்பு

உலூவின் முஸ்தஹப்புகள் அனேக முண்டும் அவைகளில் சில தாவது கிப்லாவை முன்னோக்குகிறதும், இடதைக்காண வலதை முற்படுத்துகிறதும், இரு புறங்கைகொண்டு கழுத்துக்கு மஸ்ஹு செய்கிறதும், மேட்டின் பேரிலிருந்து உலூ செய்கிறதும், வக்து வரு முன் உலூசெய்கிறதும், முகத்தில் தண்ணீரை அடிக்காதிருக்கிற தும், உருப்புகளைத் தேய்க்கிறதும், முகத்தின் மேல் புறத்தைக் கொண் டும் விரலின் அருகைக் கொண்டும் கழுவுதலைத் தொடங்குகிறதும், காதுக்கு மஸ்ஹு செய்கிறபோது சின்னிவிரலை காதின் துவாரத் துள்ளாக்கிக் கொள்ளுகிறதும், துன்யாவின் பேச்சை அவசியமான தேவையின்றி பேசாதிருப்பதும், ஒவ்வொரு உருப்புகளைக் கழுகு மிடத்தில் பிஸ்மில்லா ஷஹாதத்து கலிமா ஸலவாத்து இவைகளை ஓதுவதும், உலூச்செய்து முடிந்தபின் கிப்லாவை முன்னோக்கி நின்று அல்லது இருந்து உலூவின் மீதத்தண்ணீரைக் குடிப்பதும், அதைக் குடித்தபின்,

اللهم اشفني بشفائك وداوني بدوائك واعصمني
من الوهل والاحراض والاوجاع

அல்லாஹும்ம மஷ்பினீ பிஷிபாஇக வதாவினீ பிதவாஇக வஃ

ஸிம்னீ மினல் வஹ்லி வல்அம்ருலி வல்அவ்ஜாஇ என்று சொல்லுவதும், உலுசெய்து முடிந்தபின் அபத்தைத் தொடாதிருக்கிறதும், உள்ளங்கால் காண்டை பள்ளம் வகைளுவை ஆருபிறதும், ஒலுவை விட்டும் பாக்கான பின் கிப்லாவை நோக்கி வானத்தைப்பார்த்தவனாக,

سبحانك اللهم وبحمدك اشهد ان لا اله الا انت استغفرك واتوب
اليك واشهد ان محمدا عبدك ورسولك اللهم اجعلني من التوابين
واجعلني من المتطهرين واجعلني من عبادك الصالحين واجعلني
من الذين لا خوف عليهم ولا هم يحزنون

சுப்ஹானக அல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லா அந்த அஸ்தக்பிறுக்க வஅதூபு இலைக்க வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துக வறசூலுக. அல்லாஹும் மஜ்அல்னீ மினத்தவ்வாபீன். வஜ்அல்னீ மினல் முத்ததஹ்ஹிரீன். வஜ்அல்னீ மின் இபாதிகஸ் ஸாலிஹீன். வஜ்அல்னீ மினல்லதீன லாகவ்புன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன் என்றோதவும். ஒலூச் செய்யும்போது அந்தந்த உறுப்புகளுக்கு ஓத வேண்டிய துஆக்களை ஓதுகிறதும் அதாவது மிஸ்வாக்குச் செய்யும்போது,

اللهم اجعل تسويكي هذا تمحيصا لذنوبي ومرضاة لك سيدي وبيض
به وجهي كما بيضت اسناني

அல்லாஹும் மஜ்அல் தஸ்வீக்கீ ஹாதா தம்ஹீஸன் லிதுநூபீ வமர்லாத்தன் லக்க செய்யிதீ வபய்யில் பிஹி வஜ்ஹி கமா பையல்த்த அஸ்னானீ என்றும், வாய் கொப்பளிக்கும்போது பிஸ்மிச் சொல்லி,

اللهم اعني على تلاوة القران وذكرك وشكرك وحسن عبادتك

அல்லாஹும்ம அஇன்னீ அலாத் திலாவத்தில் குருஆனி வஸிக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக்க என்றும், நாசிக்கு தண்ணீர்ச் செலுத்தும்போது,

اللهم ارحني رائحة الجنة ولا ترحني رائحة النار

அல்லாஹும்ம அரிஹ்னீ ருயிஹதல் ஜன்னதி வலாதுரிஹ்னீ ருயிஹத்தன்னரி என்றும். முகம் கழுகும்போது,

اللهم بيض وجهي يوم تبيض وجوه وتسود وجوه

அல்லாஹு ம்ம பைபில்வஜ்ஹீ யவ்ம தப்யல்லு வுஜூஹுன் வதஸ்வத்து வுஜூஹுன் என்றும், வலது கை கழுகும்போது,

اللهم اعطني كتابي بيميني وحاسبني حسابا يسيرا

அல்லாஹு ம்ம அஃத்தினீ கித்தாபீ பியமீனீ வஹாஸிப்னீ ஹிஸாபன் யஸீரு என்றும், இடது கை கழுகும்போது,

اللهم لا تعطني كتابي بشمالي ولا من وراء ظهري

அல்லாஹு ம்ம லாதுஃதினீ கிதாபீ பிஷிமாலீ வலாமின் வருஇ லஹ்ரீ என்றும், தலைக்கு மஸ்ஹு செய்யும்போது,

اللهم اظلني تحت ظل عرشك يوم لا ظل الا ظل عرشك

அல்லாஹு ம்ம அலில்லனீ தஹ்த்த லில்லி அற்ஷிக்க யவ்ம லாலில்ல இல்லா லில்ல அற்ஷிக்க என்றும், இருகாதுக்கு மஸ்ஹு செய்யும்போது,

اللهم اجعلني من الذين يستمعون القول فيتبعون احسنه

அல்லாஹு ம்மஜ் அல்னீ மினல்லதீன யஸ்தமிஊனல் கவ்ல பயத் தபிஊன அஹ்ஸனஹு என்றும், பிரடிக்கு மஸ்ஹு செய்யும்போது,

اللهم اعتق رقبتي من النار

அல்லாஹு ம்ம அஃதிக் றகபதீ மினன்னார் என்றும், வலது காலை கழுகும்போது,

اللهم ثبت قدمي على الصراط يوم تزل الاقدام

அல்லாஹு ம்ம ஸப்பித் கதமீ அலஸ்ஸிருத்தி யவ்ம தஸில்லுல் அக்தாமு என்றும், இடது காலை கழுகும்போது,

اللهم اجعل ذنبي مغفورا وسعي مشكورا وتجارتي لن تبور

அல்லாஹு ம் மஜ்அல் ஸன்பீ மக்பூறன் வஸஃயீ மஷ்கூறன் வத்திஜாறத்தீ லன் தபூரு என்றும் ஓதுகிறதுமாயிருக்கும்.

இன்னும் இவைகளைப்போல் கஸாயின் என்னும் கிதாபில் அறுபது முஸ்தஹப்புக்கு அதிகம் எழுதுகிறுர்கள். யாராகிலு மொருவன் சுன்னத்து முஸ்தஹப்பு முதலிய அதபுகளெல்லாம்

பேணி உள்ளச்சத்துடன் நிறப்பமாக ஒலுச்செய்வானுகில் தொழுகை யிலும் உள்ளச்சமாகிவிடுவான்.

ஒலுவின் மக்றூஹ்கள்.

ஒலுவின் மக்ரூஹ்கள் எட்டாகும். அவைகளாவன:—கழுகும் உறுப்புகளில் தண்ணீரை அடித்து கழுவுகிறதும், தண்ணீரை தன் ஹாஜத்துக்குமேல் அதிக செலவு செய்கிறதும், மூன்று விடுத்தத்துக்கு மேல் அல்லது குறைய உருப்புகளை கழுவுகிறதும், மஸ்ஹு செய் யப்பட்ட உருப்பை புதிய தண்ணீரைக்கொண்டு மூன்று தரம் மஸ்ஹு செய்கிறதும், நஜீசானயிடத்தில் அல்லது துப்புறவுசெய்கிற இடத் தில் யிருந்து ஒலுச்செய்கிறதும், பெண்பிள்ளைகள் ஒலுச்செய்த மிச்சத் தண்ணீரைக்கொண்டு ஆண்பிள்ளைகள் ஒலுச்செய்கிறதும், தண்ணீரில் காறல் மூக்குச்சளியை யெரிகிறதும், பள்ளிக்குள் தண்ணீர் சிந்தும் படி ஒலுச்செய்கிறதுமாயிருக்கும்.

ஒலுவின் முறித்தல்.

ஒலுவின் முறித்தல்கள் ஒன்பதாயிருக்கும். (ஒன்ருவது) முன் பின் துவாரத்திலிருந்து யாதொரு வஸ்துகள் புறப்படுகிறது, (இரண் டாவது) சரீரத்தில் நின்றும் இரத்தம், சீள், சலம் புறப்பட்டு காயத்தை விட்டு வளிந்தோடுகிறது (மூன்ருவது) வாய் நிறம்ப சத்தியெடுக் கிறது (நாலாவது) படுத்து அல்லது இருப்பிடம் பூமியைவிட்டும் நீங்கும்படியிருந்து ஒரு வஸ்துவில் பிலமாக சாய்ந்து நித்திரைசெய் கிறது (ஐந்தாவது) பயித்தியம் உண்டாகிறது (ஆருவது) போதக் கேடாகிறது (ஏழாவது) ஒரு வஸ்து வைத்தின்றி மஸ்தாகிறது (எட் டாவது) றுகூஉ சுஜூது உள்ள தொழுகையில் பாலிகானவர்கள் முளிப் புடன் வெடி சிரிப்புச் சிரிக்கிறது (ஒன்பதாவது) முபாஷரத்து பாஹிஷாவெனும் கெட்ட சேர்மானம் உண்டாகிறது. அஃதாவது. தகர் உசும்புகளுடனே ஆணும் பெண்ணும் அல்லது ஆணும் ஆணும் அல்லது பெண்ணும் பெண்ணும் திரையின்றி அம்மணமாக வெட்கத் தலம் ஒன்றோடொன்று தொடும்படி இரண்டு உருப்பும் சந்திக்கிறது.

இனி ஒலுவில்லாமலிருப்பவர்கள் தொழுகிறதும், கஃபாவை தவாபு செய்கிறதும் உறையில்லாமல் குர்ஆனைத் தொடுகிறதும் ஆக இம்மூன்றும் ஹறாமாகும். (ஹதீது) ஒரு மனிதன் மவுத்தாகி

கப்ரில் அடக்கப்பட்டபின் ஒரு மலக்கு வந்து உன்னை நூறு அடி அடிக்கும்படி அல்லாஹுத் தஆலா எனக்கு உத்திரவுசெய்து அனுப்பினுனென்று சொல்லவும், உடனே அவன் பதரி ஆண்டவனே! நான் இன்ன இன்ன அமல்செய்தேனே என்று முறையிட்டான். அதின்பின் ஒரு அடி அடிக்கும்படி அல்லாஹுத் தஆலா உத்திரவு செய்தான் அந்த மலக்கு அவனை ஒரு அடி அடித்தார். உடனே கப்ரு நெருப்பாக நிறைந்து விட்டது. என்னை ஏன் இவ்விதம் அடிக்கப்பட்டது என்று கேட்டான். நீ ஒருநாள் ஒலு வில்லாமல் தொழுதாய். இன்னும் ஒரு ஏழையை ஒருவன் அடிக்க நீ கண்டு தட்டி விலக்காமல் போய்விட்டாய். இந்த இரண்டு குற்றத்திர்க்காக உன்னை நூறடி அடிக்குகிறதற்காக நான்வந்தேன் உன்னுடைய நல்ல அமலினுல் ஒருஅடி அடிக்கும்படி உத்திரவானதென்று அந்த மலக்கு சொன்னர் என்பதாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினுர்கள்.

باب الغسل

பாபுல் குஸ்லு.

குஸ்லுடைய பாடம்.

குஸ்லென்னும் முழுக்கை விதியாக்கும் கருமம் நாலு. ஒன்றுவது:—நித்திரையில் அல்லது முளிப்பில் ஆண் பெண்ணில் நின்றும் ஆசையுடனே மணிப்புறப்படுகிறது. இரண்டாவது:—ஆண் பெண் இருவருடைய சுத்னுவரை சந்திக்கிறது. மூன்ருவது:-பெண்களுக்கு ஹைறுபத்தறுகிறது. நாலாவது:—நிபாஸென்னும் பேற்காலத்துடக்கு பந்தறுகிறது.

முளுக்குடைய பற்ளுகளாவது:—மூன்று. அவையாவன: வாயை நன்ருய் கொப்பளிக்குகிறது. நாசிக்குத் தண்ணீர்ச் செலுத்துகிறது. சரீரமடங்கலைப்பும் அடைய வனைத்தலாக கழுவுகிறது.

இனி முளுக்கின் சுன்னத்துகள் ஏழு. ஒன்ருவது:—நிய்யத்து அதாவது, என் பேரிலுள்ள ஜனுபத்தின் பெருந்துடக்கை நீக்குவதற்

காக அல்லாஹுத் தஆலாவின் வெறுக்கு வளிப்பட்டு குளிக்குகிறேன் என்று நிய்யத்துச்செய்கிறது. இரண்டாவது:-பிஸ்மில்லா சொல்கிறது. மூன்றாவது:—இருகையையும் மணிக்கட்டுவரை கழுவுகிறது. நாலாவது: — அபத்தை கழுவுகிறது. ஐந்தாவது:—சரீரத்தில் புடவையில் நஜீஸுப்பட்டிருந்தால் அதை கழுவுகிறது. ஆறாவது:—ஒலூச்செய்கிறது. ஏழாவது:—தலையின்பேரில் மூன்று விடுத்தம், வலது தோள் புயத்தின் பேரில் மூன்று விடுத்தம், இடது தோள்புயத்தின் பேரில் மூன்று விடுத்தம், மற்றச் சரீரமடங்கலின் பேரிலும் மூன்று விடுத்தம் தண்ணீர்ச் சொரிய வார்த்துக்கொள்கிறது. இதில் ஒருவன் வாய் கொப்பளித்து நாசிக்கு தண்ணீர் செலுத்தியபின் ஒடுகிற தண்ணீரிலாவது அல்லது மிகுதமாகிய நிலைத்த தண்ணீரிலாவது அள்ளிவார்த்துக் குளிக்கிற நேரம்வரைத் தண்ணீரில் சரீரம் உசும்பும்படி தரிப்பட்டால் வார்த்துக் குளிக்கிற சுன்னத்து உண்டாகிவிடும்.

இனி, சுன்னத்தான முளுக்குகள். ஜுர்ஆ நாள் தொழுகைக்கு முன்னும், இரண்டு பெருநாள் தொழுகைக்கு முன்னும், அறபாத்து மலையிலும், ஹஜ்ஜுக்கு உம்ருவுக்கு இஹ்றும் கட்டும் போதும் குளிப்பதாயிருக்கும்.

இனி முஸ்த்தஹப்பான குளிகள் பதினொன்கு. அவைகளாவன பெருந்துடக்கில்லாமல் துப்புரவாக இஸ்லாமில் வந்தபோதும், பைத்தியம் தெளிவானபோதும், வயது கொண்டு புலூகானபோதும், போதக்கேடானவன் தெளிவு பெற்றபோதும், இரத்தம் குத்தி வாங்கின போதும், ஷஃபான் மாதம் பறூஅத்து இரவிலும், லைலத்துல் கத்ருடைய இரவிலும், அறபா இரவிலும், மக்கத்தில் புகுதும்போதும், கிறுணத்தொழுகை, மழைதேடித் தொழுகிற தொழுகைத்தொழுகும் போதும், திடுக்கம் கடிஷான இருள் காற்று இவைகள் நீங்குகிறதற்காக தொழுகும்போதும், குளிப்பதாயிருக்கும்.

பறஃ ஹைலு நிபாஸின் பயான்.

ஹைலாகிறது:—ஒன்பது வயது முதல் ஐம்பத்தைந்து வயது வரையிலுள்ள ஹமலில்லாதவளுடைய சர்பக் குவளரையில் இருந்து வெளிப்படும்படியான இரத்தமாகும். அதன் நிறமாவது:—துய்ய வெள்ளையைத் தவிர கருப்புச், சிகப்பு, மஞ்சள், பச்சை, கலங்கல் மன்

னிறம் ஆக ஆறு நிறமாகும். அதனுடைய வக்த்துகள் ஒன்பது வயது முதல் ஐம்பத்தைந்து வயது வரையிலுமாயிருக்கும். ஹைலின் குறைந்தது மூன்று இரவு பகல். தீர்மானம் பத்து இரவு பகலாகும். ஆனால் இடைவிடாமல் ஓடிக்கொண்டிருப்பது ஷர்த்தல்ல. எங்கினும் முன்னும் பின்னும் உண்டாயிருக்கவேணும். நம்மிடத்தில் ஊன்றுதல் கடைசி வக்தாயிருக்கும். ஒரு பெண்பிள்ளை கடைசி வக்தில் ஹைலு கண்டால் தொழுகை விழுந்து போகும். கடைசி வக்தில் துப்புறவானால் தொழுகை விதியாகிவிடும். இனி நோம்புள்ளவள் கடைசி பகலில் ஹைலானால் நோம்பு பாத்திலாகிவிடும். பகலில் துப்புறவாக யாதொன்றும் அருந்தவில்லையானாலும் அன்றயின் நோன்பைக் கலாச் செய்ய வேண்டும்.

நிபாஸாகிறது, பிள்ளைபிறந்த பித்தடியில் அல்லது பிள்ளையில் மிகுதம்புறத்திப்பட்ட பித்தடியில் கற்பத்திலிருந்து வெளியாகிற உதிரமாயிருக்கும். அதில் குறைந்ததுக்கு மட்டில்லை ஒரு வினாடி நேரம் கொண்டு மறைந்திடவும் போதும், மிகுந்தது நாற்பது நாளாயிருக்கும். ஹைலு மூன்று நாளைக்குக் குறைந்தாலும், பத்துநாளைக்கு மிகுந்தாலும், நிபாசு நாற்பது நாளைக்கு மிகுந்தாலும் அது இஸ்திஹாழா வெனும் வியாதியாயிருக்கும்.

تنبيه தன்பீஹ். பெண்பிள்ளை ஹைலு நிபாஸை விட்டும் துப்புறவானதை ஞாபகமாக பேணி எப்போது துப்புறவாகி விட்டாளோ அப்போது யாதொரு தாமிதமின்றி குளித்து முழுகி தொழுகை நோம்பைப் பின்தாமலெடுக்க வேணும். அப்படிக்கில்லாமல் கொஞ்ச நேரமாகிலும் குளிக்கிறதை பிப்படுத்தி தொழுகை நோன்பை தாமதப்படுத்துவது ஹறாமாகும். இனி ஹைலு கண்டிருக்கும்போது தொழுகையின் வக்த்து வந்தால் ஒலூச் செய்து தொழுகும் தானத்திலிருந்து அந்த வக்தின் தொழுகை தொழும் நேரம்வரையில் குற்ஆனைத் தவிர கலிமா தஸ்பீஹ் இஸ்திக்பாறு முதலான அவ்றாதுகளை ஓதிக்கொண்டிருப்பது முஸ்த்தஹப்பு.

இனி ஜுனுபாளிக்கு ஹறாமாகும் கருமங்கள் ஐந்து. அவைகளாவன:—தொழுகிறது, பள்ளியில் புகுதகிறது, கஃபாவைத் தவாபு செய்கிறது, குருஆன் ஓதுகிறது, குருஆனைத் தொடுகிறது. இனி ஹைலு நிபாஸு காரியங்களுக்கு முன் சொன்ன ஐந்து காரியத்துடன்

நோன்பு பிடிப்பதும், ஜிமாஉ செய்வதும், தொப்புளுக்கும் முட்டுக்கு மிடையில் ஆண்பிள்ளை தொடுகிறதும் ஆக எட்டு காரியம் ஹறுமாகும்.

ஆனால் ஹைறு நிபாஸுக்காரி முளுக முதல் நோன்பை நிய்யத்துச் செய்யலாம். மற்ற கருமம் வழும் முளுகும் வரையில் ஹறுமாகவேயிருக்கும். அவள் விட்ட நோன்பை கலாச்செய்வது வாஜிபாகும். தொழுகையை கலாச்செய்வது வாஜிபல்ல. இனி ஹைறு நிபாசுக்கார பெண்பிள்ளையை ஜிமாஉசெய்தால் வெங்குஷ்டம் கருங்குஷ்டம் முதலிய பெரிய வியாதிகள் உண்டாகுமென்று அனேக ஹுகமாக்களாகிய வைதியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பாயிதா:—ஹைறுக்காரி ஹைறைவிட்டும் நீங்கி குளித்த உடன் அத்தர் கஸ்தூரி முதலாகிய மணமான வஸ்துவை ஒரு பஞ்சுவில் துவைத்து அபத்தில் வைக்கிறது முஸ்தஹப்பு. அப்படி செய்திருக்கும் பெண்ணை அது முதல் மூன்று நாளைக்கும் ஜிமாஉ செய்தால் அந்நாளில் ஹமல் தரிப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

باب المياه

பாபுல் மியாஹ்.

தண்ணீரைப்பற்றிய பாடம்.

சிருத்தொடக்குப் பெருந்தொடக்கு இவ்விரண்டையும் மாஉன் முத்லகென்னும் மொத்தமாகிய தண்ணீர் கொண்டு நீக்க வேண்டும். அதாவது:—மழைத் தண்ணீர், குளத்துத் தண்ணீர், கிணற்றுத் தண்ணீர், ஆற்றுத் தண்ணீர், கடல் தண்ணீர் இவைபோலொத்ததாம், முகையிதெனும் யாதொரு பேர்சொண்டு குறிப்பிடப்பட்ட தண்ணீரினால் நீக்கப்படாது. அந்தத் தண்ணீராகிறது:—மரத்து நீர், பள்ளத்து நீர், யாதொரு வஸ்த்துவை முத்லகான தண்ணீரில் கலந்ததினால் தண்ணீரைக்காண அவ்வஸ்துவு அதிகமாகயிருக்கிற தண்ணீர். நஜீசை நீக்குவதன்றி ஒலூவகைறுக்களில் பரிமாறப்பட்ட முஸ்தஃமலான தண்ணீர் இவைபோலொத்ததாகும். இனி உப்பு விளைகிற தண்ணீரைக்கொண்டும் தொடக்கை நீக்கப்படாது. பொழுதில் சூடான

தண்ணீரைக்கொண்டும் தொடக்கை நீக்குகிறது மக்ரூஹா யிருக்கும். இனி ஸம் ஸம் கிணத்துத் தண்ணீரைக்கொண்டு ஒலூசெய்கிறதும் குளிக்கிறதும், இஸ்திஞ்சா துப்புரவுசெய்கிறதும் மக்றூஹ்.

حوض حكم

ஹவ்லின் ஹுக்முகள்.

இனி தஹ்தர்தஹ்வெனும் பத்திலே பத்தை எத்திய பெரிய ஹவ்லு போலொற்ற கட்டுக்கிடைந் தண்ணீரின் ஹுக்மாகிறது. நாலு சவுக்கமாயிருந்தால் சுத்துக்கு நாற்பது முளமும், வட்டமா யிருந்தால் முப்பத்தாறு முளமுமாக இருந்து அதில் தண்ணீறள் ளும்போது நிலம் வெளியாகாதபடிக்குள்ள ஆழமாக இருந்தால் அதில் குளிக்கிறதும் ஒலுச் செய்கிறதும் ஆகும்.

இனி ஓடுகிற தண்ணீரின் ஹுக்மாகிறது வைக்கோல் துரும்பை அது ஓட்டுகிறதாயிருந்தால் அதில் குளிக்கிறதும் ஒலுச் செய்கிறது மாகும். இவ்விருவகைத் தண்ணீரிலும் நஜீசுவிழுந்தால் அதின் குண மாகிய வாடை, நிறம், சுவை இம்மூன்றிலொன்றுவது அத்தண்ணீரில் காணப்படவில்லையானால் அதில் குளிக்கிறதும் குடிக்கிறதும் ஒழுச் செய்கிறதும் ஆகும்.

இனி அக்குணத்திலொன்றைக் காணப்படாமல் மேல்படி அள வுக்குக் குறைந்த தண்ணீரில் நஜீசு விழுந்து அதின் குணத்தைக் காணப்படவில்லையானாலும் யாதொன்றும் கூடாது. இனி பத்திலே பத்துக்குக் குறைந்த கிணற்றில் ஒரு துள்ளி நஜீசு விழுந்தாலும், அல்லது தண்ணீரில் ஜீவிக்காத ஓடும்படியான இரத்தமுள்ள எந்த மிருக மாவது விழுந்து செத்து ஊதினாலும், அல்லது உடைந்தாலும், அல் லது வெளியில் செத்து ஊதியதை அதிலெறிந்தாலும், அல்லது நாய், ஆடு, மாடு, மனிதன் இவைகளைப்போலொத்தது விழுந்து மரண மானாலும், அதுகளை எடுத்தெறிந்த பின் நடுத்தரமான பட்டையில் அரைப் பட்டை நிறம்பாக ஹத்து வரை அத் தண்ணீரடங்கலையும் இறைக்கப்படும். எலி சிட்டுக்குருவி பல்லி போலொத்தது விழுந்திருந்தால் அதை நீக்கியபின் இருபது பட்டை முதல் முப்பது பட்டை வரையிலும் புறா கோழி பூனை இவை போலொத்தது விழுந்து மறித்தால் நாற்பது முதல் ஐம்பது பட்டை வரையிலும் இறைக்கப்படும்.

இனி ஒலுவில்லாதவன் அல்லது முளுக்குள்ளவன். விழுந்து ஹயாத்தாக எழும்பினுல் தண்ணீரடங்கலையும் இறைக்கப்படுமென்றும் நாற்பது பட்டை இறைக்கப்படுமென்றும் கிலாபு உண்டாா இருக்கிறது.

இனி ஒலித்தோடும்படியான இரத்தமில்லாத மூட்டை, கொசுவு, ஈ, வண்டு, கட்டுவாக்காலி, போலொத்த வஸ்துவும், தண்ணீரில் பிறந்து ஜீவிக்கிற மீன், நண்டு, தவளை போலொத்த வஸ்துவும் தண்ணீரிலிறந்திருந்தால் அந்தத் தண்ணீர் நஜீசாகாது. மேல் கூறிய சிறு கிணற்றில் யாதொரு ஹயவான் விழுந்திறந்து நேரத்தை அறியப்பட்டாலும் அல்லது அது இன்னதினத்தில் விழுந்து இறந்ததென்று இரண்டு மனிதன் சாக்ஷி சொன்னுனும் செத்த நேரத்திலிருந்து அத்தண்ணீரை கனத்த நஜீ செங்கிறதுகொண்டு ஹுக்மு செய்யப்படும். அன்னேரத்தை அறியப்படாமலும் ஊதாமலும் உடையாமலுமிருந்தால் ஒரு இரவும் பகலும் நஜீசாகிவிடும். ஊதினுலும் உடைந்தாலும் மூன்று இரவுபகல் நஜீசாகிவிடும். ஆனபோதே அந்தண்ணீருல் ஒலுச்செய்து தொழுத தொழுகையைக் கலாச் செய்வதும், அத்தண்ணீர் பட்ட வஸ்தடங்கலையும் கழுவுகிறதும் வாஜிபாயிருக்கும்.

இனி சிறு கிணற்றில் தின்க ஆகுமான பறவைகளில் கோழி தாருவைத் தவிற புறு சிட்டுக்குருவி போலொத்ததும், தின்க ஹறுமான பறவைகள், எச்சம் போட்டாலும் ஊசி நுனிபோல் சிதரின சிறுநீர்த் தெரித்தாலும், நஜீசான தூசி பறந்தாலும், ஒட்டகையின், ஆட்டின் புளுக்கையில் ஒன்று இரண்டு விழுந்தாலும், இறைக்கிறது வாஜிபல்ல. காட்டில் ஆடு மாடு மிகுதமாக புளக்கமான இடத்திலுள்ள சுத்துக்கட்டில்லாத கிணற்றில் விட்டை சாணி விழுந்தால் தங்கடத்திர்க்காக பொறுக்கப்படும். தங்கடமில்லையானுல் நஜீசாகிவிடும்.

இனி மனிதன்வாய் வைத்துக் குடித்து மிஞ்சிய எச்சியும், தின்ன ஹலாலான உயிர்ப்பிறுணிகளின் எச்சியும் துப்புறவாகயிருக்கும். நாய் கின்சீருடைய எச்சியும், அய்யவா மிருகங்ளின் எச்சியும் நஜீசாயிருக்கும். விட்டுப் பூனை அவிள்த்து விட்டு மேய்கிற கோழி அய்வாப்பட்ட பறவைகள் இவைகளின் எச்சியும் பாம்பு எலிபோல் வீட்டில் குடியிருக்கிறதின் எச்சியும், அஜ்னபியான ஆண் பெண் இருவரில் ஒருவர் வாய் வைத்துக்குடித்து மிஞ்சிய எச்சியும் மக்ரூஹாயிருக்கும். இனி அந்தந்த வஸ்துக்களின் வேர்வைக்கு ஹுக்மா

கிறது, அதின் எச்சியின் ஹுக்மாயிருக்கும். கழுதை கோவேறு கழுதையின் எச்சி மஷ்கூகாயிருப்பதால் அது கொண்டு குளித்தாலும் ஒளுச் செய்தாலும் தயம்மும் செய்ய வேண்டும்.

முஸ்தஃமலான தண்ணீர்

முஸ்தஃமலான தண்ணீர்:—சிறு தொடக்கு பெறுந்தொடக்கை நீக்குவதற்காக, அல்லது ஒரு உருப்பின் பறீளை விழுத்தாட்டுகிறதற்கு, அல்லது ஒளு உள்ளவன் மறுபடியும் தவாபை நாடினதற்கு பரிமாற்றச் செய்து உறுப்பை விட்டும் பிரிந்த தண்ணீருக்கும், இன்னும் ஒஜீபனிக்க முன்னும் பின்னும் சுன்னத்துடைய நிய்யத்துக்கொண்டு கையைக் கழுவுகிறதிலுண்டான தண்ணீருக்கும் முஸ்தஃமலான தண்ணீரென்று சொல்லப்படும். அந்த முஸ்தஃமலான தண்ணீரைக் கொண்டு மறுவிடுத்தம் சிறுதொடக்கை அல்லது பெருந்தொடக்கை நீக்கப்படாது. ஆனால் நஜீஸு பட்ட வஸ்துகளை அதைக்கொண்டு கழுவுகிறது ஆகும். ஆனால் குடிக்கிறது மக்ரூஹு.

இனி சிறு தொடக்கு பெருந்தொடக்கு உள்ளவன் தஹ்தர் தஹ்வுக்குக் குறைந்த தண்ணீரில் வாஜிபாகிய உறுப்புகளில் சிலதை கழுகினாலும் கிறங்கித்தள்ளுகிற அல்லது அதினுள் விளுந்த பாத்திரத்தை எடுக்கிற ஹாஜத்தின்றியே கையை உள்ளே விட்டாலும் அத்தண்ணீர் முஸ்தஃமலாகிவிடும். ஆனால் முன் கையைப் புகுலைப் பதுபோல் கிறப்பமாகிய ஒரு உறுப்பைப் புகுத வைப்பது ஷர்த்தாயிருக்கும். ஒரு விரலை அல்லது மிகுந்த விரலை புகுநிலைக்கிறது கொண்டு முஸ்தஃமலாகாது.

باب التيمم

பாபுத் தயம்மமு.

தயம்முமில் பேசுகிற பாடம்.

தண்ணீரை விட்டு ஒரு மைல் தூரத்திற்கப்புறப்பட்டவன், அல்லது தண்ணீரைப் பரிமாரினல், வியாதி அதிகப்படுமென்று பயந்தவன், அல்லது வேறே எவ்விதத்திலாவது தண்ணீரைப்பரிமாற திருணி

பெறுதவன் ஒலுவுக்கும் பகரமாக அல்லது முளுக்குக்குப் பகரமாக தயம்மும் செய்வான். அதினுடைய ஷர்த்து ஆறுயிருக்கும்.

ஒன்றுவது நிய்யத்து:— அதாவது, نويت التيمم للصلاة நவைத்துத் தயம்மமு லிஸ்ஸலாதி. தொழுகைக்காகத் தயம்மும் செய்கிறேன் என்பதாயிருக்கும். இரண்டாவது, இடைவிடாமல் முகத்தையும் முழங்கையுள்பட இருகையையும் அடைய வளைந்து தடவுகிறது. மூன்றுவது. மூன்றுவிரல் அல்லது மிகுதி விரலால் தடவுகிறது. நாலாவது, பூமியில் அல்லது அதினுடைய இனத்தில் தயம்மும் செய்கிறது. அஃதாவது மண், மணல், கல், கறை, சுண்ணும்பு, சுருமா, காக்காப்பொன், தாளகம், செம்மண், இவைபோலொத்தவைகளாயிருக்கும். அவைகளில் புளுதி இல்லாவிட்டாலும் சரி. ஐந்தாவது, பூமியும் அதின் இனமும் துப்புறவாயிருக்கிறது. ஆனல் பூமியில் நஜீஸாபட்டு உலர்ந்து அதின் குணம் போய்விட்டாலும், அது தன்னில் துப்புறவாயிருந்தாலும் முஸ்தஃமலான தண்ணீரின் ஹுக்மில் அது யிருப்பதால் அதில் தயம்மும் செய்வதாகாது. அதில் தொழுகிறது கூடும். ஆறுவது, தண்ணீரை இளக்கிருக்கிறது அல்லது, அதைப் பரிமாரத்திராணி பெறுதிருக்கிறது.

அதின்றுக்னெனும் பர்லாகிறது இரண்டாயிருக்கும். ஒன்றுவது, முகத்தையும் இருகையையும் தடவுகிறதற்காக பூமியில் அல்லது அதின் இனத்தில் இருகைகொண்டும் இரண்டு தடவை அடிக்கிறது. இரண்டாவது முகத்தையும், முழங்கைவறை இரு கையையும் அடய வளைந்து தடவுகிறது.

தயம்முடைய ஸுன்னத்துகளாகிறது, இரு முன் கையின் உள் புறத்தாலடிக்கிறதும், அக்கையை முன்னல் பின்னுவிளுக்கிறதும், உதருகிறதும், விரல்களை விடுத்துக்கொள்கிறதும், அவூது பிஸ்மி சொல்கிறதும், தர்தீபாகவும் துடர்பிடியாகவும் செய்கிறதுமாயிருக்கும்.

இனி தயம்முமின் முறித்தலாவது ஒலுவை முறிக்கும் கருமங்களும், தன் ஹாஜத்துக்கதிகமான தண்ணீரின் பேரில் திறுணி பெறுவதும், தயம்மும்செய்ய நேரிட்ட தங்கடம் நீங்குகிறதுமாகும். முஹம்மது றஹிமஹுல்லாஉடைய சொல்படிக்கு புளுதியில்லாத பூமியில் தயம்மும் செய்தால் கைவிரல்களைக் கோதிவிடுகிறதர்க்காக் மூன்று

வது விடுத்தமும் பூமியிலடிக்க வேண்டும். தர்த்திபெனும் ஒளுங் காகிறது, தொடக்கை நீக்குவதற்காக தயம்மும் செய்கிறேனென நிய்யத்துச் செய்து அஊதும் பிஸ்மிலும் ஓதி துப்புறவான இடத்தில் விரல்களை விரித்து உடனே இருகைகளையும் அடித்து அசைத்து எடுத்து புறங்கையால் தட்டி முகத்தில் தடவிக்கொண்டு இரண்டாவதும் அடித்து எடுத்து கையின் நான்கு விரலை வலது கையின் புறத்திலும் உள்ளங்கையை எதிர்புறத்திலும் ஒரு பெருவிரலை மறு பெருவிரல் மீதும் திருப்பி இவ்விதமாகவே வலது கையை இடதுகை மீது திருப்பவும். அடிக்கும்போது மோதிரமிருந்தால் திருப்பிக்கொள்ளவும்.

كتاب الصلوة

கிதாபுஸ்ஸலாத்.

தொழுகையுடைய வருசையை பேசும் பாடம்.

அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபில் திருவுளம்பற்றியிருக்கிறான்.

ان الصلوة كانت على المؤمنين كتابا موقوتا

எஃனீ:—தொழுகையை இஸ்லாமாகிய ஜனங்கள் பேரில் ஐந்து வக்த்தும் தொழும்படி வேத விதியாக்கினேம் என்றும், இன்னும்,

ان الذين امنوا وعملوا الصالحت واقاموا الصلوة
واتوا الزكوة لهم اجرهم عند ربهم ولا خوف عليهم ولا هم يحزنون

எஃனீ:-எனக்கும், என்னுடைய றசூலுக்கும், அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மார்க்கத்திற்கும் ஈமான்கொண்டு சாலிஹான நல் அமல்களைச்செய்து தொழுகையும் நிலைப்பாடாக தொழுது, ஸகாத்தும் கொடுத்து வரும்படியான கூட்டத்தார்களுக்கு உண்மையாக நம்மிடத்தில் பெருமதியான கூலியுண்டாயிருக்கிறது. அவர்களுக்கு கொஞ்சமாவது அஸாபுகளில் நின்றும் பயமில்லை. அவர்கள் கியாமத்து நாளில் சலித்துக் கைசேதப்படமாட்டார்களென்றும் அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கிறான்.

இன்னும் யாராவது ஒரு மனிதன் ஐந்து வக்த்துத் தொழுகையும் இமாமும் ஜமாஅத்துடன் தவறாமல் தொழுதுவருவானேயானால், அவனுக்குத் துன்யாவில் மிடிமைவரமாட்டாது. கபுருடைய அதாபை அவனை விட்டும் நீக்கப்படும். அவனுடைய பட்டோலையை வலது கையிற் கொடுக்கப்படும். (ஸிராத்துல் முஸ்தகீம்) என்னும் பாலம் வாளிலும் கூர்மை, முடியிலும் நேர்மை, வெண்ணெயிலும் மெதுவாக வளைவான (30000)-ம் வருடத்துப் பயணமுள்ள பாலத்தின் பேரில் மின்னல் வெட்டி மறைவதுபோல் கடந்துவிடுவான். சுவர்க்கலோகத்திற்குக் கேள்விகணக்கின்றியும், அதாபின்றி போய்ச்சேருவானென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக (துரத்தெதன்னுங்) கிதாபிலும் வருகின்றன.

ஹதீது:—கியாமநாளில் அல்லாஹுத் தஆலா கல்க்குகளை எழுப்பும்போது சில கூட்டக்காரர்கள் நக்ஷத்திரங்களைப்போல் முகமாக எழுந்திருப்பார்கள். அப்போது மலக்குகள் அவர்களைப் பார்த்து நீங்கள், என்ன அமல் செய்தீர்கள் உங்களுக்கு இவ்வளவு வெகுமதி கிடைத்தது என்று கேட்க, நாங்கள் பூமியிலிருக்கும்போது பாங்குச் சத்தத்தைக் கேட்டவுடன் என்னவேலை இருந்தாலும் அவைகளையெல்லாம், விட்டு விட்டு, உலுச் செய்து தொழுதோமென்று சொல்வார்கள். இன்னும் சில கூட்டக்காரர்கள் சந்திரனைப்போல் முகமாக எழுந்திருப்பார்கள். அப்போது நீங்கள் என்ன அமல் செய்தீர்களென்று மலக்குகள் கேட்பார்கள். நாங்கள் பாங்குச் சத்தங்கேட்கிறதற்கு முன்பாக உலுச் செய்து தொழுகைக்கு தயாராக இருந்தோமென்று சொல்லுவார்கள்.

இன்னும், சில கூட்டக்காரர்கள் சூரியனைப்போல முகமாக எழுந்திருப்பார்கள். அப்போது மலக்குகள் நீங்கள் என்ன அமல் செய்தீர்களென்று கேட்பார்கள். நாங்கள் பாங்குச் சத்தத்தைப் பள்ளிக்குள்ளிருக்கும்போதே கேட்டோமென்று சொல்வார்களென்று நபி நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள்.

இனி ஒரு மனிதன் தொழுகைக்காகத் தக்பீரு கட்டினவுடன் அல்லாஹுத் தஆலா ஆய், மலக்குகளே என்னுடைய இந்த அடிமையின் பாவங்களடங்கலையும் என்னைத் துப்புரவாக் வணங்கின

தற்காக கட்டித்தூக்கி உயர்த்துங்களென்று அல்லாஹுத் தஆலா சொல்வான். உடனே மலக்குகள் அவன் பாவங்களடங்கலையும் ஒரு சுமையாகக்கட்டி ஆகாயத்தில் சுமந்துகொண்டு நிற்பார்கள். இவன் தொழுது ஸலாம் வாங்கினவுடனே எவ்வுயிரையும் படைத்து வளர்க்கின்ற ஆண்டவனே! இச்சுமையைத்திரும்ப இவனிடம் வீட்டு விடவாவென்று மலக்குகள் கேட்பார்கள். அல்லாஹுத் தஆலா மலக்குகளே! என்னுடைய துப்புறவான அடியானை நான் நஜீஸாக்கிறது அழகல்ல, அவன் பாவங்களடங்கலையும் பொறுத்துவிட்டேன். இச்சுமையைத் தூரக்கொண்டுபோய் எறிந்துவிடுங்களென்று சொல்வான். உடனே அச்சுமையைத் தூரக்கொண்டுபோய் எறிந்து விடுவார்கள்.

ரிவாயத்து:— மிஷ்காத்துல் அன்வார் என்னும் கிதாபில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக வந்திருக்கிறதாவது யாதெனில்:—அல்லாஹுத் தஆலா சங்கையாகிய ஹஸ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் படைக்கும்போது அவர்களுக்கு வலதுபுறம் 300-சிறகும், இடதுபுறம் 300-சிறகும், ஒரு சிறகுக்கும் அடுத்த சிறகுக்கு மிடையில் 500-வருடத்து தூரமுண்டு. இவ்விதமான சிறகுகளைக்கொடுத்து அழகு சவுந்தரியமாய், வெள்வர்ணமான ஸூறத்திற் படைத்தான். அதன் பின்பு, தங்கள் அழகைப் பார்த்து, யாரப்பீ என்னைக்காண அழகான ஸூறத்தில் யாரையாவது படைத்திருக்கிறாயாவென்று கேட்க, படைக்கவில்லையென்று அல்லாஹுத் தஆலா திருவுளமானான்.

அப்பால், இதன் ஷுக்ருக்காகத் தக்பீரு கட்டி, ஒரு ரக்அத்துக்கு 20,000-வருடம், இரண்டாம் ரக்அத்துக்கு 20,000-வருடம் நின்று தொழுது, ஸலாம் வாங்கினார்கள். இந்த இபாதத்தைக் குறித்து அல்லாஹுத் தஆலா திருவுளமானான்; ஆய் ஜிப்ரீலே! நீர் என்னை நிறப்பமாக வணங்கினீர். இப்படி ஒருவரும் என்னை வணங்கவேயில்லை யென்கினும், ஆகிர் ஸமானில் என் கிருபை றஹ்மத்துப்பொருந்திய முஹம்மதென்று ஒரு நபியை வெளிப்படுத்துவேன் அவர் உம்மத்தில் மிகுந்த பெலக்கேடாகிய ஹயாத்துங் குறைந்த பாவியான ஒரு அடியான். அவன் கல்பு ஒத்துமையில்லாமல் பலவித கப்லத்து மறதியுடன் சொற்பநேரத்தில் இரண்டு ரக்அத்து எனக்காகத்தொழுவான். அத்தொழுகை உம்முடைய 40,000-

வருடந்துத் தொழுகையைக்காண நம்மிடம் ஏற்றமாக விருக்குமென்றும், அவனுக்கு மஃவா என்கிற சொர்க்கத்தைக் கொடுப்பேனென்றும் திருவுளம்பற்றினுன்.

அந்தச் சொர்க்கத்தை நான் பார்க்கவேணுமென்று ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் கேட்க, பார்க்கும்படி உத்திரவு செய்தான். அப்பால், தங்கள் 600-சிறகுகளையும் ஒவ்வொரு தரம் விரித்தால் 3000-வருடத்துப் பயணத்தையும், தங்கள் ஜடலத்தோடு சிறகை சேர்த்தால் 3000-வருடத்து பயணத்தையும் கடந்து விடுவார்கள். இவ்விதமாக 300-வருடம் ஆகாயத்தில் பறந்ததில், அந்தச் சொர்க்கத்துடைய முடிவு எத்தாமல் பறக்கவும், தாகத்தில்லாமல், ஒரு மரத்தின் நிழலில் இறங்கி ஸுஜூதுசெய்து யாரப்பி! அந்தச் சொர்க்கத்தில் கால்வாசி, அல்லது மூன்றிலொன்ருவது பறந்திருப்பேனுவென்று கேட்க, அல்லாஹுத்தஆலா திருவுளமானுன், ஆய் ஜிப்ரீலே உமக்கு முன் கொடுத்த குவ்வத்தைப்போல இப்போது கொடுத்து 200-வருடம் பறக்கும்படி செய்தாலும், அந்தச் சொர்க்கத்தில் பத்திலொருபாகத்தை பெத்தமாட்டீரென்று அல்லாஹுத்தஆலா திருவுளம்பற்றினுன்.

ஹதீது:—வஸ்துகள் அடங்கலுக்குந் தூணுண்டாயிருக்கிறது. அதுபோலே தீனுக்குத் தூணுகிறது தொழுகையாயிருக்குமென்றும், அத்தொழுகையை யாதாமொருவன் சரிபாடாகத் தொழுது வருவானுகில் திடனுகத் தீனைத்தரிபடுத்தி வைத்தவனுவான். தொழுகையை விடுவானுகில் திடனுக தீனை யிடித்தவனுவானென்று இருலோகத்திற்குஞ் ஸர்தாருகிய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம்பற்றினதாக (இர்ஷாதில்) வருகிறது.

இன்னும் துர்ரத்துன்னுஸிஹீனென்னுங் கிதாபில் வருகின்றது, ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களுடைய முபாரக்காகிய ஹதீதிலே திருவுளம் பற்றினதாவது, யாதெனில், தொழுகையாகிறது, அல்லாஹுத் தஆலாவின் பொருத்தத்தையும், மலக்குகளுடைய முஹப்பத்தையும், ஈமானுடைய ஒளியையும், துஆவுடைய கபூலையும், ஷைத்தானுடைய பொருத்தக்கேட்டையும் உண்டாகும். இன்னும், வியாபார பாக்கத்தையும், முதலுடைய லாபத்தையும் அதிகமாக்கும். இன்னு , இவனை

நரகத்தைவிட்டும் சாக்கும்படியாகிய கேடகமாகவும், கபுருடைய இருட்டுக்கு விளக்காகவும், ஆகிவிடும். இன்னும், மீசானென்கிற திராசில் நன்மையை அதிகப்படுத்தி ஸிறாத்துல் முஸ்தகீமென்னும் பாலங்கடக்கும்படி உதவிசெய்து சுவர்க்கபதி சேர்க்கிறதாயிருக்கும். ஆதலால் எமது பிறவி நேசர்களாகிய தீன்தார்களே இப்பேர்க்கொத்த மேன்மையாகிய தொழுகையைக் கலாவிடாமல் ஐந்தொகுத்துந் தொழுது வருவீர்களாகவும். அல்லாஹுத் தஆலா நம்மவ் யாவருக்கும் பிழைபொறுத்துக் கிருபை செய்வானாகவும்.

ஹிக்காயத்து:—ஹஸரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஓர் சமுத்திரத்தின் வழியாய் போகும்போது அவ்விடத்தில் ஓர் பறவையானது மிகுந்த அழகு சவுந்திரிய முடையதாயிருந்துக்கொண்டு அங்குள்ள சேற்றில் விழுந்து தன் சரீரமெல்லாம் சேறுக்கிக்கொண்டு வெளியே வந்து மறுபடியும் தண்ணீரில் முழுகவும் மேலிலொட்டியிருந்த சேருகளெல்லாம் அத்தண்ணீரில் கழுகூண்டுபோய் பின்னும் தன்னுடைய முன்னிருந்த வடிவாகிய நிறத்தில் வருகிறது. பின்னும் அப்பறவை அச்சேரில் விழுகிறதும் தண்ணீரில் முழுகிறதுமாக இப்படி ஐந்து தரம் செய்ய அதை கண்ணில் கண்டு ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஆச்சரியப்பட்டு நின்று புதுமையாக பார்க்கும்போது உடனே ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் இறங்கி ஓ ஈஸா ரூஹுல்லாவே இப்பறவையின் அபிப்பிராயம் என்னவென்றால் அப்பறவை எப்படி ஐந்து தரம் சேற்றில் விழுகிறது பிறகு ஐந்து தரம் எப்படி தண்ணீரில் மூழ்கி தன் மேனியிலிருந்த சேறுகளை கழுகி விட்டதோ அப்படி போலவே முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முபாறக்காகிய உம்மத்துகளில் எவன் ஐந்து நேரத்துத் தொழுகையும்விடாமல் தொழுதுவருவானோ அவனுடைய பாவங்களெல்லாம் அவன் தொழுகையை தொழுது முடியு முன்னமே அவனை விட்டு கழுகுண்டு போய் எப்படிப்பட்ட நன்மையை அந்த தொழுகையால் பெற்றுக்கொள்கிறானென்றால் ஏழு வானத்தையும் பூமியையும் காகிதமாகவும், ஏழு கடல் நீரையும் மையாகவும் ஆக்கப்பட்டு லோகங்களிலுள்ள விருக்ஷங்களெல்லாம் கலம் செய்யப்பட்டு மலக்குகள் ஜின்கள் மனிதர்களெல்லாம் காதிபாக இருந்து அதன் நன்மையை எழுதினாலும் அத்தொழுகையின் பலனையும் வருசையையும் பிரயோஜனத்தை

யும் அதனால் அல்லாஹுத் தஆலா செய்யும் றஹ்மத்தையும் இவ்வளவென்று மட்டிட்டு எழுதமுடியாது. இதை தொழுகிறவன் இவ்வளவு பலனையும் பெற்றுக் கொள்கிறான் என்று ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அறிவித்தார்கள். ஆகையால் முஃமின் முஸ்லிமாகிய ஆண் பெண் கூட்டத்தார்களே நீங்கள் பூலோகத்தின் மயக்கத்திலும் ஆசையிலும் விழுந்து கெட்டவியாமல் அவைகளை விட்டு சீக்கிறமாக உங்களுடைய முகத்தை அல்லாஹுத் தஆலாவின் பால் திருப்பி ஐந்துவேளை தொழுகையையும் தவறாமல் ஆசையோடுதொழுது வாருங்கள்.

ஹதீது:—நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளம்பற்றினார்கள். நாளை கியாமத்துநாளில் மனிதர்கள் கப்றை விட்டு எழும்பும்போது மலக்குகள் வந்து அந்த மூமினாகிய மனிதர்களின் தலை மீது ஒட்டியிருக்கின்ற மண்ணுகளைத் துடைப்பார்கள் நெற்றியின் மண்ணைத் தவிர மற்ற மண்ணுகளெல்லாம் உதிர்ந்து விடும் நெற்றியின் மண்ணையும் துடைத்துத் துடைத்துப்பார்ப்பார்கள் அதுபோகமாட்டாது. அப்போது ஓ மலக்குகளே! இந்த மண்ணைத்துடைத்தால் அதுபோகாது இது அவர்களின் கப்ரின் மண்ணல்ல. அவர்கள் எந்த இடத்தில் தொழுதார்களோ அந்த மிஹ்றாபின் தலத்தின் மண்ணாகும். சொர்க்க லோகத்தில் அவர்கள் என்னுடைய காதிமுகளென்பதை அறியப்படுவதற்காக அவர்கள் நெற்றியில் இருக்கிறது அதை விட்டு விடுங்கள் என்று ஒரு சப்தம் உண்டாகும் உடனே மலக்குகள் விட்டு விடுவார்கள்.

ஹிக்காயத்து:—ஹலரத் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் ஒரு சாலிஹான பெண் மாவைக்குழைத்து றொட்டி சுடுகிறதற்காக ஒட்டில் போட்டு அடுப்பில் வெந்துகொண்டிருக்கும் போது தொழுகையின் வக்து வந்து விட்டதால் தொழுகைக்காக உடனே தக்பீற் கட்டித் தொழுதுக்கொண்டு நிற்கும்போது இப்லீஸ் லஃனத்துல்லாஹி ஓர் பெண்பிள்ளையின் வடிவாய் இப்பெண்பிள்ளையினிடம் வந்து ஆப் பெண்பிள்ளையே! நீ அடுப்பிலிட்டறொட்டி வந்து கரிந்து போய்விட்டது என சொல்ல சற்றேனும் கவனியாது தொழுகையின் வேலையிலேயே ஒரே பக்தியாக இருந்து விட்டாள் உடனே இப்லீஸ் கோபமாகி தொட்டிலில் தூங்கின அவளுடைய பாலகனை எடுத்து அடுப்பில் ஆக்கினான். அப்போதும் அப்பெண்பிள்ளை

திரும்பிப் பார்க்கவே இல்லை. அப்பால், அவள் புருடன் வெளியி லிருந்து வீட்டுக்குள் வர குழந்தை அடுப்பிலிருந்துத் தீகங்குகளை கொண்டு விளையாடுகிறதையும் அல்லாஹுத் தஆலா அக்கங்குகளை சிவந்த மாணிக்கமாக ஆக்கியிருக்கிறதையும் கண்டு மிகவும் ஆச்சரிய முற்று வெளியில் வந்து இச்செய்தியை ஹஸ்ரத் ஈஸா ரூஹுல்லாஹி இடத்தில் அறிவித்தனர். அதற்கு அப்பெண்பிள்ளையாகிய உமது மனைவியை அழைத்து வாருமென சொல்லக்கேட்டு அதுபோல் தன் மனைவியை ஹாஸிருக்கினார். அப்பெண்ணிடம் நீ செய்த நல் அமல் என்னவென நபியவர்கள் கேட்டார்கள். அதற்கு றூஹுல்லாவே! நான் உலு முறியுந்தோறெல்லாம் மறுபடி உலு செய்து துப்புரவாக எப்போது மிருக்கிறதும், தவிற தொழுகையை ஒரு நேரமும் விடு கிறதேயில்லை. ஒருவர் அல்லாவுக்கு பொருத்தமான ஒரு ஹாஜத் தைக் கேட்டால் நிறைவேற்றாதிருக்கிறதில்லை. ஹயாத்தானவர் களில் என்னை யாராவது வருத்தப்படுத்தினால் மவுத்தானவர்கள் இவர்களில் நின்றும் நோவினையை சுமந்துக்கொள்கிறதுபோல நானும் அந்த நோவினையை சுமந்துக் கொள்வேன் எனச் சொன்னார். அதைக்கேட்டு ஹஸ்ரத் அவர்கள் இந்த காரியங்கள் நபிமார்களு டைய செய்கையாயிருக்கும். இவள் ஆண்பிள்ளையாய் பிறந்திருப் பாளாகில் ஒரு நபியாக ஆகிவிடுவாள் என்று அறிவித்தார்கள்.

ஹதீது:—நம்மள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களுடைய முபாரக்காகிய ஹதீதில் திரு வுளம்பற்றியிருக்கிறார்கள், தொழுகையாகிறது அல்லாஹுத் தஆலாவின் பொருத்தத்தையும், மலக்குகளுடைய முஹப்பத்தையும், ஈமானுடைய ஒளிவையும், துஆவுடைய கபூலையும், ஷைத்தானுடைய பொருத்தக்கேட்டையும் உண்டாக்கும். இன்னும், வியாபார பறக்கத் தையும், முதலுடைய லாபத்தையும் அதிகமாக்கும். இன்னும், அவனை நரகத்தை விட்டும் காக்கும்படியாகிய கேடகமாகவும், கப்ரு டைய இருட்டுக்கு விளக்காகவும் ஆகிவிடும். இன்னும் மீஸா னென் கிற திராஸில் நன்மையை அதிகப்படுத்தி ஸிறாத்துல் முஸ்தகீமென் னும் பாலம் கடக்கும்படி உதவிசெய்து சுவர்க்கப்பதி சேர்க்கிறதா யிருக்கும் என்று துர்ரத்துன்னாஸிஹீனில் எழுதப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:—ஹஸ்ரத் கதாதா (றலி) ஸஈது (றலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச்செய்ததாவது:—ஹஸ்ரத் நபி தானியால் அலை ஹிஸ்ஸலாம் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாற்றைச் சொல்லி அநேகமாக அவர்களைப் புகழ்ந்து அந்த முஹம்மது நபியுடைய உம்மத்துகள் சில தொழுகையை தொழுது வருவார்கள். அத்தொழுகையை நூஹ் நபி அலைஹிஸ் ஸலாமுடைய கவ்முகள் தொழுது வந்திருப்பார்களாகில் அவர்களுக்கு விடப்பட்ட பலாய்களான தூபானென்னும் வாந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கி நாசமாகமாட்டார்கள். இன்னும் அத்தொழுகையை அதினுடைய வம்ஷத்தார்கள் தொழுது இருப்பார்களாகில் அவர்கள் பேரில் அனுப்பப்பட்ட ரீஹுல் அகீம் ريح العقيم என்னும் மலட்டுகாத்து அவர்கள் பேரில் அணுகி கெட்டுப்போக மாட்டார்கள். இன்னும் அத்தொழுகையை ஸமூதுக்கிளையார் தொழுதயிருப்பார்களாகில் அவர்களுக்கு நேரிட்ட ஸைஹதென்னும் அபய சத்தம்தொட்டு அளிவடைய மாட்டார்கள். இவ்விதமான வரிசையும் மேன்மையும் பொருந்திய தொழுகையை இந்த முஹம்மது நபியுடைய உம்மத்துகள் தொழுதுவருவார்களென அக்காலத்தின் ஜனங்களுக்கு அறிவித்தார்கள். இச்செய்தியை கதாதத்து றலியல்லாஹு அன்ஹு ஜனங்களுக்கு சொல்லி மறுபடியும் முஸ்லிமான ஜனங்களை நோக்கி நீங்கள் தொழுகையை பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். அதை இவ்விதமான பதவியுடனே படைக்கப்பட்டு மூமினான ஜனங்கள் மோக்ஷப்பதவி அடைவதற்காகவும், ஸலாமத்து பெறுவதற்காகவும், அல்லாஹுத் தஆலா அவர்கள் பேரில் ஹுக்மு செய்திருக்கிறான் என சொன்னார்கள் என தன்பீஹுல் காபிலீனில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆதலால் முஸ்லிமான உடப்பிறப்புகளே! உங்களின் கூர்மையான கல்பால் இந்த சங்கையான தொழுகையின் தராஜாவை ஆசை வைத்து இப்லீசுடைய மாயவலையில் சிக்கி தொழுகையை தவற விடாமல் ஐந்து வக்து தொழுகையையும் பேணுதலாக தொழுது வந்து அதன் நன்மையை அடைவீர்களாக, ஆமீன்,

فصل في تارک الصلوة

தொழுகையை விடுகிறவர்களுக்குண்டாகும் வேதனையின் விவரம்.

அல்லாஹுத் தஆலா குருஆனில் திருவுளமாயிருக்கிறுன்.

فخلف من بعدهم خلف اضاعوا الصلوة واتبعوا الشهوات فسوف
يلقون غيا . الامن تاب وامن وعمل صالحا فاولئک
يدخلون الجنة ولا يظلمون شيئا

எஃனீ:—சாலிஹான அவ்லியாக்கள் பெரியோர்களுக்குப் பின்பு சில கூட்டக்காரர்கள் உண்டாவார்கள் அவர்கள் யாரெனில், தொழுகையை பிற்படுத்துகிறதும், ஒரு வக்து விட்டு ஒரு வக்து தொழுகிறதும், அறவே தொழுகாமல் இருக்கிறதும் துன்யாவுடைய சுகங்களை ஹலாலென்றும் ஹறாமென்றும் அறியாமல் மனம் போன போக்கில் நடக்கிறதுமாக இருப்பார்களே அந்தக் கூட்டக்காறர்களாக இருக்கும். அவர்களை கய்யென்னும் கடினமாகிய நரகத்தில் தள்ளப்படும். அது எப்போல் கொத்த நரகமானுல் ஜஹன்னமென்கிற நரகத்தின் ஓடைகள் அதை விட்டும் காவல் பாடு தேடுமே அவ்விதமான ஓடையாயிருக்கும். ஆனுல் தௌபாசெய்து ஈமான்கொண்டு சாலிஹான நல் அமல்களை செய்தார்களே அப்பேற்கொத்தக் கூட்டக்காறர்களைத் தவிற அவர்களை சொர்க்கலோகத்தில் சேர்க்கப்படும். அவர்கள் செய்த நல்அமலின் கூலிகளை அணுவாவது குறைக்கப்படாதென்று அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றினுன்.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளமானுன்.

فويل للمصلين الذين هم عن صلاتهم ساهون الذين هم
يراؤن ويمنعون الماعون ،

இன்னும் கேடாகிறது, ஒரு சொல்படி கடினமாகிய அஸாபு காஃனீ துன்யாவுடைய மலைகளை அதிலிடப்பட்டால் அதன் கொடூரமான காந்தியால் அம்மலைகள் உருகி சாம்பலாய் நீறிவிடுமே அவ்வளவு கடுமையான அக்கினியுடைய ஓடையின் அஸாபாகிறது சில மனிதற்களுக்காக இருக்கும். அவர்கள் யாரென்றுல் அந்தந்த தொழுகையின் வக்தில் தொழாமல் பெர்டும் போக்காக மறந்துவிட்டு வக்து

போனபின் தொழுதுவருவார்கள், மனிதர்களின் முகந்தாக்ஷிணையை விரும்புவார்கள், இன்னும் ஊசி, கிடாரம், பீங்கான், மண் வெட்டி, கோடாலி, இவைபோல் இரவல் கொடுத்து வாங்கப்பட்ட சாமான்களையும், தண்ணீர், நெருப்பு, உப்பு இவைபோல் அர்ப்பவிலையுள்ள வஸ்த்துக்களையும் கொடாமல் விலகி கொள்வார்களே அந்த ஜனங்களாயிருக்குமென்று அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றினன். இக்வான்களே! தொழுகையின் நேரத்தைத்தப்பி விட்டுவிட்டு தொழுகிறவர்களுக்கு இந்த அஸாபாகவிருந்தால் நாள் கணக்கில், வாரக்கணக்கில், மாசக்கணக்கில், வருடக்கணக்கில் தொழுகையை விட்டுவிடுகிருர்களே அவர்களுக்கு எவ்வளவு கடினமான அஸாபும் துன்பமும் உண்டுமென உங்களின் தெளிவான புத்தியால் ஆராயுதல் செய்து உற்றுணர்ந்து பாருங்கள்.

ஹதீது:—யாதாவது, ஒரு மனிதன் பாங்குச் சத்தத்தைக் கேட்டுத்தொழுகைக்கு உடனே வரவில்லையானல் அவனை அல்லாஹுத் தஆலா கைசேதப்பட்ட கூட்டத்தாருடன் எழுப்புவான். அவனை நரகத்திலே தள்ளி நரகவாதிகளின் ஊன் வெந்நீரை அவன் காதில் ஊற்றி, அடா! அல்லாஹுத் தஆலாவின் தொழுகைக்காக பாங்கு சொன்னதைக்கேட்டு நீ வராமலிருந்தாயே! அதற்காக இப்பேர்கொற்ற துன்பமான அதாபைப் பெற்றுக்கொள்ளென்று மலக்குகள் சொல்லி அதாபு செய்வார்கள். இந்த ஹதீது நபிநாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினதாக உமறிபுனு கத்தாபு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். இன்னும் தாய்தகப்பனை நோவினை செய்கிறவன் பேரிலும், கள்ளுக் குடிக்கிறவன் பேரிலும், தொழுகையை விடுகிறவன் பேரிலும் என்னுடைய ஷபாஅத்து இல்லையென்று நபிநாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளினதாக ரயாஹீன் என்கிற கிதாபில் வந்திருக்கின்றது.

இன்னும் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது யாதெனில், ஒருமனிதன் எனக்கும், அல்லாவுக்கு மிடையில் ஒரு ரகசியமிருக்கிறது, அந்த ரகசியத்தால் என்னைவிட்டு தொழுகை விழுந்து விட்டதென்று சொல்லுவானேயானல் அவனை வெட்டுகிறது வாஜிபு என்கிறதில் கொஞ்சமாவது ஷக்கில்லை, அவனை வெட்டுகிறது நூறு காபிர்களை வெட்டுகிறதைக் காண ஏற்றமாகவிருக்கும். இச்செய்தி இருஷா தென்கிற கிதாபில் வருகின்றது.

ரிவாயத்து:- நம்முடைய நாயகம் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினதாக அர்பயீன் என்கிற கிதாபில் சொல்லியிருக்கிறது யாதெனில், ஜஹன்ன மென்கிற நரகத்திலே ஒரு ஓடையிருக்கிறது அந்த ஓடையைவிட்டும், எங்களை காத்துக்கொள்ளென்று நாளொன்றுக்கு எழுபதினயிரம் தரம் நரகத்தையுடையவர்கள் காவல் தேடுகிறார்கள். அந்த ஓடையில் நெருப்பினாலே ஒரு வீடு இருக்கிறது, அந்த வீட்டிலே நெருப்பினால் ஒரு கிணறு உண்டாயிருக்கிறது, அந்த கிணற்றில் ஒரு பெட்டக முண்டாயிருக்கிறது, அந்தப் பெட்டகத்தில் நெருப்பினால் ஒரு பாம்பு உண்டாயிருக்கிறது, அந்தப் பாம்புக்கு ஆயிரம் தலை உண்டாயிருக்கிறது, அந்தத் தலைகளில் ஒவ்வொரு தலைக்கும் ஆயிரம் முகமுண்டாயிருக்கிறது, அந்த முகங்களில் ஒவ்வொரு முகத்திற்கும் ஆயிரம் வாயுண்டாயிருக்கிறது, அந்த வாய்களில் ஒவ்வொரு வாய்க்கும் பதினயிரம் பல்லுகளுண்டாயிருக்கிறது, அந்தப்பற்களில் ஒவ்வொரு பல்லின் நீளம் ஆயிரம் முழமுண்டா யிருக்கிறதென்று நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

இவ்விதந் திருவுளமானதைக் கேட்டு அனஸிபுனு மாலிகு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிநாயகம் அவர்களைப்பார்த்து அல்லாஹுத் தஆலாவின் றஸூலே! இவ்விதமான அதாபுகள் யாருக்காக இருக்குமென்று கேட்டதற்கு நபிநாயகமவர்கள் அனஸிபுனு மாலிக்கவரைப் பார்த்து, அந்த அதாபானது தொழுகையை விட்டவனுக்கும் கள்ளு சாருயங் குடிக்கிறவனுக்கு மாயிருக்குமென்று திருவுளமானார்கள், ஆதலால், எமது இகுவான்களாகிய நேசர்கள் தொழுகையை விடுகிறதினால் இப்படிக்கொத்த கடிசான தெண்டனையும், அதாபு முண்டாகிறதைப்பயந்து தொழுது வருவீர்களாக.

இன்னும் சகலபடைப்புகளையும் படைத்து ஊணுணவு முதலானவைகள், அவைகளின் தாதரப்படி கொடுத்து இரட்சித்துக் காக்கா நின்ற வல்லபத்தின் வல்லபம் பூண்ட அல்லாஹுத் தஆலா தானிறக்கிய நமது புருக்கானென்ற சிறப்புற்ற வேதத்திலே தொழுகையைப் பற்றி 336-ஆயத்துகள் வெட்ட வெளிச்சமாக அனுப்பி இருக்கிறான். அதாவது, தொழுதுகொள்ளுங்கள், தொழுதுகொள்ளுங்க

ளென்று மடக்கிமடக்கிச் சொல்லியிருக்கிறான். அப்படியிருக்க நாம் அந்தச்சொல்லின், பிரகாரம் நடக்காமல் விட்டுவிடுகிறோம்.

ஆனால் பாருங்கள் அல்லாஹுத்தஆலா படைத்தமனிதர்களில் நின்றும் ஒரு அதிகாரி தெருக்களிலே யாதாமொரு குப்பைகள் செத்தைகள் கிடக்கப்படாதென்றும், போடக் கூடாதென்றும், துப்புரவாக வைக்கவேணுமென்றும், தாக்கீது அனுப்பிவைத்துத் தண்டோரா அடித்தால் அதற்காக எவ்வளவு பயத்துடன் சீக்கிரமாய் நாமும் செய்து நம்முடைய பந்து முதலான அடுத்தவீட்டு ஜனங்களையும் செய்யும்படி ஏவுகிறோம். அப்படியிருக்க அதிகாரிகட்கெல்லா மதிகாரியாகிய கடவுளான அல்லாஹுத் தஆலா அனுப்பிய ஆயத்தின் படிக்கு நாம் நடக்காமல்போனால் கியாமத்து நாளையிலே எந்த முகங் கொண்டு அல்லாஹுத் தஆலாவைச் சந்திக்கிறது; என்ன ஜவாபு சொல்லுகிறது, ஸுப்ஹானல்லா, அல்லாஹுத் தஆலா குர்ஆனில் பீஸபீலுடைய படைக்களத்திலுந் தொழுகையைத் தவறவிடாமற் தொழும்படி தாகீது செய்திருக்கிறான்.

احكام الصلوة

தொழுகையின் ஹுக்முகள்.

தொழுகையாகிறது, ஆகில் பாலிகாகிய முஸ்லிமான ஆண் பெண்ணடங்கல் பேரிலும் ஐந்து வக்து தொழுகை பர்ளு ஐனு யிருக்கும். ஒருவனுக்கொரு குழந்தை பிறந்து ஏழு வயதானவுடன் அக்குழந்தைக்குத் தொழுகை முதலானவைகளைப் படித்துக் கொடுத்து தொழுகும்படி ஏவுங்கள். அக்குழந்தை பத்து வயதாகிறவரை தொழுகா விட்டால் அதின் பேரில் அடியுங்களென்றும் நபிநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள். ஆகையால் பிள்ளைகளுக்கு பத்து வயதானவுடன் அதுகளைத் தொழும்படி ஏவுகிறது தாய் தகப்பன்பேரில் வாஜிபாயிருக்கும்.

ரிவாயத்து:—ஒரு குழந்தைக்கு மூன்று வயதாகிவிட்டால் லாஇலாஹ இல்லல்லாஹு வென்று எழு விடுத்தமும், மூன்று வயதும் ஏழுமாதமும் இருபதுநாளும் சென்றால் முஹம்மதுர் றசூலுல்லாஹி என்று எழு விடுத்தமும் சொல்லிக்கொடுக்க வேண்டும். நாலாவது

வயதில் ஸல்லல்லாஹு அலா முஹம்மதின் வஆலிமுஹம்மத் என்றும் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஐந்தாவது வயதில் வலமிடம் தெரிந்தால் கிப்லாப் பக்கம் முகத்தைத் திருப்பி ஸுஜூது செய்ய ஏவவேண்டும். ஆறும் வயதில் ருகூவு ஸுஜூது விபரம் தெரிவித்து தொழுகும்படி காட்டிக்கொடுக்க வேண்டும். ஏழாம்வயதில் முகம் கை கழுகும்படிசொல்லி தொழுகும்படி ஏவவேண்டும். ஒன்பதாம் வயதில் உலுவைச் சரிவரப்படித்துக் கொடுத்து உலுச் செய்து தொழுகும்படி ஏவவேணும். மறுத்தால் அடித்து ஏவவேண்டும். உலுவையும் தொழுகையையும் படித்துக்கொள்ளுமானால் அக்குழந்தையின் தாய் தகப்பன் மார்கள் குற்றத்தை ஆண்டவன் பொறுப்பான். இன்ஷா அல்லாஹ். இவ்விதம் அபூ ஜஃபற் றலியல்லாஹு அன்ஹு சொன்னதாக அப்துல்லாஹிப்னு பலாலா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

இனி ஐந்து வக்திலும் பதினேழு றக்அத்து பர்லாகும். அதாவது:—பஜ்ரில் இரண்டு றக்அத்தும், லுஹரில் நாலு றக்அத்தும், அஸரில் நாலு றக்அத்தும், மக்ரிபில் மூன்று றக்அத்தும், இஷாவில் நாலு றக்அத்துமாகும். இஷாத் தொழுத பின் வித்று மூன்று றக்அத்து வாஜிபாகும். ஆனால் முஸாபர் நாலு றக்அத்துள்ள தொழுகையை இரண்டு றக்அத்தாக சுருக்கித் தொழுவான். அதன் விவரம் பின்னால் வரும்.

باب الأوقات

பாபுல் அவ்காத்.

தொழுகையின் வக்துகளைப் பேசும் பாடம்.

பஜ்ருத் தொழுகையின் வக்தாவது:—கிழக்கே மெய் வெள்ளை கிறினது முதல் பொழுது உதயமாகிறதற்குச் சற்றுமுன் வரையிலாயிருக்கும். ஆனால் ஆண்பிள்ளைகள் பஜ்ருத் தொழுகையை நிலம் தெளிந்து தொழுகிறது முஸ்தஹப்பு. பெண் பிள்ளைகள் இருளிருக்கும்போதே தொழுகிறது ஏற்றமாகும். பஜ்ருடைய பர்லுக்கு முன் இரண்டு றக்அத்து சுன்னத்து.

லுஹருடைய வக்தாவது:—மதியத்தில் சூரியன் சற்று மேற்கே திரும்பியது முதல் ஒரு வஸ்து உடைய உச்சிசாய்வு நிழலைத் தவிர அவ்வஸ்துவின் இருபங்கு நிழல் கிழக்கே சாய்கிற வரையிலுமாகும். வெயில் காலத்தின் லுஹரை இமாம் ஜமாஅத்து தவறுவிட்டால் கொஞ்சம் பிற்படுத்துகிறது முஸ்தஹப்பாகுமென்பதில் ஒருபங்கு சாய்கையை எத்துமுன் தொழுகவேண்டும். திட்டமாக இமாம் ஜமாஅத்துத் தப்புகிறதானல் பிற்படுத்துகிறது ஹறாம். ஜும்ஆத் தொழுகையைப் பிற்படுத்துகிறது முஸ்தஹப்பல்ல. மாரிகாலத்திலும், பனிகாலத்திலும், மேகமில்லாத நேரத்தில் லுஹரை முற்படுத்துகிறது முஸ்தஹப்பு. மேகமிருந்தால் பிற்படுத்துவது முஸ்தஹப்பாகும். அந்தவக்தில் பர்லுக்குமுன் நாலு றக்அத்தும் பின் இரண்டு றக்அத்தும் சுன்னத்து.

அஸ்ரின் வக்தாகிறது:—உச்சி நிழலைத் தவிர இரு சாய்கையானது தொடுத்து சூரியன் அடையும் வரையிலாகும். ஆனல் காலமடங்கலிலும் மஞ்சவெயில் இறங்காமல் இருக்கிற வரையில் பிற்படுத்துவது மேகமில்லாதிருக்கும் நேரத்தில் முஸ்தஹப்பு, மேகமிருந்தால் அவ்வல் வக்திலே தொழுகிறது முஸ்தஹப்பாகும்.

மக்ரிபுடைய வக்தாகிறது:— பொழுதடைந்தது முதல் செம்மேகம் மூறையும் வரையிலுமாகும். எக்காலமும் மக்ரிபை முற்படுத்துவது முஸ்தஹப்பாகும். அதில் பர்லுக்குப்பின் இரண்டு றக்அத்து சுன்னத்து. இன்னும் ஸலாத்துல் அவ்வாபீன் எனும் தொழுகை ஆறு றக்அத்து நபில் தொழுகிறது முஸ்தஹப்பு. இப்னு உமர் றலியல்லாஹு அன்ஹும் அவைத்தொட்டும்பேசிவரப்படுகிறது, எவனொருவன் மக்ரிபுக்குப்பின் யாதொரு பேச்சும் பேசாமல் ஆறு றகஅத்து தொழுது வந்தால் அதின் பொருட்டால் அவனுடைய ஐம்பது வருடத்து சிறுபாவத்தை அல்லாஹுத் தஆலா பொருப்பானென நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம் பற்றினர்கள். வேறொரு ரிவாயத்தில் அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வந்திருக்கிறதாவது, யாதொருவன் மக்ரிபுக்கு பின்னல் இருபது றக்அத்து தொழுது வந்தால் அவனுக்கு அல்லாஹுத் தஆலா சொர்க்கத்தில் ஒரு கட்டிடம் கொடுப்பானென்றும், இன்னுமொரு ரிவாயத்தில் மக்ரிபுக்குப்பின் அவ்வாபீன்

தொழுகையென்று நிய்யத்துச் செய்து பாத்திஹாவுக்குப்பின் ஆயத்துல் குர்ஸி ஒரு தடவையும், ஷஹிதல்லாஹு அன்ஹு என்னும் ஆயத்து இஸ்லாம் வரையி லொருதடவையும், குல்ஹு வல்லாஹு அஹத் நாலு தடவையும், குல் அஊது பிறப்பில் பலக், குல்அஊது பிறப்பின்னுஸ், ஒவ்வோர் தடவையும், ஓதி இவ்விதம் ஆறு றக்அத்தை தொழுது வந்தால் அவனைக் கியாமநாளில் சொர்க்கத்தின் அவ்வாபீன் எனும் வாசலானது தன்னளவிலழைக்குமென்று வருகிறது. இன்னும் அவ்ருது இஹ்ஸாமெனனும் கிதாபில் வருகிறது, ஸலாத்துல் அவ்வாபீன் 20-றக்அத்தென்றும் ஒவ்வொரு றக்அத்திலும் பாத்திஹா ஒருதரம், இக்லாஸு மூன்றுதரம் ஓதித்தொழுது ஸலாம் வாங்கி ஸலவாத்து நூறு தரம், இஸ்திக்பார் நூறுதரம், ஓதினல் அவன் கப்ரை பிரகாசமாக்கி, சுவர்க்க வாசலை திறக்கப்படுமென்று வருகிறது.

இஷாவின் வக்தாகிறது:—செம்மேகம் மறைந்தது முதல் கிழக்கு வெளுக்கிற வரையிலாயிருக்கும். மாரிகாலத்தில் இரவில் மூன்றிலொருபங்குவரையில் இஷாவைப் பிற்படுத்துகிறதும், கோடை காலத்திலும், மேகத்துடைய நாளையிலும் வக்துபுகுந்தது திட்டமான உடன் அவ்வல் வக்திலே முற்படுத்துகிறது முஸ்தஹப்பு. இதில் பற்லுக்குப்பின் இரண்டுறக்ஆத்து சுன்னத்து. இஷாவுக்குப்பின் தொழுகிற வித்ரை மெய்வெள்ளை கீற முன் நிச்சயமாக முளிப்பதை அறிந்தவன். இரவின் கடைசிவரை பிற்படுத்துவது முஸ்தஹப்பு. அப்படிக் கில்லையானல் நித்திரை செய்யுமுன் தொழுகவேண்டும். இஷாவுக்குமுன் நித்திரை செய்கிறதும், இஷாவுக்குப் பின்னும் பஜ்ருசாதிக்கும் ஷெ தொழுகைக்கு மிடையிலும் ஆகுமான பேச்சுப் பேசுவதும் மக்ரூஹாயிருக்கும்.

ஹறுமான வக்தின் பயான்:—ஹறுமான வக்தாகிறது சூரியன் உதயமாகி ஒரு வல்லயப் பிறமாணம் உயர்கிறநேரம்வரையிலும், சூரியன் உச்சியிலிருக்கும்போதும், சூரியன் மஞ்சணித்து அடைகிற வரையிலு மாயிருக்கும். இம்மூன்று வக்திலும் கலாத் தொழுகை, நப்லுத் தொழுகை, ஜனசாத் தொழுகை, திலாவத்தின் ஸஜதா இது போலொற்றது யாதொன்றும் செய்யலாகாது. செய்தாலும் கூடாது. ஆனல் அன்றைய அஸ்ருத் தொழுகை பிந்தி விட்டால் சூரியன்

மஞ்சணித்த போதிலும், அவ்வக்தின் பருளை அதாச் செய்வதும், அம்மூன்று வக்தில் வந்து ஹாலிருன ஜனாசாவைத் தொழுவிப்பதும் அவைகளில் ஓதின ஸஜதா திலாவத்துச் செய்கிறதுமாகும்.

மக்ருஹான வக்தின் பயான்:—இனி மக்ருஹான வக்துகள், பஜ்ரு தொழுதபின்னும், அஸ்ரு தொழுத பின்னும், இமாம் குத்பா ஓத மிம்பரில் ஏறியது முதல் தொழுதுமுடியும் வரையிலும், மக்ரிபுடைய பர்ளுக்கு முன்னுமாயிருக்கும். இவ்வக்துகளில் நப்லு தொழுவதும், நேர்ச்சையான தொழுகைகளைத் தொழுவதும், பர்லான தொழுகைக்கு இகாமத்துச் சொன்னபின் சுன்னத்துத் தொழுவதும், இஷாவைப் பாதி இரவானபின் தொழுவதும், இரண்டு பெருநாள் தொழுகைக்கு முன் சுன்னத்துத் தொழுவதும், பர்லு வக்து இட்டுமையாயிருக்கும்போது சுன்னத்துத் தொழுகிறதும், ஒஜீபனம் ஹாலிருயிருக்க கல்பை அதனளவில் பறுக்சாக்கிக்கொண்டு தொழுவதும் மக்ருஹாகும்.

فصل في الاذان والاقامة

பஸ்லு பில்அதானி வல்இகாமதி.

பாங்கு இகாமத்தில் பேசுகிற பாடம்.

பாங்கும் இகாமத்தும் ஐந்து வக்தின் பர்லான தொழுகைக்கும், ஜும்ஆவுக்கும் ஆண்பிள்ளைகளுக்கு சுன்னத்து முஅக்கதாவாகும். மற்றும் தொழுகைகளுக்கு இவை இரண்டும் சுன்னத்தல்ல. பெண்பிள்ளைகளுக்கு அது இரண்டும் மக்ருஹாகும். ஷாபிஇம்த்ஹபில் பர்லான தொழுகைக்கு முன் ஆண்பிள்ளைகளுக்கு பாங்கும், இகாமத்தும், பெண்பிள்ளைகளுக்கு இகாமத்துமட்டும், சுன்னத்தாகும். பாங்கின் கலிமாக்கள் பதினைந்தாகும். அஃதாவது: அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர். அஷ்ஹது அனலாஇலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அன்னமுஹம்மதர் ரசூலுல்லாஹ், அஷ்ஹது அன்னமுஹம்மதர் ரசூலுல்லாஹ், ஹைய்ய அலஸ்ஸலாஹ்

ஹைய்ய அலஸ்ஸலாஹ், ஹைய்ய அலல்புலாஹ், ஹைய்ய அலல் பலாஹ், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல் லல்லாஹ். பஜ்ருடைய அதானில் ஹைய்ய அலல் பலாஹுக்குப் பின் அஸ்ஸலாத்து கைரும்மினன்னௌம் என்று இரண்டு விடுத்தம் சொல்லவும்.

ஹதீது:—மூன்று செய்கையுடைய பலனை மனிதர்கள் அறிவார் களானால் ஒருவரொருவர் முந்தவிடாமல் சீட்டுப்போட்டுச் செய் யும்படி நேரிடும். அதாவது தொழுகைக்குப் பாங்கு சொல்லுவதும் தொழுகைக்காக ஜமாஅத்துகளை ஆயுத்தப்படுத்துவதும், முந்தின ஸப்பில் நிற்பதுமாயிருக்கும். பாங்கு சொல்லும்போது யாதொரு வன் பேசுவானாகில் அவனுடைய ஈமான் நீங்கிவிடுவதைப் பயப் படவேணு மென்றும், பாங்குக்கு ஜவாபு சொல்லாவிட்டால் அவன் மவுத்தாகும்போது கலிமா ஷஹாதத்துச் சொல்லுவதற்கு நாவு தடு மாறுமென்றும் வந்திருக்கிறது.

இகாமத்துடைய கலிமாக்கள் பதினேழாயிருக்கும். அஃ தாவது: ஹைய்ய அலல்பலாஹுக்குப் பின் கத்காமதிஸ்ஸலாத் என்று இரண்டு விடுத்தம் சொல்வதாயிருக்கும்.

ஷாபிஇ மத்ஹபில் பாங்கில் இரண்டு அஷ்ஹதுவையும் முந்தி சிறுக சொல்லிக் கொண்டு பின்பு இறைந்து சொல்லவேண்டும். இன்னும் இகாமத்தைப் பாங்குக்கு பாதியாகவும் கத்காமதிஸ்ஸ லாத்தை மட்டும் இரண்டு விடுத்த மாகவும் சொல்லவேண்டும்.

பாங்கு சொல்லும்போது உயர்ந்த தலத்தில் அதில்லா விட்டால், பள்ளியின் முத்தவெளியில் சொல்வதும், இகாமத்தை தொழுகிற தலத்தில் சொல்வதும், பாங்கில் இரு கலிமா விரலையும் காதுக்குள் வைப்பதும், திராணிக்குத் தகுந்த சத்தத்துடன் உரத் துச் சொல்கிறதும் சுன்னத்து. பாங்கைப் பள்ளிக்குள் சொல்வது மக்ரூஹு. ஆனால் தனித்துத் தொழுகிறவன் பள்ளிக்குள் தனக் குக் கேட்கும்படி சொல்லிக்கொள்வது மக்ரூஹல்ல. வீட்டில் தொழுகிறவன் சத்தத்தை அதிக முயர்த்தாமல் தன் கேள்விக்கு கொஞ்சமதிக சத்தமாகச் சொல்வான். பாங்கின் சொல்களிலுள்ள நீக்க முள்ள அச்சரங்களுக்கு ஈடுகொண்டு சொல்லவும், ஆனால் முர்

தின அல்லாஹு அக்பரை இரண்டாவதில் சேர்த்துச்சொன்னால் முந்தினராவுக்கு சபர்கொண்டு அல்லாஹு அக்பரல்லாஹு அக்பறென்று சொல்லவும். பாங்கை இவ்விரண்டு கலிமாக்களுக்கிடையில் நிறுத்தித் தாமிதமாகவும், இகாமத்தை நிறுத்தாமல் தீபறமாக சொல்லவும். பாங்கை வக்தான பின் சொல்லவேண்டும். அதில் சிலது வக்துக்கு முன் பாங்கு சொல்லிவிட்டால் மீளவைக்கப்படும். முஸ்தஹப்பானவக்தின் துவர்க்கத்தில் பாங்கு சொல்லி நடு வக்தில் இகாமத்துச் சொல்லவேண்டும். பாங்கு இகாமத்து இவ்விரண்டையும் உலூ உடனே சொல்லவேண்டு மென்பதில் இகாமத்தை உலூவில்லாமல் சொல்வதும், ஜுனுபாளி பாங்கு சொல்வதும் மக்ருஹு. உலூவில்லாமல் பாங்கு சொல்வது ஆதுமாயின் தவாபு குறைந்துவிடும். இனி பாங்குக்குச் ஜவாபு சொல்வது வாஜிபு. ஆனால் ஹைலு நிபாசுக்காரி, குத்பாக்கேட்கிறவன், ஜனாசாத் தொழுகிறவன், இல்மோதுகிறவன், அதை ஓதிக்கொடுக்குகிறவன், ஜிமாஉசெய்கிறவன், மலபாதைக்கிருக்கிறவன், இவர்கள் ஜவாபு சொல்வது வாஜிபல்ல. கல்பில் சொல்லிக்கொள்ளலாம். குர்ஆன் ஓதுகிறவனும் ஜுனுபாளியும் ஜவாபு சொல்வதவசியம்.

ஜவாபு சொல்லும் பரிஸாவது:— முஅஸ்ஸின் சொல்வது போல் சொல்லவேணுமென்பதில் ஹைய்ய அலஸ்ஸலாஹ் சொல்லும் போது لاحول ولاقوة الا بالله லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹி என்றும், ஹைய்ய அலல் பலாஹ் என்ற போது, ما شاء الله كان ومالم يشاء لم يكن மாஷா அல்லாஹு கான வமாலம் எஷஃலம் எகுன் என்றும், அஸ்ஸலாது கைரும் மினன்னௌம் என்று சொல்லும்போது, صدقت وبررت وبالحق نطقت சதக்த வபரிர்த வபில் ஹக்கி நதக்த என்றும் அஷ்ஹது அன்ன முஹம்மதர் றசூலுல்லாஹ் என்ற முந்தின தடவையில் صلى الله عليك يا رسول الله ஸல்லல்லாஹு அலைக்க யாறசூலுல்லாஹ் என்றும் இரண்டாவது தடவையில் இருபெரு விரலின் நகத்தையும் முத்தமிட்டு இரு கண்ணின் பேரில் வைத்த பின்,

قرت عيني بك يا رسول الله اللهم متعني بالسمع والبصر

குற்றத் அய்னீ பிக யாறசூலுல்லாஹி அல்லாஹும்ம மத்திஃனீ பிஸ்ஸம்இ வல்பஸ்ரி என்றும் சொல்கிறது முஸ்தஹப்பு. இகாமத்

தில் இப்படிச் சொல்லும்படிக்கும் கையை முத்த மிடும்படிக்கும் கிதாபுகளில் வறவில்லே. இனி ஒருவன் நடக்கும்போது பாங்கைக் கேட்டால் தரிப்பட்டு நின்று ஜவாபு சொல்வது யேத்தமாகும். ஜவாபு சொல்பவன் முஅஸ்ஸினுக்கு முந்தாமல் அதானில் ஒவ்வொரு கலிமாவும் சொன்ன பின், பிரகடியாக ஜவாபு சொல்ல வேண்டும். பாங்கு சொல்லித் தீர்ந்தவுடன் கேட்டவர்களும் முஅஸ்ஸினும் ஸலவாத்துச் சொல்லி,

اللهم رب هذه الدعوة التامة والصلوة القائمة ات
محمدن الوسيلة والفضيلة وابعثه مقاما محمودا
ن الذى وعدته انك لا تخلف الميعاد

அல்லாஹும்ம றப்பஹாதிஹித் தஃவதித் தாம்மதி வஸ்ஸலாதில் காஇமதி ஆதி முஹம்மதனில் வஸீலத வல்பளீலத வப்அஸ்ஹு மகாமம் மஹ்முதானில்லதீ வஅத்தஹு இன்னக லாதுக்லிபுல் மீஆத். என்ற துஆவை ஓதவும். பாங்குக்குச் சொல்வதுபோல் இகாமத்துக்கும் ஜவாபு சொல்வது முஸ்தஹப்பென்றும், அல்லவென்றும் கிலாப் உண்டாயிருக்கிறது. அதில் கத்காம திஸ்ஸலாத் என்று சொல்லும்போது,

اقامها الله وادامها مادامت السموات والارض
وجعلني من صالحي اهلها

அகாம ஹுல்லாஹு வஅதாமஹா மாதாம திஸ்ஸமாவாது வல்அர்லு வஜஅலனீ மின்ஸாலிஹீ அஹ்லிஹா என்று சொல்லவேண்டும். இகாமத்திக்குப்பின் துஆ ஓதாமல் கத்காமதிஸ்ஸலாத் என்று சொல்லும்போது தொழுகையில் துடங்கவேண்டும். இனி முஸாபிரும் பள்ளியில் முந்தின ஜமாஅத்தாகத் தொழுகிறவர்களும் பாங்கும் இகாமத்தும் சொல்லாதிருப்பதும், முஸாபிருனவன் பாங்கைக்கொண்டு போது மாக்கிக்கொள்கிறதும் மக்ரூஹு. முஸாபிர் இகாமத்தைக் கொண்டுபோது மாக்கிக்கொள்கிறதாகும்.

فصل في بيان النيات

பஸ்லுன் பீ பயானின் நிய்யத்தி

நிய்யத்துகளில் பேசுகிற பாடம்.

பஜ்ருடைய சுன்னத்து தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى ركعتين سنة الفجر متوجها
الى جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா றகஅதைனி சுன்னதல் பஜ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹதில் கஃபதிஷ்ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த பஜ்ருடைய சுன்னத்து இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கி தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பர்.

பஜ்ருடைய பர்லு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى ركعتين فرض هذا الفجر
متوجها الى جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா றக்அதைனி பர்லஹாதல் பஜ்ரீ முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த பஜ்ருடைய பர்லு இரண்டு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன் அல்லாஹு அக்பர்.

லுஹ்றுடைய முந்தின சுன்னத்து தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى سنة الظهر اربع ركعات
متوجها الى جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா சுன்னதல் லுஹ்ரி அர்பஅ றக்ஆத்தின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ்

ஷரீபதி அல்லாஹு அக்பற். இந்த ளுஹ்றுடைய சுன்னத்து நாலு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

ளுஹ்றுடைய பர்ளு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے فرض هذ الظهر اربع ركعات
متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா பர்ல ஹாதல் ளுஹ்ரி அர்பஅ றக்ஆத்தின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பற். இந்த ளுஹ்றுடைய பர்ளு நாலு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கி தொழுக நிய்யத்துச்செய்தேன். அல்லாஹு அக்பற்.

ளுஹ்றுடைய பிந்தின சுன்னத்து தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے ركعتين سنة الظهر
متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா றக்அதைனி சுன்னத்தல்ளுஹ்ரி முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பற். இந்த ளுஹ்றுடைய சுன்னத்து இரண்டு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

அஸ்றுடைய பர்ளு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے فرض هذ العصر اربع ركعات
متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா பர்ல ஹாதல் அஸ்ரி அற்பஅ றக்ஆத்தின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ்

ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த அஸ்றுடைய பர்லு நாலு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன் அல்லாஹு அக்பர்.

மக்ரிபுடைய பர்லு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے فرض هذا المغرب ثلث
ركعات متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா பர்ல ஹாதல் மக்ரிபி, ஸலாஸ றக்ஆத்தின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த மக்ரிபுடைய பர்லு மூன்று றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கி தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பர்.

மக்ரிபுடைய சுன்னத்து தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے ركعتين سنة المغرب
متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா றக்அதைனி சுன்னதல் மக்ரிபி முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த மக்ரிபுடைய சுன்னத்து இரண்டு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பர்.

இஷாவுடைய பர்லு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے فرض هذا العشاء اربع ركعات متوجها
الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா பர்லஹாதல் இஷாயி அற்பஅ றக்ஆத்தின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த இஷாவுடைய பர்லு நாலுறக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன், அல்லாஹு அக்பர்,

இஷாவுடைய சுன்னத்துத் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے ركعتين سنة العشاء
متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா றக்அதைனி சுன்னதல் இஷாஇ முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த இஷாவுடைய சுன்னத்து இரண்டு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பர்.

லுஹருடைய கஸ்ருத் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے فرض هذا الظهر قصرا
متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா பர்ல ஹாதல் லுஹ்ரி கஸ்றன் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். இந்த லுஹருடைய பர்லை கஸ்றாக சிறப்பாகிய கஃபாவின் திசையைநோக்கி அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன் அல்லாஹு அக்பர். இந்தப்படிக்கு அஸ்ரிலும் இஷாவிலும் நிய்யத்துச் செய்துகொள்ளவும்.

வித்ரு வாஜிபு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے هذا الوتر الواجب
ثلث ركعات متوجها الے جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஹாதல் வித்ரல் வாஜிப ஸலாஸ றக்ஆத்தின் முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பர். வாஜிபாகிய இந்த வித்ரை மூனு றக்ஆத்து அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பர்.

ஜும்ஆத் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة الجمعة مع الامام
ركعتين متوجها الى جهة الكعبة الشريفة الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாதல்ஜும்அதி மஅல்இமாமி றக்அதைனி முதவஜ்ஜிஹன் இலாஜிஹத்தில் கஃபதிஷ் ஷரீபதி அல்லாஹு அக்பற். இந்த ஜும்ஆத் தொழுகை இரண்டு றக்ஆத்தை இமாமுடனே அல்லாஹுத் தஆலாவுக்காக சிறப்பாகிய கஃபாவின் திசையை நோக்கித் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற். அல்லது,

اسقط فرض هذا الظهر عن ذمتي باداء صلاة
الجمعة اقتديت بهذا الامام الله اكبر

உஸ்குத் பர்ல ஹாதல்ழுஹ்ரி அன்திம்மதீ பிஅதாஇ ஸலாதல் ஜும்அதி இக்ததைத்து பிஹாதல் இமாமி அல்லாஹு அக்பற். இந்த இமாமைத்தொடர்ந்து ஜும்ஆத் தொழுகையை இருக்கிறது கொண்டு என் பொருப்பை விட்டும இந்த ழுஹ்ருடைய பர்ளை விளுத்தாட்டுகிறேன். அல்லாஹு அக்பற். என்று சொல்லுவதுமாகும்.

நோன்புப் பெருநாள் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة العيد الفطر واجبا
اقتديت بهذا الامام الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாதல் ஈதில் பித்ரி வாஜிபன் இக்ததைத்து பிஹாதல் இமாமி அல்லாஹு அக்பற். ஈதுல் பித்ருடைய தொழுகையை வாஜிபாக இந்த இமாமை தொடர்ந்து அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة العيد الاضحى واجبا
اقتديت بهذا الامام الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாதல் ஈதில் அல்ஹா வாஜிபன் இக்ததைத்து பிஹாதல் இமாமி அல்லாஹு

அக்பற். ஈதுல் அல்ஹா தொழுகையை இந்த இமாமைத்தொடர்ந்து வாஜிபாக அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

தருவீஹ் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة التراويح ركعتين
اقتديت بهذا الامام الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாத்தத்தருவீஹி றக்அதைனி இக்ததைத்து பிஹாதல் இமாமி அல்லாஹு அக்பற். இந்த இமாமைத் துடர்ந்து தருவீஹுடைய தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

மஸ்ஜிதுடைய காணிக்கை தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة تحية المسجد ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாத்தத்தஹிய்யதில் மஸ்ஜிதி றக்அதைனி அல்லாஹு அக்பற். மஸ்ஜிதுடைய காணிக்கையின் தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

உளுவுடைய தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة الوضوء ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாத்தல் ஒளூஇ றக்அதைனி அல்லாஹு அக்பற். ஒளுவுடைய தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

ளுஹா தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالى صلاة الضحى ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தல்ளுஹா றக்அத்தைனி அல்லாஹு அக்பற். ளுஹாஉடைய இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

தஹஜ்ஜது தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے صلاة التہجد ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தத்த ஹஜ்ஜிதி றக்அதைனி அல்லாஹு அக்பற். தஹஜ்ஜது தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச்செய்தேன். அல்லாஹு அக்பற்.

ஸபருத் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے صلاة السفر ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தஸ்ஸபரி றக்அதைனி அல்லாஹு அக்பற். ஸபருடைய தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காத் தொழுக நிய்யத்துச் செய்தேன் அல்லாஹு அக்பற்.

குதூம் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے صلاة القدوم ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹி தஆலா ஸலாத்தல் குதூமி றக்அதைனி அல்லாஹு அக்பற். குதூமுடைய தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன் அல்லாஹு அக்பற்.

தாய் தகப்பர் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے صلاة الوالدين ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தல்வாலிதைனி றக்அதைனி அல்லாஹு அக்பற். தாய் தகப்பருடைய தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச்செய்தேன். அல்லாஹு அக்பற்.

இஸ்த்தகாறு தொழுகை நிய்யத்து.

نويت ان اصلي لله تعالے صلاة الاستخارة ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தல் இஸ்திகாறதி றக்அதைனி அல்லாஹு அக்பற். இஸ்திகாறு உடைய

தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

தஸ்பீஹ் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے صلاة التسبيح اربع ركعات الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தத் தஸ்பீஹ் அர்பஅ றக்ஆத்தின் அல்லாஹு அக்பற். தஸ்பீஹுடைய தொழுகை நாலு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச்செய்தேன். அல்லாஹு அக்பற்.

கிராணத் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے صلاة الكسوف ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தல்குசூபி றக்அதைனி அல்லாஹு அக்பற். கிறணத் தொழுகை இரண்டு றக்ஆத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

நபில் தொழுகை நிய்யத்து.

نويت ان اصلى لله تعالے صلاة النفل ركعتين الله اكبر

நவைத்து அன்உஸல்லிய லில்லாஹித் தஆலா ஸலாத்தன் நப்லிக்அதைனி அல்லாஹு அக்பற். நப்லுத் தொழுகை இரண்டு றக்அத்தை அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுக நிய்யத்துச் செய்தேன். அல்லாஹு அக்பற்.

இனி அந்தந்த தொழுகைகளில் இமாம் ஜமாஅத்தை சேர்ந்து தொழுகிறதின் நிய்யத்தில் இக்ததைத்து பிஹாதல் இமாமி அல்லது மஅல் இமாமி இந்த இமாமைத்தொடர்ந்து அல்லது இந்த இமாமுடன் என்று சொல்லி நாடிக்கொள்ளவும். பர்லான தொழுகையில் உஸல்லி பர்லஹாதல் வக்தி اصلى فرض هذا الوقت இந்த வக்துடைய பர்லைத் தொழுகிறேன் என்று நிய்யத்துச் செய்தால் எல்லா வக்துக்கும் போதுமாகும்.

فصل في بيان صلاة المسافر

பஸ்லுன் பீபயானி ஸலாத்தில்முஸாபிர்

முஸாபரின் தொழுகையின் பாடம்.

ஒரு மனிதன் முகீமாயிருந்து ஊரை விட்டும் ருஹத்துடன் நடுத்தறமான வளமையாகிய நடையால் நடந்து மூன்று நாளையில் போய்ச் சேரும்படியான ஊரை நாடிய முஸாபிர் தன் ஊரின் எல்லையைக் கடந்தால் அதுமுதல் பர்லான நவ்வாலு றக்அத்துத் தொழுகைகளை இரண்டு றக்அத்தாகச் சுருக்கித் தொழுகிறது வாஜிபு. ஒரு ஊரில் போய் அவ்வூரில் பதினைந்து நாள் அல்லது அதற்கதிகம் தரிபடவேண்டுமென நிய்யத்துச்செய்தால் அதுமுதல் அவன் முகீமாகிவிட்டதால் கஸ்ரில்லை. நாலு றக்அத்தும் சரியாகத் தொழுக வேண்டும், இனி மூன்றுநாள் பயணத்தை ஒருவன் இரண்டு நாளையில் போய்விட்டாலும் கஸ்ருதான் தொழுகவேண்டும். ஒரு ஊருக்கு இரண்டு வழி நடந்தால் போகிற வழியைத்தான் தானை பிடிக்கப்படும். ஒருவன் ஒரு ஊரில் வந்து நாளைக்குப் போகலாம் அல்லது பத்து நாளையில் பதிநாலு நாளையில் போகலாமென்றெண்ணி எவ்வளவு நாளிருந்தபோதிலும் கஸ்றுகவே தொழுகுவான்.

இனி ஷாபிஈ மத்ஹபில் நாலு நாளை நிய்யத்துச் செய்தாலும் அல்லது பதினெட்டுநாள் ஒரு ஊரிலிருந்தாலும் கஸ்ரு ஜாயிஸாகாது, இன்னும் அவர்களிடத்தில் கஸ்ருள்ளஎன் நிறப்பமாய்த் தொழுவது மாகும்.

கஸ்ரு வாஜிபாயிருக்க நிறப்பமாக நாலு றக்ஆத்துத் தொழுதால் குற்றவாளியாவான். அப்பால் முகீமானவனைத் தொடர்ந்து தொழுதால் நாலு றக்ஆத்தும் நிறப்பமாகவே தொழுக வேண்டும். அவன் தொடர்ந்தது கடைசி அத்தஹிய்யாத்திலா யிருந்தாலுஞ் சரியே. இனி முகீமானவன் முஸாபிரைத் தொடர்ந்து தொழுதால் அவர் இரண்டு றக்ஆத்தில் ஸலாம் வாங்கிய பின் எழும்பி மற்ற இரண்டு றக்ஆத்தையும் கிருஅத்தோதாமலும்ஃ சஹ்வுக்குச் சஜதாச் செய்யா

மனும் தொழுகுவான். முஸாபிருன இமாம் கஸ்றாகத் தொழுகாமல் நிறப்பமாகத் தொழுதால் அவனை முகீமானவன் தொடறுகிறது கூடாது.

ஏனெனில் முஸாபிருக்கு இரண்டு றக்ஆத்துத்தான் பர்ளு அவன் அதிகமாகத் தொழுத இரண்டு றக்ஆத்தும் குற்றத்துடன் நப்லாக முடிகிறதால் நப்லு தொழுகிறவனை பர்லு தொழுகிறவன் தொடர்வது போலாகிவிட்டது. அன்றல் அவனை விட்டும் பிரிந்தேன் என்று நிய்யத்துச்செய்து அவனோடு தொழுதாலும் அல்லது இமாம் தொழுகையின் நடுவில் அவ்வூரில் பதினைந்து நாளிருப்பேனென நிய்யத்துச் செய்தாலும் நாலு றக்ஆத்துத் தொழுத முகீம்களுடைய தொழுகை பசாதாகாது, கஸ்றுகத் தொழுகவேண்டியவன் நடு அத்தஹிய்யாத்தின் இருப்பை மறதியாக விட்டு எழும்பி கடைசிவரை தொழுது விடுவானுகில் நடு இருப்பு அவனுக்குப் பர்லாயிருப்பதால் அவனுடைய தொழுகை கூடாது, அவன் நடு இருப்புக்கு இருந்து எழும்பி இருந்தால் பிந்தின இரண்டு றக்ஆத்தும் நப்லாக முடிவாகும். சபரில் தவறின தொழுகையை இரண்டு றக்ஆத்தாகவும் ஹலரில் தவறின தொழுகையை நாலு றக்ஆத்தாகவும் கலாச்செய்யவேண்டும்.

باب في فروض الصلاة

பாபுன் பீ புருலிஸ்ஸலாத்.

தொழுகையில் பர்லுகளைப் பேசும் பாடம்.

தொழுகையில் ஷர்த்தெனும் வெளி பர்லு ஏழு, ருக்னெனும் உள் பர்லு ஆறு ஆக பர்லு பதிமூன்றில் வெளி பர்லாகிறது:—ஒன்றுவது வக்தை அறிவது. ஒருவன் வக்து வந்ததில் சந்தேகமாய்த் தொழுதால் கூடாது, அது வக்தில் விஷயமானுலுமொக்கும். அந்த வக்தின் விபரம் முந்திவிட்டது. இரண்டாவது ஹகீகிய்யான நஜீசென்று ஒலுமுறிக்கலாகிய சிறு துடக்கு முழுக்கை வருத்துகிற பெருந்துடக்கு இவ்விரண்டை விட்டும் ஹகீகிய்யான நஜீசென்று முகல்லலாஹ் முகப்பபஹ் வெனுங்கனத்த இலேசான இவ்விரண்டு

நஜீசில் பொறுக்கப்படாத்ததை விட்டும் சரீரம் துப்புறவாக இருக்கிறது. மூன்றாவது அந்த இருவகை நஜீசை விட்டும் அவனுடைய உசும்புதல் கொண்டு உசும்பும்படியான அவனுடன் சேர்ந்திருக்கும் உடை துப்புறவாக இருக்கிறது. நாலாவது நஜீசுகளை விட்டும் தொழுகும் தலம் துப்புறவாக இருக்கிறது, அஃதாவது இரண்டு கால் வைக்கும் தலம், சுஜூது செய்கிற தலம், இரண்டு கைவைக்கின்ற தலம், இரண்டு முட்டுக்கால் வைக்கிற தலமுமாயிருக்கும்.

نجس مغلظة நஜீசு முகல்லலாஹ் வெனும் கனத்த நஜீசாகிறது மலம், ஜலம், மதீ, மனீ, வதீ, இரத்தம், சீள், சலம், வாய், நிறம்பிய சத்தி, பன்றி, கள்ளு, சாருயம், செத்ததின் இறைச்சி, அதின் பச்சைத் தோல், ஆகாயத்தில் பறக்காத கோழி, தாருபோல் கொத்தத்தின் எச்சம், விட்டை, சாணி, புளுக்கை, தின்னப்படாத அய்வாமிருகங்களின் மலம் ஜலம் இவைகளின் வாய் நீர் பூனையின் மலம் ஆகிய இவைகளாயிருக்கும்,

இந்த நஜீசுகளில் திர்ஹத்துடைய கத்ரைப் பொருக்கப்படும், அதாவது இளகலானதின் நின்றும் உள்ளங்கைப் பள்ளத்தின் அகலம், கண்டிப்பானதில் நின்றும் ஒரு களஞ்சி இடை, இவை சரீரத்திலும் பிடவை முதலியவைகளிலும் பட்டால் பொறுக்கப்படும். ஆனால் அந்தக் கத்ரை வைத்துக்கொண்டு தொழுகிறது மக்ரூஹ் தஹ்ரீமாகும். மாதி அல்லது தங்கடம் கொண்டொளிய, ஆனதால், அந்தக் கத்ரைக் கழுவுகிறது வாஜிபாகவும் அதர்க்கு குறைந்த கத்ரைக் கழுவுகிறது சுன்னத்தாகவுமிருக்கும்.

نجس مخففة நஜீசு முகப்பபஹ் வெனும் இலேசான நஜீசாகிறது, தின்னப்பட்ட ஹைவானின் மூத்திரமும், குதிரை மூத்திரமும், தின்னப்படாத பறவைகளின் எச்சமுமாயிருக்கும். இந்த நஜீசில் அதுபட்ட உறுப்பில் நாலிலொருபங்குக்குக் குறைந்ததையும் தொழுகையில் பர்லான உறுப்பை மறைக்கும்படியான பிடவை போல் கொத்ததில் நாலிலொரு பங்குக்குக் குறைந்ததையும் ஊசிமுனை போல் தெரித்த மூத்திரத்தையும் கழுதை எச்சியும் பொறுக்கப்படும். தின்னப்பட்ட பறவையின் எச்சியும், வவ்வாலின் புலுக்கையும், மூத்திரமும், பன்றியைத்தவிற செத்த வஸ்துவின் ரோமம், எலும்பு, ஜவ்வு, குழம்பு, கொம்பு, முதலானவைகள் நெய் மஷ்டை விட்டும் நீங்கியிருக்

தாவிவைகளும் காயவைக்கிறதுகொண்டு அல்லது பாடம்பண்ணுகிறது கொண்டு திரேசான தோலும், மீனுடைய இறத்தம், மனிதனுடைய ரோமம், எலும்பு, பல்லு இவைகளும் துப்புறவாயிருக்கும். வவ்வாலின் புளுக்கையும் அதின் மூத்திரமும் துப்புரவென்றதின் கருத்தாவது வீடு பள்ளி முதலிய கட்டிடங்களில் அது சஞ்சாரஞ் செய்துவருகிற உமூமுல் பல்வாவென்ற கஷ்டத்திற்காகவேயன்றி அதைத் தின்பது ஹலாலென்பதற்கல்ல. பத்வாவான சொல்படிக்கு நாய் நம்மிடத்தில் ஐன் நஜீசாகாது. என்கிலும் அதின் தசை இரத்தம் நஜீசா இருக்கிறது கொண்டு தின்ன ஹறுமான மற்ற மிருகங்களைப் போலாயிருக்கும். இனி காய்ந்தால் கண்ணுக்குத் தெரியப்படுகிற யாதொரு நஜீசான வஸ்து பிடவையில் சரீரத்தில் பட்டிருந்தால் அதும் அதின் குணமும் நீங்கும்படியாக முத்லகான தண்ணீரைக்கொண்டும், முஸ்தஃமலான தண்ணீரைக்கொண்டும், நஜீசை நீங்கும்படியான இழகலான பன்னீரைப்போலவும் சிறுக்காவைப்போலவுமுள்ள வஸ்துவில் துப்புறவான சடங்கலைக்கொண்டு கழுவுகிறதுகொண்டு துப்புறவாகிவிடும். ஷாபிஈ மத்ஹபில் முத்லகான தண்ணீரல்லாததைக்கொண்டு நஜீசை நீக்கப்படாது. பால் எண்ணைபோல் மஷ்டுள்ள வஸ்துவைக்கொண்டு துப்புறவாகாது, இனி காய்ந்த பின் கண்ணுக்குத் தெரியாத நஜீசுபட்டால் அதைப் பாத்திரத்தில் போட்டு கழுவுகிற சூறத்தில் அதை மூன்று விடுத்தம் கழுகி ஒவ்வொரு விடுத்தமும் பிழிகிறதுகொண்டு துப்புறவாகிவிடும். ஆனால் ஒவ்வொரு விடுத்த மடங்கலிலும் அந்தத் தண்ணீரைக் கொட்டிவிட்டு மறு தண்ணீரை வார்த்துக் கழுகவேண்டும். மூன்றும் விடுத்தத்தில் தன் பலன்கொண்டு கடப்பாகப் பிழியவேண்டியது அவசியம். இனி மூன்றும் விடுத்தம் தண்ணீரைக் கொட்டியபின் அந்தப் பாத்திரத்தைக் கழுகவேண்டும். இனி அந்த வஸ்து புதுச்செங்கலில் ஊறின கோதுமை போல் பிழியக்கூடாததாயிருந்து நஜீசை மிகுந்து குடித்திருந்தால் அதை மூன்று விடுத்தங்கழுவுதலில் ஒவ்வொரு விடுத்தமும் உலர்த்துகிறதுகொண்டு துப்புறவாகிவிடும். சரீரத்தைப்போல் நஜீசைக் கொஞ்சங் குடித்திருந்தாலும் கண்ணாடி, வாள், செம்பு, பித்தளை முதலிய பாத்திரம் போல் அறவே குடிக்காததாகிவிட்டாலும் ஒரே தடவையில் மூன்று விடுத்தங்கழுவுதல்கொண்டு துப்புறவாகிவிடும். ஒவ்வொரு விடுத்தமும் உலர்த்தவேண்டியது அவசியமில்லை.

இனி தஹ்தர்தஹ் போன்ற மிகுந்த தண்ணீருள்ள கேணி, குளம் இவைகளில் போட்டுக் கழுகினாலும், அல்லது அதின் பேரில் தண்ணீரை ஓட்டினாலும், மிகுதமாய்த் தண்ணீரை ஊற்றினாலும் துப்புறவாகும். அதைப் பிழிவதும் உலர்த்துவதும் அவசியமில்லை. பின்னர் எந்த நஜீசாயிருந்தாலும் பூமியில் பட்டு அது உலர்ந்து அதின் குணமான வாடை, நிறம், வாசனை நீங்குகிறதுகொண்டு அதில் தொழுகிறதற்காக துப்புறவாயிருக்கும். தயம்மத்துக் கல் பூமியில் முளைத்திருக்கும் புற்பூண்டுகளின் ஹூக்மும் பூமியின் ஹூக்மைப் போலாயிருக்கும். வாள் முதலானவைகள் சிக்கலாடப்பட்டிருந்தால் நஜீசைத் துடைக்கிறது கொண்டும், பிடவையில் மண் பட்டுக்காய்ந்திருந்தால் அதைக் கசக்கி உதறுகிறது கொண்டும், செறுப்பு ஜூத்தாப்போல் கொத்ததில் நஜீசு பட்டு கண்ணுக்குத் தெரிந்தால் பூமியில் பலமாய்த் தேய்க்கிறது கொண்டும், துப்புறவாகும். (ஐந்தாவது) அவ்றத்தை மறைக்கிறது. அதாவது, ஆண்பிள்ளைக்கு தொப்புளின் மேலருந்து முதல் முட்டுக்காலுக்கு கீழ்வரையிலும். வெள்ளட்டிக்கு இத்துடன் வயறும், முதுகும்; நாட்டான் மகளுக்கு முகமும் இருமுன் கையும் இருபாதமும் தவிர மற்றும் சரீரமடங்கலுமாயிருக்கும். ஷாபிஈ மத்ஹபில் பெண்பிள்ளைக்கு இருபாதமும் அவ்றத்தில் உள்ளதா இருக்கும் அதையும் மறைக்க வேண்டும். ஆனால் வாலிபக்காரி முகத்தை அன்னிய ஆண்பிள்ளைகளுக்கு வெளியாக்கிறதை விட்டும் ஆண்பிள்ளை அதைப் பார்க்கிறதை விட்டும் விலக்கப்படும். (ஆறாவது) கிப்லாவை முன்னோக்குகிறது. எஃனீ: கஃபதுல்லாவை அல்லது அதின் திசையை முன்னோக்குகிறது. ஆனால், மக்கத்திலும் மதீனத்திலுமிருக்கிறவர்களுக்கு கஃபா தன்னையே முன்னோக்கிறது அவசியம். மற்ற ஊரையுடையவர்கள் அதின் திசையை முன்னோக்குவது போதும். யாதொருவனுக்கு கிப்லாவின் திசை பிசகுதலாகிக் கேட்டறிய ஒருவருமில்லாவிட்டால் தெண்டித்து ஒருதிசையை நிச்சயப்படுத்தி தொழுகவேண்டும். தொழுத பின் பிசகி விட்டதென்றறிந்தாலும் தொழுகையை மீள வைக்கவேண்டியதில்லை, தெண்டிக்காமல் தொழுதிருந்தால் மீள வைக்க வேண்டும். தொழுகையிலிருக்கும்போது பிசகை அறிந்தால் கிப்லாப்பக்கம் திரும்பி மீதியை முடித்துக்கொள்ளவேண்டும். (ஏழாவது) நிய்யத்து. எஃனீ: கலப்பறுதலாய், எந்த அமலிலும் நல்ல நிய்யத்து உண்டாயிருந்தால் அதை இபாதத்தென்றும் அப்படிக் கில்லாவிடில் ஆதத்து. எஃனீ, வளக்கமென்றும் சொல்லப்படும்.

இனி றியாவெனும் முகஸ்த்துதியாகிறது இரண்டு வகையாம்:— (ஒன்ருவது) மனிதரில்லாவிட்டால் தொழுகிறதில்லை, இருந்தால் தொழுகிறது. இதில் தவாபில்லை. ஆனுல் பர்ளில் கடன் நீங்கும். நப்லில் றியாவந்தால் அதைத் தொழாததைப் போலாகும். ஆனுல் ஒருவன் துவர்க்கத்தில் இக்லாசாய் (எஃனீ கலப்பறுதலாய்த்) தொடங்கி பின்பு றியாவந்து புகுந்தால் முஃததான சொல்படிக்கு அது இக்லாசாகத் தொழுதது போலாம். இரண்டாவது மனிதரிருந்தால் செவ்வையாக அழகாகத் தொழுகிறதும் இல்லாவிட்டால் அழகாக்காமல் பொடும் போக்குத்தனமாக தொழுகிறதுமாகிறது. இதில் நன்ருய் தவாபு கிடையாது. அஸ்லுத் தொழுகையில் தவாபுண்டும். ஆனுல் முகத்தாக்ஷிணை யுண்டாகுமேயென்று நல்அமலை விடப்படாது. ஏனெனில், الرياء قنطرة الاخلاص அற்றியாஉ கின்தறதுல் இக்லாஸி முகஸ்த்துதி இக்லாசுக் குப்பாலமென்றும் لولا الرياء لما عبد الله றியா இல்லாவிடில் அல்லாஹுத் தஆலாவை வணங்கப்படாது. எஃனீ யாரும் வணங்கமாட்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் துவர்க்கத்தில் றியாவந்தாலும் இயன்றமட்டிலும் அதைத் தடுத்துக்கொண்டே வறவேண்டும் தவிர அதினுல் நல்அமலை விடுவதாகாது.

அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுகையை நாடுகிறது, அதின் விதமாகிறது இன்ன தொழுகையைத் தொழுகிறேன் என்று நாடும்போது கல்பில் யாதொரு யோஜனையும் தடுமாட்டமுமில்லாமல் கல்பில் அதை அறிகிறதுமாயிருக்கும். நிய்யத்தில் பறுலான தொழுகையையும், வாஜிபான தொழுகையையும், பர்லு, வாஜிபென்று குறிக்கிறதும், லுஹ்று அஸ்ரு என்கிறதுபோல் வக்தைக்குறிக்கிறதும் கலாவாயிருந்தால் கலாவென்று, மஃமூமாயிருந்தால் இந்த இமாமுடன் தொடர்கிறேனென்று நாடுகிறதும் ஷற்த்தாயிருக்கும்.

இனி உள் பர்லு ஆருயிருக்கும். (ஒன்ருவது) தக்பீர் தஹ்ரீமா. அதாவது தொழுகையில் புகுதும்போது சொல்லுகிற முந்தின தக்பீருயிருக்கும்.

இனி அல்லாஹு அக்பரிலுள்ள இரண்டு ஹம்சையும் பேயையும் நீட்டினுல் தொழுகையைத் தொடங்குதல் கூடாது. இந்திகாலுடைய தக்பீர்களில் இவ்விதம் நீட்டினுல் தொழுகை பசாதாகிடும். பர்லான தொழுகையில் திறுணியுள்ளவர்களுக்கு நிலை ஷர்த்தானதால் தொழு

கைக்குத் தக்பீர் சொல்லும்போது ருக்கூவிலிருக்கிற இமாமைக் கண்டு தக்பீர் தொடங்கி குனிவளவில் முடுகி தக்பீரை முடித்தால் தொழுகை கூடாது. நிலையில் சொல்லி முடித்து விட்டுக் குனிந்தால் கூடும். (இரண்டாவது) பர்ளிலும் வாஜிபிலும் பஜ்ருடைய சுன்னத்திலும் திருணி பெற்றவன் நிலை நிற்கிறது. நிலையின் ஹத்தாவது செவ்வையான நிலையில் நின்று இருகையையும் நீட்டினால் இருமுட்டுக்காலையும் எத்தாத புறங்கொண்டு நிற்கிறதாயிருக்கும். இது நிலையில் தாழ்ந்த ஹத்தாயிருக்கும். அதில் நிறப்பமாகிறது இருபாதத்துக்கிடையில் நாலு விரல் இடையில் பாதத்தை வைத்து நேரே செவ்வறுதலாய் நிற்கிறதாயிருக்கும். மேல் சொன்னதைத் தவிற மற்றும் சுன்னத்திலும் நப்லிலும் நிற்கத் திருணியிருக்க இருந்து தொழுவதாகு மென்றாலும் தங்கடமின்றி இருந்து தொழுதால் நின்று தொழுத தவாபில் பாதிதானுண்டும்.

இனி ஒவ்வொரு ஜமாஅத்துக்காக பள்ளிக்கு நடந்து வருவதால் நின்று தொழ வருத்தமாகிறதாகவும், வீட்டில் தொழுதால் நின்று தொழத்திருணி பெறுகிறதாகவுமிருந்தால் இவ்விதமானவன் வீட்டிலிருந்து தொழுகவேண்டும். நிற்கயேலாத நஷலாளி இருந்து ருகூஉ சுஜூது செய்து தொழுகுவான், அதற்கும் ஏலாவிட்டால் இருந்தே ருகூஉக்குக் கொஞ்சம் தலை குனிந்தும், சுஜூதுக்கு அதிலும் கொஞ்சமதிகமாகக் குனிந்தும் தலையால் சைக்கினை செய்து தொழுகுவான். இருக்க யேலாவிட்டால் இரண்டு காலையும் கிப்லாப் புறமாக்கி மல்லார்ந்து படுத்து அல்லது இருகாலையும் வடக்கே அல்லது தெற்கே நீட்டி ஒருக்கணித்துப் படுத்து கிப்லாவுக்கு நேரே முகத்தை யாக்கித் தலையால் சைக்கினை செய்து தொழுகுவான். அதற்கும் ஏலாவிட்டால் தொழுகையைப் பிற்படுத்துவான். (மூன்றாவது) கிறுஅத்தோதுவது இது பறுளுடைய இரண்டு றக்ஆத்திலும், வாஜிபு சுன்னத்து முஸ்தஹப்பு முதலிய தொழுகைகளின் எல்லா றக்ஆத்திலும் பற்லா இருக்கும். பற்லுடைய ஹத்தாகிறது. ஒரு ஆயத்தாகவும் ஓத வேணுமென்பது தன் காதுக்குக் கேட்க, நாவால் ஹற்புகளைத் திறுத்தமாயோதுகிறதாகவு மிருக்கும். ஃஸீம் குர்ஆனில் ஒரு ஆயத்தைப் பாடமிடுகிறது எல்லோர் பேரிலும் பற்லாகவும், பாத்திஹாவையும் ஒரு சூறாவையும் பாடமிடுகிறது வாஜிபாகவும், குர்ஆன் அடங்கலையும் பாடமிடுகிறது பற்லு கிபாயாவாகவும், சுன்னத்து ஐனாகவும், நப்

லான வணக்கத்தை காண யேத்தமாகவுமிருக்கும். ஆனல் பிக்ஹைப் படிக்கிறது பிந்தின இரண்டைக் காண மிக யேத்தமாகும். பிக்ஹுடைய இல்மில் அவசியமானதைப் படிப்பதற்காக தாய் தகப்பனுடைய உத்திரவின்றிப் போகிறதாகும். (நாலாவது) றுகூஉச் செய்கிறது. அதாவது இரண்டுகையையும் நீட்டினல் இரு முட்டுக்காலையும் பிடிக்குமென்கிறவரையில் குனியிறது. இது றுகூஇல் தாழ்ந்தது. அதில் நிறப்பமாகிறது தலை பித்தட்டுக்குச் சரியாகும்படி குனியிறதாயிருக்கும். இருந்து தொழுதால் அவனுடைய நெத்தி இரண்டு முட்டுக்காலின் முன்னிலைக்குநேர்பட இருக்கவேணும். (ஐந்தாவது) இரண்டு சுஜூதுசெய்கிறது. அஃதாவது பூமியின்பேரில் அல்லது பூமியைக்கொண்டு சேர்ந்திருக்கிற கண்டிப்பான வஸ்துவின் பேரில் நெத்தியைத் தறிபட வைக்கிறது. அத்துடன் மூக்கையும் வைப்பது வாஜிபு. ஒரு சொல்படி சுன்னத்தென்றிருப்பதால் நெத்தியின் பேரில் சுறுக்கிக் கொண்டால் போதும். மூக்கின்பேரில் சுறுக்கிக்கொள்வது தங்கடங் கொண்டொழிய ஆகாது.

இனி காலுடைய ஒரு விரலையாவது கிப்லாத் திசைக்கு நேருக வைக்கிறது பர்லாகும். இப்போது சொல்லியவைகள் சுஜூதில் தாழ்ந்த தறஜா. அதில் நிறப்பமாகிறது நெத்தி, மூக்கு; இரண்டு பாதம், இரண்டு கை, இரண்டு முளங்கால் ஆக இவ்வெட்டு உறுப்புகளையும் பூமியில் தரிபட வைக்கிறது.

ஷாபிஈ மத்ஹபில் மூக்குத் தவிர மற்ற ஏழு உறுப்புகளை பூமியில் வைக்கிறது சுஜூதில் பர்லா இருக்குமென்பதில் இருகாலில் ஒவ்வொரு விரலின் உள்புறம் பூமியில்படுவது ஷர்த்தா இருக்கும். இனி றுகூஇலும் சுஜூதிலும் இரண்டு பறண்டயின் மொளியையும் சேர்க்கிறது சுன்னத்தாயிருக்கும். காலுடைய விரல்களை செவ்வையாக கிப்லாவை முன்னேக்கும்படி சுஜூதில் நாட்டாதிருப்பது மக்ருஹ் (ஆறுவது)பின்னிருப்பு. அதாவது, தொழுகையின் கடைசியில் அத்தஹிய்யாத்தை அட்துஹு வறசூலுஹு வரையில் ஓதுகிற வரைக்கும் தாமதிக்கிறது. இந்த பர்லுகளில் ஒன்று தப்பிவிட்டால் தொழுகை பசாதாகிவிடும். இவைகளைச் செய்திஞல் தவாபும், உத்றன்றியே விடுவதினல் அதாபும் உண்டாகும், உத்றுகொண்டு விட்டால் அதாபு செய்யப்படாது.

فصل في واجبات الصلاة

பஸ்லுன் பீ வாஜிபாதிஸ்ஸலாதி.

தொழுகையின் வாஜிபுகளை விபரிப்பதின் பாடம்.

அவைகள் இருபத்தொன்றாகும்:- (ஒன்றாவது) பாத்திஹா ஓதுவது. (இரண்டாவது) அத்துடன் ஒரு சூறத்தை, அல்லது மூன்று ஆயத்தை, அல்லது பெரிய ஒரு ஆயத்தைச் சேர்க்கிறது. (மூன்றாவது) பாத்திஹாவை சூறத்துக்கு முன் ஓதுவது. (நான்காவது) முந்தின இரண்டு றக்ஆத்திலே கிறுஅத்தைக் குறிப்பாக்குவது. (ஐந்தாவது) சுஜூதை ஒரு றக்ஆத்தில் மடக்கி வறப்பட்ட செயலில் தற்தீபைப் பேணுவது. (ஆறாவது) றுகூஉக் காண கிறுஅத்தை முற்படுத்துவது (ஏழாவது) றுகூஉ சுஜூது இஃதிதால் இரண்டு ஸஜதாவுக்கு இடையிருப்பு ஆகிய இவைகளில் தறிபடுவது (எட்டாவது) முந்தின இருப்பு. (ஒன்பதாவது) இரண்டிருப்பிலும் அத்தஹிய்யாத் தோதுவது. (பத்தாவது) அந்தந்த பற்ளுகளையும் வாஜிபுகளையும் அதனின் தலத்தில் கொண்டுவருவது. (பதினொன்றாவது) முந்தின இருப்பில் அப்துஹூ வரசூலுஹூவுக்குப்பின் ஸலவாத்தை ஓதாதிருப்பது (பனிரண்டாவது). இமாமுடைய பர்லான செயலில் முக்ததீ துடர்வது. (பதிமூன்றாவது) இமாமுக்குப் பின் முக்ததீ கிறுஅத்தோதாதிருப்பது. (பதினான்காவது) இரைந்தோதுந்தலத்தில் இரைந்தோதுவது. (பதினைந்தாவது) அமர்ந்தோதுந் தொழுகையில் அமர்ந்தோதுவது. (பதினாறாவது) வித்ரின் மூன்றாவது றக்ஆத்தின் றுகூஉக்குமுன் குனூத்தோதுவது. (பதினேழாவது) இரண்டு பெருநாள் தொழுகையிலும் ஒவ்வொரு றக்ஆத்திற்கும், அதிகமாக மும்மூன்று தக்பீர் சொல்லுகிறது. (பதினெட்டாவது) அத்தொழுகையுடைய இரண்டாம் றக்ஆத்தின் றுகூஉக்குப் போகிறதற்காக தக்பீர் சொல்வது. (பத்தொன்பதாவது) அந்தந்த பர்ளை அதனின் தானத்தில் கொண்டு வருவது. (இருபதாவது) வாஜிபுகளை அதனின் தலத்தில் கொண்டு வருவது. (இருபத்தொன்றாவது) தொழுகையின் கடைசியில் இரண்டு ஸலாம் சொல்கிறது. ஆக இவ்விருபத்தொன்றுமா யிருக்கும்.

(تشهداوت) التحيات لله والصلوات والطيبات السلام عليك
ايها النبى ورحمة الله وبركاته السلام علينا وعلى عباد الله
الصالحين اشهد ان لا اله الا الله واشهد ان محمد اعبده ورسوله

(தஷஹ்ஹுதாவது) அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யு ஹன்னபிய்யு வறஹ்மதுல்லாஹு வபறகாத்துஹு அஸ்ஸலாமு அலைனு வஅலா இபாதில்லா ஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறசூலுஹு. வாயிருக்கும்.

(قنوتاوت) اللهم انا نستعينك ونستهديك ونستغفرك ونتوب
اليك ونؤمن بك ونتوكل عليك ونثنى عليك الخيركله نشكرك
ولا نكفرك ونخلع ونترك من يفجرك اللهم اياك نعبد ولك
نصلى ونسجد واليك نسعى ونحفد ونرجو رحمتك ونخشى عذابك
ان عذابك الجد بالكفار ملحق وصلى الله على النبى محمد واله

அல்லாஹும்ம இன்னு நஸ்த ஈனுக வநஸ்தஹ்தீக வநஸ்தக்பிறுக வனதூபு இலைக்க வநுஃமினுபிக வனத்தவக்கலு அலைக்க வநுத்னி அலைக்கல் கைறகுல்லஹு நஷ்குறுக வலா •நக்புறுக வனக்லஉ வநத்றுமு மன்யப்ஜுறுக அல்லாஹும்ம இய்யாக்க நஃபுது வலக னுஸல்லீ வனஸ்ஜுது வஇலைக்க நஸ்ஆ வனஹ்பிது வனர்ஜூ றஹ்மதக வநக்ஷா அதாபக இன்ன அதாபகல் ஜித்தபில் குப்பாரி முல்ஹிகுன் வஸல்லல்லாஹு அலன்னபிய்யி முஹம்மதின் வஆலிஹி என்று ஓதுகிறதாகும். இந்த துஆ பாடமில்லாதவன்

ربنا اتنا في الدنيا حسنة وفي الاخرة حسنة وقنا عذاب النار

றப்பனு ஆதினு பித்துன்யா ஹஸனதன் வபில்ஆகிறதி ஹஸனதன் வகினு அதாபன்னுர் என்று அல்லது اللهم اغفر لي அல்லாஹும் மக்பிர்லீ என்று மூன்று விடுத்தம் ஓதவும். இந்த வாஜிபுகளில் யாதொரு வாஜிபு மறதியாகிவிட்டால் பிந்தின இருப்பில் அத்தஹிய்யாத்து ஓதியபின் வலது புறம் ஸலாம் சொல்லி சஹ்வுடைய இரண்டு ஸஜதாச்செய்து அத்தஹிய்யாத்து ஸலவாத்து துஆ ஓதியபின் இரண்டு புறமும் ஸலாம் சொல்லவும்.

இனி அவைகளை ஞாபகத்தோடு விட்டாலும். மாதியாக விட்டதில் ஸஜதா ஸஹ்வு செய்யா விட்டாலும் தொழுகையை திரும்பவும் தொழுவது வாஜிபாகும்.

فصل في سنن الصلاة

பஸ்லுன் பீ சுனனிஸ்ஸலாத்.

தொழுகையின் சுன்னத்தில் பேசும் பாடம்.

தொழுகையின் சுன்னத்துகளாவது, தக்பீர் தஹ்ரீமாவுக்காகவும், குனூத்துக்காகவும், பெருநாளையின் தக்பீருக்காகவும், இரு கையை உயர்த்துவதும், விரல்களைப் பரத்துகிறதும், தக்பீர் சுட்டும்போது தலையைத் தாள்த்தாதிருப்பதும், தக்பீர்களை இமாம் இறைந்து சொல்வதும், தனா, அவூது, பிஸ்மி, ஆமீன். இவைகளை அமர்ந்தோதுவதாகும். தனாவாகிறது:—

سبحانك اللهم وبحمدك وتبارك اسمك
وتعالى جدك ولا اله غيرك

சுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபாறகஸ்முக வதஆலா ஜத்துக வ்லாஇலாஹ கைறுக என்று ஓதுவதாகும். இன்னும் வலது கையை இடது கையின் பேரில் வைத்து அதுகளைத் தொப்புளுக்குக் கீழ் வைப்பதும், ஹலரில் வக்து விஸ்தீரணமாயிருக்கும்போது பஜ்ரிலும், லுஹரிலும், திவாலுல் முபஸ்ஸல் எஃனீ சூரத்துல் ஹுஜ்ருத்து முதல் புறூஜீ வரையிலுமுள்ள சூரத்தில் நின்றும் அஸ்ரிலும் இஷாவிலும் அவ்சதுல்முபஸ்ஸல் எஃனீ புறூஜ் முதல் லம்யகுன் வரையிலுமுள்ள சூரத்தில் நின்றும், மக்ரிபில் கிஸாறுல் முபஸ்ஸல் எஃனீ லம்யகுன்முதல் ஒடுக்கம்வரையிலுள்ள சூறத்தில்நின்றும், ஓதுவதும், றுகூஉடைய தக்பீரும் அதில் சுப்ஹான றப்பியல்அலீம் என்ற தஸ்பீஹை மூன்று விடுத்தம் சொல்வதும், இரண்டு முட்டை இரண்டு கையினால் பிடிப்பதும், விரல்களை விரித்துக்கொள்வதும், தனித்துத் தொழுகிறவனும் இமாமும் றுகூஉ விட்டு வரும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா வென்று சொல்வதும், மஃமூமும் தனித்துத் தொழுகிறவனும் உயர்ந்தபின் அல்லாஹும்ம றப்பனா லகல்ஹம்து என்று சொல்வதும், சுஜூதுடைய தக்பீரும் அதில் சுப்ஹான றப்பியல் அஃலா வென்று மூன்று விடுத்தம் தஸ்பீஹு சொல்வதும், அதை

விட்டுவரும்போது தக்பீர்சொல்வதும், றுகூஇல் சுஜூதில் ஆண்பிள்ளை வயிற்றைத் துடையைவிட்டும், முளங்கையைப் பூமியைவிட்டும் நெருக்கமில்லாத தலத்தில் கொடுங்கையை விலாவை விட்டும் அகற்றிக்கொள்வதும், அத்தஹிய்யாத்தில் வலதுகாலை நட்டி இடது காலை விரித்து அதின் பேரிலிருப்பதும், பின்னிருப்பில் அத்தஹிய்யாத்துக்குப் பின்

اللهم صل على محمد وعلى ال محمد كما صليت على ابراهيم وعلى
ال ابراهيم انك حميد مجيد وبارك على محمد وعلى ال محمد
كما باركت على ابراهيم وعلى ال ابراهيم انك حميد مجيد
اللهم اغفرلي ولوالدي ولاستاذي ولجميع المسلمين والمسلمات
والمومنين والمؤمنات الاحياء منهم والاموات
انك مجيب الدعوات

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றுஹீம வஅலாஆலி இப்றுஹீம இன்னக ஹமீதுன் மஜீத். வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமாபாறக்த அலா இப்றுஹீம வஅலாஆலி இப்றுஹீம இன்னக ஹமீதுன் மஜீத் (என்ற ஸலவாத்தும்) அல்லாஹும்மக் பிர்லீ வலிவாலிதய்ய வலிஉஸ்தாதீ வலிஜமீஇல் முஸ்லிமீன வல்முஸ்லிமாத்தி வல்முஃமினீன வல்முஃமினாத்தி அல்அஹ்யாஇ மின்ஹும் வல்அம்வாத்தி இன்னக முஜீபுத் தஅவாத்தி என்ற துஆவை ஓதவும், ஸலாமுக்காக முகத்தை வலமிடம் திருப்புவதுமாகும்.

இந்த சுன்னத்துகளில் சிலதில் பெண்பிள்ளைகள் விதர்ப்பமாவார்கள். அஃதாவது அவர்கள் முந்தின தக்பீர் கட்டும்போது கைகளைக் காதுக்குச் சமீபமாக உயர்த்தாமல் புயத்துக்கு நேரே உயர்த்துவதும், நெஞ்சின் பேரில் இருகையை வைப்பதும், றுகூஇல் விரல்களை விரிக்காமல் முட்டை இரண்டு கையால் பொதிந்து கொள்வதும், றுகூஇல் சுஜூதில் கொடுங்கையை விலா உடனும் வயிற்றைத் துடையுடனும் சேர்த்துக்கொள்வதும், இரு முழங்கையையும் பூமியோடு பணிய வைத்துக்கொள்வதும், அத்தஹிய்யாத்தில் இரண்டு காலையும் வலது பக்கம் விட்டு சவனத்தின் பேரிலிருப்பது பாகும். ஒருவன் சுன்னத்துகளிலொன்றை ஞாபகமாய் விட்டால் தஹ்றீம் தன்வீஹு இவ்விருவகை மக்றூஹுக்கிடையில் உண்டாகும் குற்றத்தை வருத்தி வைக்கிற அஸாஅத்தாயிருக்கும், ஞாபகமின்றி விட்டால் குற்றத்தை வருத்தாது. தொழுகையை மீளவைப்பது வக்திருந்தால் முஸ்தஹப்பு. சுன்னத்துடைய தவாபு வாஜிபுடைய தவாபுக்குக் குறைந்ததாகும்.

فصل في مستحبات الصلاة

பஸ்லுன் பீ முஸ்தஹப்பா திஸ்ஸலாத்

தொழுகையின் முஸ்தஹப்புகளின் பாடம்.

தொழுகையின் முஸ்தஹப்புகளாகிறது நிலையில் நிற்கும்போது சுஜூதின் தலத்தளவிலும், றுகூஇலிருக்கும்போது இருபாதத்தின் முதுகளவிலும், சுஜூதிலிருக்கும்போது மூக்கின் நுனியளவிலும், இருப்பிலிருக்கும்போது மடியளவிலும், முந்தின சலாம் சொல்லும் போது வலது தோள் புயத்தளவிலும், இரண்டாவது சலாமில் இடது தோள் புயத்தளவிலும் பார்க்கிறதும், கொட்டாவி யிடும்போது, வாயைத் திறக்காமல் இரண்டு உதட்டையும் பல்லைக்கொண்டு பிடித்துக்கொள்கிறது கொண்டாலும் தடுத்துக்கொள்கிறது, யேலாவிடில் இடதுகை முதுகினால் அல்லது சட்டைக்கையினால் வாயை மூடுவதும், தக்பீர் தஹ்ரீமாவுக்குக் கையை உயர்த்தும்போது, முன் கையைச் சட்டையை விட்டும் நீக்கிக்கொள்வதும்,

பெண்பிள்ளைகள் சட்டைக் கையை விட்டும் இரண்டு முன் கையையும் நீக்காமலிருப்பதும் அதபாகும். இரும்பலை இயன்ற மட்டுந் தட்டுவதும் ஹையஅலல் பலாஹ் என்று சொல்கிற நேரத்தில் இமாம் ஜமாஅத்துகள் எழும்புகிறதும், கத்காமதிஸ்ஸலாத் என்று சொல்லும் போது இமாம் தொழுகையில் ஆரம்பிப்பதும், கடைக்கண்ணால் வலமிடம் பாராதிருப்பதும், மூன்று ஆயத்துக் கதிகமாய் ஓதுவதும், றுகூஇல் முதுகையும் தலையையும் சரியாக வைப்பதும், சஜூது செய்யும்போது முதல் இருமுளந்தான், பின்பு இருகை, பின்பு மூக்கு, பின்பு நெற்றி, இவ்வொழுங்காய் வைப்பதும், நிலையில் வரும்போது அதற்கு மாற்றமாக முதல் நெற்றி, பின்பு மூச்கு, பின்பு இருகை, பின்பு இரு முளந்தாள் இவ்விதம் எடுப்பதாகும்.

இந்த முஸ்தஹப்பெனும் அதபைச்செய்தால் சுன்னத்துடைய தவாபுக்குத் தாழ்ந்த தவாபு கிடைக்கும். அதை விடுவது மக்ரூஹல்ல. என்கினும், தவாபு குறைவாம். முஸ்தஹப்பை அதபென்றும் பலீலாவென்றும் மந்தூபென்றும் சொல்லப்படும்,

فصل في مفسدات الصلاة

பஸ்லுன் பீ முப்ஸிதாதிஸ்ஸலாத்

தொழுகையை முறிக்கும் கருமங்களின் பாடம்.

தொழுகையில் இருக்கும்போது யாதொன்றைத் தின்றாலும் குடித்தாலும், பேசினாலும் தொழுகையைமுறித்துவிடும். அது கொஞ்சமானாலும், அல்லது மறதியாக வானாலும் சரியே. ஆனால் பல்லுகளுக் கிடையில் ஒரு கடலைப் பிரமாணமிருந்து அதை விழுங்கிவிட்டால் முறிக்காது. இன்னும் தங்கடமின்றிக் கனைக்கிறது, துப்புகிறது, அல்லது இருமல், எப்பம், கொட்டாவி இவைகளில் இரண்டு ஹர்பு உண்டாகிவிட்டால் தொழுகை முறிந்துபோகும். தங்கடத்தினாலுண்டானால் முறியாது. இன்னும் தொழுகையை இணக்கமாகுவதன்றி அதின் இனமல்லாத மிகுந்த செயலினால் தொழுகை முறியும். மிகுந்த செயலென்பது தூரத்தில் நின்றொரு மனிதன் பார்த்தால் தொழுகையில் இவன் இல்லை என்பதில் சக்காக மாட்டானே அப்படிக் கொத்த செயலாகும். ஒரு சொல்படி ஒரு பர்லில் தொடர்ச்சியாக மூன்று செயல் செய்கிறதாயிருக்கும்.

இன்னும் மற்றொருவன் தும்மலுக்கு றஹிமகல்லாஹ் என்று இவன் பிறத்தி சொன்னாலும், தன்னுடைய இமாமைத்தவிர மற்றொருவன் பிஷகாய் ஓதும்போது சொல்லிக் கொடுத்தாலும், குர்ஆன் ஷரீபைப் பார்த்தோதினாலும், தங்கடமின்றி நெஞ்சுகொண்டு கிப்லாவை மாறினாலும், முக்ததி அல்லாதவன் சொல்லிக்கொடுத்ததை எடுத்தோதினாலும், துன்யாவின் தீங்கை நினைத்து சத்தமிட்டழுதாலும், தக்பீறை இரைந்து சொல்லென்றொருவன் சொன்னதைக்கேட்டு இறைந்து சொன்னாலும், தொழுகை பசாதாகிவிடும்.

ع‍ - பர்உன் தொழுகையில் துடங்கியபின் இடையில் ஞாபகத்தோடு தங்கட மின்றியே தொழுகையை முறிக்கிறது ஹறாமாகும், தங்கடத்தால் முறிக்கிறது முபாஹாகவும், முஸ்தஹப்பாகவும், வாஜிபாகவும் இப்படி மூன்று வகைப்படும்.

முபாஹாகிறது:—தன் முதலில் ஒரு திக்ஹமெனும் கால் ரூபாய் தவறுகிறதைப் பயந்து முறிப்பது போலும்; வாஜிபாகிறது தண்ணீரில் தாழ்ந்து போகிறவனையும், தீயில் கறிந்து போகிறவனையும் மீக்ஷியாக்கி வைப்பதற்காக முறிப்பதுபோலும்; முஸ்தஹப்பாகிறது:—பர்லான தொழுகையை அதாவாக தனியே தொழுக ஆரம்பித்ததின் பின் இகாமத்துச் சொல்லப்பட்டால் அதை ஜமாஅத்துடன் தொழுகிறதற்காக முறிப்பது போலுமாகும்.

இனி நவ்வாலு றக்ஆத்தில்லாத தொழுகையில் முந்தின றக்ஆத்திற்கு ஸஜதாச்செய்து விட்டாலும், செய்யாதிருந்தாலும், ஒரு ஸலாம் சொல்லி முறித்துவிட்டு இமாமைத் தொடர்வது ஆகும். இரண்டாம் றக்ஆத்திற்கு ஸஜதாச் செய்துவிட்டால் முறிக்காமல் பூர்த்தியாக்க வேண்டும்.

இனி நவ்வாலு றக்ஆத்தாகிய தொழுகையில் முந்தின றக்ஆத்திற்கு ஸஜதாச் செய்யாதிருந்தால் முறிக்கலாம். செய்திருந்தால் இரண்டாம் றக்ஆத்தையும் சேர்த்துத் தொழுது இரு பக்கமும் ஸலாம் வாங்கிவிட்டு இமாமைத் தொடரவேண்டும். மூன்றும் றக்ஆத்திற்கு ஸஜதாச் செய்திருந்தால் முறிக்காமல் நிறப்பமாகத்தொழுது முடிக்கவும். (பின்பு) அஸ்று தவிற மற்றவத்தில் நப்லென்று நிய்யத்துச் செய்து இமாமுடன் தொடறுவான், அஸ்ரில் தொடறமாட்டான். சுன்னத்துத் தொழுகையில் தொடங்கினவன் முறிக்கப்படாது. ஆனால் லுஹருடைய அல்லது ஜும்ஆவுடைய சுன்னத்தில் தொடங்கிவிட்டால் இரண்டு றக்ஆத்துத் தொழுது ஸலாம் வாங்கிவிட்டு பின்பு இமாமைச் சேர்ந்து தொழுத பின் அந்த சுன்னத்தைக்கலாச்செய்ய வேண்டும்.

இனி பர்லு தொழுதுகொண்டிருக்கும்போது தாய் தகப்பனிலொருவருடைய கூப்பிடுதலுக்காக தொழுகையை முறிப்பதாகாது. நப்லு தொழுது கொண்டிருக்கிறதை அறிந்து கூப்பிட்டால் முறிப்பதாகாது. அறியாமல் கூப்பிட்டால் ஜவாபு சொல்லலாம். எங்கிலும் அதைக் கலாச்செய்வது வாஜிபாகும்.

فصل في مكروهات الصلاة

பஸ்லுன் பீ மக்ரூஹாதிஸ்ஸலாத்

தொழுகையின் மக்ரூஹுகளைப் பேசும் பாடம்.

தொழுகையில் மக்ரூஹு தஹ்ரீம் பதினாறும்:—(ஒன்றுவது) தன் பிடவையை அணியாமல் தலைமேல் தோள்மேல் போட்டுச் சோற விடுவது. (இரண்டாவது) சுஜூதுக்குப்போகும்போது முன்னாலே அல்லது பின்னாலே பிடவையை உயர்த்துவது. (மூன்றுவது) மலம் ஜலம் காற்று இவைகளை அடக்கிக்கொண்டு தொழுகிறது. (நாலாவது) விரல்களை நெட்டிவிடுகிறது. (ஐந்தாவது) இடுப்பில் கைவைத்து நிற்கிறது. (ஆறுவது) முகத்தை வலமிடம் யாதொரு உதுறன்றித் திருப்புகிறது. (ஏழாவது) ஆண்பிள்ளை முளங்கையை சுஜூதில் படுக்கவைக்கிறது. (எட்டாவது) மனிதன் முகத்திற் கெதிரே தொழுகிறது. (ஒன்பதாவது) காயிறுப்பிருக்கிறது அஃதாவது இருகையைப் பூமியின்பேரில் வைத்துத்தொடையை நட்டி முட்டுக்காலிறண்டையும் நெஞ்சளவில் சேர்த்து இரு புட்டியின்பேரில் உட்காருகிறதாகும். ஆனால், இருகையைப் பூமியின்பேரில் வைத்து இருபாதத்தை நட்டி இரண்டு குதிங்காலின் பேரிலிருக்கிறது மக்ரூஹு தன்ஸீஹாகும். (பத்தாவது) கொட்டாவி வந்தால் அதை விழுங்காமல் அல்லது வாயைமூடாமல் மனமுறண்டாக வாயைபிழந்து கொட்டாவி விடுகிறது. (பதினொன்றுவது) வாயையும் மூக்கையும் வீணுக்கு மூடிக்கொள்கிறது. (பனிரண்டாவது) சரீரத்தையும் பிடவையையும் சங்கடமின்றி உலுப்பி விளையாடுகிறது. (பதிமூன்றுவது) ஒரு முளமான மேட்டின் உயறத்தில் இமாமும் பள்ளத்தில் ஜமாஅத்தும் யாதொரு சங்கடமின்றி நிற்கிறது. (பதினாலாவது) உயிர் பிறுணியின் ரூபமுள்ள பிடவையை அணிகிறது. (பதினைந்தாவது) திர்ஹமுடைய கனத்த நஜீசுபட்டிருக்கிறது தெரிந்தும் கழுகாமல் தொழுகிறது. (பதினாறுவது) முந்தின ஸப்பில் இடமிருக்க பிந்தின சப்பில் நிற்கிறது. ஆனபோதே இந்த மக்ரூஹு தஹ்ரீமுகளில் ஒன்றுண்டாயிருப்பதுடன் தொழுகையை நிறைவேற்றினால் தொழுகையை மீள வைப்பது வாஜிபு.

இனி வேலை செய்கிறதற்காக வைத்திருக்கும் கேவலமான பிடவையை அணைந்து தொழுகிறதும். தங்கடமின்றி சம்மணங்கூட்டி இருப்பதும், உள்ளச்சம் கல்பின் ஒற்றுமைக் கொழிய இரு கண்ணையும் விணாக மூடிக்கொள்கிறதும், சொர்ப்பச் செயலால் கொண்டையை முடிகிறதும், ஓதலை விலக்காத காசு முதலானதை வாயில் ஒதிக்கிக்கொள்கிறதும், ஸலாமுக்கு ஜவாபு கையால் அல்லது தலையால் சைக்கினை செய்கிறதும், தங்கடமின்றி இமாம்மட்டும் பள்ளத்திலும் ஜமாஅத்துகள் மேட்டிலுமாக நின்று தொழுகிறதும், தங்கடமின்றி மிஹ்றுபுக்குள் இமாம் தன்னிரு பாதத்தையும் நிறுத்தித் தொழுகிறதும், எத்தொழுகையிலும் ஆயத்துகளை தஸ்பீஹுகளை எண்ணுவதில் கைவிரல்களை இருத்துகிறதைத் தவிற விரல்களை மடக்குகிறது கொண்டும் அல்லது தஸ்பீஹு மணியைக்கொண்டு எண்ணுகிறதும், முகத்தைத்திருப்பாமல் தேவையின்றி அங்கு மிங்கும் கண் கொண்டு பார்க்கிறதும், மக்ருஹு தன்ஸீஹா யிருக்கும்.

மக்ருஹு தஹ்ரீம் என்பது ஹறுமளவில் நெருங்கினதும், மக்ருஹு தன்ஸீஹென்பது ஹலாலளவில் நெருங்கினதுமாகும். மக்ருஹு தஹ்ரீமை அல்லாஹுத் தஆலாவுக்காக விடுகிறதுகொண்டு தவாபு கொடுக்கப்படும், அதைச்செய்வது கொண்டு ஹறுமைச் செய்வதினுலுண்டாகும் வேதனைக்குத் தாழ்ந்த வேதனை செய்யப்படும்.

இனி மக்ருஹு தன்ஸீஹைவிட்டவனுக்குக்கிடைக்கும் தவாபை விட தாழ்ந்த தவாபைக்கொடுக்கப்படும், அதைச் செய்தவனுக்கு வேதனை உண்டாகாது. ஆகிலும் அது கிலாபுல் அவ்லாவெனும் ஏற்றத்துக்கு மாற்றமாகும்.

(இன்னும்) மூக்குச்சளி காறல் துடைக்கிற துணியை மேலே போட்டுத் தொழுவதும், சோம்பலால் தலை திறந்து தொழுவதும், சட்டைக் கையை முளங்கைக்குமேல் மடனிக்கொள்வதும், யாதொரு தேவையின்றி கொஞ்சச்செயல் செய்கிறதும், தன் தலைக்குமேல் அல்லது எதிரில், சுஜூதின் தலத்தில், வலதில், இடதில், இவைகளில் உயிர்ப்பிறுணியின் ரூபமிருக்கத்தொழுகிறதும் மக்ருஹ் இருக்கும்.

تنبيه தன்பீஹ் இமாமும் தனித்துத் தொழுகிறவனும் மைதானிலும் பனிதர் முதலான பல வஸ்து நடக்கிறதை பயப்படப்படுமே அப்படிக்கொற்ற தானமடங்கலிலும் சுத்ருவெனுந் திரையை யாக்கிச்

கொள்வது முஸ்தஹப்பு. அதை விடுவது மக்ரூஹு தன் ஸீஹாகும். பெரும் பள்ளியிலும் மைதானிலும் அவருக்கு முன் சுஜூதுடைய தலத்தில் நடக்கக்கூடாது. சிறு பள்ளியிலும் வீட்டிலும் தொழுகிறவனுக்கு முன்னல் மதில் வரையிலும் சுத்ரு வின்றியே நடக்க ஆகாது. வீடு எவ்வளவு பெரியதா யிருந்தாலும் சிறு பள்ளியின் ஹுக்மா இருக்கும். பெரும் பள்ளி என்பது பிலமான சொல்படி நாற்பது முளமாயிருக்கும் அதற்குக் குறைந்தது சிறு பள்ளியா இருக்கும்.

இனி சுத்ருவில் குறைந்தது ஒருமுள நீளமும் சுண்டுவிரல் பருமனு முள்ள வஸ்துவாயிருக்கும். அதை ஒரு புருவத்துக்கு நேருக நட்டவேண்டு மென்பதில் வலது புருவத்திற்கு நேருக நட்டுவது எத்தம். நட்ட ஏலாவிட்டால் அதைக்கீழே எதிரில் வைத்துக் கொள்வதும் அது கிடையாவிட்டால் ஒரு கீறல் கீறிக் கொள்வதுமாகும்.

باب سجود السهو

பாபு சுஜூதிஸ்ஸஹ்வி

ஸஜதா ஸஹ்வை பேசும் பாடம்.

எந்த தொழுகையாவது தொழும்போது அதின் வாஜிபுகளில் ஒரு வாஜிபை இமாம் அல்லது தனித்துத் தொழுகிறவன் ஞாபகத்தோடு விட்டாலும், ஸஹ்வுநேரிட்டு ஸஜ்தா ஸஹ்வைச் செய்யாது விட்டாலும், மக்ரூஹு தஹ்ரீமுடன் தொழுகையை நிறைவேற்றப்பட்டாலும், அத்தொழுகையைத் திரும்பித் தொழுகிறது வாஜிபு. வக்துத் தவறினுலு மொக்கும். வாஜிபுகளை மறதியாக விட்டாலும், பறுலு வாஜிபுகளை மடக்கிச் செய்தாலும், அவைகளைப் பிற்படுத்தினுலும் ஸஜதா ஸஹ்வு செய்வது வாஜிபாகும். ஸஹ்வு ஸஜதாச் செய்வதின் விபரம் வாஜிபுடைய பாடத்தில் முந்திவிட்டது.

اعلم இஃலம். அறிந்து கொள்! உள்ளச்சமாவது தொழுகைக்கு ரூஹாயிருப்பதால் தொழுகை அடங்கலிலும் உள்ளச்சமாகத் தன்னை ஓர்மையாக்கி நாம் அல்லாஹுத் தஆலாவுடைய சமூகத்தில்

நிற்கிறோம். அவனை நாம் பார்க்காவிட்டாலும் அவன் நம்மைபார்க்கிறானென்றெண்ணி மனம் ஒற்றுமையாக உறுப்புகள் ஒடுங்கும்படி பயங்கரத்துடன் மாதிரியைவிட்டும் நீங்கித் தொழுகையிலுள்ள ஓதல்களான சொற்களையும், செய்கிற செயல்களையும், மறந்து விடாமல் ஞாபகத்தோடு பூர்த்தியாக்கவேண்டும். அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கிறான்.

قد افلح المؤمنون الذين هم في صلوتهم خاشعون

எஃனி:—தொழுகையில் கல்புகொண்டு பயந்து உறுப்புகளைப் கொண்டு ஒடுங்கிய முஃமின்கள் திட்டமாக ஈடேற்றம் பெற்றார்கள் என்றும், அடியான் தன் கல்பு கொண்டும் அல்லாஹுத் தஆலா அளவில் முன்னோக்கினவனாக பறுலான தொழுகையளவில் நின்று விட்டால் உறுதியாக அவன் தாய் அவனைப் பெற்ற நாளைப் போல் பாவமடங்கலைவிட்டும் அவன் தூய்மையாக தன் தொழுகையை விட்டும்திரும்புவான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. ஆகையால், இவை தொழுகையில் உள்ளச்சம் தேடப்பட்ட கருமமாயிருக்கும்.

فصل في كيفية الصلاة

பஸ்லுன் பீ கைபியத்திஸ்ஸலாத்

தொழுகிற ஒழுங்கில் பேசுகிற பாடம்.

அஃதாவது ஒருவன் தொழுகையில் புகுக நாடினால் முன் சொன்னது போல் சிறு தொடக்கு பெருந் தொடக்கை விட்டுந் துப்புரவாகி சரீரத்தையும் பிடைவையையும் நஜீசை விட்டுந் துப்பரவாக்கியபின், உறுப்புகளை ஹறாமான பார்வை, கேள்வி, கோள், புறம், பொய் இவைகளை போலொத்தவை விட்டுந் துப்புறவாக்கி இருப்பதுடன் கல்பை, வஞ்சகம், மோசம், பொறாமை, சூது, வினயம், இது போல் கொத்ததை விட்டும் துப்புறவாக்கி பாவங்களை விட்டுந் தவ்பாச் செய்து தின்யாவின் பறுக்களவில் நாட ஒட்டாமல் இயன்ற மட்டுங் கல்பைத் தடுத்து இபாதத்தை அல்லாவுக்காகக் கலப்பறுதலாக்கி நிய்யத்துச்செய்து கிப்லாவுக்கு நேராகி நின்று ஆண்பிள்ளையானவன்

இரு முன் கையை இரண்டு சட்டைக் கையை விட்டும் புறத்திப்படுத்தி இரண்டு பெருவிரலைக்கொண்டும் இருகாதின் சோணையைத் தொட்டவனாக இரண்டு கையையும் உயர்த்தி இரு முன் கையின் உள் புறத்தை கிப்லாவுக்கு நேருக்குவான். பெண்பிள்ளையானவள் தன் விரல்களின் தலைகளை இரண்டு தோள்புயத்துக்கு நேருகும்படி உயர்த்துவாள். பின்பு அந்த நிய்யத்துடன் அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல்லி நிலையில் இருபாதத்துக்கு மிடையில் நாலு விரல் மட்டும் இடைபோட்டு நின்று தக்பீர் சொன்னவுடன் தனு ஒதினவனாக இடது கை மணிக்கட்டை வலதுகை சுண்டு விரலைக்கொண்டும், பெருவிரலைக்கொண்டும் வளைய மிட்டுப்பிடித்தவனாகவும், மற்ற மூன்று விரலையும் இடது புறங்கை மீது நீட்டிப் பரத்தினவனாகத் தொப்புளுக்குக் கீழாலே வைப்பான். பெண்பிள்ளை முளங்கை விலாவில் சேர்ந்ததாக விரலை வளையமிட்டுப் பிடிக்காமல் இடது முன் கையின்பேரில் வலது முன் கையை நெஞ்சின் பேரில் வைப்பாள். பின்பு அவூதும் பிஸ்மிலும் அல்ஹம்தும் ஓதி ஆமீன் சொல்லி ஒரு ஸூறத்து அல்லது ஒரு பெரிய ஆயத்து அல்லது சிறிய மூன்று ஆயத்து ஓதவும். முக்ததீயானவன் தனுவையும், ஆமீனையும் தவிர வேறொன்றையும் ஓதக்கூடாது. ஆனல் கிறுஅத்தை இமாம் இறைந்தோதும்போது வந்து சேர்ந்த முக்ததீ தனு ஓதமாட்டான், மஸ்பூக்கானவன் தனக்கு முந்தி விட்டதைத் தொழுகிறதற்சாக எழும்பினபோதும் தனு ஓதுவான். பின்பு கிறுஅத்து முடிந்த உடன் அல்லாஹு அக்பர் என்று சொன்னவனாக றுகூஉ செய்யவும், றுகூஇல் பார்வையைக் கால் மீது வைத்து விரல்களை நல்லாகவிரித்து முட்டுக்காலைப்பிடித்து இரண்டு பறண்டை மொழியையுஞ்சேர்த்து முதுகு தலை பித்தட்டு இவைகளைச் சரியாய் வைக்கவும். பெண்பிள்ளை சரீரமெல்லாஞ்சேர்த்து முட்டுக்கால்வளைந்திருக்க விரல்களை விரிக்காமல் முட்டுக்கால் எட்டுகிற மட்டும் வைப்பாள். றுகூஇல் மூன்று தரம் அல்லது அதற்கதிகம் ஒத்தைப்பட سبحان ربي العظم ஸுப்ஹான றப்பியல் அலீம் என்று தஸ்பீஹு சொல்லவும். இமாம் سمع الله لمن حمده ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ் வென்று சொன்னவனாக எழும்பினல் முக்ததீ اللهم ربنا ولك الحمد அல்லாஹும்ம றப்பனு வலகல் ஹம்து அல்லது اللهم ربنا لك الحمد அல்லாஹும்ம றப்பனு லகல்ஹம்து அல்லது ربنا ولك الحمد றப்பனு வலகல்

ஹம்து அல்லது ربنا لك الحمد றப்பனு லகல்ஹம்து என்று சொல்லவும். தனித்துத் தொழுகிறவன் உயரும்போது தஸ்மீஉம், நிலையில் வந்தபின் தஹ்மீதும் சொல்லுவான். பின்பு ஸுஜூதுக்குக் குனியும்போது الله اكبر அல்லாஹு அக்பற். என்ற சொல்லைத் துவக்கி நெத்தியை வைக்கும்போது முடிக்கவும். அதில் முந்தி இரண்டு முட்டுக்காலையும், பின்பு இரண்டு கையையும், பின்பு மூக்கையும், பின்பு நெத்தியையும், வைத்துக் கைவிரல்களை விரிக்காமல் கிப்லாப் பக்கமாக பெருவிரல் காதுக்குச் சரியாகவும் கால் விரல்களின் நுனிகள் கிப்லாப் பக்கமிருக்கும்படிப் பாதத்தை நிறுத்தி இரண்டு கொடுங்கையை விலாவைவிட்டும் வயிற்றை இரண்டு தொடையை விட்டும் அகற்றிப் பார்வையை மூக்கின் மீதும் கன்னத்தின் மீதும் வைத்து இரு முன்கைக்கிடையில் நெத்தியை வைத்துச் சரீரத்தின் கனம் ஏழு உறுப்புகளின் மீது பொறுக்கவைத்து ஸுஜூது செய்வான். பெண்பிள்ளைகள் கொடுங்கையை விலாவோடும் வயிற்றைத் தொடையோடும் சேர்த்தவளாகச் ஸுஜூது செய்வாள். அதில் سبحان ربي الاعلى ஸுப்ஹான றப்பியல் அஃலா வென்று றுகூஇல் சொல்லிய கணக்குபடி தஸ்பிஹுச்செய்து தக்பீர் சொன்னவனாகத் தலையை உயர்த்தி முளங்கால் மீது கையை வைத்து அத்தஹிய்யாத் திருப்பைப்போல் இருந்து ஒரு தஸ்பீஹு மட்டுக்குத்தரிப்பட்டு தக்பீர் சொன்னவனாக இரண்டாம் ஸுஜூதையும்முந்தின ஸுஜூதைப் போல்செய்து முடித்தபின் இருப்பிலிருக்காமல் தக்பீர் சொன்னவனாக முதல் நெற்றி பின் மூக்கு கை முட்டுக்கால் இவ்வொழுங்கின்படி உயர்த்தி எழும்பி நிலையில் வந்து தனுவும் அவூதும் ஓதாமல் இரண்டாம் றக்ஆத்தையும் முந்தின றக்ஆத்தைப்போல் தொழவும். இரண்டாம் றக்ஆத்துடைய இரண்டு ஸுஜூதையும் விட்டெழுந்து வலது காலின் விரல்கள் கிப்லாப் பக்கமிருக்கும்படியாக நட்டி இடது காலை விரித்து இரண்டு சவனத்துக்கிடையிலாக்கி அதின்பேரில் இருந்து கொண்டு விரல்களின் நுனி முட்டுக்காலுக்கு முடுகுதலாக இருக்கும்படியாக இரண்டு தொடையின்பேரிலும் இருகையை வைத்துஇருப்பான். பெண்பிள்ளைகள் இருகாலையும் வலது புறத்திலாக்கி இடது சவனத்தின் பேரிருப்பாள். பின்பு எல்லோரும் பார்வையை மடிமீது வைத்து அத்தஹிய்யாத்தை அப்துஹு வறஸூலுஹு வரையில் ஓதுவார்கள்.

இனி அத்தஹிய்யாத்தென்று ஓதும்போது அல்லாஹுத் தஆலாவுக்குக் காணிக்கை வைக்கிறதாகவும் அஸ்ஸலாமுஅலேக்க என்று ஓதும்போது நபி ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லமவர்கள் பேரில் ஸலாம் சோல்வதாகவும் அஸ்ஸலாமு அலேனு வஅலா இபா தில்லா ஹிஸ்ஸாலிஹீன் என்று சொல்லும்போது தன் பேரிலும் வானம் பூமியிலுள்ள ஸாலிஹான அடியார்கள் பேரிலும் ஸலாம் சொல் வதாகவும், அஷ்ஹது என்றபோது சாக்ஷி சொல்வதாகவும், நிய் யத்துச் செய்து கொள்ளவும். இன்னும் அஷ்ஹது என்ற சொல் லிடத்தில் கலிமா விரலுக்கடுத்த மூன்று விரலையும் மடக்கி பெரு விரல் தலையை கலிமா விரலின் நடு மொளியில் வைத்து லாஇலாஹ வென்று சொல்லும்போது கலிமாவிரலை உயர்த்தி இல்லல்லாஹு வென்ற சொல்லிடத்தில் அவ்விரலை அமர்த்தி வைத்து இவ்விதம் சாபிக் கிணை செய்யவும். பறுளிலும் வித்ரிலும் ருத்கிபான ஸுன்னத்துகளி லும் முந்தின இருப்பில் அப்துஹு வறஸூலுஹு என்றதற்கு அதிகம் ஓதமாட்டான், பற்லில் பிந்தின இரண்டு றக்அத்திலும் பாத்திஹாமட்டும் ஓதவும். ஆனல் அதில் பாத்திஹா அல்லது மூன்று தஸ்பீஹு அல்லது வாய் மூடி நிற்கிறது இந்த மூன்றுக் கிடையில் அவனுக்கு இக்தியார் உண்டா யிருப்பதில் பாத்திஹா ஓது வது முஸ்தஹப்பாயிருக்கும். பின்பு இரண்டாமிருப்பிலும் முந்தின இருப்பின் ஒழுங்குப்படி இருந்து அத்தஹிய்யாத்து ஓதியபின் ஸல வாத்தும் துஆவும் ஓதி கன்னத்தின் வெள்ளையை பின்னுலிருப்பவர் கள் காணும்படி வலப்புறம் முகத்தைத் திருப்பித் தனித்துத் தொழு கிறவன் மலக்குகளை நிய்யத்துச்செய்தவனுகவும், இமாம் மலக்கு களையும் தன்னுடன் சேர்ந்த கவ்முகளையும் நிய்யத்துச் செய்தவனுக வும், முக்ததியானவன் இமாம் ஜமாஅத்துகளையும் மலக்குகளையும் நிய்யத்துச்செய்தவனுகவும், தஹ்ரீமாவைப்போல் இமாமுடன் அஸ் ஸலாமு அலேக்கும் வறஹ்மதுல்லாஹி என்று வலது பக்கம் ஸலாம் சொல்லி அதைப்போல் இடது பக்கமும் ஸலாம் சொல்லி முடிக்க வேண்டும்.

தஹ்ரீமாவிலும் ஸலாமிலும் இமாமுடன் சேர்ந்தாணயாகச் சொல்வது இமாமவர்களிடம் மெத்தவருசை, சாஹிபைனிடத்தில் பிறகடியாகச் சொல்வது மெத்தீவருசை.

இனி செயல்களடங்கலிலும் சேர்ந்தாணையாகச் செய்கிறது மூன்று பேர்களிடத்திலும் மெத்த வருசையாகும். ஷாபிஈ மத்ஹபில் இமாமுடன் தஹ்ரீமாவில் சேர்ந்தருணையாகச் சொல்வது தொழுகையைப் பாத்திலாக்கிவிடும். அதைத் தவிற மற்றதுகளில் சேர்ந்தருணையாகச்செய்வது மக்ரூஹு. ஆகச்சே அவர்களிடத்தில் சொல் செயலடங்கலிலும் இமாமுக்குப் பிறகடியாகவே கொண்டு வரவேண்டும்,

ஃறுஉ பற்உன் பற்ஹுக்குப் பின்னல் ஸுன்னத்தான தொழுகையில்லாவிட்டால் இஸ்திக்பாருச்செய்யவும். ஸுன்னத்து உண்டாயிருந்தால், اللهم انت السلام ومنك السلام تباركت ياذا الجلال والاكرام அல்லாஹும்ம அந்தஸ்ஸலாம் வமின்கஸ்ஸலாம் தபாரக்த யாதல்ஜலாலி வல்இக்றும் போலொத்த சிறிய துஆ ஓதி எழுந்திருந்து கொஞ்சம் நகண்டு நின்று ஸுன்னத்துத் தொழுதுமுடித்தவுடன் இஸ்திக்பாருச்செய்யவும். இஸ்திக்பாருகிறது:—

அஸ்தக் பிறுல்லாஹல் அலீமல்லதீ லாஇலாஹ இல்லாஹுவல் ஹையுல் கையூமு வஅதூபு இலைஹி என்று மூன்று விடுத்தம் சொல்லிப் பின்பு ஆயதுல் குற்ஸியை ஓதவும். அதாவது:—

அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல் ஹைய்யுல் கைய்யூமு லாதஃகுத்ஹு ஸினதுன் வலா நவ்முன்லஹு மாபிஸ்ஸமாவாத்தி வமா பில்அற்லி மன்தல்லதீ எஷ்பஉ இந்தஹு இல்லா பிஇத்னிஹி எஃலமு மாபைனஅய்தீஹிம் வமாகல்பஹும் வலாயுஹீத்தூன பிஷைஇன் மின் இல்மிஹி இல்லா பிமாஷாஅ வஸிஅ குர்ஸிய்யுஹுஸ்ஸமாவாதீ வல்அற்ல வலா எஊதுஹு ஹிப்லுஹுமா வஹுவல் அலிய்யுல் அலீம். பின்பு குல்ஹு வல்லாஹு, குல் அவூது பிறப்பில் பலக், குல்அவூது பிறப்பின்னுஸ் இம்மூன்று ஸூறுவையும் ஒவ்வொரு விடுத்தமோதி ஸுப்ஹானல்லாஹ், முப்பத்தி மூன்று விடுத்தம் அல்ஹம்து லில்லாஹ், முப்பத்தி மூன்று விடுத்தம் அல்லாஹு அக்பற், முப்பத்தி மூன்றுவிடுத்தம். ஓதி லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர் ஒரு விடுத்தமோதவும். பின்பு லாஇலாஹ இல்லல்லாஹ் பத்து விடுத்தம் திக்றுச் சொல்லி இருகையையும் நெஞ்சுக்கு நேறே உயர்த்தித் துஆ ஓதவும்.

Qb N49

فائدة دعاء بعض

பாஇதா துஆவின் அதபுகள்.

தொழுகையில் அறபல்லாத பாஷையால் துஆக் கேட்கிறது ஹறுமாகவும் தொழுகைக்கு வெளியில் மக்ருஹு தன்ஸீஹு என்றும் கிலாபுல் அவ்லாவென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. துஆவில் மிகுதி சத்தமிட்டு ஓதுவதும் மக்ருஹாயிருக்கும்.

இனி தொழுகைக்கு வெளியில் துஆச்செய்வதின் அதபாகிறது, துஆக் கபூலாகிறதை எதின் கொண்டு சாளயப்பாட்டுடனே கிப்லாவை முன்னோக்கி இரண்டு முட்டுக்காலின் பேரிலிருந்துகொண்டு இரு கையையும் வானத்தைப் பார்க்க நெஞ்சுக்கு நேராய் உயர்த்தி முன்னும் பின்னும் அல்லாஹுத் தஆலாவைப் புகள்வதுடனும் ஸலவாத்துச் சொல்வதுடனும் துஆ ஓதி முடிந்தபின் இருகையையும் முகத்தில் தடவிக்கொள்வதும் கையை உயர்த்திக் கொண்டிருக்கும்போது கையிரண்டுக்கிடையில் கொஞ்சமாகிலும் இடைவெளிஉண்டா இருப்பதும் துஆ ஸுப்ஹான றப்பிக றப்பில் இஸ்ஸதி அம்மா எஸிபூன் வஸலாமுன் அலல் முர்ஸலீன வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் என்னும் ஆயத்தை மூன்று விடுத்தம் ஓதவும்; ஒருவஸ்து உண்டாகிறது கொண்டு துஆச் செய்தால் முன்கையின் உள் புறத்தையும் ஒரு வஸ்து நீங்குகிறது கொண்டு துஆச் செய்தால் அதின் முதுகுப் புறத்தையும் வானத்தளவில் உயர்த்துவதும், அது இரண்டுமல்லாமல், அல்லாஹும்ம அன அப்துகத் தலீலுல் ஹகீருல் முன்கஸிரு காதிறுஹுல் காஇபுல் வஜிலு நாயனே திட்டமாக நான் ஊசாட்டம் உடைந்த கடிசான பயங்கறத்துடைய தாஷணிப்பான தழுமையான உன்னுடைய அடியானு இருக்கிறேன், என்று சொல்வது போலுள்ள தாள்மையாக. சாளயப்பட்டு துஆக் கேள்பதில் சுண்டு விரலையும் அதர்க்கடுத்த விரலையும் மடக்கிப் பெறு விரலையும் [illegible] விரலையும் வளையமிட்டு கலிமா விரலைக்கொண்டு சுபிக்கினை செய்தக்[illegible] உயர்த்துவதுமா இருக்கும்.

இனி தன் மனதுக்குள்ளே கேட்[illegible]கொள்ளும் குப்யா வெ[illegible] துஆவில் கை உயர்த்துதலில்லை, இந்த[illegible]படி றத்துல் முக்தார் ருஹு[illegible] பயான் முதலான கிதாபுகளில் வருகின்றன, ஷர்ஹு ஷிர்அது[illegible]

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS 110690

இஸ்லாமெனுங் கிதாபில் சொல்லுகிறார்கள். துஆச் செய்கிறவனுடைய நாட்டம் கிலுஆத்தன்றி அல்லாஹுத்தஆலாவைப் புகள்கிறதா இருப்பதால் துஆக்களுடைய கடைசியில், سبحان ربنا رب العزة ஸுப்ஹான றப்பிகு றப்பில் இஸ்ஸதி என்றோதி முடிக்கிறது முக்தாருயிருக்குமென்றும் மஜ்மஉல்பதாவியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இனி வளமையில் ஆபத்துல் குறஸியோடு ஆமனற்றஸுலு பிமாஉன்ஸில இலைஹி மிற்றப்பிஹி வல் முஃமினுன குல்லுன் ஆமன பில்லாஹி வமலாஇகதிஹி வகுதுபிஹி வறுஸுலிஹி லானுபற்றிகு பைன அஹதின் மின்றுஸுலிஹி வகாலூ ஸமிஃனு வஅதஃனு குப்றுனக றப்பனு வஇலைகல் மஸீர், லாயுகல்லிபுல்லாஹு நப்ஸன் இல்லா உஸ்அஹா லஹா மாகஸபத் வஅலைஹா மக்தஸபத் றப்பனு லாதுஆகித்னு இன்னஸ்ஸீனு அவ்அக்தஃனு றப்பனு வலாதஹ்மில் அலைனு இஸ்றன் கமாஹமல்தஹு அலல்லதீன மின் கப்லினு றப்பனு வலா துஹம்மில்னு மாலாதாகத் லனு பிஹ் வஃபு அன்னு வக்பிர்லனு வர்ஹம்னு அந்த மவ்லானு பன்ஸுற்னு அலல் கவ்மில் காபிரீன், ஷஹிதல்லாஹு அன்னஹு லாஇலாஹ இல்லாஹு வல்மலாஇகது வஉலுல்இல்மி காஇமன் பில் கிஸ்தி லாஇலாஹ இல்லாஹுவல் அஸீஸுல் ஹகீம் இன்னத்தீன இந்தல்லாஹில் இஸ்லாமு குலில்லாஹும்ம மாலிகல் முல்கி துஃதில் முல்க மன் தஷாஉ வதன்ஸிஉல்முல்க மிம்மன்தஷாஉ வதுஇஸ்ஸு மன்தஷாஉ வதுதில்லு மன்தஷாஉ பியதிகல் கைற் இன்னக அலாகுல்லி ஷைஇன் கதீற், தூலி ஜுல்லைல பின்ன ஹாரி வதூலிஜுன்னஹாற பில்லைலி வதுக்ரிஜுல் ஹய்யமினல்மையிதி வதுக்ரிஜுல் மையித மினல் ஹய்யி வதற்சுகு மன்தஷாஉ பிகைரி ஹிசாப் இதை ஓதுகிறதும் தஸ்பீஹுகள் ஓதியான பின்,

அல்லாஹும்ம லாமனிஅ லிமாஅஃதைத வலாமுஃதிய லிமா மனஃத வலா றுத்த லிமாகழைத்த வலா முபத்தில லிமா ஹகம்த வலா யன்பஉ தல்ஜத்தி மின்கல் ஜத்து அப்லலுஸ்ஸிக்ரி பஃலம் அன்னஹு இதை ஓதி லாஇலாஹ இல்லல்லாஹ்வென்று ஒன்பது விடுத்தம் ஓதி பத்தாவது.

லாஇலாஹ இல்லல்லாஹு ஹக்கன் அலைஹா நஹ்யா வஅலைஹா நமுத்து வஅலைஹா நுப் அது இன்ஷா அல்லாஹு தஆலா கதன் ஆமினீன் என்று ஓதி.

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் ஸெய்யிதில் காயி ஹுத்தி, அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் ஸெய்யிதில் மவ்ஜூதாதி; அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் ஸெய்யிதில் அஹ்லில் அற்லி வஸ்ஸமாவாத்தி, அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் ஸெய்யிதில் அவ்வலீன், அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் ஸெய்யிதில் ஆகிறீன், அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் ஸெய்யிதில் முத்தகீன், அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் ஸெய்யிதில் முர்ஸலீன், ஜஸல்லாஹு அன்னு நபிய் யனு முஹம்மதன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிமாஹுவ அஹ்லுஹு, அல்லாஹும்மர்ல அன் ஸாதாதினு அபீபக்ரினிஸ் ஸித்தீக் கித்தகிய்யி, வஉமரல் பாரூக்கின் னகிய்யி, வஉத்மான தின் னூறைனிஸ்ஸகிய்யி, வஅலிய்யினில் முற்தலல் வபிய்யி, வஅனிஸ் ஸித்ததில் பாகீன வஅனில்ஹஸனி வல்ஹுஸைனி, வஅன் ஹம் ஸத வல்அப்பாஸ், வஅனில் முஹாஜிரீன வல் அன்ஸாற் வஅன் குல்லிஸ்ஸஹாபதி றஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம அஜ்மஈன் என்றோதி,

அல்லாஹும்ம ஸல்லி அலல் முஸ்தபா ஹபீபிக முஹம்மதின் அப்திக வறஸூலி கன்ன பிய்யில் உம்மிய்யி வஅலா ஆலிஹி வஸஹ் பிஹி வஸல்லம் பத்து விடுத்தம் ஓதி பின்பு,

வஸல்லி அலா ஜமீ இல் அன்பியாஇ வல் முற் ஸலீன, வஅலா மஅலாஇகதிகல் முகற்ற பீன, வஅலா அஹ்லி தாஅதிக அஜ்மஈன் வற்ஹம்னு மஅஹும் பிறஹ்மதிக யாஅற்ஹ மற்றாஹிமீன் என் றோதி,

லகல் ஹம்து யாறப்பு யாஅல்லா. (3)
யாறஹ்மானு. (3)
யாறஹீமு. (3)

அல் அமான் அல் அமான் மின் ஸவாலில் ஈமானி யாதாஇமுல் மஃரூபி யாகதீமுல் இஹ்ஸானி யாஹாதியல் முஸல்லீன பிஹக்கி இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன், என்று மூன்று விடுத்தம் ஓதிய பின் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரிலும் மற்றும் நபிமார்கள் றஸூல்மார்கள் ஆல் அஸ்ஹாபுகள் தாபிஈன்கள் இமாம் கள் பேரிலும் பாத்திஹா ஓதி துஆ ஓதுவதும் குத்தமில்லை,

ஐந்து வக்து தொழுகைக்கும் வழமையாய் ஓதும் துஆ

அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக ஈமானன் முஸ்தகீமன் வஇழ்லன் தாஇமன் வனல்றன் றஹ்மதன் வஇல்மன்னுபிஅன் வஅகலன் காமிலன் வகல்பன் முனவ்வறன் வதவ்பீகன் இஹ்ஸானன் வதவ்பதன் நஸூஹன் வஸப்றன் ஜமீலன், வஅஜ்றன் அலீமன் வலிஸானன் தாகிறன் வபதனன் ஸாபிரன் வறிஸ்கன் வாஸிஅன், வஸஃயன் மஷ்கூறன், வதன்பன் மக்பூரன், வஅமலன் மக்பூலன் வது ஆஅன் முஸ்த ஜாபன், வஜன்னதல் பிர்தவஸி நாமன் பிறஹ்மதிக யாஅற்ஹ மற்றுஹிமீன் அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக தமாமல் உஓஇ வதமாமஸ்ஸலாதி வதமாம றில்வானிக வதமாம மக்பிறதிக, அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் ஹம்மி வல்ஹஸன், வஅவூதுபிக மினல் அஜ்ஸி வல்கஸல் வஅவூதுபிக மினல் ஜுப்னி வல்புகல், வஅவூதுபிக பின்கலபதித்தைனி வகஹ்றிர்ரிஜால்.

வளமையாக ஸுப்ஹுக்கு ஓதுகிற துஆ.

அல்லாஹும்மஜ்அல் ஸபாஹனா ஹாதா ஸபாஹன் முபாறகன் மினல்கைறி கரீபன் வஅனிஷ்ஷற்றி பாஈதன் லாகாஸியன் வலா காஸிரன் வலாமஹ்றூமா அல்லாஹும்மஜ்அல் அவ்வல யவ்மினா ஹாதாலனா ஸலாஹன் வஅவ் ஸதஹு பலாஹன் வஆகிறஹு நஜாஹன் வறபாஹா, அல்லாஹும்ம தகப்பல் மின்னா மாகான ஸாலிஹன் வஅஸ்லிஹ்லனா மாகான பாஸிதா, அல்லாஹும்மபிக அஸ்பஹ்னா வபிக அம்ஸைனா வபிக நஹ்யா வபிக நமூத்து வஇலைக்க ன்னுஷூரு அல்லாஹும்ம ஸப்பிஹ்னாமின்க சபாஹற்றிலாஇ வக்பினா ஷற்றமாபில் கழாஇ, வலாது அஸ்ஸிப்னா பில்ஜறுயிமியாகறீமு, அல்லா ஹும்மஜ்அல் ஸபாஹனா ஹாதா ஸபா ஹஸ்ஸாலிஹின, வமஸாஅனா மஸாஅஸ்ஸாகிறீன,வகுலூபனா குலூபல் காஷிஈன வஅப்தானனா அப்தானல் முதீஈன, வஅஃமாலனா அஃமாலல் முத்தகீன, வஅல் ஸினதனா அல்ஸினதத்தாகிரீன் வனப்பிஹ்னா அன்னவ்மதில் காபிலீன், அல்லாஹும்ம இன்னா அஸ்பஹ்னா மின்கபீ நிஃமதின் வஆபியதின் வஸித்ரின் பஅதிம்ம நிஃமதக அலைனா வஆபியதக வசித்றக பித்தீனி வத்துன்யா வல் ஆகிறு இன்னக அலாகுல்லி

ஷையின் கதீர், அல்லாஹும்ம யாமன் அஸ்ல ஹஸ்ஸாலிஹீன அஸ்லிஹ்ஹு, வயாமன் அன்பஹல் காபிலீன அன்பிஹ்ஹு, வயாமன் தாப அலல்முத்னிபீன, துப்அலைஹு தவ்பதன் துர்லீக அன்ஹு யா செய்யிதஹு யாமவ்லாஹு யாதல்ஜலாலி வல்இக்ரும், அல்லாஹும்ம இன்ஹு நஸ்அலுகல் ஜன்னத வமா கற்றப இலைஹா மின் கவ்லின் வபிஃலின் வஅமலின் வஇஃதிகாதின், வநவூதுபிக மினன்னார். றப் பஹு ஆதினு பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிறதி ஹஸனதன் வகினு அதாபன்னார், றப்பிக் பிர்லீ வலிவாலிஹைய்ய வர்ஹம்ஹுமா கமா றப்பயானீ ஸகீறு, வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமின்.

லுஹருடைய துஆ.

அல்லாஹும் மக்துப் லிதுல்லி வாஹிதின் மின்ஹு பறு அதன் மினன்னார் வஅமானன் மினல் அதாபி வகலாஸன் மினல் ஹிஸாபி வஜவாஸன் அலஸ் ஸிருதி, வனஸீபன் மினல் ஜன்னதி வனஜாத் தன் மினன்னாரி வல் அப்வ இந்தல் ஹிஸாபி. அல்லாஹும்ம அஹ் ஸின் ஆகிபதஹு பில்உமூரி குல்லிஹா வஅஜிர்ஹு மின் கிஸ்யித் துன்யா வஅதாபில் ஆகிறதி, வதவப்பஹு முஸ்லிமீன வஅல்ஹிக்ஹு பிஸ் ஸாலிஹீன, பிறஹ்மதிக யாஅர்ஹ மர்ருஹிமீன்.

அஸ்ருடைய துஆ.

அல்லாஹும்ம இன்ஹு நஸ் அலுக ஸலாமதன் பித்தீனி வத் துன்யா வஆபியதன் பில் ஜஸதி வஸியாததன் பில்இல்மி வல்ஹுதா வபறகதன் பிற்றிஸ்கி வஸிஹ்ஹதன் பில் அக்லி வதவ்பதன் கப்லல் மவ்த்தி வருஹதன் இந்தல் மவ்த் வமக்பிரதன் பஃதல் மவ்த், வயா ஸாமிஅ குல்லி ஸவ்தின், ஹவ்வின் அலைஹு ஸகறுதில் மவ்த். றப்பஹு லாது ஸிக் குலூபஹு பஃத இஸ்ஹதைத்தஹு வஹப்லஹு மில்லதுன்க றஹ்மதன் இன்னக அந்தல் வஹ்ஹாப் பிறஹ்மதிக யாஅர்ஹ மர் ருஹிமீன், வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

மக்ரிபுடைய துஆ.

அல்லாஹும்ம யா முகல்லிபல் குலூபி, ஸப்பித் குலூபஹு அலாதீனிக வதாஅதிக வஈமானிக வஇஸ்லாமிக வமஹப்பதிக வஷவ் கிக யாஅல்லாஹு யாஅல்லாஹு யாஅல்லாஹு. அல்லாஹும்மு

ஷர்ரிப்னு பித்தக்வா வஜம்மில்னு பில்ஆபியாஹ், வற்ஸுக்னல் ஜன்னத யாறப்பல் ஆலமீன். அல்லாஹும்ம லாதக்துல்னு பிகலபிக வலாதுஹ்லிக்னு பிஅதாபிக, வஆபினனு கப்லதாலிக, அல்லாஹும்ம அஜிர்னு மினன்னர் (ஏழு விடுத்தம்) ஸாலிமீன, வஅத்கில்னல் ஜன்னத பிஸலாமின் ஆமினீன், வகினு றப்பனு ஷற்றல் லாலிமீன, வஷற்றல் ஹாஸிதீன, வஷற்றல் முனபிகீன, வஷாரிக்னு பீதுஆஇல் முஃமினீன் வன்ஸுர்னு அலல்கவ்மில் காபிரீன். அல்லாஹும்ம இன்னு அம்ஸைனு மின்க பீ நிஃமதின் வஆபியதின் வஸித்ரின் பஅதிம்ம நிஃமதக அலைனு வஆபியதக வஸித்றக பித்தீனி வத்துன்யா வல்ஆகிறதி இன்னக அலாகுல்லி ஷையின் கதீர்.

இஷாவுடைய துஆ.

அல்லாஹும் மஹ்பல்னு பீலுல்மதில்லைலி கமா ஹபில்தனு யாறப்பனு பீலவ் இன்னஹாரி, வஸ்ரிப்அன்னு பலாஅல்லைலி கமா ஸரப்தஅன்னு பலா அன்னஹாரி, வஹ்ஷுர்னு மஅல் அப்றுரி, வஜ்அல் முன்கலபனு, இலாதாரில் கறுரி, வனஜ்ஜினு மினன்னரி, வஃபு அன்னல் அவ்ஸார் யாகப்பாரு, யாஸத்தாரு, அல்லாஹும் மஹ்பல்னு யாபய்யாவு, மின் ஜமீஇல் பலாயா வல் அஃதாஇ வல்அம்றல். பிறஹ்மதிக யர்அற்ஹ மற்றுஹிமீன்.

باب في فضائل الجماعة

பாப் பீ பலாயிலுல் ஜமாஅத்.

இமாம் ஜமாஅத்தின் வரிசைகளின் பாடம்.

ஜமாஅத்துடன் தொழுகிறது, ஆண் பிள்ளைகளுக்குக் கனமான ஸுன்னத்து, பலமான சொற்படி வாஜிபாகயிருக்கும். அதைத் தங்கடமன்றி விடுகிறது குற்றமாக இருக்கிறது.

ஒரு மனிதன் தன் வீட்டிலே தனித்துத் தொழுகிறதைக்காண பள்ளியில் ஜமாஅத்துடனே தொழுகிறது (25) தரஜா அதிகமாக இருக்குமென்றும், ஒரு மனிதன் 40-நாளைக்கு ஜமாஅத்துடனே

முந்தின தக்பீரிலே சேர்ந்து தொழுதால் அவனுக்கு நரகத்தைவிட்டும் முனபிக் தனத்தைவிட்டும் நீங்கிவிட்டானென்றும் இரண்டு உரிமைச் சீட்டு எழுதப்படுமென்றும், அல்லாஹுத் தஆலாவும், அவன் மலக்குகளும் முந்தின ஸப்புகளின்பேரில் ஸலவாத்துச் சொல்லுவார்கள். உங்கள் ஸப்புகளை நெருக்கி வையுங்கள், உங்களுடைய கைகளை ஒருவருக்கொருவர் இடியாமல் மெல்லினமாக்கி வையுங்கள், இடைகளில் ஷைத்தானுழையாம லிருக்கிறதற்காக இடைகளை அடைத்துக்கொள்ளுங்கள். யாராவது இடை கிடந்ததை தேடிப் பார்த்து அடைத்து நிற்பானேயானல் அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஒரு தரஜாவை உயர்த்தி விடுவானென்றும், உங்களில் ஒரு மனிதன் இமாமுக்கு முன்பதாகத் தலையை உயர்த்தினல் அல்லது வைத்தால் அவன் தொழுகையை அல்லாஹுத் தஆலா ஒப்புக்கொள்ள மாட்டானென்றும், ஒரு ஸப்பை ஒரு மனிதன் சேர்ந்தால் அவனை அல்லாஹுத் தஆலா சேர்த்துக்கொள்வான். முறித்தால் அல்லாஹுத் தஆலா அவனையுமுறித்து விடுவானென்றும் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள்.

ஹிக்காயத்து:—காதமுல் அஸம்மு ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கு ஒரு விடுத்தம் ஜமாஅத்தாகத் தொழுகிறது தவறிப்போனதைப்பற்றி விசனமாயிருக்க அபூஇஸ்ஹாகுல் புகாரி ரஹிமஹுல்லாஹ் என்கிறவர் மாத்திரம் கைகொடுத்து ஸபூர்செய்யுங்களென்று சொல்ல, எனக்கு ஒரு குழந்தை இறந்துபோனல் இவ்வூரில் பதினயிரம் ஜனங்கள் வரைக்கும் வந்து எனக்குக் கைகொடுப்பார்கள். என்பிள்ளைகளெல்லாம் இறந்து போகிறது எனக்கு ஒரு வருத்தமல்ல தீனுடைய முஸீபத்து துன்யாவுடைய முஸீபத்தைக் காணப் பெரிதாயிருப்பதால் இன்றையில் இத்தொழுகையை இமாமத்துடனே தொழுகிறது தவறித் தனியே தொழும்படி நேரிட்டதே இதுதான் எனக்குப் பெரிய முஸீபத்தாக விருக்குமென்று சொன்னர்கள்.

ஹிக்காயத்து:-இமாம்முஹ்யித்தீனுன்னவவீ அவர்கள் சொல்லுகிறதாவது, நான் இருபதுவருடமாக இமாம் ஜமாஅத்தைவிடாமலே தொழுதுவந்தேன் இதினிடையில் ஒரு நாளாவது எனக்கு ஷைத்

தான் ஹரக்கத்துண்டாகவில்லை. ஒரு போதையில் இஷாவினுடைய ஜமாஅத்தை விட்டு விட்டேன். அந்த ஸபபாலே காலையில் முழுக் காளியாகி ஷைத்தானுடைய ஹரக்கத்தால் எழுந்தேனென்று சொல்லி யிருக்கிறதாக (மஸ்ஹறுல் மஜாலிஸ்) என்னும் கிதாபில் வருகின்றன. இனி, ஜனங்களில்லாதிருந்தால் ஒரு மனிதனை ஒரு மனிதன் தொடர்ந்து தொழுதாலும் ஜமாஅத்துடைய வரிசை கிடைக்கும்.

باب الجماعة

பாபுல் ஜமாஅத்.

ஜமாஅத்துடைய பாடம்.

இனி ஜமாஅத்தில் குறைந்தது ஒரு முக்ததியும் இமாமு மாயிருக்கும். ஆனபோதே ஒரு முக்ததியைக் கொண்டு ஜமா அத்துடைய வருசையுண்டாகிவிடும். ஒவ்வொரு முக்ததி ஆகிலா கிய சிறு பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் வீட்டிலானாலும் ஒக்கும்.

இனி இமாமா இருக்கிறவனில் ஒரு கருமத்தை ஷர்த்தாகத் தேடப்படும். அதாவது (1) இஸ்லாமா இருக்கிறது (2) பாலிகா இருக்கிறதும் (3) ஆகிலா இருப்பதும் (4) ஆண் பிள்ளையா இருப் பதும், தொழுகை கூடுகிற மட்டில் குர்ஆனில் பாடமா இருப்பதும் (5) ஓர் ஹர்பை மறு ஹர்பாக பேதக மாக்கும் படியான நாவின் கெடுதலையை விட்டும் வயற்றோட்டத்தைப்போல் மற்றும் தங் கடங்களை விட்டும் ஸலாமத்தா இருப்பது மாயிருக்கும்.

ஆனால் சிறு பிள்ளைகள் ஒன்றுக்கொன்று இமாமத்துச்செய்து கொள்வதில் இமாம் பாலிகா இருப்பதும், நீரொளிவு போலொத்த தங்கடமுள்ளவர் ஒன்றுக்கொன்று சேர்ந்து தொழுவதில் இமாம் சுவாத்தியமாயிருப்பதும் ஷற்தல்ல. என்கிலும் இமாமுடைய ஹால் மஃமூமுடைய ஹாலைக்காண பிலமா இருக்கிறது அல்லது சரி சமானமா இருக்கிறது ஷர்த்தாகும்.

பின்னர் தொடர்ச்சைக்குள்ள ஷர்த்துகள் பத்தா இருக்கும். (ஒன்றுவது) இமாமைத் தொடருவதை முக்ததியானவன் நிய்யத்துச் செய்கிறது. (இரண்டாவது) இருவர் தலமும் ஒன்றுயிருக்கிறது. (மூன்றுவது) இருவர் தொழுகையும் ஒன்றுயிருக்கிறது. (நாலாவது) முக்ததியுடைய எண்ணத்தில் இமாமுடைய தொழுகை துரிஸ்தாயிருக்கிறது, ஆனுல் வேறொரு மத்ஹபிலுள்ளவன் முக்ததியுடைய எண்ணத்தின்படி பற்லுகளை முப்ஸிதாத்துகளைப் பேணி நடத்தினுல் அவனைத் தொடருவது கூடும்.

(பாய்தா) ஒரு இமாம் தன்னுடைய மத்ஹபில் மக்ருஹ்வராத கருமத்தில் முக்ததியுடைய மத்ஹபைப் பேணிக்கொள்வது முஸ்தஹப்பாகும். ஆகையால் தன் மத்ஹபிலுள்ள இமாமைப் பெற்றுக் கொள்ளவில்லையானுல் தனித்துத்தொழுவதைவிட அவரை தொடர்ந்து தொழுகிறது, ஏற்றமாகும். பெற்றுக்கொண்டால் முவாபிகைக் கொண்டு தொடருவது மிகவருசை. ஆனுல் முந்தின இமாமத்து மிகவும் வருசையானதால் அந்த இமாம் மருமத்ஹபிலுள்ள இமாமாயிருந்தாலும் அவரைத் தொடருவதுதான் நலமாகும்.

(ஐந்தாவது) தொழுகையில் பெண்பிள்ளைகளுடைய பாதம் அவனுடைய எந்த ஒருபக்கம் முன்னுலையாவது வலது பக்கம் இடது பக்கமாவது திரையன்றியே நேற்படாதிருக்கிறது. இது பெண் பிள்ளை ஆண் பிள்ளைகளுடனே இமாமைத் தொடர்ந்து தொழுவதிலர் இருக்கும். ஆனுல், இது பஸாதுடைய காலமாயிருப்பதால் பெண் பிள்ளை ஆண் பிள்ளைகளுடனே ஜமாஅத்தில் சேர்ந்து தொழுவது ஆகாத காரியமாகும். (ஆறுவது) முக்ததியின் குதிக்கால் இமாமுடைய குதிக்காலைக் காண முந்தாதிருக்கிறது. (ஏழாவது) இமாமுடைய திரும்புதல்களை அவரைக்காணுகிறது கொண்டு அல்லது அவருடைய சத்தத்தைக் கேட்கிறது கொண்டு, அல்லது முக்ததிகளில் சிலரைக் காணுகிறது கொண்டு, அறிகிறது. (எட்டாவது) தொழுததின் பின் அல்லது முன் இமாமை முகீம் அல்லது முஸாபிறென்றறிகிறது. (ஒன்பதாவது) இமாம் பறுலுகளைச் செய்யும்போது முக்ததீ அவருக்கு முந்தாமல் அவருடன் அல்லது அவருடைய செயலின் பிறகடியில் செய்து வருவது. (பத்தாவது) ருகுன் ஷர்த்துகளை இறுப்பதில் முக்ததீ

இமாமுக்குச் சரியாக அல்லது அவருக்குத் தாளாலேயாயிருக்கிறது. அது எவ்விதமெனில் றுகூஉ சுஜூதைது செய்கிறவன் கைக்கினையால் றுகூஉ சுஜூதை அதாச் செய்கிறவனைத் தொடராமலும் உடை உடுத்தித் தொழுகிறவன் அம்மணமாகத் தொழுபவனைத் தொடரு திருப்பதுபோல், இந்த ஷர்த்துகளில் ஒன்று தவறினுல் தொழுகை கூடாது. ஆனுல் ஒழுச்செய்தவன் தயம்மம் செய்தவனைத் தொடர்ந்தாலும், ஒரு உறுப்பைக் கழுகினவன் மஸ்ஹு செய்தவனைத் தொடர்ந்தாலும், நின்று தொழுகிறவன் இருந்து தொழுபவனைத் தொடர்ந்தாலும் இந்த சூறத்தில் ஜாயிசாகும்.

பின்னர் தொழுகையின் ஹுக்கும்களை தெறிந்த நல்ல மனிதனை இமாமாக நியமிக்கவேண்டும். ஒரு பள்ளிக்கு நியமிக்கப்பட்ட இமாம் அல்லது அவரின் உத்திரவு பெற்றவர் தொழுவிக்கிறது ஏற்றம். அப்படி நியமிக்கப்பட்ட இமாமில்லையாகில் அப்போது இமாமத்துக்குப் பாத்திபனுக் தொழுகிறது தொழுகையுடைய ஹுக்முகளைக்கொண்டு மெத்த அறிந்தவன். அதில் எல்லாரும் சரியாகிவிட்டால் அவர்களில் நல்ல ஓதுகிறவன். பின்பு, ஹறும் ஷுப்ஹத்தைப் பயந்து நடக்கும் பேணுதலுள்ளவன், பின்பு வயதுள்ளவன், பின்பு நற்குணமுள்ளவன், பின்பு, முகம் அழகானவன். பின்பு வமிஷத்தில் ஷிறப்பானவன். பின்பு உடுமானம் வெடிப்பானவன். இவ்வித ஒழுங்கின்படி இக்கருமங்களில் ஏற்றமானவன் எவனே அவனை முற்ப்படுத்தப்படும்.

இதிலெல்லோரும் சரிசரியாகி விட்டால் சீட்டுப்போடப்படும். அல்லது மிகுந்த மனிதர்கள் யாரைப் பொருந்துகின்றுர்களோ அவரை முற்படுத்தப்படும். வீட்டையுடையவன் மற்றவனைக் காண ஏற்றம். ஏற்றமல்லாதவனை முற்படுத்தினவர்கள் தீங்கு செய்தவர்களாவார்கள். இமாமத்துக்குப் பாத்திபமான மனிதன் இமாமத்துச் செய்கிறதை ஜனங்கள் பொருத்தக் கெடுவது மக்ரூஹ். பாஷிக்கெனுஞ் சினு, கள், வட்டி இதுபோலான பெரும்பாவம் பகிரங்கமானவன் இமாமத்துச்செய்வது மக்ரூஹு தஹ்ரீமாயிருக்கும்.

குருடனையும், அடுமையையும், இல்மில்லாதபட்டிக்காட்டானையும், சினுவில் பிறந்தவனையும், முகவரை கிளுத அழகான வாலிபனையும், கொச்சைப்புத்திக்காறனையும், பக்க வாதக்காரனையும், திறேக

மெல்லாம் விசிறிய வெங்குட்டக் காரனையும், நொண்டியையும், குஷ்ட வியாதிக் காரனையும், ஆனுடம்பு தறிபட்டவனையும், மலம் ஜலம் காற்று இவைகளை அடக்கிக்கொண்டு தொழுகிறவனையும். ஒத்தைக் கண்ணனையும், நம்முடைய மத்ஹபில் பர்லு, ஷர்த்து முறித்தல் இவைகளைப் பேணுவது ஷக்கான மத்ஹபுக் காரனையும் முற்படுத்துவதும் இவர்களாக முந்துவதும் மக்ரூஹ். ஆனால் இவர்களைத் தவிர ஏற்றமானவர்கள் கிடையாவிட்டால் இவர்களுடைய இமாமத்து மக்ரூஹல்ல. இன்னும் இந்த மக்ரூஹ்கள் ஜமாஅத்துடைய தவாபை அல்லப்பண்ணுது. ஆகையால் தனித்துத் தொழுவதைக்காண அவர்களுக்குப் பின்னால் தொழுகிறது ஏற்றம்.

ஸப்பு நிற்கிறதின் விபரம்.

௲ பர்உன், ஸப்பு நிற்பதில் முக்ததீ ஒருவனு இருந்தால் அவன் சிறுபிள்ளையா இருந்தாலும், பெரியவனுயிருந்தாலும், இமாமுடைய வலது பக்கத்தில் இடைவிடாமலும், முந்தாமலும், பிந்தாமலும், குதிகாலைச் சரியாக வைத்து நிற்கவேண்டும். இடது பாகத்தில் அல்லது மிகவும் பின்னாலே நிற்கிறது மக்ரூஹ். ஒரு முக்ததியைக்காண அதிகமானவர்களாயிருந்தால் பின்னாலே நிற்பார்கள். இதற்கு மாற்றம் செய்வது மக்ரூஹ். ஸப்புகள் சேர்ந்துவிட்டால் முன்னாலே பெரிய ஆண்பிள்ளைகளும் பின்னாலே சிறுபிள்ளைகளுமாக நிற்பார்கள். சிறுபிள்ளை யொருவனுயிருந்தால் ஸப்புடன் சேர்ந்து கொள்வான்.

முந்தின ஸப்பின் வரிசை.

இனி ஸப்பு நிற்கிறதில் இடைவெளியை அடைத்து சிலரோடு சிலர் சேர்ந்து தோள்புயங்களை சரியாக்கவேண்டும். இதுகொண்டு இமாமும் அவர்களை ஏவவேண்டும்.

ثہ ںد ஹதீது:— ஸப்பிலே நீங்கள் சரியாக செவ்வுறுதலாய் நில்லுங்கள், அதனாலே உங்களுடைய கல்புகள் செவ்வுறுதலாகி விடும். நீங்கள் ஒன்றுக்கொன்று தொட்டு நில்லுங்கள். அதினாலே உங்களுக்கு றஹ்மத்துச்செய்யப்படுமென்று வந்திருக்கிறது.

இன்னும், சவ்வூ ஸுபூபகும் பஇன்ன தஸ்வியதஸ்ஸுபூபி மின் இகாமதிஸ் ஸலாதி.

يسّي எஃனி:— உங்கள் ஸப்புகளைச் சரியாக்கி வையுங்கள் திட்டமாக ஸப்புகளைச் சரியாக்கி வைக்கிறது தொழுகையை நிலைபாடாக்கி வைப்பதில் நின்றுமா இருக்கும் என்றும், முந்தின ஸப்பில் இமாமுக்கு நேறே பின்னால் நின்று தொழுகிறவனுக்கு நூறு நன்மை என்றும், வலது பக்கம் நிற்பவனுக்கு எழுபத்தைந்து நன்மை என்றும், இடது பக்கம் நிற்பவனுக்கு அன்பது நன்மை என்றும், மற்ற ஸப்புகளில் நிற்பவர்களுக்கு இருபத்தைந்து நன்மை என்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

இமாமுக்கு நேறே நிற்கிறவன் மிக வருசையுடையவனு இருக்க வேண்டும். தக்பீர் தஹ்ரீமாவின் வரிசை இன்னும் தக்பீர் தஹ்ரீமாவில் சேருகிற வரிசை மிகவும் ஏற்றமாகயிருக்கிற படியால் அதைத் தவிர விடாமல் இமாமுடன் தக்பீர் தஹ்ரீமாவிலே சேர்ந்து கொள்வதில் பேணுதலா இருக்கவேண்டும். ஏனெனில் அதைப் பேணினவனுக்கு கிப்ாமத்தில் கிடைக்கும் சங்கையைக் கண்ட நேரத்தில் அதைத் தவிறவிட்டவனுக்கு அச்சங்கை கிடைக்காமலிருப்பதாகிறது அவன் நாற்பது விடுத்தம் மவ்த்தாகி நாற்பது விடுத்தம் கியாமத்துடைய அமளியையும் திடுக்கத்தையும் அனுபவிக்கிறதைக்காண மிகப்பெரிதாயிருக்குமென்றும், இன்னும், முந்தின தக்பீருகிறது துன்யாவைக்காணவும் அதிலிருக்கிற நிஃமத்துகளைக்காணவும் ஏற்றமாயிருக்குமென்றும், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளம்பற்றினர்கள்.

முந்தின தக்பீரின் வரிசையை எத்திக்கொள்கிற வக்தில் இக்திலா புண்டாயிருப்பதில் பலமான சஹீஹான சொல்படிக்கு முந்தின றக்அத்தின் றுகூஉவரையிலா இருக்கும். ஆகையால் முந்தின றக்அத்தை எத்திக்கொண்டால் அவ்வரிசை உண்டாகும். ஆனல் அதற்காக ஓடக்கூடாது. ஏனென்றால் இக்காமத்தைக் கேட்டீர்களானல் தொழுகை யளவில் நடந்துபோங்கள் ஓடாதீர்கள் அப்படி ஓடுகிறது உள்ளச்சத்தைப் போக்கி விடுமென்றும், ஒடுங்குதலையும் கனதிப்பாட்டையும் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். தீபரிக்காது போய் ஏற்றிக்கொண்டதைத் தொழுங்கள், தப்பி விட்டதை நிறப்பமாக்கி வையுங்களென்றும் ஹதீது வந்திருக்கிறது. ஆகையால் இவன் போகும்போது இமாம் றுகூவிலிருந்

தாலும், ஸுஜூதிலிருந்தாலும், வேறெந்த ஹாலி லிருந்தாலும் அவரைத் தொடரவேண்டும். நாவால் அமர்த்தியாக நிய்யத்தைச் சொல்லிக்கொண்டு றுகூவிலிருக்கும் இமாமைத் தவற விடலாகாது. என்கிலும் நெறுங்கின சமயமாயிருந்தால் கல்பில் மாத்திரம் நிய்யத்துச் செய்து கொண்டு நிலையில் தக்பீர் சொல்லி இமாமை எத்திக்கொள்ளவேண்டும்.

فصل في بيان المقتدي

பஸ்லுன் பீ பயானில் முக்ததி

முக்ததீயைப்பற்றிப் பேசும் பாடம்.

முக்ததீ என்னும் இமாமைத் தொடர்ந்தவனில் முத்ரிக் என்றும் மஸ்பூக் என்றும் இருவகை யுண்டும். (ஒன்றுவது) முத்ரிகாகிறவன் முந்தின றக்அத்திலிருந்து கடைசிவரையில் இமாமைத் தொடர்ந்தவன். இவன் கிறுஅத்தோதுவது மக்ருஹ் தஹ்ரீமாவாக இருப்பதால் அறவே கிறுஅத்தோதாமல் வாய்மூடி நிற்பான். (இரண்டாவது) மஸ்பூக்காகிறவன் முந்தின றக்அத்திற்குப்பின் வந்து தொடாந்தவன். இவன் தனக்கு முந்திவிட்டதை இமாம் ஸலாம் கொடுத்த பின் தொழுது முடிப்பான். அப்போததில் அவன் தனித்துத் தொழுகிற முன் பரிதைப் போலாயிருப்பதால் ஸனுஅவூது பிஸ்மி கிறுஅத்து இவைகளை ஓதித் தொழுகுவான். இவனுக்கு ஸஹ்வு நேரிட்டால் ஸஜதா ஸஹ்வு செய்வது வாஜிபாகும். ஆனுலிவனை மற்றொருவன் தொடர்வது ஜாயிஸாகமாட்டாது. முன் பரிதை மற்றொருவன் தொடறலாம், முன்பரிதானவன் இமாமைப் போல் கிறுஅத்தோதுவான், ஆனுல் அமர்ந்தோதும் தொழுகைகளில் இவ்விருவரும் அமர்ந்தோதுவது வாஜிபாகும். இறைந்தோதும் தொழுகைகளில் இறைந்தோதுவது இமாமுக்கு வாஜிபாகவும் முன்பரிதுக்கு அப்லலாகவுமிருக்கும். ஆனுல் இமாமைப் போல் கடப்புச்செய்யாமல் இறைந்தோதுவான். அமர்தோதுந் தொழுகைகளாகிறது ளுஹர் அசருடைய றக்அத்தடங்கலும் மஹ்ரிபுடைய மூன்றும் றக்அத்தும் இஷாவுடைய பிந்தின இரண்டு

றக்அத்தும் பகலையின் நப்லடங்கலுமா இருக்கும். இவைகளைத் தவிற உள்ளதெல்லாம் இறைந்தோதுந் தொழுகைகளாயிருக்கும். அமர்ந்தோதுவதில் குறைந்த மட்டாவது தனக்கு அல்லது தன் சமீபத்திலிருக்கிறமனிதனுக்குக் கேள்கும்படி ஓதுகிறதாம், இறைந் தோதுவதில் குறைந்தமட்டாவது முந்தின சப்படங்கலுக்குங் கேட்கும்படி ஓதுகிறதாம், இதடங்கலும் ஆண்பிள்ளைகளுக்காம், பெண்பிள்ளை யாதொரு தொழுகையிலும் இறைந்தோதாள்.

இனி தக்பீர் தஸ்மீஉ ஸலாம் இவைகளைக் கொண்டு இமாமிறைந்து சொல்வதும் முக்ததீயும் முன்பரிதும் அமர்ந்து சொல்வதும் சுன்னத்து.

முன்பரிதான ஒருவன் இறைந்தோதுகிற தொழுகையில் கிறுஅத்தை அமர்ந்தோதிக் கொண்டிருக்கும்போது அவனை ஒருவன் தொடர்ந்தால் அது முதல் இறைந்தோதுவது வாஜிபு, ஆனல் கிறுஅத்தில் கொஞ்சம் (எஃனீ) கால்வாசிபோலொத்ததை அமர்ந்தோதி யிருந்தால் துவர்க்கத்திலிருந்து ஆரம்பஞ்செய்து இறைந்தோத வேண்டும், அதிகம் ஓதி யிருந்தால் மீதத்தை இறைந்தோதி நிறப்பமாக்கவும்.

باب الوتر والنوافل

பாபுல் வித்ரி வன்ன வாபில்.

வித்ரைபும் நப்லையும் பேசும் பாடம்.

வித்று சுன்னத்துத் தொழுகை யடங்கலிலும் கிறுஅத்தோதுவது பறுலாம். வித்றுத் தொழுகையை ஒரு ஸலாம்கொண்டு மூன்று றக்ஆத்துத் தொழுவதாம், அதில் மூன்றும் றக்அத்துடைய றுகூஉக்கு முன் இரண்டுகையையும், தஹ்ரீமாவின் போலுயர்த்தி தக்பீர் சொல்லி கையைக்கட்டி குனூத்தை அமர்ந்தோதியபின் தக்பீர் சொல்லி றுகூஉ செய்யவும், மஸ்பூக்கானவன் இமாமுடன் மாத்திரம் குனூத் தோதுவான்,

றமலானில் வித்றை இமாம் ஜமாஅத்தாகத் தொழுகிறது சுன்னத்து. மற்ற நாட்களில் மக்ரூஹ். றமலானில் இஷாவின் பர்ழை அல்லது தறுவீஹை இவ்விரண்டி லொன்றையாவது இமாமுடன் தொழுதிருந்தால் வித்றையும் இமாமுடன் தொழு கலாம். அதிரண்டி லொன்றையாவது ஜமாஅத்துடன் தொழாதிருந் தால் வித்றைத் தனித்துத் தொழ வேண்டும், ஜமாஅத்தாய்த் தொழக் கூடாது.

பஜ்ரில் ஷாபிஈ இமாமானவர் குனூத் ஓதும்போது இவன் குனூத் ஓதாமல் இரண்டு கையையும் சோரவிட்டு வாய்மூடி நிற்பான். இனி பஜ்ரில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுகும்போது வாந்திபேதி போலொத்த முஸீபத்து நீங்குகிறதற்காக றுகூஉக் குப்பின் இமாமும் ஜமாஅத்தும் குனூத்ஓதுவது நமது மத்ஹ பிலுமாகும்.

இனி வித்ரில் ஸலாம் சொன்னபின் سبحان الملك القدوس சுப்ஹானல் மலிகில் குத்தூஸ் என்று மூன்று தரம் சொல்வதில் மூன்றாம் விடுத்தம் சத்தத்தை உயர்த்திச் சொல்லிப் பின் رب الملائكة والروح றப்புல் மலா இகதி வற்றூஹி என்றும் அதனுடன்,

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக பிறிழாக மின் சுக்திக வபி முஆபாதிக மின் உகூபதிக வஅவூதுபிக மின்க லா உஹ்ஸீ ஸனு அன் அலைக்க அந்த கமா அஸ்னைத்த அலா நப்ஸிக என்றும் ஓதும்படி நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்னார் களென்று ஹதீதில் வந்திருக்கிறது, வித்றுக்குப்பின் இரண்டு ஸஜ தாச் செய்வது வீண்கருமமாயிருக்கும்.

இனி ஐந்து வக்திலும் வழமையாககொண்டு வரப்பட்ட ருத்திபான சுன்னத்துகளின் விபரம் பாபுல் அவ்காதில் முந்தி விட்டது.

தஹிய்யதுல் மஸ்ஜிது தொழுகை.

இனி தஹிய்யதுல் மஸ்ஜித் இரண்டு றக்ஆத்து சுன்னத்து பள்ளிக்குள்போன உடன் அதிலுட்காற முன்தொழுகிறது வருசை யாக இருக்கும். அதை ஒரு நாளைக்கொரு விடுத்தம் தொழுதாலும் போதும்.

ஆனால் மக்ரூஹான வக்தில் பள்ளிக்குள் புகுந்தால் தொழுகாமல் தஸ்பீஹு தஹ்லீலு ஸலவாத்து ஓதிக்கொள்வது முஸ்தஹப்பு.

உழுவின் தொழுகை.

இனி ஒழுவின் தொழுகை இரண்டு றக்அத்து முஸ்தஹப்பு. அதை ஒழுச் செய்து முடிந்த பின் அல்லது குளித்த பின் ஈரம் உலரு முன்தொழுகுவதாயிருக்கும். ஆனால் தஹிய்யத்துல் மஸ்ஜிது ஷுக்றுல் ஒழுஇ எனும் இந்த இரண்டு தொழுகையும் தனிப்பட உள்ள தொழுகை இல்லாத்ததால் பர்லு சுன்னத்து முதலான தொழுகைகள் இது இரண்டுக்கும் பகரமாகிவிடும். தொழுகை யில்லாத நேரத்தில் பள்ளியில் புகுந்தால் அல்லது ஒழுச்செய்தால் அவ்வேளையில் தான் இவை இரண்டையும் தொழும்படி ஏவப்படும்.

லுஹாத் தொழுகை.

இன்னும் லுஹாத் தொழுகை முஸ்தஹப்பாகும். அதின் வக்தாகிறது:—பொழுது உதயமானது முதல் மத்திக்குக் கொஞ்சம் முன்வரையுமாகும், அதற்குத் தெரிவுதலான வக்தாவது பகலில் நாலிலொன்றுக்குப் பின்னுலியாகும், அதில் குறைந்தது (இரண்டு) றக்ஆத்து, கூடினது (பன்னிரண்டு) றக்ஆத்து. ஆனால் (எட்டு) றக்ஆத்து மிகவும் வருசையாகும். அதில் சூறத்துஷ்ஷம்சும் சூறத்துல் லுஹாவும் ஓதித்தொழுது வளமைப்படி இந்தத் துஆவை ஓதவும்.

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக தவ்பீக அஹ்லில்ஹுதா வஅஃமால அஹ்லில் எகீனி வமுனுஸஹத அஹ்லித் தவ்பதி வஅஸ்ம அஹ்லிஸ் ஸப்ரி வஜித்த அஹ்லில் கஷ்யதி வதலப அஹ்லிற் றகபதி வதஅப்புத அஹ்லில் வரஇ வஇற்பான அஹ்லில் இல்மி ஹத்தா அகாபக, அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மகாபதன் தஹ்ஜுருனீ அன் மஆஸீக ஹத்தா அஃமல பிதா அதிக அமலன் அஸ்தஹிக்க பிஹீ ரிழாக வஹத்தா உனுஸிஹக பித்தவ்பதி கவ்பன் மின்க வஹத்தா உக்லிஸ லகன்ன ஸீஹத ஹுப்பன்லக வஹத்தா அதவக்கல அலைக பில்உமூரி குல்லிஹா ஹுஸ்ன லன்னி பிக ஸுப்ஹான காலிகின்னூர், றப்பனு அத்மிம் லனு நூரனு வக்பிர் லனு, இன்னக அலாகுல்லி ஷைஇன் கதீர், வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன், இந்த துஆவை தஸ்பீஹுத் தொழுகைக்குப் பின்னும் ஓதிவரவும்.

ஸபர் குதாமுடைய தொழுகை.

இனி ஸபருடைய இரண்டு றக்ஆத்தும் அதை விட்டுத் தன் ஊருக்கு வந்து சேர்ந்தபின் குதாமுடைய இரண்டு றக்ஆத்தும் தொழுவது முஸ்தஹப்பு. ஸபருடைய தொழுகையை வீட்டிலும் குதாமுடைய தொழுகையைப் பள்ளியிலும் தொழுகவேண்டும்.

தாய் தகப்பனின் தொழுகை.

இனி ஸலாத்துல் வாலிதைனி என்று இரண்டு றக்ஆத்துத் தொழுகிறது முஸ்தஹப்பு. அதை வெள்ளியின் இரவு மக்ரிபுக்கும் இஷாவுக்கு மிடையில் ஒவ்வொரு றக்ஆத்திலும் பாத்திஹாவுக்குப்பின் ஆயத்துல் குர்ஸி பதினைந்து தரம், குல்ஹுவல்லாஹு அஹத் பதினைந்து தரம், ஸலவாத்து இருபது தரம் ஓதித் தொழுது அதினுடைய தவாபைத் தாய் தகப்பனுக்கு எத்திவைக்கிறது. இவ்விதம் நடத்திவருவதால் தாய் தகப்பனுடைய ஹக்கை இறுத்து இருவருடைய நன்றியையும் நிறப்ப மாக்கினவனுவான்.

இன்னு மொருவிதம் தாய் தகப்பனைப் பொருத்தமாக்க இரண்டு றக்ஆத்து நபில் தொழுகிறேனென்று நிய்யத்துச்செய்து தக்பீர்கட்டி ஒவ்வொரு றக்ஆத்திலும் அல்ஹம்துக்குப் பின் ஆயத்துல் குர்ஸி ஒரு தரம் குல்ஹுவல்லாஹு அஹத் மூன்று தரம் ஓதித்தொழுது ஸலாம் வாங்கின உடன் இருகையையும் உயர்த்தி,

அல்லாஹும்ம ஸல்லீத்து ஹாதி ஹிஸ்ஸலாத கத்ஜஅல்து தவாபஹா லிவாலி தய்ய யாஅலீமு யாகதீரு இக்பிர்லீ வலிவாலிதைய வஅர்லிஹிமா அன்னீ இன்னக அலாகுல்லி ஷையின் கதீர் என்ற துஆவை ஓதவும்.

(இதன் பொருள்) ஆண்டவனே நான் தொழுத இந்தத்தொழுகையின் தவாபை எனது தாய் தகப்பன் மீது ஆக்கினேன். அவ்விருவரையும் என்னைத்தொட்டும் பொருத்தமாக்கி வைத்து என் பிழையையும் அவர்களின் பிழையையும் பொறுத்தருள்வாயாக. நீ எல்லாவஸ்துவின் பேரிலும் தத்துவமுள்ளவனுகவும் அறிவுள்ளவனுகவும் மிருக்கும்.

தஹஜ்ஜத்துடைய தொழுகையின் விபரம்.

இனி தஹஜ்ஜத்துத் தொழுகிறது சுன்னத்து. அஃதாவது:— நித்திரைக்குப்பின் முளித்துத் தொழுகிறதாம். ஒருவன் நித்திரை

செய்யாதிருந்து தொழுதால் அதற்குத் தஹஜ்ஜத் தென்று பேரில்லை. என்கிலும் ஸலாத்துல் லைலி எனும் பேருண்டும், அதின் பலனு முண்டும்.

தஹஜ்ஜுதில் குறைந்தது (இரண்டு) றக்ஆத்து. நடுத்தரம் (நாலு) றக்ஆத்து, மிகுந்தது (எட்டு) றக்ஆத்தாகும். தஹஜ்ஜத்துடைய வரிசைகள் மட்டிட முடியாது. அதை இரவில் விடிய ஏழரை நாளிகை அல்லது ஒரு நாளிகை இருக்கும்போது தொழுகிறது மிகவும் ஏற்றமாகும். அதை வளமைபாக்கிய பின் உதுறன்றி விடுவது மக்ருஹு.

தஹஜ்ஜுது தொழுதபின் ஓதுகிற துஆ.

இலாஹீ இன்ன நப்ஸீ முஃபுன் வகல்பீ ஹஸீனுன் வஅக்லீ காபிலுன் வதாஅதீ கலீலுன் வமஃஸியதீ கதீருன் வலிஸானீ முகிற்றன் பிதுனூபீ பகய்ப ஹீலதீ யாஸத்தாரல் உயூபி வயாகப்பாறஸ் ஸுனூபி இலாஹீ காபதன்னுஜூமு வநாமதில் உயூனு வஅந்தல் மலிகுல் ஹய்யுல் கைய்யூமு இலாஹி கத் அக்லகதில் முலூகு அப்வாபஹா வஅகாமத் அலைஹா ஹுற்றுஸஹா வஹுஜ்ஜாபஹா வபாபுக மப்துஹுன் லிஸ்ஸாஇலீன வஹாஅனு ஸாஇலுன் பிபாபிக யாஅல்லாஹு வஹாஅனு பக்ருன் பிபாபிக யாஅல்லாஹு வஹா அனு யதீமுன் பிபாபிக யாஅல்லாஹு வஹாஅனு லாஈபுன் பிபாபிக யாஅல்லாஹு வஹாஅனு தலீலுன் பிபாபிக யாஅல்லாஹு வஹா அனு முஸ்னிபுன்பிபாபிக யாஅல்லாஹு இலாஹீ கத்மதத்து யதைய்ய இலைக்க வஹுமா மம்லுவ்வதானி பிதுனூபி வஅய்னுப லிற்றஜாஇ மம்தூததானி இலாஹீ வஇன்லம் தக்பிர்லீ வதர்ஹம்னீ லஅகூனன்ன மினல் காஸிரீன் றப்பனு தகப்பல் மின்னு இன்னக அந்தஸ் ஸமீஉல் அலீம் வதுப் அலைனு இன்னக அந்தத் தவ்வா புற்றஹீம் வல் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்,

தஸ்பீஹு தொழுகையின் விபரம்.

இனி தஸ்பீஹு தொழுகை நாலு றக்ஆத்து முஸ்தஹப்பாகும். அதை மக்ருஹான வக்தைத்தவிற மற்ற நேரமடங்கலிலும் அல்லது பகலிலும் இரவிலும் ஒவ்வொரு விடுத்தம் அதர்க்கேலாவிடில் வாரத்திலொரு விடுத்தம் அல்லது மாதத்திலொரு விருத்தம் அல்லது வருடத்திலொரு விடுத்தம் அல்லது வயதிலொரு விடுத்தமாவது தொழவும்.

அதில் மட்டிடக் கூடாத தவாபு உண்டா இருக்கிறதென்று ஹதீதுகளில் வந்திருக்கிறது.

அத்தொழுகையின் விபரமாவது:—நாலு றக்ஆத்தை நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டி தனை ஓதியபின், சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். என்று கிறுஅத்துக்கு முன் பதினைந்து தரம், கிறுஅத்துக்குப் பின்னும், றுகூஇலும், இஃதிதாலிலும் ஒவ்வொரு ஸஜதாவிலும் அதினிடை யிருப்பிலும் ஆக இவ்வாறு தலத்தில் பத்து பத்துத் தரமாக ஒவ்வொரு றக்ஆத்திலும் எழுபத்தைந்து விகிதம், நாலு றக்ஆத்திலும் முன்னூறு தஸ்பீஹு ஓதி, அத்தஹிய்யாத்தும் ஸலவாத்தும் துஆவும் ஓதியபின் ஸலாம் கொடுக்கு முன் மேலே லுஹார்த்தொழுகையில் குறித்த அல்லாஹும்ம இன்னீ அஸ் அலுக தவ்பீக அஹ்லில் ஹுதா என்ற துஆவை பூறுவும் ஓதி ஸலாம்சொல்லவும். றுகூஇலும், ஸுஜூதிலும் அததினுடைய தஸ்பீஹுக்குப் பின் இதற்குச் சொல்லிய தஸ்பீஹை ஓதவும். இந்த தஸ்பீஹு தொழுகையில் பாத்திஹாவுக்குப் பின் அல்ஹாக்கு முத்தகாதுரு, வல்அஸ்ரி, குல்யா அய்யுஹல்காபிரூன, குல்ஹு வல்லாஹு இந்த நாலு சூராத்துகளையும் ஓதுவது ஏற்றமாகும். இனி தஸ்பீஹை மறதியாகவிட்டாலும் அல்லது குறைத்தாலும் அடுத்த இடத்தில் ஓதலாம்.

தறுவீஹு தொழுகையின் விபரம்.

இனி தறுவீஹு தொழுகை றமலான் மாதத்தில் பத்து ஸலாம் கொண்டு இருபது றக்ஆத்துத் தொழுகிறது ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் ஸுன்னத்து முஅக்கதாவாகும். அதை ஜமாஅத்துடன் தொழுவது ஸுன்னத்துல் கிபாயாவாகும். அத்தொழுகையில் குர்ஆன் கத்தம் செய்வதை கவ்முகளின் சடைவுக்காக விடாமல் றமலான் மாதமடங்கலிலும் தறுவீஹில் குர்ஆன் முழுவதும் ஓதி ஒரு கத்தம் தமா மாக்குவது ஸுன்னத்தாகவுமிருக்கும்.

ஆனலிக்காலத்தில் அநேகர்களுக்கு சடைவுண்டாகி தறுவீஹைத் தொழுகாதவர்களாயிருப்பதால் கவ்முகள் சடைவாகா

திருப்பதற்கு ஆயத்துகள் சூறுக்களோதி இமாம் ஜமாஅத்தாகத் தொழுகிறது வருசையாகுமென்று இக்தியாறெனும் கிதாபில் வருகின்றது.

தருவீஹு டையவக்தாகிறது இஷாத் தொழுதபின்தொடுத்து கிளக்கு வெளுக்குவரையிலாகும். அதில் நவ்வாலு றக்அத்துக்கிடையிலும் தருவீஹின் முடிவுக்கும் வித்ருக்கு மிடையிலும் நாலு றக்ஆத்தின் கத்ருக்கிருக்கிறது முஸ்தஹப்பு. அந்த இருப்புகளில் திக்று தஸ்பீஹு ஸலவாத்து முதலானவைகள் ஓதிக்கொள்வது நலமாகும். சும்மா இருக்கிறதும் குற்றமில்லை. தஸ்பீஹாகிறது:—

சுப்ஹானதில் முல்கி வல் மலகூதி சுப்ஹான தில்இஸ்ஸதி வல் அலமதி வல்குத்றதி வல்கிப்ரியாஇ வல்ஜபரூதி சுப்ஹானல் மலிகில் ஹய்யில்லதீ லாயமூது, சுப்பூஹுன் குத்தூசுன் றப்புல் மலாயிகதி வற்றூஹி லாஇலாஹ இல்லல்லாஹு நஸ்தக்பிறுல்லாஹ நஸ்அலுகல் ஜன்னத வனவூதுபிக மினன்னுரி, என்று மூன்று தரம் ஓதவும், ஆனல் இவ்விடம் வழக்கம் தக்பீர் கட்டுவதற்கு முன் அஸ்ஸலாத்து சுன்னத்துத் தருவீஹ் ஜாமிஅதன் அஜறகு முல்லாஹு றஹிமகு முல்லாஹு கபறகு முல்லாஹு லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் என்று சொல்லியபின் இரண்டு றக்அத்துத் தொழுது.

பழ்லுன் மினல்லாஹி வநிஃமதுன் வமச்பிரதுன் வறஹ்மதுன் வஆபியத்துன் வஸலாமா, லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து, என்று சொல்லவும். முந்தின தருவீஹு நாலு றக்அத்துத் தொழுத பின் முன் சொன்ன தஸ்பீஹு சுப்ஹான தில்முல்கி வல்மலகூத்து, முடிய மூன்று தரம் ஓதி அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷறீகலஹு, வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலுஹு, மூன்று தரம் சொல்லவும். பின்பு இமாம்,

அல்லாஹும்ம இன்னா நஸ்அலுகல் ஜன்னத வற்றுஃயத வநவூதுபிக மினன்னுரி, யாகாலிகல் ஜன்னதி வன்னுரி, பிறஹ்மதிக யாஅஜீசு யாகப்பாரு யாகரீமு யாஸத்தாரு யாஹலீமு யாபாரு, யாறஹீமு யாஜப்பாரு! அல்லாஹும்ம அஜிர்னா மினன்னுரி யாமுஜீர் யாமுஜீர் யாமுஜீர் அல்லாஹும்ம இன்னக அபுவ்வுன் துஹிப்புல் அப்வ பஃபு

அன்னு யாகரீமு யாகரீமு யாதல்மஃரூபி யாகதீமல் இஹ்ஸானி அஹ் ஸின் இலைனு பிஇஹ்ஸானிகல் கதீமி, வற்ஹம்னு பிறஹ்மதிக யாஅற்ஹமற்றுஹிமீன் என்று துஆ ஓதவும்.

பின்பு அல்பத்ரு முஹம்மதினில் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி வஸல்லம் லாஇலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து என்று சொல்லி எழுந்து இரண்டுறக்அத்துத் தொழுது பலு லுன் மினல்லாஹியை முற்றிலும் சொல்லவும்,

இரண்டாவது தருவீஹ் நாலு றக்அத்தும் தொழுத பிறகு முன் சொன்ன தஸ்பீஹை மூன்று தரம் சொல்லவும். பின்பு,

அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் வஸல்லிஅலா ஜமீஇல் அன்பியாஇ வல்முர்ஸலீன, வல்மலாஇகதில் முகர்றபீன வஅலாகுல்லி மலகின் வஅலாகுல்லி இபாதிகஸ்ஸாலிஹீன, வஅலாஅஹ்லி தாஅதிக அஜ்மஈன், வர்ஹம்னு மஅஹும் பிறஹ்மதிக யாஅற்ஹ மற்றுஹிமீன். மூன்று தரம் சொல்லவும், பின் இமாம் சொன்ன துஆவை ஓத வும். பின்பு,

கலீபது றசூலில்லாஹி பித்தஹ்கீகி, கைருல் பஷரி பஃதல் அன்பியாயி பித்தஸ்தீகி அமிருல் முஃமினீன அபூபக்ரி னிஸ்ஸித்தீகு றலியல்லாஹு தஆலா அன்ஹு, லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து என்று சொல்லி எழுந்து இரண்டு றக்அத்துத் தொழுது பலுலன் மினல்லாஹி முகியச் சொல்லவும். மூன்றுவது தருவீஹ் நாலு றக்அத்தும் தொழுத பின், முன் சொன்ன தஸ்பீஹை மூன்று விடுத்தம் ஓதி,

சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல் லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம், மூன்று விடுத்தம் சொல்லவும், பின்பு இமாம் முன் சொன்ன துஆவை ஓதவும். பின்பு,

முஸைய்யினுல் மஸ்ஜிதி வல்மின்பரி வல்மிஹ்றுபி ஆமிருல் முஃமினீன உமருப்னுல் கத்தாபி றலியல்லாஹு தஆலா அன்ஹு,

லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து, என்று சொல்லி நாலாவது தருவீஹ் நாலு றக்அத்தும் தொழுத பின் முன் சொன்ன தஸ்பீஹை மூன்று விடுத்தம் ஒதி,

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அலீமி வபிஹம்திஹி அஸ்தக்பிருல்லாஹ றப்பீ மின் குல்லி தன்பின் வஅதூபு இலைஹி மூன்று தரம் சொல்லவும். பின்பு, இமாம் முன் சொன்ன துஆவை ஒதவும். பின்பு,

ஜாமிஉல் குர்ஆன் காமிலுல் ஹயாஇ வல்ஈமான் துன்னூறைனி அமீருல் முஃமினீன உத்மானுப்னு அப்பான் றலியல்லாஹு தஆலா அன்ஹு, லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து என்றோதி எழுந்து இரண்டு றக்அத்துத் தொழுது பலுலுன் மினல்லாஹி முகியச் சொல்லவும் ஐந்தாவது தருவீஹ் நாலு றக்அத்துத் தொழுத பின் முன் சொல்லிய தஸ்பீஹை மூன்று தரம் சொல்லி,

அஸ்தக்பிருல்லாஹல் அலிய்யல் அலீம் அல்லதீ லாஇலாஹ இல்லாஹுவல் ஹைய்யுல் கைய்யூமு கப்பாரத்து னூபி, ஸத்தாருல் உயூபி, அல்லாமுல் குயூபி, கஷ்ஷாபுல் குறூபி, யாமுகல்லிபல் குலூபி வல்அப்ஸாரி, வஅதூபு இலைஹி மூன்று தரம் சொல்லவும், பின்பு இமாம் சொன்ன துஆவை ஒதவும். பின்பு.

அஸதுல்லாஹில் காலிபு மல்ஹருல் அஜாஇபு வல் கறாஇபு, இமாமுல் மஷாரிகி வல்மகாரிபி, ஆமீருல் முஃமினீன அலிய்யுப்னு அபீதாலிபின் றலியல்லாஹு தஆலா அன்ஹு, லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து என்று சொல்லவும், பின்பு இமாம் இந்தத் துஆவை ஒதவும்.

அல்லாஹும்ம மஜ்அல்னா பில்ஈமானி காமிலீன், வலிபறாயிலிக முஅத்தீன், வலிஸ்ஸலாதி ஹாபிலீன் வலிஸ்ஸகாதி பாஇலீன், வலிமா இன்தக தாலிபீன் வலிஅப்விகறாஜீன் வபில்ஹுதா முதமஸ்ஸிகீன் வஅனில்லக்வி முஃரிளீன், வபித்துன்யா ஸாஹிதீன் வபில் ஆகிறதி றாகிபீன் வபில்கலாஇ றாலீன் வலின்னஃமாஇ ஷாகிரீன் வஅலல் பலாஇ ஸாபிரீன் வதஹ்த லிவாஇ ஹபீபிக வஙபிய்யிக வஸபிய்யிக

முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம யவ்மல் கியாமதி லாயிதீன் வஇலல் ஹவ்லி வாரிதீன் வமின் ஸுந்துஸின் வஇஸ்தப்ற கின் முதலாபிஸீன் வமின்ஹூரின் ஈனின் முதஸவ்விஜீன், வமின் தஆமில் ஜன்னதி ஆகிலீன், வமின் லபனின் வஅஸலின் முஸப்பின் ஷாரிபீன் பிஅக்வாபின் வஅபாரீக வகஃஸின் மின்மஈனின், மஅல்ல தீன அன்அம்த அலைஹிம் மினன்னபிய்யீன வஸ்ஸித்தீகீன வஷ்ஷு ஹதாஇ வஸ்ஸாலிஹீன வஹஸுன உலாஇக றபீகா தாலிகல் பல்லு மினல்லாஹி வகபாபில்லாஹி அலீமா, அல்லாஹும்மஜ்அல்னு பீ ஹாதஷ்ஷஹ்ரிஷ்ஷரீபி மினஸ்ஸுஅதாஇல் மக்பூலீன, வலாதஜ் அல்னு யாஅல்லாஹு யாஅல்லாஹு யாஅல்லாஹு மினல்அஷ்கியா இல் மர்தூதீன் அல்லாஹும்ம வஇன்னலக பீகுல்லி லைலத்தின் மின்ல யாலீ ஷஹ்ரி றமலான உதகாஅ வதுலகாஅ வஉமனுஅ வகுலஸாஅ பஜஅல்னு யாறப்பனு மின்உதகாஇக வதுலகாஇக வஉமனுஇக வகுலஸாஇக மினன்னரி வல்அப்வ இந்தல் ஹிஸாபி வஸல்லல் லாஹு வஸல்லம அலா கைரி கல்கிஹி செய்யிதினு முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மஈன் பிறஹ்மதிக யாஅற்ஹ மற்றுஹி மீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். பிறகு அவ்திரு றஹிமகுமுல்லாஹு கபரகு முல்லாஹு லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லா ஹில் ஹம்து என்று சொல்லி எழும்பி வித்ருத் தொழுகவும்.

باب قضاء الفوائت

பாபு களாஇல் பவாயித்.

தப்பிவிட்ட தொழுகையை நிறைவேற்றும் பாடம்.

தப்பிவிட்ட தொழுகைக்கும் வக்திடையதொழுகைக்கு மிடையில் தர்த்திபு வாஜிபாயிருக்கும், அதின் விபரமாவது ஒருவனுக்கு ஐந்து வக்துத் தொழுகை வரையிலும் களாவாகயிருந்து வக்துத் தொழுகைவந்து விடுமானல் அந்தக்களாவைத்தொழுததின் பின்னல் தான் வக்தின் தொழுகையைத் தொழவேண்டும். அது வித்ருயிருந்

தாலுமொக்கும், அதையும் பஜ்ருக்கு முன்கலாச்செய்யவேண்டும். ஸாஹிபுத் தர்த்தீப்பெனுந் தர்த்தீபு வாஜிபாயுள்ளவன் தப்பிவிட்டதைக் கலாச் செய்யாமல் வக்தியாவை அதை விட முற்படுத்தினல் கூடாது. (இன்னும்) ஒருவனுக்குச் சில தொழுகைகள் கலாவாயிருந்தால் அவைகளைச்கலாச்செய்யும்போது பஜ்ரு, ளுஹறு, அஸ்ரு, மஃரிபு, இஷா, இவ்விதமாக ஒழுங்குடன் தொழவேண்டும்.

ஆனல் தப்பிவிட்ட தொழுகைகள் வித்றைத் தவிர தான் புஆகானது. முதல் ஐந்து வக்துக்கு அதிகமாயிருந்தாலும், அல்லது கலாவை மறந்து வக்திய்யாவான தொழுகையைத் தொழுது விட்டாலும், அல்லது வக்திய்யான தொழுகையின் வக்து கிட்டுமையாய் விட்டாலும் தர்த்தீபு விழுந்துபோம். தவறிப்போன தொழுகை ஐந்துக்கு அதிகப்பட்ட காரணத்தால் தர்த்தீபு விழுந்து போன பின் அவைகளைச் செய்து வந்ததில் ஐந்துக்குக் குறைவாய் விட்டாலும் தர்த்தீபு மீளாது.

இனி ஸபரில் கஸ்ருன தொழுகை தவற விட்டதை ஹலரில் கலாச் செய்தால் கஸ்ருகவே தொழவேண்டும்.

ஆனல் நஷஇல் நின்று தொழயேலாமல் தப்பிவிட்டதை சுவாத்தியமான பின் கலாச்செய்தால் நின்று தான் தொழவேண்டும். இருந்து தொழுதல் கூடாது.

இனி சிறு பிள்ளை இஷாத் தொழுதபின் இஹ்திலாமாகி பஜ்ரு வக்து தப்பின பின் முளித்தால் அந்தத் தொழுகையைக் கலாச் செய்வது அவன் பேரில் வாஜிபாகும்.

இனி யாதொரு தங்கடமின்றித் தொழுகையை வக்தை விட்டும்பிர்ப்படுத்துகிறது பெரும் பாவமாகும். அதைக்கலாச்செய்வதினல் அந்தப் பாவம் நீங்காது. எங்கிலும் அதைக்கலாச் செய்வதுடன் தவ்பாச் செய்கிறது கொண்டு அல்லது ஹஜ்ஜூச் செய்கிறது கொண்டு அந்தப் பாவம் நீங்கும். ஆதலால் தொழுகையை வக்தை விட்டும் பிர்ப்படுத்தாமல் அதின் பேரில் மிகவும் பேணுதலாய்க் கொண்டு வரவேண்டும்.

அல்லாஹூத் தஆலா, فويل للمصلين الذين هم عن صلاتهم ساهون பவைலுன் லில்முஸல்லீ னல்லதீனஹூம் அன்ஸலாத்ஹிம் ஸாஹூன் என்று திருவுளமாயிருக்கிறன்.

எஃனி:—வைலெனும் ஓடையாகிறது தங்களுடைய தொழுகையை விட்டும் மறந்து வக்தை விட்டும் அதைப் பிற்படுத்தித் தொழுவார்களே அவர்களுக்காயிருக்கும்.

ஆனால் முஸாபிருனவன், கள்ளர்களைப் பயப்படுவதினாலும், பிள்ளையின் தலை வெளியில் பிறப்பட்ட நேரத்தில், மறுத்துவச்சி அல்லது சுற்றத்தார் நோவினையைப் பயப்படுவதினாலும், இவ்விதமான தங்கடத்துக்காகப் பிற்படுத்துவது ஆகும்.

இனி யாதொருவன் பேரில் தப்பிவிட்ட தொழுகை உண்டாயிருக்க அவனுக்கு மவுத்து முடிகிவிட்டால் அதைத் தொட்டும் பித்யாக் கொடுக்கும்படி வஸிய்யத்துச் செய்கிறது அவன் பேரில் வாஜிபு. அப்படி வஸிய்யத்துச் செய்து மவுத்தானால் அவன் முதலில் மூன்றிலொரு பங்கு எடுத்து வித்ருத்தொழுகை யுள்பட ஒவ்வொரு தொழுகைக்கும் ஒவ்வொரு நோன்புக்கும் அரை மறக்கால் விகிதம் மணிக்கோதுமை ஸதகாக்கொடுக்கவேண்டும். பித்ருவைப் போல் அந்த அரை மறக்காலாகிறது மதருஸ் படிக்குச் சுமார் ஒண்ணேயரைக்கால் படியாகும். அதின் கிரயத்தையும் கொடுக்கலாம்.

இனி அவன் வஸிய்யத்துச் செய்யாவிட்டால் அவனுடைய வாரிசுகள் இந்தப் பிரகாரம் கொடுக்கிறது முஸ்தஹப்பு. இப்படி பித்யாக் கொடுத்தால் அல்லாஹுத்த தஆலா அவனுடைய கலாத் தொழுகையின் குற்றத்தைப் பொறுத்துக்கொள்வான். இன்ஷா அல்லாஹுத்த தஆலா. இன்னும் ஸதகாவுடைய தவாபும் சந்தாபமின்றிக் கிடைக்கும்.

ஆதலால் முஸ்லிமாகிய சகோதரர்களே! நீங்கள் மவுத்தாகு முன் உங்களுடைய முதல்களை எல்லாம் அனந்தரக்காரர்கள் பங்கிட்டுக் கொண்டுபோகுமுன்பாகவும் உங்களுடைய வஸிய்யத்தை அவர்கள் நிறைவேற்றுமல் விட்டு விடுவதற்கு முன்பாகவும் உங்கள் பேரில் விதியான ஹக்குகளை அததின் பிரகாரம் நடத்திக் கொள்வீர்களாக. ஏனென்றால் நீங்கள் கண் மூடின உடன் அந்த முதல் உங்களுடைய பாத்யத்தை விட்டும் நீங்கி அனந்தரக்காரருடைய முதலாகிவிடும். வஸிய்யத்துச் செய்திருந்தால் அதில் அவர்களுக்கு யாதொரு பாத்திபமுமிராது, அதில் உங்களுக்கு கைறுன வேலைகளைச் செய்ய இடம்பாடாகும்.

அறிந்து கொள்ளுங்கள் ஸாலிஹானவர்களிலொருவர் தன்னுடைய கூட்டாளி ஸக்ருத்து ஹாலிலிருப்பதைக் கேள்விப்பட்டு அவருடைய வீட்டுக்குப்போய் ஹாலிருனார்கள். அதினிடையில் அவருடைய அஜல் தீர்மானமாகி மரண மானார். உடனே அவருடைய தலை மாட்டிலிருந்த விளக்கை அமர்த்தினார்கள். அவ்விடத்திலிருந்த ஜனங்கள் ஏன் விளக்கை நூர்ந்று இருளாகும்படி செய்தீர்கள் எனக்கேட்டதற்கு அவருடைய ரூஹு அவருடைய சரீரத்திலிருக்கும் வரையில் விளக்கும் எண்ணெயும் அவருடைய முதலாயிருந்தது, எப்போது ரூஹு நீங்கி விட்டதோ அப்போது அவைகள் அவருடைய தல்ல. அனந்தரக்காரருடைய முதலானதால் அவர்களுடைய அனுமதியன்றி எப்படி விளக்கெரியலாமென்று யோசித்து விளக்கை அமர்த்தினேனென்றார்கள். ஸுப்ஹானல்லாஹ் அந்த மனிதன் எவ்வளவுபட்டினியும் பசியுமாகயிருந்து இரவுபகல் தூக்கமற்றுக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த முதல் அவருக்கு உதவாமலாகி விட்டதே என்பதையாவது நீங்கள் நன்றாக யோசித்து உங்களுடைய உள்ளத்தில் உறுதியாகத்தறிபடுத்தி இப்படியாகுமுன் உங்கள் முதலைக்கொண்டு வேண்டிய நன்மைகளைச்செய்து கலாவான தொழுகைகளையும் நிறைவேற்றி வந்து பலன் பெறுவீர்களாக ஆமீன்.

باب في فضايل الجمعة

பாபுல் பீ பளாயிலுல் ஜும்ஆ

ஜும்ஆவுடைய வரிசைகளைப் பேசும் பாடம்.

قال الله تعالي يا ايها الذين امنوا اذا نودي للصلوة من يوم الجمعة فاسعوا الي ذكر الله وذرا البيع ذالكم خير لكم ان كنتم تعلمون

எஃனீ:—ஈமான்கொண்ட மானிடர்களே! ஜும்ஆவுடைய நாட்களில் தொழுகைக்காக கூப்பிடப்பட்டுதானல், (எஃனீ பாங்கு சொல்லப்பட்டுதானல்) அல்லா உடைய திக்ரெனும் தொழுகையளவில் தீவிரமாய் செல்லுங்கள். வியாபாரம் கொடுக்கல் வாங்

கல்களை விட்டு விடுங்கள். நீங்கள் அறிவீர்களானால் அப்படிச் செல்லுகிறது உங்களுக்கு நலவானதாயிருக்குமென்று அல்லாஹுத் தஆலா குருஆனில் திருவுளம் பற்றினன்.

ஹதீது:—ஜும்ஆவுடைய நாளாகிறது இரண்டு பெருநாளைக் காணவும் மற்ற நாள்கள் அடங்கலைக்காணவும் ஏற்றமாயிருக்கும். அந்தநாள் தொழுகை அவன்பேரில் கடமையாயிருக்கும். யாராகிலும் ஒருமனிதன் தங்கடமன்றி விடுவானேயானல் அவன் கருமத்திலும் பரக்கத்தில்லை, அவனுக்கு ஹஜ்ஜுடைய பலனுமில்லை ஸதகாவுடைய நன்மையுமில்லை, தொழுகையுடைய வரிசையுமில்லை. அல்லாஹுத்தஆலா என் ஷபாஅத்தை அவனுக்குக்கொடுக்கமாட்டான். அவன் இபாதத்தை அல்லாஹுத் தஆலா ஒப்புக்கொள்ளமாட்டான் என்றும், ஜும்ஆவாகிறது பகீர்களுக்கு ஹஜ்ஜாகவும், மிஸ்கீன்களுக்குப் பெருநாளாகவு மிருக்குமென்றும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ்ஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினர்கள்.

ஹிக்காயத்து:-மைமூறதிபுனு ஸலீஸு றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஒரு கப்ருஸ்தானுக்குப்போய் கபுராளிகளுக்கு ஸலாம் சொன்னர்கள். அப்போது, ஒருகபுரிலிருந்து ஒருவரெழும்பி இவர்களைப்பார்த்துத் துன்யாவுடையவர்களே! நீங்கள் மாதமொன்றுக்கு நாலு ஹஜ்ஜு செய்கிறீர்கள், உங்களுக்கே ஸுபசோபனமென்றர். அப்போது, இவர்கள் அப்படி நாங்கள் எங்கே நாலு ஹஜ்ஜுசெய்கிறோமென்று கேட்டார்கள். அதற்கு அந்த கபுராளி சொல்லுகிறர். நீங்கள் ஜும்ஆவுக்குப் போகிறீர்களே அதாகிறது கபூல்செய்யப்பட்ட ஹஜ்ஜென்று அறியமாட்டீர்களோ என்று சொன்னர்கள்.

ஹிக்காயத்து:—தைநூரி என்கிறவர்கள் அவுஸாயி றஹிமஹுல்லாஹ் அவர்களைத்தொட்டும் பேசிவருகிறர்கள்; அதாவது, எங்களிடம் ஒரு வேட்டைக்காரன் இருந்தான். அவன் ஜும்ஆ நாளையில் வேட்டைக்குப்போனதில், அவனையும், அவனுடைய கோவேறுகழுதையின் காதும், வாலுந்தவிர மற்ற உறுப்புகளையெல்லாம் பூமி விழுங்கியிருந்தது. இதை மனிதர்கள் பார்த்து இந்த மனிதன் ஜும்ஆ தொழுகையை விட்டு விட்டதினல் இந்த அதாபு துன்யாவில் நேரிட்டதென்று மனக்கவலையுற்றுர்கள்.

ஹிக்காயத்து:—இபுனு அபீஷைபா முஜாஹிதென்கிறவரைத் தொட்டும் சொல்லுகிருர்கள் சில மனிதர்கள் வெள்ளிக்கிழமை யன்று ஜூம்ஆநேரம் வந்ததின்பேரில், ஸபர்புறப்பட்டுபோனுர்கள். அவர்கள்போய் தங்கின இடத்தில் ஆகாயத்தில் நின்று நெறுப் பிறங்கி அவர்களைக்கரித்துவிட்டது.

ஹதீது:—தஸ்வியத்துல் அவது என்னும் கிதாபில் வந்திருக் கிறதாவது, அல்லாஹுத் தஆலா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர் களை படைக்கிறதைப்பற்றி மலக்குகளிடத்தில் பூமியில் ஒரு கலீபா வைப்படைக்க நாடி இருக்கிறேன் என்று சொன்னபோது, மலக்கு கள் பஸாதுகள் செய்யும்படியான ஜனங்களையா படைக்கிருய் என்று சொல்லி மலக்குகள் தர்கித்தவுடன் அல்லா அவர்களின் பேரிலே கோபமானுன். ஆண்டவன் கோபமானதைப்பயந்து அவர்கள் அர்ஷை யெழுதவணை சுற்றினுர்கள். அப்போது, பூமி யில் ஒரு வீட்டைக் கட்டும்படி அவர்களுக்கு உத்திரவு செய்து அதைச்சுற்றி வாருங்கள். நீங்கள் தர்கித்ததை மன்னிக்கிறே னென்று சொல்ல பூமியில், கஃபதுல்லாவைக் கட்டி அதை தவாபு செய்தார்கள். அப்பால் நபி நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களு டைய காலத்தில் வாந்தப்பெருவெள்ளம் வந்தபோது, நாலாம் வானத்தில், அந்த கஃபாவைக்கொண்டுபோய் வைக்கப்பட்டது. அப்பால், அதின் வலதுபாகத்தில் ஒரு மனுராவை யுண்டாக்கப் பட்டது. அந்தப் பள்ளிக்குப் பைத்துல் மஃமூரென்று பெயர் வைத்தான். அந்த மனுராவின் உயரம், ஐநூறு வருடத்திய அடிப்பாடுண்டும். ஜூம்ஆ நாள் வந்தவுடன் அந்த மனுராவின் பேரில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஏறி பாங்கு சொல்வார் கள். இஸ்ருபீல் (அலை) அவர்கள் அந்தப்பள்ளி மிம்பர்மேலேறி குத்பா ஓதுவார்கள், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் எல்லா மலக்குகளுக்கும் இமாமத்துச் செய்வார்கள். தொழுகையை விட் டும் அவர்கள் பராக்கானவுடன் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நான் பாங்கு சொன்னதற்காகக் கிடைக்கிற தவாபு முழுமையையும் பூலோகத்தில் ஜூம்ஆவுடைய நாளில் முஸ்லிம்களில் பாங்குசொன் னவர்களுக்கு நான் ஹதியாச்செய்து விட்டேனென்று சொல்லு வார்கள். அப்பால், இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நான் குத்பா ஓதினதற்காகக் கிடைக்கிற தவாபு முழுமையும் பூலோகத்

தில் குத்பா ஓதினவர்களுக்கு நான் ஹதியாச் செய்து விட்டே னென்று சொல்லுவார்கள். மீக்காயில் அலைஹிஸ்ஸலாமவர்கள் நான் இமாமத்துச் செய்ததற்காகக்கிடைக்கிற தவாபு முழுமையும் பூலோகத்தில் இமாமத்துச் செய்தவர்களுக்கு நான் ஹதியாச் செய்து விட்டேனென்று சொல்லுவார்கள்.

முக்ததியாய் நின்று தொழுத மலக்குகளடங்கலும் நாங்கள் இமாமுக்குப் பின்னின்று தொழுததற்காகக் கிடைக்கிற தவாபு முழுமையும் பூலோகத்தில் இமாமுக்குப்பின் முக்ததியாய் நின்று தொழுதவர்களுக்கு ஹதியாச்செய்துவிட்டோமென்று சொல்லுவார்கள். அப்போது, அல்லாஹுத்தஆலா அந்த மலக்குகளடங்கலையும் பார்த்து, ஆய், மலக்குகளே நீங்கள் பாவத்தை போக்கிவிட்டீர்கள். ஆதலால் பூலோகத்தில் ஜும்ஆத்தொழுத ஜனங்களுடைய பாவங்களடங்கலையும் திடனாக நான் பொறுத்து விட்டேனென்று சொல்லுவான். இவையடங்கலும் நபிமார்களுக்கெல்லாம் நாயகமாகவும், கிரீடமாகவும், விளங்கா நின்ற நமது ஆண்டவர்கள் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளாகியநம்மவர்களுக்குச்சொந்தமானதாகயிருக்கும். முன் சென்று போன நபிமார்களுடைய உம்மத்துகளுக்கு இவ்விதமான சிறப்பாகிய வரிசைகளில்லை. அல்லாஹுத் தஆலா நம்மள் யாவரையும் ஜும்ஆ முதலான தொழுகைகளைத் தவறவிடாமல் தரிபாடாகக் கொண்டு வந்த மூமினான ஜனங்கள் கூட்டத்திற் சேர்ப்பானாகவும் ஆமீன்.

ஜும்ஆ நாளின் அதபுகள்,

ஜும்ஆவுக்காகக் குளித்து மணம்பூசுகிறதும், நல்ல அழகாகிய ஹலாலான புடவைகளுடுத்துகிறதும், நகங்களை அறுக்கிறதும், தலைமுடி இறக்கிறதும், பள்ளிக்குள் ஊதுபத்தி முதலான வாசனைகளைப்புகைக்கிறதும், ஜும்ஆவுக்காகக்காலைநேரத்தில் போகிறதும், கதீபு வருகிறவரைக்கும் இபாதத்துச் செய்து கொண்டிருக்கிறதும் சுன்னத்து. ஆனால் ஜும்ஆ ஹஜ்ஜுக்கொப்பாக இருப்பதாலே தொழுதபின் தலைமுடி இறக்கிறது நல்லதென்று சில இமாம்கள் சொல்லியிருக்கிறார்கள். ஸூரத்துல்கஹ்பு ஓதுகிறதும், வீண்பேச்சு பேசாமல் அதபோடிருக்கிறதும், ஜும்ஆதொழுது முடிந்து பேசு

முன் ஸூரத்துல் பாதிஹாவும், குல்ஹுவல்லாஹு, குல்அஊது பிரப்பில் பலகு, குல்அஊது பிரப்பின்னாஸ் ஆக மூன்று ஸூரத்து களையும் எழேழு விடுத்தம் ஓதினால் அந்த ஜும்ஆ தொடுத்து அடுத்த ஜும்ஆ வரையில் அவனை ஷைய்தானைவிட்டுங் காபந் மானமாக்கப்படும்.

باب في احكام الجمعة

பாபுன் பீ அஹ்காமில் ஜும்ஆ

ஜும்ஆவுடைய ஹுக்முகளில் பேசும் பாடம்.

அதில் பர்லு இரண்டு றக்அத்தும், சுன்னத்து முந்தி நாலு றக்அத்தும் பிந்தி நாலு றக்அத்துமாயிருக்கும், அத்தொழுகை விதியாவதற்கு அக்லும் புலூகும் தவிற ஒன்பது காரியத்தை ஷற்தாக்கப்படும். அவைகளில் (ஒன்றாவது) ஆண்பிள்ளையாயிருக்கிறது (இரண்டாவது) நாட்டான் மகனாயிருக்கிறது (மூன்றாவது) பட்டணத்தில் முகீமாயிருக்கிறது (நாலாவது) சுவாத்தியமாயிருக்கிறது (ஐந்தாவது) கண் பார்வையுடைய வனாயிருக்கிறது (ஆறாவது) நடந்து போக சக்தியுடையவனாயிருக்கிறது (ஏழாவது) அநீதக்காரனை விட்டும் அச்சந்தீர்ந்திருப்பது (எட்டாவது) கடினமாகிய மழை சேரில்லாதிருப்பது (ஒன்பதாவது) சிறைச்சாலையிலில்லாதிருப்பது.

இனி ஜும்ஆ ஸிஹ்ஹத்தாவதற்கு ஏழு ஷற்துகளுண்டு. அவைகளில் (ஒன்றாவது) பட்டணம் அல்லது பட்டணத்துடைய முத்தவெளியாயிருப்பது. பட்டணமென்பதேது வெனில் அதிலுள்ள பள்ளிகளில் ஒரு பெரிய பள்ளியில் ஜும்ஆ விதியானவர்களடங்கலும் தொழுதால் அவர்களுக்கு விஸ்தீரண மாகாதே அந்த ஊராயிருக்கும். ஆனால், சந்தைக்கடைகள் கூடுகிற பெரிய சிற்றூரில் ஜும்ஆப் பள்ளி கட்டி ஜும்ஆத் தொழுகும் படிக்கு காலீ ஹாகிம் உத்திரவு செய்தால் ஜும்ஆக் கூடும். அப்படிக்கில்லாத சிற்றூர்களில் ஜும்ஆத் தொழுதால் லுஹறையும் தொழுக வேண்டியது

அவர்கள் பேரில் வாஜிபாகும். (இரண்டாவது) சுல்தான் அல்லது சுல்தானுடைய நாயிபு அதிகாரம் உண்டாயிருக்கிறது, ஆனால் காபிர்களுடைய கையின் கீளிருக்கிற பட்டணங்களில் சுல்தானை ஷர்த்திடுவது விழுந்துபோகும். ஆனால் அந்தப்பட்டணங்களிலுள்ளவர்கள் ஒருகாரிய கர்த்தனைத் தெண்டித்துத் தேடி நியமித்துக் கொள்வது அவர்கள் பேரில் வாஜீபாகும். ஆனபோதே ஒரு மனிதனை எல்லோரும் பொருந்தி ஒரு காலியாக நியமித்துக் கொண்டால் அவர்காலியாகிவிடுவார். அவரைக்கொண்டு ஜு"ம்ஆவை ஈதை நடத்தாட்டுவது வாஜிபு. (மூன்றுவது) ஹுஹருடைய வக்தா யிருக்கும். (நான்காவது) அந்த வக்துக்குள்ளே குத்பா ஓதுவது. ஆனால் இரண்டு குத்பா ஓதுவதும் இரண்டுக்கு மிடையில் மூன்று ஆயத்துடைய நேரமிருப்பதும், துப்புறவாக யிருப்பதும், அவ்றத்தை மறைப்பதும், குர்ஆன் ஆயத்தோதுவதும், நின்றோதுவதும், சுன்னத்தாகவும், நாலுயார்களாகிய குலபா உற்றுஷிதீன ஹம்சத அப்பாஸ் றலியல்லாஹு" அன்ஹு"ம் இவர்களை குத்பாவில் திக்ருச் செய்வதும் முஸ்தஹப்பாகும்.

இனி இரண்டு குத்பாவுக்கும் துவர்க்கத்தில் மெதுவாக அவூதுச், சொல்லி அல்ஹம்துவையும், இரண்டு ஷஹாதத்தையும், நபியின் பேரில் ஸலவாத்தையும், வஃலு நஸீஹத்தையும், குர்ஆன் ஆயத்தையும் பொதிந்ததாகயிருக்கவேண்டும் என்பதில் இரண்டாவது குத்பாவில் வஃலுடைய தலத்தில் முஸ்லிமான ஜனங்களுக்குத் துஆக் கேள்கவும். குத்பாவில் நிறப்பமாயொரு சூறத்தை ஓதினால் அவூதும், பிஸ்மில்லாவும் ஓதவும், ஆயத்தாயிருந்தால் அவூது மட்டும் ஓதவும். (ஐந்தாவது) குத்பாவை ஜு"ம்ஆ முடிவாகிற ஜமாஅத்துடைய முகதாவில் தொழுகைக்கு முன் ஓதுகிறது. (ஆறுவது) ஜமாஅத்துண்டாகிறது, அதில் குறைந்தது இமாமைத் தவிர மூன்று ஆண்பிள்ளைகளா யிருக்கும். (ஏழாவது) அதைத் தொழுகிற பள்ளியில் அடைய வளைத்தலான உத்திர வுண்டாயிருக்கிறது, இனி உதுறுளியும், சிறைச்சாலையிலிருக்கிறவனும், முஸாபிறு யிருக்கிறவனும், ஜு"ம்ஆ நாளையில் பட்டணத்தில் ஜமாஅத்தாய் ஹுஹரைத் தொழுவது மக்ருஹு" தஹ்ரீமாகும்.

இனி இமாம் மிம்பரிலேறிவிட்டால் குத்பா முடிகிறவரையில் தொழுகுவதையும் பேசுவதையும் நிறுத்திவிட வேண்டும். இன்னுங்

தொழுகையில் ஹறுமான தடங்கலும் குத்பாவிலும் ஹறுமாகும். என்கிலும் வாய்மூடி யிருந்து குத்பாவைக் கேள்பது வாஜிபாகும். இதில் சமீபமாயிருப்பவனுக்கும் தூரத்திலிருப்பவனுக்குமிடையில் வித்தியாசமில்லை. இனி முஅத்தின் முந்தின பாங்கு சொன்னவுடன் துன்யாஉடைய காரியங்களைப் பார்கிறது தொழுது தீருகிற வரைக்கும் ஹறுமாயிருப்பதால், வியாபாரம் கொடுக்கல் வாங்கல் முதலானசெய்கைகளடங்கலையும்விட்டு ஜுமுஆஅளவில் முயர்ச்சையாகிறது வாஜிபாகும். அப்படி வருவதில் அதபும், ஒடுங்குதலும், கனதிப்பாடுமாக சங்கையுடன் காலால் நடந்து வருவது மேன்மையாக யிருக்கும். பள்ளியுடைய வாசலுக்கு முடுகி விட்டால் அல்லாஹும்மஜ்அல்னி மின் அக்றப மன்த கற்றப இலைக்க என்றோதவும். குத்பா காதில் கேள்பதர்க்காக இமாமுக்குச் சமீபத்தில் யிருப்பது மேன்மை.

இமாம் மிம்பரில் யேறி யிருந்தபின் முஅத்தின் இரண்டாவது பாங்கு சொல்லி கத்திபு குத்பா ஓதிய பின் இகாமத்துச் சொல்லி ஜுமுஆவைத் தொழுது முடிப்பார்கள்.

இனி பத்வாவான சொற்படிக்கு ஒரு பட்டணத்தில் பல இடத்தில் ஜுமுஆத் தொழுகிறது ஆகும். ஆனல் முந்தின ஜுமுஆ மாத்திரம் கூடும், பிந்தினது கூடாதென்று ஒரு சொல் உண்டாயிருப்பதால் அந்தச் சொல்லின் படிக்கு முந்தினது சந்தாபமான நேரத்தில் ஜுமுஆ உடைய பிந்தின சுன்னத்து நாலு றக்ஆத்தும் தொழுதபின் ஆகிர் லுஹர், அல்லது ஆகிர் பர்லு என்று நிய்யத்துச்செய்து நாலு றக்ஆத்துத் தொழவேண்டும். அந்நான்கு றக்ஆத்திலும் பாத்திஹாவும் சூறத்தும் ஓதுவது வாஜிபாகும். பின்பு சுன்னத்துல் வக்தி இரண்டு றக்அத்துத் தொழவும். இது போல் பட்டணமென்பதில் சந்தாபமுள்ள ஊர்களில் இந்தப் பிரகாரமே தொழவேண்டும்.

இனி மிம்பரின் பேரில் கத்திபு ஏறினது முதல் தொழுது தீருகிற வரையில் துஆக் கபூலாகிற ஒரு ஸாஅத்துண்டாயிருப்பதால் அதில் கல்பால் துஆச்செய்து கொள்ளவும். நாவுகொண்டல்ல. இன்னுமொரு சொல்படி அது அஸ்ரு வக்தென்றும் வந்திருக்கிறது; அந்த நேரத்திலும் துஆச் செய்யவும்.

இனி ஜூம்ஆவின் குளி சுன்னத்தாகும். ஜூம்ஆத்தொழுகைக்காக மிக அழகான புடவை உடுத்துவதும், மணம் பூசுவதும், நகங்களையும் உரோமங்களையும் நீக்குவதும், பள்ளிக்குள் புகர்ப்போடுவதும், ஜூம்ஆத் தொழுகைக்காக ஸவாலுக்கு முன் காலமே போகிறதும், கதீபுவரும் வரையில் இபாதத்தைக்கொண்டு பளுக்கா யிருப்பதும், சூரத்துல் கஹ்பு ஓதுவதும் அதபாகும். ஜூம்ஆத்தொழுகைக்குப் பின் யாதொரு பேச்சுப் பேசுமுன் சூரத்துல் பாத்திஹா, இக்லாசு, முஅவ்விததைன், இந்த நாலு சூறாவையும் ஏழு ஏழு விடுத்தம் ஓதினால் அன்று தொடுத்து மறு ஜூம்ஆ வரையில் அவனைக் காக்கப்படுமென்றும் அது அவனுக்கு ஷைத்தானை விட்டும் கார்மானமாகி விடுமென்றும் பஃலுஸ்ஸலைபத் தொட்டும் பேசி வரப்பட்டிருக்கிறது.

ஜூம்ஆஉடைய நாளாகிறது இரண்டு பெருநாளைக் காணவும் மற்ற நாட்கள் அடங்கலைக் காணவும் மேன்மையானதாகும். அடிமை, பெண்பிள்ளை சிறு குழந்தை, வியாதியஸ்தன், இன்னுங்கு பேர்களைத் தவிர ஒவ்வொரு முஸ்லிமான மனிதர் பேரிலும் அந்த நாள் தொழுகை கடமையாகும். யாராகிலுமொரு மனிதன் தங்கடமின்றி அதை விடுவானாகில் அவனுடைய காரியத்தில் பறக்கத்து மாறிப்போம், அவனுக்கு ஹஜ்ஜூடைய பலனுமில்லை, ஸதகாவுடைய நன்மையு மில்லை, தொழுகையுடைய வருசையுமில்லை, இன்னமும் சிறப்புற்றோங்கிய அல்லாஹூத் தஆலா என்னுடைய ஷபாஅத்தை அவனுக்குக் கொடுக்கவுமாட்டான், அவனுடைய இபாதத்தை அல்லாஹூத் தஆலா ஒப்புக்கொள்ளவு மாட்டான் என்றும், ஜூம்ஆவாகிறது பக்கீர்களுக்கு ஹஜ்ஜாகவும், மிஸ்கீன்களுக்கு பெறுநாளாகவுமிருக்குமென்றும் நபி நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

باب صلاة العيدين

பாபு ஸலாத்துல் ஈதைன்.

இரண்டு பெறுநாள் தொழுகையின் பாடம்.

இரண்டு பெறுநாள் தொழுகையும் ஜூம்ஆ விதியானவர்கள் பேரில் ஜூம்ஆ உடைய ஷர்த்துகளில் குத்பாவைத் தவிர மற்றும்

ஷர்த்துகளைக்கொண்டு வாஜிபாகும். இதில் குத்பா சுன்னத்தாகும். இந்த குத்பாவில் தக்பீரைக் கொண்டு துவக்கம் செய்யவும். அஃ தெப்படி எனில் முந்தின குத்பாவைத் தொடர்ச்சியாக ஒன்பது தக்பீர் கொண்டும், இரண்டாவதை ஏழு தக்பீர் கொண்டும் துவக்கம் செய்து இடைகளிலும் தக்பீர் சொல்லவும்.

இனி ஈதுல் பித்றெனும் நோம்புப்பெருநாளில் தொழுகு முன் மதுரமான கனிகளை ஒத்தைப் படத்திண்ணுவதும், மிஸ்வாக்குச் செய்வதும், குளிக்கிறதும், மணம் பூசுவதும், மிக அழகான உடை அணிவதும், பித்ரு வாஜிபானவன் தொழுகைக்குப் புறப் படுமுன் பித்ருக் கொடுப்பதும், ஈத்கா வெனும் குத்பா பள்ளிக்கு காலை நேரத்தில் கால் நடையாகப்போவதும் முஸ்தஹப் பாகும். இரகசியமாகப் பாதையில் தக்பீர் சொல்லிக்கொண்டு போய் இமாம் தொழுகையில் ஆரம்பம் செய்து விட்டால் தக்பீர் சொல்வதை நிறுத்தவேண்டும்; ஆனால் அவாம் ஜனங்கள் பாதை யில் தக்பீரை இறைந்து சொன்னல் அவர்களை விலக்கப்படாது. பெறுநாள் தொழுகைக்கு முன் வீட்டிலும் முஸல்லாவிலும், தொழுத பின் முஸல்லாவில் நபில் தொழுவது மக்ரூஹு. வீட்டில் தொழுவது முஸ்தஹப்பு, ஆனல் அவாம் ஜனங்கள் அப்படி முன் னும் பின்னும் நபில் தொழுதால் அறவே விலக்கப்படாது.

இனி பெறு நாள் தொழுகையின் வக்தாகிறது பொழுது ஒரு வல்லயப் பிறமாணம் உயர்ந்தது முதல் மதிய மாகிற வரையிலா கும். தொழுகையிலிருக்கும்போது மதியமாய் விட்டால் தொழுகை பஸாதாய்விடும். ஆனல் அட்மைையால் தொழுக யேலாமல் தவிரி விட்டாலும், அல்லது மேகத்தால் பிறை தெரியாதிருந்து அன்று மதியமான பின் பிறைக் கண்டதாகத் தெரியப்பட்டாலும், அல் லது தொழுகை பஸாதாகிவிட்டாலும், நோன்புப்பெறுநாள் தொழு கையை மறுநாள் மதியத்துக்கு முன்னும், ஹஜ்ஜுப் பெறுநாள் தொழுகையை மூன்று நாள் வரையிலும் தொழுவதாகும். பின்னர் அத்தொழுகையின் விபரமாவது இமாமும் கவ்முகளும் பெறுநாள் தொழுகையை நிய்யத்துச் செய்து தக்பீர் தஹ்ரீமாச் சொல்லி தன ஓதிய பின் மூன்று தக்பீர் சொல்வதில் ஒவ்வொரு தக்பீருக் கும் கையை உயர்த்தி, உயர்த்தின கையைக் கட்டாமல் தாளவிட்டு

மூன்று தக்பீருக்குப்பின் கையைக்கட்டவும். அம்மூன்று தக்பீரில் ஒவ்வொரு தக்பீருக்கு மிடையில் மூன்று தஸ்பீஹுடைய நேரத்துக்குத் தாமதித்தவர்களாக நின்று பின் இமாம் அவூதும் பிஸ்மியும் சொல்லி பாத்திஹா ஒதிய பின் சூறத்து ஓதித்தொழுது இரண்டாம் றக்அத்துக்கு நிலையில் வந்து பிஸ்மி சொல்லி பாத்திஹாவும் சூறுவும் ஓதி பின் எல்லோரும் முன்போல் கையை உயர்த்தி மூன்று தக்பீர் சொல்லி பின் கையை உயர்த்தாமல் றுக்கூஉடைய தக்பீர் சொல்லி றுக்கூஉச்செய்து தொழுகை முடிந்தபின் இமாம் மிம்பரிலேறி இரண்டு குத்பா ஓதுவார். இவ்விரண்டு றக்அத்திலும் ஜும்ஆவைப்போல் சூரத்துல் அஃலாவும், காஷியாவும், இந்த இரண்டு சூறுவும் ஓதுவது முஸ்தஹப்பு.

இனி ஈதுல் அள்ஹா வெனும் ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகையும் நோம்புப் பெறுநாள் தொழுகை போலாகும். என்கினும் இதில் தின்னுவதைத் தொழுகைக்குப்பிற்படுத்துவது முஸ்தஹப்பு. அவன் உல்ஹிய்யாக் கொடுப்பவனுயிருக்கினுஞ் சரி, அப்படித் தின்பது மக்றூஹுமல்ல. பாதையில் இறைந்து தக்பீர் சொல்லிக் கொண்டு போவது மாகும்.

அய்யா முத்தஷ்ரீக்குடைய தக்பீரின் விபரம் பின்னும், அறபாவெனும் ஒன்பதாம் நாள் பஜ்ரிலிருந்து அய்யாமுத்தஷ்ரீகின் கடைசி பதிமூன்ரும் நாள் அஸ்ருவரை கூடிய இருபத்தி மூன்று வக்திலும் தொழுகிற பறுலான தொழுகைக்குப் பின் தக்பீருத் தஷ்ரீக்கு ஒரு விடுத்தம் சொல்வது வாஜிபாகவும் அதற்கதிகம் சொல்வது முஸ்தஹப்புமாகும். தக்பீறுவது:—

الله اكبر الله اكبر لا اله الا الله والله اكبر الله اكبر ولله الحمد

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து என்று சொல்வதாம். பெறுநாள் தொழுகைக்குப் பின்னும் தக்பீர் சொல்வது குற்றமல்ல. இந்தத் தக்பீரை இமாம் சொல்லாது விட்டாலும் மஃமூம்கள் சொல்வார்கள்.

பித்ருவின் விபரம்.

(பர்ளன்) யாதொரு முஸ்லிமான நாட்டான் மகனாகிய மனிதன் தன்னுடைய அவசியமான தேவைகளை விட்டும் மேல் மிச்சமான ஸக்காத்தின் தொகையுடையவனாயிருந்தால் தன்னைத் தொட்டும், தன் சிறு பிள்ளைகளைத் தொட்டும், வேலைக்குள்ள அடிமைகளைத் தொட்டும் பித்ரு கொடுப்பது அவன்பேரில் வாஜிபாகும். வருஷம் நிறப்பமாகவில்லை யானாலுமொக்கும். பெண்ஜாதி பெரிய பிள்ளைகள் கச்சவடத்துக்குள்ள அடிமைகள் இவர்களைத்தொட்டும் கொடுப்பது வாஜிபாகாது.

இனி சிறு பிள்ளைகளுக்குச் சொத்திருந்தால் அதுகளுக்காக பித்ருவை அச்சொத்தில் நின்றுங் கொடுக்கப்படும்.

பித்ருவாகிறது மணிக்கோதுமையில் அரை மரக்காலும் பேரீத்தம்பழம், கொடி முந்திரிப்பழம், தொலிக்கோதுமை, இவைகளில் ஒரு மரக்காலுமாம். ஆனால் இவைகளின் விலையைக்கொடுப்பது இவ்வஸ்துகளைக் கொடுப்பதைக் காண மிக வருசையாகும். மரக்காலாவது இன் நேரத்தில் இன்னாடுகளில் வளங்குகிற பட்டணம் பக்காப்படியால் இரண்டேகால்படி கொண்டதாகும். இனி அது வாஜிபாகிற நேரமாவது நோன்புப் பெருநாள் கிழக்கு வெளுப்பது கொண்டாகும். ஆகையால் கிழக்கு வெளுக்கு முன் மவுத்தானவர்களைத் தொட்டும், அதின் பின் இஸ்லாமானவர்களைத் தொட்டும், பிறந்த பிள்ளையைத் தொட்டும், பித்ரு வாஜிபில்லை. பித்ருவைக் கிழக்கு வெளுத்த பின், முஸல்லாவுக்குப் போகுமுன் கொடுப்பது முஸ்தஹப்பு. இனி மிகுதி பேருடைய ஸதகாவை ஒரு மிஸ்கீனுக்குக் கொடுப்பது ஆகுமாப்போல், ஒரு மனிதனுடைய ஸதகாவை மிகுதம் பேருக்கு கொடுப்பது மாகும். ஆனால் காபிர்களுக்குக் கொடுப்பதாகாது.

உள்ஹிய்யாவின் விபரங்கள்.

இனி உள்ஹிய்யாக் கொடுப்பது ஸக்காத்தின் தொகையுடைய, சீமானாகிய, முஸ்லிமாகிய, முகீமாகிய நாட்டான் மகனடங்கல் பேரிலும் ஹஜ்ஜுப் பெருநாளனும், பத்தாவது நாள் கிழக்கு வெளுப்பது கொண்டு, தன்னைத்தொட்டும், தன் சிறு

குழந்தைகளைத் தொட்டும், ஒவ்வொரு நபருக்கும், ஒவ்வொரு கிடாய் வீதம் அறுத்துக்கொடுப்பது வாஜிபாகும். மற்றொரு ரிவாயத்தின்படி தன்னைத்தொட்டு மாத்திரம் ஒரு கிடாய் அறுத்துக் கொடுப்பது போதுமாகும். சிறு குழந்தைகளை தொட்டு மல்ல. ஆனால் சிறு பிள்ளை சீமானு யிருந்தால் அதினுடைய முதலில் நின்றும் உள்ஹிய்யாக் கொடுக்கப்படும். இனி உள்ஹிய்யாக் கொடுக்கும் நேரமாவது பெருநாள் கிழக்கு வெளுத்தது முதல் அதின் பின் இரண்டு நாள்வரையிலுமாம். ஆனால் முதல் நாள் கொடுப்பது மெத்த வருசை என்பதில் பட்டணத்திலுள்ளவர்கள் பெருநாள் தொழுகைக்கு முன் அறுப்பது ஆகாது. பட்டிக்காட்டார் பத்தாம் நாள் கிழக்கு வெளுத்த பின் கொடுக்கலாம்.

இனி மூன்று நாளும் தவற விட்டால் உள்ஹிய்யாவின் கிரயத்தை அல்லது அதற்காக வாங்கியிருந்த ஆட்டை ஸதகாக் கொடுத்து விடவேண்டும். இனி உள்ஹிய்யாக் கொடுக்கப்படும் ஆடு பெருங் கொம்புள்ளதாயும், உருப்புகளில் யாதொரு குற்றங் குறைவில்லாமல் ஸலாமத்தானதாயும், கண் விஸ்தீரனமானதாயும், அழகானதாயும், பெரிதானதாயும், கொளுத்ததாயும், தெரிந்தெடுத்துக் கொடுக்க வேண்டுமே தவிர, இரு கண் அல்லது ஒரு கண் குருடாயுள்ளதும், சொறிபிடித்ததும், மெலிந்த மூளை யில்லாததும், நடக்க ஏலாததுமான நொண்டியானதும், காது, கால், கண், பித்தட்டு இவைகளில் மிகுதமெடுபட்டுப் போனதும், பல்லில்லாததுமான, கிடாய்களைக் கொண்டு உள்ஹிய்யாக் கொடுக்கலாகாது. ஆனால், மோழை, விறையடித்தது, பயித்தியமானது, இவ்விதக் கிடாய்களைக் கொடுக்கலாம்.

இன்னும் உள்ஹிய்யாவுக்கு ஒரு வருடம் சென்ற கிடாயாயிருக்கவேண்டும். ஆனால், பிட்டியில் கொழுப்பு, தசை வளர்ந்த செம்மறிக் கிடாயில் ஆறு மாதம் சென்றதாயிருந்தால் போதும். இனி நேர்சையல்லாத உள் ஹிய்யாவைத் தான் தின்னுவதும் சீமான்களுக்குக் கொடுப்பதுமாகும். ஆனலதில் மூன்றிலொரு பங்கு குறையாமல் மிஸ்கீன்களுக்கு ஸதகாக் கொடுக்கவேண்டும். நேர்ச்சை கொண்டு வாஜிபான உள்ஹிய்யாவில் தான் தின்னுவதும் சீமான்களுக்குக் கொடுப்பதுமாகாது. அடங்கலையும் மிஸ்கீன்களுக்கு ஸதகாச் செய்து விடவேண்டும்.

இனி உள்ஹிய்யாவின் தோலை விற்கிறதாகாது. வீட்டுக்கு பாத்திரமாகச் செய்து புளங்குவதாகும். ஆனாலதை ஸதகாக் கொடுப்பதுதான் எற்றம். உள்ஹிய்யாவை அறுக்கத் தெரிந்திருந்தால் தன் கையினு லறுத்துக்கொடுப்பது மிக வருசை. உள்ஹிய்யாவின் கிடாவை அறுக்கு மிடத்துக்கு மெல்லினமாக இழுத்துக்கொண்டு வந்து உள்ஹிய்யாவைக் கொண்டு தனக்கு பித்யாவாக அல்லாஹுத் தஆலாவுக்காகக் கலப்பறுதலாய்க் கொடுக்கிறதை நிய்யத்துச்செய்து அதைக்கொண்டு கிப்லாப்பக்க முன்னுக்கி,

இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ பதரஸ் ஸமாவாத்தி வல் அற்ள அலா மில்லதி இப்றுஹீம ஹனீபன் வமா அனு மினல் முஷ்ரிகீன், இன்ன ஸலாத்தீ வனுஸ்கீ வமஹ்யாய வமமாதீ லில்லாஹி றப்பில்ஆலமீன் லாஷரீகலஹு வபிதாலிக உமிர்த்து வஅனு மினல் முஸ்லிமீன் அல்லாஹும்ம ஹாதிஹீ மின்க வலக பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்லி கூர்மையான கத்தியைக் கொண்டு அருத்த பின்,

அல்லாஹும்ம தகப்பல்ஹா மின்னீ தமஹா பிதமீ வலஹ்மஹா பிலஹ்மீ வஅல்மஹா பிஅல்மீ வஜில்தஹா பிஜில்தீ வஷஹ்ரஹா பிஷஹ்ரீ வகுல்ல ஜுஸ்இன் மின்ஹா பிகுல்லி ஜுஸ்இன் மின்னீ கமா தகப்பல்தஹா பின்கலீலிக இப்றுஹீம வஹபீபிக முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிமா, வஸல்லம அல்லாஹும் மஜ்அல்ஹா பிதாஅன் மினன்னாரி என்று துஆ ஓதவும். பெருநாளன்று யாதொன்றைத் தின்னுமுன் உள்ஹிய்யா உடைய இறச்சியைக் கொண்டு துவர்க்கம் செய்வது நலமென்பதில் முன் அதினுடைய ஈரலில் நின்றும் தின்பது சுன்னத்தாகும்.

இன்னும் உள்ஹிய்யாக் கொடுக்க நாடியிருப்பவன் ஹஜ்ஜுப் பிறை பிறந்த அன்றுமுதல் பத்துநாள் வரையிலும் இஹ்ரும்கட்டிய ஹாஜியைக் கொண்டு ஒப்பாகிறதற்காக தன் சரீரத்தில் நின்றும் ரோமத்தை நகத்தை நீக்காமலிருப்பது முஸ்தஹப்பு.

இனி கிடாயை அருக்கத் தெரியாதவன் அறுக்கும்படி அவனல்லாதவனுக்கு உத்திரவு கொடுத்து தானுமந்த உள்ஹிய்யாவுக்குக் கூடவந்து நின்று,

இன்ன ஸலாத்தீ வனுஸ்கீ வமஹ்யாய வமமாதீ லில்லாஹி றப்பில் ஆலமீன் என்றோதி, அறுத்தபின் அல்லாஹும்ம தகப்பல்ஹா, என்ற துஆவை ஓதுவான். அறுத்தவனும்,

அல்லாஹும்ம தகப்பல்ஹா மின் புலானிப்னி புலான் தமஹா பிதமிஹி வலஹ்மஹா பிலஹ்மிஹி என்று முகிய ஓதி துஆச் செய்வான். அறுத்த மனிதனுக்கும் அதில் தின்னக்கொடுக்கவும். புலானிப்னி புலான் என்ற இடத்தில் இன்னானுடைய மகன் இன்னான் என்று பேர் குறித்துக் கொள்ளவும்.

பாயிதா:—ஹயாத்துல் ஹய்வான் என்னுங் கிதாபில் வருகிறது வபா முதலிய சகல தங்கடமும் ஆபத்தும் வருவதைப் பயந்தால் உள்ஹிய்யாவுக் கிணங்கிய ஓர் ஆட்டை காலியான தலத்தில் வைத்து,

அல்லாஹும்ம ஹாதாலக வமின்க அல்லாஹும்ம பதகப்பலஹு மின்னீ என்று சொல்லி அறுத்து அதின் ரத்தத்தை ஒருவரும் சவட்டாமல் புதைத்து ஒவ்வொரு உறுப்பாக வெடுத் தரிந்து அறுபது பங்காக்கி அறுபது மிஸ்கீன்களுக்குக் கொடுத்தால் அல்லாஹுத் தஆலா அந்த ஆபத்துகளைக் காத்துக் கொள்வானென்றும் இவ்விதமாக எந்நாளும் இது கொண்டு அமல்செய்யலாமென்றும் சொன்னார்கள்.

அகீகாவின் பயான்.

இனி பிள்ளைப் பிறந்த ஏழாம் நாளில் அகீகாக் கொடுப்பது முஸ்தஹப்பு. அஃதாவது உள்ஹிய்யாவில் சொன்னபடிக்கு ஒரு கிடாயை அறுத்து எலும்பை முறியாமல் மொளி மொளியாகக் களற்றி மூன்றிலொரு பங்கு இறச்சியை மிஸ்கீன்களுக்கு ஸதகாக் கொடுத்துவிட்டு மற்ற இரண்டு பங்கை தனக்கும் தாய் பிள்ளைகளுக்கும் கொடுத்துக் கொள்ள வேண்டுமென்பதில், தான் காலை மாத்திர மெடுத்துக் கொள்வது ஏற்றமாகும். இப்படிச் செய்வதில் தீனுக்கும் துன்யாவுக்கு மனேக பிரயோஜன முண்டும்.

كتاب الجنائز

ஜனஸா தொழுகையின் பாடம்.

மையித்தைக் குளிப்பாட்டுவதும், கபனிடுவதும், தொழுவிப்பதும் அடக்கஞ் செய்வதும் பர்ளு கிபாயாவாகும். மவுத்தின் அடையாளம் வெளியானவுடன் கிப்லாப்பக்கம் முகமாக வலது பக்கஞ் சாய்த்தும் போடுவது சுன்னத்து. இனி இரண்டு பாதத்தையும் கிப்லாவளவிலாக்கி தலையைச் சற்றே உயர்த்தி மல்லாக்கப் போடுவதுமாகும். மவுத்துடைய அடையாளமாவது காலிரண்டுஞ் செவ்வயாக நில்லாமல் சோர்ந்து போவதும், பீசத்தின் தொலி நீண்டு விடுவதும், மூக்கு முன்னிருந்த தைக்காண பேதகமாவதும், இரண்டு பொய்க்கண் பள்ளமாவதும், முகத்தில் சுருக்கு நிமிறுவதும், இவ்வித அடையாள முண்டானபின் சேட்டும மடைப்பதற்கு முன்னமே இரண்டு ஷஹாதத்தையுஞ் சொல்லிக்கொடுப்பது முஸ்தஹப்பு.

எவனொருவனின் வார்த்தையின் முடிவு லாஇலாஹ இல்லல்லாஹுவெனுங்கலிமாவாயிருந்தால் அவன் ஜெயம்பெற்றவர்களுடன் சுவனபதி யடைவானென்றும் உங்களில் மவுத்து முடிகினவனுக்கு லாஇலாஹ இல்லல்லாஹ் வென்ற மொழியைப் படித்துக் கொடுங்கள். யாதொரு முஸ்லிம் தன்னுடைய மவுத்து வேளையில் கலிமாவைச் சொல்வானுகில் அது அவனை நரகத்தை விட்டும் சுடேற்றமாக்கி வைக்குமென்று ஹதீதில் வருகிறது. எஃனி:—ஒருபோதும் நரகத்தில் புகுதமாட்டான்.

والا فلكل من لا بد ان ينجو منها ولا بعد دخولها

அவன் ஒரு விடுத்தம் சொல்லி விட்டால் போதும். அவன் வேரே பேச்சு பேசினல் மறுபடியும் சொல்லிக்கொடுக்கவேண்டும். சொல்லு சொல்லென்று அவனை அதட்டுவதாகாது. இன்னுமவனிடத்தில் சூரத்து யாஸீனையும், சூரத்துற றஃதையும் ஓதுவது முஸ்தஹப்பு. அதினல் சக்றுத்தின் வருத்தம் இலேசாகுமென்று ஹதீதில்

வந்திருக்கிறது. ரூஹ் ஒடுங்கி விட்டால் துண்டுச் சீலையினுல் இரண்டு நாடியையும் கட்டி, பிஸ்மில்லாஹி வஅலா மில்லதி றஸூ லில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம, அல்லாஹும்ம எஸ் ஸிர் அலைஹி அம்ரஹு வஸஹ்ஹில் அலைஹி மாபஃதஹு வஅஸ் இத்ஹு பிலிகாஇக வஜ்அல் மாக்றஜ இலைஹி கைறன் என்றோதி மூடி ஒற்றைப்பட ஸாம்புருணிப் புகை காட்டிய கட்டிலின் பேரில் எசவுபோல் வைத்துத் தொப்புளுக்கும் முட்டுக்காலுக்கு மிடை யில் மறைத்து அவன் அணிந்திருந்த பிடவைகளெல்லாவற்றையும் உரியவேண்டும். மய்யித்தைக் குளிப்பாட்டுகிற தலத்தைக் குளிப் பாட்டுகிறவனுமவனுக்குதவி யாயிருக்கிறவனும் தவிர மற்றயாருங் காணுமல் மறைக்கவேண்டும். மய்யித்துக்கு உடயக்காரனுகிய மிகு தம் முடுகுதலானவன் குளிப்பாட்ட வேண்டும். அவனில்லாவிடில் மார்க்கத்தில்பேணுதலுடையவன் குளிப்பாட்டுவான். மய்யித்தைக் குளிப்பாட்டுவதின் விபரமாவது, குளிப்பாட்டுபவன் தன்கையில் ஒரு துண்டுச் சீலையைச் சுத்தி கண்ணை மூடிக்கொண்டு முன் பின் துவாரத்தைக் கழுகவும்.

பின்பு வாய் கொப்பளிக்காமலும் நாசிக்குத் தண்ணீர் செலுத்தி விக்காமலும் ஒளுச்செய்விக்கவும். ஆனல் விரலில் ஒரு சீலைத்துண்டைச் சுத்தி பற்களையும் உதட்டையும் மூக்கையும் துடைக்கவேண்டும்.

இலந்த இலை உசுல இலை போட்டு சுடவைத்த் தண்ணீர் அஃ தில்லா விடில் சுடவைத்த வெறுந் தண்ணீரை மையித்தின் பேரி லூற்றித் தலையையும் தாடியையும் கிதுமியெனும் பூண்டு கொண்டு அஃதில்லாவிடில் சாபூன் போல் கொத்தது கொண்டு கழுகிய பின் இடது புறம் ஒருக்கணித்துக் கீள் புறம் தண்ணீர் போய்ச் சேரும் படி தண்ணீர் விட்டுக் கழுகி பின்பு வலது புறம் ஒருக்கணித்து முன்போல் கழுகி மையித்தை யிருத்தாட்டி வைத்து அதைத் தன் னளவில் சாய்த்து வயிற்றை மெல்லினமாகத் தடவி ஏதாகினும் புறப்பட்டால் கழுகிப் போடவும். குளிப்பாட்டுவதை மீளவைப் பது அவசியமில்லை. பின்பு பிடவையினுல் உலர்த்தித் தலையின் பேரிலும் தாடியின் பேரிலும் பல மணத்தையாக்கி சுஜூதிடுந் தலங்களின் பேரில் கற்பூரத்தைவைக்கவும்.

இனி ரோமம் நகம் முதலானவைகளை மவுத்துக்குப் பின் நீக்கப்படாது. மவுத்தாகு முன் செய்து கொள்ளலாம்.

இனி கபனுடைய விபரமாவது தங்கடமான நேரத்தில் கிடைத்ததைக் கொண்டு கபனிடுவது கடமை. தங்கட மில்லாத நேரத்தில் ஆண்பிள்ளைக்குச் சட்டை, உடுத்தாடை, அடைய வளைந்தான், இந்த மூன்று பிடவையில் கபனிடுவது சுன்னத்து. உடுத்தாடையும் அடைய வளைந்தானும் உச்சித்தொடுத்து உள்ளங்கால் வரையிலா யிருக்கவேண்டும். முந்தி அடையவளைந்தானை விரித்து அதின் பேரில் உடுத்தாடையை விரித்து மையித்துக்குச் சட்டையிட்டு உடுத்தாடையின் பேரில் வைத்து உடுத்தாடையை இடது புறம் முந்தியும் வலது புறம் பிந்தியுமாகச் சுத்தி கட்டி விட்டு, அதுபோல் அடைய வளைந்தானையும் சுத்தவும். உலமாக்கள் ஸாதாத்துகள் போல்கொத்த அஷ்றுபுகளுக்குத் தலைப்பாகை கட்டி வைப்பதை முதஅக்கிறீன்கள் அழகாகத் தேடியிருக்கிறார்கள்.

இனி பெண்பிள்ளைகளுக்குச் சட்டை, மக்னு, உடுத்தாடை, அடைய வளைந்தான், மார் கட்டுத் துண்டு ஆகிய இவ்வைந்து புடவைகளில் கபன் செய்வது சுன்னத்தாகும். பெண்டுகளுக்குச் சட்டை அணிந்து அவர்களுடைய தலை ரோமத்தை இரண்டு வகுப்பாக வகிர்ந்து அதைச் சட்டைக்குமேல் நெஞ்சின் பேரிலாக்கி பின்பு மக்னைப் போட்டு உடுத்தாடையையும் அடைய வளைந்தானையும் முன் சொன்னதுபோல் சுற்றி அதின் மேல் மார்கட்டுத் துண்டைக் கட்டவும். கபனைக் காற்றுப் பறத்துவதைத் பயந்தால் கரையைக்கொண்டு அதைக் கட்டவேண்டும்.

ஜனாஸா தொழுகையின் விபரம்.

இனி ஜனாஸா தொழுகையின் விபரமாவது அத்தொழுகை நாலு தக்பீர் கொண்டாகும். ஒவ்வொரு தக்பீரும் ஒவ்வொரு றக்ஆத்தின் தானத்திலாகும். இன்னு தக்பீரும் நிலை நிற்கிறதும் அத்தொழுகைக்கு றுக்னெனும் பறுலாகும். அதில் இரண்டு கையையும் முந்தின தக்பீரில் மட்டும் உயர்த்தப்படுமென்பதில் ஷாபிஈ மத்ஹபில் உள்ள இமாமைத் தொடர்ந்தால் ஒவ்வொரு தக்பீரிலும் ஹனபியும் உயர்த்துவது யேற்றமென்று கைருற்றமலி சொன்னார்கள்.

இனி அதின் ஷர்துகள் எட்டாகும். அவைகளில் (ஒன்று வது) மையித்து இஸ்லாமாயிருப்பதும், (இரண்டாவது) துப் புறவா யிருப்பதும், (மூன்றுவது) ஹாஸிறு யிருப்பதும்.

மறைவான மையித்தின் பேரில்தொழுவிப்பது ஸிஹ்ஹதில்லே. خلافا للشافعي கிலாபன் லிஷ்ஷாபி இய்யா ஷாபிஇய்யா வான இமாம் மறைவான மையித்தின் பேரில் தொழுதால் ஹனபிய்யாக்கள் அவரைத் தொடர்ந்து தொழுகலாம் என்று மதாரிஜுன் னுபுவ்வாவில் வருகின்றது.

(நாலாவது) மையித்தை கவ்முகளுக்கு முன்னலேயாக்கிறதும், (ஐந்தாவது) சந்தூகுடன் அதைப்பூமியில் வைப்பதும், (ஆறுவது) இமாம்பாலிகா யிருப்பதும் (ஏழாவது) மையித்தில் நின்றும் ஒரு உறுப்புக்கு அவன் நேர்படுவதும் (எட்டாவது) இமாமும், கவ்முகளும், மையித்தும், அவ்றத்தை மறைத்திருப்பது மாகும். இன்னுங் தொழுகையிலுள்ள ஷர்த்துகளில் வக்தல்லாத மற்ற ஷர்துகளெல்லாம் உண்டாயிருக்கவேண்டும். நிய்யத்தாவது:—

اصلي لله تعالى داعيا للميت உஸல்லீ லில்லாஹி தஆலா தாஇயன் லில்மைய்யிதி மையித்துக்குத் துஆச்செய்வதாக அல்லாஹுத் தஆலாவுக்காகத் தொழுகிறேனென்று இமாம் சொல்வதும், முக்ததியானவன் اصلي لله تعالى داعيا للميت مع الامام உஸல்லீ லில்லாஹித் தஆலா தாஇயன் லில்மைய்யிதி மஅல்இமாமி மையித்துக்குத் துஆச்செய்தவனுக அல்லாஹுத்தஆலாவுக்காக இந்த இமாமுடனே தொழுகிறேன் என்று சொல்வதா யிருக்கும்.

இனி ஜனுஸா தொழுகையின் சுன்னத்து நாலு. (ஒன்றுவது) மையித்து ஆணு யிருந்தாலும் பெண்ணு யிருந்தாலும் அதின் நெஞ்சுக்கு நேரே இமாம் நிற்பது (இரண்டாவது) முந்தின தக்பீருக்குப் பின், ஸுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபாறகஸ்முக வத ஆலா ஜத்துக வஜல்ல ஸனுஉக வலா இலாஹ கைருக, என்று ஸனு ஓதுவது. முல்லா அலிகாறீ றஹிமஹுல்லா முதலானவர்கள் சொல்லியிருக்கிற படிக்கு ஸூறத்துல் பாத்திஹாவை ஸனுஉடைய நாட்டங்கொண்டு ஓதுவது முஸ்தஹப்பாகும். அதிலும் ஷாபிஇய்யாக்களிடத்தில் அது பறுலாயிருப்பதால் ஜமாஅத்தில் ஷாபிஈ மத்ஹபில் உள்ளவன் உண்டாயிருக்கும் வேளையில் அப்படி ஸூரத்

துல் பாத்திஹாவை ஓதுவது முக்கியமானதாகும். (மூன்றாவது) இரண்டாம் தக்பீருக்குப் பின்னால் அல்லாஹு-ம்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமாஸல்லைத்த என்ற ஸலவாத்தை முக்கியம் ஓதுவது (நாலாவது) மூன்றாம் தக்பீருக்குப்பின் அல்லாஹு-ம் மக்பிர் லிஹய்யினா வமைய்யிதினா வஷாஹிதினா வகாஇபினா வஸகீரினா வகபீரினா வஉன்தானா, அல்லாஹு-ம்ம மன் அஹ்யைத்தஹு- மின்னா பஅஹ்யிஹி அலல் இஸ்லாமி, வமன்தவப்பைத்தஹு- மின்னா பதவப்பஹு- அலல் ஈமானி, அல்லாஹு-ம் மக்பிர்லஹு- வர்ஹம்ஹு- என்று துஆ ஓதுகிறது. மையித்து பயித்தியகாரனாக அல்லது சிறு பிள்ளையாக யிருந்தால் அந்தத் துஆவுக்குப்பதிலாக அல்லாஹு-ம்மஜ் அல்ஹு- லனா பறதன் வஜ் அல்ஹு- லனா அஜ்றன் வதுகறன் வஜ்அல்ஹு- லனா ஷாபிஅன் வமுஷப்பிஅன் என்று ஓதவும். அது பெண் பிள்ளையாயிருந்தால் ஹு- என்ற இடத்தில் ஹா வென்றும் ஷாபிஅன் வமுஷப்பிஅன் என்ற இடத்தில் ஷாபிஅதன் வமுஷப்பிஅதன் என்று ஓதவும். பின்பு நாலாம் தக்பீருக்குப் பின்னால் கல்முகளுக்கும் ஜனாஸாவுக்கும் நிய்யத்துச்செய்து ஸலாம் வாங்கவும். அதில் றப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிறதி ஹஸனதன் வகினா அதாபன்னாரி, என்ற துஆவை ஓதுவதுமாகும்.

இனி சில தக்பீருக்குப் பின் வந்தவன் இமாம் தக்பீரு சொல்லும்போது சேர்ந்துகொண்டு அவர் ஸலாம் சொன்ன பின் மீதித் தக்பீரைச் சொல்லவும். இமாம் எத்தனையாவது தக்பீரிலிருக்கிறுறென்பதை சத்தத்தாலல்லது வேறே விதத்தால் தெரிந்தாலிவன் இமாமுடைய ஒழுங்கின்படி அததில் ஓதவேண்டியதை ஓதவும். அவ்வித மறியாவிடில் ஸனமுதல் ஒழுங்காக ஓதுவான்.

இனி, நான்காம் தக்பீருக்குப் பின் வந்து கூடினால் அவனுக்குச் ஜனாஸாத் தொழுகை தவறிவிட்டது. எங்கினும் பத்வாவான சொல்படிக்கு அவன் சேர்ந்துகொண்டு இமாம் ஸலாம் வாங்கிய பின் மூன்று தக்பீர் சொல்லி முடிக்கவும்.

இனி அந்தத் தொழுகைக்கு இமாமத்துக்கு வலீகாறனைக் காண அந்தப் பள்ளியுடைய இமாம் யேற்றமாயிருந்தால் இமாமை முற்படுத்துவது முஸ்தஹப்பு. அவ்விதமில்லையாகில் வலீகாரன் தான் யேற்றமாகும்.

ஷாபீயி மத்ஹபின்படி ஜனுஸா பர்லு ஏழு. 1-வது நிய்யத்து செய்வது. 2-வது நிற்கதிராணி பெற்றவன் நிற்பது. 3-வது முந்தின தக்பீருடன் நான்கு தக்பீர் சொல்லுகிறது. 4-வது முந்தின தக்பீருக்குப்பின் பாத்திஹா அமர்ந்தோதுகிறது. 5-வது இரண்டாவது தக்பீருக்குப்பின் ஸலவாத்தோதுகிறது. 6-வது மூன்றும் தக்பீருக்குப்பின் மையித்திற்கு துஆ ஓதுகிறது. 7-வது நாலாம் தக்பீருக்கு பின் ஸலாம் வாங்குகிறது. ஸலாமிற்கு பிறகு அல்லாஹும்ம லா தஹ்ரிம்ஞ அஜ்ரஹு வலாதப்தின்ஞ பஃதஹு வக்பிர்லஞ வலஹு اللهم لا تحرمنا اجره ولا تفتنا بعده واغفر لنا وله என்று ஓதுகிறது ஸுன்னத்தாகும்.

ஜனுஸா பள்ளிக்குள்ளிருந்தாலும், வெளியில் இருந்தாலும் பள்ளிக்குள் நின்று ஜனுஸா தொழுவிக்கிறது மக்ரூஹு. பள்ளியின் நிய்யத்துகொண்டு தக்பீர் கட்டக்கூடாது. ஸஹனில் நின்று தொழுவிக்கிறது மக்ரூஹல்ல. ஜனுஸாவை கொண்டு போகும்போது தலைப்பக்கத்தை முற்படுத்திக்கொண்டு ஓடாமலும், மிகவும் தாமதிக்காமலும், சரியான நடையாக நடந்து கொண்டு, துன்யாபேச்சு யாதொன்றும் பேசாமல் தஸ்பீஹ் ஜிக்கிருகளை மிகுதமாக மெல்ல ஓதிக்கொண்டு போகிறது முஸ்தஹப்பு. பைத்து வகைறுக்களைக்கொண்டு சத்தத்தை உயர்த்துகிறது மக்ரூஹு. ஹனபி மத்ஹபின்படி ஜனங்கள் ஜனுஸாவுக்கு பின்னுல் போகிறதும், ஸாபீயி மத்ஹபின்படி முன்னுல் போகிறதும் ரொம்ப வரிசையாக இருக்கும்.

ஜனுஸாவை 4 ஆண் பிள்ளைகள் சுமக்குகிறது ஸுன்னத்து. அதனை 40 அடி தூரம் சுமந்தால் அவனுடைய நாற்பது வருடத்து பெரும் பாவம் மன்னிக்கப்படுமென்று ஹதீதில் வந்திருப்பதால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கத்தை பத்து அடிவீதம் நாற்பது அடி சுமக்கவேண்டும். ஜனுஸாவை கீழே வைக்குமுன் உட்காருவது மக்ரூஹு.

கப்ருடைய பயான்.

பூமி கெட்டியாயிருந்தால் பிள்ளைக் குழிவைத்தும், இரஸலாயிருந்தால் ஒற்றைக்குழியும் தோண்டவேண்டும். குழியை இடுப்

பளவு அல்லது நெஞ்சளவு அல்லது ஒருவர் உயரம் தோண்டவும். ஓராளுயரந் தோண்டுகிறது மிகவும் நல்லது. மையித்தைக் கிபுலாமுகமாகக் கரிபுல் வைக்கவேண்டும். வைக்கிறவன் பிஸ்மில்லாஹி வஅலா மில்லத்தி றஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று சொல்லவும். மையித்தை வலது பாகத்தின்பேரில் கிபுலா அளவில் முகம் திருப்பிவைத்து கட்டை அவிழ்த்துவிட்டுப் பச்சை செங்கல்லை அல்லது மூங்கிற்பட்டையை வைத்து மறைத்து அடைக்கவும். பெண்பிள்ளையை அடக்கும்போது மறைப்பு மேலே பிடித்தடக்கவேண்டும். ஆண்பிள்ளைக்கு அவசியமில்லை. அடக்கின பின்பு கபுரை மோடு கூட்டவேண்டும். வக்பு பூமியில் யார் கபுரிலும் கட்டிடம் கட்டுவது மக்ரூஹு. மண்ணைத் தள்ளும்போது தலைமாட்டில் நிற்கிறவர்கள், கையால் மூன்றுபிடி மண்ணைப்பிடித்துப் போடுகிறது முஸ்தஹப்பு. முந்தினபிடி போடும்போது (மின்ஹா கலக்னாக்கும்) என்றும், 2-ம் பிடியில் (வபீஹா நுயீதுகும்) என்றும், 3-ம் பிடியில் (வமின்ஹா னுக்ரிஜுக்கும் தாரத்தன் உக்ரா) என்றும் சொல்லவேண்டும். அடக்கியபின் மேலே தண்ணீர் தெளித்தாலும் குற்றமில்லை என்றாலும் முஸ்தஹப்பாகும். தலைமாட்டில் சூரத்துல் பகராவை துவர்க்க முதல் (முப்லிஹுன்) வரையிலும் ஓதி துஆ ஓதவேண்டும். இன்னும் அடக்கியபின் கொஞ்சநேரம் இருப்பது முஸ்தஹப்பு.

மையித்திற்குச் சொந்தமானவர்களுக்கு அஃலமல்லாஹு அஜ்ரக்க வ அஹ்ஸன அஸாக்க வகபர லிமையித்திக என்று சொல்லிக் கைகொடுத்து அவர்களது மனதை தேற்றுகிறது முஸ்தஹப்பு. அடுத்த வீட்டுக்காரரும், சொந்த பந்துக்களும் அன்று சோறு பொங்கி அவர்கட்குக் கொண்டு போய்க்கொடுக்கிறது முஸ்தஹப்பு. மையித்து வீட்டுக்காரர் அடக்கினது முதல், ஏழுநாள் வரையிலும் தன்னால் இயன்றதை தினந்தோறும் மையித்துக்குத் தவாபு கிடைப்பதற்காக மிஸ்கீன்களுக்கு ஸதகாக் கொடுக்கிறது முஸ்தஹப்பு. ஸதகா கொடுக்கச் சக்தி இல்லாதவர்கள் இரண்டுரக்அத்து நபில்தொழுது மையித்திற்காக ஹதியாச்செய்யவேண்டும்,

فصل في زيارة القبور

பஸ்லுன் பீ ஸியாரதுல் குபூர்.

கப்ரை ஸியாரத்து செய்கிறதின் விபரம்.

ஸியாரத் செய்வதற்கு வெள்ளிக்கிழமை சனிக்கிழமை, திங்கட்கிழமை. வியாழக்கிழமை முதலிய நாட்கள் வரிசையானதாகும். இன்னும் பராஅத்து இரவிலும், இரண்டுபெருநாள் இரவிலும், அரபா இரவிலும் ஸியாரத்து செய்வது ஏற்றமாகும். கப்ராளிகளுக்கு துஆவையும், தனக்கு உருதியையும் நன்மையையும் நாடி கப்ராளிகளை ஸியாரத்து செய்கிறது ஆண்பிள்ளைகளுக்கு ஸுன்னத்தும், பெண்பிள்ளைகளுக்கு விலக்கலுமாகும். ஒருவன் கப்ருகளுக்கு அருகே நடந்து செல்லுகையில், தான் உறுதி பேராமலும், அவர்களுக்கு துஆசெய்யாமலும்போனல், திடனுக தனக்கும் அவர்களுக்கும் சதிமானம்செய்து விட்டவனுகிருன்.

கப்ரை ஸியாரத்து செய்வதின் அதபுகள்.

ஸியாரத்து செய்கிறவன் கப்ரின் கால்மாட்டின் புறமாக போய் நின்று, கிப்லாவை முதுகுபுறமாக்கி மையித்தின் முகத்தை முன்னோக்கி நின்று,

السلام عليكم دار قوم مومنين وانا ان شاء الله بكم لاحقون
ونسئل الله لنا ولكم العافية

அஸ்ஸலாமு அலைக்கும் தாரகவ்மின் மூமினீன் வஇன்னு இன்ஷா அல்லாஹுபிகும் லாஹிகூன வனஸ்அ லுல்லாஹலனு வலகுமுல் ஆபிய என்று சொல்லி துஆசெய்யவேண்டும். அவ்விடத்தில் இருப்பதானல், அந்த மையித்து ஹயாத்தாய் இருக்கும்போது எவ்விதம் சங்கை செய்தோமோ அவ்விதம் சங்கையாக தூரத்தில் அல்லது அதபோடு ஒதுங்கி இருக்கவேண்டும். முகத்தை நோக்கி நிற்க, அல்லது இருக்க இடம்பாடில்லையானல் தலைமாட்டில்அல்லது கால்மாட்டில் நின்று ஸியாரத்து செய்யலாம். பாதிஹா ஒரு விடுத்தம், குல்ஹு வல்லாஹு மூன்று விடுத்தம், அல்ஹாகு

முத்தகாதுரை ஒரு விடுத்தம் ஓதவும். பின்னர் குல்ஹு வல்லாஹ்வை இரண்டு விடுத்தம் ஓதுவது மிகவும் அழகாகும். பின்னர் துஆஓதி ஹதியா செய்யவும்.

துஆ.

அல்லாஹும்ம அவ்ஸில் தவாப மாகரஃனுஹுமின் கலாமிகல் அஜீஸி, இலாஹலறதி ஸெய்யிதினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், தும்ம இலா அர்வாஹிஹிம் அல்லாஹும் மக்பிர் லஹும் வர்ஹம்ஹும் வஹ்ஷுர்ஹும்பீஸும் ரதிஸ்ஸாலிஹீன், என்று ஓதியபின் ஆனஸல்லாஹு வஹ்ஷதகும் வறஹிமல்லாஹு குருபதகும் வகப்பரஸெய்யியாதிகும் வதகப்பல் ஹஸனாதிகும், றப்பனக்பிர்லனா வலியிக்வானி னல்லதீன ஸபகூனா பில்ஈமானி வலா தஜ்அல் பீகுலூபினா கில்லன் லில்லதீன ஆமனூ றப்பனா இன்னக றவூபுற்றஹீம், றப்பனக்பிர்லனா வலிவாலிதைனா வலிமஷாயிக்னா வலிஉஸ்தாதீனா வலிஅவ்லாதினா வலிஅஹ்பாதினா வலியிக்வானினா வலிஅகவாதினா வலிஅஃமாமினா வலிஅம்மாதினா வலிஅக்வாலினா வலிகாலாதினா வலிஸாயிறி அகாரிபினா வஅர்ஹாமினா வலிஅஸ்ஹாபினா வலிஅஹ்பாபினா வலிமன்லஹும்ஹக்குன் அலைனா வலிஜமீயில் முஃமினீன வல்முஃமினாத்தி வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத்தி அல்அஹ்யாயி மின்ஹும் வல்அம்வாத்தி இன்னக முஜீபுத்த அவாத்தி என்ற துஆ ஓதவும்.

கபுரில் நிற்கிற பச்சை பூண்டுகள் முதலான புல்வகைகளைக் வெட்டுவது மக்ரூஹு. அவைகள் பச்சையாய் இருக்கிற வரையிலும் தஸ்பீஹ் செய்யும். அதனால் அந்த மையித்துக்கு அதாபுகள் குறையுமென்றும், அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்து இறங்குமென்றும் ஹதீதில் வந்திருப்பதால், பச்சை கிளை கொப்புகளை கப்ரில்வைக்கலாம். மையித்தின் எல்லை தெரிகிறதற்காக அடையாளங்கள் நட்டுகிறது குற்றமில்லை. அவ்லியாக்களின் ஷங்கைக்காகவும் முஹப்பத்திற்காகவும் அவர்களுடைய கப்ரின் பேரில் கட்டிடம் கட்டுகிறதும் அதில் விளக்குவைப்பதும் ஆகுமானதும், வீணில் அனுவசியமான செலவுகளை செலவு செய்வது ஆகாது.

ஜனுஸா தொழுகையின் வரிசை

ஹதீது:-ஒரு மையித்தின் பேரில் நூறுபேர்வரையுந் தொழுது, அந்த மையித்துக்காக அல்லாஹுத் தஆலாவிடத்திற் பிழை பொறுக்கும்படி மன்ருட்டஞ் செய்வார்களாகில், அவர்களுக்கு அவனின் மன்ருட்டங்கொடுக்கப்படுமென்றும், ஒரு மையித்தின் பேரில் மூன்று ஸப்பாக நின்று தொழுதால், அந்த மையித்திற்குப் பிழை பொறுக்கப்படுமென்றும், நமது நாயகம் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளம் பற்றினர்கள்.

ஒப்பாரி சொல்லி அழுகிறதின் பயான்

ஹதீது:-அல்லாஹுத் தஆலாவுடைய கோபம் ஒப்பாரிசொல்லி யழுகிறவர்களின் பேரிலும், அதைக்கேட்டு விலக்காமலிருக்கிறவர்கள் பேரிலும் உண்டாகுமென்றும், துன்யாவில் ஒப்பாரி சொல்லி யழுதவர்களை கியாமநாளில் நரகத்தில் இரண்டு ஸப்பாக நிறுத்தி நரகவாதிகளைப் பார்த்து நாய் சத்தம் போடுவதுபோல் ஊளையிட்டுக்கொண்டு அதாபுபடுவார்களென்றும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள்.

ஸபூர் செய்கிறதின் பயான்

ஹதீது:-ஒருவர் முஸீபத்துக்கு ஸபூர்செய்தால் (300) தரஜாவும், இபாதத்துக்கு ஸபூர்செய்தால் (600) தரஜாவும், பாவத்திற்கு ஸபூர்செய்தால் (900) தரஜாவும், அல்லாஹுத் தஆலா எழுதுவானென்று நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம் பற்றினதாக தன்பீஹுல் காபிலீன் என்னும் கிதாபில் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும், அல்லாஹுத் தஆலா ஹதீது குத்ஸியில், என்னடிமைகளில் ஒருவனுக்கு அவன் சரீரத்திலாவது, அவன் முகத்திலாவது, அவன் பிள்ளைகளிலாவது, ஒரு முஸீபத்து வந்து நேரிட்டபோது அழகான ஸபூரைக்கொண்டு முன்நோக்கினல் அவனுக்குக் கியாமநாளில் மீஸானென்னுந் திராஸில் அவனின் நன்மை தீமைகளை நிறுத்துக் கேள்வி கணக்குக் கேட்க வெட்கப்படுகிறேனென்று திருவுளமானதாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினர்கள்.

باب الزكوة

பாபுஸ் ஸகாத்.

ஸகாத்துடைய பாடம்.

இஸ்லாமுடைய ஐந்து பர்ளுகளில் ஸகாத்து ஒன்ருகும். இது தொழுகைக்கு பின்னல் மற்றும் இபாதத்துகளுக்கெல்லாம் மெத்த வருசையானது. இதனைப்பற்றி அல்லாஹுத் தஆலா குர்ஆனில் 32 தலத்தில் தொழுகையோடு ஸிக்ரு செய்திருக்கிறுன்.

باب في احكام لزكوة

ஸகாத்துடைய ஹுக்முகள்.

சொத்தில் ஈவுபடி எடுத்து, ஹாஷிமி கிளையார்களாகிய ஸாதாத்தின் பகீர்களை தவிர மிஸ்கீன்களுக்குகொடுத்து, அதனுல் ஒருவித பிரயோஜனத்தையும் தனக்காக தேடாமல், அல்லாஹுக்காக அவர்களுக்கு கொடுக்கிறது ஸகாதாகும். ஆனுல், ஸகாத்தின் முதலை ஈவுபடி எடுத்து, ஸகாத்தை நிய்யத்து செய்து ஆகாரமாக்கி, தானும் மிஸ்கீன்களுடன் கூட இருந்து புசித்தால் ஸகாத்து சேராது. உணவு எல்லாவற்றையும் மீஸ்கினிடம் புசிக்க கொடுத்து விட்டால் ஸகாத்து சேரும். பைத்தியக்காரனுக்கும், வாலிப பிராயத்தை அடையாத சிறு பிள்ளைகளுக்கும் கொடுப்பது கூடாது. ஆனுல், மேல்கண்ட இரு தரத்தாருக்கும் தாய் தகப்பன் அல்லது வஸீயத்துகாரன் வாங்கினுல் ஸகாத்து கூடும்.

ஸகாத்து பர்லாகிறதின் ஷர்த்துகள்.

பைத்தியமின்றி, புத்திசாலியாகவும், வாலிபபிராயத்தை யடைந்து புத்தியறிந்தும், முஸ்லிமாகவும், ஒரு ஊரில் குடிபதியாக யிருக்கக்கூடிய நாட்டாமகனுயும், கடனின்றி, தனக்கு அவசியமான வீடு, துணிமணி முதலிய சாமான்கள் தவிர அதிகமாக நிஸாபின் கணக்கின்படி சொத்து உடையவனுக இருக்கவேண்டும்.

பர்லாகிறதற்கு ஷர்த்துகளாவன:-சொத்து கிடைத்து ஒருவருடம் பூர்த்தியாகவேண்டும். இதனிடையில் வியாபாரம், அனந்தரச் சொத்து முதலிய மற்றவைகளால் கிடைக்கப்பெற்ற பிரயோஜனத்

தையும் அந்த கணக்குடன் சேர்த்து ஸகாத்து கொடுக்கவேண்டும். வருஷத்தினுடைய ஆரம்பமும் முடிவும், சரியாக பூர்த்தியாக வேண்டும். இடையில் கிடைக்கும் வியாபார ஆதாயம், அனந்தர முதல்கள் வருஷம் பூர்த்தியாகாததால் குற்றமில்லை.

ஸகாத்து பூர்த்தியாகிறதின் ஷர்த்துகள்.

ஸகாத்து கொடுக்கும்போது, என்பேரில் விதியான ஸகாத்தை கொடுக்கிறேனென்று, அல்லது சொத்தை கணக்குபார்த்து வேரே எடுத்து வைக்கும்போது, ஸகாத்து கொடுப்பதற்காக எடுத்து வைக்கிறேனென்று நிய்யத்து செய்யவேண்டும். முதலில் நிய்யத்தில்லாமல் அரைபாகம், முக்கால்பாகம் கொடுத்தால் பர்லாகிய ஸகாத்தில் சேராது. ஆனல், ஸுன்னத்தாகிய ஸதகாவில்தான் சேரும். முதலடங்கலையும் கொடுத்தால் ஸகாத்தில் சேரும்.

நிஸாப் என்னும் ஸகாத்து கொடுக்க வேண்டிய விகித கணக்கு விபரம்.

பொன்னில் இருபது களஞ்சியும் வெள்ளியில் இருநூறு திர்ஹமும் நிஸாபுடைய கணக்காக யிருக்கும். ஒரு களஞ்சியம் 20 பணவிடையாகும். திர்ஹமென்பது 14 பணவிடையாகும். ஒரு பணவிடை ஐந்து தொலிகோதுமையின் எடையாகும். பொன் வெள்ளியால் செய்யப்பட்ட நாணயங்களும், நகைகளும் ஒரே ஹுக்மிலாயிருக்கும். வியாபாரச்சறக்குகளிருந்தால் பொன் அல்லது வெள்ளியின் விலைபடி கணக்குபோட்டு ஈவுபடி ஸகாத்து கொடுக்கவேண்டும். சறக்குகள் நிஸாபுடைய கணக்கின்படி ஆகாவிட்டால், தங்கம்வெள்ளி கிறயத்துடன் இதையும் சேர்த்து ஈவு செய்யவேண்டும். பகீர்களுக்கு அவசியம் வேண்டியதை கொடுக்கிறது வாஜிபாகும். ஆகவே, கணக்குபடி பொன் வெள்ளியுடையவர்கள் நாற்பதிலொன்று கொடுக்கிறது பர்லாகும். நிஸாபுடைய கணக்கிற்கு அதிகமான தொகை நிஸாபில் ஐந்தில் ஒரு பங்கானல் அடங்கலுக்கும் ஈவுபடி கொடுக்கவேண்டும். ஐந்திலொன்றுக்கு குறைந்தால் கணக்குபடி மாத்திரம் கொடுக்கவேண்டும். மற்றவை மன்னிக்கப்படும். எவ்விதமென்றால் ஒருவனுக்கு நிஸாபின்படி

ரூபாய் ஐம்பது இருந்தாலும் அல்லது அதற்கு அதிகமாக ஐம்பத்தி ஒன்பது வரையிருந்தாலும் ஒன்னேகால் ரூபாய் ஸகாத்து கொடுக்கவேண்டும். அருபது ரூபாய் இருந்தால் ஒன்னரை ரூபாய் வீதம் கொடுக்கவேண்டும்.

ஸகாத்து வாங்க பாத்திரமானவர்கள்.

இவர்கள் எழுவகையினராகும். 1-வது பகீரெனும் ஸகாத்தின் கணக்கிற்கு குறைந்த சொத்தையுடையவன். 2-வது மிஸ்கீனெனும் யாதொருசொத்து மில்லாதவன். 3-வது ஸகாத்து முதலை வசூலித்து சுல்தானிடம் கொடுக்கிற தண்டல்காரன். இவனுக்கு வேலையின் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். 4-வது முகாதிபென்னும் தனது உரிமையை எழுதிகொடுத்துவிட்ட அடிமை. ஆனால் ஹாஷிமுடைய அடிமைக்கு கொடுக்கக்கூடாது. 5-வது காரிமென்னும் கடனை விட்டும் மேல் மிச்சமாகிய ஸகாத்துடைய கணக்கை அடையாத கடன்காரன். இவனுக்கு கொடுப்பது கடனில்லா பக்கீருக்கு கொடுப்பதை விட மிக்க நலமாகும். 6-வது பீஸபீலுக்கு போகும்போது அன்ன வஸ்திரம் வாகனம் முதலிய சாமான்கள் செலவாகிவிட்டபடியால் யுத்தகளத்தை அடைய முடியாமலிருக்கிறவர்கள். 7-வது வழிப்பிரயாணம் செய்யும் முஸாபிர்களில், தன் ஊரில் சொத்திருந்தும் வழியில் தட்டுப்பாடாகி அம்முதல் உதவாமலிருப்பவர்கள். இவ்வேழு வகையினருக்கும் ஸகாத்து பிரித்துகொடுப்பதும், இவர்களில் ஒரு வகையினருக்கு மாத்திரம் கொடுப்பதும் குற்றமில்லை. ஆனால் ஒருவன் கடன்காரனும், பிள்ளை குட்டிக்காரனுமாக இருந்து அவனுக்கு கடனுக்கும் செலவிற்கும் போக கொடுக்கும்தொகை மீதமாகாதபடி ஸகாத்து கொடுக்கலாம். மீதமாகும்படி கொடுப்பது மக்ரூஹாகும்.

ஸகாத்து முதலை காபிர்களுக்கும், பள்ளிவாசல் கட்டுவதற்கும், கபன் செய்வதற்கும், நிஸாபுடையசீமானுக்கும், அவனுடைய சிறு பிள்ளைகளுக்கும், அவனுடைய உரிமை எழுதிகொடுக்காத அடிமைகளுக்கும், பனீ ஹாஷிமுக்கும், அவர்களுரிமையிட்டவர்

களுக்கும், ஸகாத்துக் கொடுக்கிறவனுடைய தாய், தகப்பன், பாட்டன், பாட்டி, பிள்ளை, பிள்ளையுடைய பெண்ஜாதி, அடிமை, தான் முறி எழுதி வாங்கியிருக்கிற முகாதிபென்னும் அடிமை ஆகியவர்களுக்கு கொடுக்கிறது கூடாது. ஒரு பகீருடைய செலவுக்கும் அவனுடைய பிள்ளை குட்டிகளுடைய செலவுக்கும் ஒரு நாளைக்குக் காணும்படி ஸகாத்து கொடுக்கிறது முஸ்தஹப்பாகும்.

ஷாபியீ மத்ஹபின்படி மேல்கண்ட ஏழுவகையினருக்கும், பலஹீனமான புது இஸ்லாமானவர்களுக்கும் கொடுக்கவேண்டும். ஆனால் இந்த எட்டு கூட்டத்தார்களும் கிடையாவிடில், இருக்கிறவர்களில் ஒவ்வொரு கூட்டத்தாரிலும் மூன்று பெயருக்கு கொடுத்தால் போதும்.

ஸகாத்து கொடுக்கவேண்டிய ஒழுங்கு.

ஸகாத்தை தன்னுடைய ஏழையாகிய உடன் பிறந்தவர்கள், அவர்களுடைய பிள்ளைகள், சிறிய தகப்பன்மார்கள், பெரியதகப்பன்மார்கள், மாமன்மார்கள், அடுத்த வீட்டார்கள், தன் தெருவிலுள்ளவர்கள், தன் ஊரிலுள்ளவர்கள், அந்த ஊறைச்சுற்றியிருக்கிறவர்கள் ஆக இந்த ஒழுங்கின்படி கொடுக்கவேண்டும். ஆனால் ஸகாத்துவாங்க அருகதையுள்ளவர்களில், ஒருவன் ஸகாத்தை வாங்கி அதைவீணில் அல்லது பாவமான வழியில் செலவுசெய்வானென்றறிந்தால் அவனுக்குக் கொடுக்கிறது தருமமல்ல.

பித்ராவுடைய ஸகாத்து பர்லாவதின் விதிகள்.

ஒருவன் தன் செலவுக்கும், தன் அன்ன வஸ்திரத்தின் செலவுக்கும், பெருநாளிரவிற்கும், பகலுக்கும் காணும்படியான செலவுகளுக்கும், தன் கடனுக்கும், வீட்டுவேலையிலுள்ள அடிமைகளுக்கு போகவும் மேல்மிச்சமாக சொத்திருக்கில், றமலான் கடைசி நாள் பொழுதடைந்த நேரத்திலிருந்து தனக்காகவும், தன் சிறுப்பிள்ளைகளைபோல அன்ன வஸ்திரம் கொடுக்க வாஜிபானவர்களுக்காகவும், அவ்வூரில் வழமையாக புழங்குகிற அரிசிபோலொத்த தானியத்தில் ஒரு மரக்கால் கொடுக்கிறது பர்லாகும். மரக்கால் என்பது ஒரு சுமார் நிதானமானவர்களுடைய இருகையாலும் சேர்ந்த நாலு

சிறங்கையாகும். இந்த பித்ராவை பெருநாள் காலையில் கொடுக்க வேண்டும். இதை பெருநாளில் கொடுக்காமல், பிற்படுத்தினுல் குற்றவாளியாவதுடன், கலாச் செய்வதும் கடமையாகும்.

ஸுன்னத்தான ஸதகாவின் விபரம்.

செலவுகளில் தனக்காக செலவுசெய்கிறது மிகவும் ஏற்றமானதாகும். பின்பு, தான் அன்ன வஸ்திரம் கொடுக்க வாஜிபானவர்களுக்குச் செலவுசெய்கிறது. இந்த இரண்டு செலவையும் அவசியமான நேரத்தில் முற்படுத்துவது பர்லாகும். இவைகளிரண்டுக்கும் போக மிஞ்சினுல், ஏழையானவர்களுக்கு ஸதகா கொடுப்பது மெத்த நலமாகும். அதிலும் மனமுறியாயிருக்கும் ஜனங்களுக்குக் கொடுக்கிறது மிக்க வரிசையாகும். ஒருவன் சரீர சுகத்தோடு இருக்கையில் ஒரு திரஹம் ஸதகாச் செய்வதாவது, அவன் மவுத்தாகும்போது நூறு திரஹம் ஸதகாச்செய்யும்படி வஸீயத்துசெய்ததால் கொடுக்கிறதைவிட மிக்க நலமாகும். தனது பந்து ஜனங்கள் பட்டினி பசியாயிருப்பதை அறிந்தும், அவர்களுக்குக் கொடுக்காமல் பிறருக்குக்கொடுப்பது ஹறுமாகும். அவர்கள் சம்மதப்பட்டால் குற்றமில்லை. ஸதகாவை இரகசியமாய்க் கொடுப்பதே நலம். ஆனுல் நாம் கொடுப்பதைப்பார்த்து மற்றவர்களும்கொடுப்பார்களென்றெண்ணி பகிரங்கமாக கொடுப்பதால் குற்றமில்லை. தன்னைவிட பிறரை பெரிதாக கண்டு கொடுப்பது ஸகாவத்தைவிட மெத்த வரிசையாகும். ஆனுல் தன் அன்னவஸ்திரத்திலுள்ள பிள்ளை குட்டிகளுக்குள்ள உணவை பகீர்களுக்கு கொடுத்துவிட்டு அவர்களைப் பசியாக விட்டுவிடுவது, வலியோர் எளியோர் யாவர்பேரிலும் ஹறுமாகும். ஆனுல் அவர்கள் சம்மதித்தால் கொடுத்து விடலாம்.

ஸதகா கொடுப்பதின் தவாபெனும் நன்மைகள்.

ஸதகாவின் நன்மைகள் ஐந்து வகைப்படும். (1-வது) சரீர சுகமுள்ளவனுக்குக் கொடுத்தால் ஒன்றுக்கு பத்தும். (2-வது) நோய் பிடிமையாளனுக்குக் கொடுத்தால் ஒன்றுக்குத் தொண்ணூறும், (3-வது) தன் பந்துக்களில் ஏழையாயிருக்கிறவர்களுக்குக் கொடுத்

தால் ஒன்றுக்கு தொளாயிரமும், (4-வது) தாய்தகப்பனுக்குக் கொடுத்தால் ஒன்றுக்கு இலட்சமும், (5-வது) பிக்ஹு மஸலாத் தெரிந்திருக்கிற ஆலிம் அல்லது இல்மு படிக்கிறவர்களுக்குக் கொடுத்தால் ஒன்றுக்கு ஒன்பது இலட்சம் நன்மைகளும் கிடைக்கும். ஒருவன் ஒரு கடுகுப்பிரமாணமாவது அல்லாஹுத் தஆலாவுக்காக ஒரு மிஸ்கீனுக்கு ஸதகாக் கொடுத்தால், அல்லாஹுத் தஆலா ரகசியமாக அவனைச் சுவர்க்கத்திற் சேர்ப்பான்.

ஹதீது:- ஒருவன் இல்மைத்தேடுகிறவன் பேரில் ஒருவெள்ளிக் காசு செலவு செய்தால், அவன் அல்லாஹுத் தஆலாவின் பாதையில், பொன்னால் உஹது மலையளவு செலவு செய்தவனைப்போலென்று வந்திருக்கிறது. ஒருவன் ஒரு திரஹத்தை ஸதகாக் கொடுக்க நாடி அதற்குக் காசு மாத்தி மிஸ்கீன்களுக்கு பிரித்துக் கொடுப்பானாகில், திடனாக அவன் ஸதகாவுடைய காரியத்தில் திறக்கேடு செய்து விட்டான். ஆகையால் அதிகமாக கொடுப்பது சங்கையானவர்களுடைய நடப்பைக்கொண்டு மிகவும் ஒப்பாயிருப்பதாலும், காரியங்களில் மேலானதை அல்லாஹுத் தஆலா உகந்தும், தாழ்மையானதை கோபித்து மிருப்பதாகவும் ஹதீதில் வந்திருப்பதால், பிரித்துக் கொடுப்பதைக்காண பிரிக்காமல் சேகரமாகக் கொடுப்பதுதான் மிகவும் நன்மையாகும்.

பாலிகெனும் மார்க்கக்கட்டளை நடக்காதவுருக்கு அன்றைய உணவை விட அதிகம் கொடுக்கக்கூடாது. தினசரி எதுவேனும் ஸதகாக்கொடுத்து வந்தால் அன்றன்று வரும் பலாயைத் தட்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வீட்டுவாசலில் வந்து ஸுவால் செய்கிறவனுடைய ஸுவாலைக்கொள்ளையிட்டு தன்கையினால் தன்னுலியன்றதை கொடுக்கவும். அதிகபேர் வந்து ஸுவால் செய்தால், தன் கல்புயாருக்குகொடுக்க நாடுகிறதோ அவனுக்குக்கொடுக்கவும். ஸுவால்செய்தவனை சும்மா அனுப்பாமல்கொஞ்சமாவதுகொடுத்து அல்லதுமெல்லினமானவார்த்தையாகச்சொல்லி அனுப்பவேண்டும். அவனை துறத்தக்கூடாது. ஒன்று மில்லாவிட்டால், رزقنا الله وإياكم றஸகனல்லாஹு வஇய்யாக்கும் உனக்கும் எனக்கும் அல்லாஹுத் தஆலா றிஸ்குக்கொடுப்பானாக என்று சொல்ல வேண்டும். மூன்று

தரம் சொல்லியும் போகாவிட்டால், அவனை துரத்தினால் குற்ற மில்லை என்று ஹதீதில் வந்திருக்கிறது.

தான் ஸகாத்தாககொடுத்த முதலும், உபகாரமும் உள்ளமை யில் அல்லாஹுத் தஆலாவுக்குடையதானதால், தான் உபகாரம் செய்ததாக அதைக்கருதக்கூடாது. தன்னிடத்திலுள்ளதைக் கொடுப்பதில் அது சொற்பமாயிருந்தாலும் இலேசாகக்காணு மல் கொடுக்கவும். அது கபூலாகி விட்டால், அதே மெத்தப் பெருப்பமானதாகி விடும். பகீருடைய துஆவையும், புகழை யும் ஆதரவு வைக்காமல், அல்லாஹுத் தஆலாவுக்காக கொடுக்க வேண்டும். பகீர் துஆச்செய்தால் இவனுமதுபோல் துஆச் செய்யவேண்டும்.

ஹறாமான சொத்தை ஸக்காத் கொடுப்பது தகாது.

எச்சரிப்பு:— வட்டி ஆதாயம், தீங்கு, அநீதம் இவைபோ லொற்றதால் வந்த ஹறாமான முதலிலிருந்து நன்மையை ஆதரவு வைத்து ஸதகாக்கொடுத்தவனும், அதை ஹறாமென்றறிந்து அவனுக்குத் துஆச்செய்த பகீரும், அவ்விதமாக அறிந்து ஆமீன் கூறினவனும் காபிறுவார்கள். ஆகையால் நலனை ஆதரவு வைத்து ஹறாமான முதலை ஸதகாக் கொடுக்காகமலிருப்பது விதியாகும். ஹலாலும் ஹறாமும் கலந்த முதலை நன்மையை ஆதரவுவைத்து ஸதகாக். கொடுத்தால் காபிறுகமாட்டான். என்றாலும் அதை ஸதகாக் கொடுப்பதும் ஹலாலாகாது. ஆன தால் ஸகாத்துக்கும் ஸதகாவுக்கும் ஹறாமுடைய முதலென்று சந்தேகமில்லாத நல்ல முதலையும், ஸகாத்திற் குறியவர் களையும் தெண்டித்து கொடுக்கவேண்டும்.

கையேந்தி கேட்கிறதின் விபரம்.

ஹதீது:— ஒருவன் மனிதர்களிடத்தில் கேட்டு வாங்கிச்சீமா னுகிவிடலா மென்றெண்ணி, யாசகம் வாங்கினுல், அல்லாஹுத் தஆலா அவனுக்குமிடிமையை அதிகப்படுத்துவானென்று நபி நாயகம் முஹம்மது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்

கள் திருவுளமானார்கள். ஒருமனிதன் மற்றொரு மனிதனிடத்தில் வந்து, "அல்லாவுக்காக எனக்கு எதாவது கொடு" என்று ஆண்டவன் பெயரைச்சொல்லிக் கேட்கிறது பிசகாகும். அப்படிகேட்டதற்கு கொடாதவன் கியாமநாளில் தன்னுடைய சரீரத்தில் எலும்பில்லாமல் தவிர்த்துக்கொண்டிருப்பானென்று ஹலரத்கிஸூரு அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ஆதலால் அல்லாவுடைய பெயரைக் கொண்டு கேட்கிறதும், கேட்டால் கொடாதிருக்கிறதும் பாவமாயிருக்கும்.

ஹிக்காயத்து:— ஹலரத் ஹஸனுல் பஸரீ றஹ்மதுல்லாஹி அவர்களிடத்தில், ஒருமிஸ்கீன் தெருவழியில் எதாவது தரவேண்டுமென்று கேட்டபோது, மேலே அணிந்திருந்த துப்பட்டியை உடனே கொடுத்துவிட்டார்கள். அப்பொழுது ஒருமனிதன், "வீட்டில்போய் வேறே அணிந்துகொண்டு கொடுக்கக்கூடாதா" என்று கேட்டதற்கு, "இதற்குமுன் எங்கள் பள்ளியில் ஒரு மிஸ்கீன் என்னிடத்தில் ஆகாரம் கேட்டதற்கு, வீட்டிற்போயனுப்புகிறேனென்று சொல்லிவிட்டு வீட்டுக்குவந்து மறந்துவிட்டேன். மறுநாட்காலையில் மிஸ்கீனைப் பள்ளியில் மவுத்தாயிருக்கக்கண்டு, நாங்கள் கவலையுற்று கபன்செய்து கப்ரில் அடக்கினோம். பிறகு அந்த கபன் சீலை மிஃறாபில் இருக்கக்கண்டோம். அதில், உங்களுடைய கபனை நாம் ஒப்பவில்லை என்று எழுதப்பட்டிருந்தது. அதுமுதல், யாராவது என்னிடத்தில் எதாவது கேட்டால் அவர்களுக்கு தவணை சொல்லாமல் உடனே கொடுத்து விடுவேன்" என்று சொன்னார்கள். ஆகையால், மூமினான ஜனங்களே! கேட்ட மிஸ்கீன்களை விரட்டாமல் உபகாரஞ் செய்யுங்கள்.

விருந்தாளிக்கு உபசரிப்பது.

ஹதீது:—விருந்தாளிகளுக்கு உபசரிப்பு செய்யவேண்டியது எல்லாமுஸ்லிம்கள் பேரிலும் வாஜிபாகும். எந்த வீட்டில் விருந்தாளி புகுத வில்லையோ அந்த வீட்டில் கிருபையையுடைய மலக்குகள் புகுத மாட்டார்களென்றும், விருந்தாளிக்கு உபசரித்தால் எனக்குஉபசரித்தது போலென்றும் நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருவன் தன் முஸ்லிமாகிய உடன்பிறந்தவர்களுடைய பசியை அறிந்து அவர்களுக்கு உணவு கொடுத்தால், அல்லாஹுத் தஆலா அவனுடைய பிழையை மன்னித்து, சரீரத்தை நரகத்தின் பேரில் ஹறாமாக்கி விடுவானென்று ஹதீதில் வந்திருக்கிறது.

ஸுவால் செய்பவர்களேனும் பிறரிடம் ஸகாத் கேட்பவர்களின் விபரம்.

ஒரு மனிதனுக்கு அன்றைக்குக் காணும்படியான ஊணும், சூட்டையும் குளிரையும் தாங்குவதற்கான அணியும்உடை இருந்தாலும், அல்லது இந்த இரண்டையும் சம்பாதிக்கக் கூடியவனாயிருந்தாலும், அவன் பிறரிடம் கேட்பது ஹறாமாகும். ஆனால் கேட்காமல் கொடுப்பதை வாங்குவதுஹறாமல்ல. ஒருவன் கேட்டால் அவனை அடித்து துறத்துதல் கூடாது. அவன் குதிரை மேல் ஏறி வந்து கேட்டாலும் கொடுக்கத்தான் வேண்டும். இல்மைப் படிக்கிறவர்கள் தீனுடைய வேலையிலிருப்பதால், தங்கள் வேண்டுதலுக்காக கேட்கலாம். அவர்கள் தொழில் செய்ய சக்தி பெற்றாலும் கேட்கலாம்.

உபகாரம் செய்வதின் விபரம்.

கையிலில்லாதவனுக்கு மற்றொருவன் வேறே மனிதர்களிடத்தில் ஸுவால்செய்து கேட்டு வாங்கிச் சேகரித்து கொடுக்கிறது நலவைக்கருதியும் தக்வாவெனும் பரிசுத்தத்தை கருதியும் உதவி செய்தானதால் அது ஸுவாலாகாது. கையிலில்லாதவன் சம்பாதிக்க முடியாதவனாகி வீடுகளுக்குபோய் வாங்க சக்தி பெற்றால், அவ்விதம் வாங்கித்திண்ணுவது அவனுக்கு பர்லாகும். அவன் வெளியில் புறப்பட முடியாவிட்டால், அவனுடைய நிலைமையை அறிந்தவர்கள், அவன் எழுந்து இபாதத்துச் செய்ய சக்தி உண்டாகிற வரையிலும் அவனுக்கு உபகாரம் செய்வது பர்லாகும். அவனுக்கு ஒருவரும் உணவு கொடுக்காதிருந்து அவன் மவுத்தாகி விட்டால், அவனுடைய நிலைமையை அறிந்தவர்கள் யாவரும் பாவியாவார்கள். தங்களிடத்தில் யாதொன்றுமில்லை என்றால், மற்றவர்களிடத்தில் சொல்லி

உபகாரம் செய்யசக்தி பெற்றால், அப்படிச் செய்வது அவர்கள் பேரில் பர்லாகும்.

நிலைபுடையவன் வாஜிபான ஸதகாக்களை வாங்குவது ஹறாம்.

ஸகாத்தின் கணக்கின்படி முதலையுடையவன் ஸகாத்து, பித்று, நேர்ச்சை, கப்பாறத்து முதலிய வாஜிபாகிய ஸதகாக்களைக் கேட்காமல் கொடுக்கப்பட்டாலும் வாங்குவது ஹறாமாகும். நபிலாகிய ஸதகாக்களைக் கேட்காமல் கொடுத்தால் வாங்குவது அவனுக்கு ஹறாமாகாது. ஒருவன் கேட்காமலும், தனது நாட்டம் அதனை நாடாமலும் கொடுக்கப்பட்டதை, அல்லாஹுத் தஆலா வால் கொடுக்கப்பட்ட ரிஸ்கெனும் சன்மானமானதால், அவனுடைய நாமங்கொண்டு, தட்டாமல் பெற்றுக்கொள்ளவேண்டும்.

كتاب الصوم

கிதாபுஸ் ஸவ்ம்.

நோன்புடைய பாடம்.

நோன்புடைய மகிமைகள்.

அல்லாஹுத் தஆலா திருமறையில் "ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள்மீது கடமையாக்கப்பட்டது போல-நீங்கள் (பாபங்களை) தவிர்த்துக்கொள்வதற்காக-உங்கள்மீது நோன்புகள் கடமையாக்கப்பட்டிருக்கின்றன" என்று அருளியுள்ளான்.

ஹதீது:— சுவர்க்கலோகத்தில் றையான் என்னும் ஓர் வாயலுண்டாயிருக்கிறது. அவ்வாயலில் நோன்பாளிகளைத்தவிர கியாம நாளில் மற்றெவரும் புகுதமாட்டார்கள். இன்னும் நோன்பு பிடித்தவர்களுடைய முகத்தை நரகத்திலிருந்து 70-வருடத்தின்

பிரயாணதூரம் அல்லாஹுத் தஆலா அப்புறப்படுத்தி விடுவானென்றும், சந்திரன், சூரியன், பறவை முதலிய அல்லாஹுத் தஆலாவின் சிருஷ்டிகளில் ஷைத்தானை தவிர மற்றெல்லா வஸ்துக்களும் இரவிலும், பகலிலும் நோன்பாளிகளுக்கு வாழ்த்துகூறி துஆ செய்யுமென்றும் நமது நாயகமவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

فصل فى احكام الصوم

பஸ்லுன் பீ அஹ்காமுஸ் ஸவ்ம்.

நோன்புடைய கட்டளைகள்.

நோன்பாகிறது ஹைலு, நிபாஸ் இவைகளன்றி துப்புரவாகிய முஸ்லிமானவர்களுக்கு கிழக்கு வெளுத்தது முதல் பொழுது அடைகிறவரையில் கதாவென்னும் தவருதலாய் அல்லது ஞாபகமாய் யாதொரு வஸ்துவையும் உள்ளே புகுத்தாமலும், அபத்தின் ஆசையை நிறைவேற்றுமலும் நிய்யத்துசெய்து நோன்பு பிடிக்க வேண்டும். ஆனல் மறதியாக தின்றாலும், குடித்தாலும், ஜிமாஉ செய்தாலும் முறிக்காது. எனினும், ஞாபகம் வந்தவுடன் விலகிக் கொள்ளவேண்டும். கதாவென்பது வாய்க்கொப்பளிக்கும்போது நோன்பு ஞாபகமன்றி தண்ணீர் தொண்டைக்குள்போகிறது.

வயிறு, அபம் இவ்விரண்டின் விருப்பத்தை நிறைவேற்றுமல் தடுப்பது நோன்பின் ருக்னுகும். நோன்பு பிடிப்பவன் இஸ்லாமாயும், ஹைலு நிபாஸ் களன்றி துப்புறவாகவும், நிய்யத்து செய்தும் ஆக இம்மூன்றும் கொண்டு பிடிக்கவேண்டும். முழுக்கை விட்டும் துப்புறவாக இருக்கவேண்டியது விதியல்ல.

ஷாபிஈ மத்ஹபின்படி நோன்பு நிறைவேருகிறதற்கு விதிகளாவன:— 1-வது றமலானில் ஒவ்வொரு நாள் நோன்புக்கும் நிய்யத்து செய்யவேண்டும், ஆனல் பர்லில் இரவில் கிழக்கு வெளுக்கு முன் நிய்யத்து செய்வது வாஜிபு. நபில் என்னும் ஸுன்னத்தான நோன்பிற்கு, மத்தியானத்தில் உச்சிப்பொழுதிற்கு முன் நிய்யத்து செய்கிறது போதும்,

நோன்பின் வகைகளின் விபரம்.

இது பர்லு, வாஜிபு. முஸ்தஹப்பு என்னும் மூன்று வகைப் படும். 1-வது றமலானுடைய அதாவென்னும் கடமையான நோன் பும், விடப்பட்ட கலா நோன்பும், தவருதலாய் விட்ட தெண்டங் களுடைய நோன்பும் பர்லு. 2-வது குறிக்கப்பட்ட நேர்ச்சை நோன்பும், மொத்தமாகிய நேர்ச்சை நோன்பும் வாஜிபு. இவை இரண்டும் ஒருசொற்படி பர்லென்றும் வந்திருக்கிறது. இன்னும் நபில்நோன்பை துடங்கியபின் அதை நிறப்பமாக்குகிறதும் அதை பஸாதெனும் வம்பாக்கப்பட்டால் கலாச்செய்கிறதும், நேர்ச்சை செய்யப்பட்ட இஃதிகாபுடைய நோன்பும் வாஜிபு. 3-வது முஹர் ரம் ஒன்பதாம் அல்லது பதினோராம் நாளுடனே பத்தாவது நாள் நோன்பும் அரபாநோன்பும், எல்லா மாதங்களிலும் 13, 14, 15 ஆக இம்மூன்று நாட்களுடைய அய்யாமுல்பீல் நோன்பும், வியாழன், திங்கள் நோன்பும், ஷவ்வால் மாதம் 6 நோன்புகளும் முஸ்தஹப் பாகும்.

ஹதீது:— நபிதாவூது அலைஹிஸ்ஸலாம், ஒருநாள் விட்டு மறு நாள் நோன்பு பிடித்துவந்ததை அல்லாஹுத் தஆலா அளவில் நபிலான நோன்புகளில் மிக்க பிரியமானதென்று நமது நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளம்பற்றினார்கள். ஷவ்வால் மாதத்தின் ஆறுநோன்பை ஒரு சொல்படி ஒரேமொத்தமாக தொடராக சேர்த்து பிடிப்பதும், இன்னுமொருசொற்படி முந்தின பத்தில் இரண்டும், இரண்டாம் பத்தில் இரண்டும், மூன்றும் பத்தில் இரண்டுமாக பிடிக்கிறது நல்லதாகும்.

நோன்பு மக்ரூஹான தினங்கள்.

இரண்டு பெருநாள் தினம், ஐயாமுத்தஷ்ரீக் என்ற ஹஜ்ஜுப் பிறை 11, 12, 13 ஆக இவ்வைந்து நாட்களிலும் நோன்பு பிடிப் பது ஹறுமுக்கு அடுத்த மக்ரூஹ் தஹ்ரீமாகும். முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் மாத்திரம் பிடிக்கிறதும், வெள்ளிக்கிழமை சனிக் கிழமை மாத்திரம் பிடிக்கிறதும் மக்ரூஹ் தன்ஸீஹாகும்.

21

நோன்புடைய நிய்யத்தின் விபரம்.

றமலானுடைய கடமையான நோன்பும், குறிக்கப்பட்ட நோன்பும், நபில்நோன்பும் இரவிலிருந்து பகல் பாதியாகாம லிருக்கிறவரை குறிப்பான நிய்யத்து கொண்டும், நானே அல்லாஹுக்காக நோன்பு பிடிக்கிறேன் என்ற மொத்தமான நிய்யத்து கொண்டும், நபில் நோன்பை நானே அல்லாஹுக்காக பிடிக்கிறேன் என்ற நபில் நிய்யத்து கொண்டும், நிய்யத்துகள்செய்து நோன்பு வைக்க வேண்டும்.

இம்மூன்று நோன்புகளுக்கும் நிய்யத்துகளே கல்பென்னும் இருதயத்தால் அல்லாஹுக்காக நோன்பு பிடிக்கிறேன் என்று நினைக்கவேண்டும். நிய்யத்தை பொழுதடைந்தவுடனேயே முதன் மையாக வைத்துவிடலாம். ஆனால் பொழுதடைவதற்குள் நிய்யத்து செய்வது கூடாது. நோன்புகளுடைய நிய்யத்தில், தான் இந்த நோன்பு பிடிப்பதாக குறித்து செய்வது கடமையாகும். அந்த நிய்யத்தை நாவினால் மொழிவது ஸுன்னத்தாகும்.

குறிக்கப்பட்ட நேர்ச்சை நோன்பானது, இந்த வியாழக்கிழமை அல்லாஹுத் தஆலாவுக்காக நான் நோன்பு பிடிக்கிறது என்பேரில் விதியாயிருக்குமென்று சொல்வது போலாகும்.

றமலானுடைய கடமையான நோன்பில்,

نويت صوم غد عن اداء فرض رمضان هذه السنة لله تعالى

நவைத்து ஸவ்மகதின் அன்அதாஇ பர்லி றமலானி ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா. அதாவது இந்த வருடத்தின் றமலான் மாதத்தின் பர்லான நோன்பில் அதாவென்னும் கடமையானதை அல்லாஹுத் தஆலாவுக்காக நானே நோன்பை நிய்யத்துச் செய்தேன். என்று சொல்லவேண்டும்.

குறிக்கப்பட்ட நேர்ச்சையின் கடமையான நோன்பில் نويت صوم غد عن اداء النذر المعين لله تعالى நவைத்து ஸவ்மகதின் அன்அதாஇன்னத்ரில் முஅய்யனி லில்லாஹி தஆலா அதாவது குறிக்கப்பட்ட நேர்ச்சை நோன்பில் கடமையானதை அல்லா

ஹுத் தஆலாவுக்காக நாளை நோன்பை நிய்யத்துச் செய்தேன் என்று சொல்லவேண்டும்.

முஸ்தஹப்பான நோன்பில் نويت صوم غد عن صوم عاشوراء لله تعالى நவைத்து ஸவ்மகதின் அன்ஸவ்மி ஆஷுராஅ லில்லாஹி தஆலா அதாவது ஆஷுரு நாளுடைய நோன்பைத் தொட்டும் அல்லாஹுத் தஆலாவுக்காக நாளை நோன்பை நிய்யத்துச் செய்தேன் என்று சொல்லவேண்டும். இவ்விதமாகவே நவைத்து ஸவ்மகதின் அன்ஸவ்மி அரபஹ் என்றும் அன்ஸவ்மில் அய்யாமில்பீல் என்றும், அன்ஸவ்மி யவ்மல் இத்னைனி, அன்ஸவ்மி யவ்மில்கமீஸி என்றும், அன்ஸவ்மி யவ்மில்இத்னைனி ஷஹ்ரி ஷவ்வால் என்றும், முஸ்தஹப்பான நோன்புகளுக்கு அந்தந்த நாட்களின் நோன்பைக் குறிப்பாக்கி நிய்யத்துச் செய்யவேண்டும்.

இரவில் நிய்யத்துச் செய்யாதவன், மெய்வெள்ளை வெளுத்த பின், நோன்பை முறிக்கக்கூடிய செய்கைகள் செய்யாதிருந்தால் பாதிபகலாகிறதற்கு முன் இன்று நோன்பாயிருக்கிறேன் என்று நாடினாலும் நோன்பு பூர்த்தியாகிவிடும். அவ்விதமில்லாமல் இந்நேர முதல் நோன்பாயிருக்கிறேனென்று நிய்யத்துச் செய்தாலும், அல்லது கிழக்கு வெளுத்த பின் நோன்பை முறிக்கும்படியான செய்கை செய்திருந்தாலும் நோன்புகூடாது. றமலான், விட்டு விட்ட நோன்பு, குறிக்கப்பட்டநேர்ச்சையின் விட்டு விட்ட நோன்பு, குறிக்கப்படாத மொத்தமாகிய நேர்ச்சையின் நோன்பு, பஸாதெனும் வம்பாக்கப்பட்ட நபில் நோன்பிற்கு பிடிக்கும் நோன்பு, தவறுதலால் விட்ட நோன்பு ஆக இவ்வைந்தும் இரவில் குறிக்கப்பட்ட நிய்யத்து செய்தால் பூர்த்தியாகும். ஆகையால் நிய்யத்தில் இந்த நோன்பென்று குறிப்பிடுகிறதும், இரவில் நிய்யத்துச் செய்வதும் விதியாகும். இந்நோன்புகளைக் கிழக்கு வெளுத்த பின் நிய்யத்துச் செய்தால் அந்நோன்புகளில் நிறைவேறாது. ஆனால் நபில் நோன்பாகிவிடும்.

மொத்தமாகிய நேர்ச்சையின் நோன்பானது, அல்லாஹுத் தஆலா, என்னுடைய வியாதியஸ்தனுக்கு சவுக்கியத்தைச்

கொடுத்தால், ஒரு நாளைக்கு நோன்பு பிடிப்பது என்பேரில் விதியாயிருக்கிறது என்று நிய்யத்து செய்துகொள்வதுபோலாகும்.

நோன்புடைய முஸ்தஹப்புகளின் விபரம்.

ஸஹரில் உணவு புசிப்பதை இரவு முடிகிற கடைசி நேரம் வரை பிற்படுத்துவதும், நோன்பு திறப்பதை மேகமல்லாத நாட்களில் நட்சத்திரங்கள் வெளியாகிறதற்கு முன் பொழுது அஸ்தமித்ததும் முற்படுத்தி திறக்கிறதும் முஸ்தஹப்பு. ஆனால் ஸஹரில் புசிப்பதை பொழுது உதயமாகிவிட்டதென்ற சந்தேகங்கொள்கிற நேரம்வரை பிற்படுத்துவது மக்ரூஹ்.

நோன்பு திறக்கிறதின் விபரம்.

மேகமுள்ள நாட்களில் முஅஸ்ஸின்வாங்கு சொல்லி விட்டாலும், பொழுது அடைந்தது தனக்கு உறுதியாகாமலும் நோன்பு திறக்கக்கூடாது. நோன்பு திறக்குமுன் மக்றிபு தொழக்கூடாது. இனிப்பான வஸ்துவைக்கொண்டு நோன்பு திறக்க வேண்டும். நோன்பு திறக்கும் வஸ்துகளில் பழம்வகை ஏற்றமானது. அது கிடைக்காவிட்டால் பால் அல்லது உளூவுக்காகும் படியான தண்ணீர்கொண்டு திறக்கவேண்டும். நபி நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மூன்று பேரித்தம் பழம், அல்லது நெருப்புத்தொடாத வஸ்துவைக்கொண்டு வழமையாக நோன்பு திறந்துகொண்டிருந்தார்கள். நாமும் அவ்விதம் திறப்பது நலமாகும். நோன்பு திறக்கும்போது தனக்கு முக்கியம் தேவையானவைகளுக்கு துஆக்கேட்கவும். நோன்பு திறந்து முதலில் ஒரு வஸ்துவை தின்றதும் யாவாஸி அல் மக்பிரதி இக்பிர்லீ அல்ஹம்து லில்லாஹில்லதீ அஆனனீ பஸும்து பிஅவ்னிஹி வரஸகனீ பஅப்தர்த்து அலாமாரஸகனீஹி என்று சொல்லவும். பின்னர் திறந்தவுடன் அல்லாஹும்ம லகஸும்து, வபிக ஆமன்து, வஅலைக தவக்கல்து, வஅலாரிஸ்கிக, அப்தர்து வஸவ்மகதி மின்ஷஹ்ரி றமலான நவைத்து, பக்பிர்லீ மாகத்தம்து வமா அக்கர்து அதாவது, ஆண்டவனே! உனக்காக நோன்பு பிடித்தேன்; உன்பேரில் பாரஞ்சாட்டினேன்; உன்னுடைய உணவால் நோன்பு திறந்தேன்;

ரமலான் மாதத்தில் நின்றும் நாளைநோன்பை நிய்யத்துச் செய்தேன். ஆதலால், நான் முன்செய்த பாவத்தையும், பின்செய்த பாவத்தையும் எனக்குப் பொருத்தருள்வாயாக என்று இப்படிச் சொல்லுகிறது ஸுன்னத்து. இவ்விதம் மொழிவதால் திறக்கிற நிய்யத்தும், மருநாளைக்கு நோன்பு பிடிக்கிற நிய்யத்து முண்டாகி விடுகிறது. அன்னியரிடத்தில் நோன்பு திறந்தால் அப்தர இந்தகு முஸ்ஸாயிமுன வஅகல தஆமகுமுல் அப்ரார் வஸல்லத் அலைகுமுல் மலாயிகது என்று சொல்லவேண்டும். நோன்பு திறக்கும்போது வயிறு நிறைய சாப்பிடக்கூடாது. அவ்விதம் சாப்பிட்டால், இபாதத்தில் சோம்பலை உண்டாக்கி நோன்பின் பிரயோஜனத்தைப் பழுதாக்கி விடும். அதிகம் புசிக்காமலிருப்பதால் தனது அவாவை அடக்கிக்கொள்வதாகும்.

நோன்பாளிக்கு உணவு கொடுக்கிறதின் நன்மைகள்.

ஹதீது:-ஒருவன் நோன்பாளிக்கு நோன்பு திறக்க உணவு கொடுத்தாலும், அல்லது அல்லாஹுக்காக தியாகம் செய்பவனை (அதாவது பிஸபீல் செய்கிறவனை) ஆயத்தமாக்கிவைத்தால் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மை இவனுக்கும் கிடைக்கும். இன்னும் மிக்க சிரேஷ்டமாகிய உணவு விஷயமாக கியாமநாளில், நோன்பு பிடிக்க உணவு கொடுத்தவன், நோன்பு திறக்க உணவு கொடுத்தவன் விருந்தாளிக்கு உபசரித்தவன் ஆகிய இம்மூவகையினரையும் தவிர, மற்றவர்களை கேள்வி கேட்கப்படுமென்று வந்திருக்கிறது.

நோன்புடைய பதவிகளின் விபரம்.

நோன்பில் தாழ்மையானது உண்ணுமலும், புசிக்காமலும், சேர்க்கை செய்யாமலும், வயிறு, அபம் இவ்விரண்டின் ஆசையை விட்டு விலகியிருப்பது மூன்று பதவிகளாகும். இதன்படி நடந்தால் உலமாக்கள் நோன்பு பூர்த்தியாகி விட்டதென்று கட்டளை செய்வார்கள். இதில் மேலான பதவியானது உண்ணுமலும், தனது உறுப்புக்களை பாவத்தை விட்டும் விலக்கிக்கொள்ளும் நோன்பாகும். இதனை அல்லாஹுத் தஆலா அங்கிகரிப்பான்.

நோன்பை முறிக்கும் செயல்கள்.

நோன்பை ஐந்து செயல்கள் முறித்து நன்மையை கெடுத்து விடும். அவைகளாவன:— பொய், புறம், கோள், பொய்சத்தியம், ஆசைகொண்டு பார்ப்பது ஆக இவ்வைந்து செயல்களாகும். அநேக ஜனங்கள் நோன்பு பிடித்து பசியாளியாகவும், தாக முடையவர்களாக இருக்கிறார்களே தவிர, செய்கையால் அவர்களுக்கு எவ்வித பலனுமில்லை என்று நமது நாயகமவர்கள் திருவுளமானார்கள். எல்லாவற்றிலும் அல்லாஹுத் தஆலாவைத் தவிர மற்ற வஸ்துக்கள் யாவற்றின் பேரிலும் கல்பை விலக்குகிறது சிரேஷ்டமான நோன்பாகும். இது நபிமார்கள் ஒலிமார்களுடைய நோன்பாகும்.

நோன்பை முறிக்காத செய்கைகளின் விபரம்.

நோன்பு பிடித்தவன் மறதியாகத் தின்றாலும், குடித்தாலும், சேர்க்கை செய்தாலும், தொண்டையில் புழுதி, ஈ, புகை இவைகள் புகுந்தாலும், எண்ணெய் தேய்த்தாலும், சுருமா போட்டாலும், இரத்தங்குற்றி வாங்கினாலும், பெண்ஜாதியை முத்த மிட்டு விந்திரங்க வில்லையானாலும், இந்திரியம் வெளியானாலும், பார்வை இடுகிறதினால் யோசனை இடுகிறதினால் மணியிறங்கினாலும், உளூச்செய்தபின் வாயிலுள்ள மிச்ச ஈரத்தை எச்சிலுடனே முழுங்கினாலும், காதிலே தண்ணீர் புகுந்தாலும், காதிலே குச்சியை மடக்கிப் புகுத வைத்தாலும், பல்லுகளுக்கிடையிலுள்ள கடலைப் பிரமாணத்துக்குத் தாழ்ந்ததை முழுங்கினாலும், சத்தி அதிகமாகி வாயை நிறப்பி விட்டாலும், ஜீனாபென்னும் துடக்கை விட்டும் நிவர்த்திபெற்றாலும், புறம்பேசினாலும், மூக்கிலே சளியிருந்து அதை உறிஞ்சித் தொண்டைக்குளியிற் புகுந்தாலும், வாய் நீர் நாடியில் தொங்கினதை உதட்டினாலுள்ளே இழுத்தாலும், ஒரு வஸ்துவை வாயால் சவைத்தாலும் நோன்பை முறிக்காது. ஆனாலும், இவைகளில் சிலது ஹராம், சிலது குற்றமில்லை, சிலது மக்ரூஹாகும். ஆனால் எவ்விதமான புகையா யிருந்தாலும் அதை முரண்டாகத் தொண்டைக் குழியில் நுழையவைத்தால் நோன்பை முறிக்கும். ஷாபீயீ மத்ஹபில் காறலை முழுங்கிறது நோன்பை முறிக்கும். ஆகையால் ஹனபீ மத்ஹபின்படி அதைத் துப்பிவிடுகிறது பேணுதலாகும். ஒரு வஸ்துவை வாயிலிட்டுச் சுவைக்கிறது மக்ரூஹாகும்.

தெண்டமில்லாமல் நோன்பை முறிப்பதின் விபரம்.

தெண்ட மில்லாமல் நோன்பை முறிப்பதுவாய் கொப்பளிக்கும்போது தண்ணீர் தொண்டைக் குளியிற் போகிறதுபோல், அல்லது நித்திரை செய்தவனுகக் குடிக்கிறதுபோல் அல்லது கிழக்கு வெளுக்கவில்லை என்றெண்ணி ஜிமாஉ செய்கிறது போல் அல்ல. ஆனல், கிழக்கு வெளுக்கவில்லை என்றெண்ணி ஸஹுருக்கு ஆகாரம் தவருதலாக புசித்து நோன்பை முறித்தாலும், ஒருவன் வம்பித்து முறிக்கும்படி செய்ததால் நோன்பை முறித்தாலும், அல்லது மறதியாகத்தின்றவன், சேர்க்கை செய்தவன் மணி இறங்கினவன் பார்வையால் இந்திரியத்தை இறக்கினவன், சக்தி மிகுதமானவன், நோன்பு முறிந்து விட்டதென்றெண்ணி ஞாபகத்தோடு தின்ருலும், ஜிமாஉசெய்தாலும், காதுக்குள்ளே எண்ணெய் சொட்டு விட்டாலும், கல், கட்டை, இரும்பு இவைபோலொத்தவைகளை விழுங்கினுலும், ரமலான் மாதம் முழுவதிலும் நோன்பு பிடிக்கிறதற்கு நிய்யத்துச்செய்யாமல் பிடித்தாலும், நிய்யத்துச் செய்யாமல் தூங்கி எழுந்தவன் ஞாபகத்தோடு தின்ருலும், தொண்டைக்குள் மழை, பனி நுழைந்தாலும், பெண்ஜாதியை முத்தமிட்டு அல்லது பிடித்து இந்திரியம் இறங்கிவிட்டாலும், ரமலானின் கடமையான நோன்பல்லாததை வம்பாக்கப்பட்டு விட்டாலும், மலஜலஉபாதைக்கிருந்து துப்புரவுசெய்யும்போது தண்ணீர் பின் துவாரத்திற்குள்ளே, அல்லது பெண்பிள்ளையின் உள்அபத்திலே நுழைந்தாலும், தானே வாய் நிறம்பிய சத்தியை உள்ளே மீளவைத்தாலும், ஞாபகத்தோடு முரண்டாய்ச் சத்தி எடுக்க நாடி வாயை நிறப்பி விட்டாலும், பல்லுக்கிடையில் கடலைப்பிரமாணமுள்ள திருந்தால் அதைத் தின்ருலும், பொழுதடையாமலிருக்க நோன்பு திறந்தாலும், தெண்டகுற்றமில்லை. நோன்பு முறிந்துவிடும். இதற்கு கலாச்செய்ய வேண்டும். ஆனல், கோழை, அல்லது கபமாகச் சத்தி எடுத்தால் நோன்பு முறியாது. மலஜல உபாதைக்கிருந்து துப்புரவுசெய்யும்போது ஆண்பிள்ளையின் பின் துவாரத்திலும், பெண்பிள்ளையின் முன் துவாரத்திலும் தண்ணீர் உள்ளே சேர்ந்தால் நோன்பு முறியும். ஆகையால் தண்ணீருக்குள்ளிருந்து துப்புரவுசெய்கிறதை விட்டு விடுகிறது வாஜிபாகும்.

கப்பாரு என்னும் தெண்ட குற்றம் விதியாகுவதின் விபரம்.

ரமலான் கடமையான நோன்பில் ஞாபகத்தோடு இரண்டிலொரு துவாரத்தில் ஜிமாஉ செய்தாலும், ஜிமாஉ செய்யப் பட்டாலும், யாதொரு உணவை தின்றாலும், யாதொரு மருந்தைக்குடித்தாலும், வாயில்புகுந்த மழையை, அல்லது பனியை விழுங்கினாலும், பெண்ஜாதியுடைய எச்சிலை விழுங்கினாலும், அல்லது இரத்தங்குற்றி வாங்கினதில் நோன்பு முறிந்துவிட்டதென்றெண்ணி ஞாபகத்தோடு தின்றாலும் கலாச்செய்து தெண்டக்குற்றமும் கொடுக்கவேண்டும்.

கப்பாரத் என்னும் தெண்டகுற்றம் நிறைவேற்றுவதின் விபரம்.

ஒருவன், நோன்பு பிடிப்பதிலும், நடப்பதிலும், பேச்சு, பார்வை, கேள்வி, புத்தி இவைகளில் தவருதலாக நடந்தால், அவன் ஒரு அடிமையை உரிமைவிடவேண்டும். அவ்விதம் முடியாவிடில் இரண்டு பெருநாள் தினமும், துல்ஹஜ்ஜு மாதம் 11, 12, 13, ஆக இவ்வைந்து நாட்களும் தவிர, இரண்டுமாதம் தொடராக நோன்பு பிடிக்கவேண்டும். இவ்விதம் நோன்பு பிடிக்க சக்தி பெறுவிட்டால், 60 மிஸ்கீனுக்கு காலையிலும், மாலையிலும் உணவு அவர்களுக்கு போதுமான அளவு கொடுக்கவேண்டும். அல்லது 60 மிஸ்கீனுக்கு ஒவ்வொருவருக்கும் அரை மரக்கால் மணிக் கோதுமையாகிலும், ஒருமரக்கால் வீதம் ஈத்தப் பழம் அல்லது தொலிக் கோதுமையாகிலும் அல்லது அவற்றின் கிரயத்தின்படியும் தவருதலாக விட்ட நோன்பிற்கு கப்பாரத் என்னும் தெண்டகுற்றம் கொடுக்கவேண்டும். ஞாபகத்தோடு பலவிடுத்தம் சேர்க்கை செய்தாலும், தின்றாலும் ஒரு கப்பாரத்தென்னும் தெண்டம் போதுமானது. கப்பாரத் கொடுத்தபின் தின்றாலும், ஜிமாஉ செய்தாலும், வேறு கப்பாரத் கொடுக்கவேண்டும்.

நோன்பில்லா திருந்தவர்கள் தின்னுமலிருப்பதின் விபரம்.

தவருதலாகவும் அல்லது சங்கடத்தாலும், நோன்பை முறித்தாலும்,கிழக்கு வெளுத்தபின் ஹைழு நிபாஸுக்காரி துப்புரவாகிவிட்டாலும்,பகல் தின்றபின் முஸாபிர் ஒரு ஊரை அடைந்து அங்கு தங்கிவிட்டாலும், பைத்தியக்காரன் தெளிவுபெற்ருலும், நோயாளி சுவாத்தியமானுலும், சிறுபிள்ளை வயதடைந்தாலும், காபிர் இஸ்லாமானுலும், தின்றநேரம்போக மீதிநேரத்திற்கு வயிறு, அபம் இவ்விரண்டின் ஆசையைவிட்டு விலகிக்கொள்வது வாஜிபு. ஆனுல் காபிரும், சிறுபிள்ளையும் தவிர மற்றவர்கள் அந்நோன்பைக் கலாச்செய்யவேண்டும். முஸாபிரும், நோயாளியும் பைத்தியக்காரனும் உண்ணுதிருந்து மத்தியானத்திற்கு முன் நிய்யத்துச் செய்தால் பர்வில்சேரும். ஹைழு நிபாஸுக்காரி நிய்யத்துச்செய்தால் நோன்பு சேராது. ஹைழு நிபாஸா இருக்கும்போது உண்டு புசிக்காமல் நோன்பாளியைப் போலிருக்கிறது ஹறும். நோயாளியும் முஸாபிரும் யாதொன்றும் அறுக்தாமல் நோன்பாளியைப் போலிருக்கிறது வாஜிபில்லை, ஆனுல் பகிரங்கமாக புசிக்காமல் மறைவாக புசிக்கவேண்டும்.

சிறுபிள்ளைகள் நோன்புபிடிப்பதின் விபரம்.

நோன்பு பிடிக்க சக்தியுள்ள சிறுபிள்ளைகளை நோன்பு பிடிக்கும்படி கட்டளை செய்யவேண்டும். பத்து வயதடைந்து நோன்பு பிடிக்காவிடில் அடிக்கவேண்டும். இவ்விதமே தொழுகைக்கும் ஏவி கட்டளை யிடவேண்டும். ஆனுல் நோன்பை முறித்தால் கலாச்செய்யவேண்டியது வாஜிபில்லை. தொழுகையை முறித்தால் மீட்டும்படி செய்யவேண்டியது.

நோன்புடைய மக்ருஹ்களின் விபரம்.

நோன்பாளி எவ்வித காரணமுமின்றி ஒன்றை சுவைத்து ருசிகண்டு துப்புகிறதும், பல்லுக்கிடையிலுள்ள வஸ்துக்களை மெல்லுகிறதும், உளுவில் வாய் கொப்பளிக்கும்போதும் நாசிக்குத் தண்ணீர் செலுத்தும்போதும் அதிகமாகச்செலுத்துகிறதும், இன்

னும் நோன்பு முறியுமென்ற சந்தேகமின்றி பெண்ஜாதியை முத்த மிடுகிறதும், பிடிக்கிறதும், கழுத்தோடுகழுத்துக்கட்டி அணேக்கிறதும், உமிழ் நீரை வாயில்சேகரப்படுத்தி முழுங்குகிறதும், நோன்பை பலக்குறைவாக்குகிற எண்ணமுள்ள காரியத்தைச்செய்கிறதும் மக்ரூஹு. அழகை நாடாமல் எண்ணெய்யை மீசையிலே தேய்க்கிறதும், சுறுமாப்போடுகிறதும், குளிர்ச்சிக்காக குளிக்கிறதும், ளுஹர் நேரத்திற்கு பிறகு மிஸ்வாக்குச் செய்கிறதும், ஈரப் புடவையை மேல் அணிகிறதும் மக்ரூஹல்ல.

தங்கூடத்தால் நோன்பை விடுகிற விபரம்.

முஸாபிரும், தனக்கு அல்லது தன் பிள்ளைக்கு நோன்பு பிடிப்பதால் ஏதும் அசவ்க்கியம் வரக்கூடுமென்று பயந்த கர்பஸ்திரீயும், பால்ஊட்டுபவளும், நோய் அதிகமாகிறதைப்பயந்த நோயாளியும் நோன்பை விடலாம். இவர்கள் சக்திபெற்றவரையிலும் பிதியா என்னும் தெண்டம் கொடுக்காமலும், துடராக பிடிக்காமல் கலாச் செய்வது வாஜிபாகும். அடுத்த ரமலான் வந்துவிட்டால் அதாவென்னும் கடமையான நோன்பை முற்படுத்தி கலாவென்னும் விட்டு விட்ட நோன்பைப் பிற்படுத்தவேண்டும். முஸாபிர் நோன்பு பிடிக்க சவ்கரியம் கிடைக்கில் ஸபரில் நோன்பு பிடிப்பது முஸ்தஹப்பாகும். அசவ்க்கியத்தால் அவர்கள் மவுத்தாகி விட்டால் பிதியாக்கொடுக்கும்படி வஸீயுத்துச் செய்கிறது அவர்களின் பேரில் வாஜிபில்லை. அசவ்க்கியம் நீங்கிய பின்பு மவுத்தானல் சவுக்கியமாய் இருந்த நாட்களில் எவ்வளவு நோன்பு பிடிக்க முடியுமோ அவ்வளவுநாளிலும் பிடியாமலிருந்ததற்காக பிதியாவுக்கு வஸீயத்துச் செய்யவேண்டும். அதன்படி ஒலிக்காரன் ஒவ்வொரு நோன்புக்கும் பித்ராவைப்போல ஸதகாக் கொடுக்கவேண்டும். நோன்பு பிடிக்க தளர்ச்சியான கிழவன் நோன்பை விடலாம். அவன் சீமானய் இருந்தால், ஒவ்வொரு நோன்புக்கும் பித்ராவைப்போல ஸகாத் கொடுக்கிறது வாஜிபு. அம்மாதத்தின் துவர்க்கத்திலும் கொடுக்கலாம். அப்படிச் சீமானய் இருக்கவில்லையானல், அல்லாஹுத்தஆலாவிடத்தில்பிழைபொறுக்கத்தேடிக்கொள்ளவேண்டும்,

பிறையின் விபரம்.

ரமலானுடைய பிறையை பார்த்தாலும், அல்லது மேகம் மற்றவைகளால் மறைக்கப்பட்டால், ஷஃபான் மாதத்தில் முப்பது நாள் பூர்த்தியானதை சரிகண்டாலும் ரமலானுடைய பிறை பிறந்ததாக எண்ணி நோன்பைவைக்கலாம். ஷஃபான் மாதம் முப்பதாம் இரவில் மனிதர்கள் பிறையை தேடிப்பார்ப்பது வாஜிபாகும். சந்தேகமான ஷஃபான்மாதம் முப்பதாம்நாள் இரவில் நபில்நோன்பை தவிர மற்ற நோன்புபிடிப்பது மக்ரூஹாகும். வானத்தில் மேகமுண்டாயிருந்தால், ரமலான் பிறை கண்டதற்கு, மானமும் பரிசுத்தமும் பொருந்திய ஒரு நீதவானுடைய சொல்லை அல்லது ஹாலை மறைக்கப்பட்டவனுடைய சொல்லை ஒப்புக்கொள்ளலாம். இவர்கள் அடிமையானாலும், பெண்பிள்ளையானாலும், பகிரங்கமாக விலக்கப்பட்டு தௌபா செய்யப்பட்டவனானாலும் ஒப்புக்கொள்ளலாம். இதில் சாட்சி சொல்கிறேனென்று மொழிதல் கட்டளை அல்ல. ஷவ்வால் பிறைக்கு பகிரங்கமாக விலக்கப்படாத ஆகில் பாலிகாகிய முஸ்லிமான இரண்டு நாட்டா மகனேனும் அவ்வூர் குடிபதிகளிலுள்ளவர்களாவது, ஒரு நாட்டாமகனும் இரண்டு நாட்டா மகளும் சேர்ந்து அவர்கள் பிறை கண்டதற்கு சாட்சி கூறுவதாக மொழிதல் கட்டளையாகும்.

வானத்தில் மேகம் முதலியதுண்டாயிருக்கவில்லையானல், இரண்டு பிறைக்கும் பெரும்பான்மையோருடைய சொல்லை ஒப்புக்கொள்ளவேண்டும். பெருங்கூட்டத்தின் தீர்மானமானது இமாமென்னும் அரசாங்க காஜீபோல் கொற்றவர்களுடைய போசினைபினால் ஒப்பிவிக்கப்பட்டதாயிருக்கவேண்டும். ஒருவன் பிறையைத் தனித்தவனாய்க் கண்டு அவன் சொல்லைத் தட்டப்பட்டுப்போனால், அவன் நோன்பு பிடிக்கவேண்டும். அவன் நோன்பு பிடியாமல் விட்டால் கலாச்செய்யவேண்டும். அவனுக்கு தெண்டகுற்றமில்லை. துல்ஹஜ்ஜு மாதப்பிறையும் மற்றப் பிறைகளும் ஷவ்வால் பிறையைப்போலாகும். பிறை உதயமாகும் ஸ்தலங்கள் விதற்பமாயிருக்கிறதற்குப் பெலவந்தமான சொற்படி ஹுக்குமுகள் மாற்றவில்லை. இதினாலேதான் மஃரிபுத்தேசத்தார்

பிறைகண்டதை மஷ்ரிக்குதேசத்தார் அறிந்தால், அவர்கள் நோன்பு பிடிக்கவேண்டியது வாஜிபாகிவிடும். பகலில் பிறைகண்டால், அப் பிறைசென்ற இரவினுடைய பிறையல்ல. ஆனால், வருகிற இரவினுடைய பிறைதான்.

பிறையை கண்டவர்கள் இதோபிறை இருக்கிறதென்று கைநீட்டி குறித்து காட்டுவது ஜாஹிலியாக்களென்னும் வீணர்களின் செய்கையானதால், அவ்விதம் செய்கிறது மக்ரூஹ் தன்ஸீஹாகும். அறியாதவர்களுக்கு காட்டிக் கொடுக்கிறதானாலும் சரி. அந்தந்த மாதம் பிறையை கண்டவுடன் அந்த பிறையின் பேரை குறித்து ஸலாம் சொல்லி அல்லாஹுத் தஆலாவை புகழ்ந்து துஆவும் ஓதவும்.

ரமலான் நோன்புடைய வரிசையின் விபரம்.

ஹதீது:—ரஜபுமாதம் அல்லாஹுத் தஆலாவின் மாதமாகும், ஷஃபான் மாதம் என்னுடைய மாதமாயிருக்கும், ரமலான் மாதம் என்னுடைய உம்மத்துகளின் மாதமா யிருக்குமென்று நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள். இன்னும், என்னுடைய உம்மத்துகள் ரமலான் மாதத்தின் சிறப்பை இவ்வளவென்றறிவார்களாகில் ஒரு வருடத்தின் 12 மாதங்களும் ரமலானாயிருந்ததில்லையே என்று யோசிப்பார்கள். ஏனெனில், அதின் நன்மைகளாவது சேகரமாக்கப்பட்டதாகவும், அங்கீகரிக்கப்பட்டதாகவும், பாவங்களைப் பொறுக்கப்பட்டதாகவும், துஆவை ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவுமிருக்கின்றன என்று நமது நாயகமவர்கள் அருளியுள்ளதாக இப்னு அப்பாஸ் (றலி) கூறியுள்ளார்கள்.

இன்னும் ரமலான் மாதத்தின் நோன்பு பர்லாகும். அவ்விரவுகளில் முழித்து வணங்குகிறது ஸுன்னத்தாகும். ஒருவன் அதில் உண்மைகொண்டு, அல்லாஹுத் தஆலா முகத்தை நாடி பகலெல்லாம் நோன்பிருந்து இரவெல்லாம் வணங்குவானாகில், அவன் அன்று பிறந்த பாலகனைப் போலாகி விடுவான். நமது மார்க்கத்திற்கு யாவருக்கும் முக்கியமானது கலிமா, தொழுகை, நோன்பு ஆக இம்மூன்றுமாகும். இவற்றிலொன்றை ஒருவன் விட்டாலும்,

மாறு செய்தாலும் அவனை வெட்டுகிறது ஹலாலாகிவிட்டது. அவன் சொத்தைப்பறிக்கிறதும் ஹலாலாகிவிட்டது. அவனுடைய ஸுன்னத்தான வணக்கத்தையும் நபிலான வணக்கத்தையும் அல்லாஹுத் தஆலா ஒப்புக்கொள்ளமாட்டானென்றும் இருலோக ரட்சகராகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஹதீது:—"ரமலான் மாதத்தில் ஒவ்வொரு இரவிலும் நோன்பு திறக்கும்போது, நரகத்திற்குப்பாத்திரமாகிய ஜனங்களில், பத்து இலட்சம் பெயரையும், அம்மாதத்தில் ஒவ்வொரு ஜும்ஆவில் ஒவ்வொரு ஸாஅத்தென்னு மிரண்டரை நாழிகைக்கு பத்து இலட்சம் பெயரையும் அல்லாஹுத் தஆலா உரிமை விடுவான். இதன்றி அந்த மாதத்தின் கடைசி இரவில், முதலாவது நாளிலிருந்து கடைசிவரையிலும் மேற்சொன்ன கணக்கின் முறைப்படி கூடிய ஜனங்களை ஒரே மொத்தமாக அல்லாஹுத் தஆலா நரகத்திலிருந்து உரிமை விடுவான்" என்றும் ஸல்மான் என்கிறவர்கள் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களைத் தொட்டும் பேசிவருகிறார்கள்.

ரிவாயத்து:— ரமலான் மாதத்தில் ஒரு நோன்பு ஆயிரம் நோன்பைவிடவும், ஒரு தஸ்பீஹ் ஆயிரம் தஸ்பீஹைவிடவும் மேலானதாகும். இம்மாதத்தில் செலவுசெய்கிறது பீஸபீலில் செலவு செய்கிறது போலாகுமென்றும் நகயீ இமாம் சொன்னார்கள்.

ஹிக்காயத்து:— ஒரு மஜூஸி காபிர், தன் மகன் ரமலான் மாதத்தில், முஸ்லிமானவர்களிருக்கிற சபையில் பகல் நேரத்தில் ஒரு வஸ்துவை புசித்துக்கொண்டிருக்கக் கண்டு, "இந்த மாதம் இஸ்லாமானவர்களுக்கு நல்ல மாதமாக இருப்பதால், அவர்களின் முன்பாக நீ எப்படி புசிக்கலாம்? அவர்களின் சங்கையை நீ ஏன் பேணவில்லை" என்று சொல்லி மகனை கன்னத்தில் அறைந்தான். பிறகு அவ்வாரத்தில் அந்த மஜூஸி இறந்தான். அவ்வூரிலுள்ள ஆலிம் அவனை கனவில் சுவர்க்கத்திலிருக்கக் கண்டு, "நீ

மஜூஸி யல்லவா ? நீ சுவர்க்கத்தில் எப்படி வந்தாய்?" என்று கேட்க, "நான் மஜூஸிதான், ஆனால் ரமலான் மாதத்தை நான் சங்கை செய்ததற்காக, நான் மரணமாகிறதற்கு சிறிது முன்பாக, அல்லாஹுத் தஆலா என்னை தீனில் இஸ்லாமென்னு மார்க்கத்தில் சேரும்படி உபகாரஞ் செய்து விட்டான்" என்று சொன்னார் என்பதாக நுஸ்ஹதென்கிற கிரந்தத்தில் சொல்லப்படு கிறது.

ஹிக்காயத்து:-உலமாக்களிலொருவர் எங்களிடத்தில் முஹம் மது என்று ஒரு மனிதனிருந்தார். அவர் தொழுகையைச் சில காலம் விட்டு விட்டு, ரமலான் மாதம் வந்ததும், அழ கான உடை யுடுத்தி, மணம் பூசி, நோன்பு பிடித்து, விட்டுப் போன தொழுகைகளை கலாச் செய்கிறவராக இருந்தார். அப் போது அவரிடத்தில் நான் இதைக் குறித்து கேட்டதற்கு, "இம் மாதம் றஹ்மத்தையும், பறகத்தையும், பிழை பொறுக்குதலையு முடைய மாதமாகும். நாயன் அவனுடைய மகிமையால் என்னை பொறுக்கப் போதும்" என்றார். இவ்விதமிருக்கையில் கொஞ்ச நாளையில் அவர் மவுத்தாகிவிட்டார். நானவரைக் கனவில்கண்டு, "அல்லாஹுத் தஆலா உம்மை என்ன செய்தான்" என்றேன். அதற்கு "றமலான் மாதத்தையின் சங்கைக்காக என் பிழையைப் பொருத்தான்" என்று பதிலளித்தார். ஆதலால் தீனையுடைய இக் வான்களான ஈமதன்புற்ற சினேகிதர்களே, இப்பேர்க்கொற்ற சங்கையான ரமலானுடைய வரிசையை உங்களின் தெளிவாகிய புத்தியால் ஆராய்ந்து அதினுடைய நோன்பை நிறைவேற்றி பர் லான வணக்கங்களையும், நப்லான வணக்கங்களையுமீட்டி, ரமலானைத் தவிர மற்ற நாட்களின் தொழுகைகளை அந்தந்த வக்துகளில் தவிர விடாமல் நிறைவேற்றுவீர்களாகவும் என்று ஸஹ்ரதுர்ரியால் என் கிற கிதாபில் எழுதப்பட்டிருக்கிறது.

லைலத்துல் கத்றிரவின் வரிசை.

பனீ இஸ்ராயீல் கூட்டத்திலொரு வாலிபர் ஆயிர மாதமாக பீஸபீல் செய்தாரென்று நபிகள் சிகாமணியாகிய நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய்

மலர்ந்தருளினூர்கள். அதைப்பற்றி மூமினனவர்கள் புதுமைப் பட்டு, அவரவரும் தங்கள் தங்களுடைய அமல்களை எல்லாம் மிக வும் குறைவாக கருதி, அவருடைய வரிசை நமக்கில்லேயே என்று மனவருத்தமுற்றூர்கள். அதற்காக ஆயிரமாதத்தைவிட மேன்மை பொருந்திய இரவாகிய லேலதுல் கத்ரை உங் களுக்குக் கொடுத்தோமென்று அல்லாஹுத் தஆலா இன்ன அன்ஸல்ன என்கிற ஸூரத்தை இறக்கிவைத்தான்.

"ஒருவன் லேலத்துல் கத்ருடைய இரவில் இரண்டு ரக் அத்திற்கு தக்பீர்கட்டி, ஒவ்வொரு ரக்அத்திலும் பாத்திஹா ஒரு விடுத்தம், குல்ஹுவல்லாஹு அஹத் ஏழு விடுத்தம் ஓதி தொழுது ஸலாம் வாங்கினதும், அஸ்தக்பிருல்லாஹ வஅதூபு இலேஹி என்று ஓதுவானுகில், அவனுடைய பிழைகளேயும், அவ னுடைய தாய் தந்தையர்களுடைய பிழைகளேயும் அல்லாஹுத் தஆலா பொருப்பான். இன்னும், சுவர்க்கத்தில் சில மரங்கள் நட்டும்படியும், மாளிகைகள் கட்டும்படியும் ஆறுகள் தோண்டும்படி யும் அல்லாஹுத் தஆலா சில மலக்குகளை சுவர்க்கத்திற்கு அனுப்பு வான்" என்று நமது நாயகமவர்கள் திருவுளம்பற்றினூர்கள் என்று இப்னு அப்பாஸ் (றலி) சொல்லியுள்ளார்கள். இன்னும், லேலத்துல் கதர் கியாம நாள்வரை வந்து கொண்டிருக்கும். ஆனுல், அது இந்த நாள் என்பதில் அபிப்பிராய பேதமிருக்கிறது. ஆகிலும் றமலான் பிந்திய 10ல் தானென்று அநேகர்கள் சொன்னூர்கள். அநேக அஸ்ஹாபுகளும், உலமாக்களும் றமலான் 27வது இரவென்று ஒற்றுமையாக சொன்னூர்கள். ஆகையால் குர்ஆனை அந்த 27ல் கத்தம் செய்வது நலம். லேலத்துல் கத்ரில் குர்ஆனில் ஒரு ஆயத்து ஓதுகிறது மற்ற இரவில் ஒரு குர்ஆனை ஓதி பூர்த்தி செய்கிறதை விட ஏற்றமென்று ஹதீதில் வருகிறது.

இஃதிகாபின் விபரம்.

அல்லாஹுத் தஆலாவின் வணக்கத்திற்காக மஸ்ஜிதிலேயே ஸ்திரமாக இருப்பதற்கு இஃதிகாப் என்று பெயர். ஆண்பிள்ளை கள் ஜமாஅத்து பள்ளியிலும், பெண்பிள்ளைகள் வீட்டு பள்ளியிலும், நவைத்துல் இஃதிகாபு மாதும்து பீ ஹாதல் மஸ்ஜிது அதாவது,

அல்லாவுக்காக இந்த பள்ளிவாசலில் இருக்கிறவரை இஃதிகாபை நிய்யத்து செய்தேன் என்று நாடி யிருப்பது ருக்னுகும். ஜாமிஆ மஸ்ஜிதுகளிலிருப்பது அதிகமேன்மையாகும். பள்ளிக்குள்ளும், ஜனுபத், ஹைலு, நிபாஸைவிட்டும் சுத்தமாகயிருப்பதும் விதியாகும். வீட்டுபள்ளி என்பது பெண்பிள்ளைகள் வீட்டில் தொழுகைக்காக நியமனம் செய்திருக்கும் ஸ்தலமாகும். இது எல்லா அமல்களிலும் சிறந்த அமலாகும். ஏனெனில், இப்படி இருப்பதால் அல்லாஹுத் தஆலாவைத் தவிரவுள்ள எல்லா காரியங்களையும் விட்டு, மனத்தை அவன் வழியில் திருப்புதலிலிருக்கிறதாகும்.

இஃதிகாபின் வகைகள்.

இதனை நாவினுல் நிய்யத்து செய்வது வாஜிபு, றமலான் கடைசி பத்து தினங்களில் ஒரு நாளாவதிருக்கிறது ஸுன்னத்து முவக்கதாவாகும். மற்றபடி நாடின வக்திலிருக்கிறது முஸ்தஹப்பு. வாஜிபான இஃதிகாபிர்க்கும், முவக்கதாவான இஃதிகாபிர்க்கும் நோன்பு விதியாகும். முஸ்தஹப்பான இஃதிகாபிர்க்கு நோன்பு விதியல்ல. ஆனதால், நபிலாகிய இஃதிகாபில் ஒரு ஸாஅத்தெனும் கொஞ்சநேரம் குறைந்த நேரமாகும். பள்ளிக்குள் புகுதும்போது, இஃதிகாபை நிய்யத்து செய்து புகுந்தால், உட்காராமல் உலாவினுலும், இரவிலானுலும் நபிலாகிய இஃதிகாபுண்டாகும். பள்ளியை விட்டு வெளியில் புறப்பட்டதும் அது முடிந்து விடும்.

இஃதிகாபிருப்பதற்கு ஆகுமானதும், ஆகாத காரியங்களின் விபரம்.

வாஜிபு, ஸுன்னத்தான இக்திகாபுகளில், ஜும்ஆ தொழுகைக்காகவும், இரண்டு பெருநாள் தொழுகைக்காகவும் மல ஜல உபாதைக்காகவும், மணி இறங்கிவிட்டதால் குளிப்பதற்காகவும், உலூசெய்வதற்காகவும் தவிர, மற்றவைகளுக்கு வெளியில் போகக் கூடாது. அப்படி மேல்கண்ட காரியங்களன்றி மறதியாகவும், கொஞ்ச நேரமாகிலும் வெளியில் வந்தால் இஃதிகாபு முறிந்து போகும். மேல்கூறிய அசந்தர்ப்பம் கொண்டு புறப்பட்டாலும் அகத்தியத்தை தவிர மற்ற நேரம் தரிபட்டால் முறிந்துபோகும்.

அவன் பள்ளிக்குள்ளிருந்து புசிப்பதும், நித்திரை செய்வதும், தனக்கும், தன் அன்னவஸ்திரம் கொடுக்க வேண்டியவர்களுக்காகவும் தேவையானதற்காக விற்பனை செய்யலாம். பள்ளிக்குள் சறக்கை கொண்டுபோவது மக்ரூஹாகும். உணவு, குடிப்பு கொண்டு போய் கொடுப்பதற்கு மனிதரில்லாவிடில், தானே வெளியில் புறப்பட்டுப்போய் பசியாறலாம். பசியாறி முடிந்ததும் வீட்டில் தாமதிக்காமல் பள்ளிக்கு வந்துவிடவேண்டும். வாயை மூடிக்கொண்டிருப்பதும், எவ்வித பிரயோஜனமுமின்றி பேசுவதும் மக்ரூஹு. ஆதலால் குர்ஆனை ஓதுவதும், திக்ரு செய்வதும், ஹதீது அல்லது இல்மை பிறருக்கு போதித்து கொடுப்பதும், நபி நாயகம் (ஸல்) அவர்களின் விசேடங்களையும், நபிமார்களது வரலாறுகளையும், நல்லோர்களுடைய செய்திகளையும், தீனுடைய காரியங்களையும் எழுதிக்கொண்டிருக்கிறது நல்லதாகும். இஃதிகாபிருக்கும்போது ஜிமாஉ செய்தாலும், முத்தமிட்டாலும், கலவி சம்பந்தமான மற்றவிதத்தால் மனி இறங்கினாலும் முறிந்துவிடும். இதனை அல்லாஹுவுக்காக ஒரே முகமாக அவனையே நாடியிருப்பதால், இது எல்லா அமல்களிலும் மிக்க மேன்மையானதாகும். இதனால் உலகத்தினுடைய காரியங்கள் யாவையும் விட்டு மனதை நீக்கி நாயன் பால் செலுத்துதலும், அவனுடைய வீடாகிய பள்ளிவாசலிலேயே நிறைவேற்றுகிறதும், அவனுடைய உதவியால் உதவிபெறுகிறதும் இஃதிகாபில் உண்டாகிறது. இதனை ஒருவன் தனது வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒரு இராஜனுடைய வீட்டு வாயிலில் உட்கார்ந்திருப்பதைப்போல, நாயனுடைய வீட்டில் உட்கார்ந்து தனது பாவங்களை பிழை பொறுக்கத் தேடுவதற்கென்று உவமையாக்கலாம்.

ஹதீது:-றமலான் மாதம் கடைசிப்பத்தில் இஃதிகாபிருந்தால் இரண்டு ஹஜ்ஜுடைய நன்மையும், இரண்டு உம்ராவுடைய நன்மையும் கிடைக்கும். இன்னும் ஒருவர் ஒருநாள் இஃதிகாபிருந்தால் அவருக்கும் நரகத்திற்குமிடையில், அல்லாஹ் மூன்று அகழிகளை ஏற்படுத்துகிறான். ஒவ்வொரு அகழியும் உதயகிரிக்கும் அஸ்தகிரிக்கு மிடையிலுள்ள தூரமாகவிருக்கும்.

ஷாபியீ மத்ஹபின்படி ஸுன்னத்தில் முஅக்கதாவாகும். ஆனால் ரமழலான பிந்தின பத்தில் மிக்க வரிசையாகும். இஃதிகாபின் ஷர்த்துகள் ஏழாகும். 1-வது இஸ்லாமாகவும் 2-வது புத்திசாலியாகவும் 3-வது ஹைறலு நிபாஸை விட்டு துப்புரவாகவும், 4-வது ஜுனுபாளி என்னும் துடக்கில்லாமலும், 5-வது தொழுகைக்கு இருப்பதற்கு மேலாக இருப்பதும் 6-வது பள்ளியினுள்ளே இருப்பதும், (ஜும்ஆ தினம் இஃதிகாபிருக்கும் வக்தில் வருவதானல் ஜும்ஆ பள்ளியிலிருப்பது வாஜிபாகும்) 7-வது தரிபடுதலே சேர்ந்ததாக நிய்யத்து செய்கிறதும் ஷர்த்துகளாகும்.

كتاب الحج

கித்தாபுல் ஹஜ்

ஹஜ்ஜுடைய விபரம்.

குர்ஆன்:—

قال الله تعالى ولله على الناس حج البيت من استطاع اليه سبيلا

"இந்த வீட்டை அல்லாஹ்விற்காக ஹஜ்ஜுச்செய்வது மனிதர் மீது (அதாவது) பாதையால் சக்திபெற்றவர் மீது கடமையாகும்" என்று அல்லாஹுத் தஆலா தனது திருமறையிற் கூறியுள்ளான். அதாவது தன் மீது ஏற்பட்டுள்ள கடனைக் கொடுத்து விட்டு, தனக்கும் தனது மனைவி மக்களுக்கும், திருமக்கா சென்றுவரும் வரை ஏற்படும் செலவுகளுக்கும், வாகனத்திற்கும் போதுமான சொத்து ஒரு முஸ்லிமுக்கு இருந்தால் அவர் திருமக்கா சென்று, அங்குள்ள கஃபா ஷரீபில் அல்லாஹுத் தஆலாவிற்காக ஹஜ்ஜுச் செய்வது கடமையாகும்.

حديث ஹதீது:-"ஒருவர் ஸம்சர்க்கத்தையும் பாவிக்தனம் என்னும் பெரும்பாவம் செய்வதையும் விட்டு விலகி ஒரு ஹஜ்ஜுச் செய்வாராயின் அவர் அன்று பிறந்த பாலகனைப்போல் பாவத்தை விட்டு நீங்கியவராகிவிடுவார்" என்று றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள்.

حديث ஹதீது:—"பைத்துல்லாவை நோக்கி நடந்த இருகால்களையும் நெருப்பினால் அல்லாஹுத் தஆலா வேதனை செய்யமாட்டான்" என்று றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந் தருளி இருக்கிறார்கள்.

"ஹஜ்ஜுச்செய்ய இயல்புள்ள ஒருவர் ஹஜ்ஜுச் செய்யாமல் மரித்து விடுவாராயின் அவர் நாடினால் எஹூதியாக மரிக்கட்டும் அல்லது நஸாராவாக மரிக்கட்டும்" என்று ஹதீதில் வந்திருக்கிறது.

ஹஜ்ஜுச்செய்ய வசதியும் இயல்புமுள்ளவர் ஹஜ்ஜுச்செய்யாமல் மரிப்பாராயின் அவர் எஹூதியாகவோ நாஸாராவாகவோ மரிப்பார் என்பது இந்த ஹதீதின் கருத்து. ஏனெனில், எஹூதி நஸாராக்கள் தான் திரு மக்கா வந்து ஹஜ்ஜுச் செய்யமாட்டார்கள். கஃபா ஷரீபை கண்ணியப்படுத்தவுமாட்டார்கள்.

حديث ஹதீது—"ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக ஒருவர் தனது வீட்டை விட்டு வெளியேறிய பிறகு, (ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கு முன்) வழியில் மரித்துவிடுவாராயின் கியாமத்து நாள்வரை ஒவ்வொரு வருஷமும் அவர் ஹஜ்ஜு உம்ராக்களை நிறைவேற்றிய புண்ணியத்தை அவருக்கு அல்லாஹுத் தஆலா ஏற்படுத்துவான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார்கள். அதாவது ஒருவர் ஹஜ்ஜுக்குச் செல்லும் வழியில் ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கு முன் மரிப்பது அவருக்குக் கொள்ளை வாழ்வாக ஏற்படும் என்பது இந்த ஹதீதின் கருத்து.

ஹஜ்ஜுடைய ஹுக்மு.

ஹஜ்ஜுச் செய்வதாக நிய்யத்துச் செய்து இஹ்றாம் கட்டுவதும், துல்ஹஜ்ஜு மாதம் 9-வது தேதியாகிய அறபாநாளில் அடித் திரும்பியதிலிருந்து பெளமுன்னஹ்றென்னும் 10-வது நாளில் பஜ்றுவரையில் சொற்பநேரம் அறபா மைதானில் தங்கி இருப்பதன் மூலம் அறபாவை ஜியாரத்துச் செய்வதும், நஹ்றுடைய

நாளாகிய 10-வது நாளில் அஸ்ருடைய கடைசிநேரத்திற்குள் கஃபா ஷரீபை தவாபுசெய்வதன் மூலம் அதனை ஜியாரத்துச் செய்வதும் ஹஜ்ஜுடைய ஹுக்முகளாகும். இம்மூன்று ஹுக்முகளில் முதலாவதாகிய இஹ்ராம் கட்டுவது ஹஜ்ஜின் ஷர்த்தாகவும், மற்றைய இரண்டும் ஹஜ்ஜின் ருக்னுகளாகவும் இருக்கின்றன.

ஹஜ்ஜு கடமையாகிவிட்டால் வயதில் ஒருமுறை அதனை நிறைவேற்றுவது கடமை. ஆனால், அதனைத் தாமதப்படுத்தாமல் துரிதமாகவே நிறைவேற்றிவிடவேண்டும். அவ்வாறு செய்யாமல் தாமதஞ் செய்வதால் பாவிக்காகிவிடுவான். பாவிக்கான அவன் கூறும் சாக்ஷியம் இஸ்லாமிய கோர்ட்டுகளில் அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஹஜ்ஜுச் செய்யக் கடமைப்பட்ட ஒருவர் அதனை நிறைவேற்றாமல் மரித்துவிட்டால் அவர் பாபியாகிவிடுவார்.

ஹஜ்ஜு பர்லாகுவதற் கேற்பட்டுள்ள ஷர்த்துகள்.

ஹஜ்ஜு கடமையாக ஏற்படுவதற்கு எட்டு ஷர்த்துகளுண்டு. அவை வருமாறு:—

1. முஸ்லிமாக இருக்கவேண்டும். 2. புத்தி சுவாதீனமுள்ளவராக இருக்கவேண்டும். 3. யுக்த வயதை அடைந்திருக்க வேண்டும் (பாலிகாக இருக்கவேண்டும்). 4. சுயேச்சை வாய்ந்தவனாக (அதாவது அடிமையாக இல்லாமல்) இருக்கவேண்டும். 5. தனது ஊர்வாசிகள் ஹஜ்ஜுக்குப் புறப்படும்போது ஹஜ்ஜுக்குச் செல்லச் சக்தி பெற்றிருக்கவேண்டும். 6. நடுத்தரமான சாப்பாட்டு முதலிய வசதிகளைச் செய்துகொள்ளச் சக்தி இருக்கவேண்டும். 7. வாகனத்தை ஏற்படுத்திக்கொள்ளச் சக்திபெற்றிருக்க வேண்டும். 8. தாருல் ஹர்பென்னும் முஸ்லிம் அல்லாத காபிர்களின் நாட்டில் வசிக்கிற ஒரு முஸ்லிம் ஹஜ்ஜு கடமை யென்பதை அறிந்திருக்கவேண்டும்.

சக்திபெற்றிருத்தல் என்பதற்கு "ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பிவரும் வரையில் தனக்கும், தன்னால் சம்ரக்ஷிக்கப்படக்

கடமைப்பட்டவர்களுக்கும் ஏற்படும் செலவையும் தனக்கு அத்தியாவசியமான வீடு, சாமான், தொழில் சம்பந்தமான கருவிகள், கொடுக்கவேண்டிய கடனுக்குரிய தொகை முதலியவைகளையும் விட்டு மேல் மிச்சமாக இருக்கவேண்டும்" என்பது கருத்து.

ஹஜ்ஜுக்கடமையை நிறைவேற்றுவது கடமையாக ஏற்படுவதற்குள்ள ஷர்த்துகள்.

மேற்கூறப்பட்டுள்ள வசதிகள் இருந்து ஹஜ்ஜு ஒருவர் மீது கடமையாக ஏற்பட்டு விட்டாலும் அதனை நிறைவேற்றுவது கடமையாக ஏற்படுவதற்கு ஐந்து ஷர்த்துகளுண்டு. அவை வருமாறு.—

1. நோய் முதலியவைகளில்லாமல் தேக சுகமிருக்க வேண்டும். 2. வழிப்பயமில்லாதிருக்கவேண்டும். 3. சிறையில் கைதியாக இருக்கக்கூடாது. 4. ஸ்திரிகளுக்கு கணவன் அல்லது விவாகம் செய்ய விலக்கலான மஹ்ரமான ஆடவர்கள் துணை இருக்க வேண்டும். 5. ஸ்திரீகள் இத்தாவில் இல்லாமல் இருக்கவேண்டும்.

ஹஜ்ஜின் வாஜிபுகள்

1. இஹ்ரும் கட்டுவதற்கென்று நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் அதாவது மீக்காத்தில் இஹ்ரும் கட்டுதல். 2. அறபாவில் துல்ஹஜ்ஜு மாதம் 9-ம்தேதி மாலை சூரியாஸ்தமனம் வரையில் தங்கி இருத்தல். 3. துல்ஹஜ்ஜு மாதம் 10-ம் தேதியாகிய நஹ்றுடைய நாளில் கிழக்கு வெளுத்த பின் சூரியோதயமாகுவதற்கு முன் முஸ்தலிபா என்னும் ஸ்தலத்தில் தங்குதல். 4. மினுவில் கல்லெறிய வேண்டிய ஸ்தலங்களாகிய ஜம்ராக்களில் கல்லெறியுதல். 5. ஹஜ்ஜு, உம்ரா ஆகிய இரண்டையும் நிறைவேற்றுவதாக நிய்யத்துச்செய்து இரண்டுக்கும் சேர்த்து இஹ்ராம் கட்டியவரான காரின் என்பவரும், உம்ராவையும் ஹஜ்ஜையும் ஒன்ருக நிறைவேற்ருமல் இரண்டையும் தனித்தனியே நிறைவேற்றும் நோக்கத்தால் முதலாவதாக உம்ராச் செய்து முடித்து விட்டு அப்புறம்

ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டியவரான முத்தமத்திஃ என்பவரும் குர்பானி செய்தல். 6. தலை முடியைச் சிறைத்துக் கொள்ளல் அல்லது வெட்டிக்கொள்ளல். 7. இதனை ஹறம் ஷரீபில் நஹ்று வுடைய நாளில் குறிப்பாகச்செய்தல். 8. கல்லெறிவதைத் தலை முடியைச் சிறைத்துக் கொள்வதற்கோ அல்லது வெட்டிக்கொள் வதற்கோ முதலாவதாகச் செய்தல். 9. இவ்விரு காரியங்களுக்கு மிடையில் காரினும் முத்தமத்திஉம் குர்பானி செய்தல். 10. நஹ்றுடைய நாட்களில் தவாபு ஜியாராவை நிறைவேற்றுதல். 11. ஹஜ்ஜுடைய நாளில் ஸபா, மர்வா என்னும் ஸ்தலங்களுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல் என்னும் ஸயீயை நிறைவேற்றுதல். 12. இதனை தவாபுக்குப் பிறகு நிறைவேற்றுதல். 13. தங்கடமில்லாதவர் தமது காலால் நடந்து இதனை நிறைவேற்றுதல். 14. ஸயீ செய்வது ஸபா என்ற ஸ்தலத்திலிருந்து ஆரம்பித்தல். 15. தவாபுல்விதாஉ என்னும் பயணத்தின் தவாபை நிறைவேற்று தல் 16. ஒவ்வொரு தவாபையும் ஹஜ்றுல் அஸ்வதிலிருந்து ஆரம்பித்தல். 17. எந்த விதமான தவாபாக இருந்தாலும் ஏழுமுறை சுற்றிவந்தால் இரண்டு ரக்கஅத்துத்தொழுதல். 18. கஃபா ஷரீபைச் சேர்ந்துள்ள ஹத்தீம் என்னும் ஸ்தலத்தையும் சேர்த்துத் தவாபு செய்தல். 19. வலப்புறமாகத் தவாபு செய்தல். 20. தங்கடமில்லாதவர் தமது காலால் நடந்துதவாபு செய்தல். 21. தவாபு செய்பவர் இரண்டு துடக்குகளையும் விட்டுத்துப்புறவாக இருத்தல். 22. தேகத்தில் மறைக்கப்படவேண்டிய ஸ்தலங்களாகிய ஒளரத்துகளை மறைத்தல். 23. தவாபு ஜியாராவில் மிகுந்ததைச் செய்த பின் கொஞ்சத்தை நிறைவேற்றுதல். (அதாவது கஃபா ஷரீபை 7 முறைவலம் வருவது ஒரு தவாபாகும். இது அதிகமான 4 அல்லது அதற்கதிகமாக வலம் வந்த பின் ஒளுச் செய்வதற்காகவோ வேறு காரியத்திற்காகவோ சென்றுவிட்டால் அப்புறம் எஞ்சியுள்ள மூன்று அல்லது அதற்குக் குறைவாகவோ வலம் வந்து ஒரு தவாபாகப் பூர்த்திசெய்யலாம். மூன்று அல்லது அதற்குக் குறைவாக வலம்வந்து அவசியமான காரியத்தை முன்னிட்டு தவாபு செய்யாமல் சென்று, மறுபடியும் திரும்பவந்தால் குறைவாகவுள்ள இவைகளைக் கணிக்காமல் ஆரம்பமாகவே தவாபு செய்யவேண்டும்.

எனவே, தவாபு ஜியாராச் செய்தவர் இடையில் அதனை விடவேண்டியதாக இருந்தால் மிருதமானதைச் செய்து விட்டு விடவேண்டும். அப்புறம் வந்து கொஞ்சமானதை நிறைவேற்றவேண்டும் என்பது இதன் கருத்து.) 24. விலக்கலான காரியங்களைச் செய்யாமல் விலகி இருத்தல். இவை வாஜிபுகள்.

இஹ்றாம் கட்டியவர் செய்யக் கூடாத விலக்கலான காரியங்கள்.

1. ஆடவர்கள் தையல் உடை அணிதல். 2. ஆடவர்கள் தலையையோ அல்லது முகத்தையோ மறைத்தல். 3. ஸ்திரீகள் முகத்தை மறைத்தல். 4. இவர்களிடம் ஸம்சர்க்கம் சம்மந்தமான பேச்சுக்களைப் பேசுதல். 5. பாவமான காரியங்களைச் செய்தல். 6. ஒருவருக்கொருவர் சண்டை, சச்சரவு செய்துகொள்ளல். 7. வேட்டை மிருகத்தைக் கொல்லல். 8. அதனை வேட்டையாடுபவருக்குக் காண்பித்துக் கொடுத்தல். இவை விலக்கலானவை.

ஹஜ்ஜுடைய ஸுன்னத்துகள்.

1. இஹ்றாம் கட்ட விரும்புபவர்கள் அதற்காக ஸ்நானஞ் செய்து கொள்ளல் அல்லது ஒலுச்செய்து கொள்ளல்.

2. வெண்மையான புதிய அல்லது வெளுத்த சுத்தமான இரண்டு உடையில் ஒன்றை உடுத்திக் கொண்டு, மற்றொன்றை முதுகின் மீது போட்டுக்கொள்ளல்.

3. இஹ்றாம் கட்டுவதற்கு முன் தேகத்தில் வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்ளல்.

4. இரண்டு ரக்கஅத்துத் தொழுதல்.

5. இஹ்றாம் கட்டிய பிறகு தொழும் தோறும், மேட்டிலேறினாலும், மேட்டிலிருந்து கீழே இறங்கினாலும், வாகனங்களைச் சந்தித்தாலும், ஸஹர் என்னும் விடியற்கால வேளைகளிலும் தல்பியாவை அதிகமாக ஓதுதல்.

6. தல்பியாவை ஓதுந்தோறெல்லாம் அதனைப் பலமுறை ஓதுதல்.

7. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்துகளை ஓதுதல்.

8. சுவர்க்கத்தையும், அதில் நல்லோர்களின் தோழமையையும் நாயனிடம் கேட்குதல்.

9. நரகத்தை விட்டுக்காவல் தேடல்.

10. திருமக்காவில் பிரவேசிப்பதற்காக ஸ்நானஞ்செய்யல்.

11. பகற்பொழுதில் சென்ருல் அதன்மேல் புறத்துவாசல் வழியாகப் பிரவேசித்தல்.

12. கஃபா ஷரீபைத் தரிசிக்கும்போதெல்லாம் தக்பீர், தஹ்லீல் ஓதுதல்.

13. அவ்வமயம் தனக்குப் பிரியமானதைக் குறித்து இறைவனிடம் பிரார்த்தித்தல்.

14. தவாபுல் குதூம் அதாவது பிரவேசத்திற்குரிய தவாபைச் செய்தல்.

15. அங்கவஸ்திரத்தை இடது தோளின் மீது போட்டு, அதன் இரு முந்தாணிகளையும் வலது கம்முகட்டுக்குக் கீழிலாக்கிக்கொள்ளுதல்.

16. தவாபு செய்யும்போது முதல் மூன்றுமுறை சுற்றி வருகையில் இருதோள்களையும் அசைத்து, அடிகளை முடுகவைத்து தீவிரமாக நடத்தல்.

17. தவாபு செய்யுந்தோறெல்லாம் ஹஜ்றுல் அஸ்வதை முன்னோக்கி, தக்பீர் சொல்லி, இருகைகளையுமுயர்த்தி, அவைகளை முத்தமிடல். இதற்கு வசதி இல்லாவிடில் கையால் சமிக்ஞை செய்து தக்பீர், தஹ்லீல், ஸலவாத்துகளை ஓதிக்கொள்ளவேண்டும்.

18. ஸபா மர்வாவுக்கிடையில் ஸயீ செய்யும்போது மைலைனி அக்லரைனி என்ற பச்சைவர்ணமுள்ள இரு அடையாளங்களுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல்.

19. திருமக்காவில் இருக்கும்போது அடிக்கடி தவாபு செய்தல்.

20. துல்ஹஜ்ஜு மாதம் 7-ம்நாள் திருமக்காவில் ளுஹர்த் தொழுகைக்குப் பிறகு இமாம் குத்பா ஓதுதல்.

21. மறுநாள் 8-ம் தேதி சூரியோதயத்திற்குப் பிறகு திரு மக்காவிலிருந்து மினு என்ற ஸ்தலத்திற்குச் செல்லல்.

22. அங்கு இரவில் தங்கி இருந்து அடுத்த நாள் 9-ம் தேதி அதாவது அறபா நாளில் சூரியோதயத்திற்குப் பிறகு அங்கிருந்து அறபாவிற்குச் செல்லல்.

23. அறபாவில் அடித்திரும்பிய பிறகு லுஹர் தொழுகைக்கு முன்னதாக இமாம் குத்பா ஓதுதல்.

24. அப்புறம் இமாம் லுஹரையும் அஸரையும் சேர்த்து ஜம்உ செய்து தொழுத பின் மேளக்கிப் அதாவது தங்கவேண்டிய இடத்தில் தங்கி இருந்து, பயபக்தியுடன் கண்ணீர் வடித்து, தனக்கும், தன் பெற்றோர்களுக்கும், பிறருக்கும் பாபமன்னிப்புக்கும் மற்றைய காரியங்களுக்குமாக இறைவனைப் பிரார்த்தித்தல்.

25. அன்று சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு மிக்க அடக்கத்துடன் அறபாவை விட்டுப் புறப்பட்டு, முஸ்தலிபா என்னும் ஸ்தலத்தில் வாதியுல் முஹஸ்ஸர் என்னுமிடத்தைக்கடந்து ஜபலே குஸஹ் என்னும் மலைக்குச் சமீபத்தில் இறங்கி, அவ்விரவுமுழுதும் அங்கு தங்கி இருத்தல்.

26. மினுவில் தங்கி இருக்கும் நாட்களில் தன் சாமான்களுடன் இரவில் தங்கி இருத்தல்.

27. ஹஜ்ஜுக்கு மட்டிலும் இஹ்றும் கட்டியவர்களான முப்ரித்கள் குர்பானி செய்தல்.

28. குர்பானி மாமிசங்களை அதாவது காரின், முத்தமத்திஃ முதலியவர்களால் கொடுக்கப்படும் வாஜிபான குர்பானி, இவைகளையல்லாமல் முஸ்தஹப்பான முறையில் அறுக்கப்படும் குர்பானி ஆகிய சகலவிதமான குர்பானிகளிலிருந்தும் மாமிசங்களைப் புசித்தல்.

29. நஹ்றுடைய நாளில் குத்பா ஓதுதல்.

30. மினுவிலிருந்து பிரயாணமான பின் ஒரு ஸாஅத்தாவது முஹஸ்ஸப் என்னும் மைதானில் (இது மக்காவிலுள்ள ஒரு சமவெளி இங்கு வாகனங்கள் யாவும் வந்து ஒன்று சேர்ந்த பின் புறப்படுவது வழக்கம். இதுபோல ஹஜ்ஜுக் காபிலாக்கள் மினுவிலிருந்து திரும்ப வந்தவுடன் இங்கு கொஞ்சநேரம் தங்கி இருந்து அப்புறம் நகருக்குள் செல்லும்.)

30. ஜம் ஜம் கிணற்று ஜலத்தை அருந்துதல்.

31. அதனை வயறு நிறம்பக் குடித்தல்.

32. கஃபாஷரீபை முன்னோக்கி, அதற்கு நேராக நின்று அதனைபார்த்தல்.

33. ஜம் ஜம் ஜலத்தை சிரசிலும், சரீரத்தின் மீதிலும் தெளித்துக்கொள்ளல்.

34. ஹஜறுல் அஸ்வதுக்கும், கஃபா ஷரீபின் வாசற்படிக்கு மிடையில் முல்தஜிம் என்னும் தலத்தில் நெஞ்சையும் முகத்தையும் வைத்து கஃபாவின் மூலமாக மன்றாட்டம் செய்வதைப்போல் அதன் திரையைப் பிடித்துக்கொண்டு, பயபக்தியுடனும் உள்ளச் சத்துடனும் தக்பீர், தஹ்லீல், ஸலவாத்து முதலியவைகளை ஓதி இறைவனைப் பிரார்த்தித்தல்.

35. கஃபாஷரீபின் வாசலை முத்த மிடல்.

36. வெளியூர் செல்பவர்கள் தவாபுல் விதாஉ செய்து விட்டு, கஃபாஷரீபைப் பார்த்தவண்ணம், அழுதுகொண்டு அல்லது அழு வதுபோல் பாவனை செய்துகொண்டு பிற்கால்களால் மஸ்ஜிதை விட்டு வரல்.

மேற்கூறியவைகள் ஸுன்னத்துகள். பிறருக்கோ தனக்கோ தொந்தரை ஏற்படாதிருப்பின் கஃபாஷரீபிற்குள் பிரவேசிப்பது முஸ்தஹப்பு. அதனுட் பிரவேசித்தால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுத இடமாகிய முஸல்லாவிற் சென்று தொழ வேண்டும்.

ஹஜ்ஜுடைய மாதங்கள்.

ஷவ்வால் மாதத்திற்கும், துல்கஅதா மாதத்திற்கும், துல் ஹஜ்ஜு மாதத்தின் முதற்பத்து தினங்களுக்கும் ஹஜ்ஜுடைய மாதங்கள் என்று பெயர். இந்த மாதங்களுக்கு முன் ஹஜ்ஜுக்காக இஹ்றாம் கட்டுவது மக்றூஹ்.

உம்றாவின் விபரம்.

வயதில் ஒருமுறை உம்றாச்செய்வது ஸுன்னத்துமுஅக்கதா. இஹ்றாம் கட்டுவதும்; தவாபு செய்வதும், ஸபா மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுவதும், அப்புறம் தலைமுடியைச் சிறைத்துக் கொள்ளல் அல்லது வெட்டிக்கொள்ளல் ஆகியவைகளுக்கு உம்றா

என்று பெயர். ஆனால், இவைகளில் இஹ்ராம் கட்டுவது ஷர்த்து. தவாபு செய்வதில் மிருதமான சுற்றுகள் ருக்னு, பாக்கியுள்ளவை கள் வாஜிபுகள். வருஷம் முழுவதிலும் எச்சமயத்திலும் உம்ராச் செய்யலாம். ஆனால், றமலான் மாதத்தில் உம்ருச் செய்வது முஸ்த ஹப்பு. துல்ஹஜ்ஜா மாதம் 9-ம் தேதியாகிய அறபாநாளிலும், அதற்கப்புறமுள்ள நான்கு நாட்களிலும்உம்ராச்செய்வது மக்ரூஹ்.

மீக்காத்துகள்.

ஹஜ்ஜாக்கும், உம்ருவுக்கும் இஹ்ரும் கட்டவேண்டிய இடங் களுக்கு மீக்காத்துகள் என்று பெயர். ஹஜ்ஜாக்கு வந்தாலும் சரி, உம்ராவுக்கு வந்தாலும், இவையிரண்டுமல்லாத வேறு எக்காரியத் திற்கு வந்தாலும் சரி. வெளியார்கள் திருமக்காவில் பிரவேசிக்க வேண்டுமாயின் இஹ்ராம் கட்டிக்கொண்டு வரவேண்டும். எனவே, மதீனத்தாருக்கு துல்ஹுலைபா, இராக் தேசத்தாருக்கு தாத்து இர்க், ஷாம் தேசத்தாருக்கு ஜஹ்பா, நஜக் தேசத்தாருக்கு கர்ன், யமன் தேசத்தாருக்கு யலம்லம் ஆகிய ஸ்தலங்கள் மீக்காத்துகளாகும். திருமக்காவிற்கு வருபவர்கள் இந்த ஸ்தலங்கள் வழியாக வந்தால் இவ்விடங்களில் இஹ்ரும் கட்டவேண்டும். இவ்வழியாக வராமல் விலகிவந்தால் இவ்விடங்களுக்கு நேராக வரும்போது இஹ்ராம் கட்டவேண்டும். இத்தேசங்களுக்கு அப்பாலிருந்து வருபவர் களுக்கும் இதே ஹுக்முதான். நமது இந்திய தேசத்தார் ஜித்தா வழியாக திருமக்கா சென்றால் யலம்லம் என்ற ஸ்தலத்திற்கு நேராக வரும்போது இஹ்ரும் கட்டவேண்டும். முதலாவதாக மதீ னுவிற்குச் சென்று அப்புறம் திருமக்காவிற்கு வந்தால் துல்ஹுலை பாவில் இஹ்ரும் கட்டவேண்டும். இவ்விடங்களில் இஹ்ரும் கட் டாமல் பிரவேசிப்பது ஹரும்.

மேற்கூறப்பட்ட மீக்காத்துகளுக்குள்ளிலுள்ளவர்கள் ஹஜ்ஜா உம்ராவுக்காக இல்லாமல் வேறுகாரியமாக திருமக்காவிற்கு வருவ தாயிருந்தால் இஹ்ரும் கட்டாமல் வரலாம். மக்காவாசிகள் ஹஜ் ஜாக்காக ஹறம் எல்லைக்குள்ளும், உம்ருவிற்காக ஹறமுக்கு வெளியிலும் இஹ்ரும் கட்டவேண்டும்.

ஹறம் ஹில்லு.

ஹ்ஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது மைந்தனையும், மனைவியையும் குடியேற்றி, கஃபா ஷரீஃபையும் கட்டி முடித்து அவ்வூருக்கு எல்லையையும் நிர்ணயித்தார்கள். எனவே, அவர்கள் வகுத்துள்ள எல்லைக்குள் உள்ள மக்கமாநகருக்கும், மற்றைய இடங்களுக்கும் ஹறம் என்று பெயர். இவ்வெல்லைக்கு வெளியிலுள்ள இடங்களுக்கு ஹில்லு என்று பெயர்.

ஹஜ்ஜுல் அக்பர்.

துல்ஹஜ்ஜுமாதம் 9-ம் தேதியாகிய அறபாநாள் வெள்ளிக்கிழமையாக இருந்தால், அன்றைய ஹஜ்ஜுக்கு ஹஜ்ஜுல் அக்பர் என்று பெயர். "மற்றைய நாட்களில் நிறைவேற்றப்படுகிற ஹஜ்ஜைப் பார்க்கினும் இன்றைய தினத்தில் நிறைவேற்றப்படுகிற ஹஜ்ஜுல் அக்பர் எழுபது மடங்கு அதிகப் புண்ணிய முள்ளதாக இருக்கிற"தென்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

சீமான்கள் நிறைவேற்றும் ஹஜ்ஜு, பக்கீர்கள் நிறைவேற்றும் ஹஜ்ஜைப்பார்க்கினும் சிறந்தது, பர்லான ஹஜ்ஜு பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கினும் சிறந்தது. ஆனால், பெற்றோர்கள் தங்கள் மக்களின் ஊழியத்தின்பால் தேவையுள்ளவர்களாயிருந்தால், அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்களிடம் அனுமதி பெறுமல் ஹஜ்ஜுக்குச்செல்வது மக்றூஹு. பர்லல்லாத நபிலான ஹஜ்ஜைப் பார்க்கினும் பெற்றோர்களுக்கு ஊழியம் செய்வது சிறந்தது.

فصل في بيان ترتيب الحج

பஸ்லுான் பீ பயானி தர்த்தீபில் ஹஜ்

ஹஜ்ஜை நிறைவேற்றும் முறை.

ஹஜ்ஜுச்செய்ய ஒருவர் விரும்பி, அதற்காகப் பிரயாணம் செய்ய நாடினுல், தனது பாவத்தை விட்டுத் தௌபாச் செய்ய வேண்டும். பிறருக்குக் கொடுக்கவேண்டிய கடன் முதலியவைகளை நிறைவேற்றிவிடவேண்டும். பிறருக்கு அநியாய அக்கிரமம்

முதலிய பாவச் செய்கைகளைப் புரிந்திருந்தால் அவர்களிடம் மன்னிப்புக் கேட்பதன் மூலமாகவோ வேறு உபகாரம் செய்வது மூலமாகவோ அவர்களை ராஜி செய்துகொள்ளவேண்டும். மனைவி, மக்கள் முதலியவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அன்னவஸ்திரம் முதலியவைகளைக் கொடுத்துவிட்டு, குடும்ப சம்பந்தமான காரியங்களையும் மற்றவைகளையும் பற்றி வஸிய்யத்துப் பத்திரம் எழுதி வைத்துவிடவேண்டும்.

பின்னர், வழிச்செலவிற்கு வேண்டிய ஹலாலான பொருளை எடுத்துக்கொண்டு செல்லவேண்டும். ஹலாலான சொத்தல்லாமல் ஹலாலா? ஹறுமா? என்று சந்தேகாஸ்பதமான சொத்துக்களைக் கொண்டு ஹஜ்ஜுச்செய்தால் அந்த ஹஜ்ஜு இறைவனால் அங்கீகரிக்கப்படுவதற்குத் தடையாக இருக்குமாதலால், சந்தேகாஸ்பதமான முதல்களைக்கொண்டு ஹஜ்ஜுச் செய்யக்கூடாது. எனவே, ஹலாலான சொத்துக்களைக்கொண்டு ஹஜ்ஜுச்செய்யவேண்டும். இக்காலத்தில் ஹலாலான சொத்தென்று நிச்சயமாகத் தெரிந்த சொத்துக்கள் மிக அருமையாகவும், சந்தேகாஸ்பதமானவைகள் அதிகமாகவுமிருப்பதால் ஹஜ்ஜுக்குச் செல்வதற்கென்று ஒரு தொகையைப் பிறரிடம் கடனாக வாங்கிப் பிரத்தியேகமாகப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும். தனது சந்தேகாஸ்பதமான சொத்திலிருந்து அக்கடனைக் கொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு கடனாகப்பெற்ற பொருள் ஹலாலான பொருளாக இருப்பதால் அதனைக் கொண்டு ஹஜ்ஜுக்குச்செல்லலாம் என்று தப்ஸீர் றூஹுல் பயானில் ஒரு யுக்தி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வாறு செய்வது சந்தேகாஸ்பதமான பொருள்களுக்குத்தான். ஹறும் என்று நிச்சயமாகத் தெரிந்த பொருளுக்கல்ல.

ஹஜ்ஜுக்குப் புறப்படுகிற வேறு பலரையும் கண்டு பேசி அவர்களுடைய கூட்டுறவையும் துணையையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஹஜ்ஜுக்குப் புறப்படும்போது, வழியில்தான் தர்மம் செய்வதற்கென்று சொற்பப் பொருள்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, தனது உற்றார் உறவினர்களைக்கண்டு பேசிப் பயணம் சொல்லிக்கொண்டு, அவர்களது ஆசியையும் துஆவையும் பெற்

றுக்கொள்ள வேண்டும். பிறகு பிரயாண வேளையில் தொழவேண்டிய தொழுகையாகிய ஸலாத்துஸ் ஸபர் என்னும் தொழுகையை நிறைவேற்றி, இறைவனிடம் துஆச்செய்து புறப்படவேண்டும். வழியில் அதிகமாக வணக்கங்களைப் புரிவதுடன், திரு குர்ஆன், ஸலவாத்து, திக்று முதலியவைகளையும் அதிகமாக ஓதவேண்டும். வழியில் அச்சமுண்டு என்ற சந்தேகமிருந்தால் ஆயத்துல் குர்ஸீ, ஸூறத்துல் இக்லாஸ், ஸூறத்துல் பலக், ஸூறத்துன் னாஸ் முதலியவைகளை ஓதிக்கொள்வது நல்லது.

இஹ்றாம் கட்டுதல்.

பின்னர் இஹ்றாம் கட்டவேண்டிய ஸ்தலமாகிய மீக்காத்தை அடைந்தால் அல்லது அதற்கு நேராக வந்தால் இஹ்றாம் கட்டிக் கொள்ளவேண்டும். அதாவது அவசியமிருந்தால் தலை க்ஷவரம் செய்துகொள்ளவேண்டும் அல்லது வெட்டிக்கொள்ளவேண்டும், அல்லது மீசை, கம்முகட்டு, நாசி, தொப்புளுக்குக் கீழிலுள்ள உரோமங்களைக் களைந்து, நகங்களை வெட்டிக்கொண்டு ஸ்நானம் செய்துகொள்ளவேண்டும். அதற்கு வசதியில்லாவிடில் ஒலுச் செய்து கொள்ளலாம், காமஉணர்ச்சி உண்டாகும் என்ற சந்தேகமுள்ளவர்கள் மனைவியுடனாவது,அல்லது வெள்ளாட்டியுடனாவது பிரயாணம் செய்தால் அவர்களிடம் காம இச்சையை நிறைவேற்றிக் கொள்வது நல்லது. இவ்விதச் சந்தர்ப்பத்தில் ஸ்நானம் செய்து கொள்வது அவசியம். அப்புறம் தனது தேகத்தில் வாசனைத் திரவியங்களைப்பூசி, இஹ்றாம் கட்டுவதற்கென்று சித்தம் செய்துள்ள உடையை அணிந்து இரண்டு ரக்கஅத்துகளைத் தொழுது இஹ்றாம் கட்டுவதற்குள்ள நிய்யத்தைக்கூறி தல்பியா ஓதவேண்டும்.

தல்பியா ஓதும் விதம்.

لبيك اللهم لبيك لا شريك لك لبيك ان الحمد
و النعمة لك و الملك لا شريك لك

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லா ஷரீக்க லக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமத்த லக வல்முல்க லாஷரீக்க லக.

இதனுடன்

لبيك وسعديك والخير كله بيديك لبيك والرغباء اليك

லப்பைக் வஸஃதைக் வல்கைறு குல்லுஹு பி யதிக் லப்பைக் வர் ருகபாஉ இலைக் என்றும் சேர்த்து ஓதிக்கொள்ளலாம்.

"உனக்குப் பணிந்தேன், அல்லாஹ்வே, உனக்குப்பணிந்தேன். உனக்கு இணையானவன் இல்லை; உனக்குப்பணிந்தேன், நிச்சயமாக சகல புகழும், பாக்கியமும், அதிகாரமும் உனக்கே இருக்கின்றன, உனக்கு இணையானவனில்லை."

"உனக்குப் பணிந்தேன், நீ பாக்கியமுள்ளவன். சகல நன்மையும் உன்கையிலேயே இருக்கிறது. உனக்குப் பணிந்தேன். ஆசைகளெல்லாம் உன் பாலிலேயே இருக்கின்றன" என்பது இவ்விரு வாக்கியங்களின் பொருள்.

நிய்யத்து.

ஹஜ்ஜுக்கு மட்டிலும் இஹ்ராம் கட்டுவதாக இருந்தால்

اللهم اني اريد الحج فيسره لي وتقبله مني

அல்லாஹும்ம இன்னீ உரீதுல்ஹஜ்ஜ பயஸ்ஸிர்ஹுலீ வ தகப் பல்ஹு மின்னீ. அதாவது "அல்லாஹ்வே நான் ஹஜ்ஜுச் செய்ய நாடுகிறேன். அதனை எனக்குச் சுலபமாக்கிவை இன்னும் அதனை என்னிலிருந்து அங்கீகரிப்பாயாக" என்று கூறி ஹஜ்ஜுச் செய்வதை நிய்யத்துச் செய்யவேண்டும். இவ்வாறு ஹஜ்ஜை மட்டிலும் நிய்யத்துச் செய்து இஹ்ராம் கட்டியவர்களுக்கு முப்ரித் என்று பெயர்.

முதலாவதாக உம்ராச் செய்து விட்டு, அப்புறம் இஹ்ராமை முறித்து விட்டு, இரண்டாவதாக ஹஜ்ஜுச்செய்ய விரும்பியவர்கள்

اللهم اني اريد العمرة فيسرها لي وتقبلها مني .

அல்லாஹும்ம இன்னீ உரீதுல் உம்ரத்த பயஸ்ஸிர் ஹாலீ வ தகப்பல்ஹா மின்னீ அதாவது "அல்லாஹ்வே நான் உம்ராவை நாடுகிறேன். அதனை எனக்குச் சுலபமாக்கிவை. இன்னும் என்னிலிருந்து அதனை அங்கீகரிப்பாயாக" என்று கூறி நிய்யத்துச் செய்யவேண்டும். இப்படிச் செய்பவருக்கு முத்தமத்திஃ என்று பெயர்.

முதலாவதாக ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு, அதே இஹ்ரா மில் உம்ராவையும் நிறைவேற்ற நாடி இரண்டுக்கும் சேர்த்து இஹ்ராம் கட்ட விரும்பினால்

اللهم انى اريد الحج والعمرة فيسرهما الى وتقبلهما مني ٠

அல்லாஹும்ம இன்னீ உரீதுல்ஹஜ்ஜ வல்உம்ரத்த பயஸ்ஸிர் ஹுமாலீ வதகப்பல்ஹுமா மின்னீ அதாவது "அல்லாஹ்வே நான் ஹஜ்ஜையும் உம்ராவையும் நாடுகிறேன். அவ்விரண்டையும் எனக்குச் சுலபமாக்கிவைத்து, அவையிரண்டையும் என்னிலிருந்து அங்கீகரிப்பாயாக" என்று கூறி நிய்யத்துச் செய்ய வேண்டும். இவ்விதமாக இரண்டையும் சேர்த்து நிறைவேற்று பவருக்கு காரின் என்று பெயர். இவ்விதம் நிறைவேற்றுவதற்கு அதிகப் புண்ணியமுண்டு. முத்தமத்தியாக இருந்து இரண்டையும் நிறைவேற்றுவது ஹஜ்ஜை மட்டிலும் தனியாக நிறைவேற்று வதைப்பார்க்கினும் அதிகப் புண்ணியமுள்ளது.

இஹ்ராம் கட்டியவர் தவிர்த்துக்கொள்ள வேண்டிய காரியங்கள்.

மேற்கூறியவாறு நிய்யத்துச்செய்து இஹ்ராம் கட்டி விட்டால் அப்புறம் ஹஜ்ஜை அல்லது உம்ராவை அல்லது இரண்டையும் நிறைவேற்றுவதற்குமுன், வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொள்ளவோ அணியவோ கூடாது. ஆடவர்கள் தையலுள்ள ஆடையை அணியலாகாது. வேட்டையாடுதல், வேட்டையாடு பவர்களுக்கு உதவியாக வேட்டை மிருகம் இருக்குமிடத்தை சமிக்ஞையால் காட்டிக் கொடுத்து உதவி புரிதல், ஸம்சர்க்கம் செய்தல், ஸ்திரீகளிடம் அதனைக் குறித்துப் பேசுதல், பாவிக்தனமான காரியங்களைச் செய்தல், சண்டை சச்சரவு செய்தல், நகம், உரோமம் முதலியவைகளை வெட்டிக் கொள்ளல், க்ஷவரம் செய்தல், தலை தாடி முதலிய ரோமங்களை கித்மீ எனும் பூண்டால் சுத்தப்படுத்திக் கழுகிறது, சிலதையாவது, தலையில் சிலதையாவது மறைத்தல், வாசனையுள்ளதைக்கொண்டு சாயம் காய்ச்சப் பட்ட வஸ்திரத்தை அணிதல், ஆக இவைகள் கூடா. ஸ்நானம் செய்யலாம். ஆனால், அழுக்கைத் தேய்த்து உடம்பிலிருந்து அவைகளை நீக்கிக் கழுவக்கூடாது. ஜலத்தை வார்த்துக் கொள்ளலாம். குடை, கூடாரம் முதலியவைகளைக்கொண்டு நிழல் தேடிக் கொள்ளலாம். பகையினைக்கொல்லலாம். இடுப்பில் அரிச்சால் கட்டிக் கொள்ளலாம்.

அப்புறம் வழியிற் செல்கையில் மேட்டில் ஏறினுலும், பள்ளத்தில் இறங்கினுலும், எதிரில் வரும் வாகனங்களை அல்லது பிரயாணக் கூட்டங்களைச் சந்தித்தாலும், ஒவ்வொரு வகைக்குப் பிறகும், விடியற்கால வேளைகளிலும், திருமக்காவிற் பிரவேசித்தாலும், கஃபா ஷரீபைக் கண்டாலும் சப்தமிட்டு தக்பீர், தஹ்லீல், தல்பியா ஆகியவைகளை அதிகமாக ஓதிக்கொள்ளவேண்டும். மக்காவில் பிரவேசிக்கும்போது குளித்து ஸ்நானம் செய்து கொள்வது முஸ்தஹப்பு. பிறகு,

اللهم هذ احرمك وما منك وقلت وقولك الحق ومن دخله كان امنا
اللهم حرم لحمي ودمي على النار وقني عذابك يوم تبعث عبادك

அல்லாஹும்ம ஹாதா ஹறமுக வமஉமனுக வகுல்த வ கௌலுகல் ஹக்கு வமன் தலஹு கான ஆமினு அல்லாஹும்ம ஹர்ரிம் லஹ்மீ வதமீ அலன்னர் வகினி அதாபக யௌம தப்அது இபாதக அதாவது "அல்லாஹ்வே! இது உனது சங்கையான இடம், உன்னுல் அபயமளிக்கப்பட்ட இடம். மேலும், 'எவர் அதில் பிரவேசிக்கிருரோ அவர் அச்சமற்றவராகிவிட்டார்' என்று நீ கூறி இருப்பது உண்மை. "அல்லாஹ்வே! எனது தசையையும் எனது உதிரத்தையும் நெருப்புக்கு ஹறுமாக்கிவை. இன்னும் உனது அடியார்களை நீ எழுப்புகிற நாளில் உனது வேதனையை விட்டு என்னைக் காப்பாயாக" என்று பிரார்த்திக்கவேண்டும்.

பிறகு, திருமக்காவினுட் பிரவேசித்து கஃபாவைத் தவாபுசெய்யச் செல்லவேண்டும். மஸ்ஜிதுல் ஹறுமில் பிரவேசிக்கும்போது பாபுஸ்ஸலாம் வழியாகப் பிரவேசிக்கவேண்டும். அப்பொழுது

بسم الله وعلى ملة رسول الله الحمد لله الذى بلغني بيته الحرام
اللهم افتح لي ابواب رحمتك وادخلني فيها

பிஸ்மில்லாஹி வஅலா மில்லத்தீ றஸூலில்லாஹி அல்ஹம்து லில்லாஹில்லதீ பல்லகனீ பைத்தஹுல் ஹறும்,அல்லாஹும்மப்தஹ்லீ அப்வாப றஹ்மத்திக வஅத்கில்னீ பீஹா அதாவது "அல்லாஹ்வின் திரு நாமத்தைக்கொண்டும் அல்லாஹ்வின் றஸூலுடைய மார்க்கத்தின் பேரிலும் (பிரவேசிக்கிறேன்). என்னைத் தனது சங்கை

யான வீட்டில் சேர்ப்பித்த அல்லாஹுத் தஆலாவிற்கே எல்லாப் புகழும் தகும். அல்லாஹ்வே! உனது கிருபையின் வாசல்களை எனக்கு திறந்தருள்வாயாக, இன்னும் என்னை அவைகளில் பிரவேசிக்கச் செய்வாயாக" என்று பிரார்த்தித்த வண்ணம் உள்ளே பிரவேசிக்கவேண்டும்.

பிறகு, கஃபா ஷரீபைக் கண்ணால் கண்டவுடன்

لا اله الا الله و الله اكبر

லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அதாவது "வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. இன்னும் அல்லாஹ் மிகப்பெரியவன்" என்று மூன்று முறை கூறி

اللهم انت السلام ومنك السلام حينا ربنا بالسلام وادخلنا

دار السلام اللهم زد بيتك هذا تشريفا ومهابة وتعظيما

اللهم تقبل توبتي واقلني عثرتي واغفرلي خطيئتي

அல்லாஹும்ம அன்தஸ்ஸலாமு வமின்கஸ்ஸலாமு ஹய்யினா றப்பனா பிஸ்ஸலாமி வஅத்கில்னா தாரஸ்ஸலாம். அல்லாஹும்ம ஜித் பைத்தக ஹாதா தஷ்ரீபன் வமுஹாபத்தன் வதஃளீமன் அல்லாஹும்ம தகப்பல் தெளபத்தீ வஅகில்னீ அத்ரத்தீ வஃபிர்லீ கத்தீஅத்தீ அதாவது "நாயனே! நீ தான் ஈடேற்றமளிப்பவன். ஈடேற்றம் உன்னிலேயே இருக்கிறது. எங்கள் றப்பே! ஈடேற்றத்தைக்கொண்டு எங்களை ஜீவிக்கச் செய். இன்னும் தாருஸ் ஸலாம் என்னும் சுவர்க்கத்தில் எங்களைப் பிரவேசிக்கச் செய்வாயாக. அல்லாஹ்வே! உன்னுடைய இந்த வீட்டிற்கு கண்ணியத்தையும் சிறப்பையும் மகத்துவத்தையும் அதிகப்படுத்துவாயாக. அல்லாஹ்வே! எனது தெளபாவை அங்கீகரித்து எனது சுமையைத் தளர்த்தி, என்பாவத்தை எனக்கு மன்னிப்பாயாக" என்று கூறவேண்டும்.

தவாபு செய்யும்முறை.

அப்புறம் தவாபு செய்ய ஆரம்பிக்கவேண்டும். அதாவது ஹஜ்றுல் அஸ்வதை முன்னோக்கி அல்லாஹு அக்பர் என்று தக்

பீர் சொல்லி அதனை முத்தமிட்டு தவாபை ஆரம்பித்து வலப்புற மாக கஃபாவின் தலைவாசலைக்கடந்து ஹத்தீமையும் கடந்து வலம் வரவேண்டும். தவாபை ஆரம்பித்த இடமாகிய ஹஜ்றுல் அஸ்வதுக்கு நேரே வந்தவுடன் இருகைகளையும் உயர்த்தி அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல்லி முன்போலவே அதன் வாசற்படிக்கு எதிரில் சென்று வலம் வரவேண்டும். இவ்வாறு ஹஜ்றுல் அஸ்வதி லிருந்து புறப்பட்டு,மறுபடியும் ஹஜ்றுல் அஸ்வதுக்கு வந்து சேரு வதற்கு ஒரு ஷௌத் அதாவது 'சுற்று' என்று பெயர். இவ்விதமாக ஏழுமுறை சுற்றி வருவதற்கு ஒரு தவாப் என்று பெயர்.

ஜனக்கூட்டமில்லாமலிருந்தால் ஒவ்வொரு முறை சுற்றி வரும் தோறெல்லாம் ஹஜ்றுல் அஸ்வதில் முகத்தை வைத்து முத்தமிடவேண்டும். கூட்டம் அதிகமாக இருந்து ஹஜ்றுல் அஸ்வதினண்டையிற் செல்வது சிரமமாக இருந்தாலும் அல்லது இதனுல் பிறருக்குச் சிரமமேற்படுமென்றிருந்தாலும் அதனைக் கைகளால் தொட்டு முத்தலாம். அதற்கும் இயலாது என்றிருந் தால் அதனை நோக்கி இருகரங்களையும் உயர்த்தி, அக்கைகளை முத்திக்கொள்வது போதுமானது.

ஹஜ்ஜுக்கு அல்லது உம்றுவுக்கு இஹ்றும் கட்டி இருந்தால் முதல்மூன்று சுற்றுகளிலும் றமல் செய்யவேண்டும். அதாவது தோள்புயங்களை ஆட்டி, அடிகளை நெருக்கமாக விரைவாக எடுத்து வைத்து ஓடுவதுபோல் பாவனை செய்யவேண்டும். மற்றைய நான்கு சுற்றுகளிலும் சாதாரணமாக வழக்கம்போல் நடக்கவேண் டும். இஹ்றும் உடையில் அங்கவஸ்திரத்தின் ஒரு ஓரத்தை இடது தோளின் மீதும், வலது கம்முகட்டுக் கீழில் கூடி மற்றொரு ஓரத் தை இடது தோளின் மீது மறுபடியும் போட்டுக்கொள்ளவேண் டும். இவ்வாறு போட்டுக் கொள்வதற்கு வல்ல வட்டுப் போடுதல் என்று பெயர். இப்படிப்போட்டுக் கொள்வதில் வலது தோள் புயம் மறைக்கப்படாமல் திறந்திருக்கவேண்டும். இடது தோள் புயத்தின் மீது அங்கவஸ்திரம் முன்னும் பின்னும் தொங்க விடப் பட்டிருக்கவேண்டும்.

இவ்விதமாக தவாபு செய்து முடிந்த பிறகு முல்தஜமைப் பிடித்துக்கொண்டு இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும். பின்னர், மக்காமுல் இப்ராஹீம் பக்கத்தில் சென்று அல்லது இடமுள்ள வேறு இடத்தில் சென்று இரண்டு ரக்கஅத்துத் தொழுகவேண்டும். கஃபா ஷரீபை வலம் வரும்போது தக்பீர், தஹ்லீல், ஸல வாத்து, திக்று முதலியவைகளை ஓதுவதுடன் துஆக்களையும் ஓத வேண்டும்.

இவ்விடங்களில் ஓதவேண்டிய துஆக்களைக் குறித்து பிரத்தியேகமான கித்தாபுகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளை வாங்கிப் படித்துப் பாடம்பண்ணிக்கொள்ளவேண்டும். பாடமில்லாதவர்கள் பார்த்தும் ஓதலாம். இதற்கும் முடியாவிட்டால் பிறருடன் சேர்ந்து சொல்லிக்கொள்ளலாம் இதற்கும் இடமில்லாவிடில் தனக்குத் தெரிந்த திக்றுகளையும் துஆக்களையும் ஓதிக் கொள்ளவேண்டும்.

தொழுது முடிந்த பிறகு ஜம்ஜம் ஜலத்தை அருந்தி விட்டு, தக்பீர் தஹ்லீல்களை ஓதிக்கொண்டு பாபுஸ்ஸபா வழியாக ஸபா மலைக்குச்சென்று, அங்கிருந்து கஃபா ஷரீபை நோக்கி இருகைகளையும் உயர்த்தி தக்பீர் சொல்லி, மர்வாவை நோக்கிச் செல்ல வேண்டும். இடையில் பச்சை வர்ணத்தில் அடையாள மிடப்பட்டிருக்கிற இரண்டு இடங்களுக்குமிடையில் ரமல்செய்து வேகமாய்ச்சென்று மர்வாவை அடையவேண்டும். அப்புறம் அங்கிருந்து ஸபாவிற்கு வரவேண்டும். ஒருமுறை ஸபாவிலிருந்து மர்வாவிற்குச் செல்வது ஒரு ஷௌத்து. மர்வாவிலிருந்து ஸபாவிற்கு வருவது ஒரு ஷௌத்தாகும். இவ்விதமாக ஏழுமுறைவந்தால் ஒரு ஸயீ பூர்த்தியாகும். எனவே, ஸயீயின் ஆரம்பம் ஸபாவிலும், அதன் முடிவு மர்வாவிலுமிருக்கும். இவ்விதம் ஸயீ செய்து முடித்த பிறகு உம்றாவை மட்டும் நிய்யத்துச் செய்திருந்தால் தலை க்ஷவரம் செய்து கொள்ளவேண்டும் அல்லது மயிரை வெட்டிக் கொள்ளவேண்டும். இவைகள் முடிந்த பிறகு வழக்கமாக அணியும் உடைகளை அணிந்து கொண்டு ஹஜ்ஜுடைய நாள் வரும் வரை மஸ்ஜிதுல் ஹறமுக்கு வந்து தொழுகைகளை நிறைவேற்றிக்

கொண்டும் தவாபுகளைச் செய்து கொண்டு மிருக்கவேண்டும். தொழுகையைப்பார்க்கினும் தவாபுக்கு அதிகப் புண்ணிய மிருப்ப தால் நபில் தொழுகைகளைப் பார்க்கினும் நபிலான தவாபுகளை அதிகமாகச்செய்வது நல்லது.

ஹஜ்ஜு உம்ரா ஆகிய இரண்டிற்கும் நிய்யத்துச் செய்திருந் தால் இஹ்றுமை முறிக்காமல் மக்காவில் தங்கி இருந்து மினு செல்லவேண்டிய காலத்தில் மினுவிற்குச் செல்லவேண்டும்.

மினு செல்லல்.

பின்னர், துல்ஹஜ்ஜு மாதம் 7-ம்தேதி லுஹர்த்தொழுகைக் குப் பிறகு ஹஜ்ஜுடைய அஹ்காம்களைக் குறித்து இமாம் குத் பாப் பிரசங்கம் செய்வார். மறுநாள் 8-ம்தேதி பஜ்றுத் தொழு கைக்குப் பிறகு ஹறமில் இஹ்றும் கட்டிக்கொண்டு தவாபு, ஸயீ முதலியவைகளைச் செய்துகொண்டு மினுவிற்குச் செல்லவேண்டும். அங்கு அவ்விரவில் தங்கி இருந்து, மறுநாள் 9-ம்தேதிக் காலையில் பஜ்றுத் தொழுகைக்குப் பிறகு அறபாவிற்குச் செல்லவேண்டும்.

அறபாவில் தங்குதல்.

அறபாவில் மஸ்ஜிது நமிரா என்ருெரு மஸ்ஜிது இருக்கிறது, அதில் இமாம் லுஹருடைய நேரத்தில் அன்றையதினத்திலும் அதற்குப் பிறகும் செய்யவேண்டிய கிரியைகளை விளக்கி குத்பா பிரசங்கம் புரிவார். பிறகு லுஹறையும், அஸறையும் ஒன்று சேர்த்து இமாம் ஜமாஅத்தாகத் தொழுகை நடைபெறும். அப் புறம் ஹாஜிகள் தங்களுக்கென குறிப்பிட்ட இடங்களில் சென் றிருந்துகொண்டு தக்பீர், தஹ்லீல், ஸலவாத்து, திக்று முதலிய வைகளை ஓதிக்கொண்டும், இறைவனிடம் பாபமன்னிப்புக்கும் மற்றவைகளுக்கும் துஆச்செய்து கொண்டு மிருக்கவேண்டும். அறபாமலையும், அதன்மைதானமும் மௌக்கிபென்னும் தங்கு மிடமேயாகும். எங்குவேண்டுமாஞலும் தங்கலாம். அங்கு ஜபலே றஹ்மத் என்னும் மலைக்குப் பக்கத்தில் தங்கவேண்டும். ஆனல், பத்னே உர்ஞ என்ற இடத்தில் தங்கக்கூடாது.

முஸ்தலிபா செல்லல்.

அன்று சூரியாஸ்தமனமானவுடன் அறபாவை விட்டுப் புறப்பட்டு முஸ்தலிபா என்ற ஸ்தலம் வந்து ஜபலுல் குஜஹ் என்னும் மலையினண்டையில் இரவில் தங்கவேண்டும். அறபாவில் மகுரிபுத் தொழுகையை நிறைவேற்றக்கூடாது. முஸ்தலிபா வந்ததும் மஃரிபையும் இஷாவையும் சேர்த்துத் தொழவேண்டும். முஸ்தலிபாவில் பத்னே முஹஸ்ஸர் என்ற இடத்தில் தங்கக்கூடாது. மற்றைய எல்லா இடங்களிலும் தங்கலாம். அவ்விரவில் தக்பீர், தஹ்லீல், ஸலவாத்து, திக்று முதலியவைகளை ஓதிக்கொண்டும் வேறு வணக்கங்களைப் புரிந்துகொண்டு மிருக்கவேண்டும். நித்திரை மிகைத்தால் நித்திரை செய்யலாம். ஆனால், பஜ்றுடைய வேளையில் முதல் நேரத்தில் அதிக வெளிச்சம் வருவதற்கு முன்னதாக பஜ்றுத் தொழுகையை நிறைவேற்றி விட்டு சூரியோதயம் வரும்வரை முஸ்தலிபாவில் தங்கி இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.

மினா திரும்பல்.

பின்னர், சூரியோதயமானவுடன் முஸ்தலிபாவை விட்டுப் புறப்பட்டு மினாவிற்கு வந்து பத்னுல் வாதியில் நின்று கொண்டு ஜம்றத்துல் உக்பாவின் மீது பொடிக்கற்களால் ஏழு முறை எறிய வேண்டும். பின்னர் குர்பானி கொடுத்து தலை க்ஷவரம் செய்து கொள்ளவேண்டும் அல்லது மயிரை வெட்டிக்கொள்ளவேண்டும். இனி தல்பியா ஓதுவதை கல்லெறிவதுடன் நிறுத்திவிடவேண்டும். இனி சம்போகத்தைத் தவிர மற்றைய காரியங்கள் விலக்கப்படவில்லை.

தவாபு ஜியாரா.

இனி, திருமக்கா வந்து தவாபு ஜியாராவைச் செய்யவேண்டும். முன் செய்த தவாபில் றமல், ஸயீ முதலியவைகளைச் செய்யாதிருந்தால் இப்பொழுது றமல், ஸயீ ஆகியவைகளைச் செய்யவேண்டும். தவாபு முடிந்த பிறகு இரண்டு ரக்கஅத்துத் தொழுகவேண்டும். இந்த தவாபுக்கு பெருநாளின் தவாபு என்றும் பெயர். இது ஹஜ்ஜின் பர்ளுகளில் ஒன்று. இதனை 10—11—12-வது தேதிகளில் நிறைவேற்றலாம். இந்த தவாபு முடிந்த பிறகு சம்போகமும் விலக்கல்ல.

இது முடிந்த பிறகு திருமக்காவில் தங்காமல் மினுவிற்கே திரும்ப வந்து 11—ம் தேதியிலும், 12—ம் தேதியிலும் ஜம்ரத்துல் ஊலா, ஜம்ரத்துல் வுஸ்தா, ஜம்ரத்துல் உக்பா ஆகிய இம்மூன்றிடங்களிலும் வரிசைக்கிரமமாக 7 முறை பொடிக் கற்களை எறிய வேண்டும். 12-வது தேதியில் கல்லெறிந்த பிறகு மினுவை விட்டுப் புறப்பட்டு மக்காவிற்கு வந்து விடலாம். அன்றுவராமல் அங்கே தங்கி விட்டால் 13-தேதியும் கல்லெறிந்து விட்டு வர வேண்டும்.

மினுவிலிருந்து புறப்பட்டு வருகையில் மக்காவின் முற்ற வெளியான முஹஸ்ஸபெனும் மைதானில் சொற்ப நேரம் தங்கி இருந்து மக்காவில் அவரவரிருப்பிடத்திற்குச் செல்லவேண்டும்.

தவாபுல் விதாஉ.

பிறகு, வெளியூரார்கள் தங்கள் சுய ஊர்களுக்குப் பிரயாணமானுல் பிரயாணத்திற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு கடைசி அலுவலாக தவாபுல் விதாஐச் செய்துவரவேண்டும். வழக்கம்போல் றமல், ஸயீ ஆகியவைகளில்லாமல் தவாபு செய்யவேண்டும். பின்னர் வழக்கம்போல் முல்தஜமைப் பிடித்து இறைவனிடம் பிரார்த்தனை செய்து விட்டு, தவாபுத் தொழுகையை நிறைவேற்றி, ஜம் ஜம் ஜலத்தை அருந்தி விட்டு, கஃபா ஷரீபைப் பார்த்த வண்ணம் பிற்காலால் நடந்து மஸ்ஜிதில் பாபுல் விதாஉ வழியாக வெளியேறி, தங்கி இருந்த வீடுகளுக்குச் செல்லாமல் பிரயாணமாகிவிடவேண்டும். கஃபா ஷரீபின் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு வரலாகாது. இப்படி அதனைப் பார்த்த வண்ணம் பின்னங்கால்களால் வரும்போது,

اللهم ان هذ ابيتك الذى جعلته مبا ركا وهدى للعالمين
اللهم كماهد يتنى له فتقبل مني ولا تجعل هذ اا خرا لعهد من بيتك
وارزقني العود اليه حتى ترضى عني برحمتك يا ا رحم الرا حمين

அல்லாஹும்ம இன்ன ஹாதா பைத்துக் கல்லதீ ஜஅல்தஹு முபாரக்கன் வஹுதன் லில்ஆலமீன் அல்லாஹும்ம கமா ஹதைத்தனீ லஹு பதகப்பல் மின்னீ வலா தஜ்அல் ஹாதா ஆகிரல் அஹ்தி மின் பைத்திக்க வர்ஜுக்னியல் ஔத இலைஹி

ஹத்தா தர்லா அன்னீ பிரஹ்மத்திக யாஅர்ஹமர் ராஹிமீன். அதாவது "அல்லாஹ்வே! நிச்சயமாக இது உனது வீடு. இதனை அகிலத்தாருக்கு நேர்வழி காட்டியாகவும் பரக்கத்தானதாகவும் ஆக்கி இருக்கின்றனை. அல்லாஹ்வே! இதன்பால் என்னை நேர்வழியிற் சேர்த்ததுபோல என்னில் நின்றும் அங்கீகரிப்பாயாக. இதனை உனது வீட்டிற்குக் கடைசி முறையான வருகையாக ஆக்கவேண்டாம். இன்னும் கிருபையாளர்களில் மிகக்கிருபையுள்ளவனே! உனது கிருபையினல் என்னைப்பற்றி நீ பொருந்திக் கொள்ளும் பொருட்டு, இவ்வீட்டின்பால் நான் திரும்பவரும்படியாக எனக்கருள் புரிவாயாக" என்று பிரார்த்தனை புரியவேண்டும்.

ஸ்திரீகள்.

ஆடவர்களைப்போல் ஸ்திரீகள் இஹ்றும் உடையணியக் கூடாது. ஸ்திரீகள் முகம் ஒன்றைத் தவிர தலை முதல் மற்றைய அங்கங்களை எல்லாம் நன்கு மூடிக்கொள்ளவேண்டும். தையல் உடையணியலாம். காலில் மோஜா அதாவது ஸ்டாக்கிங்ஸ் போன்றவைகளையும் பூட்ஸ் போன்றவைகளையும் அணிந்துகொள்ளலாம். சப்தமிட்டு தல்பியா; தக்பீர் தஹ்லீல் ஓதாமல் மெதுவாக ஓத வேண்டும். தவாபு செய்யும்போது றமல், ஸயீ ஆகியவைகளைச் செய்யக்கூடாது. தலை முழுவதையும் சிறைத்துக்கொள்ளலாகாது. மயிரைக் கொஞ்சமாக வெட்டிக்கொள்ளவேண்டும். ஜன நெருக்கமாக இருக்கும்போது ஸபாமர்வாவில் உயரத்தில் ஏற வேண்டியதில்லை, ஹஜறுல் அஸ்வதை முத்த மிடவும்வேண்டியதில்லை.

ஸ்திரீகளுக்கு மாதவிடாய் ஏற்பட்டு விடுமாயின் ஹஜ்ஜுடைய கிரியைகளில் தவாபு ஒன்றைத் தவிர்த்து மற்றைய கிரியைகளைச் செய்யலாம். மாதவிடாயிலிருந்து சுத்தமானவுடன் ஸ்நானம் செய்து விட்டு தவாபு செய்யவேண்டும்.

باب الجنايات

பாபுல் ஜினயாத்

பரிகார முறைகளைப் பற்றிய விபரம்.

இஹ்றும் கட்டியவர்கள் சில காரியங்களைச் செய்யக்கூடாதெனத் தடுக்கப்பட்டிருக்கிறர்கள். இதுபோலவே ஹறம் எல்

லைக்குள்ளும் சிலகாரியங்கள் செய்யத்தகாதன வெனத் தடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தடுக்கப்பட்ட இக்காரியங்களை எவரேனும் செய்துவிட்டால், அக்குற்றங்களுக்குரிய பரிகாரங்கள் யாவை என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளிற் சில வருமாறு:—

இஹ்ராம் கட்டிய ஒருவர் தனது அவயவங்களில் பூர்த்தியான ஒரு அவயவத்திற்கு மணம் பூசினாலும், ஜைத்தூன் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்யைத் தடவினாலும், சிரசில் மருதோண்டி இலையை அரைத்துப் பூசினாலும், பகல் முழுவதும் அல்லது இரவு முழுவதும் தையல் உடை அணிந்தாலும், தலையை மறைத்தாலும், தலையில் கால்வாசி அளவிற்குக் குறையாமல் சிறைத்தாலும், இரத்தம் குத்தி வாங்கக்கூடிய இடத்திலுள்ள மயிர்களைச் சிறைத்து இரத்தங்குத்தி வாங்கினாலும், இருகம்முகட்டுகளிலொன்றில், அல்லது தொப்புளுக்குக் கீழில், அல்லது பிடரியில் உள்ள உரோமங்களைச் சிறைத்தாலும், இரண்டுகால்கள் அல்லது கைகளிலுள்ள நகங்களை ஒரே முறையில் அதாவது ஒரே இடத்திலிருந்து கரித்தாலும், ஒரு கையிலும் ஒரு காலிலுமுள்ள நகங்களைத் தரித்தாலும், தவாபுல் குதூம் அல்லது தவாபுஸ்ஸத்ரை ஜுனுபாளியாக நிறைவேற்றினாலும், ஹஜ்ஜில் வாஜிபான காரியங்களில் ஒன்றைச் செய்யாமல் விட்டாலும் இக்குற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆட்டைக் குர்பானி செய்யவேண்டும்.

ஹஜ்ஜை மட்டும் நிய்யத்துச் செய்த முப்ரித் மேற்கண்ட குற்றங்களில் ஒன்றைச் செய்தால் ஒரு ஆடு குர்பானி செய்யவேண்டும். ஹஜ்ஜு உம்ரா ஆகிய இரண்டையும் நிய்யத்துச்செய்த காரின் இரண்டு ஆடுகளைக் குர்பானி செய்யவேண்டும். ஹஜ்ஜு உம்ரா ஆகிய இரண்டையும் தனித்தனியே நிய்யத்துச் செய்த முத்தமத்திஉ குர்பானி கொடுக்கவேண்டிய பிராணியையும் தன்னுடன்கொண்டு வந்திருந்தால் காரினைப்போல் குற்றம் ஒன்றுக்கு இரண்டு ஆடுகளைக் குர்பானி செய்யவேண்டும். இவ்விருவகையினரும் ஹறமில் குர்பானியை அறுக்குமுன் அல்லது கல்லெறிவதற்குமுன் தலை க்ஷவரம் செய்தால் இரண்டு ஆடுகளை அறுத்து குர்பானி செய்யவேண்டும். ஹஜ்ஜை மட்டும்

நிய்யத்துச் செய்த முப்ரித் மீது இவைகளுக்காக குர்பானி செய்வது கடமையல்ல.

ஒரு அவயம் பூர்த்தியாக இல்லாமல் அதற்குக் குறைவாகவே மணம் பூசினாலும், ஒரு பகல் அல்லது ஒரு இரவுக்குக் குறைவாக தையல் உடை அணிந்தாலும், தலையை மூடினாலும், சிரசில் கால்வாசிக்குக் குறைவாக க்ஷவரம் செய்தாலும், மீசையைச் சிரைத்தாலும், ஐந்து நகங்களுக்குக் குறைவாகத் தரித்தாலும், ஒலுவில்லாமல் தவாபுல் குதூமை அல்லது ஸத்ரை நிறைவேற்றினாலும், தவாபில் மூன்று சுற்றுகளை நிறைவேற்றாமல் விட்டுவிட்டாலும், மூன்று ஜம்ரா செய்தாலும் அரை மரக்கால் மணிக்கோதுமை தர்மம் கொடுக்கவேண்டும்.

நிர்ப்பந்தத்தின்பேரில் அதாவது கங்கடத்தின்பேரில் மேற்கண்டவாறு மணம் பூசினாலும், தையலுடை யணிந்தாலும், தலை க்ஷவரம் செய்தாலும் ஒரு குர்பானி அறுக்கவேண்டும். அல்லது 6 ஏழைகளுக்கு நபர் 1-க்கு அரை மரைக்கால் வீதம் மூன்று மரக்கால் மணிக்கோதுமை தர்மம் செய்யவேண்டும். அல்லது மூன்றுநாள் நோன்பு நோற்கவேண்டும்.

பேனை அல்லது விட்டிலைக்கொன்றால் எதையாவது தர்மம் செய்யவேண்டும். வேட்டை மிருகத்தைக் கொன்றால் அல்லது அதனை அறிவித்துக்கொடுத்து அதனைக் கொல்வித்தால், அது கொல்லப்பட்ட இடத்திலோ அதற்குப் பக்கத்து இடத்திலோ உள்ள இரண்டு நீதிவான்களின் அபிப்பிராயத்திற் கேற்ப அம்மிருகத்திற்கேற்படும் கிரயத்தை தர்மம் செய்யவேண்டும். அதாவது அக்கிரயத் தொகையால் குர்பானியை வாங்க முடியுமென்றிருந்தால் குர்பானியை வாங்கி அறுக்கலாம் அல்லது மணிக்கோதுமையை வாங்கி நபர் 1-க்கு அரை மரைக்கால் வீதம் தர்மம் செய்யவேண்டும். தொலிக்கோதுமை அல்லது பேரீத்தம் பழத்தை வாங்கினால் நபர் 1-க்கு ஒரு மரக்கால் வீதம் தர்மம் செய்யவேண்டும். அல்லது இந்த தர்மத்தின் அளவிற்கு ஏழைகளைக் கணக்கு வைத்து நபர் 1-க்கு ஒரு நோன்பு வீதம் நோன்பு நோற்கவேண்டும்.

வேட்டை மிருகத்தைக் காயப்படுத்தினாலும் அல்லது அதன் அவயவங்களிலொன்றைக் கெடுத்தாலும், அதன் ரோமத்தைப்

பிடுங்கினாலும், அதனால் அதன் கிரயத்தில் நஷ்ட மேற்படுமாயின் அந்நஷ்டத் தொகையை தர்மம் கொடுக்கவேண்டும்.

முட்டையை உடைத்தாலும், அதனால் செத்த குஞ்சு வெளியானாலும் அதன் கிரயத்தை தர்மம் கொடுக்கவேண்டும்.

ஹறமுடைய எல்லைக்குள்ளிருக்கிற வேட்டை மிருகத்தை இஹ்றாம் கட்டாத ஒருவர் கொன்றாலும் அல்லது அதிலிருந்து பால் கரந்தாலும், அவ்வெல்லைக்குள் உள்ள புற்களைப்பிடுங்கினாலும், ஒருவருக்கும் சொந்தமாக இல்லாமல் தானாக உண்டான மரத்தைத் தரித்தாலும் அதன் கிரயத்தை தர்மம் செய்யவேண்டும். ஆனால், பட்டுப்போன அல்லது முறிந்துபோன மரத்தை வெட்டுவது குற்றமில்லை. அங்குள்ள புற்களில் ஆடு மாடுகளை விட்டு மேய்ப்பது கூடாது. அங்கு வேறு பூண்டுகளையும் அறுக்கக் கூடாது. ஆனால், காளான்களை எடுத்துக்கொள்ளலாம்.

காக்கை, பருந்து, நட்டுவக்காலி, எலி, பாம்பு, கடி நாய், கொசு, எறும்பு, செள், உன்னி, முதலை, ஈசல், முதலியவைகளை அதாவது வேட்டை யாடத்தகாத பிராணிகளைக் கொல்வது குற்றமல்ல. ஆடு, மாடு, கோழி, தாரா ஆகியவைகளை அறுப்பதும், இஹ்றாம் கட்டாதவர் ஹறம் எல்லைக்குள் வேட்டையாடி ஹறத்திற்கு வெளியில் அறுத்ததைப் புசிப்பதும் ஆகும்.

திரு மக்காவின் கண்ணியத்தைப் பேணியவர்களாக திரு மக்காவில் தங்கி இருப்பது முஸ்தஹப்பு. அதாவது இமாம் ஜமாஅத்தாகத் தொழுதல், ஜும்ஆத் தொழுகையைத் தவறாமல் நிறைவேற்றல், கஃபாவை தவாபு செய்தல், ஹறாமான காரியங்களையும், சமுசயமான காரியங்களையும் செய்யாமல் தவிர்த்துக்கொள்ளல் ஆகியவைகளாகும். இவைகளுக்கு மாறாக நடப்பவர் அங்கு தங்குவது ஹறாமாகவும் மக்றூஹாகவுமிருக்கிறது.

"கஃபா ஷரீபின் மீது அல்லாஹுத் தஆலாவிடமிருந்து தினந்தோறும் 120 நூற்று இருபது றஹ்மத்துகள் இறங்குகின்றன. அவைகளில் அறுபது தவாபு செய்பவருக்கும், 40 நாற்பது தொழுபவருக்கும், 20 இருபது அதனைப் பார்ப்பவருக்கும் கிடைக்கிறது" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. கிருபையுடைய இறைவன் நம்மனைவருக்கும் அந்த றஹ்மத்துகள் கிடைக்க அருள் புரிவானாக.

فصل في الهديون

பஸ்லுன் பில்ஹதய்யூன்.

பலிப்பிராணிகள்.

ஹஜ்ஜில் அறுக்கப்படுகிற குர்பானிப் பிராணிகளுக்கு ஹத்யூன் என்று பெயர். ஐந்து வயதான ஒட்டகை, இரண்டு வயதான மாடு, ஒரு வயதுள்ள கிடாய் ஆகியவைகளை அறுக்கலாம். குர்பானிக்கு உதவக்கூடிய ஆடுமாடுகள் இதற்கும் உதவும்.

ஜுனுபாளிகள், மாதவிடாயுள்ள ஸ்திரீகள் தவாபு ஜியாராவை நிறைவேற்றினாலும், அறபாவில் தங்கி இருந்த பிறகு தலை க்ஷவரம் செய்து கொள்வதற்கு முன்னதாக ஸம்சர்க்கம் செய்தாலும் புத்னு என்னும் ஒட்டகம் அல்லது மாடு அறுக்கவேண்டும். மற்றைய காரியங்களுக்கு ஆட்டை அறுப்பது ஆகும். ஸுன்னத்தான குர்பானி, முத்ஆ அல்லது கிரான் ஆகிய குர்பானி இவைகளின் மாமிசத்தைப் புசிப்பது முஸ்தஹப்பு. இம்மூன்றைத் தவிர்த்து மற்றைய குர்பானிகளிலிருந்து குர்பானி செய்பவர் புசிக்கக்கூடாது. அவ்வாறு புசித்தால் அம்மாமிசத்தின் கிரயத்தை ஏழைகளுக்கு தர்மம் செய்யவேண்டும். முத்ஆ, கிரான் ஆகிய குர்பானிகளை நஹ்றுடைய நாட்களில் அறுக்கவேண்டும். பொதுவாக எல்லா குர்பானிகளையும் ஹறம் எல்லைக்குள் அறுக்க வேண்டும். குர்பானிக்கு அறுக்கக்கொண்டு வந்த மிருகத்தின் மீது மூடப்பட்டிருந்த போர்வை, மூக்குக் கயிறு இவைகளைத் தர்மம் செய்து விடவேண்டும். இப்பிராணிகளை அறுப்பவருக்கு இவைகளைக் கூலியாகக் கொடுக்கக்கூடாது.

ஷாபியீ மத்ஹப்.

மேற்கூறப்பட்ட மஸ்அலாக்கள் ஹனபி மதுஹபைச் சேர்ந்தவை. ஆனல், ஷாபியீ மத்ஹபில் சொற்பவித்தியாசமுண்டு. என்றாலும், பர்ளு, வாஜிபு, சுன்னத்து, ஷர்த்து முதலிய எல்லாவற்றையும் பேணி மக்றூஹ், ஹறும் முதலியவைகளைத் தவிர்த்துக்கொண்டால் எல்லா மதுஹபுகளின்படியும் நிறைவேறிவிடும். ஆனல், சில சுன்னத்துகளை விட்டு விடுவதாலும், சில மக்றூஹா

களைச் செய்து விடுவதாலும் தான் மற்றைய மதுஹபில் இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆதலால், சன்மார்க்கர்கள் அவைகளைக் கவனித்து நடந்து கொள்வார்களாக.

அர்க்கானுல் ஹஜ்.

ஹஜ்ஜுடைய ருக்னுகள் ஆறு. அவைகள் வருமாறு:— 1. இஹ்றாம் கட்டுதல். 2. அறபாவில் தங்குதல். 3. தவாபு இபாலா. (இதனைத் தான் ஹனபிகள் தவாபு ஜியாரா என்று கூறுகின்றனர்). 4. ஸபா மர்வாவிற்கிடையில் ஸயீ செய்தல். 5. மயிர்களை தல். 6. முக்கிய ருக்னுகளை வரிசைக்கு கிரமமாகச் செய்தல்.

வாஜிபுகள்.

1. மீக்காத்துகளில் இஹ்றாம் கட்டுதல், 2. முஸ்தலிபாவில் 10-தேதி இரவில் தங்குதல், 3. மினாவில் தங்குதல், 4. தவாபுல் விதாஉ, 5. ஜம்றுக்களில் கல்லெறிதல். இவ்வைந்தும் வாஜிபுகள். இவைகளை அப்ஆலு ஸுன்னத்து என்றுங் கூறுவர்.

فصل في زيارة الروضة الشريفة

பஸ்லுன் பீ ஜியாரத்தில் ரௌலத்திஷ் ஷரீபா.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ரௌலா ஷரீபைத் தரிசித்தல்.

திருமக்கா நகரம் மதீனா புரியைப்பார்க்கினும் மிகப்புண்ணிய ஸ்தலமேயாகும். ஆயினும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பூத உடலம் மறைக்கப்பட்டுள்ள ஸ்தலம் அதாவது ரௌலாஷரீப் திருமக்கா, கஃபா, அர்ஷ், குர்ஸீ, முதலியவைகளைப் பார்க்கினும் மிகச்சிறந்தது. அதனை ஜியாரத்துச் செய்வது முஸ்தஹப்பு. ஆனால், இயல்புள்ளவர்களுக்கு வாஜிபு என்பதாக துர்றுல் முக்தார் என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ح.ش ஹதீது:— எனது வபாத்துக்குப்பின் என் கப்ரை ஜியாரத்துச் செய்தவர் நான் ஜீவித்திருந்த காலத்தில் என்னை வந்து கண்டவரைப்போலாகிறார்.

ثبت احاديث ஹதீது:— என் கப்ரை ஜியாரத்துச் செய்தவருக்கு எனது ஷபாஅத்து வாஜிபாகிவிட்டது.

ثبت احاديث ஹதீது:— ஒருவர் என்னை வந்து பார்க்க இயல்பை யடைந்த பிறகு என்னை ஜியாரத்துச் செய்யவில்லையாயின் நிச்சய மாக அவர் என்னை வெறுத்து விட்டார்.

ثبت احاديث ஹதீது:— பைத்துல்லாவை ஹஜ்ஜுச் செய்த ஒரு வர் என்னை ஜியாரத்துச்செய்யவில்லையானல் நிச்சயமாக அவர் என்னை வெறுத்துவிட்டார்.

ثبت احاديث ஹதீது:— ஒருவர் ஹஜ்ஜுச்செய்து விட்டு, என் னுடைய ரௌலாவில் வந்து என்னை நாடினல் அவருக்கு மக்பூலான இரண்டு ஹஜ்ஜு எழுதப்படும்.

ثبت احاديث ஹதீது:—ஒருவர் வேறு எதையும் நாடாமல் என்னை ஜியாரத்துச் செய்வதை மட்டிலும் நாடியவராக என்னிடத்தில் வந் தால் அவருக்கு நான் ஷபாஅத்துச் செய்வது அல்லாஹுத் தஆலா வின்மீது ஹக்காகிவிட்டது.

"ஒலிமார்கள் ஷுஹதாக்களின் அந்தஸ்திலிருக்கிறார்கள். அவர்கள் மரிப்பதில்லை. அவர்கள் தாருல்பனுஎன்னும் இப்புற உலகைவிட்டு நீங்கி, தாருல்பக்கா என்னும் மறுமையுலகிற்கு மாறு கிறார்கள்" என்பதாக கூறப்படுகிறது. ஒலிமார்களது அந்தஸ்தும் நிலையும் இவ்வாறிருக்கும் போது, நபிகள் நாதர் (ஸல்) அவர் களது அந்தஸ்தும் நிலையும் இதனைப் பார்க்கினும் அதிக மேம்பா டாகவே இருக்கும் என்பது தெளிவு. எனவே, நாயகம் (ஸல்)அவர் கள் ஹயாத்தாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு ரிஸ்குக்கொடுக் கப்படுகிறது. என்றாலும், பாவிகளாகிய நமது கண்களை விட்டு மறைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், நாம் அவர்களைப்பார்க்க முடியாது என்பதாக அறிஞர்கள் கூறிஇருக்கிறார்கள்.

ثبت احاديث ஹதீது:— மஸ்ஜிதுல் ஹறாம், என்னுடைய இந்த மஸ்ஜிது, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று மஸ்ஜிதுகளுக்கல்லாமல் பயணங்கட்டக் கூடாது என்று ஹதீதில் வந்திருக்கிறது. அதா வது திருமக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹறாம் என்னும் கஃபா ஷரீப், மதீனமாநகரிலுள்ள மஸ்ஜிது நபவீ, எருசலே மிலுள்ள பைத்துல் முகத்தஸ் என்னும் மஸ்ஜிது அக்ஸா ஆகிய மூன்று மஸ்ஜிதுகளுக்

குத்தான் செல்லலாம் என்று மேற்கண்ட ஹதீதில் கூறி இருப்பது நபிமார்கள், ஒலிமார்களின் கப்ரை ஜியாரத்துச் செய்வதை விலக் காது.

மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹறுமில்தொழுவதற்கு ஒன்றுக்கு லக்ஷம் வீதமும், மதீனாவிலுள்ள மஸ்ஜிது நபவியில் தொழுவது ஒன்றுக்கு ஆயிரம் விகிதமும், எருசலே மிலுள்ள பைத்துல் முகத் தஸில் தொழுவது ஒன்றுக்கு ஐனூறு விகிதமும் புண்ணியம் கொடுக்கப்படும். இவ்விடங்களில் புரியப்படும் இதாவணக்கங்களு க்கு இவ்விகிதாசாரப்படியே நன்மைகள் அளிக்கப்படும்.

ஜியாரத்தின் அதபுகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ரௌலா ஷரீபைத் தரிசிக்க விரும்பியவர் அதிகமாக ஸலவாத்துகளை ஒத வேண்டும். மதீனா முனவ்வராவை நோக்கிவரும்போது அவ்வூரின் வீட்டுச் சுவர்களைப் பார்த்தவுடன் இறைவனிடத்தில்,

அல்லாஹும்ம ஹாதா ஹறமு நபிய்யிக வமஹ்புது வஹ்யிகபம்னுன் அலய்ய பித்துகூலி பீஹி வஜ்அல்ஹு விகாயதன் லீ மினன்னரி வ அமானன் மினல் அதாபி வஜ்அல்னீ மினல் பாயிஜீன பிஷபாஅத்தில் முஸ்தபா யௌமல் மாபி

"நாயனே! இது உனது நபிய்யின் ஹறம், உனது வஹி இறங்கு மிஸ்தலம். எனவே, இதில் பிரவேசிப்பதன் மூலம் எனக்கருள் புரி வாயாக. இதனை நரகநெருப்பை விட்டு எனக்குக் காவலாகவும், வேதனையை விட்டு எனக்கு அபயமாகவும் ஆக்குவாயாக. இன்னும் கியாமத்து நாளில் முஸ்தபா (ஸல்) அவர்களது ஷபாஅத்தைப் பெற்றவர்களில் என்னையும் ஆக்குவாயாக" என்று பிரார்த்திக்க வேண்டும்.

திரு மதீனாவிற் சென்ற பிறகு, அல்லது மதீனாவிற் பிரவேசிப் பதற்கு முன்னர் கூடுமானால் ஸ்நானம்செய்து, சுத்தமான உடைகளை அணிந்து மணம்பூசி ஒலுவுடன் ஜியாரத்திற்கு புறப்பட்டு, காலால் நடந்து செல்லவேண்டும். இதற்குள்ளாக தன்னுடன் இருக் கும் சாமான்களை ஒரிடத்தில் பத்திரப்படுத்திவிட்டு பக்தி விசுவா சத்துடன் புறப்பட்டு,

பிஸ்மில்லாஹி வஅலா மில்லத்தி றஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம றப்பிஅத்கில்னீ முத்கலஸித்கின் வ அக்ரிஜ்னீ முக்ரஜ ஸித்கின் வஜ்அல்லீ மின்லதுன்க ஸுல்தானன் நஸீரா. அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ அலா ஆலி ஸெய்யிதினு முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா ஸெய்யிதினு இப்ராஹிம பில் ஆலமீன் இன்னக ஹமீதுன் மஜீத். வஃபிர்லீ துனூபி வப்தஹ்லீ அப்வாப றஹ்மத்திக வபலுலிக.

"அல்லாஹ்வின் திருநாமத்தாலும், அல்லாஹ்வின் றஸூல் (ஸல்) அவர்களது மார்க்கத்தினுலும் நான் பிரவேசிக்கிறேன். எனது றப்பே! உண்மையான பிரவேசமாக என்னைப் பிரவேசிக்கச்செய்து, உண்மையான வெளியேறுகையாக வெளியேறச்செய். இன்னும் என்னிடத்திலிருந்து உதவிபுரியும் படியான அதிகாரத்தை எனக்கேற்படுத்துவாயாக. நாயனே! எங்கள் நாயகம் முஹம்மது அவர்கள் மீதும், எங்கள் நாயகம் முஹம்மது அவர்களது கிளையார் மீதும், அகிலத்தாரில் எங்கள் நாயகம் இப்ராஹீம்மீதும், எங்கள் நாயகம் இப்ராஹீம் அவர்களது கிளையார் மீதும் அருள் புரிந்தது போல் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழப்பட்டவன், தலைமைத்தனமுள்ளவன். இன்னும் எனது பாவங்களை எனக்கு மன்னிப்பாயாக. இன்னும் உனது கிருபை கடாக்ஷத்தின் வாசல்களை எனக்குத்திறப்பாயாக" என்று பிரார்த்தித்துச் செல்லவேண்டும்.

மஸ்ஜிதினுட் சென்றவுடன் தஹிய்யத்துல் மஸ்ஜிது இரண்டு ரக்அத்தும், இப்புண்ணியஸ்தலத்திற்கு வரும்பாக்கியம் கிடைத்ததற்காக நன்றி செலுத்தி ஸலாத்துஷ்ஷுக்ரு இரண்டு ரக்கஅத்தும் தொழுது, தனக்கு இஷ்டமான பிரார்த்தனைகளைப் புரிந்து விட்டு திருறௌலா ஷரீபை நோக்கி பயபக்தியுடனும் விசுவாசத்துடனும் செல்லவேண்டும்.

றௌலா ஷரீபில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஜியாரத்துச் செய்வதற்கென்று குறிப்பிடப்பட்டிருக்கிற இடத்தில் மரியாதையாகவும் அதபாகவும் நின்று பின்வருமாறு ஸலாம் சொல்லவேண்டும்:—

அஸ்ஸலாமு அலைக்க யாஸெய்யிதி யாறஸூலல்லாஹ். அஸ்ஸலாமு அலைக்க யா நபியல்லாஹ். அஸ்ஸலாமு அலைக்க யாஹபீபல்லாஹ்

அஸ்ஸலாமு அலைக்க யா கைர கல்கில்லாஹ். அஸ்ஸலாமு அலைக்க யா நபிய்யர்ரஹ்மா. அஸ்ஸலாமு அலைக்க யா ஷபிஅல்உம்மா. அஸ்ஸலாமு அலைக்க யா ஸெய்யிதல் முர்ஸலீன. அஸ்ஸலாமு அலைக்க யா காத்தமன்னபிய்யீன. அஸ்ஸலாமு அலைக்க யா முஸ்ஸம்மில். அஸ்ஸலாமு அலைக்க யா முத்தத்திர். அஸ்ஸலாமு அலைக்க வஅலா உஸுலிகத்தையிபீன வ அஹ்லி பைத்திகத் தாஹிரீ னல்லதீன அத்ஹபல்லாஹு அன்ஹு முர்ரிஜ்ஸ வ தஹ்ஹரஹும் தத்ஹீரா. ஜஸாகல்லாஹு அன்னு அப்லல மா ஜஸா நபிய்யன் அன் கௌமிஹி வ றஸுலன் அன்உம்மத்திஹி. அஷ்ஹது அன்னக றஸுலுல்லாஹி கது பல்லஃதர் ரிஸாலத்த. வ அத்தைத்தல் அமானத்த. வ நஸஹ்தல் உம்மா. வ ஔலஹ்தல் ஹுஜ்ஜத்த வ ஜாஹத்த பீ ஸபீலில்லாஹி ஹக்க ஜிஹாதிஹி வ அகம்தத்தீன ஹத்தா அதாக்கல் யக்கீன்.

ஸல்லல்லாஹு அலைக்க வ ஸல்லம வ அலா அஷ்ரபி மக்கானின் தஷர்ரப பி ஹுலூலி ஜிஸ்மிக்கல்கரீமி பீஹி ஸலாத்தன் வஸலாமன் தாயிமைனி மின் றப்பில் ஆலமீன். அதத மா கான வ அதத மா யக்கூனு பி இல்மில்லாஹி ஸலாத்தன் லன்கிளாஅலி அமதிஹா. யா றஸுலல்லாஹி நஹ்னு வப்துக்க வ ஜுவ்வாறு ஹறமிக்க தஷர்ரப்னு பில்ஹுலூலி லுாபைன யதைக்க வ கது ஜிஉனுக மின் பிலாதின் ஷாஸிஅத்தின் வ அம்கினத்தின் பயீதத்தின் நக்தஉஸ் ஸஹ்ல வல்வஃர பி கஸ்தி ஜியாரத்திக்க லி நபூஸ பிஷபாஅத்திக்க வன்னல்ரி இலா மஆதிரிக்க வம ஆஹிதிக வல்கியாமி பிகளாஇ பஃலி ஹக்கிக்க வல்இஸ்திஷ்பாஇ பிக இலா றப்பினு ப இன்னல் கத்தாயா கது கஸமத் லுஹுரனு வல் ஔஜார கது அத்கலத் கவாஹிலனு வ அன்தஷ்ஷாபிஉல் முஷப்பஉல் மௌஊது பிஷ்ஷபாஅத்தில் உல்மா வல்மக்காமில் மஹ்மூதி வல் வஸீலத்த. வகது காலல்லாஹு தஆலா வலௌ அன்னஹும் இல்லலமூ அன்புஸஹும் ஜாஊக்க பஸ்தஃபருல்லாஹ வஸ்தஃபர லஹுமுர்ரஸுலு ல வஜதுல்லாஹ தௌவாபர் ரஹீமா.

வகது ஜிஃனுக ளாலிமீன லிஅன்புஸினு முஸ்தஃபிரீன லி துனுபினு பஷ்பஃ லனு இலா றப்பிக வஸ்அல்ஹு அன்ய்யுமீத்தனு அலா ஸுன்னத்திக, வஅன்யஹ் ஷுரனு பீ ஜும்ரத்திக, வஅன்ய்யூரிதனு ஹௌலக, வ அன்ய் யஸ்கியனு பிகஃஸிக கைர

கஸாயா, வலா நதாமா. அஷ்ஷபாஅத்த அஷ்ஷபாஅத்த அஷ்ஷபா அத்த யாறஸூலல்லாஹ். றப்பனஃபிர்லனு வலி இக்வானி னல்லதீன ஸபகூனு பில்ஈமானி வலா தஜ்அல் பீ குலூபினு கில்லன் லில்லன் லில்லதீன ஆமனூ றப்பனு இன்னக்க ரஊபுர்ரஹீம்.

(அல்லாஹ்வின் தூதரே உங்களுக்கு ஸலாம். அல்லாஹ்வின் நபியே உங்களுக்கு ஸலாம். அல்லாஹ்வின் ஹபீபே உங்களுக்கு ஸலாம். அல்லாஹ்வின் சிருஷ்டியில் சிறந்தவரே உங்களுக்கு ஸலாம். கிருபையுடைய நபியே உங்களுக்கு ஸலாம். உம்மத்துக்கு ஷபாஅத்துச் செய்பவரே உங்களுக்கு ஸலாம். முர்ஸல்களின் தலைவரே உங்களுக்கு ஸலாம். நபிமார்களுக்குக் கடைசியானவரே உங்களுக்கு ஸலாம். துப்பட்டி போர்த்தியவரே உங்களுக்கு ஸலாம். போர்வை போட்டவரே உங்களுக்கு ஸலாம். உங்களுக்கும் உங்களது தூய முன்னோருக்கும், அல்லாஹுத் தஆலாவால் அசங்கிதமான செய்கை விட்டு நீக்கிச் சுத்தப்படுத்தப்பட்டிருப்பவர்களான உங்கள் குடும்பத்தினருக்கும் ஸலாம்.

அல்லாஹுத் தஆலா தங்களுக்கு ஏனை நபிமார்களுக்கு அளித்த நற்கூலியைப்பார்க்கினும் மேலான நற்கூலியை அளிப்பானாக. நிச்சயமாகத் தாங்கள் அல்லாஹ்வின் றஸூல் என்று சாக்ஷியம் கூறுகிறேன். தாங்கள் கொண்டு வந்த தூதை ஜனங்களிடம் அறிவித்தீர்கள். உங்களிடம் இறைவன் கொடுத்திருந்த அமானிதத்தை நிறைவேற்றினீர்கள். உம்மத்துகளுக்கு உபதேசித்து, ஆதாரங்களை வெளிப்படுத்தினீர்கள். சன்மார்க்கத்திற்காக தக்கபடி ஜிஹாது செய்தீர்கள். உங்களது இறுதி காலம் வரை சன்மார்க்கத்தை நிலை நிறுத்தினீர்கள். அல்லாஹுத் தஆலா உங்களுக்கு முடிவில்லாவண்ணம் அருள் புரிந்து ஈடேற்ற மளிப்பானாக.

அல்லாஹ்வின் றஸூல் அவர்களே! நாங்கள் தங்களிடம் தூது வந்தவர்கள். தங்கள் ஹறமை ஜியாரத்துச் செய்பவர்கள். தங்கள் முன்னால் நாங்கள் வந்ததால் சிறப்பையடைந்துள்ளோம். தங்களது ஷபாஅத்தை அடைவதற்காகவும், தங்களது ஞாபகச் சின்னங்களையும், உடன்படிக்கைகளையும் பார்ப்பதற்காகவும், உங்களுக்காற்றவேண்டிய சில கடமைகளை நாங்கள் நிறைவேற்றுவதற்காகவும், எங்களது றப்பினிடத்தில் உங்கள் மூலமாக நாங்கள்

மன்ருட்டந்தேடவும் வேண்டியே மிகத் தூரதேசங்களிலிருந்து நாங்கள் வந்திருக்கிருேம். பாவங்களின் சுமை எங்கள் முதுகுகளை முறித்துவிட்டன. எங்கள் புஜங்களில் பளுவாயிருக்கின்றன. தாங்கள் மன்ருடுபவர்களாகவும், உங்களது மன்ருட்டம் அங்கீகரிக்கப்பட்டவர்களாகவு மிருக்கிறீர்கள். பொது ஷபாஅத்துச் செய்ய அனுமதிக்கப்படுவீர்களென்றும், தங்கள் மக்காமுல் மஹ்மூதென்னும் அந்தஸ்தளிக்கப்படுவீர்கள் என்றும், தங்களுக்கு வஸீலாவென்னும் பேறு கொடுக்கப்படுமென்றும் வாக்களிப்பட்டிருக்கிறீர்கள். இதனைக் குறித்து இறைவனும் கூறியுள்ளான். எனவே, எங்கள் பாவங்களுக்கு மன்னிப்புத் தேடியவர்களாகவும் எங்களுக்கே நாங்கள் தீங்கிழைத்தவர்களாகவும் தங்களிடம் வந்திருக்கிருேம். ஆதலின், தங்கள் றப்பினிடம் எங்களுக்காகப் பரிந்து பேசுங்கள். தங்களது வழி முறையைப் பின்பற்றியவர்களாக இருக்கிற நிலைமையில் எங்களுக்கு மரணத்தை அளிக்கவும், தங்களது கூட்டத்துடன் சேர்த்து எங்களை எழுப்பவும், ஹெளனுல் கெளதரில் வந்து தங்களது ஜலத்தை நாங்கள் அருந்த உங்கள் ஹெளனுக்கு நாங்கள் வரவும் வேண்டுமென்று தாங்கள் இறைவனைப்பிரார்த்தியுங்கள். அல்லாஹ் றஸூலே அவர்களே! ஷபாஅத்தை, ஷபாஅத்தை, ஷபாஅத்தையே நாங்கள் கேட்கிருேம். எங்கள் றப்பே! எங்களுக்கும், ஈமான் கொள்வதில் எங்களை முந்திவிட்ட எங்கள் சகோதரர்களுக்கும் பாபமன்னிப்புச் செய்வாயாக. இன்னும் எங்கள் இருதயங்களில் மூமின்கள் மீது பளுவையுண்டாக்காதே. எங்கள் றப்பே! நிச்சயமாக நீ அன்புள்ளவன் கிருபையுள்ளவன்" என்பது இந்த துஆவின் கருத்து).

பிறகு, நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்லும்படி சொல்லி அனுப்பியவர்களது ஸலாம்களை விபரமாகச் சொல்ல வேண்டும். அப்புறம் இறைவனிடம் தனக்கு வேண்டிய பிரார்த்தனைகளைக் கேட்கவேண்டும்.

பிறகு ஒரு முழம் வலப்புறம் நகன்று ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்களுக்குப் பின்வருமாறு ஸலாம் சொல்ல வேண்டும்;

அஸ்ஸலாமு அலைக்க யா ஸாஹிப றஸூலில்லாஹி, வ அனீஸஹு பில்காரி, வ றபீக்கஹு பில்அஸ்பாரி, வ அமீனஹு பில் அஸ்றாரி,

ஜஸாக்கல்லாஹு அன்னு அப்ளல மா ஜஸாஇ அன் உம்மத்தி நபிய்யிஹி. பலகத் கலப்தஹு பி அஹ்ஸனி கலபின். வஸலக்த தரீக்கஹு வ மின்ஹாஜஹு கைர மஸ்லக்கின். வ காத்தல்த அஹ்லர் ரித்தத்திவல்பிதஇ வ மஹ்ஹத்தல் இஸ்லாம வ ஷய்யத்த அர்க்கான்ஹு. ப குன்த கைர இமாமின். வ வஸ்ஸல்தல் அர்ஹாம வ லம்தஜல் காயிமன் பில்ஹக்கி நாஸிரன் லித்தீனி வலிஅஹ்லிஹி ஹத்தா அத்தாக்கல் யக்கீன். ஸலில்லாஹ ஸுப்ஹானஹு லனு தவாம ஹுப்பிக்க வல்ஹஷ்ர மஅ ஹிஸ்பிக்க வ கபூல ஜியாரத்தினு அஸ்ஸலாமு அலைக்க வ றஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு.

(றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது தோழரே, மலைப் பொதும்பில் அவருடனிருந்தவரே, பிரயாணங்களில் வழித்துணைவராக இருந்தவரே, இரகசியங்களைப் பாதுகாத்து வந்த அமீனே! உங்களுக்கு ஸலாம். அல்லாஹுத் தஆலா தங்களுக்கு நற்கூலி கொடுப்பானாக. தாங்கள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அழகான முறையில் பிரதி நிதித்துவம் வகித்தீர்கள். அவர்களது வழியிலும் முறையிலும் மேலான முறையில் நடப்பித்தீர்கள். மதம்மாறியவர்களையும் நூதனக் கொள்கையாளர்களையும் எதிர்த்துப் போர் புரிந்தீர்கள். இஸ்லாம் மதத்திற்கு ஆக்கத்தையளித்து, அதன் மூலாம்சங்களான ருக்னுகளைப் பலப்படுத்தினீர்கள். தாங்கள் மேலான தலைவராக இருந்தீர்கள். பந்துக்களை ஆதரித்தீர்கள். சத்தியத்தைக் கடைப்பிடித்தவராகவும், சன்மார்க்கத்திற்கும், அதனைப் பின்பற்றுபவர்களுக்கும் உதவி புரிபவராகவும் உங்கள் அந்தியகாலம்வரை இருந்தீர்கள். தங்கள் பாலுள்ள அன்பு எங்களுக்கு நீடித்திருக்கவும், உங்கள் கூட்டத்தினருடன் எங்களை எழுப்பவும், எங்களது ஜியாரத்து அங்கிகரிக்கப்படவும் அல்லாஹு ஸுப்ஹானஹு வ தஆலாவினிடம் பிரார்த்தியுங்கள். உங்களுக்கு ஸலாமும், அவனது கிருபையும் பரக்கத்தும் உண்டாகட்டும்" என்பது இவ்வாக்கியங்களின் கருத்து.)

பின்னர், ஒரு முழம் இடப்புறத்தில் நகன்று ஹஜ்றத் உமருப்னுல் கத்தாப் (றலி) அவர்களுக்குப் பின் வருமாறு ஸலாம் சொல்லவேண்டும்:—

அஸ்ஸலாமு அலைக்க யா அமீரல் மூமினீன. அஸ்ஸலாமு அலைக்க யா முல்ஹிரல் இஸ்லாமி. அஸ்ஸலாமு அலைக்க யா முகஸ்ஸிரல் அஸ்னுமி. ஜஸாகல்லாஹு அன்னு அப்ளலல் ஜஸாயி. லகது நஸர்த்தல் இஸ்லாம வல் முஸ்லிமீன, வ பதஹ்த முஃளம்ல் பிலாதி பஃத ஸெய்யிதில் முர்ஸலீன, வ கபல்தல் அய்த்தாம், வ வஸல்தல் அர்ஹாம, வ கவிய பிக்கல் இஸ்லாமு, வ குன்த லில் முஸ்லிமீன இமாமன் மர்ளியன் வ ஹாதியன் மஹ்தியன், ஜமஃத ஷம்லஹும் வ அஅன்த பக்கீரஹும் வ ஜபர்த கஸ்ரஹும். அஸ்ஸலாமு அலைக்குமா யாளஜீஐ றஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம, வ ரபீக்கைஹி, வ வஜீரைஹி, வ முஷீரைஹி, வல் முஆவினைனி லஹு அலல்கியாமி பித்தீனி வல்காயிமைனி பஃதஹு பி மஸாலிஹில் முஸ்லிமீன. ஜஸாக்குமல்லாஹு அஹ்ஸனன் ஜஸாஇ. ஜிஉனுகுமா நத்தவஸ்ஸலு பிகுமா இலா றஸூலில்லாஹி. ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம 'லி யத்தஷம்பஅ லனு வ யஸ்அலல்லாஹ றப்பனு அன்யத்தகப்பல ஸஃயனு வ யுஹ்யியனு அலா மில்லதிஹி வ யுமீத்தனு அலைஹா வ யஹ்ஷுரனு பீ ஜும்ரத்திஹி,

(மூமின்களின் தலைவரே தங்களுக்கு ஸலாம். இஸ்லாத்தை வெளிப்படுத்தியவரே தங்களுக்கு ஸலாம். விக்கிரஹங்களை உடைப்பவரே தங்களுக்கு ஸலாம். அல்லாஹுத் தஆலா தங்களுக்கு மேலான நற்கூலியை அளிப்பானாக. தாங்கள் இஸ்லாம் மதத்திற்கும் முஸ்லிம்களுக்கும் உதவி புரிந்தீர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மிகப்பெரிய தேசங்களை வெற்றி கொண்டீர்கள். அனாதைகளுக்குப் பிணையேற்றீர்கள், பந்துக்களை இணைத்தீர்கள் உங்களைகொண்டு இஸ்லாம் பலமடைந்தது. தாங்கள் பொருந்திக் கொள்ளப்பட்ட இமாமாகவும் நேர்வழிபெற்ற வழிகாட்டியாகவுமிருந்தீர்கள். முஸ்லிம்களின் கூட்டத்தை ஒன்று சேர்த்தீர்கள். அவர்களிலுள்ள ஏழைகளுக்கு ஒத்தாசை செய்தீர்கள். அவர்களில் முறிந்தவர்களை ஒட்டினீர்கள். அல்லாஹ்வின் றஸூலுக்குப்பக்கத்தில் படுத்திருக்கிற இருவர்களே அவர்களது தோழர்களே! மந்திரிகளே! ஆலோசனையாளர்களே! சன்மார்க்கத்தில் நிலைநிற்பதற்கு உதவி புரிந்தவர்களே! அவர்களுக்குப் பிறகு மூமின்களின் நன்மைக்காக உறுதியாக இருந்தவர்களே! உங்களிருவருக்கும் ஸலாம், அல்லாஹுத் தஆலா உங்களிருவருக்கும் நற்கூலி கொடுப்

பானுக. நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஷபாஅத்துச் செய்ய வும், எங்களது முயர்ச்சியை அல்லாஹுத் தஆலா அங்கீகரிக்க வும், தங்களது மார்க்கத்தில் எங்களை ஜீவிக்கச் செய்யவும், அதி லேயே எங்களை மரிக்கச் செய்யவும், தங்களது கூட்டத்தில் எங் களை எழுப்பவும் எங்கள் றப்பினிடம் பிரார்த்திக்கும் பொருட்டு உங்களிருவரின் மூலமாக றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் நாங்கள் வந்திருக்கிறேம்" என்பது இவ்வாக்கியங்களின் கருத்து.)

என்று பிரார்த்தித்து தனக்குத் தெரிந்த குர்ஆன் ஸூறத்து களையும் ஸலவாத்து முதலியவைகளையும் ஓதி இம்மூவருக்கும் ஹதி யாச் செய்து, தனக்கும். தன்பெற்ருேர்களுக்கும், மூதாதையருக் கும், துஆக் கேட்கும்படியாகத் தன்னிடம் வஸிய்யத்துச் செய்த வர்களுக்கும், முஸ்லிம்கள் யாவருக்கும் இறைவனிடம் துஆச் செய்து, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமாட்டில் திரும் பவும், வந்து மறுபடியும் நின்றுகொண்டு பின் வருமாறு இறைவ னிடம் பிரார்த்தனை செய்யவேண்டும்:—

அல்லாஹும்ம இன்னக குல்த, வ கௌலுகல் ஹக்கு வ லௌ அன்னஹும் இல்லலமு அன்புஸஹும் ஜாஊக்க பஸ்தக்பருல் லாஹ வஸ்தஃபர லஹுமுர் ரஸூலு ல வஜதுல்லாஹ தௌவா பன் றஹீமா. வகத ஜிஉனு ஸாமிஈன கௌலக்க தாயிஈன அம்ரக்க முஸ்தஷ்பிஈன பி நபிய்யிக்க இலேக்க அல்லாஹும்ம றப்பனஃ பிர் லனு வலி இக்வானினல்லதீன ஸபகூனு பில் ஈமானி வலா தஜ்அல் பீ குலூபினு கில்லன் லில்லதீன ஆமனூ றப்பனு இன்னக்க ரஊபுர்ரஹீம். றப்பனு ஆத்தினு பித்துன்யா ஹஸனத்தன் வபில்ஆகிரத்தி ஹஸனத்தன் வகினு அதாபன்னர். ஸுப்ஹான றப்பிக்க றப்பில் இஸ்ஸத்தி அம்மா யஸிபூன வ ஸலாமுன் அலல் முர்ஸலீன வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

(நாயனே! "மேலும் நிச்சயமாக அவர்கள் தங்களது நப்ஸு களுக்கு அநீதி செய்தபோது உம்மிடம் வந்து அல்லாஹ்வினிடத் தில் பிழை பொறுக்கத்தேடி அவர்களுக்காக றஸூலும் பிழை பொறுக்கத் தேடினுல் அல்லாஹ்வை அவர்கள் தௌபாவை அங்கீ கரிப்பவனுக கிருபையுள்ளவனுக அவர்கள் காண்பார்கள்" என்று நீ கூறி இருக்கிருய். உனது சொல் உண்மையானது. மேலும்,

உனது சொல்லைச் செவியேற்றவர்களாகவும், உனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் உனது நபியின் மூலம் உன்பால் சிபாரிஷ் தேடியவர்களாகவும் உன்னிடம் வந்திருக்கிறோம். நாயனே! எங்கள் றப்பே! எங்களுக்கும், ஈமான் கொள்வதில் எங்களை முந்திவிட்ட எங்கள் சகோதரர்களுக்கும் மன்னிப்புச் செய்வாயாக. இன்னும், மூமினனவர்கள் மீது எங்கள் இருதயங்களில் பகைவை ஏற்படுத்தாதே. எங்கள் றப்பே! நிச்சயமாக நீ கிருபையுள்ளவன், இரக்கமுள்ளவன். எங்கள் றப்பே! இவ்வுலகில் எங்களுக்கு நல்லதைத் தந்தருள்வாயாக. இன்னும் மறுமையில் எங்களுக்கு நல்லதைத்தந்தருளுவாயாக. இன்னும் நரக நெருப்பின் வேதனையை விட்டு எங்களை காப்பாயாக. அவர்கள் வர்ணிப்பதை விட்டு உமது றப்பு தூயவன். கண்ணியமுள்ளவன். இன்னும் முர்ஸல்கள் மீது ஸலாமுண்டாவதாக. அகிலத்தாருக்கு றப்பாகிய அல்லாஹ்விற்கே எல்லா புகழும்தீரும்" என்பது இவைகளின் கருத்து). என்று பிரார்த்து, தனக்குவேண்டிய இதரதேவைகளைத் தனக்குத் தெரிந்த பாஷையில் பிரார்திக்கவேண்டும்.

"எனது வீட்டுக்கும் என்மிம்பருக்கு மிடையில் இருப்பது சுவர்க்கலோகத்தின் பூங்காவனம்" என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருப்பதால் மஸ்ஜிது நபவியிலுள்ள அவ்விடத்தில் சென்று, குறிப்பாக உஸ்து வானயே அபிலுபாஹ என்ற தூணின் அண்டையில் நபில் தொழுது இறைவனிடம் தௌபாச் செய்யவேண்டும். இந்தத்தூண் இருக்கிற இடத்தில் ஹஜ்றத் அபூலுபாஹ் (றலி) என்ற ஸஹாபியின் தௌபா அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் அவ்விடம் துஆ கபூலாகு மிடமாக இருக்கிறது. பிறகு நாயகம் (ஸல்) அவர்களது மிம்பர் இருந்த இடத்திற்குவந்து, அவர்கள் கையை வைத்த இடத்தில் பரகத்திற்காக கையைவைத்து ஸலவாத்துச் சொல்லி தனக்குத் தேவையான வற்றை இறைவனிடம் பிரார்த்திக்கவேண்டும்.

பிறகு உஸ்து வானத்துல் ஹன்னுஹ என்ற தூணினிடம் வந்து நபில் தொழுது, ஸலவாத்து தஹ்லீல் முதலியவைகளை ஓதி அங்கும் தனக்குவேண்டிய துஆக்களைக்கேட்டு, அவ்விடத்தின் பரகத்தையும் பெற்றுக் கொள்ளவேண்டும். நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்ப காலத்தில் குத்பா ஓதும்போது ஒருபேரீத்தமரகட்டையில் சாய்ந்து கொண்டு குத்பா ஓதுவது வழக்கம். அப்பால் மின்பர் கட்டப்

பட்ட பிறகு அதனை விட்டுவிட்டு மின்பருக்கு வந்தார்கள். அப்பொழுது அத்தூணிலிருந்து அழுகுரல் கேட்டது. அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள் மின்பரிலிருந்து இறங்கிவந்து அத்தூணை கட்டியணைத்தார்கள், அக்குரலும் அமர்ந்தது. அது இருந்த இடத்தில் உஸ்து வானத்துல் ஹன்னுனு என்ற பெயரால் ஒரு தூண் நிறுத்தப்பப்பட்டு அடையாள மிடப்பட்டிருக்கிறது. மஸ்ஜிது நபவியிலுள்ள இதர முக்கிய இடங்களை எல்லாம் ஜியாரத்துச்செய்துவிட்டு தக்பீர், ஸலவாத்து, தஹ்லீல் திக்று முதலியவைகளை ஓதுவதுடன், இராக்காலங்களில் அதிகமாக விழித்திருந்து இபாதத்துகளைப்புரிந்து மதீனு முனவ்வரர்வின் பரக்கத்துகளை அடைந்து கொள்ளவும். ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் வேறுநேரங்களிலும் இயன்றவரை அடிக்கடி நாயகம் (ஸல்) அவர்களை ஜியாரத்துச் செய்து கொண்டிருக்கவேண்டும்.

பிறகு, மதீனு முனவ்வராவிலுள்ள ஜன்னத்துல் பக்கிஹ் என்ற கப்றுஸ்தானுக்குச்சென்று ஹஜ்றத் அப்பாஸ் (றலி), இமாம் ஹஸன் (றலி), ஹஜ்றத் உதுமான் (றலி), நாயகம் (ஸல்) அவர்களது புதல்வரான ஹஜ்றத் ஸெய்யிதுனு இப்ராஹீம் (றலி), ஸெய்யிதத்து பாத்திமா (றலி), அவர்களது சகோதரிகள், நம் பிராட்டிமார்கள், இமாம் மாலிக் (றஹ்), இதர பிரபல ஸஹாபிகள், நாயகம் (ஸல்) அவர்களது மாமி ஸபிய்யா (றலி) முதலியவர்களையும், அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள ஏனைய ஸஹாபிகள், தாபியீகள், தபஉதாபியீகள், ஒலிமார்கள், மூமின் முஸ்லிம்களைப் பொதுவாகவும் குறிப்பாகவும் ஜியாரத்துச் செய்யவேண்டும். அப்பால் உஹது மலைக்குச்சென்று அங்கு ஷஹீதாகி அடக்கம் செய்யப்பட்டுள்ள ஸெய்யிதுனு அமீர் ஹம்ஜா (றலி) முதலிய ஸஹாபிகளையும் ஜியாரத்துச்செய்து விட்டு, பழைய மதீனுவிலுள்ள மஸ்ஜிதுகுபா, வேறு இடங்களிலுள்ள மஸ்ஜிது கிப்லத்தைனி, கன்தச் சண்டை நடந்த இடம் முதலிய முக்கியமான இடங்களையும் ஜியாரத்துச் செய்து, பரக்கத்திற்காக ஆங்காங்கு நபில்களையும் தொழவேண்டும். இவைகளைப்பற்றி மதீனுவிலுள்ள முஅல்லிம் விபரமாகக்கூறுவார். அல்லாமலும் அங்குள்ள முக்கியஸ்தலங்களைக் குறித்து எழுதப்பட்டுள்ள கிதாபுகளையும் வாங்கிபார்த்து சரித்திரப்பூர்வமாக ஏற்பட்டுள்ள புனிதத்தன்மைகளையும் இதர விபரங்

களையும் தெரிந்து கொள்ளவேண்டும். ஜியாரத்து செய்யும்போது ஸூறத்து பாத்திஹாவுடன் ஸூறத்துல் இக்லாஸ் பதினொரு முறையும், யாஸீன் ஒருமுறையும் ஓதி ஹதியாச்செய்யவேண்டும். வியாழக்கிழமையாக இருந்தால் ஜியாரத்துச்செய்வதற்கு மிக விசேஷமாகும்.

பின்னர், தனது சுயஊருக்குப் பிரயாணமானால் சாமான்களை எல்லாம் வாகனத்திலேற்றிவிட்டு, மஸ்ஜிது நபவிக்கு வந்து, பிரயாணத்தின் தொழுகையை நிறைவேற்றி விட்டு, நாயகம் (ஸல்) அவர்களது ரௌலாஷரீபிற்கு வந்து அங்கு அடங்கிஇருக்கும் மூவரையும் ஜியாரத்துச்செய்து, ஸலாம் சொல்லி, தனக்குவேண்டிய துஆக்களைக் கேட்டுக்கொண்டு, அவர்களிடம் பயணம் சொல்லி விடை பெற்றுக்கொண்டு, வாகன மிருக்குமிடத்திற்கு நேராக வந்து பிரயாணமாகவேண்டும். விடை பெற்றுக் கொள்ளும்போது நாயகம் (ஸல்) அவர்களது ஜியாரத்து இனி எப்பொழுது கிடைக்குமென்பதையும், அவர்களது பரக்கத்தையும் நினைத்து அழுது கண்ணீர் வடிக்கவேண்டும். அழுகைவரா விட்டால் அழுவதுபோல் பாவனை செய்யவேண்டும். மதீனா முனவ்வராவிலுள்ள ஏழை எளியாருக்கும் பிறருக்கும் ஸதக்காக்களையும் ஹதியாக்களையும் கொடுத்து அவர்களை சந்தோஷப்படுத்தி அவர்களது துஆவையும் ஆசியையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பின்னர், சுயஊர் வரும்போது ஒருவருக்கும் தகவல் தெரிவிக்காமல் வராமல், முற்கூட்டியே உற்றார் உறவினருக்குத் தெரிவித்து, உள்ளூர் ஜமாஅத்துப்பள்ளிக்கு நேராகச் சென்று, ஷுக்ரியாத் தொழுகையை நிறைவேற்றி பந்துமித்திரர்களையும், மற்றவர்களையும் முஸாபஹா முஆனக்கா செய்து அவர்களது ஆசியையும் பெற்று, அப்புறம் தமதில்லம்வரவேண்டும். கூடுமானால் மூன்று நாள்வரை தமதில்லம் வராமல் வெளியிலிருந்து, தன்னை முலாகத்துக்கு வருபவருக்குப் பேட்டியளித்து, அவர்களுக்காக துஆ செய்து அவர்களது ஆசியையும் பெற்று, தமதிருப்பிடம்வந்து வீட்டிலும் ஷுக்ரிய்யாத் தொழுகையை நிறைவேற்றவேண்டும். ஹஜ்ஜுக்குச் சென்றவர்கள் சுயஊர் திரும்பிய பின் நாற்பது நாட்கள்வரை அவர்களது துஆ கபூலாகிறதென்றும், அவர்கள் பிரயாண காலத்திலிருக்கும்போது கேட்கும் துஆ கபூலாகிறதென்றும் பெரி

யோர்கள் கூறிஇருப்பதால் மேற்கண்டவாறு மனைவிமக்கள், உற்றார் உறவினர், பந்துமித்திரர் மூமின் முஸ்லிம்களுக்கு துஆ செய்வதுடன், நல்லஸாலிஹான அமல்களைச்செய்து கொண்டு எஞ்சிகாலத்தைக் கழிக்கவேண்டும்.

ஹஜ்ஜுக்குச் சென்றுவருபவர்களை எதிர் கொண்டழைத்து, வரவேற்று, முஸாபஹா, முஆனக்காச்செய்து, அவர்கள் வீட்டிற்குச் செல்வதற்கு முன் அவர்களது துஆவையும் ஆசியையும் பெற்றுக்கொள்வது ஏற்றமாகும்.

நாயனே! உமது ஹறமை ஜியாரத்துச்செய்யவும், உனது ஹபீபின் ஹறமை ஜியாரத்துச்செய்யவும் எங்களுக்கு நல்லருள்புரிவாயாக. உனது ஹபீபின் ஷபாஅத்தையும், அவரது ஹௌஸுல் கௌதருக்கு நாங்கள் கியாமத்துநாளில் செல்வதையும் எங்களுக்குக் கிருபை செய்வாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதிக்கு மாறுசெய்யாதவன். வஸல்லல்லாஹு வஸல்லம அலா கைரி கல்கிஹி ஸெய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

فصل في بيان واجبات الاسلام

இஸ்லாம் மதத்தின் வாஜிபான காரியங்கள்.

இஸ்லாம் மதத்தில் வாஜிபான காரியங்கள் ஏழு. அவை வருமாறு:—

1. பித்று ஸதக்கா, 2. ரத்தசம்மந்தமுள்ள பந்துக்களுக்கு அன்ன வஸ்திரமளித்தல், 3. வித்றுத் தொழுகை, 4. உல்ஹிய்யாக் கொடுத்தல், 5, உம்றாச்செய்தல், 6. பெற்றோர்களுக்கு ஊழியஞ் செய்தல், 7. ஸ்திரீகள் தங்கள் மணாளர்களுக்கு ஊழியஞ்செய்தல்.

இவைகளில் பித்று ஸதக்கா, வித்றுத் தொழுகை, உல்ஹிய்யா கொடுத்தல், உம்றாச் செய்தல் முதலியவைகளைப் பற்றிய விபரம் மேலே சொல்லப் பட்டுவிட்டது. ஷாபிஈ மதுஹபில் பித்று ஸதக்கா பர்லு. வித்றுத்தொழுகை ஸுன்னத்து. உல்ஹிய்யாக் கொடுப்பது பலவந்தமான ஸுன்னத்து. உம்றாச்செய்வது பர்லு.

பெற்ருேர்களுக்கு ஊழியம் செய்தல்

மிகக்கடுமையாகிய எஜமானுக்கு பலக்குறைவான தாழ்ந்த, குற்றமுள்ள அடிமை பணிவிடை செய்வதுபோல பெற்ருேர்களுக்குப் பிள்ளைகள் தாழ்மையுடன் பணிவாக ஊழியம் செய்ய வேண்டும். அவர்களிருவரின் பேச்சுக்குமேல் தனது சப்தத்தை உயர்த்தக் கூடாது. அவர்களுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தை பிள்ளைகள் நேர்முகமாக செய்யவேண்டும். ஊழியக்காரர்கள் மூலமாகச் செய்விக்கக் கூடாது. சன்மார்க்கத்திற்கு முரண்பாடில்லாத காரியங்களில் அவர்களது கட்டளைக்கு முற்றிலும் கீழ்படியவேண்டும். மாதாவின் பாதத்தை முத்தமிடவேண்டும். "சுவர்க்கம் தாய்மார்களின் கால்களுக்கடியில் இருக்கிறது" என்று ஹதீது ஷரிபில் வந்திருக்கிறது. எனவே, பெற்ருேர்களிருவருக்கும் ஊழியம் செய்வது மிகக்கண்டிப்பான கடமை யாகும். இருவரில் எவருக்கேனும் விரோதம் செய்வது பெரும்பாவமாகும். அவர்களுக்கு விரோதம் செய்யாமல் மரியாதை யின்றி நடப்பது சிறுபாவமாகும். "என்னை ஒருவன் வணங்கி தனது பெற்ருேர்களுக்கு விரோதம் செய்தால் அவனது வணக்கத்தை நான் அங்கீகரிக்கமாட்டேன்" என்று அல்லாஹுத் தஆலா கூறிஇருக்கிருன். எனவே, பெற்ருேரிருவரையும் திருப்திசெய்வது அல்லாஹுத் தஆலாவை திருப்திசெய்வதாகவும், அவ்விருவரையும் வருத்தப்படுத்துவது அவனைக் கோபப்படுத்துவதாகவும் இருக்கிறது.

"ஒருவன் தாய் தகப்பனுக்கு நன்றிசெய்து, எனக்கு விரோதம் செய்தால் அவன் நன்றி செய்தவனென்றும், அவன் எனக்கு நன்றிசெய்து தனது தாய் தகப்பனுக்கு விரோதம் செய்தால் எனக்கு விரோதம் செய்தவனுவான் என்றும் எழுதி விடுவேன்" என்று ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் வஹி அறிவித்தான்.

"ஒருவன் தனது தாய் தகப்பனை அடித்தால் அவனை வெட்டப்படும்" என்று தௌராத் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "தாய் தகப்பனுடைய சொல்லைக் கடிந்து அவர்களைச் சீ என்று சொல்லாமலும், அவ்விருவரும் முஷ்ரிக்கானவர்களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு ஊழியம் செய்வதை விடாமலுமிருக்க வேண்

டும். தாய்க்கு நன்றி செய்வது தகப்பனுக்கு நன்றி செய்வதைப் பார்க்கினும் இரட்டிப்புக்கடமையாகும். தாயைப்பார்க்கினும் தன் மனைவிக்கு அதிகக்கண்ணியத்தைக் கொடுப்பதால் அல்லாஹுத் தஆலாவின் லஃனத் தென்னும் கோபத்திற் காளாகவேண்டும். இத் தகையோரின் பர்லான வணக்கங்களையும்,நபிலான வணக்கங்களையும் கூட அல்லாஹுத் தஆலா அங்கீகரிக்க மாட்டான்." மக்களுக்குப் பெற்றோர் செய்யும் துஆ,நபிமார்கள் தங்கள் உம்மத்துமார்களுக்கு கேட்கும் துஆவைபோன்றது" என்ற விபரங்கள் ஹதீது ஷரீபு களில் வந்திருக்கின்றன.

மக்கள் தொழுதவுடன் رب ارحمهما كما ربياني صغيرا றப்பிர்ஹமுஹுமா றப்பயானிசகீரா "என்னுடைய றப்பே (எனது மாதா பிதாக்களாகிய)அவ்விருவருக்கும், அவர்கள் என்னை இளமை யில் வளர்த்ததுபோல கிருபை செய்வாயாக" என்ற துஆக்களைப் போல் பெற்றோர்களுக்கு துஆச்செய்யவேண்டும். பெற்றோர்களின் பெயரைசொல்லி மக்கள் அழைப்பதும், கணவன் பெயரைக் கூறி மனைவி அழைப்பதும் மக்றூஹு என்று ஆலம்கீரி என்ற கிரந்தத் தில் வந்திருக்கிறது.

வெளியிடத்தில் இருக்கும்போது தன்னை வரவேண்டும் என்று பெற்றோர்கள் கூறினல், அக்கட்டளையின்படி பெற்றோர்களிடம் வந்து விடவேண்டுமேயன்றி சமாதானக்கடிதங்கள் எழுதுவது போதாது. தந்தைக்குப் பிறகு மூத்த சகோதரன் தந்தையைப் போலாகும். இதுபோலவே பாட்டனும், அவனது மூதாதையரும் இருக்கிறார்கள். மாதாவுக்குப் பிறகு அவளது அந்தஸ்தில் மூத்த சகோதரியும் மாமியுமிருக்கிறார்கள்.

இவர்களது மரணத்திற்குப் பிறகு இவர்களுக்குப் பிழை பொறுக்கத் தேடவேண்டும். இவர்கள் கூறிய உபதேசங்களையும் கட்டளைகளையும் வஸிய்யத்தையும் நிறைவேற்றவேண்டும். இவர் களது சினேகிதர்களுக்கு மரியாதை செய்யவேண்டும். இவர்களுக் காக தான தர்மம் செய்து இவர்களை ஜியாரத்துச் செய்யவேண்டும். பெற்றோர்களது கப்ரை ஜும்ஆதோறும் ஜியாரத்துச் செய்ப வருக்குப் பாபமன்னிப்புக் கிடைப்பதுடன், அவர்களுக்கு நன்றி செய்தவர் என்பதாகவும் எழுதப்படும். எனவே, மக்கள் பெற் றோர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் வருமாறு:—

1. தனக்கு சக்தியுமிருந்து, தாய்தகப்பனுக்குத் தேவையுமிருந்தால் அவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கவேண்டும்.

2. மக்களது பணிவிடை பெற்றோர்களுக்குத் தேவைஇருந்தால் பணிவிடை செய்யவேண்டும்.

3. அவர்கள் அழைத்தால் அதற்கிணங்கி அவர்களிடம் செல்லவேண்டும்.

4. சன்மார்க்கத்திற்கு முரணல்லாமலும் பாவமல்லாததுமான காரியங்களைகுறித்து ஏவினுல் அதனைச் செய்யவேண்டும்.

5. அவர்களுடன் சம்பாஷணை செய்யும்போது அமர்ந்து, மலர்ந்த முகத்துடன் சம்பாஷணை செய்யவேண்டும்.

6. அவர்களது பெயரைச் சொல்லி அவர்களை அழைக்கக் கூடாது.

7. நடக்கும்போது அவர்களுக்குப்பின்னுல் நடக்கவேண்டும்.

8. தனக்கு விருப்பமானதையே தன் பெற்றோர்களுக்கும் விரும்பவேண்டும்.

9. தனக்கு வெறுப்பானதையே தன் பெற்றோர்களுக்கும் வெறுக்கவேண்டும்.

10. தனக்கு துஆக்கேட்பது போல தன் பெற்றோர்களுக்கும் பாபமன்னிப்புக்காக துஆக்கேட்கவேண்டும்.

ஒருவன் தன் மாதா பிதா இருவருக்கும் தினசரி ஐந்து வேளைகளிலும் துஆச் செய்வானுயின் அவ்விருவருடைய கடமைகளையும் நிறைவேற்றியவனுகிவிடுவானென்று தாபியீன்களில் ஒருவர் கூறி இருக்கிறுர்.

குருவுக்குச் செய்யவேண்டிய கடமை.

கல்வியைக் கற்றுக் கொடுத்த குருவுக்குச் செய்யவேண்டிய கடமை, மாதாபிதா ஆகிய இருவருடைய கடமைகளைப் பார்க்கினும் மேலாகும். "தந்தைகளில் மேலானவர் கற்றுக்கொடுத்த குரு" என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆதலின், பெற்றோர்கள் கடனைப்பார்க்கினும் முதற்படுத்தி நிறைவேற்றவேண்டும்.

ஏனெனில், கல்வி ஆன்மாவிற்கு உயிர் கொடுக்கிறது. குருவைத் தூஷிப்பது பெரும் பாவமாகும். குருவின் வீட்டிற்குச் சென்றால் அவ்வீட்டுக் கதவை தட்டி, அவருக்குத் தொந்தரை கொடுக்காமல், அவர் வெளியில் வரும்வரை காத்திருக்கவேண்டும். எப்போதும் அவருக்காக துஆச் செய்யவேண்டும்.

மனைவியின் கடமை.

ஸ்திரியானவள் தனது இனம், ஜனம், மாதா, பிதா, சகலருக்கும் மேலாக தனது மணாளரின் மீது அன்பும் பிரியமும், மதிப்பும் வைக்கவேண்டும். தன் கணவனின் வீட்டு அலுவல்களைத் தானே பொறுப்பேற்றுக் கவனிக்கவேண்டும். கணவன் வீட்டுச் சாமானைப் பிறருக்குக் கொடுப்பதிலும், வீட்டை விட்டு வெளியில் செல்வதிலும், நபிலான நோன்பு வைப்பதிலும் கணவனிடம் உத்தரவுபெற்றுக்கொள்ளவேண்டும். அவசியமான காரியத்தின் நிமித்தம் வெளியிற் செல்ல நேர்ந்தாலும் கணவன் அனுமதியின்பேரில், தன்னை அலங்கரித்துக்கொள்ளாமல், தன்னை இன்னாரென்று பிறர் அறிந்து கொள்ளாவண்ணம், தனது குரலைப் பிறர் கேட்காத வண்ணம் பாதையின் ஓரமாகச் செல்வது குற்றமில்லை. ஆனால், தனி வழி செல்லலாகாது.

பிறமனிதரைப் பார்ப்பதும், அவர்களை நோய் விசாரிக்கவும், விருந்துக்குச்செல்லவும் கணவன் உத்தரவு கொடுக்கலாகாது. அவ்விருந்து அவளை மணம் செய்யக்கூடாத மஹ்ரமானவருடைய விருந்தாக இருந்தாலும் சரியே. அவ்வாறு உத்தரவு கொடுத்து, அவள் சென்றாள் கணவன் மனைவி ஆகிய இருவரும் பாவியாகுவார்கள். வீட்டினுள்ளிருந்துகொண்டு வெளியிற் செல்லும் அந்நிய ஆடவர்களைப் பார்க்கக்கூடாது. இதனால் அநேக தீங்குகளுண்டாகும். கணவனைச் சந்தோஷப் படுத்துவதற்காகத் தன்னை அலங்கரித்துக்கொள்ளவேண்டும். அவனை இரகசியத்திலும் பகிரங்கத்திலும் நோவினை செய்யக்கூடாது. ஸ்திரீயானவள் ஒட்டகை முதுகில் மீதிருக்கும்போதும் கூட கணவன் விரும்பினால் அவனுக்கு இணங்கவேண்டும். கணவனிடம் கடுகடுப்பாக நடந்துகொள்ளாமலும், கணவனுக்கு துக்கத்தையுண்டாக்காமலும், மாதவிடாய், பேற்றுத் தடக்குகளை விட்டுச் சுத்தமாக இருக்கும் காலமெல்

லாம் கணவனுடைய ஆசையைத் தணிக்க இடங்கொடுக்கவேண்டும். கணவனது ஆசையை நிறைவேற்ற மறுப்பவள் நரக வாதியாவாள். கணவனது உச்சி தொடுத்துப் பாதம்வரையில் சீயும் சலமும் இருந்து, அதனை அவள் நாவால் வழித்தெடுத்தாலும் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமையை ஸ்திரீ நிறைவேற்றியவளாகாள்.

அந்நிய ஆடவர்களைப் பார்ப்பதை விட்டு தனது பார்வையைத் தடுத்துக்கொள்வதுடன், அனுவசியமாக வெளியிற் செல்லாமல் வீட்டிலேயே தங்கி இருக்கவேண்டும். வீட்டிலுள்ள மேல் மெத்தையின் மீது மேல் தட்டில் செல்லாமலும் வெளியில் எட்டிப்பார்க்காமலும், கணவனது சிநேகிதர்களுடன் பேசாமலும் இருக்கவேண்டும். கணவன் இல்லாத சமயங்களில் விளையாட்டையும், நல்ல உணவுகளையும் உட்கொள்ளாமலும், தன்னை அலங்கரித்துக் கொள்ளாமலும், குழந்தைகளை இளமைப்பருவத்திலிருந்தே பேணி நல்ல பயிற்சி அளித்துக்கொண்டுமிருக்கவேண்டும்.

நற்குணவதியான மனைவி.

கிடைத்ததைக்கொண்டு போதுமென்ற மனமுள்ளவளாகி, அதனையே சீமான் தனம் என்று திருப்தியடைவாள். கற்பைக் காப்பதுதான் தனக்குச் சிறந்த ஆபரணம் என்று கருதுவாள். பர்லான வணக்கங்களை நிறைவேற்றிய பிறகு கணவனுக்கு ஊழியம் செய்வதுதான் பெரிதென எண்ணுவாள். மறு உலக வாழ்விற்கானவைகளைச் சித்தம் செய்வதிலே துணிந்திருப்பாள்.

ஹதீது:- "ஒரு ஸ்திரீ தன்மீது விதியான ஐந்துவேளைத் தொழுகைகளையும் நிறைவேற்றி, றமலான் மாதத்தின் பர்லான நோன்புகளை நோற்று, கற்பையும் காத்து, தனது கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பாளாயின் அவள் தனக்கு இஷ்டமான வாசல் வழியாகச் சுவர்க்கத்தில் பிரவேசித்துக்கொள்ளட்டும்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார்கள்.

கணவன் கடமை.

மனைவிக்கு அநீதி செய்யாமல், அவளை நீதியாக வைத்து சம்சார வாழ்க்கையை நடத்தவேண்டும். அவர்களிடத்தில் குரூரமாய்

நடக்காமல் நற்குணத்துடன் நடந்துகொள்ளவேண்டும். மனைவியர்களது புத்திக்குறைவிற்கு இரங்கி, அவர்களாலேற்படும் குற்றங் குறைகளை மன்னித்து, அவர்களுடன் இராக்காலங்களில் தங்கி இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்களை யுள்ளவர்கள் ஒருத்தியைப் பார்க்கினும் மற்றொருத்தியின் மீது அதிகமாகச் சார்ந்து விடாமல், அவர்களுக்கிடையில் நீதியாக நடந்து யாவரையும் சமமாக நடத்தவேண்டும். தான் உண்ணும் உணவை அவர்களுக்கும் கொடுக்கவேண்டும். தான் அணியும் உடைக்குத் தக்கவாறு அவர்களுக்கும் உடைகொடுத்து ஆதரிக்க வேண்டும். மனைவியைக்கண்டித்து அவள் மீது தனக்குள்ள வருத்தத்தைத் உணர்த்த விரும்பினுல் படுக்கையில் அவளைப் பிரித்துவிடவேண்டும். ஆனுல், படுக்கையறையை விட்டு அவளைப் பிரித்து வைக்கலாகாது. அவள் அதிகக் கோபமடைந்துவிடுவாளாயின் "அசங்கிதமும் அசுத்தமும் கெடுதியும் கெடுதி செய்வதுமாகவுள்ள ஷைத்தானே நல்ல ஸ்தானத்தை விட்டு வெளியேறு" என்று கூறி அவளது தோள்புயங்களுக்கிடையில் முன்கைகளாலடிக்கவேண்டும். அப்படிச்செய்தால் அவளை விட்டு ஷைத்தான் விரண்டோடி விடுவான். அவள் வெளியிற் செல்வதைப்பார்த்திருக்ககூடாது. அவள் மலம் ஜலம் கழிக்க தக்க வசதியைத் தன் வீட்டிலேயே ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அவள் தன்னை அலங்கரித்துக்கொண்டு, பிறர் பார்க்க வெளியிற் செல்வதைக் கணவன் பார்த்துக்கொண்டிருந்தால், தையலர் தம்மிடமிருந்து தூது செல்பவர்களைப் போலாகிவிடுவான். சுவர்க்க லோகத்தின் வாசலில் "சுவர்க்கமே! நீ தையலர்களிடமிருந்து தூது சென்றவர்களுக்கு ஹறும் என்றெழுதப்பட்டிருக்கிறது" என்பதாக நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிறுர்கள். "ஒரு ஸ்திரியினுல் தந்தை, கணவன், பிள்ளை, சகோதரன் ஆகிய நால்வரும் அவளுடன் நரகம் சேருவார்கள்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. அந்நிய ஸ்திரீகளிடம் உறவாடுவதை ஆடவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அவர்கள் ஷைத்தானுடைய வலைகளாயிருக்கிறுர்கள். அவர்களைப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். தனக்கு ஹலாலாயில்லாத ஸ்திரீயுடன் கலந்து மகிழ்ச்சியாய் பேசுபவர் ஒவ்வொரு பேச்சுக்கும் நரகில் ஆயிரம் வருஷம் வேதனை

செய்யப்படுவான். அந்நிய ஸ்திரீயின் புயத்தில் தனது புயம்படும்படி அவ்வளவு நெருங்கி இருப்பதானது அசங்கிதத்தில் புரண்ட பன்றியைத் தொட்டுப் பிடிப்பதைப் பார்க்கினும் மிகக் கெட்டதாக இருக்கிறது. இரண்டு கண்களும் பார்ப்பது கண்ணுக்கு விபசாரமாகும். விபசாரத்திற்கு நடப்பது கால்களுக்கு விபசாரமாக இருக்கிறது. "அல்லாஹ்வின் மீதும் கியாமத்து நாள் மீதும் நம்பிக்கையுள்ள எவரும் அந்நிய ஸ்திரீயுடன் தனித்து இருக்கமாட்டார்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருப்பதாக இமாம் தப்ரானீ (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள்.

குழந்தைகளுக்கு அழகிய பெயர் வைக்கவேண்டும். விழு பிள்ளையாக இருந்தபோதினும் சரியே அழகிய நாமம் வைக்கத் தவரக்கூடாது. குழந்தைகள் பேச ஆரம்பிக்கும் போதே அவர்களுக்கு கலிமாவைக் கற்றுக்கொடுக்கவேண்டும். அப்புறம் சன்மார்க்கக் கல்வி, அம்பெய்தல் போன்ற யுத்தப் பயிற்சி, ஜலத்தில் நீந்தல் முதலியவைகளைக் கற்பிக்கவேண்டும். குழந்தையைத் திட்டாமல் ஆறும் வயதிலிருந்து ஒழுக்கங்களைக் கற்பிக்கவேண்டும். ஏழு வயது முதல் படுக்கையைப் பிரித்து அதாவது ஒரே படுக்கையில் தாய் அல்லது தகப்பனுடன் படுக்காமல் பிரிந்து தனிப் படுக்கையில் நித்திரை செய்யப்பழக்கவேண்டும். தொழுகை நோன்பு முதலியவைகளை நிறைவேற்றும்படி கட்டளையிடவேண்டும். பத்து வயதான பிறகு தொழுகை முதலியவைகளை நிறைவேற்ருமலிருந்தால் அவர்களைக் கண்டிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எதையேனும் கொடுத்தால் அதனைச் சமமாகப் பகிர்ந்துகொடுக்கவேண்டும். சிறு குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் முதலாவதாகக் கொடுக்கவேண்டும். குழந்தைகள் மரித்தால் ஒலுச்செய்து, இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டும். இதனால் அநேக நன்மைகளுண்டு.

فصل في بيان حقوق الاسلام

பஸ்லுன் பீ பயானி ஹுக்கூக்கில் இஸ்லாம்.

முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டிய கடமைகளைப்பற்றிய விபரம்.

முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டிய காரியங்கள் இருபத்தி மூன்று. அவை வருமாறு:—

ஸலாம் சொல்லல்.

முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லிக்கொள்வது ஸுன்னத்து முஅக்கதா. ஸலாமுக்கு பதில் ஸலாம் சொல்வது வாஜிபு. "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு ஸலாம் சொல்லி, அதற்கவர் பதில் ஸலாம் சொன்னால் மலக்குகள் அவர்கள் மீது எழுபது முறை ஸலவாத்துச் சொல்கிறார்கள்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

எனவே, ஒரு முஸ்லிமை எத்தனை முறை சந்தித்தாலும் ஸலாம் சொல்லவேண்டும். ஒரே இடத்தில் மரம் அல்லது சுவர் குறுக்கிட்டு அதில் மறைந்து மறுபடியும் சந்தித்தாலும் ஸலாம் சொல்லவேண்டும். ஸலாம் சொல்வதன் மூலம் முஸ்லிம்கள் தங்களுக்குள் அறிமுகப்படுத்திக் கொள்வதை நிய்யத்துச் செய்ய வேண்டும். முதலாவதாக ஸலாம் சொல்பவருக்கு அதிக நன்மையுண்டு. எனவே, அறிமுகமானவர், அறிமுக மில்லாதவர், இளையவர், மூத்தவர், ஏழை, பிரபு, தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்ற பாகு பாடின்றியாவருக்கும் ஸலாம் சொல்லவேண்டும். ஆனால், வெளியிலிருந்து வருபவரும், நடந்துகொண்டிருப்பவர் உட்கார்ந்திருப்பவருக்கும், வாகனத்தின் மீது சவாரி செய்பவர் கால் நடையாகச் செல்பவருக்கும், இளையவர் மூத்தவருக்கும், பின்னால் செல்பவர் முன்னால் செல்பவருக்கும் முதலாவதாக ஸலாம் சொல்வது மிகவும் ஏற்றமான காரியம்.

அந்நிய ஸ்திரீ கிழவியாக இருந்தால் அவள் தம்மினுலும், ஸலாம் சொன்னாலும் பிரதி ஸலாம் சொல்லலாம், வாலிப

மானவளாயிருந்தால் சப்த மிட்டு பதில் சொல்லாமல் மனத்திற்குள் பிரதி ஸலாம் சொல்லிக் கொள்ளவேண்டும். முதலாவதாக ஸலாம் சொல்வதை காதில் விழும்படி சப்தமிட்டுச் சொல்வது ஸுன்னத்து. அதற்குப் பிரதி ஸலாம் சொல்வதைக் காதில் படும்படி சப்தமிட்டுச் சொல்வது வாஜிபு. காதில் படாத முறையில் ஸலாம் சொன்னாலும், பிரதி ஸலாம் சொன்னாலும் சுன்னத்தும் வாஜிபும் நிறைவேறாது.

ஒரு கூட்டத்தை நோக்கி ஒருவர் ஸலாம் சொன்னால் அதற்கு அக்கூட்டத்திலுள்ள எல்லோரும் பிரதி ஸலாம் சொல்வது நல்லது. ஆனால், அக்கூட்டத்திலுள்ள ஒருவர் மட்டிலும் பிரதி சொல்லி, மற்றவர்கள் பிரதி சொல்லாதிருந்து விட்டாலும், பிரதி சொல்லவேண்டும் என்ற வாஜிபான கடமை நிறைவேறி விடும். இதுபோலவே பலர் வரும்போது அவர்களில் ஒருவர் ஸலாம் சொன்னாலும் அவர்கள் யாவரும் முதலாவதாக ஸலாம் சொல்லவேண்டிய சுன்னத்தான கடமை நிறைவேறிவிடும்.

ஸலாமுன் அலைக்கும் என்று ஸலாம் சொல்வது ஆகும். ஆனால், அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்வது மிகவும் ஏற்றமாகும். இதற்குப் பிரதி சொல்வதில் வஅலைக்கு முஸ்ஸலாம் என்று சொல்லவேண்டும். ஆனால், அலைக்கு முஸ்ஸலாம் என்று கூறினாலும் போதுமானது.

அஸ்ஸலாமு அலைக்கும் என்று ஸலாம் சொன்னால் வஅலைக்கு முஸ்ஸலாம் வறஹ்மத்துல்லாஹி என்று அதிகப்படுத்தி பிரதி ஸலாம் சொல்வதும், அஸ்ஸலாமு அலைக்கும் வ றஹ்மத்துல்லாஹி என்று முதலாவதாக ஸலாம் சொன்னால் வஅலைக்கு முஸ்ஸலாம் வ றஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹூ என்று அதிகப்படுத்தி ஸலாம் சொல்வதும், அஸ்ஸலாமு அலைக்கும் வ றஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹூ என்று அதிகப்படுத்தி முதலாவதாக ஸலாம் சொல்வதும், இதற்குப் பிரதி யுத்தரமாக வ அலைக்குமுஸ்ஸலாம் வ றஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹூ என்று கூறுவதும் ஆகும். இதனைப் பார்க்கினும் அதிகமாகச் சேர்த்துச் சொல்லவேண்டியதில்லை.

தக்வா வென்னும் தெய்வபக்தியுள்ளவர்களையும், 'ஆலிம்' உலமாக்கள், ஒலிமார்கள் ஆகியவர்களையும் சந்தித்தால் அவர்களுக்கு ஸலாம் சொல்வதுடன் அவர்களது கையைப்பிடித்து முஸாபஹாச் செய்வதும், அவர்களது முட்டுக்கால்களைக் கைகளால் தொட்டு முத்த மிடுவதும், பிரயாணம் சென்று திரும்பவருபவர்களை முஆனக்கா என்னும் ஆலிங்கனம்செய்து வரவேற்பதும் முஸ்தஹப்பு.

தும்மலும் கொட்டாவியும்.

தும்மல் வந்தால் தும்மி விட்டு அல்ஹம்து லில்லாஹ் என்று சொல்வது ஸுன்னத்து முஅக்கதா. இதனைச் செவியேற்றவர் யர்ஹமுகல்லாஹ் என்று பிரதி சொல்வது வாஜிபு. இவ்வாறு பிரதி சொன்னவருக்கு தும்மல்விட்டவர் கபரல்லாஹுலீ வலக்கும் என்றுவது, யஹ்தீக்கு முல்லாஹு வ யுஸ்லிஹுபாலக்கும் என்றுவது பிரதி சொல்வது முஸ்தஹப்பு.

அல்லாஹுத் தஆலா தும்மல் விடுவதை உவந்திருக்கிறுன். கொட்டாவி விடுவதை வெறுக்கிறுன். கொட்டாவி விட்டால் ஷைத்தான் சிரிப்பான் என்று வந்திருக்கிறது. ஆகையால், இயன்றவரை கொட்டாவி விடுவதைத் தடுத்துக்கொள்ளவேண்டும், அவ்வாறு கொட்டாவி விட்டாலும் அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் என்று சொல்லவேண்டும்.

தான் விரும்புவதையே பிறருக்கும் விரும்பவேண்டும்.

முஸ்லிமான ஒருவன் தனக்கு விருப்பமாக இருக்கிற ஒன்றையே தன் சகோதரனுகிய மற்றொரு முஸ்லிமுக்குக் கொடுக்கவோ சம்பவிக்கவோ விரும்பவேண்டும். தனக்கு விருப்பமில்லாத அல்லது வெறுப்பாக இருக்கிற ஒன்று, தன் சகோதரனை மற்றொரு முஸ்லிமுக்குச் சம்பவிக்கவோ கிடைக்கவோ விரும்பலாகாது. ஒரு லாபம் தனக்குக்கிடைப்பதை விரும்புவது போல தன் சகோதர முஸ்லிமுக்கும் லாபம் கிடைக்க விரும்பவேண்டும். தனக்கு லாபமும் தன் சகோதர முஸ்லிக்கு நஷ்டமும் கிடைக்க விரும்பலாகாது. தன்னைப் போலவே மன்னுயிரையும் கருதவேண்டும்,

பிறருக்குத் தொந்தரை செய்யலாகாது.

சகோதர முஸ்லிம் எவரையும் வேதனை செய்யவோ நோவினைச் செய்யவோ தொந்தரை செய்யவோ கூடாது. "எவர்து கையை

யும் நாவையும் விட்டு ஏனைய முஸ்லிம்கள் க்ஷேமமாக இருக்கிறார்களோ அவர்தான் உண்மை முஸ்லிம்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

தற்பெருமை கூடாது.

எவரையும் இகழ்வாக மதிக்கக்கூடாது. தாழ்மையாகவே இருக்கவேண்டும். மற்றவரைப்பார்க்கினும் தன்னை உயர்வாகக் கருதக்கூடாது. "எவரது இருதயத்தில் அணுவளவாவது ஈமானிருக்கிறதோ அவர் சுவர்க்கம் புகுவார். எவரது இருதயத்தில் அணுவத்தனை பெருமையிருக்கிறதோ அவர் சுவர்க்கம் புகாமல் நரகம் புகுவார்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. "எவர் தற்பெருமை கொள்கிறாரோ அவரை அல்லாஹ் தாழ்த்துவான்" என்பது நாயக வாக்கியம்.

கோட் சொல்லலாகாது.

பிறரிடம் சென்று கோள் சொல்லலாகாது. பிறர் கோள் சொன்னாலும் அதனைக் காதுதாழ்த்திக் கேட்கலாகாது. கோள் சொல்பவன் சுவர்க்கம்புகான்.

முஸ்லிம்களைப் பகைக்கலாகாது.

முஸ்லிமான எவரிடத்திலும் பகைமை கொள்ளலாகாது. ஒரு முஸ்லிமைக் கோபித்துக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும் அக்கோபத்திற்காக அவரை வெறுக்கவோ, பகைமைபாராட்டவோ, அதற்காக அவருடன் பேசாதிருக்கவோ கூடாது. பேசாதிருக்க நேர்ந்தாலும் மூன்று நாட்களுக்கு அதிகமாகப் பேசாமலிருக்கக் கூடாது. இவ்வாறு பேசாமலிருக்கிற நிலைமையில் மரித்தால் அவர் சுவர்க்கம் புகமாட்டார்.

உபகாரம் செய்பல்.

மதக் கொள்கை விஷயத்தில் ஏனைய முஸ்லிம்கள் தனக்கு சகோதரனாக இருப்பதால் தன்னாலியன்ற வரை முஸ்லிம்களுக்கு எவ்விதப் பாகுபாடுமின்றி உபகாரம் செய்யவேண்டும்.

பிறர் மனை எகல்.

பிறர் மனைக்குச் சென்றால் மனைக்குரியவர்களது உத்தரவு பெற்று உள்ளே செல்லவேண்டும். உத்தரவில்லாமல் உள்ளே பிர

வேசிக்கலாகாது. பிறர் வீடு சென்ருல் வெளியில் நின்று கொண்டு தனது வருகையைக் குறித்து அறிவிக்கவேண்டும். இவ்விதம் மூன்று முறை உத்தரவு கேட்கவேண்டும். தனது அறிவிப்பிற்குப்பதில் கிடைக்காவிட்டால் அல்லது அனுமதிக்க மறுத்தால் பேசாமல் திரும்பிவிடவேண்டும்.

கலந்துறவாடல்.

எல்லோருடனும் சங்கோஜமின்றி, நற்குண, நல்லொழுக்கத்துடன் கலந்துறவாடவேண்டும்.

பெரியோருக்கு மரியாதை.

அறிவாளர், படித்தவர், கல்வி கற்ருேர், வயோதிகர்கள் முதலியவர்களுக்கு மரியாதை செய்யவேண்டும். சிறுவர்கள் மீது பக்ஷமாக இருக்கவேண்டும். “நம்மிலுள்ள சிறுவர்கள் மீது கருணையாயில்லாமலும், நம்மிலுள்ள பெரியோர்களுக்குக் கண்ணியம் செய்யாமலும் இருப்பவர் நம்மைச் சேர்ந்தவரல்ல” என்பது ஹதீதின் கட்டளை.

கடுகடுத்து பேசலாகாது.

எவரிடம் பேசினும் கல்கலவென்று, அன்பாக, மதுர மொழி பேசவேண்டும். கடுகடுத்துப் பேசலாகாது.

வாக்குறுதி செய்யல்.

வாக்குறுதி செய்தால் அதனை நிறைவேற்றவேண்டும். வாக்குறுதியை நிறைவேற்றுவது மூமின்களது அடையாளம். வாக்குறுதிக்கு மாறு செய்வது முனபிக்குத் தன்மைகளிலொன்று.

நீதி பேசல்.

தனக்கானுலும் பிறருக்கானுலுஞ் சரி நீதியே பேசவேண்டும். நீதி பேசுவதால் தனக்கு நஷ்டம் வருவதாக இருந்தாலும் நீதி தவறலாகாது. ஒரஞ் சொல்லேல்.

கண்ணியவானைக் கனப்படுத்தல்.

உடையும் கோலமும் கண்ணியமான முறையிலிருக்கிற மனிதர்களைக் கனப்படுத்தவேண்டும். மனிதரது வெளிக்கோலத்தைத்தான் மனிதர் காணமுடியும். அகத்தைப்பார்க்க முடியாது. ஆகவே, கண்ணியமான தோற்றமுள்ளவர்களைக் கண்ணியப்படுத்தவே வேண்டும்.

இணக்கஞ்செயல்.

கோபமடைந்து பிரிந்திருக்கிற இருவரைச் சிநேகமாக்கி, அவர்களை இணைத்து வைக்கவேண்டும்.

குறை மறைத்தல்.

நபிமார்களும் மலக்குகளும் தான் பாபமற்றவர்கள். மற்றவர்கள் யாவரும் பாபமில்லாத பரிசுத்தவான்கள் என்று உறுதியாகக்கூறுவதற்கில்லை. ஆதலால், பிறரிடம் ஏதேனும் குறை இருக்கத்தான் செய்யும். அக்குறையைக் கண்டால் அதனைக் கூறிக் கேவலப்படுத்தலாகாது. தனக்குக் கீழுள்ளவர்களாயிருந்தால் அல்லது தன்னிடம் கோபமடையாதவர்களாயிருந்தால், அவர்களுக்கு அக்குறையைக் கூறிச்சீர்திருத்தலாம். ஆனல், கேவலப்படுத்தக் கூடிய முறையில் அதனை வெளியிடலாகாது.

சந்தேகத்திற் கிடங்கொடுக்கலாகாது.

தன் மீது பிறருக்குச் சந்தேகம் வரும்படியான காரியங்களைச் செய்யலாகாது. நியாயமாக நடந்தாலும் பிறருக்குச் சந்தேகம் வரும்படியாக இருந்தால் அதனைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். பிறருக்குச் சந்தேக முண்டாகுவதால் அநேக தீமைகள் உண்டாகுவதற்கு ஹேதுவாகும்.

ஜனஸாவிற்கு ஆயத்தஞ் செய்யல்.

ஒருவர் மரித்து விட்டால், அவரது உயிரற்ற உடலத்தை நல்லடக்கம் செய்வதற்கான முயற்சிகளைச் செய்து, துரிதமாக அடக்கஞ் செய்யவேண்டும்.

தேவையுள்ளோர்.

தேவையுள்ளவர்களுக்கு அவர்களது தேவையை இயன்றவரை நிறைவேற்றவேண்டும். தன்னலியலாததாக இருந்தால் அதனை நிறைவேற்ற, தக்கவரிடம் சிபார்ஷ் செய்யவேண்டும்.

பணக்காரர் ஏழைகள் அனுதைகள்.

பணக்காரர்களை வெறுக்கக் கூடாது. அவர்களுடனும் கலந்துறவாடவேண்டும். என்றாலும், சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படாத முறையில் நடந்து கொள்ளவேண்டும். ஏழைகளைத்

தள்ளலாகாது. அவர்களையும் ஆதரித்து இஷ்டப்படுத்தவேண்டும். "நாயனே! என்னை ஏழையாக ஜீவித்திருக்கச் செய், ஏழையாக மரிக்கச் செய், ஏழைகள் கூட்டத்தில் எழுப்பு வாயாக" என்பதாக நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்திருக்கிறார்கள். அநாதைகளை ஆதரிக்கவேண்டும். "அநாதைகளை ஆதரிப்பவரும் நானும் சுவர்க்கலோகத்தில் இவ்வாறிருப்போம்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் தங்களிரு விரல்களையும் இணைத்துக் காட்டி இருக்கிறார்கள்.

பிறருக்கு நற்புத்தி கூறல்.

பிறரிடம் ஒரு தீய குணத்தையோ கெட்ட பழக்கத்தையோ கண்டால் அதனைக் குறித்து அவர்களுக்கு நற்புத்தி புகட்டவேண்டும். அவ்வாறு செய்யாமல் தனது சுயகாரியத்தை மட்டிலும் கவனித்து, ஏனைய முஸ்லிம் சகோதரர்களின் தன்மைகளை அல்லது செய்கைகளை அலக்ஷியம் செய்திருக்கக்கூடாது.

அநியாயம் செய்வதை அகற்றவேண்டும்.

முஸ்லிம் சகோதரன் ஒருவனது சொத்தையோ அல்லது வம்சத்தையோ அல்லது ஸ்தூலத்திலோ ஒருவர் அநியாயம் செய்யக்கண்டால் அதனைத் தட்டி விலக்கவேண்டும். "ஒரு முஸ்லிம் தன்னுடைய சகோதர முஸ்லிம் ஒருவரைக் காப்பாற்றினால், அவரைக் கியாமத்து நாளில் காப்பாற்றும்படி ஒரு மலக்கை அல்லாஹுத் தஆலா அனுப்புவான்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

فصل في سنن الاسلام

பஸ்லுன் பீ ஸுனனில் இஸ்லாம்.

எப்பொழுதும் அல்லாஹுத் தஆலாவினிடம் பிழை பொறுக்கத்தேடவேண்டும். அவனிடம் அடிக்கடி துஆக் கேட்டுக்கொண்டே இருத்தல், ஆஷூரா நாளைக் கனப்படுத்தல், நோயாளிகளிடம்சென்று அவர்களை விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் தேறுதல் கூறல், கெட்டித்துணிகளை அணிதல், தற்பெருமை யுண்

டாக இடங்கொடாமலும், தாழ்மையுண்டாகவும் வேண்டி; சமயா சமயத்தில் பாதரக்ஷையில்லாமல் வெறுங்காலால் நடத்தல், இல்லாத முஸ்லிம் சகோதரர்களுக்கு செருப்பு, மேஜோடு முதலியவைகளைக் கொடுத்துதவுதல், தன்னிடத்திலுள்ள உணவில் ஏழை முஸ்லிம்களையும் சேர்த்துக்கொள்ளல், பீஸபீல் செய்தல், விருந்தளித்தல், தன்னிடம் பேட்டி காணவந்தவர்களுக்குத் தக்க மரியாதை செய்தல், அவர்களுக்கு உபசரித்தல் முதலியவைகள் சுன்னத்துகளாகும்.

தன்னைக் கண்டு கொள்ள வந்தவர்களை உபசரித்தல்.

தன்னைக் கண்டு கொள்வதற்காக வந்தவர்களுக்கு மரியாதை செய்து உபசரிக்கவேண்டும். அவ்வுபசாரத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடாது. அவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுப்பது முஸ்லிமுடைய உரிமையைத் அவமதிப்பதாக இருக்கிறது. ஆதலால், உபசாரத்தை அங்கீகரிப்பது வாஜிபு. “பால், எண்ணெய், தலையணை இம்மூன்றையும் ஏற்றுக்கொள்ள மறுப்பது கூடாது” என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆதலால், அவைகளை அங்கீகரிக்கவேண்டும். பால் கொடுக்கப்பட்டால் அதனை அருந்திவிட வேண்டும். எண்ணெய் கொடுக்கப்பட்டால் அதனை முடியில் தடவிக்கொள்ளவேண்டும். தலையணை அல்லது திண்டு அல்லது உட்காரக்கூடிய மெத்தைத் தலையணை கொடுக்கப்பட்டால் அதன் மீது சாய்ந்து கொள்ளவேண்டும். அல்லது அமர்ந்துகொள்ள வேண்டும். ஆனால், தனக்கு உபசாரம் செய்பவர்கள் தன்னைப் பார்க்கினும் சிறந்தவர்களாக இருந்தால் தலையணை திண்டு முதலியவைகளை வாங்கிக்கொண்டு அதில் சாய்ந்து கொள்ளாமலும், அமராமலும் இருந்துகொள்ளலாம்.

இருவரில் ஒருவர் க்ஷேமலாபங்களை விசாரித்தால் அதாவது எப்படி இருக்கிறீர்கள்? உங்களது க்ஷேமலாபமென்ன வென்று கேட்டால் “மூமினாக இருக்கிறேன். க்ஷேமமாக இருக்கிறேன். சகல புகழும் அல்லாஹ்விற்கே தகும்” என்று பதில் கூறவேண்டும். தன்னிடமுள்ள உணவையோ அல்லது பானத்தையோ தன்னைப்பார்க்க வந்தவர்களுக்கு அளிக்கவேண்டும். தன்னிடமில்லாத ஒன்றை அவர்களுக்குக் கொடுக்கமுடியவில்லையே என்று நினைத்துக் கவலை கொள்ளலாகாது.

விருந்தோம்பல்.

விருந்தளித்தல் சுன்னத்து முஅக்கதாவில் மிகக்கெட்டியான சுன்னத்து. வாஜிபுக்கு நெருங்கியது. எனவே, தன் சகோதரர்களது இருதயங்கள் தன் மீது அன்புள்ளதாக இருக்கவேண்டுமென்பதையும், அவர்களைக் கண்ணியப்படுத்துவதையும், அவர்களைச் சந்தோஷப் படுத்துவதையும், சுன்னத்தை நிறைவேற்றுவதையும் நிய்யத்துச் செய்து விருந்தளிக்கவேண்டும். பெருமைக்காகவோ, தாட்சண்யத்திற்காகவோ, கீர்த்திக்காகவோ, பிரதி உபகாரமாகவோ விருந்தளிக்கக்கூடாது.

விருந்தளிப்பதில் முதன்மையானவர் ஹஜ்றத் இப்ராஹீம் கலீலுல்லாஹி அலைஹிஸ்ஸலாம் அவர்களாவர். அவர்களுக்கு விருந்தாளிகளின் தந்தை என்ற ஒரு சிறப்புப் பெயருமுண்டு. தக்வாவுள்ள மூமின்களுக்கு விருந்தளிக்கவேண்டும். தன்னிடத்திலுள்ள வஸ்துவை அருந்த தன்னைப் பார்க்கினும் தனது விருந்தாளிக்கு முதன்மை யுரிமை அளிக்கவேண்டும். விருந்தாளிகளைத் தானே நேர் முகமாக உபசரிக்கவேண்டும். இவர்களுக்கு உபகாரம் செய்வதைத் தன் வீட்டிலுள்ளவர்களிடம் ஒப்படைக்கக்கூடாது. தன்னிடமுள்ள அபூர்வமான வஸ்துக்களை முதலாவதாக விருந்தாளிகளுக்குக் கொடுக்கவேண்டும். விருந்தாளிகள் சொற்பமாக இருந்தால் அவர்களுடன் சேர்ந்து உணவருந்தலாம். அவர்கள் அதிகமாக இருந்தால் அவர்களுடன் சேர்ந்து உணவருந்தாமல் அவர்களுக்குப் போஜனம் கொண்டு வருதல் முதலிய காரியங்களைச்செய்து அவர்களை உபசரிக்கவேண்டும்.

கல்வியால் அல்லது வயதால் முதிர்ந்தவர்களுக்கு 'முதலாவதாகப் பதார்த்தங்களைக்கொடுக்கவேண்டும். அவர்களுக்குத் தன் கையினால் ஜலம் வார்த்து கை கழுவிக்கவேண்டும். விருந்தினரை நோக்கி, சாப்பிட்டு விட்டீர்களா? இன்னமும் கொண்டு வரவா? என்று கேட்காமல் உணவுப் பதார்த்தங்களை அவர்கள் முன் கொண்டு வந்து வைக்கவேண்டும். அவர்கள் அருந்தியதுபோக மீத மிருப்பவைகளை எடுத்துக் கொண்டுபோகவேண்டும். விருந்தளிப்பதற்காகக் கடன் வாங்கவோ, குழந்தைகளுக்கென வைத்திருப்பவைகளைக் கொடுக்கவோ, தனக்கு சந்தோஷமல்லாததைக் கொடுத்து விருந்தளிப்பதற்காகச் சிரமப்படவோ கூடாது.

அந்நியருக்கு விருந்தளித்தால் பந்துக்களையும் நல்லோர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். விருந்ினரை அனுப்பும்போது வாசல்வரை உடன்சென்று, அவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களில் குறைவு செய்ததாக எண்ணி, அவர்களை விட்டுப் பிரியும்போது அவர்களை நோக்கி "என் விருந்தை ஏற்று என்னைக் கனப்படுத்தினீர்கள். அல்லாஹுத் தஆலா தங்களுக்கு நன்மையை அருளுவானாக" என்று பிரார்த்திக்கவேண்டும். விருந்தினரை அழைத்துக்கொண்டு வீட்டினுட்செல்லும்போது முதலாவதாகத்தான் செல்லவேண்டும். விருந்தினரை அனுப்பும்போது விருந்தினர் முன்னும் வீட்டுக்காரர் பின்னுமாக வெளியில் வரவேண்டும். விருந்தினரிலிருந்து பிரதி உபகாரத்தையோ புகழையோ எதிர்ப்பார்க்கலாகாது.

விருந்தினர்.

விருந்துணவருந்தும்போது காய்ந்த மாடு கம்பில் விழுந்தாற்போல் உணவுகளை அவசரமாக அருந்தாமல், ஆற அமரச்சாவதானமாக உணவருந்தவேண்டும். விருந்தளிப்பவர் இருக்கச் சொன்ன இடத்தில் அமர்ந்து, அவ்விட்டில் அசூயை செய்யாமலிருக்க வேண்டும். அல்லாஹுத் தஆலா ஹறாமாக்கியதைத் தவிர்த்து, அவனது வீட்டுக்காரியத்தில் எதனைக் குறித்தும் வினவாமலும், அவ்வீட்டில் அங்குமிங்கும் திரும்பிப்பார்க்காமலும், விருந்தளிப்பவருக்குச் சிரமத்தைக் கொடுக்காமலுமிருக்கவேண்டும். அவ்வீட்டிலுள்ள எவ்வஸ்துவின் மீதும் தனக்குள்ள விருப்பத்தைக் காட்டிக்கொள்ளாமல், தனக்கு முன் வைக்கப்பட்ட உணவுப் பதார்த்தத்தைக் குறித்துக் குறை கூறாமல், தன் வீட்டில் உணவருந்துவதுபோல சங்கோஜ மின்றி உண்ணவேண்டும். பால், மணம், தலையணை, ஜம் ஜம் ஜலம் ஆகியவைகள் கொடுக்கப்பட்டால் அவைகளை மறுக்காமல் அங்கீகரிக்கவேண்டும்.

உணவுப் பதார்த்தங்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தாலும் வீட்டுக்காரர் அனுமதியில்லாமல் அல்லது அவருக்குத் தெரியாத முறையில் அதனை அருந்தக் கை வைக்கலாகாது. உணவருந்தியபின் விருந்தளித்தவருக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அனாவசியமாக, அவ்வீட்டில் தாமதித்திருக்காமல் வெளியில் வந்துவிடவேண்டும்.

உணவருந்தும் முறை.

உணவருந்துவதன் மூலம் இன்பமான பதார்த்தங்களை அனுபவிப்பதாக நிய்யத்துச் செய்யாமல் இறைவனை வணங்குவதற்காக உடம்பில் பல முண்டாகவேண்டும் என்ற நிய்யத்துடன் உணவருந்தவேண்டும். போஜனத்திற்கு முன் இருக்கும்போது மரியாதையாக ஒழுங்காக வலக்காலை நட்டி வைத்து இடக்காலின் மீது அமர்ந்து, போஜன விரிப்பின் (ஸுப்றாவின்) மீது பதார்த்தங்களை வைத்து, சிந்தாமல் தனக்கு முன்னுலிருந்து எடுத்துப் புசிக்க வேண்டும். வேறொன்றின் மீது சாய்ந்து கொண்டோ, கையைக் கீழே ஊன்றிக் கொண்டோ சாப்பிடலாகாது. போஜனத்தட்டையின் மத்தியிலிருந்தோ அல்லது ரொட்டியின் நடுவிலிருந்தோ எடுத்துப் புசிக்கக்கூடாது. பாதரக்ஷைகளை அணிந்துகொண்டு புசிக்கக் கூடாது. போஜனமருந்திய பின் "நாயனே! இதனை உனது வழிப்பாட்டிற்கு உதவியாக ஆக்குவாயாக. உனக்கு மாறு செய்ய இதனை உதவியாக ஆக்கவேண்டாம்" என்று பிரார்த்திக்கவேண்டும். பாலல்லாத பதார்த்தங்களாக இருந்தால் "நாயனே! இதில் எங்களுக்குப் பரக்கத்தை அருளுவாயாக. இதனைப் பார்க்கினும் மேலானதை எங்களுக்கு உண்பிப்பாயாக" என்றும், போஜனபதார்த்தம் பாலாக இருந்தால் "நாயனே! எங்களுக்கு நீ அளித்ததில் எங்களுக்கு பரக்கத்தைக் கொடு. இன்னும் இதனை எங்களுக்கு அதிகமாகத் தந்தருள்" என்றும் பிரார்த்திக்கவேண்டும்.

சாப்பிட ஆரம்பிக்கும்போது பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்ரஹீம் என்று சொல்லி ஆரம்பிக்கவேண்டும். இதனைக் கூற மறந்துவிட்டால் ஞாபகம் வந்தவுடன் பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹு என்று கூற வேண்டும். வாய்கொள்ளாமல் சாதத்தை எடுத்துக்கொள்ளாமல், கொஞ்சங்கொஞ்சமாக எடுத்துச் சாப்பிடுவதுடன், நன்முக மென்று தின்னவேண்டும். சாப்பாட்டுடன் கீரையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். சூடான ஆகாரத்தை எடுத்து வாயில்போட்டுக்கொண்டு, பதரப்பதரச் சாப்பிடாமல் ஆறவிட்டுச் சாப்பிடவேண்டும். துஷ்டர்களுடன் சேர்ந்து சாப்பிடாமல் படித்தவர்கள் நல்லோர்களுடன் சேர்ந்து சாப்பிட வேண்டும்.

காலை போஜனத்தை கூடியவரை துஹர்வுடைய நேரத்திற்கு முன்னதாகவே முடித்துக்கொள்ளவேண்டும். போஜன விரிப்பில் விழுந்த ஆகாரத்தை முதலாவதாக எடுத்தருந்தவேண்டும். சாப்பிட்ட பிறகும் சாப்பிடுவதற்கு முன்னும் கொஞ்சம் உப்பைத் தின்று கொள்வது பல நோய்களைத் தடுத்துக் கொள்ளும். சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் இருகைகளையும் மணிக்கட்டுவரையில் கழுவிக்கொள்வதும், வலக்கரத்தால் சாப்பிடுவதும், சாப்பிட்ட பின்பு விரல்களைச் சூப்பிக்கொண்டு, போஜனம் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தை விரல்களால் துடைத்துச் சாப்பிடவும் வேண்டும், அல்லது கழுவிக் குடிக்கவும் வேண்டும். சாப்பிட்ட பிறகு வாயை நன்ருய்க்கொப்பளித்து பற்களுக்கிடையில் சிக்கி இருப்பதை குச்சியால் வெளிப்படுத்தி வாயைச் சுத்தம்செய்யவேண்டும்.

சாப்பிட்ட பிறகு எனக்கு இதனை உண்பித்து, எவ்விதச் சிரமமுமின்றி எனக்கிதை யளித்த அல்லாஹுத் தஆலாவிற்கே எல்லாப்புகழும் தகும் என்று இறைவனைப் புகழ்ந்து குல்ஹுவல்லாஹ், லீ இலாபி குறைஷ், ஸூறத்துல் பாத்திஹா ஆகிய மூன்று ஸூறத்துகளையும் ஓதிப்பிறகு ஜலமருந்தவேண்டும். ஜலமருந்தும் போது பிஸ்மில்லாச் சொல்லி ஜலமருந்தவேண்டும். ஒரே மூச்சில் ஜலத்தை அருந்தாமல் மூன்று முறையேனும் வாயை விட்டெடுத்து எடுத்துக் குடிக்கவேண்டும். ஜலத்தினுள் மூச்சை விடலாகாது. ஜலத்தை உறிஞ்சிக் குடிக்கக்கூடாது. கொஞ்சங் கொஞ்சமாகக்குடிக்கவேண்டும். இதனால் ஜீரணசக்தி அதிக மேற்படுகிறது. தேத்தண்ணீர், காப்பி அல்லது வெந்நீர் போன்ற பானம் அதிக சூடாக இருந்தால் வாயினால் ஊதாமல், உட்கார்ந்து அருந்தவேண்டும். நின்று கொண்டு அல்லது படுத்துக்கொண்டு அருந்தலாகாது. உணவருந்திக்கொண்டோ ஒரு பதார்த்தத்தைப் புசித்துக் கொண்டோ இருக்கும்போது இடையில் ஜலமருந்தக் கூடாது. விக்கல் வரட்சிபோன்றவைகளுண்டானல் அதனைத் தடுப்பதற்காக அருந்தலாம். சாப்பிடுவதற்கு முதலிலும் ஜலமருந்தக்கூடாது. தாகம் அதிகமாக இருந்தால் முதலாவதாகக் கொஞ்சம் சாதம் அல்லது பதார்த்தத்தைப் புசித்துவிட்டு அப்புறம் ஜலமருந்தவேண்டும். நமது நாட்டில் விருந்துண்டு விட்டு

அல்லாஹும் மஃபிர் லி ஸாஹிபி ஹாதத் தஆமி வற்ஜுக்ஹு மினல் ஹலாலி வஜன்னிப்ஹு மினல் ஹறாமி வ தம்மிம் நிய்யத் தஹு வ தகப்பல் லியாபத்தஹு வஷ்பி மர்லாஹு வர்ஹம் மௌத்தாஹு மஅல்ஆக்கிலீன அல்லாஹும்ம ஜித்ஹு வ லா தன்குஸ்ஹு வ இன் தஉத்தூ நிஃமத்தல்லாஹி லா துஹ்ஸூஹா இன்னல்லாஹ ல கபூருர் ரஹீம்.

அதாவது: "நாயனே! இந்த உணவுக்குரியவருக்குப் பாப மன்னிப்புச் செய்வாயாக. அவருக்கு ஹலாலான உணவை அளிப் பாயாக. ஹறாமான உணவை விட்டுக் காப்பாயாக. அவரது எண்ணத்தைப் பூர்த்தி செய். அவரது விருந்தை அங்கீகரித் தருள். அவரது நோயாளிகளைக் குணப்படுத்து, உணவருந்துபவர் களுடன் அவரில் மரித்தவர்களுக்குக் கிருபை செய். நாயனே! இதனை அவருக்கு அதிகப்படுத்து. அவருக்குக் குறைத்துவிடாதே. மேலும், அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணிப்பீர் களானல் அவைகளை நீங்கள் கணித்துவிடமுடியாது. நிச்சயமாக அல்லாஹ் பிழை பொறுப்பவன் கிருபை செய்பவன்" என்று பிரார்த்திப்பது வழக்கம்.

பாத்திஹாச் சொல்லி அல்ஹம்து, குல்ஹுவல்லாஹு முதலிய ஸூறத்துகளை ஓதி அப்புறம் மேற்கண்ட துஆவை ஓதுவதும் வழக்கமுண்டு. பாத்திஹா ஸூறத்துகளை ஓதாமல் துஆவை மட்டிலும் ஓதுவதும் வழக்கம். இந்த துஆவையே ஓதவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை, தனக்குத் தெரிந்த வேறு துஆக்களையும் ஓதலாம்.

فصل في بيان سنن الهدى وسنن الزوائد

பஸ்லுன் பீ பயானி ஸுனனில் ஹுதா வ ஸுனனிஸ் ஸவாயிதி.

இருவகை ஸுன்னத்துகளையும் பற்றிய விபரம்.

ஸுன்னத்து என்பதற்கு வழி, முறை என்பது பொருள். இஸ்லாம் மார்க்கத்தின் திரு நபியாகிய முஹம்மது (ஸல்) அவர்களும், அவர்களுக்குப்பின் குலபாயே ராஷிதீன்களும் செய்து வந்த காரியங்களுக்கு சன்மார்க்கத்தின் ஸுன்னத்து என்று பெயர். இது இரண்டுவகை. நாயகம் (ஸல்) அவர்களோ, குல

பாயே ராஷிதீன்களோ ஒருபோதும் விடாமல் செய்து வந்த காரியங்களுக்கு ஸுன்னுல் ஹுதா, ஸுன்னத்து முஅக்கதா அதாவது பலவந்தமான ஸுன்னத்துகள் என்று பெயர். இமாம் ஜமாஅத்தாகத் தொழுதல், பாங்கு சொல்லல், இக்காமத்துச் சொல்லல், கத்னுச்செய்தல், மிஸ்வாக்குச் செய்தல், ஒலுச் செய்யும்போது வாய் கொப்பளித்தல், நாசிக்கு நீர் செலுத்தி சுத்தஞ் செய்தல் முதலியவைகள் இவ்வகையைச் சேர்ந்தவைகளாகும்.

சிற்சில சமயங்களில் விட்டு விட்டுச் செய்து வந்த காரியங்களுக்கு ஸுன்னுஸ்ஸவாயித் அதாவது பலவந்தமில்லாத ஸுன்னத்துகள் என்று பெயர். உட்காருதல், எழுந்திருந்தல், உடையணியுதல், செருப்பணிதல், சீவுதல் போன்றவைகளில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்து வந்த காரியங்கள். இவைகளுக்கு ஆதத் என்னும் பழக்க வழக்கங்கள் என்றும் பெயர் கூறப்படும். இவைகள் முஸ்தஹப்பைப் பார்க்கினும் மேலானவை. பலவந்தமான ஸுன்னத்துகளாகிய ஸுன்னுல்ஹுதாவைப் பார்க்கினும் தாழ்ந்தவை. இவைகளையும் முஸ்தஹப்புகளையும் செய்யாமல் விடுவதால் மக்றூஹு ஏற்படாது. கிலாபுல் ஔலா அதாவது ஏற்றத்திற்கு மாற்றம் ஏற்படும். எனவே, ஒலுச் செய்தல், தயம்மம் செய்தல், ஸ்நானம் செய்தல், உடையுடுத்துதல், பாதரக்ஷை யணிதல், மேஜோடு போடல், கால்சராய் அணிதல், மஸ்ஜிதினுள் பிரவேசித்தல், மிஸ்வாக்குச் செய்தல், கண்களுக்கு சுர்மா இடுதல், நகம் வெட்டுதல், தலை க்ஷவரம் செய்தல், தொழுகையின் முடிவில் ஸலாம் கொடுத்தல், உண்வருந்தல், பானம் பருகல், முஸாபஹாச் செய்தல், ஹஜ்றுல் அஸ்வதை முத்தமிடல், கக்கூஸிலிருந்து வெளிவரல், எடுத்தல் கொடுத்தல் போன்ற காரியங்களில் வலப்புற மிருந்து ஆரம்பித்தல் வலக்கரத்தால் செய்தல்போன்ற காரியங்களும், இவைகளுக்கு மாறுன காரியங்களை இடப்புற மிருந்து செய்யத் தொடங்குவதும் • இடக்கையால் செய்வதும் ஸுன்னுஸ் ஸவாயிதைச் சேர்ந்தவைகளாகும்.

மூக்கிலிருக்கும் சளியைச் சிந்துதல், கக்கூசிற்குள் செல்லல், மஸ்ஜிதிலிருந்து வெளியில் வரல், பாதரக்ஷை, மேஜோடு, கால் சராய் முதலியவைகளைக் கழற்றுதல், மலஜல உபாதைகளுக்

கிருந்து விட்டுச் சுத்தஞ்செய்தல் போன்ற காரியங்களை இடக்கரத்தால் செய்தல், இடப்புறமிருந்து செய்தல் ஸுனனுஸ் ஸவாயிதைச் சேர்ந்தவைகளாகும்.

மஸ்ஜிதினுட் பிரவேசித்தல்.

மஸ்ஜிதினுட் செல்லவிரும்பினால்

اعوذ بالله العظيم وبوجهه الكريم وسلطانه القديم
من الشيطان الرجيم

அஊது பில்லாஹில் அளீம் வ பி வஜ்ஹி ஹில்கரீம் வ ஸுல்தானி ஹில் கதீம் மினஷ் ஷைத்தானிர் ரஜீம் (அதாவது: வல்லமையுள்ள அல்லாஹ்வையும், சங்கையான அவனது முகத்தையும், அநாதியான அவனது அதிகாரத்தையும்கொண்டு எடுத்தெரியப்பட்ட ஷைத்தானை விட்டுக் காவல் தேடுகிறேன்) என்று கூறிச் செல்ல வேண்டும். மஸ்ஜிதினுட் செல்லும்போது வலக்காலை முன் வைத்து,

بسم الله والسلام على رسول الله اللهم صل على محمد وعلى
ال محمد اللهم اغفرلي ذنوبى وافتح لي ابواب رحمتك

பிஸ்மில்லாஹி வஸ்ஸலாமு அலா றஸூலில்லாஹி அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் அல்லாஹும். மஃபிர்லீ துனூபீ வப்தஹ்லீ அப்வாப றஹ்மத்திக்க (அதாவது:— அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு பிரவேசிக்கிறேன். ஸலாம் அல்லாஹ்வின் றஸூலுக்குண்டாவதாக. நாயனே! முஹம்மதின் மீதும், முஹம்மதுடைய கிளையார் மீதும் கருணைபுரிவாயாக. நாயனே! என்பாவங்களை எனக்கு மன்னிப்பாயாக. உனது கிருபையுடைய வாசல்களை எனக்குத்திறப்பாயாக) என்று கூறிச் செல்லவேண்டும்.

மஸ்ஜிதை விட்டு வெளியில் வரும்போது,

بسم الله واسلام على رسول الله اللهم صل على محمد وعلى
ال محمد اللهم اغفرلي ذنوبي وافتح لي ابواب فضلك

பிஸ்மில்லாஹி வஸ்ஸலாமு அலா றஸூலில்லாஹி அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் அல்லாஹும் மஃபிர்லீ துனூபீ வப்தஹ்லீ அப்வாப பழ்லிக்க. (அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு வெளியில் வருகிறேன். ஸலாம் அல்லாஹ்

வின் றஸூலுக்குண்டாவதாக. நாயனே! முஹம்மதின் மீதும், முஹம்மதின் கிளையார் மீதும் கருணைபுரிவாயாக. நாயனே! என் பாவங்களை எனக்கு மன்னிப்பாயாக. உனது கடாக்ஷங்களின் வாசல்களை எனக்குத் திறப்பாயாக) என்று ஓதவேண்டும்.

மஸ்ஜிதில் அல்லது வீட்டில் பிரவேசிக்கும்போது அங்கு ஒருவருமில்லாதிருந்தால் السلام علينا وعلى عباد الله الصالحين அஸ்ஸலாமு அலைனா வ அலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் (ஈடேற்றம் எங்கள் மீதும், நல்லோர்களான அல்லாஹ்வின் அடியார்கள் மீதும் உண்டாவதாக) என்று ஸலாம் சொல்லவேண்டும். இந்த ஸலாமுக்கு மலக்குகள் பதில் ஸலாம் சொல்வார்கள். மஸ்ஜிதினுள் யாராவதிருந்தால் அவர்களுக்கு ஸலாம் சொல்லவேண்டும். ஆனால், அவர்கள் தொழுது கொண்டிருந்தால் ஸலாம் சொல்லக்கூடாது. பிறர் வீட்டினுள் செல்வதாயின் முதலாவதாக உத்தரவு பெற்றுக் கொண்டு செல்வது வாஜிபு. உள்ளே சென்றதும் ஸலாம் சொல்ல வேண்டும். அப்புறம்தான் வேறு பேச்சுக்களைப் பேசவேண்டும்.

உடை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெள்ளை உடையை மிகவும் நேசித்தார்கள். சிற்சில நேரங்களில் பச்சை உடையையும் கம்பளியையும் அணிந்திருக்கிறார்கள். சிவப்பு அல்லது பச்சை அல்லது ஊதாக்கோடுகளுள்ள புர்து என்னும் அங்கவஸ்திரம் அவர்களுக்கு பிரியமாக இருந்தது.

அறையில் கட்டிக் கொள்ளும் துணி கெட்டியாக இருக்க வேண்டும். "மிகவும் மெல்லினமான துணியை அணிபவரின் மார்க்க பக்தியும் மெல்லியதாகிவிடும்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. நன்றாகப் பழையதாகும் வரை உடையை அணிந்து, அப்புறம் அதனை ஏழைகளுக்கு கொடுத்து விடவேண்டும். வெட்கஸ்தலங்களை மறைப்பதையும் முஸ்லிம்களுக்கு அறுவறுப் புண்டாகாமலிருப்பதற்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்வதையும் உடையணியும்போது நிய்யத்துச் செய்யவேண்டும். உடையணியும் போது பிஸ்மில்லாவை ஓதி ஆரம்பித்து, அல்லாஹ்வைப்புகழ்வதைக் கொண்டு முடிக்கவேண்டும்.

கால்களின் கரண்டைகளை மறைத்து, தெருவில் நடக்கும் போது, தெருவிலுள்ள குப்பை கூழங்களைப் பெருக்கிக் கொண்டு போகும்படி பாதம் மறைய உடுத்தலாகாது. கரண்டை மொழிக்கு மேலேயே உடை யிருக்கவேண்டும். சட்டையை முதலாவதாக அணிவது ஏற்றமானது. நபிகள் நாயகம்(ஸல்)அவர்களது சட்டைக் கைகள் நீளமாக இருக்கும். சிற்சில சமயங்களில் குட்டையான கைகளையுள்ள சட்டையையும் அணிவார்கள்.

தலைப்பாகை அணிவதால் கண்ணிய முண்டாகும், அமரிக்கையான தன்மையுமுண்டாகும். தலைப்பாகையில் ஷம்லாவிட்டுக்கட்ட வேண்டும். அதாவது அதன் ஒருபுறம் முதுகில், இருபுயங்களுக்கு மிடையில் தொங்க விடவேண்டும். புயத்தின் பக்கமாகத் தொங்க விடுவதும் ஆகும். ஷம்லா ஒரு சாண் நீள மிருக்கவேண்டும். நின்று கொண்டு தலைப்பாகை கட்டவேண்டும். உட்கார்ந்து கொண்டு கால் சராய் அணியவேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெள்ளிக் கிழமைப் பகலில் புது உடை அணிவது வழக்கம்.

வெளியிற் செல்லல்'பாதரக்ஷையணிதல்.

வீட்டை விட்டு வெளியிற் சென்றால் ஆயத்துல் குர்ஸீ ஓதிக் கொள்ளவும். நடக்கும்போது அங்கும் இங்கும் திரும்பிப் பார்க்காமல் தலை கவிழ்ந்து, தன் அலுவலையே கருத்தாகக் கொண்டு விரைவாகச் செல்லவேண்டும். பெருமையாக நடக்கலாகாது. இரண்டு ஸ்திரீகளுக்குமிடையில் செல்லலாகாது. பாதையின் இருமருங்குகளில் ஸ்திரீகள் நடப்பார்களாதலால், அப்புறங்களில் நடக்காமல் நடு வழியில் நடக்கவேண்டும். ரஸ்தாவில் முள் ஆணிபோன்ற மனிதருக்கு தீங்குசெய்யும் வஸ்துக்களிருந்தால் அவைகளை அகற்ற வேண்டும். கடைத்தெருக்களில் காரணமின்றி உட்காரலாகாது. மஞ்சள் நிறமுள்ள செருப்பு, ஜூத்தா ஆகியவைகளை அணிவது சந்தோஷத்தைக் கொடுக்கும். மஸ்ஜிதிலானாலுஞ்சரி வேறிடங்களிலானாலுஞ் சரி பாதரக்ஷைகளை வைத்துக்கொள்வதற்குப் பிரத்தியேகமாக இடம் ஒதுக்கி வைக்கப்படாதிருந்தால் தன் அண்டையிலேயே வைத்துக் கொள்ளவேண்டும். திரும்ப வீட்டிற்கு வந்தால் ஸூறத்துல் பாத்திஹா, இக்லாஸ், ஆயத்துல் குர்ஸீ இம்மூன்றையும் ஓதவேண்டும்.

பேச்சு.

அனுவசியமாகப் பேசக்கூடாது. நாவை அடக்கி மௌனமாக இருப்பதால் பல தொந்தரைகள் ஏற்படுவதை விட்டுத்தவிர்த்துக்கொள்ளலாம். அவசியத்திற்குத் தக்கவாறு பேசவேண்டும். ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக்(றஸி) அவர்கள் தொழுகை, உணவருந்தல், நித்திரைசெய்யும் காலம் ஆகிய நேரங்களை தவிர்த்து மற்றையகாலங்களில் கல்லைப்போட்டுக் கொண்டே இருப்பார்கள். அனுவசியமாகப் பேசுவதை விட்டுத் தம்மைக் காத்துக் கொள்வதற்காகவே இப்படிச் செய்துவந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாக மௌனமாகவே இருப்பார்கள். பேசவிரும்பினுல் நன்மையான பேச்சாயிருந்தால் பேசுவார்கள்.

முதியோர்கள் கற்ருேர்களிருக்கும்போது அவர்களுக்கு முதலில் பேசக்கூடாது. சப்தமில்லாமல் நிறுத்தி நிறுத்திப்பேசவேண்டும்.

நித்திரை செய்யல்.

ஒலுவுடன் நித்திரைக்குச் செல்லவேண்டும். படுக்கு முன் ஆயத்துல் குர்ஸீ, ஸூறத்துல் இக்லாஸ், ஸூறத்துல் பலக், ஸூறத்துன்னுஸ் இவைகளை ஒதிக் கையில் ஊதி, தலை, முகம் முதல் உடலெல்லாம் தடவிக் கொள்ளவேண்டும். கண்ணில் சுர்மா இட்டுக்கொள்ளவேண்டும். சுர்மா இடுவதால் கண் வியாதிகள் பல நீங்குகின்றன.

படுக்கைக்குப் பக்கத்தில் ஜலமும் மிஸ்வாக்கும் தயாராக இருக்கவேண்டும். தஹஜ்ஜத்துத் தொழுவதற்காக எழுந்திருக்க வேண்டும். தஹஜ்ஜத்துத் தொழுவதற்காக எழுந்திருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் படுக்கவேண்டும். நித்திரையிலிருந்து முழிக்குந்தோறெல்லாம் மிஸ்வாக்குச் செய்வதும், படுக்கப் போகும்போது தௌபா இஸ்திஃபார் செய்வதும், இஷாவிற்குப் பின் உலகசம்பந்தமான பேச்சுக்களைப் பேசாமலிருப்பதும், மார்க்க சம்பந்தமான முக்கியமான பேச்சுக்களைத் தவிர்த்து வேறு பேச்சுக்களைப் பேசாதிருப்பதும் வேண்டும்.

படுக்கையின் விரிப்பு மிருதுவானதாக இல்லாதிருப்பது நல்லது. அவ்வாறிருந்தால் சோம்பலுண்டாகி இறைவனை வணங்க இடைஞ்சலேற்படும். ஒரேவிதமான விரிப்பில் எப்பொழுதும் படுக்காமல் பாய், வெற்றரை முதலிய எல்லாவற்றிலும் படுத்துறங் கப்பழகிக்கொள்ளவேண்டும். படுப்பதற்கு முன் படுக்கையைத் தட்டிக்கொள்வது நல்லது. படுக்கையில் வலக்கையைக் கன்னத் திற்குக் கீழில் தலையணையாக வைத்து வலப்பக்கம் சாய்ந்து கிப் லாவை நோக்கிக் கொஞ்சநேரம்படுத்திருந்து அப்புறம் இடப்பக் கம் திரும்பிப் படுத்துக்கொண்டு, நித்திரை வரும்வரை அல்லா ஹுத் தஆலாவை திக்ரு செய்துகொண்டே இருக்கவேண்டும். நித்திரையிலிருந்து எழுந்தவுடன் அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து, அவனது பாபமன்னிப்புக்கும் றஹ்மத்துக்கும் பிரார்த் திக்கவேண்டும். இவ்விதமாக எழுந்தவுடன் கேட்கும் பிரார்த் தனை இறைவனை அங்கீகரிக்கப்படும் என்று பெரியார்கள் கூறு கிறார்கள். தன்னந்தனியே நித்திரை செய்யலாகாது. வாசற் படியின் மீதும், துற்நாற்றமுள்ள சமயத்திலும், சுற்றுக்கட்டில் லாத மெத்தையின் மீதும், கதவு அல்லது திரையில்லாத வீட்டி லும், ஸுப்ஹுக்குப் பிறகும், அஸறுக்குப் பிறகும் நித்திரை செய்வது மக்றூஹு.

பஜ்றுக்குப் பிறகு நித்திரை செய்வது ஞாபகச்சக்திக் குறை வையும், ளுஹர்வுடைய நேரத்திற்குப் பிறகு நித்திரை செய்வது தரித்திரத்தையும், உச்சிப்பொழுதில் நித்திரை செய்வது பரக்கத் தையும் சீதனத்தையும், அஸறுக்குப் பிறகு நித்திரை செய் வது பைத்தியத்தையும், மகுரிபுக்குப் பிறகு நித்திரை செய்வது பித்துவையும் உண்டாக்கும். (கஷ்ஷாப்).

சொற்பனம்.

நித்திரையில் சொற்பனம் காண்பது மாந்தரியல்பு. இச் சொற்பனங்கள் பலவகை. சில சொற்பனங்கள் உண்மையாகவே நிகழும், சில நிகழா, சில நேர்மாறாகப் பலனளிக்கும், சிலவற்றிற்கு உட்பொருள்களுண்டு. ஆதலால், மனிதர்களின் தக்வாவிற்கும், அந் தஸ்திற்கும் தக்கவாறு சொற்பனங்களுக்குப் பலனுண்டு. எனவே, அழகான, நல்ல சொற்பனங்களைக் கண்டால் நல்லோர்களிடம்

அல்லது சொற்பனங்களின் பயன்களை றிந்த பேரறிஞர்களிடம் அவைகளுக்குறிய பயன்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். சொற்பனம் கண்டதைக்கூறி, அதன் கருத்து யாதென ஒருவர் வினவுவாராயின் அதனைக்கேட்டவர் நல்ல வார்த்தைகளையே கூற வேண்டும். அதாவது அதனைச் செவியேற்றவுடன் "உனக்கு இது நன்மையானதாக இருக்கட்டும். உனக்கு தீங்கானதாக இல்லாதிருக்கட்டும்" என்று கூறுவது முஸ்தஹப்பு. பயங்கரமான அல்லது கெட்டதாகிய சொற்பனங்களைக் கண்டால் உடனே எழுந்து இடப்புறம் துப்பிவிட்டு, இறைவனிடம் காவல்தேடி, மறுபுறம் படுத்துக்கொள்வதுடன், விடிந்த பிறகு இரண்டு ரக்கஅத்து நபில் தொழுது தன்னாலான தர்மம் செய்யவேண்டும். இவ்விதமான சொற்பனங்களைப் பிறரிடம் சொல்லாதிருப்பது நல்லது. கனவுக்குப் பொருள் தெரியவேண்டுமானால் கண்டதுபோல் சொல்ல வேண்டும். அதனைத் திரித்துக் கூறவோ, அதில் இல்லாததை இணைத்துக் கூறவோ கூடாது.

கனவில் மிகவும் உண்மையானது ஸஹர் அதாவது விடியற் காலை வேளையில் காணும் கனவு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டால், அது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான், ஏனெனில் "ஒருவன் என்னைச் சொற்பனத்தில் பார்ப்பரானின் அவன் நிச்சயமாக என்னைத்தான் பார்த்தான். என்னைப்போலவும் கஃபாவைப்போலவும் ஷைத்தான் தோன்றான்" என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் காண்பது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சொற்பனத்தில் பார்க்க விரும்பினால் ஸலவாத்தை அதிகமாக ஓதவேண்டும்.

اللهم رب البلد الحرام والشهر الحرام والحل والحرم
والركن والمقام اقرأ على روح محمد منا السلام

அல்லாஹும்ம றப்பல் பலதில் ஹறும் வஷ்ஷஹ்ரில் ஹறும், வல்ஹில்லி, வல்ஹறமி, வர்ருக்னி, வல்மக்காமி, இக்ரஉ அலா றூஹி முஹம்மதின் மின்னஸ்ஸலாம்

(நாயனே! சங்கையான பட்டணத்திற்கும் ஹில்லுக்கும், ஹறமுக்கும், ருக்னுக்கும், மக்காமே இப்ராஹீமுக்கும் றப்பானவனே! எங்

களிலிருந்து முஹம்மது (ஸல்) அவர்களது ஆன்மாவிற்கு ஸலாம் சொல்வாயாக) என்ற பிரார்த்தனையையும் விடாமல் கூறி வர வேண்டும்.

ஸலாத்துல் அப்ஹறி என்ற தொழுகையை நிறைவேற்றிய ஒருவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சொற்பனத்தில் பார்க்க வில்லையானல் நான் உமரல்ல வென்று ஹஜ்றத் உமர் பாறூக் (றழி) அவர்கள் கூறி இருக்கிறூர்கள். இத்தொழுகையை நிறைவேற்றி வருபவர்களது நாட்டங்களை இறைவன் நிறைவேற்றுவான். அவனது பாவங்களை அழித்து விடுவான் என்று ஹஜ்றத் உமர் பாறூக் (றழி) அவர்கள் கூறி இருக்கிறூர்கள்.

ஸலாத்து அப்ஹறீ.

"ஸலாத்துல் அப்ஹறர் என்னும் சுன்னத்தான 4-ரக்கஅத்துகளை அல்லாஹுத் தஆலாவிற்காகத் தொழுகிறேன்" என்று நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டி ஒரே ஸலாமில் நான்கு ரக்கஅத்துகளைத் தொழவேண்டும்.

முதலாவது ரக்கஅத்தில் ஸூறத்துல் பாத்திஹாவிற்குப் பிறகு ஸூறத்துல் கத்ரேன்னும் இன்னஅன்ஜல்னு ஸூறத்தைப் பத்து முறை ஓதி ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்

سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر

என்று பத்து முறை ஓதி ருக்கூஉ செய்யவேண்டும். ருக்கூஇல் வழக்கமாக ஓதுகிற தஸ்பீஹை ஓதிவிட்டு மேற்கண்ட தஸ்பீஹை மூன்று முறை ஓதவேண்டும். ருக்கூஉவிலிருந்து நிமிர்ந்து தஸ்மீஉ, தஹ்மீதுக்குப்பிறகு நின்று கொண்டு மேற்கண்ட தஸ்பீஹை மூன்று முறையும், பிறகு ஸுஜூதில் வழக்கமாக ஓதுகிற தஸ்பீஹுக்குப் பிறகு மேற்கண்ட தஸ்பீஹை ஐந்து முறையும், ஸுஜூதிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு மேற்கண்ட தஸ்பீஹை ஐந்து முறையும், இரண்டாவது ஸுஜூதில் வழக்கமான தஸ்பீஹுக்குப் பிறகு மேற்கண்ட தஸ்பீஹை ஐந்து முறையும் ஓத வேண்டும். இவ்வாறு ஒரு ரக்கஅத்தில் ஷை தஸ்பீஹு 31-முறை ஓதி இவ்விதமாக நான்கு ரக்கஅத்துகளையும் தொழுகவேண்டும். ஸலாம் கொடுத்த பிறகு ஒருவரிடமும் பேசாமல் ஷை ஸூறத்துல்

கத்ரை பத்து முறையும் ஷெ தஸ்பீஹை பதின்மூன்று முறையும் ஓதவேண்டும். அப்புறம் جزى الله محمدا عنا ما هو اهله ஜஸல்லாஹு முஹம்மதன் அன்னு மா ஹுவ அஹ்லுஹு (அல்லாஹ் நம் சார்பாக முஹம்மது (அலை) அவர்களுக்கு அவரது தகுதியின்படி நற்கூலி கொடுப்பானாக) என்று கூறி நித்திரை செய்யவேண்டும்.

“பயங்கரமான சொற்பனங்களைக் கண்டால் பகற்பொழுதில் தக்வாவைச் செய்துகொண்டால் அவைகள் விலகிவிடும்” என்று முஹம்மதுப்னு ஸீரின் (றஹ்) என்னும் பெரியார் கூறி இருக்கின்றார்கள்.

சுர்மா இடல்.

இரவில் நித்திரைக்குச் செல்லு முன் இரண்டு கண்களிலும் மும்மூன்று முறை சுருமா இடவேண்டும். இப்படிச் செய்வதால் கண்பார்வை அதிகமேற்படுவதுடன், கண்ரோமத்தையும் முளைக்கச் செய்யும். முஹர்ரம் மாதம் பத்தாம் நாளாகிய ஆஷுராவில் ஸுர்மா இட்டால் எப்பொழுதும் இரண்டு கண்களும் பார்வையை இழக்கமாட்டா.

மணம்பூசல் மருதோன்றிபோடல்.

“பால், தலையணை, மணம் ஆகிய இம்மூன்றும் மறுக்கப்படாதவை” என்று ஹதீதில் வந்திருப்பதால் பிறரிடமிருந்து கிடைக்கும் மணமான வஸ்துவை மறுக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், ஆடவர்கள் நிறம் மறைந்து வாடைமட்டிலும் வெளிப்படக்கூடிய மணமான வஸ்துவைப் பூசிக்கொள்ளவேண்டும். ஸ்திரீகள் வாடை மறைந்து நிறம் வெளியாகக்கூடிய வஸ்துக்களைப் பூசிக்கொள்ளவேண்டும். ஆனால், கணவன் முத்தமிடல்போன்றவைகளை விரும்பும் ஸ்திரீகள் மணம் வெளியாகும் வஸ்துக்களைப் பூசிக்கொள்ளலாம்.

கால், கை நகங்களிலும், உள்புறங்களிலும் வெளிப்புறங்களிலும் மருதோன்றியிட்டுச் சாயமேற்றுவதை ஆடவர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். பெண்களுக்கு இவை ஸுன்னத்தாகும்.

தலை தாடி முதலிய ரோமங்கள்.

தலை, தாடி ஆகியவைகளில் அழுக்கு, பேன் முதலியவைகள் ஏற்படாமலிருப்பதற்காகவும், அவைகளைச் சுத்தப்படுத்துவதற்காகவும் அவைகளின் ரோமங்களுக்கு எண்ணெய் தடவி, சீப்பால் சீவிக்கொள்ளலாம். ஆனல், எண்ணெய் தடவும்போது இடக்கரத்தில் எண்ணெய்யை ஊற்றி முதலாவதாக இருபுருவங்களுக்கும், அப்புறம் மீசைகளுக்கும், பிறகு தாடிக்கும், கடைசியாக தலைக்கும் தடவவேண்டும். முதலாவதாக புருவத்திற்கு எண்ணெய் தடவுவதால் தலைவலி நோய் நீங்கும் என்று ஹதீதில் வந்திருக்கிறது. மேலும் இவ்விதமாகத்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எண்ணெய் தடவி இருக்கிருர்கள்.

தவிர, நாயகம் (ஸல்) அவர்கள் தினந்தோறும் எண்ணெய் தேய்த்துச் சீவி விடுவதில்லை, ஒன்றை விட்டு ஒரு நாள் எண்ணெய் தேய்த்துச் சீவுவது வழக்கம். ஆதலால், ஒன்றைவிட்டொரு நாள் எண்ணெய் தேய்த்துச் சீவி விட்டுக்கொள்ள வேண்டும். அந்த ரோமங்களை அழுக்கடைய விட்டுவிடக்கூடாது.

தலையில் மயிர் வைப்பதால் மூளைக்கு அதிகப் பிரயோஜனமேற்படுகிறது. வெய்யற்காலங்களில் உஷ்ணத்தையும், பனிகாலங்களில் குளிர்ச்சியையும் அது தடுக்கிறது. ஆனல், தலைமயிரை நீளமாக வளர்த்து கொண்டைபோடலாகாது, பிடரிக்கு மேலேயே இருக்கும்படி வெட்டிக்கொள்ளவேண்டும். அதனை இரண்டாக வகுந்து சீவிக்கொள்ளவேண்டும்.

ஸ்நானம் செய்வதில் வஸ்வஸா உண்டாகக்கூடாது எனக் கருதுபவர்கள் தலையை க்ஷவரம் செய்து மயிரைக் களைந்து விடலாம். வெள்ளிக்கிழமையன்று தலை க்ஷவரம் செய்துகொள்ள வேண்டும். ஸ்திரீகள் தலை மயிரை சிறைத்துக்கொள்வதால் பாவியாகி விடுவார்கள். தலை மயிரை வளர்ப்பது அவர்களுக்கு வாஜிபு. தாடியைச் சிறைத்து விடுவது ஹறும். அதனை வளர்ப்பது சுன்னத்து. ஆனல், ஒரு பிடிக்கு அதிகமாக இருப்பதைக் கத்தரித்துக் கொள்ளலாம்.

நறை மயிர்களுக்கு மஞ்சள் அல்லது சிவப்புச் சாயமேற்ற லாம். கருப்புச் சாயமேற்றக்கூடாது. என்றாலும், போர்க்களம் செல்லும் சிப்பாய்களும், மனைவியர்களையும் வெள்ளாட்டிகளையும் குஷிப்படுத்த விரும்புவோரும் கருப்புச் சாயமேற்றலாம்.

நறை மயிருக்கு ஒரு விதத்தில் கண்ணியம் கொடுக்க வேண் டும். அது மூமின்களுக்குப் பிரகாசமாகவும் மரியாதையளிப் பதாகவுமிருக்கிறது. ஆனால், அது கொஞ்சமாக இருந்தால் அதை னப் பிடுங்கிவிடுவது குற்றமில்லை.

மீசையைத் தரித்தல், தொப்புளுக்குக் கீழிலுள்ள ரோமத் தைக் களைதல், கம்முக்கட்டு ரோமத்தைப் பிடுங்கிவிடல் சுன்னத்து முஅக்கதா. மூக்கு ரோமத்தைத் தரித்துவிடவேண்டும் பிடுங்கக் கூடாது.

நகம் வெட்டுவதில் வலக்கையில் கலிமா அதாவது ஆள்காட்டி விரலைக்கொண்டும், இடக்கையில் மோதிரவிரல் அதாவது சுண்டு விரலைக்கொண்டும், இருகால்களிலும் சுண்டுவிரலைக்கொண்டும் ஆரம் பித்து எல்லாவற்றிலும் பெருவிரலைக்கொண்டு முடிப்பது மிகமேல்.

நகம் தரித்தல், கம்முகட்டு ரோமம் பிடுங்கல், கீழ் ரோமம் களைதல் ஆகியவைகளை வாரத்திற்கொருமுறை அதாவது வெள்ளிக் கிழமையில் குத்பாவுக்கு முன்னதாகச் செய்து கொள்வது நல்லது. இரண்டு வாரங்களுக் கொருமுறையும் செய்து கொள்ளலாம். ஆனால், நாற்பது நாட்களுக் கதிகமாக விட்டு வைப்பது மக்றூஹு தஹ்ரீமி. வியாழக்கிழமையன்று இவைகளைச் செய்து கொள்வ தும், வெள்ளிக்கிழமைகளில் மணம் பூசல், உடை மாற்றல், ஸ்நா னஞ் செய்தல் ஆகியவைகளும் நல்லது என்றுஞ் சொல்லப்பட் டிருக்கிறது.

فصل في اداب السفر

பஸ்லுன் பி ஆதாபிஸ்ஸபர்

பிரயாணஞ் செல்லல்.

பிரயாணம் இரண்டு வகைப்படும், உலக சம்பந்தமான காரி யங்களை உத்தேசித்துப் பிரயாணஞ்செய்வது ஒரு வகை, சன்

மார்க்க சம்பந்தமான காரியங்களை உத்தேசித்துப் பிரயாணஞ் செய்வது மற்றொரு வகை. சன்மார்க்கக் கல்வியைக் கற்க, தன் நப்ஸை நேர்வழியில் திருப்ப, சன்மார்க்க விஷயத்தில் பித்னு உண்டாகுவதைப் பயந்து அதனைத் தவிர்த்துக் கொள்ள, சன்மார்க்க யுத்தஞ்செய்ய, ஹஜ்ஜுச்செய்யப் பிரயாணம் செய்வதும் இதுபோன்ற காரியங்களுக்காகப் பிரயாணம் செய்வதும் இரண்டாவது வகையைச் சேர்ந்தது. இதற்கு ஸபரே தீனி என்றுபெயர்.

"சன்மார்க்கக் கல்வியைக் கற்றுக்கொள்வதற்காக ஒருவர் தனது வீட்டைவிட்டுப் புறப்பட்டால், அவர் திரும்ப வருகிற வரையில் அவர் பீஸபீலில் இருக்கிறார்" என்றும்,

தனது சன்மார்க்க பக்தியைக் காத்துக்கொள்ளும் நோக்கத்துடன் ஓரிடத்தை விட்டுவேறோரிடம் சென்றால், அது ஒரு சாண் தூரமாக இருந்தாலும்சரியே அவருக்குச் சுவர்க்கம் பாத்தியமாகி விட்டது. அவர் இப்ராஹீம் கலீலுல்லாஹ், முஹம்மது ஹபீபுல்லாஹி (ஸல்) ஆகியவர்களின் கூட்டாளியாகிவிட்டார் என்றும்,

சன்மார்க்க யுத்தத்திற்கு காலை நேரத்தில் அல்லது மாலை நேரத்தில் செல்வது இவ்வுலகையும் இதிலுள்ள வஸ்துக்களையும் பார்க்கினும் மிகவும் மேலானது என்றும் ஹதீது ஷரீபுகளில் வந்திருக்கிறது.

பஞ்சப் பிணியை அல்லது வறுமையை, பொருள் சம்பாதிப்பதை அல்லது விவாகம் செய்வதை அல்லது இதுபோன்ற காரியங்களை எண்ணிப் பிரயாணம் செய்வது முதலாவது வகையான பிரயாணமாகும், இதற்கு ஸபரே துன்யவீ என்று பெயர். இவ்விதமான பிரயாணத்திலும் கூட யாசகம் வாங்குவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்பதோ அல்லது தனது மனைவி மக்கள் முதலிய குடும்பத்தாருக்கு உபகாரம் செய்வதையோ முக்கிய நோக்கமாகவும் நிய்யத்தாகவுமிருந்தால் இதுவும் வணக்கமாக மாறி விடுகிறது. இவ்விதமான பிரயாணங்களும் கூட புண்ணியத்தை அளிக்கின்றன.

வியாழன், திங்கள், சனி இம்மூன்று நாட்களில் பிரயாணத்தை ஆரம்பிப்பது நல்லது. இந்நாட்களில் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரயாணம் புறப்பட்டிருக்கிறார்கள். இதிலும்

காலை நேரங்களை பரக்கத்தாக ஆக்கிவைக்கும்படியாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை புரிந்திருக்கிறார்கள். ஆதலின், காலை நேரத்தில் செல்வதில் வெற்றியும் பரக்கத்துமிருக்கிறது. மாதக் கடைசியிலுள்ள மூன்றிரவுகளிலும், சந்திரன் விருச்சகத்தின் வீட்டிலிருக்கும்போதும் பிரயாணம் செய்வதையும் விவாகம் செய்வதையும் ஹஜ்றத் அலி (றலி) அவர்கள் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வெள்ளிக்கிழமை கிழக்கு வெளுத்த பிறகு பிரயாணம் செல்வது நல்லதல்ல.

பிரயாணம் செய்ய ஆரம்பிக்கு முன் கொஞ்சமாவது தர்மம் செய்யவேண்டும். வீட்டில் இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டும். பிரயாணம் சென்று திரும்பவந்தால் இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டும். குல்யா அய்யுஹல் காபிறானையும் அதற்கப்பாலுள்ள ஸூறத்துகளையும் (தப்பத்யதா ஸூறத்து நீங்கலாக) ஓதிப் பிரயாணம் செய்வதில் வெற்றியும் வசதியுமிருக்கிறது.

பிரயாணம் செய்பவர் கண்ணாடி, சுர்மாக் கூடு, மிஸ்வாக்கு, சீப்பு, கத்தரிக்கோல், கூஜவாக்கத்தி, ஊசி, நூல், கயிறு ஆகியவைகளையும் தன்னுடன் எடுத்துச் செல்வதும், நல்ல மனிதர்களை வழித்தோழனுகத் தேடித் திட்டம் செய்து கொள்வதும், பலருடன் சேர்ந்துபோவதும், அவர்களில் சன்மார்க்கக் கல்வியைக்கற்ற நல்ல மனிதனைத் தலைவராக நியமித்துக் கொள்வதும் நல்லது. இவ்வாறு நியமிக்கப்பட்ட பிரயாணத் தலைவரின் யோசனையில்லாமலும், அனுமதியில்லாமலும், நடந்து கொள்ளக் கூடாது. அவரது கட்டளைக்கு மாறு செய்யக் கூடாது. பிரயாணத்தலைவர் பேராசையில்லாதவராகவும், தக்வாவுள்ளவராகவும், மானம் கண்ணியம் ஆகியவைகளைக்காப்பவராகவும், தர்மசிந்தையுள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டும்.

எந்த ஊருக்குச் சென்றாலும் அவ்வூரில் ஹயாத்தாக இருக்கிற ஒலிமார்கள், ஸாலிஹானவர்கள், நல்லோர் பெரியோர்களை முலாக்காத்துச் செய்யவேண்டும். அங்கு ஒலிமார்கள் நபிமார்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தால் அவர்களையும் ஜியாரத்துச் செய்ய வேண்டும்.

வியாபார நிமித்தமாகப்பிரயாணஞ் சென்ருல் அதிக தூரம் பிரயாணம் செய்வது மக்றூஹு. தன் ஊருக்குத் திரும்பவந் தால் தன் குடும்பத்தார் பந்துமித்திரர் முதலியவர்களுக்கு ஏதே னும் ஹதியாக்கொண்டுவரவேண்டும். திடீரெனத் தன் குடும்பத் தாரிடம்வராமல், முற்கூட்டியே தனது வருகையைக் குறித்து தகவல் தெரிவித்து வரவேண்டும். அதிலும் ளுஹருடைய வேளையில் வருவது மிக ஏற்றம். ஊருக்கு வந்தவுடன் முதலாவ தாக மஸ்ஜிதுக்குச் சென்று இரண்டு ரக்கஅத்துத் தொழுது இறைவனுக்கு நன்றி செலுத்தி விட்டு, அப்புறம் வீட்டுக்கு வர வேண்டும். வீட்டில் குழந்தைகளிருந்தால் குடும்பத்தார் முதலா வதாக அக்குழந்தைகளை பிரயாணத்திலிருந்து வந்தவர்களிடம் அனுப்பி அப்புறம் அவரைக்கண்டு கொள்ளவேண்டும். ஊருக் குச் செல்லும்போதும், ஒரு ஊரில்போய் சேரும்போதும், திரும்பவந்தவுடனும் ஓதவேண்டிய துஆக்களும், ஆயத்துகளும் பிறவும் அதிக மிருக்கின்றன. அவைகளை விரிவான நூல்களில் காண்க.

கலந்துறவாடல்.

நேர்வழி சொல்வதன் மூலமாகவும், பிறர்பால் இரக்கங் காண்பிப்பதன் மூலமாகவும், ஜனங்களிடம் கலந்துறவாடுவது நபிலான வணக்கங்களைப்புரியும் நோக்கத்துடன் தனித்திருப்ப தைப்பரீர்க்கினும் மேலானது. இவைகளுக்காகச் சிநேகிதம் செய் வதால் பொறுப்பு அதிகமேற்படுமாயினும் புண்ணியம் அதிக முண்டு. சுயநலத்திற்காக அல்லாமல், அல்லாஹுத் தஆலாவிற் காக, அவனது சன்மார்க்கக் கட்டளைகளை நிறைவேற்றும் நோக்கத் துடன் சிநேகம் செய்பவர்கள் கியாமத்துநாளில் அர்ஷை சுற்றிலும் பிரகாசத்தினுலான மின்பர்களின் மீதமர்ந்திருப்பார்கள். அவர் களது உடைகளும் முகங்களும் பிரகாசிக்கும். அவர்களது இவ் வந்தஸ்தை அடைய நபிமார்களும் ஷுஹதாக்களும் விரும்புவார் கள் என்ற விபரம் ஹதீதுகளில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின், பகிரங்கத்திலும், இரகசியத்திலும் அவர்களுடன் கலந்துறவாடி மனத்தாலும் சன்மார்க்கத்தாலும் அவர்களைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டும்.

தனக்கு விருப்பமானவைகளையே அவர்களுக்கும் விரும்ப வேண்டும். தன்தோழர்கள் செய்யுங் காரியங்களில் அந்தரங்க சுத்தி

யாக அவர்களுக்கு ஆலோசனை கூறவேண்டும். தனக்கு நன்மை என்று தோன்றுவதை மறைக்காமல் அவர்களிடம் கூறவேண்டும். அவர்கள் நன்மையான காரியத்தைச் செய்தால் அதனைச் செய்ய அவர்களுக்கு உற்சாக மூட்டவேண்டும். தீமையான காரியத்தைச் செய்தால் அதன் தீமையை எடுத்துக்கூறி அவர்களை விலக்கவேண்டும். போதுமென்ற மனமுள்ளவராகவும், நல்லோர்களாகவு மிருக்கிற வர்களை அடுத்து அவர்களை நேசிக்கவேண்டும். பிரியமான பெயரைக்கொண்டு அவர்களை அழைக்கவேண்டும். அவர்களுக்கு செலவு செய்யும் விஷயத்தில் அதிருப்தியைக் காண்பிக்கக் கூடாது. சந்தோஷகுறியையே காண்பிக்கவேண்டும். தன் சிநேகிதர்கள் தனக்குச் செய்யும் உபகாரங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஒருவரை நீ நேசித்தால் அவர் பெயரென்ன? அவர் தந்தையின் பெயரென்ன? அவர் குடும்பம் எது? அவர் வம்சம் எது? என்று விசாரித்துத் தெரிந்துக் கொள்ளவேண்டும் என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. உண்மையாகவே நேசித்து, உண்மையாகவே அவர்களைபோற்றவேண்டும். நாம் உண்ணும் உணவிலும் பருகும் பானத்திலும், உடுத்தும் உடையிலும், சந்தோஷ் காலங்களிலும் நமது சினேகிதர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். சன்மார்க்கத்திற்கு மாறான காரியங்களைத் தவிர்த்து மற்றய காரியங்களில் அவர்களுடன் ஒத்துழைக்கவேண்டும். அவர்களுடன் கலந்தாலோசனைகள் செய்து கொள்ளவேண்டும். சிநேகிதர்களை முறைவண்ணமாகக் கண்டுகொள்ளவேண்டும். ஒரு மூமின் இன்னொருமூமினுடன் சிநேகிதம் செய்தால் அவனது நாயனையும் நேசிக்கவேண்டும். அவனது பகையனைப் பகைக்கவேண்டும். "உனது சிநேகிதன் உனது பகைவனுக்கு இணங்குவானாயின் அவ்விருவரும் உன்னைப் பகைப்பதில் கூட்டாகி விட்டார்கள்" என்பதாக இமாம் ஷாபியீ (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

உன் சிநேகிதனிடத்தில் ஒரு குறையைக் கண்டால் தனித்த இடத்தில் அவனிடம் அதனைக்கூறி அகற்ற முயலவேண்டும். அவன் அதனை அறிந்தபின்பும் விடாமல் அதனைச் செய்து கொண்டும், அவனுக்குபதேசம் சொல்வதை ஏற்றுக் கொள்ளாமலு மிருப்பதை உணர்ந்தால் அவனது சிநேகிதத்தை மறந்து விடவேண்டும். அவனது குறையைப் பகிரங்கப் படுத்திக் கொண்டிருக்கக்கூடாது. ஆனால், இனிமேலாவது அவனை திருத்தி விட முடியும் என்றிருந்தால் சிநேகிதத்தை முறித்துக் கொள்ளாமல், அவனுக்கு உபதேசங்

களை செய்து கொண்டே இருக்கவேண்டும். தன்சிநேகிதனிடம் இருக்கும் குறையைச் சொல்லி அவனை வடுச் சொல்லக் கூடாது. ஏனெனில், பிறர்மேல் சொல்லப்படும் குற்றங்குறைகள் சிற்சில சமயங்களில் தனக்கும் ஏற்படவேறு துவுண்டு. மூமினுன சகோதரன் தவறு செய்தால் அத்தவறுக்குக் காரணமிருக்குமென நினைத்து மன்னிக்கவேண்டும். அவன் நேர்மையாக நடக்கவும் குற்றங் குறையைத் திருத்திக்கொள்ளவும் இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும். எவரையும் மன வருத்தப் படக்கூடிய முறையில் பேசக்கூடாது. பிறருக்குக் கஷ்டம்வந்தால் அதற்காக சந்தோஷமடையக்கூடாது. பிறருக்குச்செய்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும்.

ஒரு ஸ்தூலத்தில் எங்கேனும் ஒரு கஷ்டம் ஏற்பட்டால் ஸ்தூலத்திலுள்ள மற்றய அவயங்களிலும் அதன் குணபாடு வெளியாகிறது, இராக்காலங்களில் நித்திரை வருவதில்லை. இதுபோல மூமின்கள் யாவரும் ஒரு ஸ்தூலத்தைப் போலிருக்கிறார்கள். ஒரு மூமினுக்கு ஒரு கஷ்டம் வந்தால் அக்கஷ்டத்தை மற்றவர்களும் பகிர்ந்து கொள்ளவேண்டும். அக்கஷ்டத்தை நிவர்த்திசெய்ய மற்றவர்களும் பிரயத்தனப்படவேண்டும்.

தனக்கு உபகாரம் செய்தவர், செய்யாதவர், தனது உதவிக்கு உரியவர், உரியவரல்லாதவர், தனக்கு தீங்கு செய்தவர், என்று பாகுபாடு செய்யாமல் எல்லாருக்கும் உதவவேண்டும். தன்னை ஏசியவர், வெறுத்தவர், நோவினைசெய்தவர் இவர்கள் யாவரையும் மன்னித்து விடவேண்டும். அவர்கள் பேசியதையும் நோவினைசெய்ததையும் குறித்துக்கவலைப் படுவதாலோ வருந்து வதாலோ எவ்விதப்பயனும் நிகழப்போவதில்லை. அல்லாஹுத் தஆலாவே தனது சிருஷ்டிகளின் நாவைத்தன்னை விட்டுத் தடுத்துக் கொள்ளாதிருக்கும்போது சிருஷ்டிகளாகிய நாம் மற்றவர்கள் பொல்லாங்கு சொல்வதைவிட்டுத்தப்பமுடியாது. ஆகவே, பிறரால் ஏற்படும் பளுவைப் பிரியமாக ஏற்றுக்கொள்வதுடன், அவர்களது காரியங்களிலியன்றவரை பிரயாசை யெடுத்துக் கொள்ளவேண்டும்.

ஒருவன் "தனது முஸ்லிம் சகோதரனது தேவை விஷயத்தில் அல்லாஹ்வின் திருப்தியும் அடியானது இணக்கமுமுள்ள காரியத்தில் பிரயாசை யெடுத்துக்கொள்வானாயின் கண்சிமிட்டும் நேரம் கூடப்பாவத்தில் சேராமல் ஆயிரம் வருஷம் அல்லாஹுத்

தஆலாவிற்கு ஊழியம் செய்தது போலாகி விடுகிறன்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. மேலும், தரித்திரம், வறுமை, துக்கம், ஆகியவைகளால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது கஷ்ட சங்கடத்தை நிவர்த்தி செய்யமுயலவேண்டும்.

சமாதானம் செய்வித்தல்.

இருவர் மணவருத்தமடைந்து கோபமாக இருந்தால் அவ்விருவரையும் இணக்கப்படுத்துவதற்காக முயலவேண்டும். இவ்விருவரில் குற்றம் புரிந்தவர் சார்பாக குற்றம் இழைக்கப்பட்டவரிடம் சிபாரிஷ் செய்யவேண்டும். இவ்விருவரையும் இணக்கி ராஜி செய்யும் முயற்சியில் இவர்களில் எவரேனும் தன்னைக்குறித்து குறை கூறினும் அதனைப் பொருட் படுத்தாமல் தனது முயற்சியைச் செய்ய வேண்டும். ஏனெனில் "மனிதர்களுக்கு அதிகப்பிரயோஜனமானவர்களும் தனக்கு அநீதி செய்தவர்களை மன்னிப்பவர்களும் அல்லாஹுத் தஆலாவிற்கு அதிகப் பிரியமானவர்கள்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

சிறந்த குணம்.

தீங்கு செய்தவருக்கு உபகாரம் செய்வதும், தன்னை விலக்கியவர்களையும் தன்னுடன் இணைத்துக்கொள்வதும், தனக்கில்லையென்றவருக்குக் கொடுப்பதும், சிருஷ்டிப் பொருள்களின் மீது நல்லெண்ணங் கொள்வதும் சிறந்த நற்குணங்களாகும். பிறர் மீது கெட்ட எண்ணங்கொள்வது நப்ஸுடைய செய்கைகளில் மிகவும் பொய்யானதாக இருக்கிறது. "நான் அல்லாஹுத் தஆலாவை விசுவாசித்தேன். ஆதலால், அவனது சிருஷ்டிகளின்பால் என் நேத்திரங்களைப் பொய்யாக்கி வைத்திட்டேன்" என்று ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

பொறுமை.

ஒருவருக்கிருக்கிற பாக்யத்திற்காக அவர் மீது பொறுமை கொள்ளலாகாது. இவ்வாறு பொறுமை கொள்வதால் அப்பாக்கியம் அவரை விட்டு நீங்கவும் அது நீங்கி விடுவதற்கான உபாயங்களைச் செய்யவும் எண்ண முண்டாகும்.

சபை ஒழுங்கு.

ஒரு சபையிலிருந்தால் மற்றவர்களுக்கு இடம்விட்டுக் கொடுக்கவேண்டும். ஒருவர் வந்தால் அவருக்குத் தனது அங்கவஸ்திரத்தை விரித்தேனும் அவருக்கு இருக்க இடங்கொடுத்து அவரைக் கனப்படுத்தவேண்டும்.

கோபம்.

பழிக்குப் பழி வாங்கக்கூடாது. வஞ்சந்தீர்க்கக்கூடாது. மனிதர் செய்கைகளை க்ஷமிக்கவேண்டும். கோபம் வரும்போது தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவேண்டும். கோபம் என்ற நெருப்பு அதிகமாகிவிட்டால், உடனே ஒலுச்செய்யவேண்டும், நின்று கொண்டிருந்தால் உட்கார்ந்துகொள்ளவேண்டும், உட்கார்ந்து கொண்டிருந்தால் ஒருச்சாய்ந்து படுத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு செய்தால் கோபம் தணியும், ஏனைய முஸ்லிம் சகோதரர்களுக்கு தன்னால் தீங்கேற்பட்டு, அவர்கள் வெறுப்பார்களாயின் அக்குற்றத்திற்குப் புகல்கூறி தனது செய்கையை சரியென நிரூபிக்க முயலாமல், குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்.

தகுதிக்குத் தக்கவாறு நடத்தல்.

அவரவரின் அறிவிற்குக் தக்கவாறு மனிதர்களிடம் பேசவேண்டும். அவரவர் தகுதிக்குத்தக்கவாறு மரியாதை செய்யவேண்டும். அவரவரின் மார்க்க பக்தி, மார்க்கச் சட்டப்படி நடத்தல் ஆகியவைகளுக்குத் தக்கவாறு நடத்தவேண்டும். ஒரு குடும்பத்தில் அல்லது கோத்திரத்தில் கண்ணியம் வாய்ந்த ஒருவரை அவமதிக்கக்கூடாது. அவரது அந்தஸ்திற்குத் தக்கவாறு மதித்துப் பழகவேண்டும். எனவே, கல்லாதவர்களிடம் கல்வியைக் குறித்தும், மார்க்கச் சட்டத்தைப் பயிலாதவரிடம் மார்க்கச் சட்டங்களைக் குறித்தும் வினவக்கூடாது. பிரசங்கம் செய்ய இயலாதவரைப் பிரசங்கிக்குமாறு கூறலாகாது. ஆனால், வணக்கங்களைப் புரியும்படியும், ஹறாமான காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் அவர்களுக்குக் கூறவேண்டும். எனவே ஒருவன் ஏழைகளுக்குத் தீங்கானவனாக இருந்தபோதிலும் அவனுடனும் நேர்மையாக நடந்துகொள்ளவேண்டும். தர்மவானுடையவும் மானமுடையவனுடையவும் வேதனையைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

வாக்குறுதியை நிறைவேற்றல்.

ஒருவருக்கு வாக்குறுதி செய்துவிட்டு, அதனை நிறைவேற்றாதிருப்பது முனாபிக் தன்மையைச்சேர்ந்தது. ஆகலின் வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும். ஆனால் ஒருவருக்கு வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் உறுதி கூறிவிட்டு இன்ஷா அல்லாஹ் என்றாவது, அல்லாஹ் போதுமானவன் என்றாவது கூறவேண்டும். இவ்வாறு கூறி வாக்குறுதியை நிறைவேற்ற முயலவேண்டும். ஒருவேளை வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதபடி சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டாலும் அதனால் பாபமுண்டாகாது.

சிநேகிதனின் சத்தியத்தை நிறைவேற்ற வேண்டும். தௌபாச் செய்பவரை நேசிக்கவேண்டும். நீதி செய்யவேண்டும். தூஷணை செய்யலாகாது. மனிதனது நிலையை உறுதியாக நம்பமுடியாது அது நிலையற்றது, மனமாற்றம் உண்டாகிக்கொண்டே இருப்பதால் காபிராக இருந்தாலும் சரி, துஷ்டராக இருந்தாலும் சரி எவரையும் தூஷிக்கக்கூடாது. "இவ்வுலகமும், இவ்வுலகிலுள்ளதும் அல்லாஹுத் தஆலாவினிடத்தில் ஒரு கொசுவின் இரக்கைக்குச் சமமாக வேனும் இருக்குமாயின் அதில் நின்றும் ஒரு முடக்கு ஜலத்தைக் கூட காபிர்களுக்கு அவன் கொடுக்கவேமாட்டான்" என்றுவந்திருப்பதால் இவ்வுலகத்தைய செல்வம் மதிக்கத்தக்கதாக இல்லை. ஆதலின், அதனைப் பெரிதாகக் கருதி ஏழை எளியாரைத் துச்சமாகக் கருதலாகாது. மேலும், "ஒவ்வொரு உம்மத்திற்கும் ஒரு பித்னா இருக்கிறது. என்னுடைய உம்மத்திற்கு பித்னாபொருள்" என்பதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. "எவர் அவருடைய துக்கத்தில் இவ்வுலகம் மிகப் பெரியதாக இருக்கிற நிலைமையில் விடியற்காலையில் எழுந்திருக்கிறாரோ அவர் அல்லாஹுத் தஆலாவில் நின்றும் எவ்வஸ்துவிலுமில்லை" என்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

அடக்கம்.

மனிதன் அடக்கமுள்ளவனாக இருக்கவேண்டும். தனக்குத் தாழ்மை செய்பவருக்குத் தாமும் தாழ்மை செய்யவேண்டும். தன்னிடத்தில் பெருமையாக நடந்து கொள்பவரிடம் பெருமையாக நடந்துகொள்ள வேண்டும். தன்னைப்பார்க்கிலும் சிறந்தவர் என்றே ஒவ்வொருவரையும் கருதவேண்டும். தன்னைக்குறித்துப் பிறர் நலவு தக்வாவைக்கொண்டு பேசினால் அதற்காக அதிருப்தியடையக் கூடாது. வயோதிகர்கள் கைத்தடி ஊன்றி நடப்பது, தனது ஊழியக்காரனுடன் சேர்ந்து உண்ணல், ரஸ்தாவில் கிடக்கிற குச்சி, முள்போன்ற தீங்கான வஸ்துக்களை அகற்றல், சிறு பிள்ளைகளாயிருந்தாலும் அவர்களுக்கு முதலாவதாக ஸலாம் சொல்லல், ஏழைகளுடன் சேர்ந்திருத்தல், பால் கறக்க ஆட்டைத் தனையுதல், கடைத்தெருவில் சாமான் வாங்கி வீட்டிற்குச் சுமந்துகொண்டு வருதல், தன் பின்னால் நாலுபேர் வரக்கூடிய முறையில் செல்லாமல், பெரிய வயதுக்காரர்களுக்கு மரியாதை செய்தல், உலமாக்

களையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வம்சத்தினராகிய ஸாதாத்துமார்களையும் கனப்படுத்துதல், அவர்களது தேவைகளை நிறைவேற்றி, நாவாலும் மனதாலும் அவர்களை நேசித்து அவர்களை ஒவ்வொரு காரியத்திலும் முதன்மையாக்குதல், இயலாதவர்களுக்கு உதவி புரிதல், அவர்கள்மீதும் சிறு குழந்தைகள்மீதும் கருணை செய்யல், ஒரு இடத்தில் பலர் இருந்தால் அவர்களில் மூத்தவர்களுடன் முதலாவதாக சம்பாஷணை செய்து அவர்களை விசாரித்தல், அவர்களுக்கு ஏதேனும் கொடுத்தால் முதலாவதாக இளையவர்களுக்குக் கொடுத்தல் ஆகிய இவைகள் அடக்கமுடையாரின் செய்கைகளாகும். ஒருவரிடம் செல்வமிருக்கிறது என்பதற்காக அவருக்கு மரியாதை செய்யலாகாது, செல்வமிருந்தாலும் செல்வமில்லாவிட்டாலும் மரியாதை செய்யத் தகுதியுள்ளவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும். பணத்திற்காக ஒருவருக்கு மரியாதை செய்வதால் சன்மார்க்கத்தில் மூன்றிலொரு பாகம் அவரை விட்டு நீங்கிவிடுகிறது. ஒருவர் ஹதியா அனுப்பினால் அதனை அங்கீகரித்துப் போற்றுவதுடன், அவர் அனுப்பியதைப் பார்க்கினும் அதிகமானதை அல்லது மேலானதை அவருக்குப் பிரதியாக அனுப்பவேண்டும். தவிரவும், ஹதியா அனுப்பியவருக்கு நன்றி செலுத்திப் பிறரிடம் அவர் அனுப்பிய ஹதியாவைக்குறித்துப் போற்றவேண்டும்.

பிறர் மனை ஏகல்.

அழைப்பின் பேரிலோ அல்லது சொந்த அலுவலாகவோ பிறரது மனைக்குச் சென்றால் வீட்டிற்குட் செல்ல மூன்று முறை உத்தரவு கேட்கவேண்டும். ஒவ்வொரு முறைக்குமிடையில் இரண்டு அல்லது நான்கு ரக்அத்துத் தொழுகும் நேரமிருக்கவேண்டும். வாசலுக்கு நேராக நிற்கக்கூடாது. ஒரு பக்கம் ஒதுங்கியே நிற்கவேண்டும். வாசற்கதவுக் கிடையின் வழியாகவோ அல்லது வாசல் வழியாகவோ உள்ளே எட்டிப்பார்க்கலாகாது. கைவிரல் நகத்தால் கதவை மெதுவாகத் தட்டவேண்டும். உள்ளே இருந்து யார் என்று வினவினால் நான்தான் என்று கூறாமல் பெயரைச்சொல்லவேண்டும்.

சகோதரத்துவமேற்படல்.

உங்களில் சகோதரத்துவத்தை அதிகமாக ஏற்படுத்திக் கொள்ளுங்கள். "கியாமத்துநாளில் அல்லாஹுத் தஆலா தனது

அடியானை அவனது சகோதரர்களின் முன்னிலையில் வேதனை செய்ய வெட்கப்படுகிறான்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. ஆதலால், சகோதரத்துவத்தைப் பெருக்குவதன் மூலம் சகோதரர்களை அதிகப்படுத்திக்கொள்ளுங்கள். ஒருவர் அல்லாஹுத் தஆலாவிற்காக ஒருவரைப் புதிதாகச் சகோதரனுக்கினுல் அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு அந்தஸ்த்தை அல்லாஹுத் தஆலா புதிதாக்குகிறான். மூமினன ஒரு ஆடவனும் அவனது சகோதர மூமினும் ஒருவருக்கொருவர் பார்த்துப் புன்முறுவல் பூப்பது இருவரது பாவங்களையும் அழித்துவிடும்.

ஒரு மூமினை இன்னொரு மூமின் பார்ப்பது வணக்கமாக இருக்கிறது. ஆகையால், மூமினுகிய சகோதரனை நேசமாகவும் பிரியமாகவும் பார்த்து, நாவினுலும், இருதயத்தாலும், கையாலும் விசாலமாகப் பழகவேண்டும். சகோதரர்களைச் சந்திப்பதற்காக சுத்தமான உடையணிந்து மணம் பூசி, தன்னால் இயன்றவரை அலங்கரித்துச் செல்லவேண்டும். அஸ்ஹாபிமார்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் முஆனக்கா என்னும் ஆலிங்கனம் செய்துகொள்வார்கள். பிரியும்போது முஸாபஹா என்னும் கை கொடுத்துக்கொண்டு இறைவனைப் புகழ்ந்து அவனிடம் பாபமன்னிப்புக்குப் பிரார்த்திப்பார்கள்.

சபையில் அமரும் ஒழுங்கு.

பல சகோதரர்கள் வந்தால் அவர்களில் சிறு வயதினர் மூத்தவர்களைப் பார்க்கினும் அதிகக்கல்வி யுள்ளவராக இருக்கவில்லையானல், மூத்தவர்களை முதலில் அமரச் செய்ய வேண்டும். எல்லாவை முன்னேக்கி இருப்பதுதான் மிக ஏற்றமானது. பலர் இருக்கும் சபையில் புதிதாக யாரும் வந்தால் வந்தவருக்கு இடம் விட்டுக்கொடுத்து, அவரையும் அமரச் செய்யவேண்டும். இருவர் சேர்ந்து உட்கார்ந்திருக்கும்போது, அவர்களுக்கிடையில் அமர்ந்து அவர்களைப் பிரிக்கக்கூடாது. வட்டமாக உட்கார்ந்திருந்தால் நடுவில் அமரக்கூடாது. ஆனல், அவர்கள் இடம் விட்டுக்கொடுத்து இருவருக்கிடையில், அல்லது நடுவில் உட்காரும்படி கூறினுல் உட்காரலாம். சபையில் இருக்கிற எவரும் இடம் ஒதுக்கிக்கொடுக்கவில்லையானல் காலியாக இருக்கிற இடம் பார்த்து உட்கார்ந்துகொள்ளவேண்டும். தனக்கு இருப்பிடத்தை உண்டாக்கிக்கொள்வதற்காக ஒருவரையும் எழுப்பக்கூடாது.

எவரேனும் தனது இருப்பிடத்தை விட்டெழுந்து கொண்டு உட்காரும்படி கூறினல், அவ்விடத்தில் அவரை அமரச்செய்து விட்டு வேறிடத்தைத்தேடிக்கொள்வது உசிதம்.

சபையில் எல்லோருக்கும் முதலில் சென்றிருக்கக்கூடாது. ஆனல், சபையினர் முன்னேறி இருக்கும்படிச் செய்தால் அப்பொழுது இருக்கலாம். நிழலுக்கும் வெய்யலுக்கு மிடையில் ஷைத்தான் இருக்கிருன் என்று வந்திருப்பதால் அப்படிப்பட்ட இடத்தையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும். கூடப்பிறந்த சகோதரர்களைப் பிரித்துவிடாமல் ஒரே இடத்தில் அவர்களை இருக்கும்படிச்செய்யவேண்டும். இவ்வாறு செய்வது மனச்சாந்தியை அளிக்கும். கல்விகற்ருேர், ஏழை ஆகிய முஸ்லிம்களைத் தன்னுடன் சேர்ந்திருக்கத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். சபையை உபதேசம் செய்யுமிடமாகவோ அல்லது இறைவனை ஜபிக்குமிடமாகவோ ஆக்கிவிடவேண்டும்.

"ஒரு மூமின் இன்னெரு மூமினுக்குக் கண்ணுடி, ஒரு மூமின் இன்னெரு மூமினுக்குச் சகோதரன்" என்று ஹதீதில் வந்திருப்பதால் மற்றைய மூமினுக்குத் தொந்தரை ஏற்படாதவாறு தன்னைப் பேணிக்கொள்வதுடன், மூமினுகிய அச்சகோதரன் அந்தஸ்து சாமான்கள் விஷயத்திலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அல்லாஹ்றவிற்காக அன்பு கொள்ளல்.

அல்லாஹ்றவையும், அவன் றஸூலையும், கியாமத்து நாளையும் விசுவாசங்கொள்வதற்கு ஹேதுக்களை யுண்டுபண்ணுபவர்களை நேசிப்பது அல்லாஹ்றவிற்காக அன்புகொள்வதாக இருக்கிறது. சொல் செயல் இவைகளால் பிரயோஜனம் தரத்தக்க ஆலிம், பரக்கத்துண்டாகக்கூடிய லாலிஹூ, வீட்டுக்காரியத்தைச் சிறப்பாக நடத்தி, தனக்கு எவ்விதக் கவலையையும் உண்டாக்காதிருக்கிற இல்லாள், ஆலிம்கள் நல்லோர் பெரியோர்களுக்குச் செலவுக்குக் கொடுத்து, அவர்கள் கவலையில்லாமல் வணக்கம் புரிய வசதி செய்துகொடுக்கும் பணக்காரர்கள், வணக்கம்புரிய ஆரம்பித்திருப்பவர் ஆகியவர்களை நேசித்தல் அல்லாஹுத் தஆலாவிற்காக நேசிப்பதாகும்.

சிருஷ்டிகளை விட்டுத் தனித்தல்.

மனதில் எப்பொழுதும் அல்லாஹுத் தஆலாவைக் குறித்த ஞாபகத்தில் மூழ்கி இருப்பதுடன், நாவால் சிருஷ்டிப் பொருள்களுடன் சேரக்கூடியவர்கள் சிருஷ்டிப்பொருள்களுடன் கலந்துறவாடலாம். ஹஜ்றத் ஜுனைதுல் பகுதாதீ (றஹ்) அவர்கள் "நான் முப்பது வருஷகாலமாக அல்லாஹுத் தஆலாவுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால், சிருஷ்டிகளுடன் நான் பேசிக் கொண்டிருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறி இருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் நாவினால் மாத்திரம் சிருஷ்டிகளுடன் கலந்து கொண்டு, மனத்தை எப்பொழுதும் அல்லாஹுத் தஆலாவின் ஞாபகத்தை விட்டு மாற்றமலிருந்தார்கள். நாம் இக்காலத்தில் மனிதர்களை விட்டுப் பிரிந்திருப்பது மிக ஏற்றமாகும். ஸஹாபிகளில் ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், பித்னக்களுடைய காலத்தில் நான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று வினவியதற்கு 'உன் வீட்டைப் பற்றிப் பிடித்துக்கொள். உன் நாவை உனக்குக் கீழ்ப்படுத்திக் கொள். நீ அறிந்த படிக்கு அமல்செய்துக்கொள். நீ யோசனை கூறுவதையும், உன்னிடம் வந்து உன்னைத் தழுவாதவர்களின் காரியத்தையும் விட்டு விடு. உன் காரியத்தைக் கவனித்துக் கொள்" என்று பதில் கூறினார்கள்.

நோயாளிகளை விசாரித்தல்.

துப்புறவாகிய உடையணிந்து, கடுகடுத்துப் பேசாமல், நோயாளியிடம் சென்று, அவனது முட்டுக் கால்களினண்டையில் இருக்கவேண்டும். அவனது தலைமாட்டிலிருக்கக் கூடாது. வலம் இடம் திரும்பிப்பார்க்கலாகாது. நோயாளியைப் பார்க்கவேண்டும். ஆனால், கூர்மையாகப்பார்க்கக் கூடாது. நெற்றியின்மீது அல்லது நாடி தெரிந்திருந்தால் நோயாளியின் கையின்மீது கையைவைத்து நோயாளியிடத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ அவனுக்கு எவ்வாறிருக்கிறது என்று வினவி, நோயாளிக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியவார்த்தைகளைப் பேசி, தனக்கும் நோயாளிக்கும் துஆக்கேட்கவேண்டும். அப்பொழுது மலக்குகள் ஆமீன் கூறுவார்கள், வயது நீளமாகுவதையும் நோய் சவுக்கியமாகுவதையும் குறித்து

நற்செய்தி கூறி நோயாளியின் துஆவை அடைந்து கொள்ள வேண்டும். நோயாளிகள் செய்யும் துஆ மலக்குகளுடைய துஆக்களைப் போலிருக்கிறது.

ஒன்றைவிட்டு ஒருநாள் ஒருநேரத்துக்குப்பின் ஒருநேரமாக வந்து நோயாளியை விசாரிக்கவேண்டும். ஹனபி மதுஹபில் முதற்றடவை சென்று பார்ப்பது பர்லு கிபாயா. ஷாபிஈ மதுஹபில் ஸுன்னத்து முஅக்கதா. அதற்குமேல் சென்று நோயாளியை விசாரிப்பது நபில், கண்வலி, பல்வலி, நரம்பு, சிலந்தி ஆகிய நோய்களுள்ளவர்களை விசாரிப்பது இவ்வகையை சேர்ந்ததல்ல.

மரிப்பவர்கள்.

மரணம் அடையுந் தருவாயிலிருப்பவர்களுக்கு கலிமாவை சொல்லென்று கூறி அலட்டக் கூடாது. ஆனல், நோயாளியின் செவியில் படும்படியாக சப்தமிட்டு கலிமாவைச்சொல்லவேண்டும். பிறகு, மரித்துவிட்டால் ஜனுஸாவுக்குச்சென்று, உள்ளச்சமாகவும், மரணத்தைக்குறித்து சிந்தித்தவனுகவும், அதனை நல்லடக்கம் செய்ய ஆயத்தமாகவேண்டும். ஜனுஸாவை அடக்கஞ்செய்ய ஆயத்தமாக்கிவைத்தால் அவனுக்கு ஒரு கீராத் பலன் உண்டு என்றும், அதனை அடக்கும்வரை கூட இருப்பவருக்கு இரண்டு கீராத் பலன் உண்டு என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஒரு கீராத் என்பது உஹுது மலையைப்போன்றது.

ஒருவருடைய சுற்றத்தார் அல்லது சிநேகிதர் ஒருவர் மரித்துவிட்டால் அவரிடம் சென்று மௌத்து விசாரிக்கவேண்டும். அதாவது அவரது துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் முறையில் அவரிடம்சென்று, அவர் கையைப் பிடித்து முஸாபஹாச் செய்து, ஆறுதல் தேறுதல் சொல்லி, ஸப்று செய்வதால் மிகுந்த நன்மையுண்டென உபதேசஞ்செய்து அவரைத் தேற்றவேண்டும், “உங்களில் மரித்தவர்களின் நன்மைகளைக் கூறுங்கள்” என்பதாக ஹதீதில் வந்திருப்பதால் மரித்தவர்களின் நற்றன்மைகளையும் நினைத்து அவருக்கு துஆச்செய்யவேண்டும்.

நோக்குதல்.

தன்னைப்பார்க்கினும் செல்வத்தில் மெலியாரை நோக்கித்தமதுடைமை பெரிதென்றெண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டும். தம்மினும் கற்ருரை நோக்கி, தற்பெருமை கொள்ளல் முத

வியவைகளை விடவேண்டும். சீமான்களையும், அநியாயக்காரர்களையும், அவர்களது பிள்ளைகளையும், அவர்களது உடமைகளையும் அதிகமாக கவனித்துப் பார்க்கக் கூடாது. இவ்வாறு பார்ப்பதால் அநேக பித்னுக்களுண்டாக இடமுண்டு. பாவிக்கு, பிதுஅத்துக்காரர்களைச் சந்தோஷமாக, திருப்தியாக சந்தித்து அளவளாவக் கூடாது. அவர்கள்பால் தமக்குள்ள வெறுப்பைக் குறிப்பால் காட்டிக்கொள்ள வேண்டும். பாவிக்கானவர்களை அவர்களிலுள்ள பாவித்தன்மைக்காக கோபமடைய வேண்டுமேயன்றி, அவர்களுக்குக் கேடுண்டாக துஆச்செய்யலாகாது. அவனது காரியத்தை அல்லாஹுத் தஆலாவின்பால் ஒப்புவித்து விட்டு, இப்பொழுதில்லா விட்டாலும் சில நாள் சென்றேனும் "அவர்கள் தௌபாச்செய்து மீளமாட்டார்களா? என்று ஆதரவு வைக்கவேண்டும்.

அக்கிரமஸ்தர்களுக்கு அவர்கள் காரியத்தில் எவ்வளவும் உதவிசெய்யலாகாது. பிறர் செய்கைகளைக் குறித்து ஆராயக் கூடாது. இவ்வாறு செய்வதால் மன நிம்மதியேற்படும். எவரையும் அவரது வெளிக்கோலத்தைக் கண்டு ஒரு முடிவுக்கு வரக்கூடாது. தனது மார்க்க பக்தி, கல்வி, பொருள் ஆகியவைகளால் பெருமை கொள்ளலாகாது. ஏழைகளை நேசித்து, மஷாயிக்குகளைக் கனப் படுத்த வேண்டும்.

சிறியாராயினும் அடிமையாயினும் எவரையும் அவருக்குரிய பெயரைக் கொண்டழைக்கவேண்டுமே யல்லாது, நாமாக ஒரு புதுப் பெயர் கொண்டழைக்கலாகாது. எவரையும் ஏசவோ, எவருடனும் பிணங்கவோ, ஆயுதங்களால் சமிக்ஞை செய்யவோ கூடாது. தனது குறைகளையும் தனது அசக்திகளையும் கவனித்து, மரணத்தையும் அதற்குப்பின்னுள்ள நிலையையும் நினைத்து இறைவனிடம் அழ வேண்டும். தும்மலின்போதும், கொட்டாவி விடும்போதும் கையை வைத்து மறைத்துக்கொள்ளவேண்டும். உமிழ்நீரை உமிழ வேண்டிய அவசிய மேற்பட்டால் கிப்லாவை நோக்கியும் வலப் புறத்திலும் உமிழக்கூடாது. இடப்புறத்திலாவது, இடக்காலுக்குப் பக்கத்திலாவது உமிழவேண்டும்.

தன்னைப்போன்ற மற்றைய மனிதர்களிடம் தேவையைச் சொல்லி, அவர்களிடம் உதவி தேடக்கூடாது. "தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மற்ற மனிதர்களை நெருங்காமல் அல்லா

ஹுத் தஆலாவினிடம் தனது தேவையைக் கூறி உதவி தேடுபவர்களுக்கு அல்லாஹுத் தஆலா மனிதர்களை அவன்பால் தேவையுள்ளவர்களாக்குவான். மனிதர்களிடம் தனது தேவைகளுக்கு உதவி தேடாமல் இருப்பது முத்தக்கியாகிய ஒவ்வொரு மூமினுக்கும் அவசியமாகும். மனிதர்களிடம் தனது தேவைகளுக்காக நெருங்குவது மரணத்தைப் பார்க்கினும் மிக கடியதாக இருக்கிறது. இது மிகப் பெரிய முஸீபத்துமாகும்.

ஜனங்களிடம் தேவையுள்ளவனுகத் தன்னை ஆக்கக்கூடாது என்று அல்லாஹுத் தஆலாவைப் பிரார்த்திப்பவர்களையும், மனிதர்களிடம் இவைகளுக்காக நெருங்காமல் பத்தினித்தனமாக இருக்க விரும்புபவர்களையும் அல்லாஹுத் தஆலா தேவையற்றவர்களாக்குவதுடன், அவர்களைப் பத்தினித்தனமாகவே இருக்கும்படிச்செய்கிறுன். தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளப்பிறரிடம் செல்லவேண்டிய நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்டு விட்டால் இரண்டு ரக்அத்துத் தொழுது, அல்லாஹுத் தஆலாவினிடம் தனது தேவையைக் கூறி முறையிட்டு, வியாழக்கிழமைக் காலையில் ஸூறத்து ஆலஇம்ரானின் கடைசியையும் ஆயத்துல் குர்ஸியையும், இன்னுஅன்ஸல்னு ஸூறத்தையும், ஸூறத்து இக்லாஸையும், ஸூறத்துல் பாத்திஹாவையும் ஓதி வெளியிற் செல்லவேண்டும். அதிலும் தக்வாவுள்ளவர்கள், உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சற்குண முள்ளவர், தர்ம சிந்தை, இரக்கம் ஆகியவைகளுள்ள அழகிய மனிதர்களிடம் செல்லவேண்டும். அனுவசியமாக முகஸ்துதி செய்து புகழவும் கூடாது. அவர்களுக்குத் தொந்தரையுண்டாக்காமல் தனது தேவையை இரகசியமாகச் சொல்லவேண்டும். அவர்கள் உதவி செய்தால் அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து, அவர்களுக்கு துஆச் செய்யவேண்டும். கொடுக்கவில்லையானுல் அதற்காக அவர்களைப் பழிக்கலாகாது. தன் தேவையைக் குறித்துச் செல்லும்போது வழக்கத்திற்கு மாறுக அவசரமாக விரைந்து செல்லாமல், அமைதியாகவும் சாவதானமாகவும் செல்லவேண்டும்.

சகோதரர்களுக்கேற்படும் தேவைகளை நிறைவேற்றுவதைக் கொள்ளை முதல்போல் கருதிச்செய்யவேண்டும். அவனது காரியத்திற்காக நடந்தால் அந்த நடைகளுக்கெல்லாம் புண்ய முண்டு.

பந்துக்கள்.

பந்துக்கள், ரத்தக்கலப்புள்ளவர்களுடன் கலந்துறவாடுவது வாஜிபு. கொடை கொடுத்தல், ஸுலாக்காத்துச் செய்தல், ஜியாரத்துச் செய்தல், துஆச்செய்தல் முதலிய காரியங்களில் இயன்ற மட்டிலும் அவர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும், அவர்களில் வயது முதிர்ந்தவர்களைத் தந்தையைப்போலும், இளையவர்களை மக்களைப்போலும் சம வயதுள்ளவர்களை சகோதரர்களைப்போலும் பேணவேண்டும். ரத்தக் கலப்புள்ள பந்துக்களைப் பகைத்தால் வயது குறையுமென்றும், அவர்களை நேசித்து உறவு கொண்டாடினுல் வயது நீளமாகுமென்றும் ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. எனவே, பந்துக்களை விசாரித்து இயன்றவரை அவர்களுக்கு உதவி புரிந்து அவர்களை இணக்கப்படுத்தி நேசிக்கவேண்டும்.

அயலகத்தார்.

அயலகத்தாருடன் சிநேகமாக இருக்கவேண்டும். அவர்களது திருப்தியை அடைய பெருமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அயலகத்தாரை கௌரவிப்பது இஸ்லாம் மதத்தின் சின்னத்துகளைச் சேர்ந்ததாகும். அயலகத்தாரைக் கௌரவிப்பது தாயைக் கௌரவிப்பது போலாகும். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசிப்பவர் அயலகத்தாரை நோவினை செய்யமாட்டார் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. அயலகத்தார் நோய் வாய்ப்பட்டால் அவரிடம் சென்று விசாரிக்கவேண்டும், தன்னுலியன்றதைக் கொடுத்துதவவேண்டும், கடன் கேட்டால் கடன்கொடுக்க வேண்டும். அவர் மக்கள் பசித்திருக்கிறுர்கள் என்பதைத் தெரிந்துகொண்டே உணவருந்தக் கூடாது. அவர்களுக்கு நன்மை ஏற்படுவதைக் கண்டு சந்தோஷமடைய வேண்டும். தீமை ஏற்படுவதால் கவலை கொள்ளவேண்டும். தனக்கிறைவனுல் கொடுக்கப்பட்டவைகளில் அவர்களையும் கூட்டாக்கிக்கொள்ளவேண்டும். அவர்களை நோவினை செய்தல், வருத்தப்படுத்தல், அதிருப்தியாக்குதல் ஆகிய காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அயலகத்தாரின் குழந்தைகளிடம் அன்பு பாராட்டவேண்டும். அயலகத்தார் எதையேனும் ஹதியாவாக அனுப்பினுல் அதனைத் துஷிக்காமல்

ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களைச் சந்தோஷமாகச் சந்திக்க வேண்டும். தன்னுடைய உணவு முதலிய பதார்த்தங்களிலிருந்தும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அயலகத்தாரால்நோவினை ஏற்பட்டாலும் அதனைச் சகித்துக் கொள்ளவேண்டும். அயலகத்தார் இல்லாத காலத்தில் அவர்கள் வீட்டையும், மனைவி மக்களையும் பேணிக்காக்கவேண்டும். இக்காரியங்களைக் கவனிக்காவிடில் கியாமத்துநாளில் அயலகத்தார் வழக்காடுவார்கள் என்று ஹதீதில் வந்திருக்கிறது. அயலகத்தார் என்பது தனக்கண்டையிலுள்ள நாற்பது வீட்டுக்காரர்களைக் குறிக்கும்.

கலந்தாலோசனை செய்யல்.

ஏதேனும் ஒருவருக்கும் கஷ்டமுண்டானால் அதற்காக கவலையுடன் எப்பொழுது மிருக்காமல் கவலையை விட்டொழித்துப் பொறுக்கவேண்டும். பொறுமை செய்வதால் அப்புறம் அதற்குத் தக்கவாறு சந்தோஷமும் சௌகரியமும் ஏற்படும். எனவே, அவசியமான முக்கியமான காரியமேற்பட்டால் அல்லாஹுத்தஆலாவினிடம் அதனைக் குறித்து இஸ்திகாராச் செய்யவேண்டும். இஸ்திகாராச் செய்தவர் நஷ்டமடையார் என்று ஹதீதில் வந்திருப்பதுடன், எக்காரியமானாலும் இஸ்திகாராச் செய்து, அக்காரியத்தைச் செய்யும்படி கூறி, அதனை நிறைவேற்றவேண்டிய முறையையும் காண்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். இஸ்திகாராத்தொழுகை என்று நிய்யத்துச் செய்து இரண்டு ரக்கஅத்துத் தொழுது ஸலாம் கொடுத்துப் பிறகு ஸுஜூதில் தனது காரியத்தை குறித்து இறைவனிடம் கூறி இக்காரியம் எனக்கு நன்மையானதாக இருந்தால் அதனை எனக்குச் சுலபமாக்கிக் கொடுத்தருள். அது தீங்கானதாக இருந்தால் அதனை என்னை விட்டு மாற்றிவை என்பதாக துஆக்கேட்கவேண்டும். இவைகளில் இன்னும் பல முறைகளிருக்கின்றன. அவைகளை விரிவான நூல்களில் காண்க.

இஷ்திகாராச் செய்தபிறகு அக்காரியத்தில் அனுபவமும் பரிச்சியமுமுள்ளவர்களில் பத்துப்பேர்களிடம் கலந்தாலோசனை செய்ய வேண்டும். பலர் இல்லாவிடில் ஒருவரிடத்திலேயே பத்து முறை கலந்து பேசிக்கொள்ளவேண்டும். உலுத்தன், கோழைமனத்தினன், தன்இனத்தாருக்குமாறு செய்பவன் ஆகியவர்களிடம் கலந்தா

லோசனை செய்யலாகாது. தன் மனைவியிடத்தில் யோசனை கேட்டால் அவள் கூறும் யோசனைக்கு மாறு செய்யவேண்டும்.

இரண்டில் ஒன்றைச் செய்யவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தால் இரண்டிலும் சுலபமானதைச் செய்யவேண்டும். சொல்லல், செய்தல் முதலிய சகல காரியங்களிலும் க்ஷேமத்தையும் லாபத்தையும் தரும்படி இறைவனிடம் பிரார்த்தித்து விட்டு, அஊது, பிஸ்மில்லாவுடன் எக்காரியத்தையும் ஆரம்பிக்கவேண்டும். இறைவனிடம் பிரார்த்தித்த விபரத்தைப் பிறரிடம் கூறக்கூடாது.

பால்பார்த்தல்.

ஒருகாரியத்தைக் குறித்து ஆலோசனை செய்யும்போது அல்லது தொடங்கும்போது பிறவாக்குகள் ஏற்படுவதைக் கவனிக்கலாம். நல்லசொல் காதில் விழுந்தால் நல்லது. ஒரு செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது தும்மல் விழுந்தால் நல்லது. குர்ஆனைக்கொண்டு பால் பார்ப்பது ஆகும் என்றும் ஆகாதென்றும் வந்திருக்கிறது. மற்றபடி குறிபார்ப்பது கூடாது.

ஜீவ ஹிம்ஸை

மாடுகளைக்கொண்டு பயிர்செய்யவேண்டும். அதன் மீதேறிச் சவாரி செய்யலாகாது. ஆனால், சுமை ஏற்றலாம். கழுதையைக் கொண்டு பயிர்செய்யலாகாது. சுமை ஏற்றலாம். சவாரிசெய்யலாம் நம்முடைய இந்நாட்டில் கழுதைகளின்மீது சவாரிசெய்யும் வழக்கமில்லை. ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களிலும் அரேபியா, இராக், ஈரான் முதலிய தேசங்களிலும் கழுதைகளைச் சவாரிக்கு உபயோகிக்கிறார்கள். நாற்கால் பிராணிகளாயினும், பக்ஷியினங்களாயினும் சரி, ஜீவராசிகளிடத்திலும் பட்சமாகவும், கிருபையாகவும் நடந்துகொள்ளவேண்டும். இவைகளின்பால் கிருபை கொள்பவர்களுக்கு இறைவனும் கிருபைசெய்வான். எப்பிராணியையும் முகத்திலடிக்கக்கூடாது. வதைசெய்யலாகாது. குருவியை வீணாகக் கொன்றால் கியாமத்து நாளில் அதனை அறுத்துப் பிரயோஜனப்படுத்தாததால் ஏன் அதனை வீணாக்கினாய் என்பதை குறித்து கேள்வி கணக்குக்கேட்கப்படும். எப்பிராணியையும் நெருப்பில் வேதனை செய்யலாகாது. நெருப்பில் வேதனை செய்யும் உரிமை அல்லாஹுத் தஆலாவிற்குத் தானிருக்கிறது.

பிராணிகளை அங்கஹீனம் செய்வதும், சூடு போடுவதும் கூடாது. எறும்பு தொந்தரை செய்தாலல்லாமல் அவைகளைக் கொல்லலாகாது. பேனை எச்சமயத்திலும் கொல்லலாம். தேன் குழவி, ஹுத்ஹுத், தவளை, பூமியிலுள்ள பூச்சி இவைகளைக் கொல்வதும், பறவைகள் கூட்டில் அடைந்திருக்கும்போது அவைகளைப் பிடிப்பதும் கூடாது.

எலி, நட்டுவக்காலி, பருந்து, கடிநாய், காக்கை, இவ்வைந்து வகைப்பிராணிகளையும் ஹறம் ஹில் ஆகிய இரண்டிடங்களிலும் கொல்லலாம். கோழி, புறு ஆகிய பிராணிகளைப் பிடித்துக் கொல்வதன் மூலம் மனிதர்களுக்கு இடைஞ்சல் செய்யும் பூனையை அறுத்துக் கொல்லலாம், அதனைப் பூமியில் புதைப்பது நல்லது. இதுபோல மனிதருக்குத் தீங்கு செய்யும் சகலத்தையும் கொல்லலாம்.

மிருகங்களின் நரம்புகளைக் குத்தி ரத்தமெடுத்தல், சூடு போடல் ஆகியவைகளால் அவைகளுக்கு நோய் முதலிய சிகிச்சை செய்வது ஆகும். எப்பிராணியையும் காலால் மிதித்தல், லஃனத்துச் செய்தல், பரிகாசம் செய்தல், பார்க்க அவலக்ஷணமாகத் தோன்றும் பிராணிகளைக் குறைகூறல் ஆகியவைகள் கூடா. ஒன்றைக் குறை கூறுவது அதனைச் சிருஷ்டித்த இறைவனைக் குறை கூறுவதாக ஏற்படுகிறது. மிருகங்களை ஒன்றுக்கு எழுபது முறை கவனித்துத் தீவனம் தண்ணீர் கொடுத்து நன்ருய் வளர்க்க வேண்டும்.

பல்லி, குழவி, ஓந்தி, கடி எறும்பு, செள், வண்டு, மூட்டைப் பூச்சி, கொசு, கரடி, புலி, ஓநாய், கழுகு இவைகளை அடித்துக் கொல்லலாம். ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்களை வதைப்பதற்கென்று வளர்த்த நெருப்பைப் பல்லி ஊதி விட்டதால் அதனைக் கொல்வது வாஜிபு. அது நஞ்சுள்ளது, முக்கியமாக உப்பில் அது எச்சமிடும், அதனை ஒரே அடியில் கொன்ருல் நூறுநன்மைகள் எழுதப்படும் என்றும், இரண்டாவது மூன்ருவது அடியில் கொன்ருல் அதற்குக் குறைவாக நன்மைகள் எழுதப்படும் என்றும் வந்திருக்கிறது. நச்சுப் பல்லி என்று சொல்லப்படுகிற பெரிய பல்லியைத் தவிர்த்து பாக்கியுள்ள பல்லிகளைக் கொல்வது சுன்னத்து.

பாம்பைக்கண்டால் அல்லாஹும்ம இன்னு நஸ்அலுக்க பி அஹ்தி நூஹின் வ சுலைமானப்னி தாவூத அலைஹிமிஸ்ஸலாம் அன்லா தூதீனு வலா தக்ருஜி அலைனு என்று மூன்று முறை கூறி, நான்காவது முறையில் அதனை அடித்துவிடவேண்டும். நல்ல பாம்பைக் கொல்வதற்கு ஒரு காபிரைக் கொன்ற புண்ணியம் கிடைக்குமென வந்திருக்கிறது. தொழுதுகொண்டிருக்கும்போது பாம்பைக்கண்டாலும் அதனைக் கொல்லவேண்டும். பாம்பு, தேள், நட்டுவக்காலி இவைகளின் தங்கடத்தைப் பயப்படும்போது ஸலாமுன் அலா நூஹின் பில் ஆலமீன என்று கூறினால் அவைகளால் தீங்கு நேரா வென்று சொல்லப்படுகிறது.

பூனைக்கும், வீட்டைச் சுற்றித் திரியும் பிராணிகளுக்கும் உணவு போடவேண்டும். வெள்ளைச் சேவலை ஏசுவதும், செள்ளை முனிவதும் கூடாது. அது தொழுகைக்கு அழைக்கிறது. இது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஸுப்ஹு தொழுகைக்கு எழுப்பிவிட்டது.

ஆடு மாடுகளை வைத்துக்கொள்ளல்.

ஆட்டை அதன் காதைப்பிடித்திழுக்கக்கூடாது. அதன் பிடரியின் முன் புறத்து மயிரைப்பிடித் திழுக்கவேண்டும். ஆடு மாடு போன்றவைகளை கல், மணலிலுள்ள பூமிகளில் சூடு அதிகமிருக்கும் போது மேய்க்காமல் கெட்டித் தரையில் மேய்க்கவேண்டும். பாலுக்கும், பலுக்குவத்துக்கும் இதர பிரயோஜனங்களுக்கும், ஆடு மாடுகளை வைத்திருந்தால் கருப்பும் வெள்ளையுமுள்ளவைகளைத் தெரிந்தெடுத்துக்கொள்வது நல்லது.

வியாபாரம்.

சம்பத்தில் ஒன்பது பங்கு வியாபாரத்திலும் வெள்ளாண்மையிலும், ஒருபங்கு காட்டில் ஜீவித்திருக்கும் ஆடு, மாடு, தாரா, கோழி போன்றவைகளிலுமிருக்கிறது.

சம்பத்தைத்தேடும் விஷயத்தில் காலை நேரத்தில் முயற்சி செய்யவேண்டும். பிறரிடம் யாசகம் செய்யும் கேவலத்தை விட்டு விலகியும், பேராசையில்லாமலும் ஹலாலான முறையில் தன் உணவைத் தேடிச் சம்பாதிப்பது பர்லு. சன்மார்க்கத்தில் விதிக்

கப்பட்ட தொழில் மூலம் சம்பாதிப்பது சுன்னத்து. யாசகஞ் கேட்காதிருப்பதற்காகவும், தன் மனைவி மக்களுக்காகவும், அயலகத்தாருக்கு உதவிபுரிவதற்காகவும், இவ்வுலகத்தின் சம்பத்தை ஹலாலான முறையில் தேடினால் அவனது முகம் பதினான்காம் நாள் பூரண சந்திரன் இலங்குவதுபோல இலங்கும்படியான நிலைமையில் அவன் அல்லாஹுத் தஆலாவைச் சந்திப்பான். பெருமைக்காகவும், மேலதிகமான சொத்துக்காகவும் உலகைச் சம்பாதிப்பானாயின், அவன் மீது அல்லாஹுத் தஆலா கோபமாக இருக்கிற நிலைமையில் அவனைச் சந்திப்பான். ஹலாலானதைத் தேடும் விஷயத்தில் வருத்தப்பட்டவனாக இராப் பொழுதைக்கழிப்பானாயின் சுவர்க்கம் அவனுக்கு வாஜிபாகிவிட்டது. அவன்பால் அல்லாஹுத் தஆலா திருப்தியடைந்தவனாக அவன் இராப்பொழுதைக் கழிப்பான். நாற்பது நாட்கள் வரை இடைவிடாமல் ஒருவன் ஹலாலான உணவை அருந்தினால் ஹிக்மத் என்னும் அறிவின் ஊற்றுக்களைப் பிரகாசமுள்ளவைகளாக்கி அவனது இருதயத்திலிருந்து நாவில் இலங்கும்படி ஓட்டிவைப்பான் என்று ஹதீதில் வந்திருக்கிறது.

மறுஉலக வாழ்வு இவ்வுலக வாழ்வைப் பார்க்கினும்மிக மேலானது. மறுஉலக வாழ்வில் நன்மையை யுண்டு பண்ணும் காரியங்களைப் பார்க்கினும் இவ்வுலக பாகங்களை யுண்டுபண்ணுங் காரியங்களைத் தேடாமல் இருப்பின் லா இலாஹ இல்லல்லாஹு என்னும் கலிமா அல்லாஹுத் தஆலாவின் கோபத்தைத் தட்டி விலக்குகின்றதாகிவிடும்.

சில பாவங்கள் சம்பத்தைத் தேடுவதற்காகவுள்ள துக்கமேயன்றி, அவைகளுக்குத் தண்டமாகாது என்று ஹதீதில் வந்திருக்கிறது.

யாசகம் கேட்காமலிருப்பதற்காகவும் பிறரிடம் தேவைப்படாமலிப்பதற்காகவும், பிறருக்கு உபகாரம் செய்வதற்காகவும் தொழில் செய்வதாக நிய்யத்துச் செய்யவேண்டும். அல்லாஹுத் தஆலாவின் திக்ரையும், மறுஉலகின் வாழ்வை அளிக்கக்கூடிய காரியங்களையும் விட்டுவிலக்கும் தொழில்களைச் செய்யலாகாது. சரக்குகளைவாங்கி விற்காமல் சேமித்துவைப்பது கூடாது. இது

மனிதர்களுக்கு சங்கடத்தையுண்டுபண்ணும். கசாப்புத் தொழில், நகை செய்யுந் தொழில்களைப் பேணவேண்டும். இவை மனிதனின் உள்ளத்தைக் கெடுத்து விடுவன. கொம்பு வைத்து ரத்தம் குத்தி வாங்குதல், தோல் ஊரக்கட்டுதல், குப்பை கூட்டல் ஆகிய தொழில்களைச் செய்யாதிருப்பது நல்லது. ஏனெனில் இவைகளி ஞல் மனிதனின் புறம் அசூயையாகிவிடும். தரகு தொழில், காசுக்கடை, கபன் செய்யல், பட்டு பொன் வெள்ளிப் பாத்திரம் இவைகள் போன்றவைகளை விற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஆனல், இத்தியாதி தொழில்களில் ஒரு சிலர் இருந்து வரவேண்டியதவசியமாகும். இல்லையேல் பொது ஜனங்களுக்கு இதனல் அசௌகரிய மேற்படும். ஆதலால், அவ ரவருக்கு லாயக்கான வேலையில் ஈடுபடவேண்டும்.

சாமான்களை விற்பனை செய்யும்போது பொய்யாகவோ மெய்யா கவோ சத்தியஞ் செய்யக்கூடாது. விற்பனையில் மோசடி செய்ய லாகாது. கூலிக்காரர்களது கூலியை அவர்களது வியர்வை உலரு வதற்கு முன் கொடுத்துவிடவேண்டும். கடன் வாங்கினல் கொடுக்க வேண்டிய தவணைக்கு முன்னதாகவே மலர்ந்த முகத்துடன் வாங் கிய கடனைக் கொடுத்துவிடவேண்டும். அவ்வாறு கொடுக்க இய லாவிட்டாலும் அவ்வாறிருக்கவேண்டுமென்ற உறுதி இருக்க வேண்டும். இவ்வாருன உறுதியுள்ளவர்களுக்கு அக்கடன் தீரும் வரை அவனைத் தீர்த்துவைக்கும்படி மலக்குகள் துஆச் செய்வார் கள். சரக்கு விற்பனையிலோ கொள்முதல் செய்வதிலோ மலர்ந்த முகமாக இருப்பதுடன், ஆசாமிகளுக்கு லாப மேற்படவேண்டு மென்பதையுங் கருதவேண்டும்.

முன்னேர்களின் தொழில்களான பயிர் செய்யல், கூலிக்குச் சுமை யெடுத்தல், தச்சு, தையல், துணி வெளுத்தல், செருப்பு மோஜாபோன்றதைத் தைத்தல், ஆடு, மாடு, ஒட்டகைகளை மேய்த் தல், எழுத்துவேலை இவை போன்றவைகளைத் தெரிந்தெடுத்துக் கொள்வது நல்லது.

"உங்கள் வியாபாரங்களில் மேலானது ஜவுளி. கைத்தொழில் களில் மேலானது செருப்பு கிர்பா போன்றவைகளைத் தைத்தல்" என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. எந்தத்தொழிலில் லாப

மிருக்கிறதோ அந்தத்தொழிலை விடக்கூடாது. ஒரு வியாபாரத்தை மூன்று முறை செய்தும் அதில்லாபமில்லையாயின் அதனை விட்டு விட்டு வேறு வியாபாரத்தைச் செய்யவேண்டும்.

வீடு கட்டல்.

தனக்குத் தேவையுள்ள அளவிற்கு மட்டிலும் வீடு கட்ட வேண்டுமேயன்றி அதற்கு மேல் அதிகமாகச் சுண்ணும்பு செங்கல் முதலியவைகளில் செலவு செய்யும் பணத்தில் நன்மை இல்லை என்று வந்திருப்பதால் அனுவசியமாகக் கட்டிடத்தில் செலவு செய்யக்கூடாது. ஞாயிற்றுக்கிழமை பூமி சிருஷ்டிக்கப்பட்ட நாளாக இருப்பதால் அத்தினத்தில் கட்டிடவேலையை ஆரம்பிக்க வேண்டும். கட்டிடத்தின் உயரம் 6 அல்லது 7 முழமிருக்கவேண்டும். அதனைப்பார்க்கினும் அதிக உயரமாகக் கட்டுபவர் கியாமத்து நாளில் அதனைச் சுமந்து கொண்டுவருவார்கள்.

கட்டிடம் கட்டும்போது காபிர்களிடம் சாஸ்திரம் பார்ப்பதும், காபிர்களுக்கு உரிமஞ்சள் முதலியவைகளைக் கட்டிடத்தில் தடவுவதும் இதுபோன்ற இதரகாரியங்களும் செய்யக்கூடாது. இதனுல் ஈமானுக்குப் பிசகு வந்து நேரிடும். வீடு கட்டும்போது இதில் அல்லாஹுத் தஆலாவை வணங்குவதையும் குளிர் வெய்யல் முதலியவைகளை விட்டுத் தன்னைக் காத்துக்கொள்வதையும் நிய்யத்துச் செய்யவேண்டும். அவ்வாறு நிய்யத்துச் செய்யவில்லையாயின் அவ்வீடு அவன்மீது சுமையாகிவிடும்.

ஓரேமுறையில் வீட்டைக் கட்டி முடிக்காமல் தினசரி ஒரு படைவீதம் சுவர் வைத்துக் கட்டவேண்டும். வீட்டில் மலம் ஜலம் கழிக்கவும், ஒலுச்செய்ய, குளிக்கவும், விருந்துக்கும், ஸ்திரீகள் தொழுவதற்கும், ஆடவர்கள் நபில் போன்ற வணக்கங்களைப் புரிவதற்கும் தனித்தனியே வசதிகளை ஏற்படுத்தி வீடுகள் கட்டவேண்டும். வெள்ளிக்கிழமை இரவில் குடிபுகவேண்டும். அதுபோழ்து அதில் ஹறுமான செலவு செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் அவ்வீடு கெடுவதற்கு அது அடித்தளமாகும். வீட்டில் நகாசுவேலை செய்வதும் சிலைகள் எழுதுவதும்கூடாது. அப்படிச் செய்தால் றஹ்மத்துடைய மலக்குகள் அகலுவார்கள். ஆனுல், சிலைகளில் தலையை அகற்றி விட்டால் அல்லது அழித்துவிட்டால் குற்றமில்லை.

ஜீவப்பிராணியல்லாத மரம் செடிபோன்றவைகளை எழுதுவது குற்றமில்லை. சித்திர வேலைசெய்து திரைபோட்ட வீடுகளில் நமது நாயகம் (ஸல்) அவர்கள் செல்லமாட்டார்கள். தங்கள் வீட்டுச் சுவர்களை துணிகளைக் கொண்டுமறைக்கவும் அலங்கரிக்கவு மாட்டார்கள். ஐவாய் மிருகங்களின் தோல்களை வீட்டில் விரிக்கவுமாட்டார்கள். ஆதலால், நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்துகளாகிய நாமும் அவ்வாறு செய்யாமலிருக்கவேண்டும்.

நாய் முதலியவைகளை வளர்த்தல்.

வீட்டில் நாயை வளர்க்கலாகாது. ஆனல், கிடைக்காவலுக்கும் வேட்டைக்கும், ஒற்றை வீட்டுக்காரர்கள் காவலுக்காகவும் நாயை வளர்க்கலாம். இதுபோலவே ஐவாய் மிருகங்களையும் வளர்க்கலாகாது.

பாக்கத்தை யுண்டுபண்ணுங் காரியங்கள்.

வீட்டையும், அதன் முற்றத்தையும், அவைகளைச் சுற்றியுள்ளவைகளையும் கூட்டிச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். சுத்தம் ஈமானில் நின்றுமுள்ளது. சுத்தம் சுகம் தரும். வீடுகூட்டுதல், பாத்திரங்களைக் கழுகுதல், அழகாக எழுதுதல், தெளிவாகப்பேசுதல், மலர்ந்த முகத்துடனிருத்தல், அமுதமொழிகளும், வணக்கம் புரிவதற்காக விடியற்கால வேளையில் எழுந்திருத்தல், ஸுப்ஹு தொழுதபிறகு சூரியோதயம் வரை மஸ்ஜிதிலேயே அமர்ந்திருந்து, சூரியோதயத்திற்குப் பிறகு இஷ்ராக் தொழுதல், ஸுறத்துல் இன்ஷிராஹ், ஸுறத்துல் வாக்கிஆ ஆகிய ஸுறத்துகளை மிகுதமாக ஓதுதல், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது அதிகமாக ஸலவாத்தை ஓதல் ஆகியகாரியங்கள் சம்பத்தை இழுத்துக்கொண்டு வரும். பர்ளுத் தொழுகைகளை பயபக்தியுடன், உள்ளச்சத்துடன், நிதானமாகத் தொழுதல் சம்பத்து அதிகமாகுவதற்குப் பலமான காரணமாகும்.

தரித்திரத்தை யுண்டாக்கும் காரியங்கள்.

நிர்வாணமாகவும், முட்டுக்குமேல் துணியை நீக்கிக்கொண்டும் நித்திரைசெய்தல், நிர்வாணமாகச் சிறுநீருக்கிருத்தல், ஜுனுபாளியாக இருக்கும்போது உணவருந்தல், கீழேவிழுந்த உணவை

அலக்ஷியமாகத் தள்ளிவிடுதல், வெங்காயத்தை அல்லது பூண்டைச் சுடுதல், இராக்காலங்களில் வீட்டைக் கூட்டிப் பெருக்குதல் கூட்டின குப்பையை வீட்டில்போடுதல், தாய், தந்தை, மஷாயிக் ஆகியவர்களைப் பிந்திவரச்செய்து அவர்களுக்கு முதலில் நடத்தல், அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தல், கரடுமுரடான வஸ்துக்களைக்கொண்டு பற்குத்தல், மண், சேறு, இவைகளால் இரண்டுகைகளையும் கழுவுதல், வாசற்படியில் உட்காருதல், நிலையின்மீது சாய்தல், உடுத்தாடையை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளல், உடுத்திக்கொண்டு துணியை தைத்தல், உடுத்தும் புடவையால் முகத்தை துடைத்தல், உடுத்தும் பிடவையால் மூக்கை சிந்துதல், உடுத்திய புடவையில் கொஞ்சத்தைத் தலைக்கு வைத்து படுத்தல், வீட்டில் ஒட்டரையை விட்டுவைத்தல், தொழுகையைப் பொடுபோக்காகத் தொழுதல், ஸுப்ஹு தொழுதபிறகு மஸ்ஜிதில் தாமதிக்காமல் விரைவாக வெளியில் வந்துவிடல், காலையில் கடைத்தெருவுக்குச் செல்லல், பக்கீர்களுக்கு அநியாயம் செய்தல், அவர்கள் யாசகமெடுத்த வஸ்துக்களை விலைக்குவாங்குதல், தூஷணமான வார்த்தைகளைப் பரிகாசமாகப் பேசி கல கல வென்று சிரித்தல், பேனைக் கொல்லாமல் விடுதல், விளக்கை வாயால் ஊதி அணைத்தல், பாத்திரங்களை மூடாமல் திறந்துவைத்தல் முதலியவைகள் தரித்திரத்தை யுண்டுபண்ணும். ஆனால், இவைகளுக்குச் சரியான ஹதீதுகள் ஆதாரமில்லை யென்று சிலர் கூறுவர்.

(வஹ்ஹாபிகள் இவைகளை பிதுஅத்துகளென்றும், இவைகளை நம்புவது ஷிர்க்கு என்றும் கூடக் கூறுவர். ஆதலால், இவைகள் யாவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஹதீதுகளிலுள்ளவை என்று நம்பாமல் பெரியோர்களால், அனுபவப் பூர்வமாகக் கூறப்பட்டவை என்று நம்பிக்கைகொள்ளவும். இவைகளிற் சில ஹதீதுகளிலும் கூறப்பட்டிருக்கின்றன. சில முற்காலத்துப் பெரியோர்களான இமாம்களாலும் பேரறிஞர்களாலும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளை வெவ்வேறாகப்பிரித்து, இவைகளுக்குள்ள ஹதீதுகளையும், இமாம்களின் சொற்களையும் விபரமாக எழுத இச்சிறு நூல் இடங்கொடுக்காததால், விரிவான கிரந்தங்களில் அவைகளைத் தெரிந்து கொள்க.)

பாத்திரங்களை பிஸ்மில்லாச் சொல்லி மூடவேண்டும். மூடுவதற்குத் தகுந்த சாமான் கிடைக்க வில்லையாயின், பாத்திரத்து

வாயின்மீது அகலத்தில் ஒரு கம்பை பிஸ்மில்லாச் சொல்லி வைக்க வேண்டும்.

வீட்டில் பிரவேசித்தல்.

வீட்டில் புகுதும்போது பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் என்று சொல்லி புகவேண்டும். உள்ளே மனிதரிருந்தால் ஸலாம் சொல்லவேண்டும். ஆளில்லாவிடில் அஸ்ஸலாமு அலேனு மின் றப்பினு வஅலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் அதாவது நமது றப்பிலிருந்து நமக்கும், அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கும் ஸலாம் உண்டாவதாக என்று சொல்லவேண்டும். அப்புறம் குல்ஹுவல்லாஹு ஸூறத்தை ஒருமுறை அல்லது மும்முறை ஓதவேண்டும். வீட்டிலிருந்து வெளியில் வந்தால் இடதுகாலே முதலில்வைத்து பிஸ்மில்லாஹி தவக்கல்து அல்லாஹி அதாவது அல்லாஹ்வின் மீது பொறுப்புக் கொடுத்திருக்கிறேன். அல்லாஹ்வின் திருப்பெயரால் வெளியில் வருகிறேன் என்று கூறவேண்டும். வீட்டினுள் சாம்பிராணி போன்ற மணமான பொருள்களைத் தூபம்போடவேண்டும். இது முஸ்தஹப்பு. இப்படிச் செய்வதால் தரித்திரம் நீங்கி சீமான் தனமுண்டாகுமென்று தஃலீமுல் முத்தஅல்லிம் என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

விரிப்பு.

தனக்கொன்றும், தன்மனைவிக்கொன்றும், விருந்தாளிக்கொன்றும் எனமூன்று விரிப்புகளை வைத்துக்கொள்ளலாம். அதிகமாக நான்காவது இருப்பது ஷைத்தானுக்காயிருக்கும், அதிலும் நடுத்தரமானதாக இருந்தால் போதுமானது என்று வந்திருப்பதால், தனக்குள்ள அவசியத்திற்குத் தக்கவாறு விரிப்புகளை வைத்துக் கொள்ளலாம். அனுவசியமாக அதிகப்படியான விரிப்புகளை வைத்துக்கொள்வது நல்லதல்ல.

காய் கனிகள்.

காய்கனிகளில் முதலாவதாகக் கொய்யப்பட்ட முந்தினபலன் கொண்டுவரப்பட்டால் அதனைகையிலும் வாயிலும் வைத்துக் கொண்டு அல்லாஹும்ம பாரிக்லனு பீ தமரினு வ பாரிக்லனு பீ மதீனத்தினு வ பாரிக்லனு பீ ஸாஇனு வ பாரிக்லனு பீ முத்தினு

அதாவது "நாயனே எங்களது கனியில் எங்களுக்கு பரக்கத்துச் செய். எங்களது நகரில் எங்களுக்கு பரக்கத்துச்செய். எங்களது மரக்காலில் எங்களுக்கு பரக்கத்துச்செய், எங்களது முகத்தில் எங்களுக்கு பரக்கத்துச்செய் என்று பிரார்த்தித்து அவைகளை சிறு பிள்ளைகளுக்கு முதலாவதாகக் கொடுக்கவேண்டும். கனிகளை அவைகளின் முதற்பலன் காலத்தில் அதிகமாகப் புசிக்கலாம். ஓய்வு காலத்தில் அவைகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

கனிவர்க்கங்களை ஒற்றைப்படப்புசித்தால் எவ்வித தங்கடமும் வராது. வெள்ளரிக்காயை உப்பில் தேய்த்தும், அக்ரோட் என்னும் பழத்தை பேரீத்தம் பழத்துடனும் தின்னவேண்டும். வெள்ளரிக்காயை அதன் அடிப்பக்கத்திலிருந்து புசிக்கவேண்டும். புட்டுப் பழத்தை தேனுடன் புசிக்கவேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கத்தரிக்காயைப் புசித்து விட்டு, அதன் பிரயோஜனத்தைக் குறித்தும் பின்வருமாறு கூறி இருக்கிறார்கள்:—

"ஒருவர் அதனை நோய் என்றெண்ணிக்கொண்டு புசித்தால் நோயாகவும், மருந்தென்றெண்ணிக் கொண்டு புசித்தால் மருந்தாகவும் இருக்கும். அல்லாஹுத் தஆலாவை விசுவாசித்த மரங்களில் அது முதன்மையானது. ஆதலால், அது ஹிக்மத்து என்னும் அறிவை உண்டுபண்ணும் சிறு நீர்பாதையைக் கெட்டிப்படுத்தும், தாதை அதிகப்படுத்தும். அது நல்லதற்காரி. அதில் ஜைத்தூன் எண்ணெய்யை விட்டு மெல்லினமாகப் பக்குவஞ் செய்து அதனை அதிகமாகப் புசியுங்கள்."

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தற்காரிகளில் சுரக்காய் மிகப் பிரியமானது. அது இருதயத்தை இரக்கச்சித்தமுள்ளதாக்கும். கீரைகளில் சௌக்கு என்ற பருப்புக்கீரை மிகப் பிரியமானது. அதற்கு ஹிந்திப்பாஷையில் ஹுர்பா என்று பெயர். எனவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிரியமாக இருந்ததை ஒவ்வொரு மூமினும் பிரியப்படவேண்டும்.

கர்பஸென்ற ஒருவகை ஓமக்கீரை ஹஜ்றத்கிலுறு (அலை), இல்யாஸ் (அலை) ஆகியவர்களது உணவாக இருக்கிறது. அக்கீரைக்கு கர்கஸபென்று பாரஸீகப் பாஷையில் கூறுவார்கள். ஹிந்தியில்

அஜ்மூதென்று பெயர். அக்கீரையைப் புசிப்பதால் ஞாபக சக்தியுண்டாகும். இருதயம் சுத்தமாகும். பயித்தமும் குஷ்டமும் நீங்கும்.

வெள்ளைப்பூண்டு, வெங்காயம் இவை இரண்டையும் வேகவைத்துப் புசிக்கவேண்டும். பச்சையாகப் புசிப்பது மலக்குகளை நோவினை செய்வதாக இருக்கிறது. அத்திப்பழம் கல்லைப மெல்லினமாக்கும். கொடி முந்திரிப்பழத்தை ஒவ்வொன்ருகப் புசிக்க வேண்டும். பேரீத்தமரத்தின் பச்சைக்காயை அதன் உலர்ந்த பழத்துடனும், கொடி முந்திரிப்பழத்தை அதன் உலர்ந்த பழத்துடனும், அக்ரோட்டு, பாதம் ஆகியவைகளின் பச்சைக்காயை அதன் உலர்ந்த பழத்துடனும் புசிக்கவேண்டும், இப்படிச் செய்வது ஷைத்தானைக் கோபமாக்கும்.

ஸுப்ஹு நேரத்தில் நல்ல பேரீத்தம் பழத்தின் சுளைகளைப் புசிப்பது அன்றையதினத்தில் நஞ்சையும், செய்வினையையும் தடுத்துவிடும். நோய்களுக்குத் தேனை உபயோகித்து குணத்தைத் தேடிக்கொள்ளவேண்டும். அதி இறைவனல் பரக்கத்துச் செய்யப்பட்டது. 70 எழுபது நபிமார்கள் அதில் பரக்கத்துச் செய்யும்படி இறைவனிடம் துஆக் கேட்டிருக்கிருர்கள்.

கருஞ்சீரகம் மரணம் ஒன்றைத்தவிர மற்றைய நோய்களுக்கு சஞ்சீவியாக இருக்கிறது. சிர்க்கா அதாவது காடி இறைச்சிகளில் போட, இதர கூட்டுக்கறிகளில் சேர்க்க மிகப் பிரயோஜனகரமானது. ஆனல், காம இச்சையை மிகக் குறைத்துவிடும். இதனல் தான் நபிகள் நாயகம் (ஸல்), அவர்களுக்குப் பிறகு நம்பிராட்டிமார்கள் கீரையில் மிகுதமாக ஸிர்க்காவை உபயோகித்து வந்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இராக்காலங்களில் தொழுவதற்கு முதுகில் பலமுண்டாகுவதற்காக ஹரீஸாவைப் புசிக்கும்படி ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறினர்கள். ஹரீஸா என்பது கோதுமை மாவினல் செய்த கூழ். இவ்வாலோசனையின்படி நாயகம் (ஸல்) அவர்கள் சாப்பிட்டுவந்ததால் 40 ஆடவர்களுக்குள்ள பலம் கொடுக்கப்பட்டது.

மாதுளம் பழத்தில் சுவர்க்கத்து ஜலத்தின் ஒரு துளி இருப்பதாக வந்திருப்பதால் மாதுளம் பழத்தில் வேறு எவரையும் கூட்டாக்காமலும், அதிலுள்ள ஒரு மணியையேனும் பழுதாக்காமலும் அதன் குடலுடன் அதாவது மெல்லிய தொலியுடன் புசிப்பது முஸ்தஹப்பு.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மணமான ஒரு வஸ்து காணிக்கையாக அனுப்பப்பட்டால் அதனை முகராமலும், ஒரு இனிப்பான வஸ்து காணிக்கையாக அனுப்பப்பட்டால் அதனை ருசிக்காமலும் தட்டமாட்டார்கள். பித்தீக் என்னும் வத்தக்காயில் சுவர்க்கத்து ஜலத்திலிருந்து ஒரு துளி இருக்கிறது. அதனுடைய தொலி, குடல், விதை முதலியவைகளில் எதனையும் தள்ளாமல் அருந்த சக்தி இருந்தால் அவ்வாறு அருந்தி பரக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வத்தக்காயில் இல்லாத இன்பம் சுவர்க்கத்து உணவுகளில் இல்லை என்று வந்திருக்கிறது. மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வலக்கரத்தில் ரொட்டியையும், இடக்கரத்தில் வத்தக்காயையும் வைத்துக்கொண்டு, அதிலொரு முறையும் இதிலொரு முறையுமாகத் தின்பார்கள். ரொட்டியுடன் வத்தக்காயைச் சேர்த்து ஒருவன் தின்பானாயின் அவனைவிட்டு எழுபது வகை நோய்களை அல்லாஹுத் தஆலா நீக்குவான் என்றும் கூறுவார்கள்.

குறிப்பு:—வத்தக்காய் என்பது நம் நாட்டிலுள்ள கர்போஜா தர்போஜா பழங்களாகும், கர்போஜா பழம் மஞ்சள் தொலியுள்ளது, வெள்ளரி விதைபோன்ற விதைகள் அதற்குண்டு. வெள்ளரிப் பழத்தைப்போல்தான் அதன் பழமுமிருக்கும், ஆனால் மதுரம் மாத்திரம் வெள்ளிரிப் பழத்தைப்பார்க்கினும் அதிகமாக இருக்கும். வெள்ளரி நீண்டிருக்கும் கர்போஜா உருண்டிருக்கும். தர்போஜா என்பது பார்வைக்கு கர்போஜாவைப்போல் உருண்டிருக்கும். உள்ளே உள்ள விதைகளும் பழமும் கர்போஜாவைப்போலிருக்காது. தர்போஜாவுக்கு விதை கருப்பாக பூசுணிக்காய் விதையைப்போல் சற்று கெட்டியாகவுமிருக்கும். இதனைத் தமிழர்கள் தண்ணீர் புசுணிக்காய் என்றுங் கூறுகின்றனர். கர்போஜா பழத்திற்கு மட்டிலும்தான் பித்தீக் என்று சொல்லப் படுவதாகவும் கூறுகிறார்கள்.

மாவும் பாலும் சேர்த்துச் செய்யப்படும் மிருதுவாகிய பணியாரம் சலிப்பாளிகளின் சலிப்பை நீக்கும். நோயாளிகளின் இருதயத்தைச் சந்தோஷப்படுத்தும்.

நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிரியமானவைகள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கனிகளில் பேரீத்தம் பழமும், வத்தக்காயும், மாமிசத்தில் ஆட்டிறைச்சியும் அதிலும் அதன் முன்புறத்திலுள்ளதும், முன் கால் சப்பையும், முன் கால்களும், பானத்தில் குளிர்ந்ததும் இனிப்பானதுமாகும். வத்தக்காய் உணவாகவும் பானமாகவும் வாசனையாகவுமிருக்கிறது. இந்திரியத்தை அதிகப்படுத்தும், தாது புஷ்டிக்கு நல்லது, சோர்வை அகற்றும், ரத்தசுத்தி செய்யும், பார்வைக்கு நல்லது, மணமுள்ளது, தாகத்தை அடக்கும், அதனை பிஸ்மில்லாச் சொல்லித் தின்றால் வயிற்றில் தஸ்பீஹ் செய்யும், உணவை ஊட்டும், வயிற்றிலுள்ள கெட்ட பூச்சிகளைக் கொன்றுவிடும், இதனை விலைக்கு வாங்கும்போது இன்னல் பக்கர தஷாபஹ அலைனா வ இன்னா இன்ஷா அல்லாஹ ல முஹ்ததூன் என்ற ஆயத்தையும், அதனை அறுக்கும்போது ப தபஹூ ஹா வ மா காதூ யப்அலூன் என்ற ஆயத்தையும் ஓதவேண்டும். மகத்துவமுள்ள இவ்வாயத்துகளின் பரக்கத்தால் அப்பழத்தை அல்லாஹுத் தஆலா சங்கையாக்குவான்.

மாமிசத்தில் நல்லது முதுகு இறைச்சி, செம்மறி ஆட்டின் இறைச்சி உஷ்ணம் குளிர்ச்சி ஆகிய இரண்டிற்கும் பொதுவானது. அதனால் இந்திரிய உற்பத்தி அதிகம். வயிற்றை மெல்லினமாக்கும், வெள்ளாட்டின் இறைச்சி கெடுதலானது, கரு இரத்தத்தை அதிகமாக்கும்.

(குறிப்பு:—அறபி நாட்டில் சுன்னமக்கி என்னும் நிலாவரை அதிகம். அதனை அதிகமாக வெள்ளாடு தின்பதால் அதன் மாமிசத்தைப் புசிப்பதால் சிலருக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு பேதியாகுவது வழக்கம். செம்மறி ஆடு புல் தின்பதால் அக்கெடுதி அதிலில்லை. ஆதலால், மேற் கூறப்பட்ட பதார்த்த குணம் அறபிநாட்டைச்சேர்ந்தது. நமது நாட்டில் வெள்ளாடு பலவித குழைகளையும் தழைகளையும் தின்பதால் அதன் மாமிசம் பத்தியத்திற்கு நல்லது. இதிலுள்ள நல்லகுணம் செம்மறி ஆட்டு மாமிசத்

தில்லை, செம்மறி ஆட்டு மாமிசம் ருசியாகவும் இந்திரியத்தை அதிகப்படுத்துவதாகவும் இருக்கிறது).

பறவைக் குஞ்சுகளின் மாமிசம் சகல மனிதருக்கும் ஏற்றது. தாது புஷ்டியையுண்டாக்கும், அடி வயிற்றிலுள்ள எரிச்சலை அகற்றும், கோழியில் முட்டையிடாமல் இருப்பது அதாவது விடைக் கோழி மிக நல்லது. அது மூளை, அறிவு, இந்திரியம் ஆகியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சேவலில் கூவாமலிருப்பவைகள் நல்லது. தாரா மாமிசம் சப்தத்தையும் நிறத்தையும் தெளிவாக்கும். உணவில் மிருதமானதை சத்துள்ளதாக்கும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முட்டை தின்றிருக்கிறார்கள். முட்டை பலத்தை அதிகப்படுத்தும், மக்கட்பேற்றை அதிகப்படுத்தும், கோழிமுட்டைதான் நல்லது. அதிலும் மஞ்சட் கரு அரை வேக்காடு உண்டாகும்படி அவித்துச் சாப்பிடுதல் நல்லது.

அரிசி உணவை உண்ணும்போது அதிகமாக ஸலவாத்தை ஓதவேண்டும். அது நபி (ஸல்) அவர்களது ஒளியை பணயம் வைக்கப்பட்ட ரத்தினத்தில் நின்றுமுள்ளது. பயிர்களுக்கு உறம் போடுவதன் மூலமும், மரங்களுக்கு அவைகளுக்கான படினம் செய்வதன் மூலமும் விவசாயத்தைப் பேணவேண்டும், பூண்டுகளால் பூமி அலங்காரமாக இருப்பதிலும், அது ஒடுங்கியபின் அது அசைவதையும் பார்த்து நோட்டமிட்டால், கியாமத்துநாளில் அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா மரித்தவர்களை உயிர்ப்பிக்கச் சக்தி பெற்றிருக்கிறான் என்பதை அவைகள் சாக்ஷியங் கூறும் அத்தாட்சி உண்டாகி ஈமானில் உறுதி ஏற்படும். புஷ்பங்களையும் வாசனைப் பூண்டுகளையும் கண்டால் ஸுப்ஹான மன் தஅஸ்த பில் குத்ரத்தி வல்பக்காஇ வ கஹரல் இபாத பில்மௌத்தி வல் பனாஇ அதாவது "வல்லமையாலும், நிலைத்திருப்பதாலும் மேம்பட்டு, மரணத்தையும் அழிவையும் கொண்டு அடியார்களை அடக்கியவன் தூயவன்" என்று கூறவேண்டும்.

பிரார்த்தனைகள்.

மனிதன் செய்யும் சகல காரியங்களும், அவனுக்குச் சம்பவிக்கும் சகல சந்தோஷங்களும், இன்ப துன்பங்களும் பிறவும் அல்லாஹுத் தஆலாவின் நாட்டங்கொண்டே நிகழ்வதால் ஒவ்

வொரு காரியத்திலும் இறைவனை நினைப்பதும் பிரார்த்தனை புரிவதும், சந்தோஷகரமானதாக இருப்பின் அதற்கு நன்றியும், கஷ்டமானதாக இருப்பின் அதற்கு பொறுமையும் கொள்ள வேண்டும். இச்சமயங்களில் ஓதவேண்டிய துஆக்களைக் குறித்து ஸலபுக்குடைய கிரந்தங்களில் ஞானவான்களான பெரியார்கள் விரிவாக எழுதி இருக்கிறார்கள். அப்பிரார்த்தனைகளை அறபியில் எழுதி அதற்குள்ள கருத்துக்களைத் தமிழில் எழுதுவதால் இச்சிறு நூல் விரிவாகிவிடும். அல்லாமலும், தொழுகை போன்ற இபாதத்துகளில்தான் திரு குர்ஆன் முதலியவைகளை அறபியில் ஓத வேண்டியதிருக்கிறது. தொழுகையல்லாத பிராத்தனைகள் போன்றவைகளை அறபி அல்லாத இதர பாஷைகளிலும் ஓதலாம். ஆதலால், அவ்வவ்விடத்திற்குத் தக்கவாறு தெரிந்த பாஷையில் அவரவருக்கு வேண்டியதை இறைவனிடம் கேட்டுக்கொள்ளலாம். ஆதலால், இதன் அறபுத் தமிழ் கிரந்தத்திலுள்ள பலவித துஆக்கள் என்ற அத்தியாயத்தை இங்கெழுதாமல் விடப்படுகிறது. அறபி துஆக்களைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் அல்பத்ஹுர் ரப்பானி பில் பிக்கே நிஃமானி என்ற அறபுத் தமிழ் கித்தாபைப் பார்க்க.

பிறை கண்டவுடன் ஓதவேண்டிய ஸூறத்துகள்.

முஹர்ரம் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துர் றஹ்மானையும், ஸபர் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்து யாஸீனையும், றபீஉல் அவ்வல் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துல் முஜாதலாவையும், றபீஉல் ஆகிர் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துல் பஜ்ரியும், ஜமாதுல் அவ்வல் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துல் முஸம்மிலையும், ஜமாதுல் ஆகிர்மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துல் முத்தத்திரையும், றஜப் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துஷ் ஷூறாவையும், ஷஅபான் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்து ஸ்வாதையும் றமலான் மாதப் பிறையைக்கண்டால் ஸூறத்து முஹம்மதையும், ஷவ்வால் மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துல் பத்ஹையும், துல்கஅதா மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துன் னூரையும், துல்ஹஜ்ஜு மாதப் பிறையைக் கண்டால் ஸூறத்துல் பஜ்ரையும் ஓதவேண்டும்.

باب الصيد و الذبائح

பாபுஸ்ஸைதி வத் தபாயிஹி.

அறுத்தல் வேட்டையாடல் ஆகியவைகளைப் பற்றிய விபரம்.

ஹலாலான பிராணிகளை அறுப்பதற்கு நான்கு ஷர்த்துகளிருக்கின்றன. அவை வருமாறு:—

1. முடிச்சுக்கும் பதப்புக்குமிடையில் அறுத்தல், அதாவது சுவாசக் குழாய் அதாவது ஊத்தாம்பட்டை என்ற நரம்பு, ஆகாரம் செல்லும் குழாய் அதாவது குரல் வளை, பிடரியின் இரு மருங்குகளிலுமுள்ள இரண்டு உயிர் நாடிகள் ஆக இந்நான்கையும் அறுக்கவேண்டும். குறைந்த பக்ஷம் இந்நான்கில் மூன்றேனும் துண்டிக்கப்படவேண்டும்.

2. அறுப்பவர் முஸ்லிமாக இருக்கவேண்டும் அல்லது கித்தாபியாக இருக்கவேண்டும். அல்லாஹ்வின் திருநாமம் கூறவும், அறுக்கவும் தெரிந்த ஸ்திரீகள், சிறு பிள்ளைகள், விருத்த சேதனம் செய்து கொள்ளாதவர், ஊமையர் ஆகிய எவரும் அறுக்கலாம்.

3. நான்கு நரம்புகளும் அறுப்படும்படியாக கூர்மையான ஆயுதங்கொண்டு அறுக்கவேண்டும். பல்லைக்கொண்டு கடித்தாலும், நகத்தால் கிள்ளினாலும் ஹலாலாகாது. ஆனால், அவ்விரண்டும் உடலத்தை விட்டு வேறாகப் பிரிக்கப்பட்டு, மற்றைய ஆயுதங்களைப்போல் அதனை உபயோகித்தால் ஹலாலாகும். என்றாலும், மக்றூஹு.

4. அறுக்கும்போது பிஸ்மில்லாச் சொல்லவேண்டும். அப்பிராணிக்கு உயிர் இருக்கிறதென்பது திட்டமாகத் தெரியப்படவேண்டும். நோய் பிணிகளுள்ளதையும், கிணற்றிலோ அல்லது உயரத்திலிருந்தோ விழுந்ததையும், ஒன்றுக்கொன்று பாய்ந்து முட்டிக்கொண்டதையும், கழுத்தில் போடப்பட்ட சுருக்கு இறுகியதையும், அடிப்பட்டதையும், ஐவாய் மிருகத்தால் பிடிக்கப்பட்டதையும் அறுத்தால் குறைந்த பக்ஷம் அது உயிருடனிருக்கிற

தென்பதை அறிவிக்கத் தக்கவாறு ரத்தம் வடியவேண்டும் அல்லது கொஞ்சமாவது துடிக்கவேண்டும்.

ஷாபிஈ மதுஹபில் ஐந்து ஷர்த்துகளிருக்கின்றன. அவை

1. அறுக்கிறேன் ஹாலலாக்குகிறேன் என்ற நாட்டம்.

2. அறுப்பவர் முர்த்தத்தாகாமலும் குப்ரில் சேராமலும் இஸ்லாமாக இருக்கவேண்டும்.

3. மூச்சுப்பிரிகிற முடுச்சையும் மரியையும் அறுக்கவேண்டும் அதாவது சுவாசக்குழாயையும் குரல் வளையையும் துண்டிக்க வேண்டும்.

4. அறுப்புமுடியும் வரை கையை உயர்த்தாமலிருக்கவேண்டும். ஆனால், அறுக்கும்போது அது துடித்தால் பதறிக்கையை எடுத்தாலும் உடனே தாமதமில்லாமல் திறக்குறைவுசெய்யாமல் மறுபடியும் அறுத்துவிட்டால் ஹலாலாகும்.

5. அறுக்கிற வஸ்து கூர்மையாக இருக்கவேண்டும். அதாவது அல்லது கத்தி கூர்மையான மூங்கில், கூர்மையானவே எவ்வஸ்துக்களையும் கொண்டுஅறுக்கலாம். ஆனால், பல், நகம், எலும்பு,இவைகளைக்கொண்டறுக்கக்கூடாது. கூர்மையான ஆயுதத்தின் கனத்தினால் அல்லது கூர்மையாயில்லா தமழுமட்டைக் கத்தியால் அறுப்பவரின் பலத்தினாலும் செத்தது தலைவேறானால் ஹலாலாகாது.

முடிச்சையும், தொண்டை முழுவதையும் தலைப்பக்கம் விட்டு அறுத்தால் சுன்னத்து நிறைவேறாது. முடிச்சில் கொஞ்சம்கூடத் தலையில் சேராமல் அது முழுவதும் உடலுடன் சேர்ந்து விட்டால் ஹறாமாகிவிடும்.

தாயை அறுத்தால் வயிற்றினுள் உள்ள குட்டி உடனே செத்தாலும், அறுத்தவுடன் வயிற்றைக் கீரி எடுத்ததில் துடித்துக் கொண்டே வெளியாகிச் செத்தாலும் அக்குட்டியும் ஹலாலாகும்.

வேட்டை மிருகங்களிலும், அறுப்பதற்கு இடம்பாடல்லாத வெருட்சியான ஆடு மாடு ஒட்டகங்களிலும் சரீரத்தில் எந்த இடத்திலாவது இரத்தம் ஓடும்படி கூர்மையான அம்பு, கல், ஆயுதம்முத

வியவைகளால் பிஸ்மில்லாச் சொல்லி எறிந்து கொன்ருலும் போதுமானது. ஆடு போன்றவைகள் கிணற்றில் விழுந்து எடுக்க முடியாமல் போனலும், பிடிகொடுக்காமல் விரண்டோடினலும் கோழிபோன்றவைகள் மரத்தில் கொளுகிக் கொண்டதால் அது செத்துப்போகு மென்று பயந்தாலும் பிஸ்மில்லாச்சொல்லி அதனைக் காயப்படுத்துவது போதுமானது.

வேட்டை மிருகங்களை இரத்தம் ஓடும்படி காயப்படுத்துவது ஷர்த்தாக இருப்பதால் பிஸ்மில்லாச் சொல்லி களிமண் உருண்டை, கட்டி, கல், கம்பு இவைகளால் எறிந்து அவைகள் செத்தால் அவைகளைப் புசிக்கலாகாது. ஏனெனில், இவைகள் அவைகளது உடம்பை அடித்து நொருக்கிவிடுமே யல்லாது கீறி கிழித்துக்காயப்படுத்தாது. துப்பாக்கியால் சுட்டுச் செத்தாலும் ஹலாலில்லை. ஆனல், இவைகளை உயிருடன் பிடித்து அறுத்தாலும், கூர்மையான இலேசான கல்லால் அல்லது கூர்மையான வளதடியால் பிஸ்மில்லாச் சொல்லி எறிந்து, அதனல் அவைகள் காயமடைந்து செத்தால் ஹலாலாகிவிடும். ஆனல், அப்பிராணி கண்பார்வையை விட்டு மறையாமலிருப்பது அல்லது உடனேதேடி தாமதமில்லாமல் அதனைக்கண்டு பிடிப்பது ஷர்த்தாகும்.

திப்பாக்கி, பிஸ்தோல் இவைகளால் சுட்டுக் கொல்வது ஹறும். ஆனல், குறிப்பார்த்துச் சரியாகச் சுட்டு சாகாமல் எடுக்கத்தக்க பழக்கமுள்ளவர்கள் சுடுவது குற்றமில்லை என்று ஷாபிஈ மதுஹபைச் சேர்ந்த இமாம் இப்னு ஹஜர் (றஹ்) அவர்கள் கூறி இருக்கிருர்கள்.

அறுப்பவர் அறுக்கும்போது அல்லாஹ்வின் திரு நாமம் சொல்லவேண்டும். ஞாபகப் பிசகாக அல்லாஹ்வின் திரு நாமத்தைச் சொல்லாமலிருந்து விட்டால் குற்றமில்லை. ஆனல், வேண்டுமென்றே சொல்லாமலிருந்தால் ஹலாலாகாது. அறுக்கும்போது அவனது திரு நாமம் சொல்லவேண்டுமென்பதில், அவனது திரு நாமத்தைச் சொல்லிவிட்டு அறுக்காமல் வேறுகாரியத்திலீடுபட்டால் மறுபடியும் சொல்லவேண்டும். அறுக்கும்போது அறுப்பவரே சொல்லவேண்டும். வேருெருவர் சொல்ல, அவர் செவிமடுத்துக்கொண்டு, அதனைச் சொல்லாமலிருப்பது கூடாது. அவ்வாறு சொல்லாமல் அறுத்து விட்டால் ஹலாலாகாது.

வேதக்காரர்கள் அறுத்ததைப் புசிக்கலாம் என்று சட்டமிருந்தாலும், அவர்கள் அல்லாஹ்வின் திரு நாமத்தைக் கூறி அறுக்கவேண்டும். அவ்வாறில்லாமல் தங்களது கொள்கைக்கேற்ப அல்லாஹ்வின் திருநாமத்துடன் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களது பெயரைச் சேர்த்தாலும், இதுபோன்ற வேறு நபிமார்களது பெயரைச் சேர்த்தாலும், அல்லாஹ்வின் திருநாமத்தை விட்டு விட்டு, தங்களது கொள்கைப்படி தெய்வமென மதிக்கிற நபிமார்களது பெயரைக் கூறினாலும் ஹலாலாகாது. மூன்று தெய்வங்களில் ஒன்றாகிய அல்லாஹ்வின் திருநாமத்தை அறுக்கிறேன் என்று திரித்துவக்கொள்கையைக் குறிப்பிட்டாலும் ஹலாலில்லை.

முஸ்லிம்களைப்போல் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கூறி அறுக்கவேண்டும். ஆனால், வேதக்காரர்கள் அறுக்கும்போது பக்கத்திலிருந்து அவர்கள் கூறுவதைச் செவியேற்றால்தான் மேற்கண்டவைகளைக் கவனிக்கவேண்டும். அவர்கள் கூறியதைச் செவியேற்காமலிருந்தால் அவர்கள் சரியாகத்தான் கூறி இருப்பார்கள் என்ற நல்லெண்ணத்தால் அதனைப் புசிக்கலாம். முஷ்ரிக்குகள் அறுத்ததையும், இஸ்லாம் மதத்திலிருந்து மாறியவனான முர்த்தத்துகள் அறுத்ததையும் புசிக்கலாகாது. ஹஜ்ஜுக்கு அல்லது உம்றாவுக்கு இஹ்றாம் கட்டியவர் வேட்டை மிருகத்தை அறுத்தால் ஹலாலாகாது. வேட்டை மிருகத்தை ஹறமுக்கு வெளியில் இஹ்ராம் கட்டாதவராக இருந்து அறுக்கவேண்டும். வேட்டை மிருகத்தை இஹ்றாம் கட்டாதவர் ஹறமுக்குள் அறுத்தாலும் ஹலாலில்லை.

அறுப்பின் ஸுன்னத்துகள்.

புசிக்க ஹலாலான பிராணிகளை அறுக்கும்போது அவைகளின் முகத்தை கிப்லாவின் பக்கம் திருப்புவதும், ஒட்டகத்தை இடது முன்னங்காலை கட்டி நிலையில் விட்டு அறுப்பதும், ஆடு மாடு இவைகளைப் படுக்கப்போட்டு அறுப்பதும், ஒட்டகம் தாரா போன்ற நீண்ட கழுத்துள்ளவைகளை கீழ் கழுத்தில் அறுப்பதும், ஆடு மாடு போன்றவைகளை மேல் கழுத்தில் அறுப்பதும் ஸுன்னத்து.

அறுப்பின் முஸ்தஹப்புகள்.

பிராணியை ஒருச்சாயப் படுக்கப்போட்டு, முன்னதாகவே அகலமான கத்தியைக் கூர்மையாக்கிக்கொள்வதும், இடப்புறத்தில் மெதுவாகப் படுக்கப்போடுவதும், மூன்று கால்களையும் கட்டிக் கொள்வதும், வலக்கரத்தால் தீவிரமாக அறுப்பதும், அறுக்கும்போது பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று சொல்வதும், நான்கு நரம்புகளும் தெரிக்கும்படி சரியாக அறுப்பதும், பகல் காலத்தில் அறுப்பதும் முஸ்தஹப்பு.

ஷாபிஈ மதுஹபில் பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் அலா ஸெய்யிதினா முஹம்மதின் வ ஆலிஹி என்று சொல்வது சுன்னத்து.

அறுவையின் மக்றூஹுகள்.

அறுக்கப்படும் பிராணியை அறுக்குமிடத்திற்குக் காலைப் பிடித்திழுத்துக்கொண்டு போவதும், அதனை ஒருச் சாய்த்துப் போட்ட பிறகு கத்தியைத் தீட்டுவதும், கழுத்தின் பக்கமாக அறுக்காமல் பிடரியின் பக்கமாக அறுப்பதும், பிடரிக்கு உள்ளிருக்கிற வெள்ளை நரம்பை எத்தும்வரை அறுப்பதும், தலையைத் துண்டுபட அறுப்பதும், உயிர் பிரியுமுன் தோலை உரிப்பதும், காரணமில்லாமல் அப்பிராணிக்கு நோவினையை உண்டாக்கும் ஏனைய செய்கைகளும், கிப்லாவுக்கு மாறுகப்போடுவதும், உயிர் பிரியுமுன் அறுக்கப்பட்ட பிராணியிலிருந்து ஒரு அங்கத்தைத் தரிப்பதும் மக்றூஹுகள்.

பிடரியின் பக்கமாக அறுத்ததில் நான்கு நரம்புகளும் துண்டிக்கப்படும் வரை அது சாகாமல் உயிருடனிருந்தால்தான் மேற்சொன்ன மக்றூஹு ஏற்படும். அவைகள் துண்டிக்கப்படுவதற்கு முன்னதாகவே அது செத்துப்போனால் அதனைப் புசிப்பது ஹறாம்.

ஹலாலான பிராணிகளில் ஏழு அங்கங்களைப் புசிப்பது மக்றூஹ். 1. ஆண் குறி. 2. கிடாய்களின் விதர்க்கொட்டைகள். 3. பெண் குறி. 4. கழலைக் கட்டி. 5. நீர்ப்பை. 6. ஊத்தாம் பட்டி. 7. பித்து. ஆகியவைகளாகும். ஒரு சொற்படி இவை

களைப் புசிப்பது ஹறாம் என்று மிருக்கிறது. உடம்பை விட்டு வெளியேறி ஓடிய இரத்தம் ஹறாம் என்பதாக திருகுர்ஆனிலேயே வந்திருக்கிறது. உரோமம், நரம்பு, கெட்டியான எலும்பு, சூகை யாகிவிட்ட அவயவம், தோல் இவைகளையும் புசிக்கக்கூடாது. நஜிஸில் முளைத்த கீரையைப் புசிப்பது மக்றூஹல்ல. ஆனால், மலம் போன்ற நஜிஸில் முளைத்தவைகளைப் புசிப்பதால் வியாதி யுண்டாகுமென வைத்திய நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

ஷாபிஈ மதுஹபில் தின்ன ஹலாலான பிராணிகளில் சூகை யாகப்போன அங்கம், முன் பின் துவாரங்கள், ஆண் குறி, கழலை, ஊத்தாம்பட்டி, தோல், ஜவ்வு, நரம்பு இவைகளைப் புசிப்பது மக்றூஹு. பித்தும், ரோமமும், கெட்டியான எலும்பும் ஹறாம். எலும்பைப் பொடியாக நறுக்கினாலும் அதனைப் புசிப்பது ஹறாம்.

ஆடு, மாடு, ஒட்டகை, கோழி ஆகிய இவைகள் நஜிஸை அதிகமாகத்தின்றால் அதன் இறைச்சியும் பாலும் மக்றூஹு. அதன் இறைச்சியில் நாற்றம் போவதற்காக கோழியை மூன்று நாட்களுக்கும், ஆட்டை நான்கு நாட்களுக்கும், ஒட்டகையையும் மாட்டையும் பத்து நாட்களுக்கும் கட்டி வைத்து இரைபோட்டு அறுக்கவேண்டும். இறைச்சியில் நாற்றம் உண்டாகாதிருக்கும் முறையில் நஜிஸையும் வேறு இறைகளையும் தின்றிருந்தால் அவை களைக் கட்டிப்போடவேண்டிய அவசியமில்லை. எனினும், கட் டிப்போடுவது நல்லது.

ஷாபிஈ மதுஹபில் நஜிஸைத்தின்னும் ஒட்டகையை நாற்பது நாட்களுக்கும், மாட்டை முப்பது நாட்களுக்கும், ஆட்டை ஏழு நாட்களுக்கும், கோழியை மூன்று நாட்களுக்கும் கட்டி வைத்து சுத்தமான இறைபோட்டு வளர்த்து அப்புறம் அறுக்கவேண்டும். இறைச்சியைக் கழுவி விடுவதால் மக்றூஹு நீங்காது.

வேட்டை மிருகங்கள்.

வேட்டை மிருகங்கள் என்பது வெருட்சியுடையதும், மனி தரை விட்டு விலகிக்கொள்வதாயுமுள்ள ஹலாலான பிராணி களாகும். இவ்வாறான பிராணிகளின் மீது வேட்டையாடப் பழ

கிய நாய் அல்லது இராஜாளி போன்றவைகளை பிஸ்மில்லாச் சொல்லி ஏவி, அல்லது அம்பை எய்து இவைகள் அப்பிராணிகளைக் காயப்படுத்தி, அக்காயத்தில் செத்துவிடுமாயின் அவைகளைப் புசிப்பது ஹலால். ஆனால், வேட்டையிலகப்பட்ட பிராணியில் கொஞ்சத்தை நாய் தின்று விடுமாயின் எஞ்சியதைப் புசிப்பது ஹலாலல்ல. இராஜாளிபோன்றவைகள் கொஞ்சத்தை தின்று விட்டால் எஞ்சியதைத் தின்பது ஹலால். நாய் போன்றவைகள் வேட்டையாடி, இரத்தத்தைக் குடித்தால் இறைச்சியைப் புசிப்பது குற்றமில்லை.

வேட்டையாடப்பட்ட பிராணி காயமடைந்து அதனை உயிருடன் பெற்றுக்கொண்டால் அதனை அறுப்பது கடமை. அறுக்காமல் விட்டு அது செத்தாலும், அம்பாலெய்தபின் அது உயிருடன் ஒரு மேட்டின்மேல் விழுந்து அப்புறம் பள்ளத்தில் விழுந்து செத்தாலும் அதனைப்புசிப்பது ஹலாலல்ல. மேட்டி விழாமல் நேரடியாகப் பூமியின் மீது விழுந்து செத்திருந்தால் ஹலால்.

வேட்டையாட ஷர்த்து.

அம்பால் எய்யும்போது அல்லது வேட்டை நாய், இராஜாளி, வல்லத்தான் முதலியவைகளை அவிழ்த்து விடும்போது பிஸ்மில்லாச் சொல்லவேண்டும். வீரப்பல்லுள்ளதையும் நகமுள்ளதையும் வேட்டையாடப் பழக்கி இருக்கவேண்டும். இவைகளில் ஒன்று தவறினால் கூடாது. வேட்டையாடப் பழகி இருப்பதற்கு அடையாளம் நாய் போன்றவைகள் மூன்று முறை வேட்டையாடப்பட்ட பிராணிகளின் இறைச்சியைத் தின்னாமலிருக்கவேண்டும். இவ்விதமாகப் பரிசோதித்துத் தேரிய பிறகுதான் நாய் வேட்டை பழகியதாகக் கருதவேண்டும். இராஜாளி போன்றவைகளை அவிழ்த்து விட்டு, அதனைத் திரும்ப அழைத்தால் உடனே அது திரும்ப வரவேண்டும்.

ஷாபிஈ மத்ஹபில் வேட்டையாடுவதற்கு ஆறு ஷர்த்துகளுண்டு. 1. வேட்டையாடுபவர் முஸ்லிமாயிருக்கவேண்டும். 2. வேட்டையாடுவதை நிய்யத்துச்செய்யவேண்டும். 3. வேட்டையாடுபவர் பார்வையுள்ளவராயிருக்கவேண்டும். 4. தமீஸுள்ள

வராக அதாவது பிரித்தறியும் சக்தியுள்ளவராயிருக்கவேண்டும். 5. ஹஜ்ஜில் இஹ்ராம் கட்டியவராக இருக்கக்கூடாது. 6. காயமுண்டாக்கக்கூடிய அம்புபோன்றவைகளால் காயமடைந்து செத்ததாகவும், அல்லது வேட்டை பழகிய நாய், வல்லத்தான், இராஜாளிபோன்றவைகளை ஏவி அவைகளால் பிடிக்கப்பட்டுச் செத்ததாகவும் அல்லது சாகப்போகும் தருவாயில் துடித்துக் கொண்டிருக்கக்கண்டு அந்தத் துடிப்பிலே செத்ததாகவும் வேட்டையாடப்பட்ட பிராணி இருக்கவேண்டும்.

நாய் பிடித்து அப்பிராணியைத்தின்றாலும், அல்லது வேட்டைக்காரனைக் கண்டவுடன் விலகாமல் அவனுக்கு அதனைக் கொடுக்காவிட்டாலும் அப்பிராணி ஹலாலாகாது.

புசிக்க ஹறாமான பிராணிகள்.

மீன், ஷரீஅத்தில் ஜாயிஸான விட்டில் இவை இரண்டையும் தவிர, அல்லாஹுத் தஆலாவின் திரு நாமம் சொல்லாமல் அறுக்கப்பட்ட பிராணிகளும், தானாகச் செத்தவைகளும், காபிர்கள் கொன்றவைகளும், நாய் நரி புலி இவைகளைப்போல் வீரப்பல்லால் வேட்டையாடிப் புசிக்கும்படியான ஐவாய் மிருகங்களும், நகங்களைக்கொண்டு வேட்டையாடும்படியான இராஜாளி, வல்லத்தான்போன்ற பறவைகளும், பன்றி, குரங்கு, பூனை, கழுதை, கோவேறு கழுதை, முள்ளம்பன்றி, குள்ளநரி, ஆமை, யானை, கரடி, வெள்ளெலி, கீரிப்பிள்ளை, அணில், உடும்பு, ஓந்தி, பாம்பு, பூமியிலுள்ள புளுபூச்சி இவைபோன்றவைகளும், கோழி குஞ்சு, இறைச்சி மீன் முதலியவைகளை இலாஞ்சிக்கொண்டு போய் காயப்படுத்தித் தின்னும்படியான பருந்து முதலியவைகளும், தேள் போன்ற விஷஜந்துகளும், நஜிஸையும் செத்த வெடுக்கையும் தின்னக்கூடிய காகம் கழுகுபோன்ற பறவைகளும், ஜலத்தில் வாழும் ஜந்துக்களில் மீனைத் தவிரவுள்ள மற்றைய ஜந்துக்களும், தானாகச் செத்துவயிறு மேல்பக்கம் வரும்படியாக மல்லாந்து மிதக்கும்படியான மீன் இனங்களும் ஹறாமானவைகள். இவைகளைப் புசிக்கக்கூடாது.

ஜலத்தில் சூட்டினால் அல்லது வேறு காரணத்தால் செத்து முதுகு மேலே வரும்படி குப்புற விழுந்து மிதக்கும் மீன்களும், வயிற்றைக்கீற இடம்பாடாகாத சிறு மீன்களும் ஹலால். ஒரு மீனை மற்றொரு மீன் விழுங்க உள்ளே இருக்கிற மீன் பேதகமடையாதிருந்தால் இரண்டு மீனையும் புசிக்கலாம். பேதகமடைந்திருந்தால் உள்ளே இருக்கிற மீன் ஹலாலில்லை. பறவை வழுங்கிய மீனுக்கும் இதுவே ஹுக்மு.

ஷாபிஈ மத்ஹபில், நீர் வாழும் ஜாதியில் மீன் வகையாவும் ஹலால். விலாங்கு, திருக்கை, சுறா, இரால், தர்யாகணவாய் இவைகள் மீனினத்தைச் சேர்ந்தவை, மட்டி, சங்கு, சிப்பி, ஐவிரலி இவைகள் ஹறாம். ஒரு சொற்படி மக்றூஹ். நண்டு, தவளை, ஆமை, முதலை, அட்டை, பாம்பு முதலியவை ஹறாம்.

கரையில் ஆடு, மாடு, ஒட்டகை, மான், முயல், உடும்பு, மாநிறமுள்ள வெள்ளெலி, முள்ளங்கோழி, குள்ளநரி, மலையணில், குதிரை, காலாலடித்துத் தின்னாதவைகள் யாவும் ஹலால். பக்ஷியில் கோழி, சேவல், வான் கோழி, காணாங்கோழி, கின்னிக்கோழி; தீ விழுங்கிப்புரு, அன்னம், குயில், காடை, சிட்டு, கௌதாரி, பயிர்க்காகம், தாரா, கொக்கு, நாரை, சிறகி, உள்ளான், போன்ற இடுக்கித்தின்னாத பக்ஷிகள் யாவும் ஹலால். செத்ததில் மீனும், மீன் வயிற்றிலுள் செத்து பேதலிக்காத மீனும், பயிரில் விழும் விட்டிலில் செத்ததும் தவிர அறுக்காமல் செத்தவைகளும், பன்றி, நாய், கழுதை, கோவேறு கழுதை, பூனை, கீரி, பெருநரி, மந்தி, குரங்கு, அழிங்கு, அணில், ஓணான், அரணை, எலி, மூஞ்சூறு, பெருச்சாளி, பாச்சான், உன்னி, வண்டு குழவி, வண்ணாத்தி, ஈசல், ஒலுங்கு, மின்மினி, ஈ, எறும்பு, மூட்டை, புழுக்கள், யானை, புலி, கரடி, செவ்வங்கு, ஓநாய், பாம்பு, பல்லி, தேள், நட்டுவக்காலி, ராஜாளி, வல்லத்தான், வல்லூரு, காக்கை, கழுகு, ஆந்தை, கூகை, கிளி, மயில், வெளவால், மரங்கொத்தி, முதலிய காலால் எடுத்துத் தின்னும் பிராணிகளும் ஹறாம்.

فصل في اجتناب كلام الفواحش واللعن وغيرهما

பஸ்லுன் பிஜ்திஞபி கலாமில் பவாஹிஷி வல்லஅனி வ கைரிஹிமா.

கெட்ட பேச்சுக்கள் சபித்தல் முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வதைப்பற்றிய விபரம்.

பழிப்பான வார்த்தைகளை மறைவின்றிப் பேசுவது கெட்ட பேச்சாகும். கருங்குஷ்டம், வெண்குஷ்டம், மூத்திரம், பீ போன்ற வார்த்தைகளைக் கூசாமல் பேசுவது கூடாது. தனது பெண் ஜாதியைப்பற்றிக் குறிப்பிடும்போது என் பெண்ஜாதி என்று சொல்வதைப் பார்க்கினும் என் வீட்டுக்காரி, என் குழந்தைகளின் தாய் என்றும், குஷ்டநோயைக் குறிப்பிடும்போது பெரு வியாதி என்றும், மூத்திரம் என்பதற்குப் பதிலாக சிறு நீர் என்றும், பீ என்பதற்கு பதிலாக மலம் என்றும் குறிப்பிடுவது கண்ணியமான முறையாகும். நாணத்தை, கூச்சத்தை, அருவருப்பை யுண்டாக்கத்தக்க பதங்களை பச்சையாகக்கூருமல், அதனை அறிவிக்கத்தக்க கௌரவமான பதங்களை உபயோகிக்கவேண்டும்.

ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் தங்களுக்கு முன்னுல்சென்று கொண்டிருந்த பன்றியை நோக்கி சவுக்கியமாகவும் க்ஷேமமாகவும் நட என்று கூறினர்கள். அப்பொழுது கூட இருந்தவர்கள் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களிடம் "றூஹுல்லாவே! பன்றியைப் பார்த்து இவ்வாறு கூறுகிறீர்கள்?" என்று வினவியதற்கு "என் நாவிற்கு தீங்கை வழக்கப்படுத்துவதை நான் திருப்திப்படவில்லை" என்று கூறினர்கள்.

ஒருமுறை செத்த நாயின் சவத்தினருகே ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் சென்றபோது, அவர்களுடன் சென்றவர்கள் "இதென்ன நாற்றம்" என்று கூறினர். அப்பொழுது றூஹுல்லாஹி (அலை) அவர்கள் "அதன்பற்களின் வெண்ணிறம் எவ்வளவு அழகாயிருக்கிறது" என்று கூறினர்கள்.

ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் ஒருமுறை நெருப்பை எரித்துக்கொண்டிருக்கிற கூட்டத்தாரின் பக்கமாகச் சென்றபோது அவர்களை நோக்கி "நெருப்புக் கூட்டத்தாரே" என்று கூருமல் "பிரகாசத்தையுடைய கூட்டத்தாரே" என்று கூறினுர்கள். எனவே, அல்லாஹுத் தஆலாவின் சிருஷ்டிகளில் எதையும் கௌரவமான முறையில், கண்ணியமான முறையிலேயே பிரஸ்தாபிக்கவேண்டும். அத்துடன் துற்குறியானவார்த்தைகளை உபயோகிப்பதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

முஸ்லிமானவர்களை ஏசுவதுகூடாது. அவ்வாறு ஏசுவது பாவிக்தனமாகும். ஆனுல், குணங்கெட்டவர்களை நோக்கி "உனக்கு வெட்கமில்லையா? அஹ்மக்கே (முட்டாளே), ஜாஹிலே (அறிவிலியே)" என்று கூறலாம். இறந்துபோனவர்கள் காபிர்களாயிருந்தாலும் அவர்களை ஏசுவதுகூடாது. பாவிக்கானவர், பிதுஅத்துக்காரர், தீயர் இவர்களையும், காபிரான மையித்தையும் லஃனத்துச் செய்வது அதாவது சபிப்பதுகூடாது. ஏனெனில், இவர்கள் ஈமான் கொண்டவர்களா? இல்லையா? இவர்களது ஈமான் அங்கீகரிக்கப் பட்டதா? இல்லையா? என்பதை ஒருவரும் திட்டமாகத் தெரிந்துகொள்ளவில்லை. ஆதலால், இவர்கள் முஸ்லிமாகவும் இருக்கக்கூடும் என்பதிற்கு ஹேதுக்கள் இருப்பதால் எவரையும் சபிக்கக்கூடாது. ஆனுல், திருகுர்ஆன் ஹதீது இவைகளில் ஒருவரைக் காபிர் என்று குறிப்பிட்டுக்கூறி இருந்தால், அப்படிப் பட்டவர்களைச் சபிக்கலாம். அபூஜஹ்ல், அபூலஹப், பிர்ஔன் போன்றவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லப் பட்டிருப்பதால் இவர்களைச் சபிப்பது குற்றமல்ல. தவிரவும் அபூஜஹ்ல், பிர்ஔன் ஆகியவர்களைக் குறித்து இமாம் முஹிய்யத்தீனிப்னு அறபி (றஹ்) அவர்களும், அவரைச் சேர்ந்தவர்களும் கூறியிருப்பவைகளைக் கவனிக்கவேண்டியதில்லை.

உயிருடன் ஜீவித்துக்கொண்டிருக்கிற காபிரான எவரையும் குறிப்பிட்டு லஃனத்துச் செய்யலாகாது. ஏனெனில், அவர்பிற்காலத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவி விடக்கூடும். முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்தில் ஸ்திரமாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்து இறைவனைப் பிரார்த்திப்பது முஸ்தஹப்பாக இருப்பதால் முஸ்லிம்களுக்கு றஹ்மத்துச் செய்யும்படி குறிப்பிட்டு துஆச்

செய்யவேண்டும். காபிர்களை குப்ரின்பேரிலேயே ஸ்திரமாகவைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கக்கூடாது. அப்படிக் கேட்பது குப்று. ஆனால், எவரையும் குறிப்பிடாமல் காபிர்கள், அநியாயக்காரர்கள், வட்டியுண்பவர், மதுபானமருந்துபவர் ஆகியவர்மீது இறைவனின் லஃனத்து அதாவது முனிவு உண்டாகட்டும் என்று பிரார்த்திப்பது ஆகும். என்றாலும், "மூமினானவன் லஃனத்துச் செய்பவன் அதாவது சபிப்பவன் அல்ல" என்று ஹதீது ஷரீபில் வந்திருப்பதால் லஃனத்துச் செய்வதை அடியுடன் விட்டுவிடுவதே நலம்.

திரு குர்ஆன் ஹதீது ஆகியவைகளில் குறிப்பிடப் பட்டிருப்பவைகளைத் தவிர்த்து காபிரானாலும் முஸ்லிமானாலும் எவரையும் குறிப்பிட்டு இன்னமனிதன் சுவர்க்கவாதி, இன்னமனிதன் நரகவாதி என்று கூறக்கூடாது. ஆனால், முஸ்லிமாக மரித்தால் சுவர்க்கவாதி யென்றும், காபிராக மரித்தால் நரகவாதி யென்றும், முஸ்லிம்கள் சுவர்க்கவாதிகள், காபிர்கள் நரகவாதிகள் என்றும் பொதுவாகக் கூறலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்துப் பேர்களைக் குறிப்பிட்டு சுவர்க்கவாதிகள் என்று நற்செய்தி கூறி இருக்கிறார்கள். ஆதலால் அவர்களையும் இமாம் ஹுஸைன் (றலி) ஆகியவர்களையும் சுவர்க்கவாதிகள் என்று சாக்ஷியம் கூறவேண்டும். நாயகம் (ஸல்) அவர்களது ஸஹாபிகளில் மற்றவர்கள்மீது நன்மையைக்கொண்டு பிரார்த்திக்கவேண்டும். மூமின்களில் மற்றவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்குமென்று ஆதரவு வைப்பதைப் பார்க்கினும் அதிகமான ஆதரவு மற்றைய ஸஹாபிகளுக்கு வைக்கவேண்டும்.

"அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசங்கொள்கிற கூட்டத்தாரை, அல்லாஹ்வும் அவனது றஸூலுக்கும் பகைக்கிறவர்களை நேசிப்பவர்களாக நீங்கள் காணமாட்டீர்கள். (அவ்வாறு பகைக்கிற அவர்கள்) தங்களது தந்தையர்களாகவும், தங்கள் தனையர்களாகவும், தங்கள் சகோதரர்களாகவும், தங்கள் குடும்பத்தார்களாகவும், இருந்தபோதினும் சரியே" என்று அல்லாஹுத் தஆலா தனது திரு மறையில் கூறியிருப்பதால் காபிர்களை நேசிப்பதை விட்டு விலகி இருக்கவேண்டும். திம்மிக் காபிரைக் கண்ணியப்

படுத்தி அவர்களுக்கு ஸலாம் சொல்பவர் காபிராகிவிடுவார். ஆனால், அக்காபிர்களிடம் தேவை இருந்தால் அவர்களைக் கண்ணியமாக மதிக்காமல் ஸலாம் சொல்லலாம். தேவை இல்லாமலிருக்கும் போது ஸலாம் சொல்வது மக்றூஹு. மேலும், அவர்களுக்கு ஸலாம் சொன்னாலும் எழுதினாலும் ஸலாமுன் அலாமனித்தபஅல் ஹுதா அதாவது "நேர்வழியைப் பின்பற்றியவர்களுக்கு ஈடேற்ற முண்டாவதாக" என்று சொல்வதும் எழுதுவதும் ஆகும். தவிர, அவர்களுக்கு முதலாவதாக ஸலாமை ஆரம்பிக்காமல், அவர்கள் கூறும் ஸலாமுக்கு உத்தரமாக வ அலைக்க என்று சொல்வதைப் பார்க்கினும் அதிகமாக்குவதும், அவர்களைக் கை பிடித்து முஸாபஹாச்செய்வதும் கூடாது. முஸாபஹாச் செய்தால் கையைக் கழுவவேண்டும்.

இதுபோல பித்அத்துக் காரர்களையும், பாவிக்கானவர்களையும் விட்டு விலகி இருப்பது ஈமான் நிறப்பமாகுவதைச் சேர்ந்தது. இவ்விருவகையினருக்கும் ஸலாம் சொல்வது மக்றூஹு. பாவிக்கானவர்களைப் புகழ்ந்தால் அல்லாஹுத் தஆலா கோபமடைவான் என்றும், அர்ஷு துளும்பும் என்றும் ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

முஸ்லிம்களின் குறைகளை ஆராய்வதும், அவைகளை நோட்டமிடுவதும், ஒருவருக் கொருவர் முறித்துக்கொள்வதும், ஒருவருக்கொருவர் பகை சாதிப்பதும், பிறர் சொற்கேட்டுக் கெட்ட எண்ணங்கொள்வதும் தகாத காரியங்களாகும். எவரையும் இகழக்கூடாது. அது இருவருக்கு மிடையிலுள்ள அல்லாஹுத் தஆலாவின் திரையைக் கிழித்துவிடும். அதிகமாகச் சிரிப்பது கூடாது. அது இருதயத்தை மரிக்கச் செய்துவிடும். முகத்திலுள்ள பிரகாசத்தை அகற்றிவிடும். காரணமின்றிச் சிரிப்பது பயித்தியம். தான் சொன்ன பேச்சு மேலாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தால் தர்க்கம் செய்யலாகாது. அது வழி கேட்டுக்கும் பகைக்கும் திறவு கோல். எவரையும் முகஸ்துதி செய்யக்கூடாது. அது அவரைக் கொல்லும்வாளாக இருக்கிறது. ஒருவர் ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்களை எதிரில் வைத்துக் கொண்டு புகழ்ந்தபோது ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) அவர்கள்

அவரை நோக்கி "நீர் என்னையும் அழித்து, உன்னையும் அழித்துக் கொள்கிறீரோ ?" என்று கூறி முகஸ்துதி செய்ததைக் கண்டித்தார்கள்.

ஒருவர் முகஸ்துதியாகப் பேசினாலும் அல்லாஹும்ம ஜ்அல்னீ கைரன் மிம்மா யலுன்னூன. வஃபிர்லீ மிம்மா லா யஃலமூன வலா துஆகிதனி பிமாயக்கூலூன ப இன்னக்க தஃலமு மாபீ நப்ஸீ வலா யஃலமூன அதாவது "நாயனே அவர்கள் என்னைக் குறித்து எண்ணுவதைப் பார்க்கினும் மேலாகவே என்னை ஆக்குவாயாக. இன்னும் அவர்கள் என்னைக் குறித்து அறியாமலிருப்பவைகளில் என்னை மன்னிப்பாயாக. இன்னும் அவர்கள் கூறுவதிலிருந்து என்னைக் குற்றம் பிடியாதே. நிச்சயமாக நீ என் இதயத்திலுள்ளதை அறிகிறாய். அவர்கள் அதனை அறியமாட்டார்கள்" என்று பிரார்த்திக்கவேண்டும்.

தவிர, நற்செய்கைகளின் பேரிலுள்ள ஒருவரை அவைகளைப் போன்ற வேறு நல்ல செய்கைகளைப் புரியும்படி ஆசையுண்டாக்குவதற்காகவும், மற்றைய மனிதர்கள் அச்செய்கைகளைப் பார்த்து அவைகளைப்போன்ற செய்கைகளைச் செய்யட்டும் என்பதற்காகவும் புகழ்வது பழிக்கப்படாத புகழாகும். அது முகஸ்துதியாகாது. தவிரவும், அப்புகழ் அவனை ஆபத்திலாழ்த்துவதை விட்டு நீங்கிய சுன்னத்தான புகழாகவும் ஆகிவிடும்.

فصل في بيان المعاصي

பஸ்லுன் பீ பயானில் மஆஸீ.

பாவங்களைப்பற்றி விபரிக்கும் பாடம்.

பாவங்கள் யாவும் ஒன்று போலில்லை. அவை சிறு பாவம், பெரும்பாவம் என இரண்டு வகைப்படும். என்றாலும், ஒரு காரியத்தைச் செய்வது சிறுபாவம் என்றோ அல்லது பெரும் பாவம் என்றோ தக்க ஆதாரத்தின் பேரில் ருஜுவாகி விட்டபின் அதனைச் செய்வது ஆகும்; அது பாவமல்ல என்று கருதுவதும் கூறுவதும், அதனை அலக்ஷியமாக மதித்து அற்பமாக எண்ணிச் செய்வதும், மதத்தைப் பரிகாசம் செய்வதும் குப்று.

கண்ணும், நாவாலும் வேறு பலகாரியங்களாலும் ஏற்படுகிற நன்மையான செய்கைகளைப் புரிவதன் மூலம் சிறுபாவங்கள் மன்னிக்கப்படும். என்றாலும், அவைகளைச் சிறுபாவங்கள் தானே என்று அற்பமாக மதிக்காமல் அவைகளைச் செய்வதில் மிகவும் பயப்படவேண்டும். ஏனெனில், ஒருவர் ஒரு பெரும்பாவத்தை இப்லீஸுடைய கலவையினுற்செய்து, அப்புறம் மிகப்பெரும் பாவத்தைச் செய்துவிட்டோமே என்று பயந்து வியாகூலமடைவானாயின் அல்லாஹுத் தஆலா நாடினால் அதனைச் சிறுபாவமாக ஏற்படுத்தி விடக்கூடும். ஒருவர் ஒரு சிறு பாவத்தைச்செய்து அதனை அற்பமாக மதித்துத் துணிகரங்கொள்வானாயின் அல்லாஹுத் தஆலா நாடினால் அதனைப் பெரும்பாவமாக்கிவிடவும் கூடுமென்று தன்பீஹுல் காபிலீன் என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு காரியத்தைச் செய்வதால் நரகவேதனை யுண்டாகுமென்றும், அது ஹறாம் என்றும், அதுமார்க்கக்கடமை என்றும், அதனைச் செய்பவர் காபிராகிவிடுவாரென்றும் திரு குர்ஆன் அல்லது ஹதீதில் கூறப்பட்டுள்ள யாவும் பெரும் பாவங்களாகும்.

பெரும் பாவங்கள்.

எனவே, நியாயமின்றி ஒருவரைவேண்டுமென்றே கொலை செய்வதும், விபசாரம் செய்தல், ஆண் புணர்ச்சி புரிதல், விபசாரத்தொழில் செய்யாத கற்புள்ள, அடிமையாக இல்லாத ஒரு ஸ்திரீயின் மீது விபசாரம் செய்ததாகப் படர் கூறுதல், இது போல ஒரு ஆடவனைப் படர் கூறல், சன்மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட தக்ககாரணமின்றி சாராயத்தை அருந்துதல்—அது ஒரு துளியானாலும் சரி—அல்லது அதனை அருந்துவதால் போதை ஏற்படவில்லை ஆனாலும் சரி போதையுள்ள வஸ்துக்களை அருந்துதல், பத்து திர்ஹம்களுக்கு அதாவது ஏறக்குறைய 2-12-0 ரூபாய்க்குக் குறைந்த முதலானாலும் திருடுதல், பலவந்தமாகஎடுத்தல், அக்கிரமித்தல், பொய் சாக்ஷியங்கூறல், வட்டி யுண்ணல், றமலான் மாதத்தில் தக்க காரணமின்றி நோன்பு நோற்காதிருத்தல், பொய்ச் சத்தியம் செய்யல், ரத்த சம்பந்தமுள்ள பந்துக்களை சன்மார்க்க அனுமதியின்றி முறித்தல், அவர்களைப் பகைத்தல், முஸ்லிமான

மாதா பிதாக்களின் மனம் வெதும்பும்படி செய்தல், சூனியம் செய்தல், ஹறமில் யுத்தம் புரிதல், காபிர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நிகழும் சண்டையில் முஸ்லிம்களைப் பார்க்கினும் காபிர்கள் இரண்டு மடங்குக்கு அதிகமில்லாமல் இருக்கிற நிலைமையில் அவர்களைப் பயந்து பின் வாங்கி ஓடுதல், அனாதைகளின் பொருள்களை நியாயமின்றிப் புசித்தல், அளவையில் அல்லது நிறுவையில் மோசஞ் செய்தல், தொழுகையை நிறைவேற்றாமல் விடுதல், தொழுகையை அதன் நேரத்தைப்பார்க்கினும் முற்படுத்துதல், காரணமின்றி அதனைப் பிற்படுத்துதல், காரணமின்றி முஸ்லிமை அடித்தல், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது வேண்டுமென்றே பொய்யுரைத்தல், நாயகம் (ஸல்) அவர்களது ஸஹாபிகளை ஏசுதல், ஹஜ்றத் கிழுறு (அலை), துல்கர்னைன், லுக்மான் (அலை) ஆகியவர்கள் நபிமார்கள் என்பதில் ஏகோபித்த அபிப்பிராயமில்லை. அப்படி இருந்தாலும் அவர்களை ஏசுதல், காரணமின்றி சாக்ஷியத்தை மறைத்தல், லஞ்சம் வாங்குதல், சச்சரவு மனக்கசப்பு பித்னு இவைகளை மனிதர்களுக்குள் உண்டாக்குதல், அரசரிடத்தில் கோள் சொல்லல், தன் இல்லாள் தனக்கு விவாகம் செய்ய ஹலாலாயில்லாத மஹ்ரமான ஸ்திரீகளிடம் அந்நியர் வந்து பிரவேசிப்பதைக் குறித்து ரோஷமில்லாதிருத்தல்.

ஜக்காத்துக் கொடாதிருத்தல், நன்மையை ஏவித்தீமையை விலக்க சக்தி இருக்கும்போது அவ்வாறு செய்யாமலிருத்தல், திரு குர்ஆனைப்படித்து விட்டு அதனை மறந்துவிடல், உயிருள்ள பிராணிகளை நெருப்பால் சுடுதல், ஸ்திரீகள் தக்க காரணமின்றித் தன் கணவனை விட்டு விலகிக்கொள்ளல், தன் கணவன் தனக்கு ஊழியம் செய்யவேண்டுமென அவள் ஏவுதல், அவளுக்கு அவன் ஊழியம் செய்தல், தகப்பனிடம் ஊழியம் வாங்குதல், தாய் தந்தை முதலான மஹ்ரம்களைத் தன் மனைவிக்கு ஒப்பிடுதல், ஆலிம்களையும் ஹாபிஸ்களையும் தூஷித்தல், சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட தக்க காரணமின்றி தானகச்செத்த பிராணிகளின் இறைச்சியை, பன்றியின் மாமிசத்தை, உதிரத்தைப் புசித்தல், கோட் சொல்லல், புறம்பேசல், ஓரம்பேசல், சிறு பாவங்களை சாஸ்வதமாகச் செய்தல், ஆகிய இவைகள் பெரும் பாவங்களாகும். இமாம் இப்னு ஹஜர் (றஹ்) அவர்கள் தங்களது ஸவாஜிர் என்ற கிரந்தத்தில்

427 நானூற்று இருபத்தேழு பெரும் பாவங்களைக் குறிப்பிட்டெழுதி இருக்கிறார்கள். இப்பாவங்களில் மிகப்பெரியவைகள் குப்றுகளாகும். குப்றுக்குமேல் பெரியபாவ மொன்றுமில்லை. இவைகளைச் செய்வதை விட்டு இறைவன் நம்மைக் காப்பானாக.

குப்றான காரியங்களுக் கடுத்தபடியான பெரும்பாவம் கொலைத் தொழில், அதற்கடுத்தது வியபிசாரத்தொழில், வியபிசாரத்தொழில் நரகிலும் கடுமையான வேதனையிலும் புகச்செய்யும். தரித்திரத்தை யுண்டுபண்ணும். வியபிசாரத் தொழிலுள்ளவர்களது சந்ததியில் இறைவன் அதனை ஏற்படுத்தி அவனைச் சோதனை புரிவான். வியபிசாரம் பெருகினால் தரித்திரமும் உண்டாகிவிடும். ஒரு சமூகத்தில் வியபிசாரமும் வட்டித் தொழிலுமிருந்தால் அச்சமூகத்தார் தாங்களாகவே அல்லாஹுத் தஆலாவின் வேதனையை வருவித்துக் கொள்கிறார்கள். வியபிசாரம் செய்தவர்களது வெட்கஸ்தலங்களிலிருந்து வெளியாகும் துர்நாற்றம் நரக வாதிகளையும் நோவினைச் செய்யும்.

நரகிற்கு ஏழுவாசல்களிருக்கின்றன. அவ்வேழுவாசல்களிலும் துக்கத்தாலும் வருத்தத்தாலும் உஷ்ணத்தாலும் மிகக்கடுமையானதும் வாடையால் மிக நாற்றமுள்ளதும் வியபிசாரம் செய்தவர்களுக்குள்ள வாசலாகும். ஒருவன் தனக்கு ஹலாலில்லாத அந்நியஸ்திரீயின் மீது ஆசைகொண்டு, அவள் மீது கை வைத்தால் கியாமத்துநாளில் அவனது கையைக் கழுத்தளவில் தளை போடப்பட்ட நிலைமையில் வருவான். அவளை முத்தமிட்டிருப்பானாயின் அவனது இரு உதடுகளும் நரகில் கத்தரிக்கப்படும். அவளை வியபிசாரம் செய்து விட்டால் அவனது தொடை அவனுக்கு விரோதமாக கியாமத்து நாளில் சாக்ஷி சொல்லும்.

“வியபிசாரங்களில் மிகத் தீங்கானது அயலகத்தானின் மனைவியை வியபிசாரம் செய்வதாகும். ஒருவன் பத்து ஸ்திரீகளை வியபிசாரம் செய்வதானது அயலகத்தானின் மனைவியை வியபிசாரம் செய்வதைப் பார்க்கினும் மிகச் சுலபம்” என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

கணவனில்லாத அந்நிய ஸ்திரீயை வியபிசாரம் செய்வது பெரும் பாவம். கணவனுள்ளவளை வியபிசாரம் செய்வது அதி

னும் கொடிது. விவாகம் செய்ய விலக்கலான மஹ்ரமான ஸ்திரீயை வியபிசாரம் செய்வது இவை இரண்டையும் பார்க்கினும் மிகக்கடியது.

கன்னியழியாதவளது வியபிசாரத்தைப் பார்க்கினும் கன்னியழிந்தவளது வியபிசாரமும், வாலிபனது வியபிசாரத்தைப் பார்க்கினும் வயோதிகனது வியபிசாரமும், அடிமையின் வியபிசாரத்தைப்பார்க்கினும் எஜமானது வியபிசாரமும், படிக்காதவனது வியபிசாரத்தைப் பார்க்கினும் படித்தவனது வியபிசாரமும் மிகக் கெட்டவை.

சிறு பாவங்கள்.

பெரும் பாவங்களின் எல்லையை விட்டு நீங்கியவை யாவும் சிறுபாவங்களாகும். ஆனால், சிறுபாவங்களை ஸ்திரமாகவிடாமல் செய்வதால் அச்சிறுபாவம் பெரும் பாவமாக மாறிவிடும். சுன்னத்தான காரியத்தை சோம்பலினால் அல்லது சிரமத்தைத் தவிர்த்துக்கொள்வதற்காக ஒருமுறை செய்யாதிருப்பது சிறு பாவமாகும். இதுபோலவே மக்றூஹை ஒருமுறை செய்வதும் சிறு பாவம். ஆனால், சுன்னத்தை விடுவதையும், மக்றூஹைச் செய்வதையும் தொடர்ந்து ஸ்திரமாகச் செய்தால் அவைகள் பெரும் பாவங்களாகிவிடும். இவ்விதமாகவே பர்லான அல்லது வாஜிபான காரியங்களை இஸ்லாமிய ஷரீஅத்தில் அங்கீகரிக்கப்பட்ட தக்க காரணமின்றி ஒருமுறை செய்வது பெரும்பாவமாகும். ஹறுமான காரியங்களை ஒருமுறை செய்வதும் பெரும் பாவந்தான்.

பொய்யுரைத்தல்.

பொய்யுரைத்தல் பாவங்கள் யாவற்றிற்கும் தலை, பொய்யுரைப்பதால் இருதயம் கலக்கமாகி தெளிவற்றதாகிவிடும். பொய்யுரைத்தால் ஏற்படும் துற்நாற்றத்தால் மலக்குகள் அவர்களை விட்டு ஒரு மைல் தூரத்திற்கப்பால் விலகிச்சென்று விடுவார்கள். சிறு பிள்ளையை நோக்கி உனக்கு இன்னதை வாங்கித்தருகிறேன். சப்தமிடாதிரு என்று கூறி அவ்வாறு செய்யாவிடில் அதனைப் பொய்யாகவே எழுதப்படும். ஆனால், யுத்தத்திலும், வழக்காளிகளிருவரை ராஜிசெய்யவும், மனைவியைத்திருப்தி படுத்தவும் பொய்யுரைப்பது ஆகும்.

புறங்கூறல்.

புறங்கூறல் பெரும்பாவம். முப்பது முறை வியபிசாரம் செய்வதைப் பார்க்கினும் ஒருமுறை புறங்கூறுவது பெரும்பாவமாகும். ஆனால், ஆறு சந்தர்ப்பங்களில் புறங்கூறலாம். அவை வருமாறு:—

1. ஒருவரால் ஏற்படும் தீங்கை விட்டு ஏனைய மனிதர் தப்பித்துக் கொள்வதற்காக அவரிலுள்ள தீமையை மற்றவருக்குச் சொல்லிக் காண்பிப்பது.

2. காலிஃ என்னும் நீதிபதியால் அநீதி இழைக்கப்பட்டிருந்தால், அந்நீதிபதியின் அநீதியைக் குறித்து அரசனிடம் முறையிடல்.

3. ஒருவரிடமுள்ள கெட்ட செய்கையை நிவர்த்திசெய்வதற்காக, அவரிடம் செல்வாக்குள்ள வேறு ஒருவரிடம் அவரைக் குறித்து அவரது கெட்ட செய்கையைக் கூறி, உதவி தேடுதல்.

4. பாவமான காரியங்களை வெட்கமில்லாமல் பகிரங்கமாகச்செய்பவரது அச்செய்கையைப் பிறரிடம் சொல்லிக் காண்பித்தல். "ஒருவன் ஹயா என்னும் வெட்கம் என்ற திரையை அகற்றிவிட்டால் அவன் மீது புறங்கூறல் இல்லை" என்று ஹதீதில் வந்திருக்கிறது. ஆதலால், மானங்கெட்டவர்களது மானங்கெட்டசெய்கைகளையும் பிறரிடம் சொல்லிக் காண்பிக்கலாம்.

5. பொட்டையன், நொண்டி, செவிடன், சப்பாணி என்பனபோன்ற கௌரவ மற்றவார்த்தைகளைப் பட்டப்பெயராகவுள்ளவர்களை, அத்தகைய பெயர்களால் அழைக்கலாம்.

6. என் தந்தை அல்லது என் சகோதரன் அல்லது என் கணவன் அநீதிசெய்கிறான். அதனை விட்டு எவ்வாறு தப்பித்துக் கொள்வது என்று முப்தியிடம் தனக்கும் குறையை நிவர்த்திப்பதற்காகப் பிறரைக்குறித்துக் கூறல்.

இவ்வாறான ஆறு சந்தர்ப்பங்களைத் தவிர வேறு எக்காரணத்தாலும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சமிக்ஞையாகவோ பிறரைக் குறித்துப் புறங்கூறலாகாது. ஆனால், ஒருவரையும் குறிப்பிடாமல் "இன்னவிதமான காரியத்தைச் செய்யும் மனிதர்கள் நிலை என்னாகும்?" என்று பொதுவாகக் கூறலாம்.

புறங்கூறுவதைச் செவி மடுத்துக் கேட்பதானது பாவத்தில் புறங்கூறுபவனுடன் கூட்டாளியாக்கிவிடும். ஆதலால், அதனைக் காது தாழ்த்திக் கேட்பதும் கூடாது. ஹறாமான இதர பேச்சுக்களைக் காது தாழ்த்திக் கேட்பதும் இவ்விதமாகவே ஹறாமாக இருக்கிறது. ஒருவர் தவறுதலாகப் புறங்கூறி விட்டாலும் புறங்கூறப்பட்டவருக்குப் பாபமன்னிப்புக்காக இறைவனைப் பிராத்திப்பது அதற்குப் பரிகாரமாகிவிடும். எனவே, புறங்கூறிய அவ்விடத்தை விட்டு எழுந்திருப்பதற்குள் "அல்லாஹும்மக் பிர்லஹூ வர்ஹம்ஹூ வதஜாவஸ் அன்ஹூ. வஜ்அல் மாகுல்னா பீஹி கபாரத்தன்லி துனூபிஹி வ குர்பத்தன் வ ஜல்பா பிறஹ்மத்திக யா அர்ஹமர் ராஹிமீன். அதாவது "நாயனே! அவருக்குப் பிழை பொறுப்பாயாக. அவருக்குக் கிருபை செய்வாயாக. அவரைக் குறித்து க்ஷமிப்பாயாக. அவரைக் குறித்து நாங்கள் கூறியதை இவரது பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உன் சமூகத்தில் நெருங்குவதாகவும் உன்னை அடுப்பதாகவும் உனது கிருபையால் ஆக்குவாயாக கிருபையுள்ளவர்கள் யாவரிலும் அதிகக் கிருபையுள்ளவனே" என்று மும்முறை துஆச் செய்யவேண்டும். ஆனால், புறங்கூறப்பட்டவரிடம் புறங்கூறியதைக் கூறி அவரிடம் மன்னிப்புக் கேட்க முடியுமானால் அவ்வாறு மன்னிப்புக் கேட்பது தான் நல்லது.

முஸ்லிமாகிய உனது மதச்சகோதரன் இல்லாதிருக்கும் போது அவன் விரும்பாத முறையில் அவனிலுள்ளதை இகழ்வாகக் கூறுவதற்கு புறங்கூறல் என்று பெயர். அவனில் இல்லாத ஒன்றை மேற்கண்ட முறையில் கூறுவதற்கு புஹ்தான் அதாவது அவதூறு என்று பெயர்.

கோள் சொல்லல்.

ஒருவர் தனது இரகசியத்தை அறிந்துகொள்ள விரும்பாத மற்றொருவரிடம் அவரைக் குறித்த இரகசியத்தைக் கூறுவதற்கு கோள் சொல்லல் என்று பெயர். கோள் சொல்பவர் சுவர்க்கம் புகார் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

பிறர் மீது கெட்ட எண்ணங்கொள்வது மனதிற்குள் புறங்கூறிக்கொள்வதைச் சேர்ந்தது. ஆதலின், உன் மத சகோதரனின் தீங்குகளை விட்டு உன் நாவைத் தடுத்துக்கொள்வது வாஜிபாக இருப்பதுபோல உன் இருதயத்தைத் தடுத்துக்கொள்வதும் வாஜிபாகும். மேலே கூறப்பட்ட பெரும்பாவங்கள் கொடிய வேதனையையுண்டுபண்ணும் விபரங்களைக் குறித்து ஹதீது கித்தாபுகளில் காண்க.

NADU ARCHIVES
MADRAS

فصل في بيان الامر بالمعروف والنهى عن المنكر

பஸ்லுன் பீ பயானில் அம்றி பில் மஃஅறூபி வன்னஹ்யி அனில் முன்கரி

நன்மையை ஏவித்தீயதை விலக்கும் விபரங்களைப்பற்றிய பாடம்.

நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஜனங்களை ஏவுவதும், மனிதர்கள் செய்யும் தீமையான காரியங்களை விட்டு விடும்படி அவர்களை விலக்குவதும் மனிதர்களுடன் கலந்துறவாடும் மனிதர்கள் மீது கடமை, அதாவது வாஜிபான காரியங்களில் முக்கியமான காரியமாகும். எனவே, பர்ழான காரியங்களைச் செய்யும்படி ஏவுவதும் ஹறாமான காரியங்களை விட்டு விடும்படி விலக்குவதும் பர்லுகிபாயாவாகும். நன்மையான காரியங்களில் முஸ்தஹப்பாக இருப்பவைகளைச் செய்யும்படி ஏவுவதும், பாபமான காரியங்களில் மக்றூஹானவைகளைச் செய்யவேண்டாம் என்று விலக்குவதும் முஸ்தஹப்பாகவும் இருக்கிறது. ஆதலின், ஒருவராகிலும் ஜனங்களுக்கு நன்மையை ஏவித்தீயதை அவர்களிடமிருந்து விலக்கவேண்டும். ஒருவரும் இக்கடமையைச் செய்யாவிடில் அம்மனிதர்கள் யாவரையும் அல்லாஹுத் தஆலா வேதனை செய்வான். அவர்களது துஆவை அங்கீகரிக்கமாட்டான். நன்மை பரக்கத்து முதலிய பாக்கியங்களை அவர்களை விட்டு நீக்கி விடுவான்.

எனவே, ஏவல் விலக்கல் செய்யத் தகுதியும் சக்தியுமுள்ள ஒருவர் ஜனங்கள் தன்னை நேசிக்கவேண்டும் என்ற கருத்துக் கொண்டு அக்கடமையைச் செய்யாமல் அலக்ஷியமாக இருப்பது கூடாது. ஆனால், ஒரு காரியம் சரியானது அல்லது தவறானது என்பதை அறிந்திருப்பதும், விரும்பத்தகாத காரியங்களை விட்டு விலகி இருத்தலும், குணவானாக இருப்பதும், நன்மையை ஏவித் தீயதை விலக்குவதற்குரிய ஹக்குகளாகும். தவிர, ஒருவர் நன்மையனைத்தையும் செய்யவில்லையானாலும் தீமையனைத்தையும் விட்டு விலகிக்கொள்ளவில்லையானாலும் நன்மையை ஏவித்தீயதை விலக்க

வேண்டும் என்ற பொறுப்பு அவரை விட்டகலாது. ஆயினும், அத்தகையோர் செய்யும் உபதேசங்கள் பயன்படா.

அல்லாஹுத் தஆலாவின் கலிமாவை வெளிப்படுத்துவதை அதாவது அல்லாஹுத் தஆலா ஏற்படுத்தியுள்ள விதி விலக்குகளை அமல் நடத்துவதாக நிய்யத்துச்செய்வதும், அவ்விதி விலக்குகளுக்குரிய மார்க்க ஆதாரங்களை அறிந்திருப்பதும், அதனுல் வரும் சங்கடங்களைப் பொறுத்துக்கொள்வதும் நன்மையை ஏவித் தீயதை விலக்குவதன் பர்ளுகளாகும். விதி விலக்குகளை அறியாதவர் மீது நன்மையை ஏவித்தீமையை விலக்குவது ஜாயிஸில்லே. இக்கடமையை நிறைவேற்றுவதாலுண்டாகும் சங்கடங்களைச் சகித்துக் கொள்ள இயலாதவர்கள் மீதும் இது கடமை அதாவது வாஜிபில்லே. என்ருலும், முஸ்தஹப்பாக இருக்கிறது. இவ்வாறுள்ளவர்கள் விரும்பத்தகாத காரியங்களைக் கண்ணுல் காணுதிருக்கும் பொருட்டு அவைகள் நிகழுமிடங்களுக்குச் செல்லாமலும், முக்கியமான காரியங்கள், வாஜிபான காரியங்கள் ஆகியவைகளுக்காக அல்லாமல் வெளியில் வராமல் வீட்டில் தனித்திருப்பது வாஜிபு அதாவது அவசியமாகும்.

தவிரவும், அவருக்கு மானபங்கம் நேர்ந்துவிடும் என்றிருந்தாலல்லாது அவ்வூரை விட்டு வெளியிற் செல்வது அவருக்கு அவசியமுமில்லே. அல்லாமலும், அவ்வூரை விட்டு வெளிப்படுவதால் பிறருக்குக் கஷ்டம் வரும் என்றிருந்தால் அப்பொழுது அவ்வூரை விட்டுச் செல்வது ஹறுமாகி விடும்.

நன்மையை ஏவித்தீயதை விலக்குவதால் அல்லாஹுத் தஆலாவினிடமிருந்து தனக்குக் கிடைக்கும் தீமைப்பயனை விசுவாசித்தவருக்குப் பொறுமை ஏற்படும். எனவே, ஜனங்களுக்கு நன்மையை ஏவவும், தீமையை விலக்கவும் ஒருவர் விரும்பினுல் பொறுமையாயிருக்கவேண்டும் என்பதையும், அல்லாஹுத் தஆலாவினிடமிருந்து தனக்கு நன்மைப்பயன் கிடைக்குமென்பதையும் விசுவாசிக்க வேண்டும். இவ்வாறுன விசுவாசமிருந்தால் தான் தனக்கு வரும் துன்பத்தை அவர் துன்பமாகக் கருதமாட்டார் தன்னை பிறர் ஏசினுலும் பேசினுலும், அடித்தாலும் உதைத்தாலும்வெட்டினுலுங்கூட அவைகளை அவர் பொருட்படுத்தமாட்டார்,

நன்மையான காரியத்தைச் செய்யும்படி ஒருவர் ஏவப்படு வாராயின் அவர் அதற்குக்கீழ்ப்படிவது அவர் மீது கடமையாக இருக்கிறது. ஆதலால், அல்லாஹுத் தஆலாவிற்குப் பயப்படு கிற அவனுக்கு தக்வாச்செய்யென்று ஒருவர் கட்டளையிடுவாரா யின், அவர் சன்மார்க்க இல்லாமைக் கனப்படுத்தும் கருத்துடன் தனது சென்னியைப் பூமியில் வைக்கவேண்டும் அதாவது அதற் குத் தலை சாய்க்கவேண்டும்.

"நீ அல்லாஹுத் தஆலாவைப் பயந்துகொள், அவனுக்கு தக்வாச்செய்" என்று ஒருவரைப் பார்த்துக் கூறியபோது அவர் "நீ ஏவியபோதும் உன்னை நீ கவனித்துக்கொள்" என்று மறு மொழிகூறி அவ்வேவலை அசட்டை செய்வது பாவங்களில் மிகப் பெரியபாவங்களைச் சேர்ந்ததாகும்.

ஏவல் விலக்கல் செய்வதன் மர்த்தபாக்கள்.

ஏவல் விலக்கல் செய்வது ஐந்து வகைப்படும். அவை வருமாறு:—

1. பாவமான அக்காரியத்தின் தீங்கை அறிவித்தல்.

2. சாந்தமான வார்த்தைகளால் உபதேசம் செய்தல். அல் லாஹுத் தஆலாவைக் குறித்து எச்சரிக்கைசெய்து பயமுண்டா கும்படிச் செய்தல்.

என்னெனில், மாதா பிதாக்களுக்கு மக்களும், எஜமானனுக்கு அடிமையும், கணவனுக்கு மனைவியும், அரசனுக்குப் பிரஜையும் ஏவல் விலக்கல் செய்தால் அவர்கள் இவ்விருவகையையும் கடக்கார்கள். அவர்களுக்காக துஆச்செய்து, அவர்களது பிழைகளைப் பொறுக் கும்படி இறைவனை இரைஞ்சவும் வேண்டும்.

3. கடியவார்த்தைகளாற் ஏசிப்பேசி விலக்குதல். ஆனால், காபிரே, எஹூதியே, நஸாராவே, பன்றியே, நாயே, பாவிக்கே என்பனபோன்ற கடும் பதங்களைக் கூறாமல் ஜாஹிலே (அறி வாலியே), அஹ்மக்கே (முட்டாளே) என்பன போன்ற வார்த்தை களைக் கூறவேண்டும். ஒரு முஸ்லிமை நோக்கி ஒரு திம்மிக்காபிர் ஏவல் விலக்கல் செய்தால் அக்காபிரை இவ்வகையான முறை யில் ஏவக்கூடாது.

4. தீயகாரியங்களைச் செய்வதற்காக உபயோகிக்கப்படும் சாமான்களை அதாவது விளையாட்டுக் காரர்களாக இருந்தால் அவர்கள் விளையாடும் கருவிகளை ஒடித்து முறித்துப்போடல், மதுபான மருந்துபவர்களாயிருந்தால் சாராயத்தைக் கீழே கொட்டி நாசமாக்கி விடுதல், பட்டுடை யணிபவர்களாயிருந்தால் அவ்வுடைகளைப் பரித்து எறிந்து விடுதல் போன்ற செய்கைகளால் பயம் உண்டாகும்படிச் செய்தல்.

5. அடித்து வற்புறுத்தி விலக்குதல். இது சக்தியும் தகுதியுமுள்ள இடத்தில்தான் செய்யவேண்டும்.

எனவே, கையாலும், நாவாலும் ஏவல் விலக்கல் செய்ய ஒருவர் சக்தி பெற்றிருக்கவில்லையானால், மனதிலேனும் அதனை வெறுக்கவேண்டும். மனதிலேனும் வெறுப்பது ஈமானில் மிகக் குறைவானதாக இருக்கிறது என்பதற்கடையாளமாகும்.

ஏவல் விலக்கல் செய்வது வாஜிபாக ஏற்படுவதற்கு ஆக்கிலாக அதாவது அறிவுள்ளவனாகவும் பாலிகாக அதாவது யுக்தவயதை அடைந்தவனாகவும் இருக்கவேண்டும் என்பது ஷர்த்து. ஆனாலும், ஏவல் விலக்கல் செய்வது புத்திக் கூர்மையைப்பொறுத்திருப்பதால் ஒருவர் அறிவாளியாக இருந்து, யுக்தவயதை அடையாமல், அதனையடையக்கூடிய பிராயத்தை எட்டி இருந்தால் அவர் விளையாட்டுக் கருவிகளை ஒடித்து முறித்துப்போடலாம், சாராயத்தை ஊற்றி நாசமாக்கி விடலாம், இவைபோன்ற செய்கைகளைச் செய்து ஏவல் விலக்கல் செய்யலாம். இப்படிச் செய்வதால் அவர் நன்மைப்பயனை அடைவார். ஏவப்படுபவர் அல்லது விலக்கப்படுபவர் ஆக்கில் பாலிக்காக இருக்கவேண்டும் என்பது ஷர்த்தல்ல. ஆதலால், சிறு பிள்ளைகள் பயித்தியக்காரர்கள் எவராயினும் தீயகாரியங்களைச் செய்யக்கண்டால் அவ்வாறு செய்யவேண்டாமென விலக்குவது வாஜிபு.

فصل في بيان التوبة

பஸ்லுன் பீ பயானித் தெளபத்தி

தெளபாவைப்பற்றிய விபரம்.

பாபம் செய்வதை விட்டு விலகி, அல்லாஹுத் தஆலாவிற்கு வழிப்படுவதன்பால் திரும்புவதற்கு தெளபா என்று பெயர். இது மனிதர் யாவர் மீதும் எந்நிலைமையிலும் கடமையாகும். அதிலும்

தாமதத்திலல்லாமல் துரிதமாகவே இதனை நிறைவேற்றவேண்டும். ஒருவர் ஒரு பாவத்தைச்செய்தால் அவர் அதற்காக தௌபாச் செய்கிறாரா இல்லையா என்று ஒரு ஸாஅத்து நேரம்வரை மலக்குகள் தாமதிக்கிறார்கள். அதற்குள்ளாக அவர் தௌபாச் செய்யாவிடில் அப்பாவத்தை அவர்கள் எழுதிவிடுவார்கள்.

"மூமின்களே, நீங்கள் ஈடேற்றம் பெறும் பொருட்டு நீங்கள் யாவரும் அல்லாஹ்வின்பால் (பாவங்களுக்காகத் தௌபாச் செய்து) மீளுங்கள் என்றும்,

மேலும் (ஷிர்க்கென்னும் கொடிய பாவத்தைவிட்டு) மீண்டு, (அல்லாஹுத் தஆலாவை) விசுவாசித்து, (சன்மார்க்கத்திற்கு) இணக்கமான (காரியத்)தைச் செய்து பின்னர் (தனது அந்திய காலம் வரை நற்கிரியைகள், தௌபா முதலியவைகளைச் செய்து ஸ்திரமாக இருப்பதன் மூலம்) நேர்வழியை யெடுத்துக்கொண்டவருக்கு நிச்சயமாக நான் (பாப) மன்னிப்புச் செய்பவன் என்றும் இறைவன் தனது திருமறையிற் கூறியுள்ளான்.

தவிர, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனங்களே! அல்லாஹ்வின்பால் நீங்கள் (தௌபாச்செய்து) மீளுங்கள். நிச்சயமாக நான் ஒவ்வொரு நாளும் நூறு முறை தௌபாச்செய்கிறேன் என்று கூறி இருக்கிறார்கள். எனவே, மேற்கண்ட திரு குர்ஆன் கட்டளைகளிலிருந்தும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆணையிலிருந்தும் மனிதர் யாவரும் தௌபாச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதும், உண்மையாகவே தௌபாச்செய்து அதில் ஸ்திரமாக இருப்பவர்களை அவன் மன்னிக்கிறான் என்பதும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தினந்தோறும் நூறுமுறை தௌபாச்செய்திருப்பதால் தௌபாச்செய்வதைவிட்டு விலக்குப்பெற ஒருவராலும் முடியாதென்பதும் தெரியவருகின்றன.

தௌபாவின் ருக்னுகள்.

1. பாவத்தைவிட்டு விலகுதல், 2. செய்த பாவத்திற்காக பச்சதாபப்பட்டு வருந்துதல், 3. இனிமேல் பாவம்செய்வதில்லை என்று உறுதியாக நிர்ணயஞ்செய்துகொள்ளல், 4. அல்லாஹுத் தஆலாவிற்கும், அடியார்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளை இயன்றவரை நிறைவேற்றுதல். ஆகிய இந்நான்கும் தௌபாவின்

ருக்னுகள். இவைகளில் மிகமுக்கியமான ருக்னுசெய்த பாவத்தைக் குறித்து பச்சதாபப்பட்டு வருந்துதல், இதனுற்ருன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (செய்த பாவத்தைக் குறித்து வருந்தி) பச்சதாபப்படுவதுதான் தௌபா என்பதாகக் கூறி இருக்கிருர்கள்.

தான்செய்த பாவச்செய்கையைக்குறித்து அல்லாஹுத்தஆலாவை உண்மையாகவே பயந்து, மனபூர்வமாக வருந்திக் கவலைகொள்வதற்கு பச்சதாபம் என்று பெயர்.

அல்லாஹுத் தஆலாவிற்குச் செய்யவேண்டிய கடமைகள் என்பது தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜுபோன்ற கடமைகளில் நிறைவேற்ருமல் பாக்கி இருப்பவைகளைக் கலாச்செய்வதும், கப்பாராவென்னும் பரிகார முறைகளைச்செய்து நிறைவேற்றுவதுமாகும்.

அடியார்களுக்குச் செய்யவேண்டிய கடமை என்பது பிறரிடமிருந்து நியாயமில்லாமல் எடுத்த பொருள்களை அவைகளுக்குரியவர்களிடம் திரும்பக் கொடுக்கவேண்டும். உரியவர்களில்லாவிடில் அவர்களது வாரீஸ்களிடம் அவைகளை ஒப்புவிக்கவேண்டும். அவ்வாறு செய்ய இயலாவிடில் அவர்களிடம் மன்னிப்புக்கேட்டு அவர்களைத் திருப்திப் படுத்தவேண்டும். இதற்கு இடம்பாடில்லாவிடில் உரியவன் சார்பாக, அவன் நிய்யத்துவைத்து ஏழை எளியாருக்கு தர்மம்செய்யவேண்டும் அல்லது மத்ரஸா, மஸ்ஜிது முதலியவைகளில் செலவு செய்து விடவேண்டும். பொருள் சம்பந்தமில்லாமல் நோவினைச்செய்வதன் மூலமாக அடியார்களது உரிமையை அபகரித்திருந்தால் உரியவரிடம் மன்னிப்புக்கேட்டு, அவரை ராஜிப்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கியலாவிடில் அவர்களுக்குப் பாபமன்னிப்புச் செய்யும்படி இறைவனை இரைஞ்சிக் கொண்டே இருக்கவேண்டும்.

தௌபாச் செய்யும்போது இன்னின்ன பாவங்கள் என்று அவைகளைக் குறிப்பிடவேண்டியதில்லை, பொதுவாகவே எல்லாப் பாவங்களையும் குறித்து தௌபாச்செய்வது போதுமானது. அல்லாஹுத் தஆலாவிற்காக வென்றே பாவங்களைச் செய்யாமல் விடவேண்டும். தனது சொத்து அல்லது தலைமைத்தனம் அல்லது கண்ணியம் போய்விடுமே என்று பயந்து பாபம் செய்யாதிருப்

பது அல்லது பாவத்தைச் செய்வதற்குரிய வசதிகள் இல்லாமற் போனதால் பாவங்களைச் செய்யாதிருப்பது அல்லாஹுத் தஆலா விற்காகப் பாவங்களைச் செய்வதை விட்டதாக ஏற்படாது.

தௌபாச்செய்வதாலேற்படும் பிரயோஜனங்கள்.

தௌபாச்செய்பவர்களை அல்லாஹுத் தஆலா நேசிக்கிருன். நற்கிரியைகள் புரிந்து இறைவனை வணங்க அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் வாய்க்கும். இபாதத்தென்னும் வணக்கங்களைபுரிவது அவர்களுக்கு இன்பமாக இருக்கும். அல்லாஹுத் தஆலா அவர்களை அங்கீகரித்துக்கொள்ளல் ஆகிய இவைகள் தௌபாச் செய்வதாலேற்படும் பிரயோஜனங்கள்.

பாபம்செய்யுந் தோறேல்லாம் தௌபாச்செய்யும் விஷயத்தில் தீவிரமாகுபவர்களை அல்லாஹுத் தஆலா நேசிக்கிருன் என்று அவன் திருவுளமாகி இருக்கிருன். தௌபாச்செய்தவர் அல்லாஹுத் தஆலாவின் ஹபீபு என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

தௌபாவிலுள்ள ஷர்த்துகள் யாவும் நிச்சயமாக நிறைவேறி விட்டால் அது அங்கீகரிக்கப்படுவதில் எவ்வித சந்தேகமில்லை. அந்த ஷர்த்துகள் நிறைவேறினவா அல்லவா என்பதில் சந்தேகமுண்டானுல் அத்தௌபா அங்கீகரிக்கப்படுவதிலும் சந்தேகம் தான்.

தௌபாச்செய்வதற்குப்பின் அடிக்கடி இஸ்திஃபார்செய்வது தௌபாவின் ஹக்காக இருக்கிறது. ஏனெனில், ஒரு நாளில் எழுபது முறை பாவத்தில் வீழ்ந்தாலும் அதனை மன்னிக்கும்படி இஸ்திகுபார் செய்தவர் பாவத்தில் ஸ்திரமாக இருந்தவராக மாட்டார்." என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. தவிரவும், வழக்கமாக நியமம் செய்வதுகொண்டு இஸ்திகுபார்செய்வது இஸ்லாம் மதத்தின் சுன்னத்துகளைச்சேர்ந்தது. அத்துடன் பெரும்பாவங்களை சிறுபாவங்களாக மாற்றிவிடுவதாகவும், துன்பங்களை அகற்றுவதாகவும், செல்வத்தையும் மக்கட்பேற்றையும் அதிகமாக்குவதாகவு மிருக்கிறது.

பாபம்செய்வதை வெளியிடுவதைப் பார்க்கினும், அதனை மறைத்து வைப்பது அல்லாஹுத் தஆலாவிற்கு மிகப்பிரியமானது. ஆனுல், ஹத்து என்னும் இஸ்லாமிய தண்டனையை அமல்நடத்

திவைப்பதற்காக பாவம் செய்ததை வெளியிட்டுக் கூறுவது பழிப்பு மல்ல, விலக்கனுமல்ல. ஏனெனில், ஹஜ்றத் மாஇஸ் (றலி) அவர்கள் இஸ்லாமிய ஷரீஅத்தின் ஹத்து என்னும் தண்டனையை நிறைவேற்றிக்கொள்வதற்காக தமது செய்கையை வெளிப்படுத்தி அதன் மூலம் தமது பாவத்திற்கு தௌபாச் செய்தார். அவரது தௌபாவை அல்லாஹுத் தஆலா அங்கீகரித்தது மட்டுமில்லாமல், அதனைக்குறித்து திட்டமாக அல்லாஹ் ஒரு தௌபாவை அங்கீகரித்தான். அதனை உம்மத்துகளுக்கிடையில் பங்குவைக்கப்பட்டால் அது அவர்களிடம் விசாலமாகிவிடும் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

பாவத்தின் விகிதத்திற்குத் தக்கவாறு நன்மையைச் செய்வது தௌபாவின் ஹக்காகும். எனவே, வீணான விளையாட்டுக் கருவிகள் மூலமாகச் சங்கீதம் முதலியவைகளைக் கேட்டிருந்தால் திரு குர்ஆன் ஓதுவதைச் செவியேற்கவேண்டும். பாவத்தில் ஸ்திரமாக இருந்ததற்குப் பதிலாக மஸ்ஜிதில் இஃதிகாபிருக்க வேண்டும். மதுபானம் அருந்தியதற்குப் பதிலாக ஹலாலான அமிர்தமானபானங்களை தர்மம் செய்யவேண்டும். கொலைசெய்திருந்தால் அதற்குப்பதிலாக அடிமையை உரிமைவிடவேண்டும். பிறரைக்குறித்துப் புறம் பேசி இருந்தால் அதற்குப்பதிலாகப் பிறரைப் புகழவேண்டும். கோபமடைந்தால் தர்மம் செய்யவேண்டும். இவ்விதமாக ஒவ்வொன்றுக்கும் பதிலாக தக்கவேறு ஒரு நன்மையைப் பரிகாரமாகச் செய்யவேண்டும். ஏனெனில், "நிச்சயமாக நன்மைகள் தீமைகளைப் போக்கிவிடும் என்று அல்லாஹுத் தஆலா கூறி இருக்கிறான்.

பாவத்தைச் செய்தபோது அணிந்திருந்த உடையைச் சலவை செய்து, தானும் ஸ்நானஞ்செய்து, தனித்த இடத்தில் நான்கு ரக்அத்துத் தொழுது, மனம் கலங்க, கண்ணீர் ஓட, சப்தமிட்டு பூமியின் மீது நெற்றியை வைத்து தன்னுடைய பாவங்களை ஒவ்வொன்றாக நினைத்து, தன் நப்ஸைப் பழித்து, அதற்கு அச்சம் ஊட்டி இருகைகளையும் உயர்த்தி அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து ஸலவாத்துச் சொல்லி, தனக்கும் தன் பெற்றோர்களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் றப்பிக் பிர்லீ வலி வாலிதைய வ

லில்முமினீன யௌம யகூமுல் ஹிஸாப் அதாவது "நாயனே! என் ரக்ஷகனே, கேள்விகணக்குக் கேட்கப்படும் நாளில் எனக்கும் என் பெற்றோர்களுக்கும் மூமின்களுக்கும் பிழை பொறுப்பாயாக" என்று பிரார்த்திப்பதுடன் இஸ்திகுபாரை அதிகமாக ஓதவேண்டும். முக்கியமாக றப்பி லலம்து நப்ஸீ வ அமில்து ஸூஅன் பகுபிர்லீ துனூபீ அதாவது "எனது ரக்ஷகா என் நப்ஸுக்கு நானே தீங்கிழைத்துக் கொண்டேன் தீமையையுஞ் செய்துவிட்டேன். ஆதலின் எனது பாவங்களை மன்னிப்பாயாக" என்று பிரார்த்தித்து ஸெய்யிதுல் இஸ்திகுபாரை மிகுதமாய் ஓதவேண்டும். மேற்கண்டவாறு செய்வது தௌபாவின் ஹக்கைச் சேர்ந்தது.

எனவே, முழு மனதுடன் தௌபாச் செய்தல், வேதனையைப் பயப்படுதல், அல்லாஹுத் தஆலா மன்னிப்புச் செய்வான் என்று ஆதரவு வைத்தல், மஸ்ஜிதில் இரண்டு ரக்கஅத்துத் தொழுது எழுபது முறை இஸ்திகுபார் செய்தல், நூறு முறை தஸ்பீஹு தஹ்மீது செய்தல், இரகசியமாகவும் பகிரங்கமாகவும் தர்மங்கொடுத்தல், ஒருநாள் நோன்பு வைத்தல் ஆகியவைகள் மூலமாக நன்மைகளைத் தொடரச் செய்வதும், பாவங்களை இறைவன் பொறுப்பான் என ஆதரவுவைப்பதும் வேண்டிய செய்கைகளாகும்.

உண்மையாய்ச் தௌபாச் செய்தவர்களின் அடையாளங்கள்.

உண்மையாகவே மனப்பூர்வமாக தௌபாச் செய்தவர்களுக்கு நான்கு அடையாளங்களிருக்கின்றன. அவை வருமாறு:—

1. பொய்யுரைத்தல், புறங்கூறல், வீண் வார்த்தைகளுரைத்தல், இவைகளை விட்டு நாவைப் பேணுதல்.

2. எவரையும் பகைக்காமலும் பொறாமை கொள்ளாமலும் இருதயத்தைப் பேணுதல்.

3. வீணர், வம்பர், பாவஞ் செய்வோர் முதலியவர்களை விட்டு விலகி இருத்தல்.

4. முன்னர் செய்த பாவங்களை நினைத்து வருந்தி, பிழை பொறுக்கத்தேடியவனாகவும், அல்லாஹுத் தஆலாவை வணங்கு

வதில் பிரயாசை எடுத்துக்கொள்பவனுகவும் மரணத்துக்காக நல்ல சித்தம் செய்பவனுகவும் இருத்தல்.

இவ்விதமாக ஒருவர் மனப்பூர்வமாகத் தௌபாச் செய்து விட்டால் மற்றவர்கள் அவரை நேசிப்பதும், தௌபாவில் அவர் ஸ்திரமாக இருக்கவேண்டும் என இறைவனை இரைஞ்சுவதும், முன்னர் செய்த பாவங்களைக் குறித்து அவரைக் குறை கூறுமலும், அவரைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு நன்மையான காரியங்களில் உபகாரம் செய்வதும் வாஜிபு.

தௌபாச் செய்யும்படி தூண்டும் காரியங்கள்.

தௌபாச் செய்வதால் ஏற்படும் நன்மைப் பயன்களைக் குறித்து திருகுர்ஆனில் கூறப்பட்டுள்ள ஆயத்துகளையும், ஹதீது ஷரீபில் வந்துள்ள நற்செய்திகளையும் நினைத்தல்.

பாவஞ்செய்வதாலேற்படும் கெடுதல்கள், மறுமையில் ஏற்படும் வேதனைகள், கியாமத்தில் உண்டாகும் அமளிகள் ஆகியவைகளைத் தாங்கவும் சகிக்கவும் தன் நப்ஸுக்குப் பலமில்லை என்பதையும், மறுமையின் உன்னத வாழ்வையும், இவ்வுலகின் தாழ்வான நிலைமையும், மரணம் சமீபித்திருப்பதையும், அல்லாஹுத்தஆலாவை அறியும்படியான மஅரிபா என்னும் மெஞ்ஞானத்தின் இன்பத்தையும், இறைவனிடம் முனுஜாத்துச் செய்வதாலேற்படும் இன்பத்தையும் நினைத்தல்.

பாவஞ்செய்ததற்கு உடனே இறைவன் தண்டனையை அளிக்காமல் விட்டு வைத்திருப்பதையும், பாவம் செய்பவர்களுக்கு இறைவன் உதவிசெய்து அவர்களுக்கு அதில் உற்சாகமூட்டுவதையும் பயப்படுதல்.

பாவஞ் செய்வதற்காக ஏற்பட்டுள்ள புறக்காரணங்களாகிய மருட்சிகள், இவ்வுலகை நேசித்தல், மேலெண்ணங்களை அதிகமாகக்கொள்ளல் ஆகிய இவைகளை தன்னை விட்டகற்றுதல் இவைகள் தௌபாச் செய்யும்படி தூண்டுங்காரியங்களாகும்.

தௌபாச் செய்பவர்களில் சிறந்தவர்கள்.

தௌபாச் செய்த பிறகு தங்களது மரணம் வரையில் பாவத்தில் செல்லாமல் ஸ்திரமாக இருப்பவர்கள்தான் தௌபாச் செய்த

வர்களில் மிகச் சிறந்தவர்கள். இவர்கள் முதல் தரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஸாபிக்குன் பில் கைராத் அதாவது “நன்மைகளைக் கொண்டு முந்தினவர்” என்று பெயர். இத்தகையோர்களது நப்ஸுகளுக்கு நப்ஸே முத்ம இன்னு என்று பெயர்.

தௌபாச் செய்த பிறகு பாவங்களைத் திரும்பச்செய்து மறுபடியும் தௌபாச் செய்தவர்கள் மேற்கண்டவகையினருக்கு இரண்டாந்தரமானவர்கள். இவர்களுக்கு அல்முப்தத்னுத் தௌவாப் அதாவது “பித்னுவில் அகப்பட்டு அதிகமாகத் தௌபாச் செய்தவர்கள்” என்று பெயர். இத்தகையோரின் நப்ஸுகளுக்கு நப்ஸே லவ்வாமா என்று பெயர்.

குறிப்பிட்ட சில பாவங்களுக்கு மட்டிலும் தௌபாச் செய்துவிட்டு, வேறு சில பாவங்களுக்குத் தௌபாச் செய்வதை தாமதப்படுத்துவதுடன் பாவஞ் செய்த பிறகு பச்சதாபப்பட்டு தௌபாச் செய்ய விரும்புபவர்கள் மூன்றாந்தரமானவர்கள். இத்தகையினருக்கு அல்முகல்லத் அதாவது “நன்மையும் தீமையும் கலந்து செய்பவர்” என்று பெயர். இவர்களுக்கிருக்கிற நப்ஸுகளுக்கு நப்ஸே முஸவ்வலா என்று பெயர். அதாவது பாவத்தை அலங்காரமாக்கி, தௌபாச் செய்வதை அற்பமாக மதிக்கும் தன்மை வாய்ந்தது. இத்தன்மையால் இறுதியில் சங்கடமுண்டாகும். எனவே, தௌபாச் செய்தவனை மரித்தால் சுவர்க்கானந்தத்தையடைவான். இல்லையேல் அவனது காரியம் அல்லாஹுத் தஆலாவின் நாட்டத்தைப் பொறுத்திருக்கிறது.

பாவத்தைச்செய்து, தௌபாவும் கூடச் செய்யாமல் பாவத்தின் மீது ஸ்திரமாக இருந்து, தௌபாவையும் அதனைக் குறித்த நற்கிரியைகளையும் மறந்தவர்கள் நான்காம் வகையினர். இவர்களுக்கு காபிலீன்கள் அதாவது “மறதியாளர்கள்” என்று பெயர். அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் கட்டளைகளை மறந்து தங்களைச் சிருஷ்டித்தது எதற்காக என்பதை உணராமலிருப்பவர்கள். இவர்களுடைய நப்ஸுகளுக்கு நப்ஸே அம்மாரத்துன் பிஸ்ஸூஇ என்றழைக்கப்படும். கெடுதியை ஏவும் மனம் என்பது இதன்பொருள். இத்தகையோர் இறுதியில் தீங்கடைவர் என்றஞ்சப்படும். ஆனால், சிலருக்குத் தேடாமல் புதை

யல் அகப்படுவதுபோல இவர்களிற் சிலருக்கு அல்லாஹுத் தஆலாவின் கிருபை கடாக்ஷத்தால் பாபமன்னிப்பு அளிக்கப்படவும் கூடும். ஆயினும் பாவங்களை நிரந்தரமாகச் செய்து கொண்டும், இறைவனை வணங்காமலிருந்து கொண்டும் இறைவன் மன்னிப்புச் செய்வானென்று எதிர்பார்ப்பது அறிவுடையோருக்கழகல்ல.

فصل في بيان العبادات

பஸ்லுன் பீ பயானில் இபாதாத்தி

வணக்கங்களைப்பற்றிய விபரம்.

மேலும், என்னை வணங்குவதற்காக அல்லாமல் ஜின்னையும் மனிதனையும் நான் சிருஷ்டிக்கவில்லை என்று அல்லாஹுத் தஆலா திருமறையிற் கூறியுள்ளான். ஆகவே, மனிதப் பிறவியின் லக்ஷியம் இறைவனை வணங்குவதேயாகும். தன்னை வணங்கவேண்டிய முறைகளையும் வணக்கங்களையும் அவனே நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறான். அவ்வணக்கங்கள் ஆறுவகைப்படும். அவை வருமாறு:—

தொழுகை.

இது ஏனைய வணக்கங்களைப் பார்க்கினும் மிக சிறப்புமானதும் அதிக நன்மைப் பயனுள்ளதுமாகும். "அல்லாஹுத் தஆலாவை விசுவாசிப்பதாகிய ஈமானுக்குப் பிறகு தொழுகையைப் பார்க்கினும் அவனுக்குப் பிரியமான வேறு எதையும் தனது சிருஷ்டிகளின் மீது பர்லாக்கவில்லை" என ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. எனவே, தொழுகை இறைவனுக்கு மிகப்பிரியமானது. அகம் புறம் ஆகிய இரண்டிலும் பரிசுத்தமாக்குவதற்கு தொழுகையின் ஹக்காக இருக்கிறது.

திரு குர்ஆன்.

திரு குர்ஆனை ஓதுதல். "அல்லாஹுத் தஆலாவைச் சந்திக்கவேண்டும் என்று விரும்புபவர் அவனது கிளையாரைக் கனப்படுத்தவேண்டும்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரு

வாய் மலர்ந்தருளினூர்கள். அப்பொழுது "அல்லாஹ்வின் றஸூலே! அல்லாஹ்வின் கிளேயார் யார்?" என்று ஸஹாபிகள் வினவியதற்கு "திர்குர்ஆனை ஓதுபவர்கள்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் விடைபகர்ந்தார்கள் என்று ஹதீதில் வந்திருக்கிறது. எனவே, அவர்களுக்கு திரு குர்ஆனை ஓதுபவர் ஒருவர் சங்கை செய்தால் அவர் அல்லாஹுத் தஆலாவிற்குச் சங்கை செய்தவராக ஆகுகிறூர்கள். அவரை அல்லாஹுத் தஆலா சுவர்க்கபதியில் சேர்ப்பிப்பான். அவர்களை ஒருவர் தூஷிப்பாராயின் அவர் அல்லாஹுத் தஆலாவைத் தூஷித்தவராகி விடுவார். அவரை அல்லாஹுத் தஆலா நரகில் சேர்ப்பிப்பான் என்பது நாயகவாக்கியத்தின் கருத்து.

திரு குர்ஆனைப்படித்து, மற்றவருக்கு அதனைப் படித்துக் கொடுத்தவர்தான் உங்களில் சிறத்தவர் என்றும்,

திரு குர்ஆனைக் கொண்டு சுவாத்தியம் பெறத்தேடாதவருக்கு சுவாத்தியமில்லை என்றும்,

திரு குர்ஆனைக்கொண்டு எவர் மற்றவைகளை விட்டுத் தேவையற்றவராக வில்லையோ அவர் நம்மிலுமுள்ளவ ரல்லர் என்றும்,

வியாதிகள் யாவற்றிற்கும் திருகுர்ஆன் மருந்து என்றும்,

ஏன் உம்மத்துகளின் வணக்கங்களில் மிக மேலானது திரு குர்ஆனை ஓதுவதாகும் என்றும் ஹதீது ஷரீபுகளில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வபோன்ற வேறு பல நன்மைகளும் திரு குர்ஆனை ஓதுவதைப்பற்றி ஹதீது ஷரீபுகளில் கூறப்பட்டிருக்கின்றன.

குர்ஆன் ஓதும் முறை.

அல்லாஹுத் தஆலாவின் மீதுள்ள பிரியத்தை நிறைவேற்றுவதையும், வெறுப்பை மாற்றி, விருப்பு உண்டாக்குவதையும் நிய்யத்துச் செய்து குர்ஆன் ஓதவேண்டும்.

பற்றுலக்கி, மிஸ்வாக்குச்செய்து ஒலுச் செய்து சுத்தமான உடையணிந்து, மனம் பூசி, கிப்லாவை முன்னேக்கி, தன்னுவியன்ற மட்டிலும் மரியாதையாக இருந்து ஓதவேண்டும். ஆனுல், இருகால்களையும் மடக்கிக்கொண்டு ஒருக்கணித்துப் படுத்து ஓதுவதும் ஆகும்.

ஒருவர் குர்ஆனைத் தொழுகையில் நின்ற வண்ணம் ஓதினுல் ஒரு அக்ஷரத்திற்கு நூறு நன்மைகளும் இருந்தோதினுல் ஐம்பது நன்மைகளும், தொழுகையில் இல்லாமல் ஒலுவுடன் ஓதினுல் இருபத்தைந்து நன்மைகளும், ஒலுவில்லாமல் ஓதினுல் பத்து நன்மைகளும் உண்டு. இராக்காலங்களில் திருகுர்ஆனை ஓதுவது ரொம்ப நன்மையாகும். திருகுர்ஆனைப்பார்த்து ஓதுவது கூலியை இரட்டிப்பாக்கும்.

ஒருவர் தினந்தோறும் திருகுர்ஆனைப்பார்த்து இருநூறு ஆயத்துகளை ஓதிவருவாராயின் அவருடைய கப்றைச் சுற்றிலும் அடக்கப்பட்டிருப்பவர்களின் கப்றுகளில் ஏழு கபீராளிகளுக்குப் பரிந்து பேச அவருக்கு அனுமதி கொடுக்கப்படும் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. திரு குர்ஆனைப் பாடமிடுவதால் மாதா பிதாக்களை விட்டு வேதனையை இலேசாக்கப்படும். அவர்களிரு வரும் முஷ்ரிக்காக இருந்தாலும் சரியே.

திரு குர்ஆனை மூன்று நாட்களுக்குள்ளாக ஓதி முடிக்கக் கூடாது. நாற்பது நாட்களில் அல்லது எழுவது நாட்களில் கத்தம் செய்யவேண்டும். திரு குர்ஆனை ஏழுநாட்களில் கத்தம் செய்ய வேண்டும். திரு குர்ஆனை ஏழு நாட்களில் சுத்தம் செய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு அதனை ஏழு பாகங்களாக இமாம்கள் பிரித்திருக்கிறுர்கள். இவைகளுக்கு ஏழு மன்ஜில்கள் என்று பெயர். இதனைச் சுலபமாகத் தெரிந்துகொள்வதற்காக பமீ பிஷௌக்கின் என்று பெயர் வைத்திருக்கிறுர்கள். இப்பதங்களில் ஏழு அக்ஷரங்களிருக்கின்றன. இவ்வக்ஷரங்கள் எந்தெந்த ஸூறத்தின் பெயராக இருக்கிறதோ அந்த ஸூறத்திலிருந்து ஒரு மன்ஜில் ஆரம்பமாகிறது.

எனவே, ஸூறத்துல் பாத்திஹாவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய முதலாவது மன்ஜில். ஸூறத்துல் மாயிதாவிலிருந்து ஸூறத்துத் தௌபா முடிய இரண்டாவது மன்ஜில். ஸூறத்து யூனுஸிலிருந்து ஸூறத்து நஹ்ல்முடிய மூன்றுவது மன்ஜில். ஸூறத்து அஸ்ராவிலிருந்து ஸூறத்து புருக்கான் முடிய நான்காவது மன்ஜில். ஸூறத்து ஷுஃராமுதல் ஸூறத்து யாஸீன் முடிய ஐந்தாவது மன்ஜில். ஸூறத்து வஸ்ஸாப்பாத்து முதல் ஸூறத்துல் ஹுஜுறாத் முடிய ஆறுவது மன்ஜில். ஸூறத்து காப்முதல் இறுதிவரை ஏழாவது மன்ஜில்.

மூன்று நாட்களுக்குக்குள் திரு குர்ஆனை சுத்தம் செய்யக் கூடாது என்பதும், ஏழு நாட்களுக்கு ஒருமுறை சுத்தம்செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்கண்டவாறு ஏழு மன்ஜில்களைப் பிரித்து வைத்திருப்பதும் புறத்தில் அமல் செய்பவர்களுக்குத் தான். ஆனால், அகத்தில் வணக்கம் புரிவோர்களான மெஞ்ஞானிகள் திரு குர்ஆனை அவர்களுக்கு வசதிபோல் ஓதிக்கொள்வார்கள்.

திரு குர்ஆனை ஓதுபவர் அல்லாஹுத் தஆலாவுடன் பேசிக் கொண்டிருப்பவரைப் போலிருக்கிறார் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆதலால், திரு குர்ஆனை நிறுத்தி நிறுத்தி எழுத்துக்கள் உச்சரிப்புகள் வார்த்தைகள் பேதகமடையாமல் தெளிவாக ஓதவேண்டும். நரகவேதனை, பாவிகளுக்கு வந்த அதாபுகளைக் குறித்த ஆயத்துகளை ஓதும்போது அழுவது முஸ்தஹப்பு. திரு குர்ஆனை ஓதி அழுங்கள். அழுகை வராவிட்டால் அழுவதுபோல் நடியுங்கள், என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆதலால், திரு குர்ஆனை ஓதி அழவேண்டும். அழுகைவராவிட்டால் அழுகை வரவில்லையே என்று அழவேண்டும்.

திரு குர்ஆனை ஓத ஆரம்பிக்கும்போது அல்லாஹும்ம இன்னீ அஸ்தௌதிஉக மா அல்லம்தனீஹி பர்துத்ஹு இலய்ய இந்த ஹாஜத்தீ இலைஹி அதாவது "நாயனே, எனக்கு நீ கற்பித்ததை உன்னிடம் அமானிதமாக வைக்கிறேன். அது எனக்குத் தேவையாகும்போது எனக்கு அதனைத் திரும்பக்கொடுப்பாயாக" என்ற துஆவை ஓதிக்கொள்ளவேண்டும். தவிரவும் இந்த துஆவிற்கு முன்னும் பின்னும் ஸலவாத்தையும் ஓதவேண்டும்.

குர்ஆனை கத்தம் செய்த இடத்தில் மறு கத்தம் ஓதுவதற்காக ஆரம்பம் செய்துவிடவேண்டும். எனவே, திரு குர்ஆனிலுள்ள இறுதி அத்தியாயமான ஸூறத்துன்னாஸ் என்ற ஸூறத்தை ஓதியவுடன், அதன் முதல் அத்தியாயமான ஸூறத்துல் பாத்திஹாவையும், இரண்டாவது அத்தியாயமான ஸூறத்துல் பக்கராவில் முதல் ஐந்து ஆயத்துகளையும் ஓதவேண்டும்.

கத்தம் செய்யும்போது அல்லாஹும்ம மர்ஹம்னீ பில் குர்ஆன், வஜ்அல்ஹு லீ இமாமன் வ் நூரன் வ ஹுதன் வ றஹ்மத்

தன். அல்லாஹும்ம தக்கிர்னீ மின்ஹு மா நஸீத்து வஅல் லிம்னீ மின்ஹு மா ஜஹில்து வர்ஜுக்னீ திலாவத்தஹு ஆனு அல்லைலி வன்னஹாரி வஜஅல்ஹு ஹுஜ்ஜத்தன் லீ யா றப்பல் ஆலமீன் அதாவது "நாயனே, திரு குர்ஆனின் மூலமாக எனக்குக் கிருபை செய்வாயாக. இன்னும் அதனை எனக்கு இமாமாகவும் பிரகாசமாகவும், நேர்வழி காட்டியாகவும் கிருபையாகவும் ஆக்கு வாயாக. நாயனே, அதில் நான் மறந்ததை எனக்கு ஞாபகப்படுத்தி, நான் அறியாததை எனக்குக் கற்பித்து; பகல் காலங்களிலும் இராக்காலங்களிலும் அதனை ஓத எனக் கருள்புரிவாயாக. இன்னும் அகிலத்தாரின் ரக்ஷகனே, அதனை எனக்கு ஒரு ஆதாரமாக ஏற்படுத்துவாயாக" என்று இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும்.

திரு குர்ஆனைச் சப்தமிட்டு ஓதுவதால் தொழுபவர்களுக்கு இடைஞ்சலுண்டாகுமென்றோ தனக்கு ரியா என்னும் பிறர் மெய்க் கச்செய்யும் தன்மை யுண்டாகிவிடுமென்றோ பயந்தால் அதனை மெதுவாக ஓதவேண்டும். அவ்வாறில்லாவிடில் சப்தமிட்டு ஓத லாம். தவிரவும், திரு குர்ஆனை மதித்து, அழகிய குரலில், பய பக்தியுடன் ஒரு மனப்பட்டு, விஷய விளக்கத்துடனும் ஆராய்ச்சி யுடனும் ஓதவேண்டும்.

ஹஜ்றத் இக்ரிமா (றலி) அவர்கள் திரு குர்ஆனை ஓதுவதற் காக அதனைத் திறந்தார்களாயின் தங்கள் சுய உணர்ச்சியைக் கூட மறந்து இது எனது றப்பின் வாக்கியம், இது எனது றப்பின் வாக்கி யம் என்று கூறுவார்கள். திரு குர்ஆனைக் கொண்டு யாதொரு வஸ்துவையும் கேட்காதிருப்பது திருகுர்ஆனைக் கனப்படுத்துகிற சுன்னத்துகளைச் சேர்ந்தது.

திரு குர்ஆனில் இஸ்திருபார் செய்வதைக் குறித்த ஆயத்து களை ஓதும்போது இஸ்திருபார் செய்யவேண்டும். அல்லாஹுத் தஆலாவின் மகத்துவத்தைப்பற்றிக் கூறும் ஆயத்துகளை ஓதும் போது அவனை தஸ்பீஹு தஹ்மீது செய்யவேண்டும். வேதனை கள், நரகம் முதலியவைகளைப்பற்றிய ஆயத்துகளை ஓதும்போது அவைகளை விட்டுக்காவல் தேடவேண்டும். அவனது அருட் கொடைகள், சுவர்க்கானந்தம் முதலியவைகளைப்பற்றிய ஆயத்து களை ஓதும்போது அவைகளைத் தமக்கருளவேண்டும் எனக் கேட்க

வேண்டும். இவைபோன்ற ஒவ்வொரு இடங்களிலும் அவ்வவ் விடங்களுக்குத் தக்கவாறு துஆச் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதெல்லாம் தொழுகையில் இல்லாமல் ஓதும்போதுதான். பர்லான தொழுகைகளில் இவ்வாறு பிரார்த்திக்கவோ கேட்கவோ கூடாது. ஆனல், நபில் தொழுகைகளில் அவ்வாறு செய்வது ஆகும்.

திரு குர்ஆனைச் செவி மடுத்துக்கேட்பதற்காக மற்றவர்களை ஓதச் சொல்வது சுன்னத்து. திரு குர்ஆன் ஓதப்பட்டால் அதனைக்காது தாழ்த்திக் கேட்பது வாஜிபு.

ஸலவாத்து.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது மூன்ருவது வகை வணக்கம்.

"ஒருவர் பர்லான ஹஜ்ஜை நிறைவேற்றியவுடன் பீஸபீல் அதாவது சன்மார்க்க யுத்தம் புரிந்தால் நானூறு ஹஜ்ஜுச் செய்த புண்ணியம் அவனுக் கெழுதப்படும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந்தருளினர்கள். அப்பொழுது பலஹீனர்களாயுள்ளவர்கள் "இவ்வளவு மேன்மையை அடைய நம்மால் முடியாதே" என்று மனவருத்தமடைந்தனர். அச்சமயம் "முஹம்மதே, உம்மீது ஒருவர் ஸலவாத்துச் சொன்னல் அதற்கு பதிலாக நானூறு பீஸபீலுடைய புண்ணிய மெழுதுவேன்; ஒவ்வொரு பீஸபீலுக்கும் பதிலாக நானூறு ஹஜ்ஜுடைய நன்மைகளுண்டு" என்பதாக அல்லாஹுத் தஆலாவினிடமிருந்து வஹி வந்தது. இதனைக்கேட்டு அஸ்ஹாபிகள் சந்தோஷமடைந்தனர்" என்று ஹஜ்றத் அலி (றலி) அவர்கள் கூறியதாக கௌலுல் பதீஉ என்னும் கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஸலவாத்துச் சொல்பவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தோழராகின்ருர் என்றும், அவருக்கு நாயகம் (ஸல்) அவர்களது ஷபாஅத்துக் கிடைக்குமென்றும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஸலவாத்துச் சொல்வது ஸதக்கா என்றுங் கூறப்பட்டிருக்கிறது.

வயதில் ஒருமுறை ஸலவாத்து ஓதுவது பர்லு. ஒரு சபையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது திரு நாமம் கூறப்பட்டால்

அதனைக் கூறியவரும், செவியேற்பவரும் ஒருமுறை ஸலவாத்துச் சொல்வது வாஜிபு. ஆனல், திரு குர்ஆன் ஓதும் சமயத்தில் அல்ல. ஒரு சபையில் அத்திரு நாமம் பலமுறை கூறப்பட்டால் ஒவ்வொரு முறையிலும் ஸலவாத்துச் சொல்வது முஸ்தஹப்பு.

ஸம்சர்க்கம் செய்யும்போதும், மலஜல உபாதைகளைக் கழிக்கும்போதும், தும்மல் விட்டபோதும், ஆச்சரியப்படும்போதும், ஆடு முதலியவைகளை அறுக்கும்போதும் ஸலவாத்துச் சொல்வது மக்றூஹ். ஷாபிஈ மதுஹபில் ஆடு முதலியவைகள் அறுக்கும்போது ஸலவாத்துச் சொல்லப்படும். இது மக்றூஹல்ல. ஜுமுஆவின் இரவிலும் பகலிலும் திருகுர்ஆன் ஓதுவதையும், ஸலவாத்துச் சொல்வதையும் அதிகமாக்குவதும், தஸ்பீஹு தொழுகையை நிறைவேற்றுவதும் இரண்டு விதமான இரண்டு வஸ்துக்களை ஸதக்காக் கொடுப்பதும் முஸ்தஹப்பு.

திக்று அவ்ராதுகள்.

ஹதீது ஷரீபுகளில் கூறப்பட்ட திக்று, அவ்ராதுகளை ஓதுவது நான்காவது வகையான வணக்கம். எனவே, பகலில் பஜ்று தொழுத பிறகு இஷ்ராக் வரையிலும், அஸர் தொழுத பிறகு மகுரிபு வரையிலும் திக்று பிக்றுகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்விரு வேளைகளிலும் லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு லஹுல் முல்கு வ லஹுல் ஹம்து ஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர் (அதாவது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையாருமில்லை. அவனுக்கே அரசுரிமை இருக்கிறது. இன்னும் அவனுக்கே சர்வ புகழும் உரியன. இன்னும் அவன் சகல வஸ்துவின் மீதும் ஆற்றலுள்ளவன்—என்பது இதன் பொருள்) என்று பத்து முறையும், ஸலவாத்து பத்து முறையும் ஓதி, ஸூறத்துல் பாத்திஹா ஏழு முறை, ஸூறத்துன்னாஸ் ஏழு முறை, ஸூறத்துல் பலக் ஏழு முறை, ஸூறத்துல் இக்லாஸ் ஏழு முறை, ஸூறத்துல் காபிரூன் ஏழு முறை, ஆயத்துல் குர்ஸீ ஏழு முறை, ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வ லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். வலா ஹௌல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம் (அதாவது-அல்லாஹ்

தூயவன் சர்வபுகழும் அல்லாஹ்விற்கே உரியன. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அல்லாஹ் பெரியவன். பாவத்தை விட்டுத் திரும்புவதும், நன்மையைச்செய்ய சக்தி பெறுவதும் மகத்துவமுள்ள உயர்ந்த அல்லாஹ்வின் உதவி இல்லாமல் முடியாது—என்பது இதன் பொருள்) என்று ஏழு முறை, அல்லாஹும்ம ஸல்லி அலா ஸெய்யிதினு முஹம் மதின் அப்திக்க வ நபிய்யிக வ றஸூலிகன் னபிய்யில் உம்மிய்யி வஅலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வஸல்லிம் (அதாவது—நாயனே, உனது அடியாரும் உனது நபியும் உனது றஸூலுமாகிய எங்கள் நாயகம் முஹம்மது உம்மி நபி அவர்கள் மீதும் அவர்களது கிளையார் தோழர் மீதும் ஸலாத்தும் ஸலாமும் சொல்வாயாக—என்பது இதன் பொருள்) என்று ஏழு முறை, அல்லாஹும் மக்பிர்லீ வலிவாலிதைய வலில் மூமினீன வல் மூமினாத்தி வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத்தி அல்அஹ்யாஇ மின்ஹும் வல் அம்வாத்தி (அதாவது—நாயனே, எனக்கும் என்பெற்றோர்களுக்கும் மூமின் முஸ்லிம்களாகிய ஸ்திரீ புருஷர்களுக்கும் இவர்களில் ஜீவித்திருப்போருக்கும் மரித்தவருக்கும் மன்னிப்புச் செய்வாயாக—என்பது இதன் பொருள்) என்று ஏழு முறை, அல்லாஹும்மப்அல் பீவபிஹிம் ஆஜிலன் வ ஆஜிலா பித்தீனி வத்துன்யா வல் ஆகிரா மாஅன்த லஹு அஹ்லுன் வலா தப்அல் பினா யா மௌலானா மாநஹ்னு லஹு அஹ்லுன் இன்னக கபூருன் ஹலீம் ஜவாதுன் கரீமுன் ரஊபுர்ரஹீம் (அதாவது—நாயனே, எனக்கும் அவர்களுக்கும் தீவரமாகவும் தாமதமாகவும் சன்மார்க்கத்திலும் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் உனக்குத் தகுதியானதைச் செய்வாயாக. எங்கள் எஜமானே, எங்களுக்குத் தகுதியானதை எங்களுக்கு நீ செய்யவேண்டாம். நிச்சயமாக நீ பிழை பொறுப்பவன் க்ஷமிப்பவன் தயையாளன். இரக்கமுள்ளவன், தர்மவான், கிருபையாளன்-என்பது இதன் பொருள்) என்று ஏழுமுறை ஓதவேண்டும்.

தினசரி ஓதும் விர்து.

அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் றஜீம் (அதாவது—எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டு நான் அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்—என்பது இதன் பொருள்) என்று பத்து முறை.

அஸ்தக்பிருல்லாஹல் அளீம் அல்லதீ லா இலாஹ இல்லா ஹுவல் ஹையுல் கையூம் வ அத்தூபு இலேஹி (அதாவது—மகத்துவமுள்ள அல்லாஹ்வினிடத்தில் மன்னிப்புக்கேட்கிறேன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறுயாருமில்லை. அவன் தான் ஜீவித்திருப்பவன் நிலையுள்ளவன். இன்னும் அவனிடம் தௌபாச் செய்து மீளுகிறேன்—என்பது இதன் பொருள்). என்று நூறு முறை.

ஸுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி (அதாவது—அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்துகிறேன். இன்னும் அவனது புகழைக் கொண்டு—என்பது இதன் பொருள்) என்று நூறு முறை.

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி. வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் (அதாவது-அல்லாஹ் தூயவன் சர்வபுகழும் அல்லாஹுத் தஆலாவிற்கே தகும். வணக்கத்திற் குறியவன் அவனைத்தவிர வேறுயாருமில்லை. இன்னும் அல்லாஹ் மிகப் பெரியவன்—என்பது இதன்பொருள்) என்று நூறு முறை ஓதிவரவேண்டும்.

தவிர, லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஇலாஹ இல்லல் லாஹு லாஷரீக்க லஹு லாஇலாஹ இல்லல்லாஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து லாஇலாஹ இல்லல்லாஹு வலா ஹௌல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ். (அதாவது—வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிரவேறுயாருமில்லை. அல்லாஹ் மிகப் பெரியவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. அவன் தனித்தவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. அவனுக்கு இணையானவனில்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. அவனுக்கே அரசுரிமை இருக்கிறது. இன்னும் அவனுக்கே சகல புகழும் தகும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாருமில்லை. பாவத்தை விட்டுத் திரும்புதலும், நன்மையைச் செய்யும்படியான சக்தியும் அல்லாஹ்வை கொண்டல்லாமல் இல்லை—என்பது இதன்பொருள்) என்று ஒருவர் ஓதிவருவராயின் அன்று பகலிலோ அல்லது இரவிலோ அல்

லது அம்மாதத்திலோ அவர் மரிப்பாராயின் அவரது பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படும்.

இன்னும், அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க ஸிஹ்ஹத்தன் பீ ஈமானின் வ ஈமானன் பீ ஹுஸ்னி குல்கின் வ நஜாத்தன் யத்ப உஹா பலாஹுன் றஹ்மத்தன் மின்க வ ஆபியத்தன் வ மகுபிரத்தன் மின்க வ ரில்வாஞ (அதாவது—நாயனே, ஈமானில் திருத்தத்தையும் நற்குணத்தில் நம்பிக்கையும், வெற்றியின் ஜொடர்ந்து வரும்படியான முக்தியையும், உன்னிலிருந்து கிருபையையும் சவுக்கியத்தையும், உன்னிலிருந்து மன்னிப்பையும், திருப்தியையும் உன்னிடம் கேட்கிறேன்—என்பது இதன்பொருள்) என்று தினந்தோறும் இரவிலும் பகலிலும் ஓத வேண்டும்.

கற்றோரும் மற்றோரும்.

மேற்கூறப்பட்டதுபோல இஷ்ராக்குக்கும் லுஹாவுக்கு மிடையில் ஸாலிஹான வணக்கங்களைப் புரியவேண்டும். ஆனல், ஆலிம்களும், இல்மைப் படிக்கும் முத்தஅல்லிம்களும் பஜ்றுத்தொழுகைக்குப் பிறகு கல்வி சம்பந்தமாகவே கவனஞ் செலுத்துவார்கள். ஏனெனில், அந்நேரம் இருதயம் களங்கமற்றதாகவும், ஞாபகம், சிந்தை ஆகியவைகள் தெளிவாக இருக்கும்.

கல்வியில் கவனம் செலுத்துவது ஆயிரம் ரக்கஅத்து நபில் தொழுவதையும், ஆயிரம் ஜனுஸாவிற்குச் செல்வதையும், ஆயிரம் நோயாளிகளை விசாரிப்பதையும், திரு குர்ஆனை ஓதுவதையும் பார்க்கினும் மேலானது.

வணக்கம் புரியும் ஆபிதைப்பார்க்கினும் ஆலிமுக்கு இருக்கிற மேன்மை உங்களில் தாழ்ந்த ஒருவரைப்பார்க்கினும் எனக்கிருக்கிற மேன்மையைப் போலிருக்கிறது என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஓரிடத்தில் பக்கீஹான ஒரு ஆலிம் இருப்பது ஆயிரம் ஆபிதுகள் வணங்குவதைப் பார்க்கினும் ஷைத்தானுக்கு மிகக்கடுமையாகவும் கோபமாகவும் இருக்கும். மடிப்பிள்ளையாயிருக்கும் கால முதல் மரித்து அடக்கம் செய்யப்படும்வரை கல்வி பயிலலாம்.

காஜீ (நீதிபதி), ஹாக்கிம் (அதிகாரி) போன்றவர்களது காரியங்களைப் பார்க்கும் அலுவலுள்ளவர்களும், தொழில் செய்து

சம்பாத்தியம் செய்யவேண்டிய அவசியமுள்ளவர்களும் அவைகளுக்குரிய ஷர்த்துகளைப்பேணி, மனதை இறைவனின் ஞாபகத்தை விட்டுப் பிசகாமல் அவனை திக்று செய்தவனாக அவரவர் காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

இராக்காலங்களில் நித்திரைக்குப் போகுமுன் வித்றுத் தொழுகையை நிறைவேற்றி விடவேண்டும். ஆனால், இடையில் துயிலெழ முடியுமென்றிருப்பவர் வித்றுத்தொழுகையைப் பிற்படுத்தலாம். தவிர, ஒவ்வொரு இரவிலும் ஸூறத்து யாஸீன் ஸூறத்து அலிம்லாஅம் மீஇம் ஸஜ்தா, ஸூறத்துல் முல்க் இவைகளை ஓதிவருவதுடன் யாகரீம் (சங்கையானவனே) என்று நூறு முறையும், வலக்கரத்தை நெஞ்சின்மீது வைத்து யா பாஇது (எழுப்புகிறவனே) என்று நூறுமுறையும், யா முமீத் (மரிக்கச்செய்பவனே) என்று நாற்பது முறையும் ஓதி நித்திரை மிகைக்கும் வரை யாகாலிக் (சிருஷ்டிப்பவனே) என்று கூறிக்கொண்டே இருந்து நித்திரை செய்யவேண்டும். நித்திரை மிகைத்தபோது தொழுவது நல்லதல்ல.

நற்கிரியைகளில் சிறந்தது எப்பொழுதும் விடாமற் செய்வது தான். அக்கிரியை மிகக்கொஞ்சமானாலுஞ் சரியே என்று ஹதீதில் வந்திருப்பதால் ஓதுகிற விர்துகளை இடைவிடாமல் ஓதி வரவேண்டும். எனினும் நாளுக்கு நாள் அவைகளை அதிகப்படுத்திக் கொண்டே வரவேண்டும். ஒரே நாளில் நோன்பு நோற்றல், ஸதக்கா என்னும் தானதர்மம் செய்தல், நோயாளியிடம் சென்று அவரை விசாரித்தல், ஜனாஸாவை ஆபத்தம் செய்தல் ஆகிய இவைகளை ஒருவர் ஒருங்கே செய்வாராயின் அவருக்குப் பிழைபொறுக்கப் படுமென்று வந்திருக்கிறது.

துஆக் கேட்குதல்.

இறைவனிடம் பிரார்த்தனைசெய்வது வணக்கங்களில் ஐந்தாம் வகை. துஆச்செய்வது வணக்கத்தின் மூளை என்று வந்திருப்பதால் துஆக் கேட்பதற்கு ஏற்ற சமயங்களையும் காலங்களையும் நிலைகளையும் வழிபார்த்துக்கொண்டிருந்து, அச்சமயங்களில் துஆக் கேட்க வேண்டும். ஹம்து, ஸலவாத்து ஆகியவைகளைக்கொண்டு துஆவை ஆரம்பித்து அவ்விரண்டையும் கொண்டே அதனை முடிக்கவேண்

டும். கிப்லாவை முன்னோக்கி இருந்து, இருகையையும் உயர்த்தி வானத்தின் பால் ஏந்தி, மிகப்பணிவுடனும், ஒரே சிந்தையுடனும் கேட்கவேண்டும். இதனைப்பற்றிய விபரங்கள் மேலே கூறப்பட்டிருக்கின்றன. அங்கு கண்டு கொள்க.

சிந்தை.

அல்லாஹுத் தஆலாவின் சிருஷ்டிகளைக் குறித்து, சிந்தை செய்து, ஆராய்ந்து அவனது திறனைப்பற்றி அறிவது வணக்கங்களில் ஆறுவது வகையைச் சேர்ந்தது.

"இப்பிரபஞ்சத்திலுள்ள விநோதங்களை நீ கவனி; அல்லாஹுத் தஆலா ஒருவன் தான் என்பதை அறிவிப்பதற்குரிய அத்தாட்சி எவ்விதச் சிரமமும் கஷ்டமுமின்றிச் சுலபமாக உனக்குக் கிடைத்துவிடும்" என்று ஒரு மெஞ்ஞானி கூறியதற்கேற்ப வானம், பூமி, ஆகியவைகளையும், அவைகளிலுள்ள மற்றவைகளையும் நோட்ட மிட்டுப் பார்க்கவேண்டும்.

ஒரு க்ஷணநேரம் சிந்தை செய்வது அறுபது வருஷகாலம் வணங்குவதைப்பார்க்கினும் சிறந்தது என்றபடி மஃரிபா என்னும் மெஞ்ஞானத்தை அடைவதற்கு தபக்குர் என்ற சிந்தைதான் அடிப்படையாயிருக்கிறது. அகத்திலும் புறத்திலும் இறைவன் செய்துள்ள அனுக்கிரகங்களை ஞாபகப்படுத்தி, அவைகளின் மகத்துவத்தை யுணர்ந்து அவைகளை மனத்திலிருத்தவேண்டும். இது தான் முதற்படி. இதன் முடிவுதான் இறைவனை யுணரும் மெஞ்ஞானம்.

خاتمة في بيان المحبة

க்hாத்திமா் பீ பயானில் முஹப்பத்

முடிவுரை.

அல்லாஹுத் தஆலாவை நேசிப்பதைப்பற்றிய விபரம்:

அல்லாஹுத் தஆலாவின் முஹப்பத் என்னும் பிரியம் உண்டாகுவதற்காக அடியார்கள் அகத்திலும் புறத்திலும் அவனை வணங்குவதை நிரந்தரமாக்கிக்கொள்வது வாஜிபு. முஹப்பத் என்பது தேடப்படவேண்டிய காரியங்களில் மிக முக்கியமானது. நாடப்பட்டவைகளில் மிகவும் நிற்ப்பமானது.

" அல்லாஹ்வை நீங்கள் நேசித்திருப்பீர்களாயின் என்னை நீங்கள் பின் பற்றுங்கள் உங்களை அல்லாஹ் நேசிப்பான் என்று கூறுவீராக" என்பதாக திரு குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. எனவே, அல்லாஹுத் தஆலா நம்மை நேசிக்கவேண்டுமாயின் நாம் அவனை நேசிக்கவேண்டும். அவனை நேசிப்பதற்கு அடையாளம் அவனது தூதரைப் பின்பற்றுவதுதான் என்பது இவ்வாயத்திலிருந்து தெளிவாகிறது. இவ்விதமான அந்தஸ்தானது எல்லா அந்தஸ்துகளைப் பார்க்கினும் மிகப்பெரியது. எவ்விதமான இன்பமும் இதனையும் மஅரிபாவையும் பார்க்கினும் பெரியதல்ல. அல்லாஹுத் தஆலாவின் லிக்கா என்னும் சந்திப்பில்லாமல் எவ்விதமான ஈடேற்றமும் கிடைக்கமாட்டாது. அவனது லிக்காவை அடையவேண்டுமாயின் அல்லாஹுத் தஆலாவின் மீது பிரியங்கொண்டவனாகவும், அவனை அறிந்தவனாகவும் மரிக்கவேண்டும். எனவே, இவ்வாறான முஹப்பத் என்னும் அன்பை அடைய ஷரீஅத்து, தரீக்கத்து, ஹக்கீக்கத்து, ஆகிய இம்மூன்றையும் அனுசரித்து நடந்தவர்களது பாதையில் செல்லவேண்டும்.

எனது அடியானை நான் நேசிக்கும் வரை நபிலான வணக்கங்களைக் கொண்டு என்பால் அவன் நெருங்கிக்கொண்டே இருப்பான். ஆகவே, அவனை நான் நேசிப்பேனாயின் அவன் செவியேற்கும்படியான அவனது செவியாகவும் அவன் பார்க்கும்படியான அவனது பார்வையாகவும், அவன் பிடிக்கும்படியான அவனது கையாகவும், அவன் நடக்கும்படியான அவனது காலாகவும், அவன் பேசும்படியான அவனது நாவாகவும் நானாகிவிடுவேன் என்று அல்லாஹுத் தஆலா கூறி இருப்பதாக ஹதீது குதுஸியில் வந்திருக்கிறது. ஆகையால், பர்லு, வாஜிபு, ராத்திபான சுன்னத்து ஆகிய இம்மூன்றையும் நிறைவேற்றிய பிறகு அப்ஆலிய்யா (செய்கை), அக்வாலிய்யா (சொல்) அப்காரிய்யா (சிந்தனை) ஆகிய இம்மூவகை வணக்கங்களான நபில் தொழுகை, நபிலான தவாபு, திக்று, பிக்று, தஸ்பீஹு, துஆ முதலிய முஸ்தஹப்பான கிரியைகளைப் பிரியாசையுடன் செய்யவேண்டும்.

ஆரம்பமாகப் பிரவேசிப்பவருக்கு இடையில் தவறிப் போகாமல் நிர்ணயமாக திக்ரு செய்வதும், நடுத்தரமானவர்களுக்கு திரு

குர்ஆனை ஓதுவதும், பரிபூரண நிலையை யடுத்தவர்களுக்குத் தொழுகையும் மேலான வணக்கங்களாகும்.

திக்றுகளில் மிகமேலானது லா இலாஹ இல்லல்லாஹு என்பதும், துஆக்களில் மிகமேலானது அல்ஹம்து லில்லாஹ் என்பதுமாகும். ஆகவே, இறைவன் தன்பால் நெருங்கியவர்கள் நடந்த வழியில் நம்மையும் சுலபமாக நடக்க வைத்து, அவனது முஹப்பத்தென்னும் பிரியத்தையும், மஃரிபத்தென்னும் ஞானத்தையும், உண்மையையும் நமக்கு நன்கொடையாக ஈந்து, சிதேவித்தனத்தையும் ஷஹாதத்தையும் நமக்கு முத்திரையிட்டு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்திக்கச் செய்வதுடன் தனது லிக்காவையும் தந்தருளுவானாக ஆமீன் யா றப்பல் ஆலமீன். வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

முற்றிற்று.

كتاب الاوراد والفوائد

கித்தாபுல் ஔராதி வல் பவாயிதி.

விர்துகள் இதர பிரயோஜனங்களை விபரிக்கும் கிரந்தம்.

மனிதர் இவ்வுலகில் வாழும் காலத்தில் எத்தகைய கொள்கைகளையும் விசுவசிக்கமுடியும். அக்கொள்கைகள் நிரந்தரமாக இருப்பனவன்று. இது மனிதருக்கு ஏற்படும் லாப நஷ்டம், இன்ப துன்பங்களையும் இதர காரணங்களையும் மனப்பான்மையும் பொறுத்து மாறுபாடடைந்து கொண்டே இருக்கும். ஆதலால், முஸ்லிமாக இருக்கிற ஒருவர் இறுதிவரை பரிபூரணமான ஈமானுடன் இருப்பார் என்று உறுதியாக நம்பமுடியாது. புறத்தோற்றத்தில் அவர் முஸ்லிமைப்போலவும் மூமினைகவும் இருந்தாலும் அகத்தில் மாறியவராகிறார். இம்மாறுதல்களில் இறுதியானது மரணகாலமேயாகும். இச்சமயத்தில் மாறுதலேற்படாமல் பூரண ஈமானுடன் இருப்பதுதான் மிக மிக முக்கியமானது. இச்சந்தர்ப்பத்தில் மாறுதலேற்படாதிருப்பதற்கும் ஈமான் நிலை தவறுமல் உறுதி யுடனிருப்பதற்கும் உலகில் சவுக்கியமாக வாழுங்காலத்

திலேயே ஆவன செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் இறைவன் கிருபையால் ஈமான் சலாமத்தாகும். இதற்குச் சில கிரியைகளும், பிரார்த்தனைகளும் விர்துகளுமிருக்கின்றன. அவைகளை முஸ்லிம்கள் கடைப்பிடித்து தங்கள் ஈமானைப் பலப்படுத்திக்கொள்வார்களாக.

1. மாதா பிதாக்களுக்கு நன்றி செய்வது அந்திய காலத்தில் ஈமான் சலாமத்தாகுவதற்குள்ள கிரியைகளைச் சேர்ந்தது. அவர்களை நோவினைச் செய்வதால் தீங்கான மரணம் சம்பவிக்கும். குரு, ஆசான் இவர்களை நோவினைச் செய்வதற்கும், இவர்களுக்கு நன்றி செய்வதற்கும் இவைகளே பலன்களாம். வாக்குறுதியை நிறைவேற்றுவதும் அக்கிரியைகளைச் சேர்ந்தது. இவை செய்கைகளின் மூலம் ஈமானைக் காப்பாற்றும் உபாயங்கள். இவைகளை யல்லாமல் இன்னும் பல கிரியைகளுமிருக்கின்றன. இவைகளை இம்மட்டுடன் நிறுத்தி விர்துகள் ஓதுவதைச் சிறிது கவனிப்போம்:—

ஹஜ்றத் இமாம் திர்மதி (றஹ்) அவர்கள் "நான் ஆயிரம் முறை அல்லாஹுத் தஆலாவை சொற்பனத்தில் கண்டிருக்கிறேன். ஈமான் சலாமத்தாக இருப்பதற்கு நான் செய்யவேண்டியதென்னவென வினவியதற்கு அவன், ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு சூரியோதயத்திற்குள் யா ஹைய்யு யா கைய்யூமு யா பதீஅஸ்ஸமாவாத்தி வல்அர்லி யாதல்ஜலாலி வல் இக்ராம் (ஜீவித்திருப்போனே, நிலைத்திருப்போனே! வானங்களையும் பூமியையும் நூதனமாகச் சிருஷ்டித்தோனே, மகத்துவமும் சங்கையுமுள்ளோனே) என்று மூன்று முறை ஓதவேண்டும் என்று கூறினான்" என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

ஸுப்ஹுத் தொழுகையில் சுன்னத்துக்கும் பர்ளுக்கும் இடையில் பிஸ்மில்லாஹிற் றஹ்மானிர் றஹீம் அல்லாஹும்ம பிஹுர்மத்தில் ஹஸனி வ அகீஹி வ ஜத்திஹி வ அபீஹி வ உம்மிஹி வ பனீஹி நஜ்ஜினி மினல்கம்மில்லதீ அனுபீஹி. யாஹைய்யு யா கைய்யூமு யாதல்ஜலாலிவல் இக்ராம். அஸ்அலுக்க அன் துஹ்யிய கல்பீ பிநூரி மஅரிபத்திக்க யா அல்லாஹ் யா அல்லாஹ் யா அல்லாஹ் யா அர்ஹ மர்ராஹிமீன் (அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்

கிறேன். நாயனே, ஜீவித்திருப்போனே, நிலைத்திருப்போனே, மகத்துவமும் சங்கையுமுள்ளோனே. ஹஸன், அவரது சகோதரர், அவரது பாட்டனர், அவரது தந்தை, அவரது தாய், அவர் மக்கள் ஆகியவர்கள் பொருட்டால் நான் இப்பொழுதிருக்கிற துன்பத்திலிருந்து என்னை விடுவிப்பாயாக. அல்லாஹ்வே, அல்லாஹ்வே, அல்லாஹ்வே, கிருபையாளர்களுக்கெல்லாம் மகா கிருபையாளனே, உன்னை அறியும் மஃரிபாவின் வெளிச்சத்தால் என் இருதயத்தை உயிர்ப்பித்தருள்வாயாக!) என்ற துஆவை ஓதிவர வேண்டும் என்று ஷெ இமாம் திர்மதி (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஒலிமார்களிற் சிலர் ஹஜ்றத் கிலுறு (அலை) அவர்களைச் சந்தித்து ஈமான் ஸலாமத்தாகுவதற்கு ஏதேனு முண்டாவென வினவியபோது, ஸுப்ஹு தொழுத பிறகு, ஸூறத்துல் பாத்திஹா ஆயத்துல்குர்ஸீ, ஸூறத்துல் பகறாவின் இறுதியாகிய ஆமனர் ரஸூலுவிலிருந்து கடைசிவரை, ஷஹிதல்லாஹு விலிருந்து பிகைரிஹிஸாப்வரையிலும் வழக்கமாக ஓதிவந்தால் அல்லாஹுத் தஆலாவைச் சந்திக்கும்வரை ஈமான் மாறுவதைவிட்டு அச்சமற்றிருக்கலாம் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கறிவித்ததாகக் கூறி இருக்கிறார்கள்.

மக்ரிபில் சுன்னத்துத் தொழுதபின் ஒருவருடனும் பேசாமல் இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்ஹாவிற்குப் பிறகு இன்ளு அன்ஸல்ளு ஸூறத்து ஆறுமுறை, குல்ஹுவல்லாஹு ஸூறத்து ஒருமுறை குல்அஊது பிறப்பில் பலக் ஸூறத்து ஒருமுறை, குல்அஊது பிறப்பின்னுஸ் ஸூறத்து ஒருமுறை ஓதித் தொழுது வரும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மிடம் அறிவித்ததாக ஹஜ்றத் இப்னு உமர் (றலி) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹஜ்றத் இமாம் அபூ ஹனீபா (றஹ்) அவர்கள் அல்லாஹுத் தஆலாவை ஆயிரம்முறை சொற்பனத்தில் பார்த்து, ஈமான் சலாமத்தாகுவதற்கு என்ன செய்யவேண்டுமெனவினவியதற்கு ஆயிரம் முறையிலும் அவன் அல்லாஹும்ம அஹ்யினி அலல் கிதாபி வஸ்ஸுன்னத்தி வதவப்பனீ அலல் ஈமானி வத்தேளபத்தி அல்லா

ஹுமம ஸல்லி அலா றஸூலிக்க ஸெய்யிதினு முஹம்மதின் வ ஆலிஹி வ ஸஹ்பிஹி வ ஸல்லிம் அப்அல் பினு தாலிக்க் வ பிஜமீஇல் முஸ்லிமீன் (நாயனே, திரு குர்ஆன் சுன்னத்து ஆகியவைகளின்பேரில் என்னை ஜீவித்திருக்கச் செய்து, ஈமானுடனும் தௌபாவுடனும் என்னை மரிக்கச் செய்வாயாக, நாயனே, உனது றஸூல் எங்கள் நாயகம் முஹம்மது அவர்களுக்கும் அவர்களது கிளையார், தோழர்களுக்கு ஸலாத்தும் ஸலாமும் சொல்வாயாக. இதனை எங்களுக்கும் எல்லா முஸ்லிம்களுக்கும் செய்வாயாக) என்று ஓதிவரக் கட்டளையிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஹஜ்றத் இமாம் அபூ ஹனீபா (றஹ்) அவர்கள் அல்லாஹுத் தஆலாவை 99 முறை சொற்பனத்தில் கண்டபிறகு, இனிமேல் பார்த்தால் கியாமத்தில் அவனது வேதனையைக் காணுதிருப்பதற்கு யாது செய்யவேண்டும் எனக்கேட்கவேண்டும் என்று எண்ணி இருந்தார்கள். எனவே, அப்புறம் அவனைச் சொற்பனத்தில் பார்த்துக் கேட்டபோது ஸுப்ஹானல் அபதிய்யில் அபதி, ஸுப்ஹானல் வாஹிதில் அஹதி, ஸுப்ஹான்ல் பர்த்திஸ்ஸமதி, ஸுப்ஹான மன் றபஅஸ் ஸமாஅ பிகைரி அமதின் ஸுப்ஹான மன் பஸதல் அர்ல அலல் மாஇ பஜமத ஸுப்ஹான மன் கலகல் கல்க வ அஹ்ஸாஹும் அதத் ஸுப்ஹானமன் கஸமல் அர்ஜாக்க, வலம் யன்ஸ அஹதன். ஸுப்ஹானல்லதீ லம் யத்தகித் ஸாஹிபத்தன் வலா வலத் ஸுப்ஹானல்லதீ லம்யலித் வலம் யூலத் வலம் யக்குன் லஹு குபுவன் அஹத் (நித்தியனிலும் நித்தியன் தூயவன். ஒருவனை ஏகன் தூயவன், எங்கும் நிறைந்த ஒற்றையன் தூயவன். தூணின்றி வானத்தை உயர்த்தியவன் தூயவன். ஜலத்தின்மீது பூமியை விறித்தவன் தூயவன். அது உறைந்துவிட்டது. சிருஷ்டிகளை சிருஷ்டித்து அவர்களைச் சூழ்ந்தறிந்து கணித்தவன் தூயவன். உணவுகளைப் பங்குவைத்து ஒருவரையும் மறக்காமலிருப்பவன் தூயவன். மனைவியையும் மக்களையும் ஏற்படுத்திக்கொள்ளாதவன் தூயவன். எவருக்கும் தந்தையாகவும் பிள்ளையாகவு மில்லாதவன் இன்னும் அவனுக்கு ஒருவரும் நிகரில்லாதவன் தூயவன்) என்று காலையிலும் மாலையிலும் ஒருமுறை ஓதிவரும்படி கட்டளையிட்டதாக மஜ்மஉல் அஹ்பாப் என்னும் கிரந்தக் கர்த்தா கூறி இருக்கிறார்.

ஸுப்ஹில் யா ஹையு யா கையூம் என்று நூறு முறை, லுஹரில் யா ஜப்பார் யாமுத்த கப்பிர் என்று நூறுமுறை, அஸரில் யா ஷாபீ யா காபீ யா கனீ யா பத்தாஹ் என்று நூறு முறை,மகுரிபில் யா முபீன் யா கபீர் யா ஹாதீ என்று நூறு முறை,இஷாவில் யா நூறு யா பாஸித் யா லாஹிர் என்று நூறுமுறை ஓதி வந்தால் சம்பத்து பெருகும் என்றும் ஈமான் ஸலாமத்தாகும் என்றும், இந்த விர்து ஷெய்கு தரீகத் மஹ்பூபு ஸுப்ஹானி ஸெய்யிதினு முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (றஹ்) அவர்களது விர்துகளில் ஒன்று என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனைக் காலையிலும் மாலையிலும் வழக்கமாக ஓதி வரவேண்டும்.

லா இலாஹ இல்லல்லாஹு ஸுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை அல்லாஹ் தூயவன். இன்னும் அவனது புகழைக்கொண்டு) என்று நூறுமுறை ஓதிவந்தால் அவனது பாவங்கள் கடல் நுரையைப் போலவ்வளவு அதிகமாக இருந்தபோதினும் அவைகள் மன்னிக்கப்படும்.

நாவாலுரைக்க மிகச்சுலபமாகவும், நாயனுக்கு உகந்ததாகவும், நன்மைத்தராசில் கனத்ததாகவும், சுவர்க்கத்திற்கு நெருங்கியதாகவும், நரகத்திற்குத் தூரமானதுமாகவும் இருப்பது ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம் (அல்லாஹ் தூயவன். இன்னும் அவனது புகழைக்கொண்டு, மகத்துவமுள்ள அல்லாஹ் தூயவன்) என்ற இரண்டு வாக்கியங்களாகும் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

லா இலாஹ இல்லல்லாஹுல் மௌஜூது பிகுல்லி ஜமான். லா இலாஹ இல்லல்லாஹுல் மஃபூது பிகுல்லி மக்கான். லா இலாஹ இல்லல்லாஹுல் மஅறூபு பி குல்லி இஹ்ஸான். லா இலாஹ இல்லல்லாஹுல் மதுகூறு பிகுல்லி லிஸான். லா இலாஹ இல்லல்லாஹு குல்ல யௌமின் ஹுவ பீ ஷான். லா இலாஹ இல்லல்லாஹுல் அமானு அல்அமானு மின் ஜவாலில் ஈமான். வமின் ஷர்ரிஷ்ஷைத்தான். வ லுல்மிஸ் ஸுல்தான். பிறஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன்.

(எல்லாக் காலத்திலும் இருப்பவனுகிய அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவனில்லை. சகல இடத்திலும் வணங்கப்படுபவனுகிய அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவனில்லை, சகல நாவிலும் ஜபிக்கப்படுகிற அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவனில்லை, ஒவ்வொரு நாளிலும் ஒரு அந்தஸ்திலுள்ள அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்குரியவனில்லை, ஈமான் நீங்கி விடுவதையும், ஷைத்தானுடைய தீங்கையும், அரசனின் அக்கிரமத்தையும் விட்டு அபயம் அபயம், கிருபையாளர்களிலெல்லாம் மகா கிருபையுள்ளோனே உனது கிருபையை முன்னிட்டு,) என்ற துஆவை ஐங்காலத் தொழுகையிலும் ஓதி வந்தால் ஈமான் ஸலாமத்தாகும்.

லா இலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவை 75000 எழுபத்தையாயிரம் தடவை ஓதினல் நரகத்தை விட்டு விடுதலையளிக்கப்படும் என்றும், மனிதனிலுள்ள புறக்கோலங்கள் ஏழு, அகக்கோலங்கள் 7 ஆக பதினன்கு கோலங்களுக்கும் கோலம் ஒன்றுக்கு ஒரு லக்ஷம் வீதம் 14 பதினன்கு லக்ஷம் தடவை இந்தக் கலிமாவை ஜபித்து வைத்துக்கொண்டால் அல்லாஹுத் தஆலா அவரது நாவைக் கலிமாவை விட்டு சருகும்படி விடமாட்டான் என்றும் ஸூபியாக்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹஜ்றத் யூனுஸ் (அலை) அவர்கள் மீன்வயிற்றினுள்ளிருந்து கொண்டு பிரார்த்தித்த லா இலாஹ இல்லா அன்த ஸுப்ஹானக இன்னீ குன்து மினல் லாலிமீன் என்ற தஸ்பீஹை தினந்தோறும் 40 நாற்பது முறை ஸுப்ஹுக்குப்பின் ஓதிவரவேண்டும். சங்கடமான சமயங்களில் நடு நிசியில் இரண்டு ரக்கஅத்துத் தொழுது இதனை நாற்பது முறை ஓதினல் அச்சங்கடம் நிவர்த்தியாகும்.

லா ஹௌல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் என்ற கலிமா அர்ஷுக்குக் கீழில் அமைக்கப்பட்ட புதையல்களில் ஒன்று என்றும், சுவர்க்கத்தின் புதையல் என்று ஹதீதில் வந்திருக்கிறது.

சுத்தமாக இருப்பது ஈமானில் பாதி. அல்ஹம்து லில்லாஹி என்று சொல்வது நன்மையை நிறுக்கும் மீஜானை நிறப்பும் என்றும் வந்திருக்கிறது.

ஸுப்ஹானல்லாஹி வல்லாஹு அக்பர் (அல்லாஹ் தூயவன் அல்லாஹ் மிகப் பெரியவன்) என்பது வானம் பூமி ஆகிய இரண்டையும் நிறப்பும், தொழுகை பிரகாசமாகும், ஸதக்கா சுவர்க்க லோகத்திற்கு வழிகாட்டும் அத்தாட்சி, ஸப்று பிரகாசமாகும், குர்ஆன் ஓதுதல் அத்தாட்சியாகும், இவ்வுலகின் அற்ப லாபத்திற்காக தன் நப்ஸை விற்பனை செய்பவர் தன்னை அழித்துக்கொண்டவராகிறார், தன்னை விலைக்கு விற்றவர் அதாவது தன்னை அடிமைப் படுத்தி அல்லாஹுத் தஆலாவின் ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்தியவர் நரகைவிட்டு உரிமைபெற்றவராகிறார், ஜும்ஆ என்னும் வெள்ளிக்கிழமையில் யா அல்லாஹ் என்று ஆயிரம் முறை, சனிக்கிழமை லா இலாஹ இல்லல்லாஹு என்று ஆயிரம் முறை ஞாயிற்றுக் கிழமை யா ஹைய்யு யா கைய்யூம் என்று ஆயிரம் முறை, திங்கட் கிழமை லா ஹௌல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் என்று ஆயிரம் முறை, செவ்வாய்க்கிழமை அல்லாஹும்ம ஸல்லி வ ஸல்லிம் அலா முஹம்மதின் வ ஆலிஹி என்று ஆயிரம் முறை, புதன்கிழமை அஸ்தகு பிருல்லாஹல் அளீம் என்று ஆயிரம் முறை, வியாழக்கிழமை ஸுப்ஹானல்லாஹில் அளீம் வபி ஹம்திஹி என்று ஆயிரம் முறை ஓதிவரவேண்டும் என்று இஹ்யாவில் சொல்லப்படுகிறது.

லா இலாஹ இல்லல்லாஹுல் மலிக்குல் ஹக்குல் முபீன் என்று நூறு முறை ஓதினல் சகல முட்டுப்பாடும் மிடுமையும் மாற்றப்பட்டு, அறியாப்புரத்திலிருந்து ஆகாரமளிக்கப்படும், கப்றுடைய நெருக்கம், வெருட்சி ஆகியவைகளை விட்டு அச்சந் தீர்த்து, சுவர்க்க வாசல் திறந்து வைக்கப்படும்.

"சன்மார்க்கத்திற்கு விரோதமில்லாத காரியங்களில் எக்காரியமாயினும் வெள்ளிக்கிழமை இரவில், விடியற்கால வேளையில், ஸ்நானம் செய்து, சுத்தமான உடையணிந்து, தனது தேவையை நிறைவேற்றுவதற்காக இறைவனைத் தொழுவதாக நிய்யத்துச் செய்து இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டும். முதலாவது ரக்கஅத்தில் ஸூறத்துல் பாத்திஹாவிற்குப் பிறகு குல்யா அய்யுஹல் காபிறூன் ஸூறத்து பதினொரு முறை, இரண்டாவது ரக்கஅத்தில் ஸூறத்துல் பாத்திஹாவிற்குப் பிற்கு ஸூறத்துல் இக்லாஸ் பதி

ஞேரு முறை ஓதி தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்துவிட வேண்டும். பிறகு ஆறு முறை ஸஜ்தாச் செய்யவேண்டும். ஸஜ்தாவில் ஸலவாத்து பத்து முறை, ஸப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலா ஹெளல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் என்று பத்து முறை, றப்பனு ஆத்திணு பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகிஞு அதாபன்னூர் என்று பத்து முறை ஓதித் தனது ஹாஜத்தை இறைவனிடம் கூறவேண்டும்" என்று இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களது கித்தாபில் எழுதப்பட்டிருப்பதாக முஹம்மதுப்னு துறஸ்தவிய்யா (றஹ்) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இத் தொழுகையை ஹஜ்றத் கிலுறு (அலை) அவர்கள் ஒலிமார்களில் ஒருவருக்குக் கற்றுக்கொடுத்ததாகவும், அபுல் காஸிமில் ஹக்கீம் (றஹ்) என்பவர் இத்தொழுகையின் மூலம் ஆயிரம் ஹாஜத்துகளை நிறைவேற்றிக்கொண்டதுடன், வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் கீர்த்தி பெற்ற பேரறிஞராக விளங்கியதாகவும் சொல்லப்படுகிறது.

குபைஸத்துப்னுல் மகாரிக் (றலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே, நான் வயோதிகன். அதிகமான அமல்செய்ய இயலாதவன். ஆதலால், எனக்குச் சுலபமான சில வார்த்தைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவைகள் மூலமாக நான் பலன் பெறவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அவருக்கு நாயகம் (ஸல்) அவர்கள் "ஸுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம் வ பிஹம்திஹி என்று ஸுப்ஹு தொழுத பின் 300 முன்னூறு முறை ஓதிவந்தால் சகல துக்கங்களையும், வெண் குஷ்டம், கருங் குஷ்டம், பக்கவாதம் முதலிய சகல வியாதிகளையும் விட்டு அச்சமற்றிருக்கலாம். இது உலக சம்பந்தமான பிரயோஜனங்கள். இனி, மறுமையில் பிரயோஜனமடைவதற்காக அல்லாஹும்மஹ் தினீ மின் இன்திக வ அபிள் அலைய்ய மின் பள்லிக வன்ஷுர் அலைய்ய மின் றஹ்மத்திக வ அன்ஜில் அலைய்ய மின் பரகாத்திக என்று ஓதி வருவீராயின் சுவர்க்கத்தின் நான்கு தலை வாசல்கள்

திறந்து வைக்கப்படும். நீர் இஷ்டப்பட்ட வாசல் வழியாக அதில் பிரவேசிக்கலாம்" என்று கூறினார்கள்.

பூமி வாங்கல், ஆடு மாடு வாங்குதல், அவைகளை உழுதல், விவசாயம் செய்தல், பிரயாணம் செய்தல், திரும்ப வருதல் முதலிய சகல காரியங்களையும் செய்யும்போது ஓதுவதற்காகவும், அவைகளில் பரக்கத்து, ஸலாமத்து உண்டாகுவதற்காகவும் இக் கிரந்தத்தின் மூல கிரந்தமாகிய அறபுத் தமிழ் அல்பத்ஹுர் ரப்பானி பில்பிக்ஹி நிஃமானி என்னும் கித்தாபில் வேண்டிய விர்துகள் இதே அத்தியாயத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் கண்டு தங்களுக்கிஷ்டமானதைப் பாடமிட்டுக் கொள்வதுடன், இந்நூலில் சொல்லப்பட்ட விர்துகளின் அசல் அறபி வாக்கியங்கள் அதில் எழுதப்பட்டிருப்பதால் அதனைக் கொண்டு உச்சரிப்புப் பேதமில்லாமல் திருத்திக்கொள்ளவேண்டும். இங்கெழுதப்பட்டிருக்கிற அவ்விர்துகளின் தமிழ்மொழி பெயர்ப்பு அறபி விர்துகளின் கருத்தை உணர்ந்து கொள்ளவும், மன ஓர்மையுடன் அறபி வாக்கியங்களை ஓத ஹேதுவாக இருக்கவேண்டுமென்று எழுதப்பட்டதேயன்றி, தமிழிலேயே அவ்விர்துகளை ஓதுவதற்காக அல்ல. அறபியிலேயே அவ்விர்துகளை ஓதுவதுதான் சிலாக்கியமும் அவசியமுமாகும். ஆனால், இறைவனிடம் கேட்கும் பிரார்த்தனையைத் தமிழிலும், ஸலவாத்து, திக்று, அல்லாஹ்வின் நாமங்கள், ஆயத்துகள் முதலானவைகளை அறபியிலும் ஓதுவதாயின் அவ்வாறு செய்யலாம்.

வருஷத்தின் கடைசி நாளில் ஓதவேண்டிய துஆ.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் வ ஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வ ஸல்லம். அல்லாஹும்ம மா அமில்து பீஹாதிஹிஸ் ஸனத்தி மிம்மா நஹைத்தனீ அன்ஹு பலம் அதுப் மின்ஹு வலம் தர்லஹு வலம் தன்ஸஹு வ ஹலில்த அலய்ய பஃதகுத்ரத்திக அலா உக்கூபத்தீ வ தஔத்தனீ இலத்தௌபத்தீ பஃத ஜுர்அத்தீ அலா மஃஸியத்திக பஇன்னீ அஸ்தக்பிருக பகுதபிர்லீ வமா அமில்து பீஹா மிம்மா தர்லாஹு வ வஅத்தனீ அலைஹித் தவாப. பஅஸ்அலுக்கல்லாஹும்ம யாகரீம் யாதல் ஜலாலி வல்இக்ராம் அன் தத்தகப்ப

லஹு மின்னீ வலா தக்தஃ ரஜாயீ மின்க யா கரீமு வஸல்லல் லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ ஆலிஹி வ ஸஹ்பிஹி வஸல்லம்.

(இவ்வுலகில் யாவருக்கும் கருணைபுரிபவனும் மறுமையில் தன் பக்தர்கட்குமட்டும் கிருபை செய்பவனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் பிரார்த்திக்கிறேன். எங்கள் நாயகம் முஹம்மது அவர்கள் மீதும் அவர்களது கிளையார் தோழர்கள் மீதும் அல்லாஹ் ஸலாத்தும் ஸலாமும் சொல்வானாக, நாயனே, நீ விலக்கியதை இவ் வருஷத்தில் நான் அறியவில்லை. அதனை நான் தௌபாச்செய்ய வில்லை, அதனை நீ பொருந்திக்கொள்ளவுமில்லை, அதனை நீ மறக்கவு மில்லை, என்னை வேதனை செய்ய நீ சக்திபெற்ற பின்னர் என்னை நீ க்ஷமித்தாய், நான் பாவம் செய்யத் துணிவுகொண்ட பின் தௌ பாச் செய்யும்படி என்னை நீ அழைத்தாய், நான் உன்னிடத்தில் பாப மன்னிப்புத் தேடுகிறேன். என்னை நீ மன்னிப்பாயாக. இன் னும் நீ திருப்திகொள்ளக்கூடியதை அவ்வருஷத்தில் நான் செய்ய வில்லை, அதனைச்செய்தால் நன்மைப் பயன் அளிப்பதாக எனக்கு நீ வாக்களித்திருந்தாய், ஆகவே, நாயனே, இரக்கமுள்ளவனே, மகத்துவமுள்ளவனே சங்கையுமுள்ளவனே என்னிலிருந்து அதனை நீ ஒப்புக்கொள்வதை நான் கேட்கிறேன் உன்னில் ஆதரவை வைப் பதை நீ முறித்துவிடவேண்டாம். இரக்கமுள்ளவனே, வ ஸல்லல் லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ ஆலிஹி, வஸஹ்பிஹி வஸல்லம்") என்பது இதன் கருத்து.

வருஷ முடிவில் இவ்விதம் இறைவனிடம் பிரார்த்தித்து தனது பாவங்களை மன்னிக்கும்படி ஒருவர் கேட்பாராயின் அவரைக் குறித்து இப்லீஸ் "வருஷமெல்லாம் அவனுடன் சேர்ந்து கஷ்டப் பட்டோம். இப்பொழுது ஒரே நிமிஷத்தில் எங்கள் செய்கைகள் யாவையும் கெடுத்து விட்டான்" என்று கூறுவான்.

முஹர்ரம் மாதம் முதலாவது தினத்தில் ஓதும் துஆ

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் வஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ அலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வ ஸல்லம். அல்லாஹும்ம அன்தல் அபதிய்யுல் கதீமுல் அவ்வலு வ அலா

பள்லிகல் அளீம். வ கரீமி ஜுதிகல் முஅவ்வலு வ ஹாதா ஆமுன் ஜதீதுன் கதுஅக்பல அஸ்அலுகல் இஸ்மத்த பீஹி மினஷ் ஷைத்தானி வ அவ்லியாஇஹி. வல் ஔன அலா ஹாதிஹின் னப்ஸில் அம்மா ரத்தி பிஸ்ஸூஇ வல் இஸ்திகால பிமா யுகர்ரிப்னீ இலைக்க ஸுல்பா யாதல் ஜலாலி வல்இக்ராம் வஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ அலா ஆலிஹி வ ஸஹ்பிஹி வ ஸல்லம்.

(பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் ரஹீம் வஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ அலா ஆலிஹி வஸஹ்பிஹி வ ஸல்லம். நாயனே, ஸ்ரீ அநாதிபூர்வீகன், முதல்வன், உனது மகத்தான தயாளத்தின் பேரிலும், உனது தர்மத்தின் தயையிலுமிருக்கின்றாய். இது புதுவருஷம் வந்துவிட்டது. இதில் ஷைத்தானையும் அவன் துணைவர்களையும் விட்டுக்காக்கப்படுவதையும் தீமையை ஏவும்படியான மனப்பான்மையாகிய இதனை வெல்ல உதவியையும், உன்பால் என்னை நெருங்கச் செய்யும் காரியங்களில் ஈடுபடுவதையும் உன்னிடம்யான் கேட்கிறேன், மகத்துவமும் சங்கையுமுள்ளவனே! வஸல்லல்லாஹு வ ஸல்லம அலா ஸெய்யிதினு முஹம்மதின் வ ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்) என்பது இதன் கருத்து.

இந்த துஆவை மூன்றுமுறை ஓதவேண்டும். இப்படிப் பிரார்த்திப்பதால் ஷைத்தான் "இவன் தன்னிலுள்ள எஞ்சிய வயதில் நம்மை விட்டுக் காவல்தேடிக்கொண்டான்!" என்று கூறிவிடுவான். ஷைத்தானையும் அவனது கூட்டத்தாரையும் விட்டுக் காப்பாற்றுவதற்காக அல்லாஹுத் தஆலா இவருக்கு இரண்டுமலக்குகளை நியமிப்பான். அவர்கள் இவனைக் காத்துக்கொள்வார்கள்.

ஆஷூரா நாளில் ஓதும் துஆ.

முஹர்ரம் மாதம் பத்தாவது தினத்திற்கு ஆஷூராநாள் என்று பெயர். இந்த நாளில்தான் பிர்ஔன் ஜலத்தில் மூழ்கடிக்கப்பட்டு ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களது உம்மத்துகளான பனூ இஸ்ராயீல்களுக்கு விடுதலை கிடைத்தது. எனவே, மூமின்களுக்கு இறைவனது றஹ்மத்து உண்டான திருநாள். இன்றைய தினத்தில் தான் நமது நாயகம்(ஸல்) அவர்கள் அவர்களது ஈரல்குலை துண்டான ஹஜ்றத் பாத்திமா நாயகி (றலி) அவர்களது புதல்வர் ஸெய்யிதினு

இமாம் ஹுஸைன் (றலி) அவர்கள் ஷஹீதானார்கள். இத்தினத்தில் அடியில் வருமாறு துஆ ஓதினால் அவ்வருஷத்தில் மரணம் வராது என்றும், அவ்வருஷத்தில் மரிக்கக் கூடியவர்களுக்கு இந்த துஆவை ஓதச் சந்தர்ப்பம் வாய்க்காது என்றும் கித்தாபுகளில் எழுதப்பட்டிருக்கிறது.

ஹஸ்பியல்லாஹு வ நிஃமல் வக்கீல் நிஃமல் மெளலா வ நிஃமன்னஸீர் (அல்லாஹ் எனக்குப் போதுமானது. அவன் நல்லவக்கில், அவன் நல்லகாரியகர்த்தன். இன்னும் நல்ல உதவியாளன்) என்று 70 எழுபதுமுறை ஓதி,

ஸுப்ஹானல்லாஹி மில்அல் மீஸானி வ முன்தஹல் இல்மி வ மப்லகர்ரிலா வ ஸினத்தல் அர்ஷி லா மல்ஜஅ மினல்லாஹி இல்லா இலைஹி. ஸுப்ஹானல்லாஹி அததஷ்ஷப்இ வஷ்வத்ரி வ அதத கலிமாத்தில்லாஹித் தம்மாத்தி குல்லிஹா அஸ்அலுக்கஸ் ஸலாமத்த பி றஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன். வலா ஹெளல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் வ ஹுவ ஹஸ்பீ வ நிஃமல் வக்கீல் நிஃமல் மெளலா வ நிஃமன் னஸீர் வ ஸல்லல்லாஹு அலா நபிய்யினு கைரி கல்கிஹி வ அலா ஆலிஹி வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

(நன்மை தீமைகள் நிறுக்கப்படும் மீஜான் நிறம்பவும், அறிவில்கடைவரையிலும், பொருத்தம் முடிவுவரையும் அர்ஷின் எடைவரையிலும் அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்துகிறேன். அல்லாஹ்வைவிட்டு, அவன் பாலில்லாமல் வேறுயிடத்தில் ஒதுங்குமிடமில்லை. இரட்டையும் ஒற்றையுமான எண்ணிக்கைக்கும், அல்லாஹ்வின் பரிபூரணமான வார்த்தைகள் யாவற்றினுடைய எண்ணிக்கைக்கும் அல்லாஹ் தூயவன். கிருபையாளர் களுக்கெல்லாம் மகா கிருபையாளனே, உன்னிடத்தில் நான் ஸலாமத்தை க்ஷேமத்தைக் கேட்கிறேன். பாவத்தைவிட்டுத் திரும்புவதும், நன்மையைச் செய்ய சக்தியும் உயர்வான மகத்துவமுள்ள அல்லாஹ்வைக் கொண்டல்லாமல் இல்லை. அவன் எனக்குப் போதுமான நல்ல வக்கில் நல்லகாரியகர்த்தன் நல்ல உதவியாளன் வஸல்லல்லாஹு அலா நபிய்யினு கைரி கல்கிஹி வ அலா ஆலிஹி வ அஸ்ஹாபிஹி அஜ்மயீன்) என்று ஏழுமுறை ஓதவேண்டும்.

ஸபர் மாதத்தில் ஒடுக்கத்துப் புதன்கிழமையில் எழுதிக்கரைத்துக் குடிக்கிற ஆயத்துகளும் துஆவும்.

பிரதி வருஷந்தோறும் மூன்று லக்ஷத்து இருபதாயிரம் முஸீபத்துகள் இரங்குகின்றன. ஒடுக்கத்து புதன் கிழமையன்று இவைகள் இரங்குகின்றன, அன்று நான்கு ரக்கஅத்துகள் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஸூறத்துல் பாத்திஹாவிற்குப்பிறகு ஸூறத்துல் கௌதர் பதினேழுமுறை, ஸூறத்துல் இக்லாஸ் ஐந்துமுறை, ஸூறத்துல் பலக் ஒருமுறை, ஸூறத்துன்னாஸ் ஒருமுறை ஓதித் தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்த பிறகு,

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் அல்லாஹும்ம யா ஷதீதல் குவா வயா ஷதீதல் மிஹால் யா அஜீஜு தல்லத் லிஇஸ்ஸத்திக ஜமீஉ கல்கிக்க இக்பினீ மின் ஜமீஇ கல்கிக்க யா முஹ்ஸினு யாமுஜ்மிலு யா முத்தபல்லிலு யாமுன்இமு யா முக்ரிமு யா மன் லா இலாஹ இல்லா அன்த பி றஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன். அல்லாஹும்ம பிஸிர்ரில் ஹஸனி வ அகீஹி வ ஜத்திஹி வ அபீஹி இக்பினி ஷர்ர ஹாதல்யௌமி வமா யன்ஜிலு பீஹி யா காபீ பஸயக்பீக்க ஹுமுல்லாஹு வஹுவஸ்ஸமீஉல் அலீம் ஹஸ்புனல்லாஹு வ நிஃமல் வக்கீல் வலா ஹௌல வ லாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம் வ ஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினா முஹம்மதின் வ ஆலிஹி வஸஹ்பிஹி வ ஸல்லம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம். வலிமை மிக்கோனே, சக்தி மிக்கோனே, வல்லோனே, உனது சிருஷ்டிகளனைத்தும் உனது வல்லமைக்கு அடங்கிவிட்டன. உனது சிருஷ்டிகளனைத்திற்கும் எனக்கு நீ போதுமையாக்கிவை. உபகாரியே, அழகாக்குபவனே, தயையுள்ளோனே, இனம் கொடுப்போனே, சங்கை கொடுப்போனே, உன்னைத் தவிர்த்து வணக்கத்திற்குரியவன் வேறில்லாதவனே, உனது கிருபையைக் கொண்டெனக்கு அருள் புரிவாயாக கிருபையாளர்களுக்கெல்லாம் மகா கிருபையாளனே நாயனே! ஹஸன், அவர் சகோதரர், அவர் பாட்டனார், அவர் தந்தை, ஆகியவர்களது இரகசியத்தின் மூலமாக இன்றைய தினத்

தின் தீங்கையும், இறங்குவதின் தீங்கையும் விட்டுத் தப்பித்துக் கொள்ள எனக்குப் போதியவனு யிருப்பாயாக. போதியவனே! அல்லாஹ் அவர்களை விட்டு சீக்கிரத்தில் உமக்குப் போதியவனு யிருப்பான். மேலும், அவன் மிக செவியேற்பவன் மிக அறிந்தவன் இன்னும் அல்லாஹ் நமக்குப்போதும். நல்லவக்கீல். பாவத்தை விட்டுத் திரும்புவதும், நன்மையைச் செய்யச் சக்தி பெறுவதும் உயர்வான மகத்துவமுள்ள அல்லாஹ்வைக் கொண்டல்லாமல் இல்லை. வஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்) என்பது இதன் கருத்து.

இந்த துஆவைத் தமிழிலும் ஓதலாமாயினும் இதிலுள்ள ஆயத்துகளையும், இறைவனது திரு நாமங்களையும் அறபியிலேயே ஓதிக்கொள்ளவேண்டும். இந்த துஆவை ஓதினுல் இறைவன் அந்த முஸிபத்துகளை விட்டுக் காப்பான் என்று ஆரிப்களிற் சிலர் கூறி இருக்கிருர்கள்.

سلام قولا من رب رحيم سلام على نوح في العالمين سلام على
ابراهيم سلام على موسى وهارون سلام على الياسين سلام
عليكم طبتم فادخلوها خالدين سلام هي حتى مطلع الفجر
اللهم اعصمنا من البلاء ودرك الشقاء وسوء القضاء وشماتة
الاعداء وملجوم الوباء وموت فجاءة ومن زوال البركة والنعمة
ومن البرص والجذام والجبن والبرصام والحمى والشقيقة ومن
جميع الامراض والاسقام بفضلك وجودك ياذا الجلال والاكرام
برحمتك يا ارحم الراحمين وصلى الله على خير خلقه
محمد وعلى اله واصحابه وسلم والحمد لله رب العالمين

என்று அறபியில் எழுதிக்கழுவிக் குடிக்கவேண்டும் என்பதாக ஷெய்கு பரீதுத்தீனின் னக்ஷ பந்தியா (றஹ்) அவர்கள் கூறி இருக்கிருர்கள். இதனைக் குடித்த பிறகு நக்ஷ பந்தியா தரீக்காவிலுள்ள மஷாயிகுகளுக்கு பாத்திஹா ஓதி ஹதியாச் செய்ய வேண்டும்.

பராஅத் இரவு துஆ.

ஷஃபான் மாதம் 15-வ இரவில் மகுரிபு தொழுத பிறகு ஸூறத்து யாஸீன் மூன்று முறை ஓதி, முதல் தடவையில் வயது அதிகமர்வதற்கும், இரண்டாந்தடவையில் பலாய் முஸீபத்துகள் நீங்கவும், மூன்றும் முறையில் மனிதர்களிடம் தேவைப்படாமலிருப்பதற்காகவும் நிய்யத்துச் செய்யவேண்டும். ஒருமுறை யாஸீன் ஓதி முடியும்தோறெல்லாம் அடியிற் கண்ட துஆவையும் ஒருமுறை ஓதிக்கொள்ளவும்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் அல்லாஹும்ம யாதல் மன்னி வலா யுமன்னு அலைஹி யாதல் ஜலாலி வல்இக்ராம் யாதத் தௌலி வல்இன்ஆம் லாஇலாஹ இல்லா அன்தலஹரல்லாஜீன வஜாருல் முஸ்தஜீரீன் வ அமானல் காயிபீன. அல்லாஹும்ம இன்குன்த கதப்தனீ இன்தக பீ உம்மில் கித்தாபி ஷக்கிய்யன் ஔ மஹ்றூமன் ஔ மத்றூதன் ஔமுக்தரன் அலைய்ய பிர்ரிஜ்கி பம்ஹுல்லாஹும்ம பிபள்லிக்க ஷகாவத்தீ வ ஹிர்மானீ வத்தர்தீ வஇக்தார ரிஜ்கீ வ அத்பித்னீ இன்தக பீ உம்மில் கித்தாபி ஸயீதன் மர்ஜூக்கன் முவப்பக்கன் லில் கைராத்தி பஇன்னக குல்த வகௌலுக்கல் ஹக்கு பீ கித்தாபிக்கல் முனஜ்ஜல் அலா லிஸானி நபிய்யிகல் முர்ஸல் யம்ஹுல்லாஹு மாயஷாஉ வயுதுபிது வஇன்தஹு உம்முல் கித்தாபி இலாஹீ பித்தஜல்லில் அஃலம் பீ லைலத்தின் னிஸ்பி மின் ஷஃபானில் முகர்ரம் அல்லத்தி யுப்ரக்கு பீ ஹா குல்லு அம்ரின் ஹக்கீம் வயுப்ரமு அன் தக்ஷிபஅன்னு மினல் பலாஇ மாநஃலமு வமாலாநஃலமு வமாஅன்த பிஹிஅஃலமு இன்னக்க அன்தல் அஅஸ்ஸுல் அக்ரம். வ ஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினு முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.

(பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்ரஹீம் நன்கொடையுடையோனே, நன்கொடை யளிக்கப்படாதவனே, மகத்துவமும் சங்கையுமுள்ளோனே, கொடையும் தர்மமுமுள்ளோனே, உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறுயாருமில்லை. ஆதரவற்றவர்களுக்கு ஆதரவளிப்பவனே, அமானம் தேடுபவர்களுக்கு அமானமளிப்பவனே, பயந்தவர்களுக்கு அபயமளிப்பவனே

நாயனே, உன்னிடமிருக்கிற உம்முல் கித்தாபில் என்னைப் பேறு கெட்டவனாக அல்லது பங்கற்றவனாக அல்லது துரத்தப்பட்டவனாக அல்லது தரித்திரனாக எழுதி இருந்தாயாயின் நாயனே, உன் தயையினால் எனது பேறு கேட்டை அல்லது பங்கில்லாமையை அல்லது துரத்தப்படுகையை அல்லது தரித்திரத்தை அழித்து, உன்னிடமுள்ள உம்முல் கித்தாபில் பேறுள்ளவனாக, சம்பத்துள்ளவனாக நற்காரியம் புரிய நல்லுதவி புரியப்பட்டவனாக ஏற்படுத்திவை.

"அல்லாஹ் தன் இஷ்டம்போல் அழித்து, தனக்கிஷ்டமானதை ஸ்திரப்படுத்துவான்" என்று உனது முர்ஸலான நபியின் நாவின் மூலம் இறக்கப்பட்ட வேதத்தில் நீ கூறி இருக்கிறாய். நீ கூறியது உண்மையானது. சங்கையான ஷஃபான் மாதத்தின் பாதிராத்திரியில் உள்ள மகத்தான தஜல்லியின் பயனாக என் நாயனே! நாங்கள் அறிந்ததையும் அறியாததையும் எங்களை விட்டு நீ அகற்றுவாயாக. நீ தான் அதனை மிக அறிந்தவன். நீதான் மிகவும் வல்லவன் மிகவும் சங்கையானவன். வஸல்லல்லாஹு அலா ஸெய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.) என்பது இதன் பொருள். இந்த துஆக்களைத் தமிழில் ஓதலாமாயினும் அறபியில் ஓதுவது மேலானது. அறபியில் ஓத தெரியாதவர்கள் ஓத தெரிந்தவர்கள் ஓதுவதைக் காது தாழ்த்திக்கேட்டுக் கொண்டிருந்து, அவர்கள் துஆக் கேட்கும் போது ஆமீன் கூறினால்போதுமானது. இரவில் செய்யவேண்டிய அமல்களைக் குறித்து விரிவான கிரந்தங்களைப்பார்க்க. இவ்விரவு மிகச் சங்கையானதாகும். இவ்விரவில் கப்ராளிகளை ஜியாரத்துச் செய்து இயன்றவரை தொழுகை, திக்று ஸலவாத்துகளை நிறைவேற்றி தூங்காமல் விழித்திருப்பதுடன், பகலில் நோன்பும் வைக்கவேண்டும்.

விவாகம் செய்தல்.

விவாகம் செய்வது என்னுடையவும், எனக்கு முன்னிருந்த நபிமார்களுடையவும் சுன்னத்தாகும் என்று நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறூர்கள். எனவே, விவாகம்செய்வது சுன்னத்து. காம உணர்ச்சி அதிக மேற்பட்டவர்கள் விவாகம் செய்வது வாஜிபு. விவாகம் செய்தவர்கள் குடும்ப சம்ரட்சணை செய்ய இயலாதவர்களாயிருந்தால் விவாகம் செய்யாதிருந்து கொள்ளலாம்.

விவாகத்திற்கு ஈஜாபும், கபூலும் பர்ளுகளாகும். இவையிரண்டையும் நிறைவேற்றும்போது இரண்டு சாக்ஷிக்காரர்கள் கூட இருந்து செவியேற்பது ஷர்த்து. இதற்கு முன்னர் விவாகத்திற்குரிய மார்க்கோபதேசமென்னும் குத்பா ஓதுவது சுன்னத்து.

"என் புதல்வியை அல்லது சகோதரியை அல்லது என்னை வக்கீலாக நியமித்தவளை இன்னபெயருள்ளவளை இத்தனை ரூபாய் மகருக்கு இன்னார் மகன் இன்னூகிய நான் உனக்கு விவாகம் செய்து கொடுத்தேன்" என்று கூறுவதற்கு ஈஜாபு என்றும், "அதனை நான் அங்கீகரித்தேன்" என்று ஏற்றுக்கொள்வதற்கு கபூல் என்றும் பெயர்.

மேற்கண்ட ஈஜாபில் மணமகளின் பெயரையும், அவள் தந்தையின் பெயரையும், மணமகனின் பெயரையும், அவன் தந்தையின் பெயரையும், மகர்த்தொகை இத்தனை என்பதையும் குறிப்பிட வேண்டும். ஞாபகப் பிசகாக மகர்த்தொகையை குறிப்பிடாவிட்டால் மணமகளைப் போன்ற ஸ்திரீகளுக்கு ஏற்பட்டுள்ள மகர் இவளுக்கும் ஏற்படும். குறிப்பிட்டால் அது கொஞ்சமாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் குறிப்பிட்ட தொகையே வாஜிபாகும்.

மணமகள் புஷ்பவதியாகாமல் இருந்தால் தந்தை வலிகாரனாக இருந்து விவாகத்தை நடத்தவேண்டும். தந்தை இல்லாவிடில் தந்தையைப் பெற்றபாட்டன் வலிகாரனாவான். வலிகாரர்கள் இஷ்டமில்லாமல் புஷ்பவதியாகாத பெண்ணை விவாகம் செய்தால் அவ்விவாகத்தை ரத்துச்செய்ய வலிகாரர்களுக்கு உரிமையுண்டு.

Q7332 N49

மணமகள் புஷ்பவதியாகி இருந்தால் அவள் சுயமே தன் இஷ்டம்போல் நினைத்த மாப்பிள்ளையை மணந்து கொள்ளலாம். இவ்விதமான ஸ்திரீகள் சார்பாக விவாகத்தை நடத்துபவர்களுக்கு வக்கீல் என்று பெயர். இவ்விதமான வக்காலத்தை தகப்பனே பாட்டனே, சகோதரனே வேறு மனிதர்களோ நிறைவேற்றலாம்.

ஷாபிஈ மதுஹபில் கன்னியழியாத ஸ்திரீகளை வலிகாரர்கள் தான் விவாகம் செய்து கொடுக்கவேண்டும், புஷ்பவதியான ஸ்திரீயாக இருந்தாலும், அவள் கன்னியழியாதவளாயிருந்தாலும் வலிகாரர்தான் விவாகம் செய்து கொடுக்க உரிமை பெற்றிருக்கிறார். அவர்களது உத்தரவில்லாமல் அப்பெண்களை வேறு எவரும் விவாகம்செய்துகொடுக்க முடியாது. புஷ்பவதியாகாத பெண் கன்னியழிந்தவளாயிருந்தால் அவள் சார்பாக அவள் அனுமதிபெற்ற வக்கீல் விவாகத்தை நடத்திவைக்கலாம்.

விவாக சம்பந்தமான இதர விபரங்களை நிக்காஹுடைய கிரந்தங்களில் காண்க. எல்லாம் வல்ல இறைவனான அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா நம்மனோர்க்கு அவனது குர்ஆன் மஜீது புர்க்கானுல் ஹமீத் என்னும் வேதத்தின் பரக்கத்தால் நமது நற்கிரியைகளுக்கு அவனது தயையினால் நன்மைப்பயனை இரட்டிப்பாக்கி வைத்து, கலப்பற்ற தௌபாவையும், ஈமான் ஸலாமத்தையும், அழகான அந்தியத்தையும் தந்து, அவனது றஸூலேகீம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது ஷபாஅத்தையும் தந்தருளுவானாக ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன். வஸல்லல்லாஹு தஆலா வ ஸல்லம வபாரக அலா கைரி கல்கிஹி ஸெய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வ துப்பாஇஹி அஜ்மாஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

பத்ஹுர் றஹ்மான் பில்பிக்ஹின்னுஃமான்.

முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY 110690

மெஞ்ஞானப்பெரியார் காமில் ஒலி ஹஜ்றத் அபூபக்கர் ஷிப்லி (ரலி)

அவர்கள் ஜீவிய சரித்திரம்.

மெஞ்ஞான குரு ஆத்மார்த்த ஆசான் காமில் ஒலி ஆரிபு பில்லாஹ் ஹஜ்றத் அபூபக்கர் ஷிப்லி அவர்கள், மெஞ்ஞான மகானுகிய காஜா ஜுனைதுல் பக்தாதி (ரலி) அவர்களுடைய சிஷ்யராவர். இவர் "தவ்ஹீத்" என்னும் ஏக தெய்வத்துவ சிகரத்தை யறிவதற்காக ராஜரீக சுப போகங்களை விட்டு பக்கீர் கோலங்கொண்டு, "ஹக்கை" கண்ட மகானுவர். இப் பெரியார் ஞான மார்க்கமான தஸவ்வுபுடைய தீர்க்கத்தை கண்டறிந்த தல்லாமல், அதை உலக மக்களுக்கும் அறிவித்துக் கொடுத்தவராவர். இந்நூலில் ஹஜ்ரத் ஷிப்லி (ரலி) யின் ஜீவிய வரலாறுகளோடு, அவர்கள் அப்போதுக்கப்போது புரிந்த ஆத்மார்த்த போதனைகளும் அடங்கியிருக்கின்றன. இஸ்லாமிய ஞானத்தை (ஸூபியிஸத்தை) அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் இந்நூலை அவசியம் படித்துணரவேண்டி செந்தமிழில் இயற்றப்பட்டிருக்கிறது.

266-பக்கங்கள்; கிளேஸ் காகிதம்; கலிகோ பைண்ட் ரூ. 1—0—0

மிபுத்தாஹுஸ் ஸுபுஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானீ.

இந்த கிதாபாகிறது ஹனபீ மதுஹபுக்கும் ஷாபிஈ மதுஹபுக்கும் அவசியமாகிய நூதனமான ஹுக்குமுகளைப் பொதிந்த பிக்ஹு மஸ்அலாக்களாயிருக்கும். அதினின்றும் ஒவ்வொரு ஹுக்குமையும் சகல ஜனங்களும் இலகுவாயறியும்பொருட்டு ஸுவாலும் ஜவாபுமாகச் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இதாகிறது ஸுல்தான் மஹ்மூது கஸ்னவீ றஹிமஹுல்லாஹு அவர்களால் தங்களுடைய காலத்திலுள்ள அநேக உலமாக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டு பார்ஸீ பாஷையிலும் உருது பாஷையிலும் அருமையாய் விளங்கிவந்ததைத் தமிழ் பாஷையுடைய நம்மவருக்கு உபயோகமாகும்படி தமிழ் பாஷையில் தர்ஜுமா செய்து தமிழிலும் அறபுத்தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

சுத்தத்தமிழ் கிளேஸ் காயிதம் கலிகோ பைண்டு ரூ. 1—8—0
ஷை அறபுத்தமிழ் வெள்ளை கலிகோ ரூ. 2—4—0
ஷை அறபுத்தமிழ் மஞ்சள்காகிதம் கலிகோ பைண்டு ரூ. 2 12—0

ஹாஜீ எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.

நபி நாயகம் (ஸல்) அவர்களின் அருமைப் புதல்வியாகிய

பாத்திமா நாயகி (ரலி)

அவர்களின் ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரத்தில் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய கதீஜா நாயகி அவர்களின் வமிசு பரம்பரையும் சிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், சிறுபாலிய அறிவும், பாலிய அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், குடித்தனம் நடத்திவரும் ஒழுங்கும், தமது பர்த்தாவுக்கு இணங்கி நடக்கும் அழகும், தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவனின் மீது கொண்டுள்ள பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், நபிநாயகத்துக்கு நாயகியின்பால் உள்ள அன்பும், நாயகிக்குத் தந்தையின்பால் உள்ள பிரியமும், அவர்களின் மரணம், அடக்கம், துக்கம், முதலிய அநுஷ்டானங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் (ரலி) அவர்களின் [illegible] நாயகியின் வமிசத்தார் [illegible] சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூ. 1-4-0. டை. அ. த. விலை ரூ. 2-8-0.

ஹலரத் ஆயிஷா நாயகி

அவர்களின் ஜீவிய சரித்திரம்.

இதில் ஆயிஷா நாயகியின் வமிசு பரம்பரையும், நமது நபிகள் பெருமானாரும், கதீஜா நாயகியின் மரணத்தும், ஆயிஷா நாயகியின் திருமணமும், நாயகி நபிகளுக்கு பொருத்தம், [illegible] சம்பாஷணைகளும், [illegible], குடித்தன ஆரம்பமும், பொம்மை விளையாட்டும், நாயகியின்பால் நபிகளுக்குள்ள அன்பும், நாயகியின் செல்வாக்கும், நீதி நெறிகளும், சமத்துவமும், சொப்பனமும், கல்வித் திறமையும், பெருந்தன்மையும், கருணையும், உபகார சிந்தையும், ஆண்டவனிடத்து பயமும், வணக்கமும், துப்புரவான ஆசாரமும், கணவருக்கு இணங்கி நடக்கும் விபரங்களும், கோபதாபமற்ற அடக்கமும் தன்மையும், பெண்களுக்கு ஹதீது கொடுத்ததும், அரிய போதனைகளுடன் சேர்ந்திருக்கின்றது.

இதன் விலை ரூ. 1-9-0. டை. அறபுத்தமிழ் ரூ. 3-4-0.

டை. ஹலரத் கதீஜா நாயகி, பாத்திமா நாயகி, ஆயிஷா நாயகி ஆக 3 நாயகிகளின் ஜீவிய சரித்திரமும் ஒரே கட்டடம்.

விலை ரூ. 3-12-0.

டை. அறபுத்தமிழ் 3 நாயகிகளின் ஜீவிய சரித்திரம் செட் விலை ரூ. 7.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது அண்ட் ஸன்ஸ்,

நெ. 20, லாடர்ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

கிளைக் கடை:—

194, செட்டியார் தெரு, பெட்டா, கொழும்பு 11, (ஸிலோன்).